மறைமலை அடிகள்

நினைவு மலர்



நாகைத் தமிழ்ச் சங்க

வெளியீடு

திருக்குறள்

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும், விரிவுரையும் கொண்டது; உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டு மிகச் சிறந்த முறையில் நூற்கட்டமைந்தது.

விலை உரூபா. 15-00

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

பதிப்பாசிரியர் திரு. மயிலை மாதவன் அவர்கள்.

விலை உரூபா. 5 00

கிடைக்கும் இடம் :

மணலி இலட்சுமண முதலியார் அறநிலையம்,

98/99, வரதா முத்தையப்பன் தெரு,

சென்னை-1. தொலைபேசி : 32553

விளம்பர உதவி :

மணலி இராமகிருட்டின முதலியார்,

9, கத்தூரிரங்க ஐயங்கார் சாலை,

சென்னை-18.

மறைமலையடிகளார்

நினைவு மலர்



வெளியீடு:

நாகைத் தமிழ்ச் சங்கம்

நாகப்பட்டினம்.

பதிப்பாசிரியர்:

கோவை. இளஞ்சேரன்

நாகைத் தமிழ்ச் சங்கம்

பதிப்பு

மலரில்
முகிழ்க்கும்
இதழ்கள்
மூன்று

முதற் பதிப்பு

தி. ஆ. 2000-ஆனி 5

[19—6—1969]

அடிகளார் இதழ்
கோட்பாட்டு இதழ்
சங்க இதழ்

அச்சகம் :

காவேரி வண்ண அச்சகம்

கும்பகோணம்.

இவ் வண்ண மலர்

நாகைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய
மறைமலையடிகளார்
முழு உருவ வெண்கலச் சிலையை
தி. ஆ. 2000 - ஆனி - 5க்கு நேரான
19–6–1969இல்
தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** தலைமையில்
தமிழ்நாட்டு முதலமைச்சர்
மாண்புமிகு **மு. கருணாநிதி** அவர்கள்
திறந்து மிளிரச் செய்த மன்றில்

மலர்ந்த மலர்

முதல் மலரை வழங்கி மலர்த்தியவர்
முத்தமிழ்க் காவலர் **கி. ஆ. பெ. விசுவநாதனார்**

ஏந்திடும் இம்மலர் ஏய்ந்திடும் தேன்சுவை
மாந்துக வண்டாய் மகிழ்ந்து!

அடிகளார் இதழ் - உள்ளுறை

மலைக்கு ஒரு சிலை — தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலைக்கு ஒரு மலர் — பதிப்பாசிரியர்

மலரின் மணம்

கல்வெட்டுப் படிகள்

மறைமலையின் நிறைமொழி

பயன் வழங்கும் புலமை — அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

மறத்தமிழ் மாண்பினர் மறைமலையடிகளார் — மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள்

வாழ்வாங்கு வாழ்ந்தவர் — புலவர் ந. இரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள்

இந்தி பொதுமொழியா ! — மறைமலையடிகளார்

அடிகளார் அருந்தமிழ்க் காவலர் — சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், எம். எல். ஏ.

,, எழுத்தழகு

,, நேரமும் நிகழ்ச்சியும்

,, பாவும் உரைநடையும்

,, வாய்மொழியில் அடிகளார்

அறிஞர் தம் வாய்மொழியில் அடிகளார்

தந்தையாரின் தனித்தமிழ் எண்ணம் — புலவர் மறை. திருநாவுக்கரசு அவர்கள்

மறைமலையடிகளார் சமயப் பணி — புலவர் இராமனுதம் பிள்ளை அவர்கள்

சொல்லின் செல்வர் — திரு நாரண. துரைக்கண்ணனர்

அடிகளாரது நூல்கள் — புலவர் இரா. செல்வக்கணபதி அவர்கள்

மறைமலையடிகளார் பாவரங்கு — பாவலர் பதினொருவர்

மலைக்கு ஒரு சிலை

தவத்திரு **குன்றக்குடி அடிகளார்**
மறைமலையடிகளார்
சிலையமைப்புக் குழுத் தலைவர்

நாகை ஒரு நல்ல நகரம்; நெய்தல் வளமும், மருத நில வளமும் கொழிக்கும் பெரு நகரம்; பழங்காலப் புகழ் படைத்த துறைமுகம்; தமிழ்கூறும் நல்லுலகத்தை நெடிய உலகத்தோடு தொடர்பு படுத்திய துறைமுகம். நாகையில் எழுந்தருளியிருக்கும் இறைவனை நினைப்பாரைத் திருமங்கைப் பிரியாள் என்று தேவாரம் பேசுகிறது. நாலந்தாப் பல்கலைக் கழகம் போல நாகையிலும் பல்கலை ஆராய்ச்சிக் கழகங்கள் இருந்தன. இத்தகு சிறப்புப் பெற்ற நாகையில் நடமாடும் பல்கலைக் கழகமெனத் திகழ்ந்த மறைமலை அடிகள் பிறந்து வளர்ந்து பெயராலும் பெரும் புலமையாலும், பிற மொழி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய வகையாலும் மலையெனத் திகழ்ந்தார்.

தமிழ் ஒரு வளர்ந்த மொழி; தனித்தியங்க வல்ல வளம் பெற்ற மொழி. ஆயினும், இடைக்காலத்தில் பலர் தமிழிற் கலப்படம் செய்வதில் பேரார்வம் காட்டி வெற்றியும் பெற்றனர். மொழியிற் கலப்படம் ஏற்படுத்தி மொழியைச் சிதைப்பதன் மூலம் ஓரினத்தை அடிமைப் படுத்தி அழித்து விட முடியும். தமிழகத்தின் பரப்பளவு குறைந்து, தமிழினத்தின் மக்கள் தொகையும் குறைந்து, சிறப்பு இழந்தமைக்கு அடிப்படைக் காரணம், வடமொழிக் கலப்பில்—மொழிச் சிதைவில் கன்னடம் முதலிய புது மொழிகளின் தோற்றமேயாம். இந்தப் பெருங்கொடுமையினை உணர்ந்து பிறமொழி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய மலை தமிழ் மலை மறைமலையாகும்.

புலமை எல்லையற்றது; அகலமும் ஆழமும் உடையது; நுண்மாண் நுழைபுலம் என்பர் வள்ளுவர். இதற்கோர் எடுத்துக்காட்டாக ஒரு மொழியில் மட்டுமன்றி,

சிற்பி வாழ்க

'கலைக்கெனவே நானுள்ளேன்; அன்னை
கனிதமிழ்க்கே கலைசேர்ப்பேன்' என்றே
சிலைக்கெனவே வினைத்திறனைக் கொள்ளும்
சீர்வேங்க டேசனெனுஞ் சிற்பி
மலைக்கின்ற வகைவெண்க லத்தில்
மறைமலையார் சிலைசெய்தான் வாழ்க!
நிலைக்கின்ற புகழ்சிறக்க வாழ்க!
நெடுவாணாள் நலஞ்சூழ வாழ்க!

மூன்று மொழிகளில்—ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் ஓங்கிய புலமை பெற்று உயர்ந்து விளங்கிய மலை மறைமலை.

இத்தகு புகழ்பெற்ற மறைமலையைத் தந்த நாகையில் மறைமலைக்குச் சிலைகாணும் ஆர்வம் செந்தமிழ்ச் செம்மல் கோவை - இளஞ்சேரனுக்குப் பிறந்தது. சேரன் சிலை யெடுப்பது என்பது இயல்புதானே! அன்றையச் சேரன் கண்ணகிக்குச் சிலையெடுத்தான். இந்தச் சேரன் கன்னித் தமிழின் கற்பினைக் காத்த மலைக்குச் சிலையெடுக்க நினைத் தார். கோவை இளஞ்சேரன் தமிழார்வமுள்ள தமிழறிஞர்; அவர் ஒரு தமிழியக்கம்; நாகையில் தமிழ்ச்சங்கம் கண்டார்; மறைமலை நூலகம் கண்டார்; மாலை நேரப் புலவர் கல்லூரி கண்டார்; தமிழ்ச்சிறுர்க்குப் புகலிடம் கண்டார்; மறை மலைக்குச் சிலைகண்டார். இளஞ்சேரனின் செந்தமிழ் ஆர்வத்தாலும், இனிய பண்பாலும் அவர் பல ரைச் சுற்றமாகச் சூழ்ந்துள்ளார். பலர் அவரைச் சுற்ற மாகச் சூழ்ந்துள்ளனர். அதனால், அவருடைய வாழ்க் கையே தமிழ் தழீஇய வாழ்க்கையாக மலர்ந்துள்ளது.

தி. ஆ. 1994 ஆம் ஆண்டில் சிலை காணும் முயற்சி தொடங்கப்பட்டது. அம்முயற்சியில் எம் பணிப் பங்கும் அமைந்தமை எண்ணி உவக்கின்றேம்.

இந்தச் சிலையமைப்புக்கு அவர் காசுகள் சேர்க்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் அப்பப்ப, அளவில! அதில் அவரடைந்த பட்டறிவுகளும் மிகப்பல. எனினும், இடர்களைத் தாண்டிச் சிலையமைப்பதில இளஞ்சேரன் வெற்றி பெற்று விட்டார். வெற்றிப் புன்னகை அவர் முகத்தில் தெரிகிறது.

சிலை குறைந்த செலவில் அமைய பொருளியல் வல்லுநர் நடராசனுர் துணை நின்றுர்கள். சென்னைச் சிற்பி திரு. இரா. வேங்கடேசன் அவர்கள் சிலையினை வெண்கலத்தில் செம்மை யாக வடித்துள்ளார். அவர் கலையீடுபாட் டொடு தமிழார்வமுங்கொண்டவர். உறையூர்க் கற் கலைஞர் திரு. மா. நந்தி அவர்கள் கருங்கல் லால் அடிப் பீடத்தை உருவாக்கியுள்ளார். கலைத் திறனேடு பண்புள்ளமும் கொண்டவர் இவர். இவர்களுக்கு என் உளங்கனிந்த பாராட்டும், வாழ்த்தும் மறைமலைக்குச் சிலை யெடுத்த இளஞ்சேரனுக்கு நன்றி. நாகைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பாராட்டு. உறுதுணை யாகக் கைக் கொடுத்த தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுவினருக்கும் இனிய நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் நமது நெஞ்சு கலந்த வாழ்த்துக்கள்.

சிலை வடித்த சிற்பி



திரு. இரா. வேங்கடேசன் அவர்கள்
சென்னை—1.

[signature]
16.5.69

மலைக்கு ஒரு மலர்

"அன்னையே! உன் உள்ளம் நிறைந்த திருமகன்;
புலமைக்குப் புதையலாய்க் கிடைத்த பெருமகன்;
சைவத்தின் செம்மலாய்த் தோன்றிய புதுமகன், யாரம்மா"
—என்று தமிழன்னையை வினவினால்.

'மறைமலையாம் நிறைமகன்'—என்று தமிழன்னை நெஞ்சுவந்து பேசுவாள். உணரும் நாம் அந்த மலைக்கு மாலையிட்டு வணங்க முந்துவோம், மலைக்கு மாலையிட மலைப்புத் தோன்றும். அச்செயல் வானத்திற்கு வண்ணந் தீட்ட முயல்வதாகும்.

எனவே, மலையை ஒரு சிலையாக்கி ஒரு நறுமலர் படைக்க முனைந்தோம். மலைக்குச் சிலை காணக் குன்று துணைநின்றது. ஆம்! மறைமலையடிகளார் சிலையமைப்புக் குழுத் தலைவராகத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருள் செய்தார்கள். வேண்டும் வகையெல்லாம் தோன்றித் துணைநின்றார்கள். வெண் கலத்தில் மறைமலையைக் கண்டோம். அம்மலையடிகளில் படைக்க மலரொன்று காண முனைந்தோம்.

மறைமலைக்கு மலர் தனித்தன்மை கொண்டதாக வேண்டும். தனித் தமிழாம் நிறைதமிழில் மலரவேண்டும். செந்தமிழ் நிலம்; நிறைதமிழ் வித்து; தமிழுணர்வு நீர்—மூன்றும் இயைந்து முத்துக் கருத்தாம் முளை; நத்தும் உரையும் பாட்டுமாம் கிளை; புத்தொளிக் கருத்தாம் தழை; உணர்வாம் அரும்பு; அறிவு முகிழ்; நயமாம் தேன்; மதர்ப்பு மணம்; மங்கல மலர் மலர்ந்தது. மூன்று இதழ்களை அலர்த்தியது.

ஓரிதழ் அடிகளார் இதழாய், அடிகளாரின் புகழ் மணம் பேசும்; ஓரிதழ் கோட்பாட்டு இதழாய் நிறைதமிழில் பலதுறைக் கட்டுரைகளால் 24 முனைகளில் மணம் வீசும்; ஓரிதழ் சங்க இதழாய்த் தமிழ்ப் பணி பரப்பும். இத்தகு மூவிதழ் மலரை ஏந்திப் பணிந்து,

'மறைமலை யடிகாள்!
நிறைதமிழ் மலரினைக்
குறையிலா அடிக்கண்
உறைமலர் ஆக்கினோம்'
—என்று படைத்து மகிழ்கின்றோம்.

அடிகளார் திருவடி மலர்களில் படிந்து இம்மலர் மென்மை மாறாது; திருமேனியில் தோய்ந்து பொன்னிறம் பொலியும், அன்பென்னும் அருவி நீரால் மலர்ச்சி மதர்க்கும். அருளென்னும் சுனையில் அலர்ச்சி நிலைக்கும். அவர் தமிழோடு ஒன்றி அருந்தேன் பிலிற்றும். அவர்தம் புகழோடு இணைந்து புதுமணம் பரப்பும். வாழ்க மறைமலையடிகளார் மாண்புகழ்!

வாழ்க நிறைதமிழ்.

மலரின் மணம்

இம்மலர் புதுமைப் பாங்கொடு மலர்வது. கருத்து மணங் கமழச் சுவைநயங் கனிவது. அமைப்பு நெறியால் அழகுறுவது. தனித் தமிழாம் நிறை தமிழெனும் நாடி நரம்பை இழையோட்டமாகக் கொண்டது.

வான் வண்ணச் சூழலில், தேன் கிண்ண மலர் பரவ மூவண்ணத்தில் மிளிரும் பூவண்ண அடிகளார் உருவம் அமைந்த மேலட்டையை ஆர்வ உணர்வுங் குழைத்து வடித்துள்ளார் நாகை நகர் 'சீவி'.

முதல் இதழாம் அடிகளார் இதழ், அடிகளாரின் புகழ்பேசி, மறம் நிறுத்திப் பல்வகைத் தன்மைகளையும் பாங்குறத் தெரிப்பது. கட்டுரைக் கருத்திற்கேற்ற இலக்கிய வரிகள் கட்டுரையின் ஈற்றில்—வண்ணத்தில் மிளிர்வது ஒரு புதுமை. அடிகளாரது நூல்களின் திறனுய்வு மறைமலையடிகளாரை உள்ளத்தில் உலவவிடும், அடுத்து வரும் பாவரங்கு ஒருதிறப் புதுமை. பாவலர் பதினொருவர் அரங்கமைத்து அடிகளாரை ஏற்றி வீற்றிருக்கச் செய்கின்றனர். ஆங்கிலத்திலும், வடமொழியிலும் பாடல்கள் அமைந்து அடிகளாரின் பிற மொழித் தொடர்பைப் போற்றுகின்றன.

அடுத்துவரும் விளம்பரத் தொகுப்பு முன்னே புதிர்களைப்பெற்று விடுவித்து விளங்குவது. இஃதும் இதற்கு முன் எவரும் காணுப் புதுமை.

அடுத்து மிளிரும் கோட்பாட்டிதழ், பலதுறைக் கருத்துக்களையும் நிறை தமிழில் கூற வேண்டும் என்னும் அடிகளாரின் சீரிய நோக்கின் இலக்கியம். இருபத்தொரு இயலில் பலதுறைக் கட்டுரைகள் அவ்வத்துறை வல்லாரால் வடிக்கப்பட்டவை. ஒவ்வொரு கட்டுரையின் தலைப்பிலும் வண்ணக் கட்டத்தில் இயல் குறிக்கப்படும். அடிகளார் சிலை உருவம் பொலியும். கட்டுரையின் ஈற்றில் அது கொண்ட பொருளியைபுடைய அடிகளார் கருத்து மேற்கோள்

வண்ணத்தில் அமைந்துள்ளமை சிறப்பான புதுமை. இக்கோட்பாட்டிதழ் ஒரு கருத்துக் கருவூலம். அறிவுநெறிப் பெட்டகம். நெறித்துணைப் பேழை.

அடுத்தொரு விளம்பரத்தொகுப்பு புதிரொடு விரியும்.

தொடர்ந்து சங்க இதழ் அலரும். சங்கப்பணிகள் வியப்பூட்டும். நாகைப் புலவர்களை அறிமுகப்படுத்தும். நகர் வரலாறு கூறும். பாவேந்தர் தமிழரங்கும் அவ்வரங்கில் தலைமைக் கருத்துரையாம் உள்ளாட்சிதுறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்களது இலக்கிய வடிப்பும் நயந்தோய்ந்தவை. எழுத்துருவில் அமையும் ஒரு குறள் பட்டி அரங்கு ஒரு குறிக்கத்தக்க புதுமையது. அதற்கமைந்த தீர்ப்பு சட்டப் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தனாரின் தனிக்கருத்தது. வெண்பா அரங்கு உலகையே காட்டுவது. நாகைவாழ் புலவர்களை, சங்கத்தில் பயின்று தேர்ந்த புலவர்களை, பயிலும் புலமைகொள் மாணவர்களைக்கொண்ட இவ்விதழ் நாகைக்கும் ஒரு புதுமை.

இம்மலரில் கையாளப்பட்டுள்ள—உருவாக்கப்பட்டுள்ள சொற்கள் பட்டியலிடப்பட்ட சொற்பட்டி ஈற்றில் நின்று நெறித்துணையாவது. விளம்பரத்தொகுப்போடு மலர் நிறைவேறுகிறது.

நிறைதமிழ் என்னும் ஓர் இழையோட்டம்; பக்கந்தோறும் இருவண்ண அமைப்பு. மூன்று இதழ்கள். கருத்து, நயம், அமைப்பு, தெளிவு என்னும் நான்கு எல்லைகள். உரைக் கட்டுரைகளும் பாக்களுமாக ஒரு நூறு. இவ்வாறு நிறைந்தது இம்மலர்.

'நினைவு மலருக்கு இம்மலர் ஓர் எடுத்துக் காட்டு' என்று புகழ்பெற உள்ள இப்புதுமை மலர், வாடா மலராய்ப் போற்றிப் பேணத் தகும் தேடாக் களஞ்சியமாய் நிலவுக!

மலருக்குக் கருத்தோவியங்கள் வழங்கி உதவிய பெருமக்கள் உள்ளத்தில் நிறைத்துப் பாராட்டி நன்றிகூறிப் போற்றத்தக்க பெருந்தகவினர். எளியேமின் தெளிவார் நன்றியை ஏற்குமாறு வேண்டுகின்றேம்.

மலரைச் செவ்வையாய், விரும்பிய வண்ணமெல்லாம் உருவாக்கியவர்கள் கும்பகோணம் காவேரி அச்சகத்தார், அதன் பங்குரிமையாளர் திரு. இராமானுசனார், பொறுப்பாளர் திரு. இலக்குமிநாராயணன் அவர்கள், அன்போடும் ஆர்வத்தோடும் பழகிப் பணியாற்றிய தொழிலாளப் பெருமக்கள் யாவருக்கும் உளங்கனிந்த பாராட்டும் நன்றியும் உரியன.

மறைமலையடிகள் கோட்பாடுகள்

- ★ எழுத்திலும் பேச்சிலும் பிறமொழி கலவாத தனித்தமிழே நிறைதமிழ்.
- ★ பகுத்தறிவு ஏற்கும் கருத்தும் கதையும் வகுத்துக் கொள்வதே உண்மைச் சைவம்.
- ★ "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்."
- ★ நெறிகொள் பழக்க வாழ்வால் நிலமிசை நீடு வாழலாம்.
- ★ இந்தி பொதுமொழி ஆதல் எந்த வகையிலும் ஏலாது.

சிலை அமைந்துள்ள பாறைக்கல் மணையில் முன்புறம் பதித்த வெண் பளிங்குக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள மறைமலையடிகளார் கோட்பாடுகள்.

நாகையில் பிறப்பை வைத்தார்;
நா, கையில் தமிழை வைத்தார்;

ஓகையில் துறவை வைத்தார்;
ஒளியினில் இறைமை வைத்தார்;

வாகையில் வாழ்வை வைத்தார்;
வகைவகை நூல்கள் வைத்தார்;

ஆகையால் சிலையை வைத்தோம்
அவர்நெறி செயலில் வைப்பீர்.

மேலது போன்று பக்கக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள பாடல்.

அடிகளார்

இதழ்

நாகைத் தமிழ்ச் சங்கம்

நாகப்பட்டினம்

மறைமலையின் நிறைமொழி

திருவள்ளுவர் ஆண்டு

"கிறித்து பிறப்பதற்கு முப்பது ஆண்டு களுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார். ஆண்டைத் தவிர அவர் பிறந்த நாளும் திங்களும் அதற்குச் சான்றுங் கிடைக்க வில்லை. இன்றைக்கு 1977 ஆண்டு களுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது மட்டும் உறுதி."

தனித்தமிழ்

"தமிழ் நன்மங்கையின் அழகிய நன் மேனியில் அம்மைத் தழும்புபோல் வட சொற்களைப் புகுத்தாதீர்கள். அடிய னேன் உங்களைப் பெரிதும் கெஞ்சு கின்றேன். ஆண்டவர்களே, தமிழைக் கெடுக்காதீர்கள். தனித்தமிழுக்குப் பாடு படுங்கள்".

நீடு வாழ்தல்

"உள்ளத்தைத் தூயதாக வைத்து எந்நேரமும் நன்னினைவுகளிலேயே அஃது ஊறி உரம் பெறுமாறு பழக்கவே, அதனுல் உந்தப்படும் உடம்பும் தூயதாக உரமேறி நீண்ட காலம் உயிர்க்கு உறை யுளாய் உலவும்."

எல்லாம் தமிழ்

"தமிழர் அனைவரும் பண்டுபோல் தமக்குந் தம் இல்லங்களுக்கும் தம்மூர் களுக்கும் பிறவற்றிற்கு மெல்லாந் தூய தமிழ்ப் பெயர்களையே அமைத்தல் வேண்டும்."

பயன் வழங்கும் புலமை

புகழுடம்பில் மிளிரும்
அறிஞர் டாக்டர்
சி. என். அண்ணாதுரை அவர்கள்,
தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சர்.

மறைமலையடிகளாரின் மாண்பினை - எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் வியக்கத்தக்க மாண்பினை அவரோடு நெருங்கிப் பழகிய பலரும் எடுத்துரைத்திருக்கிறார்கள். நான் அவரோடு அதிகம் நெருங்கிப் பழகியவன் அல்லன்; அவரோடு எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பெல்லாம், இந்த நாட்டில் முதலில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதுதான்.

மறைமலையடிகளாரது புலமை, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட எங்களுக்கெல்லாம் பெரும் அரணாக அமைந்திருந்தது. இந்தி தமிழகத்திற்குத் தேவைதானா? அது தமிழகத்திற்குப் பொதுமொழியாகத்தான் வேண்டுமா? அப்படிப் பொது மொழியானால் தமிழுக்கு ஏற்படக்கூடிய தீமைகள் என்னென்ன என்பதை எல்லாம் மறைமலையடிகளார் ஏடுகளின் வாயிலாக எடுத்துக் காட்டி வந்தார்கள்.

இதைப்போல, அவர் மேற்கொண்டிருந்த பல்வேறு முயற்சிகள் இன்று காலத்தால் கனிந்து வருகின்றன.

மறைமலையடிகளது திருப்பெயர் — பெற்றோரிட்ட பெயர் வேதாசலம் என்பதாகும். அதனை அவர் மறைமலையடிகள் என மாற்றிக்கொண்டபோது பலருக்கு ஐயப்பாடு. சிலர், இது என்ன புதியதோர் புலி என்று கேட்டனர்.

ஆனால், மறைமலையடிகளோ தமிழனுக்கு எனத் தனிப் பண்பு உண்டு; மொழி உண்டு என்பதை நிலைநாட்டுவதில் மிக அக்கறை காட்டினார். இந்தப் பண்பும் மொழியும் காப்பாற்றப்படாவிடின் நாளாவட்டத்தில் தமிழர்கள் இந்தப் பண்பையும் மொழியையும் மறந்து தங்களுக்கென உள்ள சீரிய தன்மையை இழந்துவிடுவர். உலகில் இன்றுள்ள வாழ்விழந்த இனத்தாரோடு தமிழரும் சேர்க்கப்பட்டுவிடுவர்; எனவே, தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பையும் மறந்துவிடக்கூடாது என்பதற்காக மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்கம் என்று பெயரால் சீரியதோர் முயற்சியை மேற்கொண்டார்கள்.

இந்த இயக்கத்தை அவர் தோற்றுவித்தபோது, 'இது வெற்றிபெறுமா' என்று சிலரும், 'இது வேண்டப்படுவதுதானா' என்று வேறு சிலரும், 'இதனால் தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் என்ன பயன்' என மற்றும் சிலரும் வினவத் தொடங்கினார்கள்.

ஆனால், இன்று யார் நடத்துகின்ற ஏடானாலும் — தனித்தமிழ் இயக்கத்தை எதிர்த்தவர்கள் ஏடானாலும் அதில் தனித்தமிழ் நடை கையாளப்படுவதை நாம் காணுகிறோம்.

இன்று நாட்டில் 'படிப்பது வேண்டப்படுவதுதானா' என்ற ஒரு வியப்பிற்குரிய வினாவும் எழுப்பப்படுவதைக் கேட்கிறோம்.

''கல்லின் ஒலியிலிருந்தும் கருத்தைப் பெறலாம்; ஓடும் ஆற்றிலிருந்தும் கருத்தைப் பெறலாம்''—என்று செகப்பிரியர் கூறியதைப் போல, 'பெரியவர்கள் சொல்வதைக் கேட்பதாலும் அறிவு பெற முடியாதா' என்று கேட்கப்படுகிறது. இத்தகையோருக்கு ஆயிரம் செகப்பிரியர்களின் அறிவுக் கதிர்களும் பயன்பட மாட்டா.

இந்த வினாவையும் தாண்டிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மெள்ள அரும்பியிருப்பதைக் காண்கிறோம். ஆனால், அதே நேரத்தில் தமிழர்கள் செய்ய வேண்டியன இரண்டு உண்டு. ஒன்று படித்த சிலவற்றை மறக்க வேண்டும்; படிக்க மறந்துவிட்ட பலவற்றைப் படிக்க வேண்டும். இவை தாம் தமிழர்கள் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய இரண்டு செயல்கள்.

எதையோ ஒன்றைப் புகுத்த வேண்டும் என்ற நோக்கமுடைய நூல்கள் இருக்கின்றன. எதையோ ஆய்ந்து பார்க்கத் தூண்டும் நூல்கள் இருக்கின்றன.

இதை உணர்ந்த மறைமலையடிகள் தமிழர்களுக்கு அவர்களது தனி நாகரிகம் எது? அவர்கள் வணங்கத் தக்கன எவை? அவர்கள் மொழியின் மாண்புகள் என்னென்ன?—என்பனவற்றையெல்லாம் ஆ ரா ய் ந் து, மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். அவர்தம் கருத்துக்களை அறிகிறவர்கள் படிக்கத்தக்க நூல்கள் எவை என்பவற்றை அறிந்துகொள்ள முடியும்; ஆராயத் தூண்டும் நூல்கள் எவை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இப்படிச் சொல்லும்போது, 'அண்ணாதுரை! மறைமலையடிகளார் சமயத் துறையில்—சைவத்தில் நம்பிக்கை வைத்திருந்தாரே, உனக்கு அது இசைவா' என்று சிலர் வினவக்கூடும். அன்பும் அருளுமே சைவம் என்று மறைமலையடிகளார் கூறியதுதான் சைவம் என்றால் நான் மிகச் சிறந்த சைவன். ஆண்டவன் ஒருவனே என்பதுதான் சைவம் என்றால் நான் மிகச் சிறந்த சைவன்.

இன்று உலகத்தில் நெறியை மட்டுமன்று எல்லாவற்றையுமே 'இது எனக்கு என்ன பயன் தரும்' என்ற நோக்கில்தான் உலகம் காண முற்பட்டிருக்கிறது. இதை ஆங்கிலத்தில் (பயனீட்டுக் கோட்பாடு) (Utilitarian Philosophy) என்று கூறுவார்கள்.

மனிதனுக்கு இருக்கிற காலம் மிகக் குறைவானது. இந்தக் குறைந்த காலத்திற்குள் இதைத்தான் செய்ய வேண்டும், அதை இப்படிச் செய்ய வேண்டும் என்பதை எளியவர்களுக்கும் விளங்கக்கூடிய வகையிலும், பயன்படக்கூடிய வகையிலும் எடுத்துரைக்க வேண்டும்.

கோட்பாட்டு நூல்களிலிருந்து கறக்க வேண்டிய முறைப்படி கருத்துக் கறந்து, கழனிகளில் பணிபுரியும் உழவர்க்கும், ஆலைகளில் அவதியுறும் தொழிலாளர்க்கும், அவாவுக்கும் அச்சத்திற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும் பயன்படத்தக்க—புரியத்தக்க வகையில் தரவேண்டியுள்ளது. ஆவினிடத்தில் பாலிருக்கிறது என்றால், அதன் உடல் முழுதும்

பாலைத் தேடிச் செல்வதில்லை. கறக்க வேண்டிய இடத்தில் முறைப்படி கறந்தால்தான் பால் கிடைக்கும். அதனால் பயன் கிடைக்கும். அதைப்போல, தமிழ் இலக்கியங்கள், கோட்பாட்டு நூல்களிலிருந்தெல்லாம் கருத்துக்களை முறைப்படி கறந்து தரவேண்டியது தமிழ்ப் புலவர்களின் வேலையாகும்.

இப்படிப் பயன்படத்தக்க வகையில் எல்லாவற்றையுமே நோக்கிப் பயன் கொண்டவர்கள் மேலை நாட்டவர். 18, 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அவர்கள், பயன்கொள்ளும் நோக்கத்தோடு செயலாற்றத் தொடங்கிவிட்டனர் நாம் இன்னும் அந்தப் பயன்கொள்ளும் நோக்கத்தைப் பெறவில்லை.

தேங்காயை நாம் பயன்படுத்துவதற்கும், மாங்காயைப் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு இல்லையா? தேங்காயில் மேலே உள்ள நாரையும் ஓட்டையும் நீக்கிவிட்டு, உள்ளே உள்ள பண்டத்தைத் தின்கிறோம். மாங்காயில் மேலே பழம்—உள்ளே கொட்டை; பழத்தைத் தின்றுவிட்டுக் கொட்டையை வீசி எறிந்துவிடுகிறோம். அதைப்போல தமிழ் இலக்கியங்களிலும் எதை எதை, எந்த எந்தச் செயல்களுக்குப் பயன்படுத்துவது; எப்படிப் பயன்படுத்துவது என்று முறைப்படுத்தி, வரிசைப் படுத்தி, வகைப்படுத்தித் தர வேண்டாமா? அப்படித் தந்தாலன்றி, மக்களிடையே பொது அறிவு வளருவது எவ்வாறு? எவை, எளிதாக நல்ல பயன்தரத்தக்கன என்று கருதுகின்றார்களோ, அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

பயன்தரத்தக்க நோக்கு வேண்டும் என்பதனால்தான், நாங்கள் சில இலக்கியங்களைத் தாக்க வேண்டியவர்களானோம்; சிலர், அவற்றைத் தாங்கித் தீரவேண்டும் என்று கருதினார்கள். இப்படி எங்கள் தாக்குதலுக்கும், சிலரின் தாங்கித் தீரவேண்டிய நிலைக்கும் இடைப்பட்ட நூல்கள் இருக்கின்றனவே, அவைதான் தமிழருக்குப் பயன்தரும் நூல்கள் என்று கூறலாம்.

தமிழனின் தனிப்பண்பு, தனிச்சிறப்புப் பெற்றது. மறைமலையடிகள் காரண காரியங்களோடு விளக்கியிருக்கிறார். கருத்துக்களைப் பதப்படுத்திப் பக்குவப்படுத்தி ஏடுகள் வாயிலாகத் தந்திருக்கிறார். அக்கருத்துக்கள் தமிழர் பயன்பெறுவதற்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப் பெருங்குடி மக்கள், கிடைத்த கருத்துக்களை—பெற்ற கருவூலங்களை எல்லாம் ஒரே பாண்டத்தில் போட்டுவைத்துவிட்டனர். இன்றுள்ள தமிழ்ப் புலவர்கள் அவற்றையெல்லாம் எடுத்து நல்ல கருத்துக்களையும், ஆராய்ச்சிக்கு நிற்கக் கூடியவற்றையும், வெறுங் கற்பனையை மட்டுமே கொண்டவற்றையும் ஒரே பாண்டத்திலிருப்பதைப் பிரித்தெடுத்து, முறைப்படுத்தி, வரிசைப்படுத்தித்தர வேண்டும். இதைச் செய்வதற்கு இதுதான் தக்க காலம் என்று கருதுகின்றேன்.

ஏனென்றால், இப்போது அதற்கான விழிப்புணர்ச்சியும் ஆற்றலும் நிரம்ப இருக்கின்றன. இந்தச் செயல் நடைபெற்றால்தான், தமிழின் தொன்மையும், தமிழின் இனிமையும், பெருமையும், தமிழர்களால் தெளிவாக உணரப்பட முடியும்; தமிழினம், தமிழ்ப் பண்பு, தமிழ் அரசு தழைக்க முடியும்.

பொழுதெல்லாம்
தமிழுக்குழைத்த தலைவன்

வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலையடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம் ....

ஆழ்ந்து கடலில் முத்தெடுப் பார்போல்
அகன்ற உலக இலக்கியம் அனைத்திலும்
வீழ்ந்து பொருளுண்மை விளக்கும் ஆற்றலால்
வெல்ல முடியாத நல்லா சிரியனை
வாழ்த்தாத நாளில்லை வையகம் ....

தென்னாடு சார்ந்த குமரிப் பெருநிலம்
திரைகடல் மறைத்த உண்மைச் செய்திக்குப்
பொன்னேடு காட்டும் புலவர்க்குப் புலவனைப்
பொழுதெல்லாம் தமிழுக் குழைத்த தலைவனை
வாழ்த்தா நாளில்லை வையகம் ....

— *பாவேந்தர் பாரதிதாசனார்.*

நாகைத் தமிழ்ச் சங்கம்
நாகப்பட்டினம்

முத்தமிழ் மாண்பினர் மறைமலையடிகளார்

தமிழக முதலமைச்சர்
மாண்புமிகு கலைஞர் **மு. கருணாநிதி,**
எம். எல். ஏ.

தென்றல் தமிழிருக்க வடமொழி கலந்த வாடைக் காற்றில் தமிழ் மக்கள் போலி இன்பம் கண்டு தங்களையே ஏமாற்றிக்கொண்டிருந்த நாட்களில், ஒளிவீசும் சுடராய்த் தோன்றி உண்மையை நிலைநாட்டியவர் மறைமலையடிகள். முத்தமிழின் அவையில் முழுவதுமாய் ஈடுபட்ட அவர், தாம் பெற்ற இன்பத்தைப் பிற தமிழரும் பெற்று மகிழ வேண்டும் என்பதற்காக எழுத்தால், பேச்சால் இன்றமிழுக்குத் தொண்டு செய்யத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ''வடமொழியின் வழியதாயிற்று'' தமிழ் எனத் தமிழ்ப் பகைவர் சொன்ன நேரத்தில், ஆராய்ச்சியில் புடம்போட்ட கேள்விக்கணைகளை அவர்பால் தொடுத்து, அவர் தமைத் தலை குனியச் செய்து தமிழின் ஏற்றத்தை நிலைநாட்டி, தமிழ் தனித்தியங்கும் சால்புடைய தனிச் செம்மொழி'' என்பதை மாற்றாரும் ஏற்றுக் கொள்ளும்படி செய்த மாவீரர் அவர். தமிழ் மறுமலர்ச்சியின் வரலாறு அவரது வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. 'தமக்கென வாழாது தமிழுக்கென வாழ்ந்த' தமிழ் மாமலை அவர்.

''உரைநடை கைவந்த வல்லாளர்'' எனப் பரிதிமாற் கலைஞரால் போற்றப்பட்ட மறைமலையடிகள் ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை அழகுத் தமிழில் தீட்டித் தமிழ் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார். அவரது எழுத்தில் மட்டும் தேன் சொட்டவில்லை. அவரது பேச்சு பலாச்சுளையாய்ப் பைந்தமிழர்க்கு இனித்தது. வெண்பொற்காசுகளை அள்ளிக் கொடுத்து அவர் பேச்சைக் கேட்கப் பெருங் கூட்டமாய்க் குழுமினர்.

பிற மொழிச் சொற்களை நீக்கிய தூய தமிழில் எழுதுவதைக் கொள்கையாகக் கொண்டார் மறைமலையடிகள். தனித் தமிழ் இயக்கத்தின் காவலராக மார்தட்டிக்கொள்வதில் அவர் மகிழ்ச்சி மிகக் கொண்டார். யாருக்காகவும் எதற்காகவும் தமது கொள்கையினை விட்டுக்கொடுக்க அவர் இணங்கவில்லை.

இன்று எண்ணற்ற இளைஞர்கள் தனித் தமிழில் எழுதி ஆர்வத்துடன் மொழியை வளப்படுத்துவதற்கு ஆணிவேராக அமைந்தது, அன்று அவர் வகுத்துப் பின்பற்றிய நெறி. "வடசொற்களும், ஏனை அயன் மொழிச் சொற்களும் தமிழிற் கலப்பதால் மொழியின் இனிமை குறைவதுடன் தமிழ்ச் சொற்கள் பலவும் நாளடைவில் மறைய, அயன்மொழிச் சொற்கள் ஏராள மாகத் தமிழில் நிலைபெற்றுவிடுகின்றன. இவ்வாறே நிகழ்ந்துகொண்டிருந்தால் தமிழ் மொழியும் இறந்துபோன மொழியில் ஒன்றாய்விடுமன்றோ" என்று அவரே நெஞ்சம் பதைத்துக் கூறியிருக்கிறார்.

இந்திக்கு இல்லாத சிறப்புத் தருவதை எதிர்த்துக் குரல் கொடுக்க அவர் தயங்கினார் அல்லர். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் இந்திக்குத் தமிழகத்தில் இடமில்லை என்பதை நாம் திட்டவட்டமாக மைய அரசுக்கு அறி வுறுத்தியிருக்கிறோம். இந்திக்கு எதிராகத் தமிழகத்தில் மூண்ட மாபெரும் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் வாகை சூடிய வீரர்களாக நாம் இருக் கிறோம். இந்தப் போராட்டத்தின் தொடக்க நிலையில் போர் முழக்கம் செய்த தலைவர்களில் மறைமலையடிகள் முன்னணியில் நின்றார். "இந்தி பொது மொழியா" என்ற அவரது நூல் இந்தி வெறியர்களின் ஆணவத்தைத் தவிடுபொடியாக்கிற்று. இந்தி ஒரே மொழியன்று; பற்பல பிரிவுகளைக் கொண்டது; ஒரு சாரார் பேசுவது இன்னொரு சாராருக்கு விளங்காது. இந்நிலையில் அது இந்தியா முழுவதற்கும் பொது மொழியாவது எப்படி? என்று அவர் இடித்துக் கேட்டார். இந்தி மொழி யானது வடநாட்டவர் எல்லோராலும் பொது மொழியாகப் பேசப்படுகின்றது என்பது உண்மையாகாது. ஏனென்றால், அது வடக்கே பற்பல மாறுதல்களோடு பேசப்படுகின்றதேயன்றி ஒரே வகையாகப் பேசப்படவில்லை. அங்கே ஒரு நாட் டவர் பேசும் இந்தியை அதற்கு அடுத்த நாட்டிலுள்ளார் தெரிந்துகொள்ள மாட் டாதவராய் இருக்கின்றனர்" என ஆராய்ச்சியின் துணையோடு தெளிவாக விளக்கினார் அவர்.

மொழிப்பற்றோடும் நாட்டுப் பற்றோடும் மட்டும் நின்றுவிடாமல், மன்பதைப் பற்றுக்கொண்டு மக்களின் வாழ்க்கையில் சீர்திருத்தத்தை வலியுறுத்திப் பேசியும் எழுதியும் வந்தவர் மறைமலையடிகள். அதற்காகவும் நாம் அவரைப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். "சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்" என்ற அவரது நூல் சாதி என்ற பெயர் தமிழில் இல்லாததையும் பண்டைத் தமிழ் மக்கள் சாதி வேறுபாடின்றி வாழ்ந்ததையும் எடுத்துக் காட்டி ஒற்றுமையை வலியுறுத்துகின்றது.

மறத் தமிழர் மறைமலையடிகள் தென்னாட்டின் சிந்தனைக் கருவூலம். அவரது எழுத்தும் பேச்சும் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பின. இந்த உண் மையை நேரில் கண்டு உணர்ந்த திரு. வி. க. அவர்கள் "தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகட்கு உண்டு. அவர் தம் தமிழ்ப் புலமையும், வட மொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப் புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும்!" என்று போற்றி யுள்ளார். நன்றி மறவாத் தமிழர் தம் நெஞ்சத்தில் எதிரொலிக்கும் எண்ண மும் இதுவே.

மறைமலையடிகளார்
வரலாற்றுச் சுருக்கம்

வாழ்வாங்கு வாழ்ந்தவர்

புலவர் ந. இரா. முருகவேள்,
எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள்
'திருக்கோயில்' ஆசிரியர், சென்னை.

நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் மறையா மறைமலை யடிகளார்.

தோற்றம்: தி. பி. 1907 - ஆடி - 1 [15—7—1876]
புகழுடம்பு: தி. பி. 1981-ஆவணி-31 [15—9—1950]

"கற்றவர் பயிலும் நாகைக் காரோணம்" என்று இற்றைக்குச் சற்றேறத்தாழ 1300ஆண்டுகட்கு முன்னரே, செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர் ஆகிய திருநாவுக்கரசரால் புகழ்ந்தோதப்பெற்ற சிறப்புடையது நாகப்பட்டினம். "பொன்னிநாடு எனும் கற்பகப் பூங்கொடி மலர்போல நன்மை சான்றது நாகப்பட்டினத் திருநகரம்" என ஆசிரியர் சேக்கிழார் இதனைப் போற்றிப் பாராட்டியுள்ளார்.

இத்தகைய சிறப்புடைய நாகப்பட்டினத்தைச் சேர்ந்த, காடம்பாடி (காடவர்கோன்பாடி) என்று ஒரு பகுதி உள்ளது. பொழில்கள் பல சூழ்ந்து எழில் நிறைந்த தூய இனிய அந்தச் சிற்றூரில் சோழியச் சைவ வேளாளர் குலச் செம்மலாய் சொக்கநாதபிள்ளை வாழ்ந்து வந்தார். அவர், நாகப்பட்டினத்தில் அறுவை மருத்துவத் [Surgeon] தொழில் புரிந்து சிறந்து, செல்வராகத் திகழ்ந்தார். நாகப்பட்டினத்திலும் அவருக்கு ஒரு வீடு இருந்தது. அதன்கண் அவர் தம் காதற்கினிய அருமை மனைவியாராகிய சின்னம்மை என்பவருடன் நன்கினிது இல்லறம் நடாத்தி வந்தார். எல்லா நலங்களும் இனிதமையப் பெற்றிருந்த இவ் விருவருக்கும் மகப்பேறு வாய்க்காத ஒரு குறை மட்டும் இருந்தது.

மகப்பேறு எய்துதல் வேண்டி, அம்மையார் எத்துணையோ பல நோன்புகள் ஆற்றினர்; நேர்த்திக் கடன்கள் மேற்கொண்டார்; இறையருளை வேண்டிப் பாடுகிடந்தார். இவர் தம் இல்லத்திற்குச் சிறந்த சிவநெறித் துறவியார் ஒருவர் எழுந்தருளினர். அவர்தம் தூய ஏற்றமும் தோற்றமும் கண்ட இருவரும் அவரை இன்முகங்காட்டி, நல்லுரை கூறி வரவேற்றனர். அறுசுவை அமுதூட்டி விருந்தோம்பி மகிழ்ந்தனர்.

அது போழ்து, சிறந்த அத்துறவியார் சின்னம்மையாரின் மனக்கவலையை அறிந்தார்.

'தொண்டை நாட்டில்' பாடல் பெற்ற சிவத்திருவிடங்களுள் திருக்கழுக்குன்றம் என்பதொன்று சிறந்து திகழ்கின்றது. நீவிர் இருவரும் சென்று, சில காலம் தங்கி நோன்புகள் புரிந்து காலை மாலை இருவேளைகளிலும், முறைப்படி மலைவலம் வந்து இறைவனை (வேதாசலப் பெருமானை) வழிபாடு செய்யுங்கள். அப் பெருமானின் அருளால், 'பிள்ளையினோடு உள்ளம் நினைவு ஆயினவே வரம் பெறுவீர். ஐயுறல் வேண்டா; உங்கள் இருவருக்கும் விரைவில் ஓர் ஆண் மகப்பேறு வாய்க்கும்' என்று அருளிச் செய்து போயினர்.

அவ் அருட்பெருஞ் சான்றோர் அறிவுறுத்தியருளியபடியே, சொக்கநாத பிள்ளையும் சின்னம்மையாரும் திருக்கழுக்குன்றம் போந்து ஒரு மண்டலகாலம் (40 நாட்கள்) தங்கி அன்புடன் வழிபட்டனர். இறைவனின் இன்னருளால் சின்னம்மையாரின் மணி வயிற்றில் கரு வாய்த்தது.

செந்தமிழும் சிவநெறியும் செய்த தவப்பயன்போல, "அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல", திருஞானசம்பந்தப் பெருமானையும் மெய்கண்ட தேவரையும் நினைப்பிக்கும் வகையில், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையும் — சைவ சிந்தாந்தக் கோட்பாட்டுப் பெருஞ்சான்றோரும் - மும்மொழிப் புலமைச் செம்மலாரும் - பல்கலைக் குரிசிலும் ஆகப் பிற்றை நாளில் சிறந்தினிது திகழ்ந்து பிறங்க இருக்கும் அழகியதோர் ஆண் குழந்தை ஒன்றைச், சின்னம்மையார் திருவள்ளுவர் ஆண்டு 1907 ஆடித் திங்கள் முதல்நாள் (15-7-1876) இல் பெற்றெடுத்தார்.

திருக்கழுக்குன்றத்தில் உள்ள வேதாசலப் பெருமானின் அருளாற் பிறந்த தமது ஆருயிர்க் குழந்தைக்கு வேதாசலம் எனவே பெற்றோர்கள் பெயரிட்டு வழங்கி மகிழ்ந்தனர். வேதாசலம் எனும் இப் பெயரே, பின்னாளில் துறவறம் பூண்டபொழுது 'சுவாமி வேதாசலம்' எனவும், தனித்தமிழ் இயக்கம் தோற்றி நடத்தும் சால்பும் குறிக்கோளும் நேர்ந்த பொழுது 'மறைமலை அடிகள்' எனவும் வழங்குவதாயிற்று.

மறைமலையடிகள், தமது இளமைப் பருவத்தில் நாகப்பட்டினத்தில் செவ்

விதின் நடைபெற்று வந்த வெசுலியன் கிறித்தவ உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பயின்று வந்தார். பள்ளியில் அளிக்கப் பெற்று வந்த கல்வியின் அளவு இவர் எல்லையற்ற அறிவு வேட்கையைத் தணிப்பதாக இல்லை. அதனால் அடிகளார் இடைவிடாது பலநூல்களைத் தாமாகவும், தக்கார் சிலரிடத்தும் பயின்றுவர முற்பட்டார்.

நாகப்பட்டினத்தில் அந்நாளில் திரு. வே. நாராயணசாமி பிள்ளை என்னும் நல்லறிஞர் ஒருவர் இருந்தார். அவர் புலவரேறு மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவர்; மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு ஆசிரியராய்த் தமிழ் கற்பித்தவர். புத்தகக்கடை வாணிகம் புரிந்து வந்த அவ் வித்தகரை அடுத்து, நமது அடிகளார் தமிழ் நூல்கள் பலவற்றைப் பாடம்கேட்டுப் பயின்று பயன் பெறலானார். பதினைந்தாம் அகவையில் முறைப்படி துவங்கப்பெற்ற தமிழ்ப் பயிற்சியானது அடிகளார்க்கு அவர்தம் 21ஆம் அகவையில் பெரும்பாலும் நிறைவுற்றது. குறிப்பிடத்தக்க பழந் தமிழ் நூல்களிற்பெரிதும் அழுந்தி நின்று, செழும்புலமை சிறந்த இனிய விழுமிய செந்தமிழ்நடையில் உரையும் செய்யுளும் பொருள்பொதுள இயற்றும் திறம் அடிகளார்க்கு மிக இளமைப் பருவத்திலேயே வாய்ப்பதாயிற்று. அதுபோது நாகையில் வாழ்ந்த சைவத்திறன் வல்லார் சொ. வீரப்பச் செட்டியார்பால் சைவ சமயக் கோட்பாட்டடிப்படைகளை உணர்ந்தார்.

அடிகளார் 16 ஆம் அகவையினராக இருந்தபொழுதே தம்மொடு ஒத்த இளைஞர்களுக்குத் தமிழறிவும் சமய உணர்வும் ஊட்டும் நோக்கத்துடன் ‘இந்துமத அபிமான சங்கம்’ என ஒரு சங்கத்தினைத் தோற்றுவித்து, மிக்க ஆர்வத்துடன் நடத்திவந்தார். காரைக்காலினின்று வெளிவந்த ‘திராவிட மந்திரி’ நாகப்பட்டினத்தில் நடைபெற்ற ‘நாகை நீலலோசனி’ என்னும் கிழமை இதழ்களுக்குத் தொடர்ந்து கட்டுரைகள் பல அடிகளாரால் எழுதப் பெற்று வந்தன.

அடிகள் தம் பன்னிரண்டாம் அகவையில் தந்தையாரை இழந்தார். ஒரேபிள்ளை யாதலால் அன்னையாரால் அன்பாகவும் கண்டிப்பாகவும் வளர்க்கப் பட்டார். அடிகளார் செந்தாமரையன்ன சிவந்த ஒளிநிற உடம்பும், பொருத்தமான உறுப்பமைப்பும், உடல் வளமும், பீடு நடையும், திருமுகப் பொலிவும், தோற்றத்தின் ஏற்றமும் கண்டாரெல்லாரும் தம்மை மறந்து வியப்பும் மகிழ்வுங் கொள்ளுமாறு விளங்கினார்.

இத்தகு சிறந்த இளைஞராம் அடிகட்குச் சின்னம்மை திருமணம் முடிக்க எண்ணினார். பெண்ணைத் தேர்ந்து கொள்ளும் உரிமையை மகனுக்கே வழங்கினார். குழந்தைப் பருவம் முதல் குறும்பு செய்து கூடி விளையாடிய ஒன்றுவிட்ட மாமன் மகள் சவுந்தரத்தைத் தம் வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள அடிகள் உளங்கொண்டார். அடிகளாரது உளப்படியே தி. பி. 1924 (கி. பி. 1893) இல் திருமணம் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. அதுபோது அடிகளாருக்கு அகவை-17.

அடிகள் தம் பதினெட்டாம் அகவையில் ஒரு பெண்மகவுக்குத் தந்தையாயினர். அக்காலை ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியில் அடிகள் உள்ளம் தோய்ந்திருந்தார். அவ்வுளப் பாங்கோடு தம் மகளுக்குச் சிந்தாமணி எனப்பெயரிட்டு மகிழ்ந்தார். அடுத்தடுத்துச் சில குழந்தைகள் பிறந்திறந்தன. சென்னை வாழ்க்கையின் போது பிறந்த பெண்குழந்தைக்கு நாகப் பட்டினத்திறைவியின் பெயரை நினைவு கூர்ந்து நீலாம்பிகை எனப் பெயரிட்டு

உவந்தார் அடிகள். அடிகளாருக்குத் தனித்தமிழ் இயக்க எண்ணம் தோன்றக் காரணமாக இந்நீலம்பிகையாரே அமைந்தார்கள். நான்கு ஆண் மக்களைப் பெற்ற அடிகளார் சைவ சமயக் குரவர் பால் கொண்ட ஆழ்ந்த பற்றின் வெளிப்பாடாய்த் திருஞானசம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி எனப் பெயரிட்டார்கள்.

தமது இயற்றமிழ் ஆசிரியராகிய புத்தகக்கடை வே. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் வாயிலாக அடிகளார் பேராசிரியர் மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றிக் கேள்வியுற்று அறிந்தார். அகவற்பாவில் அவருக்கு அழகிய முடங்கல் விடுத்தார். அது கண்டு மகிழ்ந்த பிள்ளையவர்கள் விரும்பியவாறு, தாமும் தம் ஆசிரியருமாகத் திருவனந்தபுரம் சென்று (நவம்பர் 1895) அவரைக்கண்டு அளவளாவி மகிழ்ந்தார்.

பின்னர் ஒருமுறை தி. பி. 1927 (கி. பி. 1896) ஆம் ஆண்டில் சுந்தரம் பிள்ளை அவர்கள் அடிகளார்க்கு எழுதி, அவரைத் திருவனந்தபுரத்திற்கு வருமாறு அழைத்தார். அந்நகரில் மார்த்தாண்டன்தம்பி என்பவர் நடத்திவந்த ஓர் ஆங்கிலப் பள்ளியில், தமிழாசிரியப் பணிபுரியும் வாய்ப்பினை அடிகளார்க்குப் பெற்றுத் தந்தார். தமது உடல் நலத்திற்கு ஏற்றதாகத் திருவனந்தபுரம் இல்லாமையினால் அடிகளார் இரண்டரைத் திங்களிலேயே அப்பணியை விடுக்க நேர்ந்தது.

அடிகள் நாகையில் மாணவராக இருந்தபோது நாகை வெளிப்பாளையம் சைவசித்தாந்த சபைக்கும், நாகைக் காரோணர் கோயிலுக்கும், சென்னையிலிருந்து போந்து 'சைவசித்தாந்த சண்டமாருதம்' சீலத்திரு **சோமசுந்தர நாயகர்** என்னும் சைவப் பெருஞ் சான்றோர் ஆற்றிய அரும்பெரும் சொற் பொழிவுகளை அடிகளார் அவ்வப் போது கேட்டு மகிழ்ந்து பயன்பெற்று வந்தார். அதனால் அடிகளார்க்கு நாயகர் அவர்கள் பால் இயல்பாகவே பேரன்பும் பெரு மதிப்பும் ஏற்பட்டுப் பெருகி வந்தன. அந்நிலையில் தி. பி. 1928 (கி. பி. 1897) ஆம் ஆண்டில் நாகையில் நடைபெற்று வந்த **'சற்சனர் பத்திரிகை'** எனப் பெயரிய இதழ் ஒன்றில், ஒருவர் நாயகரின் சைவக் கோட்பாட்டுக் கருத்துக்களை மறுத்துப் பழித்து எழுதி வந்தார். அதனைக் கண்ட அடிகளார், அவரின் கொள்கையும் கூற்றும் சிறிதும் பொருத்தமற்றன என எடுத்துக் காட்டி 'நீலலோசனி' என்னும் இதழில், 'முருகவேள்' என்ற புனை பெயரில் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதினார். அதனைக்கண்டு வியந்து மகிழ்ந்த சோமசுந்தர நாயகர், தம்பால் மிக்க அன்பும் பற்றும் தோன்ற அக்கட்டுரைகளை எழுதியவர் யாவர், என வினவியறிந்து, அடிகளாரை நேரிற்காண விழைந்தார். நாயகர் விழைந்தபடியே, அவர்கள் சில திங்கள் கழித்து நாகப்பட்டினத்திற்கு வந்தபோது, **மதுரை நாயகம் பிள்ளை** என்பவர், அடிகளாரை நாயகரிடம், அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். அடிகளாரின் அறிவும் அழகும் அன்பும் பண்பும் கண்டு, நாயகர் பெரிதும் வியந்து மகிழ்ந்தார். ஒப்புயர்வற்ற ஆசிரியரும் மாணவரும் தம்முள் ஒருங்கு கூடி உயிர்போலப் பிரிவரிய தொடர்பு கொண்டு, உள்ளம் களிதுளும்பினர். அடிகளார் பால், சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் இயற்றிய **'துகளறுபோதம்'** என்னும் நூலை அளித்து, 'இதற்கு இனியதோர் உரைவரைக' எனப் பணித்தார். அவர்பணித்தபடியே சின்னாளில் அந்நூற்குச் சொற்சுவை பொருட்சுவை துளும்பவும், சைவக் கோட்பாட்டு நுட்பங்கள் மிளிரவும், அடிகளார் ஓர் அரிய உரை வகுத்து நாயகருக்கு அனுப்பினார். அதன் அருமை பெருமைகளை ஆராய்ந்து கண்டு அகமகிழ்ந்த நாயகர், 'இது சிவஞான முனிவரின் சீரிய உரை

யோடு ஒப்பது' என்று பாராட்டி, அதனைத் தம் செலவிலேயே அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

அம்மட்டோ! ஒரு கால் நாயகர் நாகைக்கு வந்தபோது, அடிகளார்பால் 'நின்னை விரைவில் சென்னைக்கு வருவிப்போம். நீ அப்பக்கங்களில் இருந்தாற்றான் நலம் விளையும்' என அன்புரை கூறிச் சென்றார். தாம் கூறிச் சென்றவாறே, ஒரு சில நாட்களில் அடிகளாரைச் சென்னைக்கு வருவித்தார். தம்பாற் பயின்றவரும், ஆந்திரநாட்டிற் சித்தூரில் மாவட்ட நடுவராக இருந்தவரும் ஆகிய சே. எம். நல்லசாமிப் பிள்ளைக்கு, அடிகளாரை அறிமுகம் செய்துவைத்தார். அவர், தாம் ஆங்கிலத்திலும் தமிழிலுமாகச் சித்தூரில் தொடங்க இருந்த 'சித்தாந்த தீபிகை' என்னும் திங்கள் இதழை நடத்தும் அறிவுப் பணியில் அமர்த்தினர். சித்தாந்த தீபிகைத் தமிழ்ப் பதிப்பின் முதலைந்து இதழ்கள் வரையில் ஆசிரியராக இருந்து அடிகளார் அரிய பல கட்டுரைகள் வரைந்து வந்தார். ஆயினும், தமது குடும்பச் சூழ்நிலை கருதி, ஒருசில திங்களுக்குப் பின்னர் அடிகளார் சித்தூரினின்று நாகைக்குத் திரும்ப நேர்ந்தது.

சென்னைக் கிறித்துவக் கல்லூரிக்கு ஒரு தமிழாசிரியர் வேண்டியிருந்தது. அச்செய்தி அறிந்த நாயகர், உடனே நாகையில் இருந்த அடிகளார்க்கு எழுதி, அவரைச் சென்னைக்கு வருமாறு பணித்தார். அப்பதவிக்கு அக்காலத்து இருந்த பெரும் புலவர்கள் பலர் போட்டியிட்டனர். ஆயினும், அவர்களுள் எல்லாம் மிக இளைஞராக இருந்தும், புலமையிற் சிறந்திருந்த அடிகளாரையே அக் கல்லூரியின் தலைவராக விளங்கியிருந்த வில்லியம் மில்லர் என்பவர், திறம் தெரிந்து தேர்ந்தெடுத்தார். அதுபோது அடிகளாருககு அகவை 22.

சென்னைக் கிறித்தவக் கல்லூரி, அந் நாளில் உயர் நடுவர் மன்றத்திற்கு அண்மையில் அதன் எதிரில் இருந்தது. அடிகளார் இலிங்கிச் செட்டித் தெரு முதலிய இடங்களிற் குடியிருந்து வந்தார். அந் நாளில், கல்லூரிகளில் தமிழுக்கும் தமிழாசிரியருக்கும் போதிய மதிப்பு இருந்ததில்லை. அந்நிலை அடிகளாரால் அறவே ஒழிந்தது. அடிகளார் வழங்கும் தமிழ் அமிழ்தத்தைப் பருகி மாணவர்கள் அளவிலா மகிழ்ந்தனர். பிற கல்லூரி மாணவர்களும், அடிகளாரின் தமிழ் வகுப்புக் களுக்குப் பெரு விருப்புடன் போந்து அமர்ந்து பாடங் கேட்டுப் பயின்று பெருங் களிப்பு எய்தினர்.

அந் நாட்களில் அடிகளார் அவ்வப் போது திருவொற்றியூர்ச் சிவபிரான் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வரும் பழக்கமுடையவராக இருந்தார். அக் கோயிலிலுள்ள முருகப் பிரான்பால் அடிகளார் பேரன்பு கொண்டிருந்தார். ஒரு கால் தமக்கு உற்ற உடற்பிணி தீரும் பொருட்டுச் செய்துகொண்ட நேர்த்திக் கடனை ஒட்டி அடிகளார் 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை' என்னும் சிறந்த நூலை அம் முருகன் மீது இயற்றி மகிழ்ந்தார்.

சென்னையில் கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய நாள் முதல் அடிகளார்க்குத் தம் ஆசிரியர் நாயகர் அவர்களிடம் மிகவும் நெருங்கிப் பழகி மகிழும் பெருவாய்ப்புக் கிடைத்தது. அடிகளார் நாயகர் அவர்கள்பால் 'சிவஞான போதம்' முதலிய சைவக் கோட்பாட்டுப் பெரு நூல்களைப் பாடங் கேட்டுத் தெளிந்து பயன் பெற்றார். தந்தையும் மைந்தனும்போல, இவ்விருவரும் ஒருவரை ஒருவர் இன்றியமையாதவராக விரும்பிப் பழகி, அறிவுப் பணிகள் பல புரிந்து, சைவமும் தமிழும் பரப்பி வந்தனர். இந் நிலையில் 22—2—1901 இல், சோமசுந்தர நாயகர் அவர்களின் மறைவு நேர்ந்தது. அதனால் அடிகளார் எய்திய துயரத்திற்கு அளவே யில்லை. தமது

ஆசிரியரின் மறைவு குறித்து நிகழ்ந்த இறுதிச் சடங்கில், சென்னைத் தமிழ் பெரும்புலவர்கள் பலரும் கூடியிருந்த பேரவையில் அடிகளார் தாம் இயற்றிய 'சோமசுந்தரக் காஞ்சி' என்னும் கையறு நிலைச் செய்யுள் நூலை, மிகவும் உருக்கமாகப் படித்து விளக்கி அரங்கேற்றினார். அதன் அருமை பெருமைகளை அரசஞ் சண்முகனார் போன்ற புலவர் அனைவரும் வியந்து பாராட்டினர். எனினும், ஒரு சில புலவர்கள், அழுக்காறு காரணமாக அடிகளார் இயற்றிய 'சோமசுந்தரக் காஞ்சி' என்னும் அச்செய்யுள் நூலுக்குப் போலி மறுப்பு ஒன்று எழுதினர். அதற்கு விடைகூறித் தமது நூலின் சிறப்பினை விளக்கிக் காட்டும் முறையில், 'சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம்' என்னும் அரும்பெரும் நூலினை அடிகள் இயற்றி வெளியிட்டனர். 'சோமசுந்தர நாயகர் வரலாறு' என்னும் ஒரு நூலையும், அடிகளார் எழுதியுள்ளார்.

திருவாளர்கள் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், தணிகைமணி இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ் மணி டி. எம். கிருட்டினசாமி ஐயர், மைய அரசின் முன்னாள் அமைச்சர் பி. சுப்பராயன், திவான்பகதூர் ஆர். வி. கிருட்டின ஐயர், இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை, இந்திய விடுதலை இயக்கச் சான்றோர் சி. என். முத்துரங்க முதலியார், பேராசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியார், ஆசிரியர் இளவழகனார் நாரண துரைக்கண்ணனார் முதலிய எத்துணையோ பலர், அடிகளிடம் தமிழ் பயின்று சிறந்த பெருமக்களாவர்.

தமிழை வளர்க்கும் தொண்டில் தலை நின்ற அடிகளார், தமிழகத்திற்கே தனிச் சிறப்பாக உரிய சைவசித்தாந்தக் கொள்கையினைப் பரப்பி வளர்க்கவும், மிக விரும்பி முற்பட்டு முயன்றார். அதன் பயனாக 7—7—1905 அன்று, திருப்பாதிரிப்புலியூர் சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் திருமடத்தில் அவர்களின் திருமுன்னிலையில், 'சைவ சித்தாந்த மகாசமாசம்' என்னும் சமயப் பெரு நிறுவனம் ஒன்றைத் தோற்றுவித்து, அதன் வளர்ச்சி குறித்துச் சிறந்த முறையில் பெருந்தொண்டு ஆற்றினார். இன்று அது கடல் கடந்த வெளிநாடுகளிலும் பரவிப் புகழ்பெற்றுப் பல அரும்பெரும் பணிகளை ஆற்றி விளங்கி வருகின்றது.

அடிகளார் தம்முடைய 27ஆம்அகவையில் 'ஞானசாகரம்' அல்லது 'அறிவுக்கடல்' என்னும் பெயரில், ஒரு சிறந்த தமிழ் இதழைத் தொடங்கி நடத்த முற்பட்டார். அதன்கண் வெளிவந்த அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், தமிழறிஞர்களுக்குப் பெருவிருந்தாக இருந்தன. உறங்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பல்லாற்றானும் தட்டி எழுப்பின. அடிகளாரின் பல நூல்கள் முதன் முதலில், அவ்விதழிற் கட்டுரைகளாக வெளிவந்தனவேயாகும். அதன்கண் வெளிவந்த 'கோகிலாம்பாள் கடிதங்கள்' 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி' என்னும் நூல்களைத் தம்முடைய இளமைக் காலத்திற் படிக்க நேர்ந்ததன் பயனாக, பிற்காலத்தில் புதினங்களும், சிறுகதைகளும் எழுதும் அறிவும் ஆர்வமும் ஏற்பட்டன என்று 'கல்கி' அவர்கள் குறிப்பிட்டுள்ளார் எனின், 'அறிவுக்கடல்' இதழின் அருமை பெருமைகளை யாம் என்னென்போம்! இவ்வாறே 'கீழைநாட்டுச் சித்தநெறிக் குயில்' [The Oriental Mystic Myna] என்னும் ஓர் ஆங்கில இதழையும் அடிகளார் சிலகாலம் தொடங்கி நடத்தி வந்தார்கள். பின்னர் சில ஆண்டுகள் 'அறிவுக் கடல்' [The Oceanof Wisdom] எனும் ஓர் ஆங்கில இதழை, அடிகளார் நடத்தினார்கள். இவற்றில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரைகள் மேனாட்டு அறிஞர்கள் பலரின் பாராட்டுதலையும் பெற்

றன. 'சைவசிந்தாந்தம் ஒரு நடைமுறையறிவுக் கோட்பாட்டுக் கொள்கை' [Saiva Siddhantha as a Philosophy of Practical Knowledge] என்னும் அடிகளாரின் அரும்பெறல் ஆராய்ச்சி ஆங்கில நூலுக்கு, 'ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் கோட்பாட்டுப் பேராசிரியராகப் புகழோங்கி விளங்கியிருந்த எப். சி. எஃச் சில்லர் [F. C. S. Schiller] என்னும் பேரறிஞர் அணிந்துரை அளித்துள்ளார். எனின், அடிகளாரின் அளப்பரும் அறிவாற்றல் நலங்களை ஓரளவேனும் நாம் உணர்ந்துகொள்ளுதல் கூடும்.

அடிகளார் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில், ஏறத்தாழ 13 ஆண்டுகள் பணியாற்றினர். கல்லூரியில், உயர்வகுப்பு மாணவர்களுக்குத் தாய்மொழிப்பாடம் ஆங்கிலம்போல் இன்றியமையாத ஒன்றன்று என, அந்நாளில் இருந்த பல்கலைக் கழக உறுப்பினர்கள் முடிவு செய்தனர். அதன் விளைவாகப் பல தமிழறிஞர்கள் வேலைவாய்ப்பு இழந்தனர். அவர்களுள் நமது அடிகளாரும் ஒருவர். அந் நிலையில் தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மூன்றிலும் பெரும் புலமை பெற்றிருந்த அடிகளார்க்கு எத்துணையோ பல துறைகளில் இருந்த பெரிய பதவிகளும் வேலை வாய்ப்புக்களும் தேடிவந்தன. எனினும் வெறும் பொருள் வருவாய் ஆகிய ஊதியம் மட்டுமே கருதி, அவைகளை ஏற்க அடிகளார் மறுத்து விட்டனர். இனி "எமது வாழ்க்கையை இறைபணிக்கே ஒப்படைப்பேம்" என உறுதி பூண்ட அடிகளார் தி. ஆ. 1942 (27—7—1911) இல் துறவுநெறி வாழ்க்கையை மேற்கொண்டு, (மறைமலையடிகள்) எனப் பெயர் தாங்கினர்.

அடிகளாரின் பல்லவபுரம் மாளிகைக்கு தி. பி. 1942 கார்த்திகை-16 (1-12-1911) இல் அடிப்படை இடப்பட்டது. மாளிகை பகுதி பகுதியாகக் கட்டப்பெற்றது. தி. பி. 1950-வைகாசி-6 (19—5—1919) அன்று அது முழுவதும் நிறைவெய்தி 'மனைபுகும் மங்கல விழா'வும் சிறப்புற நிகழ்ந்தது. இதற்கு முன்பே அங்கே தி.பி. 1947 கார்த்திகை 27 (12-12-1916) இல் அடிகளாரின் 'திருமுருகன் அச்சுக் கூடம்' அமைக்கப்பெற்று இயங்கி வந்தது.

கல்லூரிப் பணியை விடுத்த பின்னர், அடிகளார் நூலாராய்வதிலும், நூல் எழுதுவதிலும், அங்கங்கே சென்று சொற்பொழிவுகள் ஆற்றுதலிலுமே தமது வாழ்க்கையை ஈடுபடுத்திக் கொள்ளலாயினர். தமிழகத்தில் மட்டுமன்றி, இந்தியா, இலங்கை முழுவதிலும் அடிகளார் சுற்றுப்பயணம் செய்துள்ளார்.

1937 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு அடிகளார் தலைமைதாங்கி ஆற்றிய சொற்பொழிவே 'இந்தி பொதுமொழியா' என்னும் அரிய சிறு நூலாக வெளிவந்துள்ளது.

அடிகளார் தனித்தமிழ் இயக்கம்கண்ட தனிப்பெருந் தலைவர். தனித்தமிழிலேயே எழுதவும் பேசவும் இயலுமா? என்று பலர் எள்ளி நகையாடிய நிலையை மாற்றி அதனைத் தமது எழுத்தாலும் பேச்சாலும் வாழ்வாலும் செய்து காட்டி நிறுவியவர் அடிகளார்! தமிழில் இதற்கு முன்பு தெளிவாக ஏற்படாதிருந்த ஒரு பெரும் புதிய திருப்பத்தினை ஏற்படுத்தியவர் அடிகளார்! இஃதொன்றனாலேயே தமிழ் உள்ளளவும் அடிகளாரின் புகழும் செயலும் நிலைபெறும் என்பதுஉறுதி. இத்துறையில் அடிகளார் காட்டிய தமிழ் வீரம் சாலப்பெரிது; தன்னிகர் அற்றது!

அடிகளார் எழுதிய '**மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்**' ஓர் அரிய ஆராய்ச்சிக் கருவூலம். 1200 பக்கங்கள் கொண்ட அந்நூல் ஒன்றனைப் படித்தாலே, தமிழ் அறிவும் புலமையும் பெரிதும் வளர்ந்து வளம்பெறும் என்பது திண்ணம்.

இங்ஙனமே, அடிகளாரின் அளப்பரிய வடமொழிப் புலமைக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டு என விளங்குவது 'சாகுந்தல நாடகம்' என்னும் தமிழாக்கம்.

அடிகளார் கொள்கைக்காக வாழ்ந்தார்; எதிர்ப்புக்கு அஞ்சாதவர்; முற்போக்குணர்வு கொண்ட மூதறிஞர்; பரந்த மனப்பான்மையுடைய பண்பாளர்; சீர்திருத்தச் செம்மல்; செந்தமிழ்ச் சிவநெறித் தலைவர்; சைவ சித்தாந்தச் சான்றோர்; தொல்காப்பியரும் திருவள்ளுவரும் நக்கீரரும் இளங்கோவடிகளும் சிவஞான முனிவரும் போன்ற சான்றோர்கள் பலரும் ஒருங்கு திரண்டு வந்த ஒருருவமாயினாற் போன்ற பெருந் தகையார். தமிழ் இனிமையான மொழி என்பதை அவர் தம் தமிழ் நடையின் வாயிலாக எவருமே உணரலாம்.

இன்றையத் தமிழ்நாடு அரசு, மறைமலை அடிகளாரின் கொள்கைகளையும் கருத்துக்களையும், மிகப் பெரும் அளவில், நன்முறையிற் செயற்படுத்தி வருகின்றது. இன்று எல்லாத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சியுற்றுத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. அறமன்றங்களிலும் மிக விரைவில் தமிழ்மணம் கமழ இருக்கின்றது!

இவற்றிற்காக எல்லாம் பல ஆண்டுகட்கு முன்னரே, அடிப்படை வித்திட்டுப் பெரிதும் உழைத்தவர் ஆசிரியர் மறைமலையடிகள்! அப் பெருந்தகையார் தி. பி. 1981-ஆவணி-3 (15–9–1950) ஆம் நாளில், இவ்வுலகை விட்டு மறைந்தார். எனினும், அவருடைய தொண்டும், நூல்களும், புகழும் என்றுமே தமிழர்களின் உள்ளத்தில் மறையாத பெருநிலையைப் பெற்றுவிட்டன.

உலகியல் அறிதலும் நிலைஇய தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்தும் சொல்வன் மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப் படுதலும்
இன்னோர் அன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியர்.

— ஆத்திரையன் பேராசிரியன்.



மறைமலையடிகளார் சிலையமைப்புக் குழுத்தலைவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
போர்த்திய பொன்னிழை ஆடை அணிந்த

பேரறிஞர் அண்ணா

அண்ணாவின் இன்னுரை :

"மறைமலையடிகள் சிலை நன்றாக அமைந்து விட்டது. திறக்க வரவேண்டுமா? வருகிறேன். மன்னையிடம் நாள் குறித்துச் சொல்கிறேன்!"

இந்தி பொது மொழியா?

நிறை தமிழ்ச் செம்மல்
மறைமலையடிகளார்.

அடிகளார் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்தக்கால் எழுதிய நூலின் சுருக்கக் கட்டுரை.

உயிருடைய மொழி.

ஒன்று குறையத் தோன்றிய ஆயிர மொழிகளில் சிற்சிலவே பேசவும் எழுதவும் படுவன; அவற்றுள்ளும் ஒரு சிலவே இலக்கண இலக்கிய நூல்கள் உடையன. நமதருமைச் செந்தமிழ் மொழியோ மிகப்பழைய காலத்தேயிருந்து இன்றுகாறும் இனி வருங்காலத்தும் பலகோடி மக்களால் இந்தியா, இலங்கை, பர்மா, மலாய்நாடு, தென்னுபிரிக்கா முதலான பற்பல நாடுகளிலும், பேசவும், எழுதவும்பட்டு வழங்கிவருந் தனிப் பெரும் பண்டை உயிருடைய மொழி ஒன்றேயாய் விளங்கி நிலவுவது.

பிறமொழித் திகைப்பு.

ஆங்கிலங் கற்றவர் அம்மொழியைப் பேசினுல் அதன் பொருளையறியாமல் நம் ஏழை மக்கள் திகைத்து விழிப்பது போலவே, இந்தி மொழியைக் கற்றவர் நம் மக்களிடையே இந்தியிற் பேசினுல் அவர் அதன் பொருளையறியாமல் திகைத்து விழிப்பரென்பதை நாம் சொல்லுதலும் வேண்டுமோ?

வடவர்க்கும் இந்தி பொது மொழியன்று.

'இந்நாட்டவரெல்லாரும் ஒரு பொது நன்மையின் பொருட்டு ஒருங்கு கூடிப் பேச வேண்டிய காலங்களில் இந்தியை அவரெல்லாரும் பொது மொழியாய்க் கையாளுதலே நன்று' என்று சிலர் கூறுகின்றனர்.

இந்தி மொழியானது, வட நாட்டவரெல்லாராலும் பொது மொழியாக வைத்துப் பேசப்படுகின்றதென்பது உண்மையாகாது. ஏனென்ருல், அது வடக்கே பற்பல நாடுகளிற் பற்பல மாறுதல்களோடு பேசப் படுகின்றதேயல்லாமல், அஃதெங்கும் ஒரே வகையாகப் பேசப்படவில்லை.

பல மொழியும் தனி மொழியும்.

'சிந்தி', 'லந்தி', 'பஞ்சாபி', 'குசராத்தி', 'இராசபுதனி' 'குமோனி', 'கடுவாலி', 'நேபாலி', 'உரியா' 'பங்காளி', 'மராட்டி', 'சிணு', 'காச்சுமீரி', 'கோகித்தானி', 'சித்ராலி', 'திராகி' 'பசை', 'கலாசா', 'கவர்படி', முதலான இன்னும் எத்தனையோ பல மொழிகளும் வடக்கே பற்பல நாட்

டின்கணுள்ள பற்பல மாந்தர்களாலும் பேசப்பட்டு வருகின்றன. இம்மக்கட் பெருங் கூட்டத்துடனெல்லாம் இந்தி மொழி ஒன்றை மட்டுந்தெரிந்த தென்னுட்டவர் உரையாடி அளவளாவுதல் கூடுமோ? சிறிதுங் கூடாதே. வடநாட்டவரிலேயே இந்தி மொழியை அறியாமற் பல திறப்பட்ட பன்மொழிகளை வழங்கும் மக்கட்கூட்டம் பலவாயிருக்க, இத்தென்னுட்டவர்மட்டும் இந்தி மொழியைக் கற்றுப் பேசுதலால் யாது பயன் விளைத்திடக்கூடும்?

சிதைவின் கூட்டு சிலரின் மடிகட்டு.

இஞ்ஞான்று வழங்கும் இந்திமொழியானது 'லல்லுசிலால்' என்பவரால் உருது மொழியினின்றும் பிரித்துச் சீர் திருத்தஞ் செய்யப்பட்டதொன்றுகும். இதற்குமுன் உள்ளதான பிராகிருதச் சிதைவு மொழியிற் கலந்த பராசிக் அராபிச் சொற்களை அறவேயொழித்துச் சமக்கிருத மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துச் சேர்த்து அவர் இந்தி மொழியைப் புதிதாய் உண்டாக்கினுர். வடசொற் கலப்பினுல் ஆக்கப்பட்டுச் சிறிது காலமாக இப்போது நூல்வழக்கிற் கொணரப்பட்டிருக்கும் இந்தி மொழியை நம் தென்னுட்டவர் கற்றுத் தெரிந்து கொள்ளுவதனுல், இவர்கள் வடநாட்டவரெல்லாருடனும் பேசி அளவளாவி விடக்கூடும் என்று சிலர் மடிகட்டி நின்று கூறுவது நம்மனேரை ஏமாற்றும் பொய்யுரையே யாம்.

தமிழே பொதுமொழி!

இவைகளையெல்லாம் நடுநின்று நோக்கவல்ல உண்மைத் தேயத் தொண்டர்கள் உளராயின் இவ்விந்திய நாட்டுக்கு மிகப் பழைய மொழியாய் இருப்பதுடன் இன்றுகாறும் பலகோடி மக்களாற் பேசப்பட்டு வரும் உயிருடைய மொழியும், இவ்விந்திய மக்களை எல்லாத் துறைகளிலும் மேலேற்றத் தக்க பல சீரிய நூல்களை உடையதாயும் உள்ள தமிழ் மொழியையே இவ்விந்திய தேயம் முழுமைக்கும் பொதுமொழியாக்க அவர் முன் வந்து முயலல் வேண்டும்.

ஆங்கிலத்தின் பரப்பு.

இவ்வுலகமெங்கணும் ஆங்கிலமொழி திருத்தமாகப் பயிலவும் பேசவும் எழுதவும் பட்டு வருகின்றது. இவ்வியல்பினை உற்று நோக்குங்கால் ஆங்கிலத்தின் முன் வேறெந்த மொழியுந் தலைதூக்கி நில்லாதென்பது தேற்றமேயாம்.

உலகமெங்கணும் நடைபெறும் வாணிகமெல்லாம் ஆங்கில மொழியின் உதவிகொண்டே நன்கு நடைபெறுதலை அறிந்து வைத்தும், அதனைப்பொது மொழியாக வழங்காமல் விரிந்த வாணிக வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் பயன்படாத இந்தியைப் பொதுமொழியாக்க முயல்வோர் நம்மனேர்க்கு உண்மையில் உதவிசெய்பவர் ஆவரோ?

வளம் நிறை பொதுமொழி.

இவ்விந்திய நாடெங்கணும் பெரும் பொருட்செலவாற் பல கோடி மக்களாற் பயிலப்பட்டு இயற்கையே பொது மொழியாய்ப் பரவி வருவதும், இலக்கண இலக்கியத் துறைகளிலும் நடுநிலை குன்று உண்மைகாண் வகைகளிலும் பன்னூருயிரக் கணக்கான நூல்கள் புதிய புதியவாய்ப் பெருகும் அறிவுப் பெருஞ் செல்வம் வளரப்பெறுவதுமான ஆங்கில மொழியை — எல்லா மொழிகளிலும் உள்ள எல்லாச் சிறந்த நூல்களையுந் தன்கண் மொழி பெயர்த்து வைத்து அவற்றின் பொருளை அவை வேண்டுவார்க்கு எளிதின் ஊட்டுந் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆங்கில மொழியை நம்மனேர்க்குப் பொது மொழியாக்காமல், இந்நலங்களில் ஒரு கடுகளவுதானும் இல்லா இந்திமொழியைப் பொது மொழியாக்க முயலல் அறிவுடையார் செயலாகுமா? ஆகாதே! ஆதலால், நந்தமிழ் நாட்டவர் ஆங்கிலத்தையுந் தமிழையுமே நன்கு பயின்று நலம் பெறுவாராக!

அடிகளார் அருந்தமிழ்க் காவலர்

சிலம்புச் செல்வர்
மா. பொ. சிவஞானம்,
எம். எல். ஏ.

மறைமலையடிகளார் தனியொரு மனிதராக மட்டுமன்றித் தனிப்பெரும் இயக்கமாகவும் திகழ்ந்தவர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டு போற்றற்குரியதாகும்.

அப்பெரியார் உலகப் பெருமொழிகளான ஆங்கிலத்திலும் வடமொழியிலும் புலமை பெற்றிருந்தார். அம்மொழிகளில் தமக்கிருந்த புலமையைத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார். வடமொழியில் காளிதாசன் புனைந்த 'சாகுந்தலம்' என்ற நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். அடிகளார் வேறு மொழி எதையும் வெறுத்தாரல்லர். ஆயினும், பிறமொழி எதுவும் தம் தாய் மொழியின்மீது ஆட்சி கொள்ள அவர் பொறுத்ததேயில்லை. இவ்வகையில்தான் அவர் வடமொழியின் கலப்பை வெறுத்துத் 'தனித்தமிழ் இயக்கம்' கண்டார்.

பரிதிமாற்கலைஞர் போன்ற சிலர் மறைமலையடிகளாருக்கு முன்பே, தனித்தமிழ் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். பரிதிமாற்கலைஞரின் 'தமிழ் வரலாறு' என்ற நூல் இதற்குச் சான்றாகும். ஆயினும், தனித்தமிழ் உணர்வை, நிலையான ஒரு கொள்கையாக்கி, அதற்கெனத் தனியாக ஓர் இயக்கம் கண்டவர் மறைமலையடிகளாரேயாவார்.

நான் அடிகளாரின் தலைமையில் பல கூட்டங்களில் பேசும் பேற்றினைப் பெற்றேன். அப்போதெல்லாம் அவர் என்னைப் பாராட்டினார். ஆனால், தனியே பார்க்க நேர்ந்த போதெல்லாம், நான் தனித்தமிழில் பிறமொழிச் சொற்கள் கலவாமல் பேச வேண்டும், எழுத வேண்டும் என்று வற்புறுத்த அவர் தவறியதே இல்லை.

தனித்தமிழ் ஆர்வத்திற்கு நான் எதிரியல்லேன். ஆயினும், அதனை நிலையான ஒரு கொள்கையாக்கி, எழுதுவதும், பேசுவதும் தனித்தமிழிலே அமைய வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்ளத்

தயங்குபவன். இதனை அடிகளாரிடமே மிகுத்த பணிவோடு கூறியுள்ளேன்.

தனித்தமிழ்க் கொள்கையிலே அடிகளாருக்கிருந்த பற்றுதல் தன்னலமற்றது; பிற மொழிக் காழ்ப்பற்றது; ஆக்கவழிப் பட்டது-என்பதில் ஐயமிருக்கமுடியாது. தமிழிலே வடமொழிச்சொற்களை வேண்டுமென்றே மிகுயாகப் புகுத்தி 'மணிப்பவள நடை'யைத் தோற்றுவித்துத் தமிழ்மொழியின் தனித்தன்மையை அழித்து, வடமொழியின் கிளைமொழி தான் என்று செய்துவிடச் சிலர் திட்டமிட்டு முயன்றபோதுதான் அடிகள் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார். அந்த இயக்கமே மாபெரும் வெற்றியைக் கண்டது. 'மணிப்பவள நடை' மறைந்தது. அந்த வகையில் தமிழ் மொழியின் காவலராகத் திகழ்ந்தார் அடிகளார்.

மறைமலையடிகளார் தம் குடும்பத்தார், சுற்றத்தார் அனைவரையுமே தமிழ் மொழிக்குக் காணிக்கை ஆக்கினார். தமிழ் மொழியில் புலமை பெற்றோராக எண்ணற்றோர் இருக்கலாம். ஆனால், அவர்களிலே பலர், தம் மக்களைத் தமிழ் படிக்க வைக்காமல், ஆங்கில மொழிக்கே அவர்களைக் காணிக்கையாக்கினர். அவர்களோ தமிழால் வாழ்வு பெற்றனர்; ஆனால், அவர்களால் தமிழ் வாழ்வுபெறவில்லை. இந்நாள் தமிழ்ப் புலவர்களிடமுள்ள இக்குறைக்கு விலக்காக விளங்கினார் மறைமலையடிகளார். இதனை நினைக்கும்போதெல்லாம் அப்பெரியாரின் தன்னலமற்ற உணர்வுக்கு நான் வணக்கம் செலுத்துவதுண்டு.

மறைமலையடிகளார் வடமொழி ஆளுமையை மட்டுமல்லாமல், ஆங்கில ஆளுமையையும் வெறுத்தவர். இனித் தோன்றக்கூடுமோ என்று நாமெல்லாம் அச்சங்கொண்டுள்ள இந்தி ஆளுமையையும் அன்றே வெறுத்தவர்; எதிர்த்தவர். இன்று நாடு தழுவி வளர்ந்துள்ள இந்தி எதிர்ப்பியக்கத்தின் மூலவர் மறைமலையடிகளார்தான்.

அடிகளாருடைய எழுத்தோவியங்கள் நாட்டின் பொது உடைமை ஆக்கப்படல் வேண்டும். 'மாணிக்கவாசகர் காலமும் ஆராய்ச்சியும்' என்ற ஒரு நூலே அடிகளாரின் ஆராய்ச்சித் திறனுக்குச் சான்றாகும்.

மறைமலையடிகளாரின் புகழ் தமிழ் மொழி உள்ளவரை நின்று நிலவும்.

> தமிழ் நாட்டில் பள்ளிகள் நிறுவப்பட்டால் தமிழ் மொழி வாயிலாகவே கற்பிக்கப்படுவதுமன்றிப் பலகை, குச்சி, எல்லாவற்றுக்கும் தமிழிலே பெயர் சொல்ல வேண்டும். சிலேட், பென்சில் என்று சொல்லக்கூடாது.
>
> — சி. சுப்பிரமணிய பாரதியார்.

அடிகளார்தம் எழுத்தழகு

ஓம்

பல்லாவரம்,
8-11-1949.

அன்பர் கனகராயர்க்குத் திருவருளால் எல்லா நலனும் உண்டா
குக!

பனிமிகுதியால் எனக்கு நீர்க்கோவை. ஆதலால் நாளைக்கு
யான் சென்னை வருதல் இயலாதாயிற்று. வருமொரு சனிக்கிழ
மை வருகிறேன்.

நமது நூற்பதிப்பு வேலையை விரைவில் துவங்குதற்கு வேண்டும்
ஏற்பாடுகளை நம் அன்பர் திரு. செங்கல்வராயருடன் கலந்து
விரைவிற் செய்யுங்கள். பிற பின். நலம்.

அன்புள்ள
மறைமலையடிகள்

My beloved Kanagaroyar

I have inclosed herewith your superb marriage invitation. Kindly come over here with your beloved wife, your fathers & brothers as early as you can and help us to make the celebration grand and happy.

If you can bring the repaired clock, it will be very useful now.

Bridegroom's parents, brothers and sister came here on Monday and they are all feeling very happy of this marriage

Mr. Dharmachidambaram Pillai whose signature is printed in the invitation is the brother of the bridegroom. your name is printed next to him.

We pray for the health & happiness of you all.

yours ever lovingly
Maraimalaiadikal

கோலமலர் இவ்வெழுத்தே
போலும் போலும்
போலவேல் பொன்சரடில்
வெழுத்தே போலும்.

அடிகளாரது
நேரமும் நிகழ்ச்சியும்

விடியல் மணி 6 முதல் 7 வரை :

இறைவனை வணங்கியவாறே துயில் எழுதல்; ஆசிரியர் சோமசுந்தர நாயகரவர்கள் நிழற்படத்தின் முன்னின்று வணக்கஞ் செய்தல்; தேவார, திருவாசகப் பாக்களைப் பாடியவாறே வளமனையின் பலகணிக் கதவுகளைத் திறந்து, கதவின் அடிகளைத் துணியால் தட்டித் தூய்மை செய்தல்.

,, மணி 7 முதல் 8 வரை :

தோட்டத்தைச் சுற்றி உலவுதல்; பல் துலக்குதல்.

காலை மணி 8 முதல் 8–30 வரை :

குதவாய் நீரேற்றிக் [ENEMA] கொண்டு மலக்குடலைத் துப்புரவு செய்தல்.

,, மணி 8–30 முதல் 9 வரை :

இளஞ்சூட்டு நீரில் நீராடல்; தோய்த்துலர்ந்த துணிகளை உடுத்துதல்.

,, மணி 9 முதல் 9–30 வரை :

நாடோறும் உட்கொள்ளும் பொரியுப்பு [EFFOSOL] உட்கொள்ளுதல்; உடல் நிலையோர்ந்து நலந்தரும் சாறு அல்லது தேன்கலந்த நீர் அருந்துதல்.

,, மணி 9–30 முதல் 10–30 வரை :

மணைமீதமர்ந்து மூச்சுப் பழக்கம் செய்தல்;
நறுமணப் புகையூட்டி இறைவனை வழிபடுதல்.

,, மணி 10–30 முதல் 11 வரை :

காலை உணவு கொள்ளல். தட்ப வெப்ப நிலைக்கேற்பக் கோதுமைப் பாற்கஞ்சி, மோர் கலந்த கஞ்சி, உலர்ந்த பழங்கள், அத்திப்பழம், அங்கர் முந்திரி, வாதுமைப் பழம், அக்குரூட் கொட்டைப் பருப்பு, வாதம் பருப்பு உண்ணுதல்.

காலை மணி 11 முதல் நண்பகல் 12–30 வரை :

இல்லக் கணக்குப் பார்த்தல்; அச்சேற்றம், தோட்டப்பணி கண்டு பணியிடல்; காண வருவோருடன் உரையாடல்.

நண்பகல் மணி 12–30 முதல் 2 வரை :

காலஅட்டவணையில் குறித்து வைத்துள்ளபடி படித்தல்.

,, மணி 2 முதல் 2–30 வரை :

நண்பகல் உணவு கொள்ளுதல் (தேங்காய்ப்பால், மிளகு, எலுமிச்சம் பழம், இந்துப்பு, நெய், கோசு, கீரை, முள்ளங்கி கொண்ட உணவுப் பட்டியல் படி)

,, மணி 2–30 முதல் 4 வரை :

ஓய்வு.

மாலை மணி 4 முதல் 6 வரை :

காண வருவோருடன் உரையாடல் ;
மாணவர்க்குப் பாடங் கற்பித்தல்.

,, மணி 6 :

பாலில் அதிகமாகக் கற்கண்டு சேர்த்தருந்துதல்.

,, மணி 6 முதல் யாமம் 9–30 வரை :

படித்தல்.

யாமம் மணி 9–30 முதல் 11 வரை :

குதவாய் நீரேற்றி மலக்குடலைத் துப்புரவு செய்தல் ;
நீராடல்.

,, மணி 11 முதல் 12 வரை :

இறைவனை வழிபடல்.

,, மணி 12 முதல் 12–30 வரை :

இரவு உணவு — பால், அரிசிமாவு இட்டிலி, அப்பம், உருளைக்கிழங்கு வற்றல், உழுத்தமாவுப் பண்டம்.

வைகறை மணி 12–30 முதல் 1 வரை :

உலாவல் ; உட்புறக் கதவுகளையும், பிறவற்றையும் விளக்குடன் தாமே சென்று பார்த்தல்.

,, மணி 1 முதல் விடியல் 6 வரை :

உறங்குதல்.

"காலம் அறியாதோன்
கையுறல் பொய்"

— மாமூலம்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

யான் படிப்பதற்கும் நூல் எழுதுவதற்கும் வாங்கி என் மாளிகையில் தொகுத்து வைத்திருக்கும் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலுள்ள நூல்கள் அடங்கிய என் மணிமொழி நூலகத்தை அவை இருக்கும் பதினொரு நிலைப் பேழைகளுடன் சென்னையிலுள்ள திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகக் கிளை நிலையத்தாரிடம் அவர்கள் இசைவார்களானால் ஒப்படைத்து, அதை அவர்கள் மறைமலையடிகளார் நூல் நிலையம் எனும் பெயரால் அவர்கள் செலவிலேயே பொதுமக்கள் இலவயமாகவந்து படிக்கும்படி சென்னையிலேயே தகுதியான இடத்தில் வைத்து நடத்தும்படி செய்யவேண்டும். அடிக்கடி குழுவினர் அதை மேற்பார்த்துக் கொள்ள வேண்டும்.

—மறைமலையடிகளாரின் விருப்ப ஆவணம் முதற்றிகுப்பு.

சென்னை அரண்மனைக்காரத் தெருவில் மன்னிய நூலக மாண்பு.

மறைமலையடிகளார் சிலைத்திறப்பாளர்

மாண்புமிகு **மு. கருணாநிதி** அவர்கள்

தமிழ்நாட்டு முதலமைச்சர்

அடிகளார் பாவும் உரைநடையும்

அடிகளாரது
பேராசிரியத் தோற்றம்

குறள் வெண்பா

மாந்தர்க்கு நூறுண்டு வாழ்த்துமுறை வாழாக்கால்
தேர்ந்தபயன் உண்டோ தெரி.

(வாழ்க்கைக் குறள்)

அகவற்பா

குய்கமழ் கறியும் நெய்கமழ் துவையும்
பொன்னிறப் புழுக்கலுங் கன்னல்பெய் பாலும்
தன்னிகர் குழம்பும் பன்னிய வகையும்
மிக்கெழு சுவையின் முக்கனி வகையும்
கோழரை வாழைக் குருத்தகம் விரித்துப்
பால்கெழு தன்மையிற் பலவே றமைத்து,
முரவை போகிய முழுவெள் ளரிசி
கைவன் மடையன் அடுதலி நெய்கனிந்து,
விரலென நிமிர்ந்த அவையன் மென்பதம்
முல்லை முகையென மெல்லிதற் குவைஇப்
புழுக்கலும் பிறவும் அளாஅய், விழுத்தக
நெய்யுடன் பெய்து மெய்ம்மறந் துண்டாங்
கானு துறைவோர் அளவில ரன்றே.

(திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை.)

எண்சீர் ஆசிரிய விருத்தம்

இன்பநுகர் பொருளெல்லாம் வெறுத்து விட்டார்;
இனியநூல் அமைச்சரையுங் கலவார் முன்போற்
கண்ணுறக்கம் இரவெல்லாம் பெறமாட் டாராய்க்
கட்டில்மிசை யிங்குமங்கும் புரளு கின்றார்;
தன்பெரிய மனைநல்லார் பேசும் போது
தன்மையினற் சிலசொல்லுஞ் சொல்லி னுள்ளும்
பெண்ணரசி சகுந்தலையைப் பிழைத்துச் சொல்லிப்
பெரிதுவரும் நாணத்தாற் கலங்கு கின்றார்.

(சகுந்தலை நாடகம் - துசியந் தன் காதல் நிலை.)

கட்டளைக் கலித்துறை

நமரா யிருந்துபின் ஏதில ராவர்; நயமிலருந்
தமராவ ரென்னிற் றமர்பிற ரென்று தகவுசொல்லி
அமராடி நிற்றல் வறிதுகண் டாயலை யாழியொற்றிக்
குமராவென் றேதிக் குடந்தங்கொண் டேத்தக் குறிக் -
கொணெஞ்சே!

(திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை.)

அடிகளாரது உரைநடை வளம்

இலக்கியம்

முற்காலத்து விளங்கிய செந்தமிழ் நல்லிசைப் புலவர்கள் தமதருமைச் செந்தமிழ் மொழியைத் தம் இன்னுயிரினும் விழுமிதாக ஓம்பிப் பொய் சிறிதுங் கலவா அறவுரையே பகருந் தமது நாவால் மெய்ப்பொருள்களையே நிரப்பிய பாக்களும் நூல்களும் அதன்கண் இயற்றி, அதனை மேன்மேல் உரம்பெற வளர்த்து வந்தனர். அதனால், அஃது அஞ்ஞான்று மலைமேல் ஏற்றிய நந்தா மணி விளக்குப்போல், தனது பொங்குபேரொளியை எங்கணும் வீசி, இவ்வுலகத்தின்கண்ணிருந்த மாந்தரெல்லாருடைய அறிவுக் கண்ணையும் விளங்க விளக்கிற்று. மற்றுப் பிற்காலத்தே, அஃதாவது சென்ற அறுநூறு ஆண்டுகளாகத் தோன்றிய தமிழ்ப் புலவர்களோ பெரும்பாலும் தம் முன்னோர் சென்ற நெறியே தேர்ந்து செல்லாதவர்களாய், அவர் சென்ற மெய்ந்நெறி பிழைத்துப் பொய்ந்நெறி ஏகித் தமதருமைச் செந்தமிழ் மொழியின் தூய்

மையை ஓம்பாது, அதனைப் பிற மொழிச் சொற்களோடு கலந்து மாசுபடுத்தியதல்லாமலும், அதன்கண் மெய்யல்லாதனவும் முழுப் பொய்யும் மிடைந்த பாவும் நூலும் இயற்றி அதன் மெய் வழக்கினை யும் பாழ்படுத்திவிட்டனர். அவ்விருதிறமும் பிரித்து நனி விளங்க விளக்கிக் காட்டினலன்றி இனித் தமிழ் கற்பார் தமிழ் மொழியினையும், அதனை வழங்கும் மக்களையும் பேணி வளம்படுத்தார்.

(முற்கால, பிற்காலத் தமிழ்ப் புலவோர் - முன்னுரை)

இயற்கை

எங்கெங்கு நம்மறிவை வயப்படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருந்தன்மையும் விளங்கித் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும். இதனை விளக்கிக் காட்டுமிடத்துப் பேரழகாற் சிறந்த ஓர் அரசி தான் மேற் போர்த்திருந்த நீலப் பட்டாடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப் பின் அதனைச் சுருட்டிக் கீழே எறிந்துவிட்டுத் துயில் ஒழிந்து ஒளி விளங்கு தன் நளிமுகங்காட்டி எழுந்ததையொப்ப, இருட் கூட்டஞ் சுருண்டு மடங்கி அலைகடலிற் சென்றடங்கிவிடுமாறு இளைய ஞாயிறு உருக்கித் திரட்டிய பசும்பொற்றிரளைப் போலத் தளதளவெனக் கீழ்த் திசையிற்றோன்றவும், அத்திசையின் பரப் பெல்லாம் பொன்னுரைத்த கற்போற் பொலிந்து திகழவும், பசுமை பொன்மை நீலம் சிவப்பு வெண்மை முதலான நிற வேறுபாடுள்ள பொன் வெள்ளிகள் உருகி ஓடுகின்ற நிலம்போல வண்ணமாய் வான் இடமெல்லாம் பல விரிந்து விளங்கவும், கரிய முகில்க ளெல்லாம் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச்சீலைகள் போல வும் வெளிய முகில்களெல்லாம் பொற்பட்டுத் துகில் போலவும் ஆங்காங்கு சொல்லுதற்கரிய பேரொளியோடு திகழவும் உலக மங்கை நகைத்தாற்போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற் கால அழகெல்லாம் பாட்டு என்றே அறிதல் வேண்டும். ஆ! இங்ஙனந் தோன்றும் அவ்விடியற்கால அழகினைக் கண்டு வியந்த வண்ணமாய் மீன் வலையோடு கடற்கரையில் நிற்குஞ் செம்பட வனைக் காட்டிலுஞ் சிறந்த புலவன் யார்?

(முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை.)

> மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
> யாவுள முன்னிற் பவை?
>
> — திருவள்ளுவர். (முப்பால்—636)

அடிகளார் வாய்மொழியில் அடிகளார்

கடனறி காட்சி.

“யானோ கல்வியிலும் கடவுள் வழிபாட்டிலும் தமிழ்த் தொண்டு செய்வதிலும் காலத்தைக் கழித்து வருபவன்.”

25—3—1941 நாளிடப்பட்ட முடங்கல்.

செப்பம் உடைமை.

“யான் எல்லார்க்கும் எக்காலத்தும் பொதுவாக நடப்பவன்.”

25—3—1941 நாளிடப்பட்ட முடங்கல்.

மாசற்றார் கோள்.

“மனமொழி மெய்களான் யான் இதுகாறும் எவர்க்குந் தீது செய்த தின்மையான் பிறர் செய்த தீமைகளையும் விரைவில் மறந்து விடுதலே என் இயற்கை.”

15—7—1922 நாளிடப்பட்ட முடங்கல்.

மாணா உவகையின்மை,

“காசையே பெரிதாக எண்ணி வயிறு கழுவி மாண்டுபோகும் ஆட்களில் யான் ஒருவன் அல்லன்.”

14—9—1942 நாளிடப்பட்ட முடங்கல்.

மூத்த அறிவு.

“எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சி யானது எமது இருபத்தோராம் ஆண்டில் பெரும்பாலும் நிரம்பிய தென்னலாம்.”

—திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை-முகவுரை.

மாசற்ருர் கேண்மை மறவாமை.

‘‘எமது ஆசிரியர் (இரா. சோமசுந்தர நாயகரவர்கள்) செய்த நன்றியை யாம் எக்காலத்தும் மறக்க முடியாது. துயில் நீங்கி எழுந்தவுடன் எம் ஆசிரியரின் நிழலுருவப் படத்திற்கு வணக்கஞ் செய்வது பழக்கம்.’’

—சைதாப்பேட்டைச் சிவநெறிக் கழகச் சொற்பொழிவில்.

அரும்பயன் ஆயும் அறிவு.

‘‘விழுமிய தமிழ்ப் பழைய நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினுலேயே, செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமதிளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று.’’

—திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை - முகவுரை.

ஆன்ற பெருமை.

‘‘எமது ஆசிரியர் (நாயகரவர்கள்) ‘உன் தனித்தமிழைப் படிக்கப் படிக்க என் செவிகளுக்கு இன்பமாயிருக்கிறது. தனித்தமிழில் எழுதுவதை விடாதே. நீ தனித்தமிழிலே எழுதுவது எனக்கு விழிப்பையும் கிளர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது’ என்று கூறினுர்.’’

—சைதைச் சொற்பொழிவு.

இல்வாழ்க்கை இயல்பு.

‘‘எவரோடு எக்காலத்து எத்துணைச் சிறந்த பொருளைப் பற்றி யாம் உரையாடிக் கொண்டிருப்பினும் அவ்வவ்வேளைக் கடமைகளைச் செய்தற்குரிய காலம் அணுகுகையில் அவைகளைச் செய்தற்கு நீ அழைக்கலாம் – என்று எம் மனைவியார்க்கு அவ்வுரிமையினை வழங்கினேம்.’’

—சோமசுந்தர நாயகர் வரலாறு.

பெருமை முயற்சி தரும்.

‘‘இளவரசனைவிட வாழ்க்கையை இனிதாக நடத்துகின்றேன். எங்கும் எமக்குச் சிறந்த வரவேற்பும் ஒப்புரவும் ஆற்றப்படுகின்றன.’’

8—5—1912 நாட்குறிப்பு.

அஞ்சா மிடுக்கு.

‘‘இடையில் வந்து தமிழைக் கெடுத்தவர்களை யான் ஒரு நாளும் பொருட்படுத்தேன்.’’

—கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதினுன்காம் ஆண்டுவிழாத்-தலைமையுரை.

திறனறிந்து சொலல்.

"யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்."

—ஒரு முடங்கல்

ஆவது அறிவார்.

"உலகம் உள்ளளவும் எமது தமிழ்த் தொண்டு நிலைபெற்றுப் பெரும் பயனும், பெரும் புகழும் விளைவிக்கும்."

25—3—1941 நாளிடப்பட்ட முடங்கல்.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைக்கலக்கிக் கீழிடு வானும், — நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

— நாலடியார் – 248.

அறிஞர்தம் வாய்மொழியில் அடிகளார்

புலமை

எக்காலத்திலும் பயன்படக்கூடிய நூல்கள் தமிழில் ஏராளம் உண்டு. அவற்றில் எல்லாம் நல்ல புலமை பெற்றிருந்த மறைமலையடிகள், பல் வேறு கருத்துக்களை — தமிழன், தனியானதோர் மாண்புக்கு — பண்புக்கு உரிமையாளன் என்பதை வலியுறுத்தும் கருத்துக்களை மிகத் துணிவோடு எடுத்துச் சொன்னார்.

— அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள்.

வனப்பு

கண்டபொழுதே கவர்ச்சிக்கும் உடல் நலம்; பேசியதும் அவர் தமிழுக்கு எல்லோரையும் அடிமையாக்கும் மொழி நயம்; குயில் கூவு கிறதோ, குழல் ஒலியோ என்று ஐயுறும் வண்ணம் இருக்கும் அவர்குரல்.

— டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை.

நெறிகாட்டி

ஒரு முறை சில மணித்துளிகள் அடிகளுடன் பேசும் வாய்ப்பு கிடைத் தது. அதன்பின் அவரது நூல்களைப் பற்றித் தெரிந்த பின்பு அவருடைய ஆழ்ந்தகருத்துக்கள் எவ்வளவு விலை உயர்ந்தவை என்பதை அறிந் தேன். அவர் கருதுவதுபோல் நம் நாட்டில் உள்ளவர்கள் நடந்து கொண்டால் அஃது அவருக்குச் செய்யும் நன்றியாகும்.

— முதறிஞர் கோ. து. (G. D.) நாயடு அவர்கள்.

வினைத் தெளிவு

தமிழ் வானத்தில் ஒரு தூய திங்களென அடிகள் திகழ்ந்ததைக் கண்டேன். 'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கு அடிகளின் வாழ்க்கை ஓரிலக்கியம்.

— தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

கல்வி.

'சாந்துணையும் கற்க வேண்டும்' - என்ற கோட்பாடு படைத்தவர்கள் அடிகள்.

— டாக்டர் எ.ஃச். சி. மணவாள ராமாநுசம் அவர்கள்.

அறிவாற்றல்

இத்துணைச் சிறு பொழுதிலே இத்துணை உயர்ந்த நூல்களை இவர் இவ்வாறு பயின்று தெளிந்தமை அரிதரிது.

— பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை.

தொன்மைக்குப் புத்துயிர்

தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்த பண்டைத் தமிழ் நாகரிக நிலையினுக்குப் புத்துயிரளித்து, அதனை இன்றும் என்றும் நின்று நிலவச் செய்தற்குரிய பெருமுயற்சியினை அடிகள் தமது தலையாய கடமையாகக் கொண்டார்.

— பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை.

பகுத்தறிவு

அடிகள் தமது அறிவாராய்ச்சிக்கு உட்படுத்திப் பொருத்தமான வற்றையே ஒப்புக்கொள்வார். அதுபோன்றே, தமிழில் உள்ள காரணத்தி னாலேயே தமிழ் நூல்கள் என்று ஒப்புக்கொள்வதில்லை. குப்பை கூளங்கள், இடைச்செருகல்கள் ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தள்ளி விடுவார்.

— ''கல்கி'' -கிருட்டினமூர்த்தி.

அடிநிலையர்க்கு அன்பர்

இமயமலை, பொதியமலை இவற்றையெல்லாம்விடப் பெரியமலை நம் மறைமலை. இந்துமதம் நல்வழிப்பட அரிசனங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்று அவர் விரும்பினர்.

— திரு. சே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள்.

எழுத்து வன்மை

உரைநடை கைவந்த வல்லாளர்.

— பேராசிரியர் பரிதிமாற் கலைஞர்.

தனித் தமிழ்த் தந்தை

நாட்டில் 'மறைமலையார் நடை' - என ஒன்று தோன்றிப் பரவியுள்ளது. எனவே, அடிகள் 'தனித்தமிழ் நடையின் தந்தை' எனற்பாலர்.

— டாக்டர். அ. சிதம்பரநாதனர்.



சிலைநாட்டு விழாத் தலைவர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவண்ணாமலை சைவ திருமடத்துத் தலைவர்

பெருமை.

தமிழ் இலக்கியங்களின் காலம், பொருள் முதலிய கூறுகளை ஆராயும் முறை ஆங்கில நாட்டு முறையை அடியொற்றி வருவதொன்று. காலம் பற்றியும் ஒப்புமைபற்றியும் ஆராய்ச்சி நிகழும். இதனை முதற்கண் தமிழ் இலக்கியத்துறையுட் புகுத்தி, இனிய உரையில் எழுதிக் காட்டிய பெருமை அடிகட்கே உரியதாகும்.

— *பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி அவர்கள்.*

ஆராய்ச்சி.

இந்நாளில் தமிழ் நூலாராய்ச்சி முறைக்கும் திருந்திய செந்தமிழுரை நடைக்கும் அடிகள் சிறந்த வழிகாட்டியாய் இலங்குகின்றார்கள்.

— *திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள்.*

சொற்பொழிவு.

திருவாளர் மறைமலையாரின் சொற்பொழிவின்பத்தில் மூழ்கிவிட்டேன். அவர் இனிய பேச்சொலிகள் என் இரண்டு செவிகளிலும் இன்ப முழக்கஞ் செய்கின்றன.

— *டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்.*

ஆசிரியர்.

அடிகள் பாடஞ் சொல்லும்போது மாணவர் அனைவரும் மிக்க பேரு வகையோடு கேட்டு மகிழ்வர்.

— *எ஁ச். வையாபுரிப் பிள்ளை.*

உரையாசிரியர்.

திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்கட்கு அடிகள் எழுதியுள்ள உரையைப்போல் யாராலும் எழுத முடியாது.

— *பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்.*

புலமை உரம்.

அடிகளார் ஒன்றைத் துணியவும் வல்லர்; துணிக்கவும் வல்லர்.

— *க. ப. மகிழ்நன்.*

மொழித் தொண்டு.

தமிழ் அன்னையின் இயல்பான அழகு முகத்தை மக்களுக்குக் காட்டினவர் மறைமலை அடிகள்.

— *பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்.*

மொழிக் காப்பு.

இந்தி பொதுமொழியாகித் தமிழர்க்குக் கட்டாய மொழியாகும் பெற்றியுடையதன்று என்பதைத் தக்க ஏதுக்களோடு எடுத்துக்காட்டி வெளிப்படை முடங்கல் எழுதியவர்.

— *டாக்டர் அ. சிதம்பரநாதனார்.*

நெஞ்சுரம்.

அடிகளுக்கு அச்சம் தெரியாது; நடிகராய்ப் பேசமாட்டார்.

— *பேராசிரியர் அ. கிருட்டினமூர்த்தி அவர்கள்.*

சீர்திருத்தம்.

மறைமலையடிகளும் கா. சு. பிள்ளையும் எனக்கு வலக்கையும் இடக்கையும் போன்றவர்கள்.

— *பெரியார் ஈ. வே. இரா. அவர்கள்.*

வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

அடிகளார் நுண்மாண் நுழைபுலச் செல்வராய், நாவீறுடையராய், எழுத்தாற்றலில் எவரும் வியக்கத்தக்க எழுத்தாளராய் இலங்கியும் அவர்கள் அவ்வாற்றல்களை அடிமை வாழ்விலீடுபட்டு விழலுக்கிறைத்த நீராக்காமல், உரிமைவீறுடன் தனிமையில் உழைத்துப் பொருளும் புகழும் ஈட்டி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த வகை பெரிதும் பாராட்டத்தக்கது.

— *வித்வான் மே. வீ. வேணுகோபால பிள்ளை அவர்கள்.*

கன்னெஞ்சும் வன்னெஞ்சும் இரும்பினுல் ஏய்ந்த நெஞ்சும் படைத்த தமிழ்ப் பகைவராகிய கோளரவுகளுக்கு ஓர் இடியேருக விளங்கியவர் நம் அடிகளார்.

— *ஆ. கனகராயர் (அடிகளாரின் அணுக்கர்.)*

மறைமலையடிகள் நாடகம், வரலாறு, ஆராய்ச்சி, நாவல், செய்யுள் முதலிய பல துறைகளிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். உரை நடையில் மன்னர் மன்னர்.

— *அருட்டிரு அழகரடிகள் (அடிகளாரது மாணவர்)*

மறையெனப் படுவது தமிழ்நான் மறைநூல்,
மற்றை மறைநூல் பின்வந்த குறைநூல்,
முறையாய் இவைகட்குச் சான்று காட்டி
முழக்கஞ் செய்த முத்தமிழ் அறிஞன்.

— *பாவேந்தர் பாரதிதாசனர்.*

வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மறையிலை போல மாய்ந்திசினேர் பலரே;
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்து.

— உறையூர் முதுகண்ணன் சாத்தனர்.
(புறநானூறு-27.)

தந்தையாரின் தனித்தமிழ் எண்ணம்

அடிகளார்தம் திருமகனார்
புலவர் மறை. திருநாவுக்கரசு
அவர்கள்

ஒரு மொழியின் வாழ்வும், வீழ்வும் அதன் சொற்களின் ஆட்சியையும், வீழ்ச்சியையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. சொற்களில்லாவிடில் மொழியேது? வட சொற்களைப் படிப்படியாகத் தமிழிற் புகுத்தி இறுதியில் கணக்கின்றிச் சேர்த்து 'மணிப்பவள நடையும்' வந்துவிடவில்லையா? ஆதலினாற்றான் தமிழ் வாழ—தமிழ்ச் சொற்களை அழிக்கவிடாது காக்கவே எம் தந்தையார் மறைமலையடிகளார் தனித்தமிழியக்கங் காண்பாராயினர்.

அடிகள் வடமொழி, ஆங்கிலத்தில் ஆர்வமும் மதிப்புமுடையராயினும் அம்மொழிகளின் சொற்களாலும் படையெடுப்பாலும் தமிழ் மொழிக்கு ஊறு நேராதிருக்கும் பொருட்டே 'தனித் தமிழ்' இயக்கத்தை தி. ஆ. 1886 (கி.பி. 1916) இல் தோற்றுவித்தார்கள்.

தி. ஆ. 1886 இல் எம் அக்கையார் நீலாம்பிகைக்கு அகவை 13. ஒரு நாள் தந்தையும் மகளும் தம் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது அடிகள் இராமலிங்க வள்ளலார் அருளிச் செய்த திருவருட்பாவில் "பெற்ற தாய்தனை மக மறந்தாலும்" எனத்துவங்கும் பாடலைப் பாடினர். அவ்வளவில் அடிகள் "நீலா இப்பாட்டில் 'உற்ற தேகத்தை உடல் மறந்தாலும்' என்பதில் 'தேகம்' என்ற வட சொல்லை நீக்கி அவ்விடத்தில் அதற்கு மாற்றாக 'யாக்கை' என்ற தமிழ்ச்சொல்லிருக்குமானால் அவ்விடத்தில் செய்யுள் ஓசையின்பம் பின்னும் அழகாக இருக்கும். பிற மொழிச் சொற்களைக் கலப்பதால் தமிழ் தன் இனிமை குன்றுகிறது. அத்துடன் நாளடைவில் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் நிலை பெற்று அப்பிறமொழிச் சொற்களுக்கு நேரே வழங்கி வந்த நம்மருமைத் தமிழ்ச்

சொற்கள் மறைந்துவிடுகின்றன" என்று கூறினார்கள். அதுகேட்ட மகள் தந்தையாரைப்பார்த்து, "அப்படியானால் நாம் அயன்மொழிச் சொற்களை நீக்கித் தனித் தமிழிலேயே பேசுதல் வேண்டும். அதற்கான முயற்சிகளைக் கைவிடாது செய்தல் வேண்டும்" என்று ஆர்வமுடன்கூறினர். மகளின் அன்பும் அறிவுங்கலந்த வேண்டுகோளை அடிகள் ஏற்றுக்கொண்டார்கள்.

அடிகள் தனித்தமிழியக்கங் கண்டவுடனேயே உணர்ச்சியுடன் அம்முயற்சியில் இறங்கினார்கள். முதலில் தம் பெயர் "சுவாமி வேதாசலம்" (வேதம் - மறை; அசலம் - மலை; சுவாமி- அடிகள் "மறைமலையடிகள்" என்று தனித்தமிழில் மாற்றியமைத்துக்கொண்டார்கள் 'சமரச சன்மார்க்க நிலையம்' என்ற தமது நிறுவனத்தில் பெயரைப் 'பொதுநிலைக் கழகம்' என்று மாற்றினார்கள். தம் மக்களில் வடமொழிப் பெயருடையார்க்குத் தனித் தமிழ்ப் பெயர்சூட்டினார்கள். தம் மாணவர் பாலசுந்தரத்தை "இளவழகனா"ராக்கினார்கள்.

> நமது சட்ட அமைப்பில் உரிமை, வாணிகம், சட்டம் முதலியவற்றைப் பேணும் கண்காணிப்பாளர்களை அமைக்க விதி இருக்கிறது. அங்ஙனமே, பிறமொழிச் சொற்கள் நம் தாய்மொழியில் (ஆங்கிலத்தில்) கலவாமல் பேணும் கண்காணிப்பாளரை அமைக்கும் விதி வேண்டும்.
>
> — ஆங்கிலப் பேரறிஞர் அடிகள்.

இவைமட்டுமன்றித் தாம் முன்பு யாத்த முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களில் இருந்த வடமொழிச் சொற்களை மறுபதிப்பில் அறவே நீக்கி அவற்றிற்கு நேரான தமிழ்ச்சொற்களை அமைத்து அந்நூல்களை வெளியிட்டார்கள். தம் தலைமைப் பேருரைகளிலும் சொற்பொழிவுகளிலும் வடமொழி, ஆங்கிலச்சொற்களைச் சொல்லும் இன்றியமையாமை நேர்ந்தால் அவற்றைக் கூறி அச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை உடன் கூறுவார்கள். அடிகள் தம் வீட்டிலும், தனியான உரையாடல்களிலும் சற்றும் அயராது ஆர்வமுடன் தனித் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தினார்கள். அடிகள் தம் சிவ வழிபாட்டிலும் திருக்கோயில்களின் வழிபாட்டிலும், மறைகளும் ஓதுகிளவிகளும் யாவர்க்கும் பொருள்விளங்காத வடமொழியிற் கூடாதெனவும் தனித் தமிழ் மறைகளாகவே தேவாரம், திருவாசகம், திருவாய் மொழியாம் தமிழ் மறைகள் ஓதப்படல் வேண்டுமெனவுங் கிளர்ந்தெழுந்தார்கள்.

அடிகள் பல்லவபுரத்தில் தம் மாளிகையை விரிவாக்கி அதன் மாடிப் பகுதியில் அழகிய மண்டபமமைத்து அதன் நடுப்பகுதியில் எண்கோண வடிவில் கோயிலொன்றாக்கி, அதில் தம் வழிபடு கடவுளாகிய அம்பலவாணர் அம்மையின் திருப்படிமங்களை எழுந்தருளச் செய்து குடமுழுக்குக் கரணங்களை நடத்தி வைத்தருளமாறு கொறடாச்சேரி அருட்திரு வாலையானந்த அடிகளை வேண்டிக் கொண்டார்கள். அப்பெரியார் அதற்கிசைந்தாராயினும் கரணங்கட்கு வடமொழியே ஓதப்படும் என்றறிவித்து விட்டார்கள். அதற்கிசையாது அடிகள் வேறுதக்கார் கிடைக்காமையால் தாமே உரிய மறை, ஓதுகிளவி கரணங்களுக்கானவற்றைத் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய திருமுறைகளிலிருந்து தேர்ந்துகொண்டு அவ்விழாவினை இனிது நடத்தி முடித்தார்கள்

இவ்வாறே அடிகள் தம் மக்கள் மணிமொழி (மாணிக்கவாசகம்) அழகுரு (சுந்தரமூர்த்தி) முந்நகரழகி

(திரிபுரசுந்தரி) ஆகியோர்க்கும் மெய்யன்பர்கள் சிலர்க்கும் தாமே ஆசானுய் அமர்ந்து திருமணங்களையெல்லாம் தமிழ் மறைகள் கொண்ட மரபில் நிகழ்த்தினுர்கள்.

தி. ஆ 1907 (1937) இல் பல்லவபுரத்தில் அடிகள் வாழ்ந்த மாளிகையில் அவர்கள் தலைமையில் பொதுநிலைக்கழகவிழா நிகழ்ந்து கொண்டிருக்கையில் அவ்விழாவின் செயலாளன் என்ற முறையில் – அடிகளாரின் மகன் என்ற முறையில் யான் பேசும் போது அடிகளை "இவர் பெரிய அகங்காரி" என்றேன். உடனே அடிகள் புன்னகை தவழ என்னை நோக்கி "அகங்காரி என்று வடசொல்லிற் கூருதே. 'செருக்குடையவர்' என்று தமிழிற்கூறு" என்ருர்கள்.

கரந்தைத் தமிழ்ச் சங்க விழாவின் இரண்டாம் நாள் முற்பகல் தலைமையுரையாக அடிகள் சொற்பொழிவாற்றினுர்கள்: "ஆ என்பது சிலருக்கு விளங்காது. பசு என்ருல் விளங்கும். 'ஆ' என்பது தனித்தமிழ்ச்சொல். தண்ணீர்என்று உரையாது நம் மக்களிற் பலர் தீர்த்தம், ஜலம் என்கின்றனர். ஐயகோ! மலையாளிகள் கூட வெள்ளம் எனும் தனித்தமிழை வழங்குகின்றனரே" என்ருர்கள். பண்டிதமணி இடைமறித்து, "சலம்பூவோடு தூபமறிந்தறியேன்' என்று அப்பர் கூடக் கூறியிருக்கின்ருர்" என்ருர்கள்.

அடிகள், "சல சல எனும் ஓசையுடன் ஓடுதலின் சலம் என்பது காரணப் பெயர். அது தமிழ்ச் சொல். இவ்வாறு "சல சல மும்மதம் பொழியும்" என்று தமிழ்ச்செய்யுள் ஒன்றிலும் கூறப்பட்டுள்ளதே. அது வடமொழிதான் என்று உறுதியானுல் அதைவிட்டு 'நீர்' என்னுந் தனித்தமிழ்ச் சொல்லை ஆளலாமே! ஆ! ஆ! என் செய்வது! தனித்தமிழை இழிவென்று நினைப்பது முறையாமோ? தமிழிலே கடவுளை வணங்கக்கூடாது என்று கூறும் பார்ப்பனரும் உளர். பெரியோர் தமிழைப் பழித்துப் பாழ் செய்தால் அது குற்றமில்லையோ? இப்படிப் புலவர் பலர் தனித் தமிழ் உணர்ச்சி தகுதியற்றது என்று மொழிந்து தமிழைப் பாழாக்கினுல் ஐயகோ! (உணர்ச்சியுடன்) என் செய்வது(!) என்ருர்கள். பண்டிதமணி "பழம் புலவர்களால் தமிழ் பாழாகவா போய்விட்டது" என்ருர்கள்.

அடிகள். "இடைக்காலத்துப் புலவர் பழைய தனித்தமிழ் உணர்வை மறந்து வட சொற்களை மிகுதியும் புகுத்தித் தமிழைக் கெடுத்துத்தான்விட்டனர். அவர்களை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? வட சொற்களைக் கலத்தல் குற்றமில்லையெனின் ஆங்கிலத்தையும் மிகுதியாக வழங்கித் தனித்தமிழ் உணர்ச்சியைக் கெடுத்தால் நற்றமிழ் எவ்வாறு உயிர் வாழும்? அந்தோ, குமரகுருபரர் 'சலாம்' எனுஞ் சொல்லை வழங்கினுர் என்று நாமும் பல துலுக்குச் சொற்களை வழங்கித் தமிழைப் பாழ்படுத்தலாமா? பாலை வழுக்கி விழுந்தால் அஃது அதற்குப் பெருமையாக முடியலாம்" என்று விளக்கினுர்கள்.

"வள்ளுவரும் பரிமேலழகரும்" என் பதுபற்றிப் பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார் அவர்கள் தம் சொற்பொழிவின் ஒரு பகுதியில்:

"தமிழில் வடசொற்கள் தொல்காப்பியர் காலத்திலேயே கலந்துவிட்டன. அப்பொழுதே வடசொற் கலப்பிற்கு இலக்கணமுஞ் செய்யப்பட்டிருக்கின்றது. பழைய நூலான கலித்தொகையில் 'சடை' என்ற வடசொல் வழங்கப்பட்டிருக்கின்றது" என்று குறித்தார்கள். அடிகள் குறுக்கிட்டு "ஆரியரைப்போலத் தமிழரும் ஆரிய மொழி வழக்கை ஒரோவிடங்களில் எடுத்தாண்டிருக்கின்றனர். 'சடை' எனுஞ் சொல் தமிழேயாம். தமிழிலிருந்தே அதனை வடமொழி பெற்றது. 2200 ஆண்டுகளுக்கு முன்பு பரிபாடலில் 'சடையன்' என்னுஞ் சொல் வந்துள்ளது.

இருக்கு மறையில் 'சடை' எனுஞ் சொல் இல்லை. தொல்காப்பியம் முற்றிலும் பத்து வட சொற்களே உள்ளன. 2000 சொற்களுக்கு ஒரு வட சொல்லே உண்டு."

"அன்பர்களே! நாம் தமிழை உயிரோடு வைக்கப் பாடுபடவேண்டும். ஐயகோ! தமிழைக் கொல்ல மடிகட்டி நிற்கலாமோ? நூற்றுக்கு எண்பது வட சொல்லும் இருபது தமிழ்ச் சொல்லுமாக எழுதினால் - பேசினால் தமிழ் எப்படிப் பிழைத்தல் கூடும்? வடமொழி பயில வேண்டாம் என்று யான் கூறவில்லை. மகிழ்வுடன் பயிலுங்கள். நானும் பயிலுகின்றேன். ஆனால் அன்பர்களே, தமிழ்த் தாயைக் கொல்லாதீர்கள். தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனியில் அம்மைத் தழும்பு போல் வடசொற்களைப் புகுத்தாதீர்கள். அடியனேன் உங்களைப் பெரிதுங் கெஞ்சுகின்றேன். ஆண்டவர்களே! தமிழைக் கெடுக்காதீர்கள். தனித் தமிழுக்குப் பாடுபடுங்கள். உண்மைத் தமிழராயின் உங்களுக்கு உறுதிப்பாடு வேண்டும். தமிழைத் தமிழாகவே வழங்க வேண்டும். தாய்க்குத் தகுந்த பிள்ளைகள் தோன்றுதல் வேண்டும். தமிழில் அயற் சொற்களைக் கலக்க விரும்புவோரை எவ்வளவு கற்றவராயினும் அவரை யான் மதியேன், மதியேன்" என்று முடித்தார்கள். (அடிகள் இச்சொல்லைச் சொல்லுகையில் உணர்ச்சி மிகுந்து, தம் வலக் கையை உயர்த்திப் பிடியாக மடக்கிக் கொண்டு பலகையின் மீது இருமுறை குத்தலானார்.)

இறுதியில் பண்டிதமணியவர்கள் "தனித்தமிழ் உணர்ச்சி கூடாதென்று யான் கூறவில்லை" என இசைந்து நின்றார்கள்.

அடிகளின் இத்தனித்தமிழ் அன்பினால் - முயற்சியினால் 'வடசொற்கள் கலவாத ஒரு நூல்தானும் தமிழில் உண்டோ? எழுத முடியுமோ? தனித்தமிழ் என்றால் தனித்து + அமிழ் = தனித்தமிழ்' என்றெல்லாம் இரட்டுற மொழிதல் முறையால் தனித்தமிழை இகழ்ந்தார் கூற்றுக்கள் எல்லாம் தவிடுபொடியாயின. பிற மொழிச் சொற்கள் கலவாத தமிழ் இறந்து படும். வடமொழி கலவாத நூல், "ஒன்றேயாயினும் தனித்தமிழில் உண்டோ" என்று கூறிய 'இலக்கணவிளக்கம்' ஆசிரியர் சாமிநாத தேசிகர் காலந்தொட்டு முன்னூறு ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு இழுக்காக வழங்கிவந்த பழமொழியும் மாய்ந்தொழிந்தது. இன்றோ தனித்தமிழில் பலதுறை நூல்கள் வெளிவந்து கொண்டுள்ளன.

அடிகள் மட்டும் தனித்தமிழ் இயக்கம் கண்டிராவிடில் முன்னே செழுந்தமிழில் பன்னூறு வடசொற்களைப் புகுத்தித் தமிழைக் குற்றுயிராக்கிய தமிழ்ப் பகைவர்கள் மேலும் ஆயிரக் கணக்கான வட சொற்களையும் தமிழிற் கலந்து தமிழையே அழித்திருப்பார்களன்றோ?

> ஒரு மொழி பிற வகைகளில் அழிந்துபடுவதினும் பிற மொழிச் சொற்கலப்பால் அழிவது பெருந் துன்பமாகும்.
>
> — கேம்பெல்.

அடிகளாரின்
அசைவத் தோற்றம்

மறைமலையடிகளார் சமயப் பணி

சைவத்தெளிவார் புலவர்
திரு. ப. இராமனுதம் பிள்ளையவர்கள்
சென்னை.

ஓம்
திருச்சிற்றம்பலம்

மாண்பார் மறைமலையார் மாநிலத்துத்-
தோன்றிலரேல்
காண்பாரார் கன்னித் தமிழ்த்தூய்மை–
வான்பாலாம்
தென்னுட்டுத் தொன்மைச் சிவநெறியின்
மெய்ம்மைமறை
முன்னும்மெய் கண்டதமிழ் மூப்பு.

''மக்கள் தாமே ஆறறி வுயிரே''
— என்கிறது தொல்காப்பியம்.

ஆறு அறிவு என்பது, புலனறிவு ஐந்தனேடு மனனறிவுஞ் சேர்ந்ததாகும்.

ஆறு என்பதனை இரட்டுற மொழிந்து நெறியெனவுங் கொள்ளுதல் பொருந்தும். நெறிகள் பலவற்றுள்ளும் தெய்வச் சிவ நெறியே தலையாயது. இஃதே நன்னெறி என நல்லோரால் நவிலப்படுவது. இதனையே சமயம் என்னும் சொல்லால் வழங்குகின்றனர். தென்னுட்டுத் தொன்மைத் தமிழர் நன்னெறி, உலகப் பொது மறையாம் திருக்குறளே போன்று உலகப் பொது நெறியாம் ஒண்மைசேர் ஒன்றும் உண்மையுடையது. இவ்வுண்மை,

''தென்னு டுடைய சிவனே போற்றி;
என்னுட் டவர்க்கும் இறைவா போற்றி''
என்னும் திருவாசகப்

போற்றித் திருவகவல் அடிகளால் நிலையுறும்.

இறைவனுக்கு நீங்கு நிலையும், நீங்கா நிலையும் என்று இருவகை நிலைகள் உள. நீங்கு நிலையினைப் பொது என்றும், நீங்கா நிலையினைச் சிறப்பு என்றும் கூறுப. அவற்றை முறையே 'எழில் காட்டு நிலை' என்றும் 'இன்பூட்டு நிலை' என்றும் இயம் பலாம். இக்கோட்பாடே மறைமலையடி களாரின் சமயமாகும். தெய்வ வழிபாடும் தெய்வத்திருவருளால் பாடப் பெற்றுத் திகழும் திருமுறைகளும் உணர்வு பெருகு உடையான் தாள் தலைக்கொண்டு ஓவா

இன்பம் நுகர்ந்து உயிர் சிறப்புறுதற்குத் துணையாவன. இவ்வுண்மையினை அடிகள் தம் வளமனைக்கண் அழகுற அமைத்துள்ள திருக்கோவிலும், தெய்வத் திருவுருவங்களும், அடிகள் திருமறைவாயிலாகச் செய்து போந்த சிறப்பு வழிபாடுகளும் உணர்த்துவன. திருவுருவங்கள் அம்மை அம்பலவாணர், நன்னெறிமுதல்வர் நால்வர்க்குரியன. அவ்வழி என்றும் நின்று நிலவப் பெரும் பொருள் வைப்பும் நிறுவியுள்ளனர். அவ்வழிபாடு இன்றும் நிகழ்ந்து வருகின்றது; இனி என்றும் நிகழும். இஃதே அடிகள் ஆற்றிய சமயப் பணிகளில் தலையாயது. மேலும், 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் நடுநிலை வழா விரிந்த ஆய்வுநூல் மிகச் சிறந்த இரண்டாவது பணியாகும்.



அடிகளார் தொழுத அம்மையப்பர்

தந்நுகர்வாய் ஆக்கியுள்ள 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை' என்னும் செந்தமிழ்ச் சீரிய நூல் மூன்றுவது பணியாகும். இம்மூன்றும்முறையே அன்பு, அறிவு, ஆள்வினையின் பெற்றியவாம். [அன்பு-இச்சை; அறிவு-ஞானம்; ஆள்வினை – கிரியை.] அடிகளுக்கு அகவை இருபத்தொன்றில் ஒரு கொடிய நோய் ஏற்பட்டது. திருமுருகன் வழிபாட்டினால் அவனருள் அதனை நீக்கியது. அதுவாயிலாக அருளால் அடிகள் இந்நூலைப் பாடி அவன் அடிமலர்க்கு அணிவித்தனர்.

அப்பர் பெருமானாரது அரிய திருவரலாற்றோடு அடிகள் வரலாறும் பெரிதொத்துக் காணப்படுவது நினைவுகூரற்பாலது.

எல்லாச் செயலும் இறைவன் உடனாய் நின்றியக்கினாலன்றி இயங்கா என்பதே அக்கோட்பாடாம்.

'வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ்கூறும் நல்லுலக'மெங்கணும் ஆண்டுகள் பலவும், அளவில் முறை சென்று சென்று அருந்தமிழ்ப்பணியும், பெருஞ் சைவப் பணியும் ஆற்றியுள்ளனர். தனித் தமிழ் இயக்கத் தந்தையாய் நின்று தமிழின் தூய்மையினையும் இனிமையினையும் தனித்தியங்கும் பேராற்றலையும், தஞ் சொல்லாலும் எழுத்தாலும் தலைமையுற நாட்டினர். இதுபோல் இலங்கை, யாழ்ப்பாணம் முதலிய கடல் கடந்த நாட்டிலும் பல முறை சென்று சமயப் பணி புரிந்துள்ளார். இவர்தம் சமயப்பணி தொன்மைத் தமிழர் தெய்வப் பணியாகும். நால்வர் நன்னெறிப் பணியும் இஃதேயாம். அடிகளார் வடமொழி மயக்கால் தமிழ் மொழிக்கு மட்டுமன்றிச் சிவனெறிக்குநேர்ந்துள்ள களங்கமாம் பெருங்களைகளை ஒருவராய் நின்று துணிந்தகற்றித் தூய்மைப் படுத்தித் தொன்மைபோல் தோன்றத் தொண்டாற்றினர். தமிழகத்தும், இலங்கை, யாழ்ப்பாணத்தும் சிறியேன் சிற்சில உயரிய கூட்டங்களில் உடனிருந்து பணிபுரியும் சிவபுண்ணியப்பேறு பெற்றுள்ளேன்.

அடிகளார் பல மெய்யடியார்கட்கு மெய்யறிவுக் குரவராய்த் திகழ்ந்துள்ளார். அவருள் பெண்பாலாரும் பலராவர். அடிகளாரின் தூயவுள்ளம் புலவர் பெரு

மறைமலையடிகளார் சிலையமைப்புக் குழு



தலைவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்



பொதுச்செயலாளர் கோவை. இளஞ்சேரன்
[நாகைத் தமிழ்ச் சங்க அமைச்சர்]

சிலையமைப்புக் குழு...

பொருளாளர்:
திரு நா. வீ. காயாரோசணஞ் செட்டியார்
பெருவணிகர்

செயலினர் :

திரு வே. கோவிந்தராசன் அவர்கள்
அறுவை வணிகம்



திரு இரா. கோவிந்தசாமி அவர்கள்

மக்களனைவரும் தம்மைப் போல் மதிக்கப்படல் வேண்டுமென்பதும் வாழவேண்டுமென்பதும், மிடிபட்ட வாழ்க்கையினின்று விடுபட வேண்டுமென்பதும், தன்மான வுணர்ச்சியும் இன, சமயக் காழ்ப்பின்மையும் ஒற்றுமையுணர்வை யூட்டி வளர்க்கும் தெய்வ வழிபாடும், செந்தமிழ்ப் பற்றும் சிறக்க வேண்டுமென்பதும், வழிபாடு, வாழ்க்கைக் கரணங்கள் தூய தமிழிலேயே இருக்க வேண்டுமென்பதும் பிறவுமாம். அத்தகைய கரணங்கள் பலவற்றுக்குத் தாமே தலைமைபூண்டு தனிச் சிறப்புடன் பலவிடத்தும் பலகாலும் நிகழ்த்தியுள்ளனர். அடிகளார் மும்மொழி வல்லராஞ் செம்மலாய்த் திகழ்ந்தமையின் வடநாடெங்கணுஞ் சென்று வளமிகு சைவப் பணியினை ஆங்குளார் உளங்கொண்டு உவக்கச் சொற்பொழிவுகள் வாயிலாகப் புரிந்தனர். வடநாட்டு மெய்ந்நூற்றுறையினர் தென்றமிழ்நாட்டுத் தொன்மைத் தமிழர் திருவருளால் கண்டுணர்ந்து உலகினுக்குணர்த்தியிருக்கும் மெய்ந்நூற் கோட்பாடுகள் எஞ்ஞான்றும் யார்க்கும் வடுவிலாநடுநிலையறிவுக்கு வாய்ப்புடைத் தாய வாய்மையுடையனவாக இருப்பது கண்டு நனிமிகப் பாராட்டி வியந்தனர் என்ப.

தனித்தமிழர் கோட்பாடு முப்பொருளுண்மை, முப்புணர்ப்புண்மை என்பனவாம். முப்பொருளென்பன இறை, உயிர், சிறை என்பன. முப்புணர்ப்பு ஒன்ருய், வேருய், உடனுய் - இறை உயிரோடும் உலகத்தோடும் நிற்கும் முறை. மேலும், இறைவனின் அன்பு, அறிவு, ஆள்வினை மூன்றும் ஆருயிர்களின் அன்பு, அறிவு, ஆள்வினைகளோடு பிரிப்பின்றிக் கலந்து அவற்றைத் தொழிற்படுத்துவன என்பதும் ஒன்று. இவ்வுண்மைகளைத் திருமுறை, மெய்கண்டான் தமிழ் ஆகியவற்றில் தெளிவுறக் காணலாம். வடமொழி மறையுட் காண்டல் ஒல்லாது.

அடிகளார் ஆக்கி வெளிவந்துலவும் சீரிய நூல்கள் முப்பதுக்கும் மேலாகும். அவற்றிற்கெல்லாம் உயிராய் மணியின் கட் சரடுபோன்று ஊடுருவி நிற்பது அவர் தம் சமயப் பணியேயாம். அடிகளாரின் கருத்தின்படி கடவுட்டொடர்பால் ஆருயிர்கள் அனைத்தையும் சமமாகக் கொண்டு அன்பு பூண்டொழுகும் நெறி சமயம் என்பதாகும். அடிகளார் ஆங்கிலத்திலும் நூல்கள் யாத்துள்ளனர். அவற்ருல் வெளியுலகத்தாரும் தமிழர்தம் தனிச் சமயத்தையும் மொழியையும் ஆய்ந்துணர்ந்து அன்பறிவு பெருகி ஆள்வினையுடையராய் இன்புற்று வாழ்வர் என்பதுறுதி.

ஏட்டில் இடந்தரு நிலைமைக்கு ஏற்ப ஒன்று சொல்லி நிறைவு செய்வாம். இன்பம், பொருள், அறம், இறைபணி என்னும் நான்கும் தமிழ் நான்மறையாகும். அவை திருவாசக அகவல் நான்குமாகும். இவ்வுண்மை தோன்றவே அவற்றிற்கு அடிகளார் மிகப்பெரிய உரை ஒன்ருக்கிப் பெரும்பணிபுரிந்தனர்.

> "தமிழ் சிவம் இனிமையெனும் தனிப்பொருளாம்"
> — கழாரம்பர் ('பேரிசை' நூற்பா.)
>
> "தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டும்
> உணர்த்தும் அவனை உணரலு மாமே"
> — திருமூலர் (திருமந்திரம்-66)

அடிகளாரது
துறவுத் தோற்றம்

சொல்லின் செல்வர் மறைமலை அடிகள்

திரு. நாரண. துரைக்கண்ணன் அவர்கள்
சென்னை

திருவள்ளுவராண்டு 1995க்கு நேரான கி. பி. 1964 ஆம் ஆண்டில் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை மாநகரில் பச்சையப்பன் கல்லூரிப் பெரு மண்டபத்தில் இலக்கியச் சொற்பொழிவொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. மண்டபம் முழுதும் நிறைந்து, வெளித் தாழ்வாரத்திலெல்லாம் தாங்க முடியாத மக்கட் கூட்டம் நிரம்பியிருந்தது. அம்மண்டபம் சென்னை மாநகரிலுள்ள பொது மண்டபங்களிலேயே மிகப் பெரியது. ஐயாயிரம் மக்கள் இருந்து கேட்கக்கூடிய இடம் படைத்தது. (கலைமகள் களிநடம் புரிந்துகொண்டிருந்த அக்கல்லூரி மண்டபம், இன்று திருமகள் கூத்திடும் வங்கி முதலிய வாணிக நிலையமாகிவிட்டதால் இப்போது இளந்தலைமுறையினர் இதுகுறித்து அறியார்.)

இதற்குமுன் தமிழ்க் கூட்டத்துக்கு-அதனிலும் இலக்கியக் கூட்டத்துக்கு இதுபோன்ற பெருங் கூட்டங்கூடி நான் பார்த்ததில்லை. மேலும், அக்காலத்தில் தமிழ்க் கூட்டம் என்றால் மக்கள் மிகுதியாகக் கூடுவது அரிது. அரசியல் கூட்டங்களுக்குத்தான் ஓரளவு கூட்டம் சேரும். அதிலும் அண்ணல் காந்தியடிகள் விடுதலைப் போராட்ட இயக்கத்தை நடத்தத் தொடங்கி ஆங்கிலம் பேசுவதைத் தவிர்த்துத் தாய்மொழிகளிலேயே கூட்டங்களில் பேசுவது என்ற நிலை ஏற்பட்ட பின்னரே பொதுக் கூட்டங்களில் மக்கள் பெருவாரியாகக் கேட்கத் தொடங்கினர். இந்நிலையிலும், தமிழ் இலக்கியக் கூட்டங்களென்றால் ஐந்நூற்றுவருக்குமேல் கூடமாட்டார்கள். தமிழ் இலக்கியம் பயிலும் மாணவனை பின்னர் எங்குத் தமிழ்க்கூட்டம்

நடந்தாலும், எவ்விடத்தில் தமிழ்ப் பேரறிஞர்கள் பேசினலும், எத்துணை நெடுந்தொலைவாயிருந்தாலும் அவ்வவ் விடங்களுக்கெல்லாம் சென்று கேட்டு வரும் பழக்கத்தை மேற்கொண்டுள்ள நான் கண்டறிந்த உண்மையிது.

இந்நிலையில் நான் மேலே குறிப்பிட்ட கூட்டத்துக்கு ஐயாயிரத்துக்குமேல் மக்கள் கூடியிருந்தனரென்றால் அதற்குத் தக்க அடிப்படையிருந்தது. அன்றையக் கூட்டத்தில் சொற்பொழிவாற்ற வந்திருந் தவர் தமிழ்ப்பெருங்கடல் – சொல்லின் செல்வர் மறைமலை அடிகளார் ஆவார். ஒரு மொழியும் ஒழுங்காகத் தெரியாத மக்கள் நிறைந்த அக்காலத்தில்-வயிற்றுப் பிழைப்பிற்காக வெள்ளைப் பரங்கியர் மொழியை அரை குறையாகக் கற்ற மக் கள் பெருகியிருந்த அக்காலத்தில் தமிழ், ஆங்கிலம், ஆரியம் ஆகிய மும்மொழி களிலும் பெரும் புலமை வாய்ந்து நந் தமிழ் இலக்கியக்களையும், சமயக் கோட் பாட்டுக் கலைநூல்களையும், ஆரிய மொழி யிலமைந்த மறை முதலான பல்வகை நூல்களையும், ஆங்கில நல்லிலக்கியங்களை யும், அறிவியல் நூல்களையும் ஆழ்ந்து ஆராய்ந்து புதுமைக் கண்ணேட்டத் துடன் இனிமையாகப் பேசியும் எழுதியும் மக்களுக்கு விளக்கிவரும் தனிப் பேராற் றல் பெற்றிருந்ததால் அடிகளார்க்கு அக் கால அறிஞர்களிடையே தனிச் சிறப்பும் மதிப்பும் இருந்தன.

ஆதலால்தான், அவர் சொற் பொழிவைக் கேட்க மக்கள் பெருந் திரளாக வந்து ஆர்வத்துடன் கூடியிருந் தனர் என அறியலானேன். அதனி னும் வந்திருந்த கூட்டமும் தெளி வுடையதாகக் காணப்பட்டது. தமிழ் இலக்கியத் தொடர்புடையவர்களே பெரும்பாலோராயிருந்தனர். தமிழ்க் கூட் டம் என்றால் கவனங்கொள்ளாத ஆங் கிலம் படித்த தமிழர்களும், அரசு அலு வலர்களும் ஏராளமாக வந்திருந்தனர்.

அன்று அடிகளார் பேசிய பேச்சு என்னை மிகவுங் கவர்ந்தது. அதற்கு முன்பே நான் தமிழ்ப் பேரறிஞர்கள் பல ருடைய பேச்சுக்களைச் செவிமடுத்திருக் கிறேன். ஆனலும், அடிகளாரின் பேச்சு பலவகையிலும் தனித் தன்மை வாய்ந்த தாயிருந்தது. அவர் பேசிய பேச்சு மட்டு மன்று இனிய குரலும், எடுப்பான தோற்றமும் என்னை முற்றுங் கவர்ந்து விட்டன. ஏறக்குறைய ஆறு அடி உயர மும், அகன்ற நெற்றியும், ஆழ்ந்த கண் களும், கூர்மையான மூக்கும், எழில் முகமும், முக்காடிட்ட தவக்கோலமும், பூங்காவி உடையும் யாவர் உள்ளத்தை யும் கொள்ளைகொள்ளக் கூடியனவா யிருந்தன.

பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் கூடிய தமிழ்ப் பேரவையில் மறைமலை அடிகள் ஆற்றிய அருமையான சொற் பொழிவைக் கேட்டதும் எனக்கு அவர் பால் முன்னைவிடப் பெருமதிப்பு உண்டா யிற்று. ஏனென்றால், நான் முன்னமே குறிப்பிட்டுள்ளபடி அடிகளாரின் பேச்சில் ஆழ்ந்த கருத்துக்கள், புதுமையான பொருள்கள், அறிவியற் கொள்கைகள் விரவிக் காணப்பட்டன. பழைய பாடல் களுக்குப் புதுமையான குறிப்புக்களும் விளக்கங்களும் அவருடைய பேச்சி லிருந்து வெளிப்பட்டன. அவர்பால் காணப்பட்ட இத் தனிப் பாங்கு–புதுமுறை அவருடைய அறிவுரைகளை எல்லாம் விடாமல் கேட்க வேண்டும், அவர் எழுதி யுள்ள அறிவு நூல்களையெல்லாம் உடனே படிக்க வேண்டும் என்ற ஆவலை என் னுள்ளத்தில் எழுப்பிவிட்டது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் மேதகவறிஞர் தோன்றுவர்; கவி ஞர்கள் பிறப்பார்கள் என்று அறிஞர்கள் விதந்து ஓதுகிறார்கள். சொல்லின் செல்வ ரான மறைமலையடிகள் அவ்வகை மேதக வறிஞர் வரிசையில் வந்தவர். பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

தோன்றி வாழ்ந்து இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் புகழுடம்படைந்த அடிகள் அறிஞர் உலகில் மாமேரு மலை போல் விளங்கியிருந்தார். "என்றும் உள தென்றமிழ் இயம்பி இசைகொண்ட" குறுமுனிவரான அகத்தியர் வாழ்வாங்கு வாழ்வதற்கு வாய்ப்பாயிருந்த பொதியில் மலையைப்போலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவே நாடோறும் அருந்தொண்டு புரிந்து வந்தவர். இனிய குற்றால அருவியைப் போலத் தீந்தமிழில் சொல் அருவி பொழிந்தவர் மறைமலையடிகள்.

கால ஓட்டத்தின் சுழற்சியில் தோன்றி வாழ்ந்த பலகோடிக் கணக்கான மக்களில் மாமணியாய், மாசிலா மணியாய், மனிதரில் மாமனிதராய்த் திகழ்ந்தவர். கோடி மக்களுக்கு ஒருவராக – ஒப்பற்றவராகக் குறிப்பிடத்தக்க மாபெரும் புலவரான இவர் பிறந்தது நாகப்பட்டினம்; அஃதாவது சோழவளநாடு. பெரும்பாலும் வாழ்க்கை நடத்தியது சென்னப்பட்டினப்பகுதி; அஃதாவது சான்றோர் மிகுந்துள்ள தொண்டை நன்னுடு. ஆனுல், இவர் ஆற்றிய அருந்தொண்டால் பயன் அடைந்தது தமிழகம் அனைத்துமாகும்; தமிழ் வழங்கும் எல்லா இடங்களுமாகும் என்றுல் அது மிகையன்று. ஆகவே, சொல்லின் செல்வர் மறைமலையடிகளின் திருப்பெயர் தமிழ் மொழி நிலவுமளவும் உலகில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

நாநலம் என்னும் நலனுடைமை; அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று.

கற்றுருள் கற்றூர் எனப்படுவர், கற்றூர்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

— திருவள்ளுவர் (முப்பால் - 641 ; 722.)

அடிகளாரது நூல்கள்

புலவர் இரா. செல்வக்கணபதி அவர்கள்,
மணலி, தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர்,
சென்னை.

செந்தமிழ் இளஞாயிறு.

செந்தமிழ் இளஞாயிறு ஒளி வழங்கும் பைந்தமிழ் வானத்தே மணிப் பவள நடையெனும் புகைப்படலம் மண்டி நின்ற ஞான்று மாண்புடை மணி விளக்காய் மங்காத பேரொளியாய் எழில் வாய்ந்த தமிழ் நடையால் இருள் கடிந்த பேராசான் மறைமலை அடிகளாவார். அவர் துள்ளுந் தமிழ் நடையில், நெஞ்சை அள்ளும் தனித்தமிழில், வெல்லும் முடிபுகளுடன் பகைளுரை வீழ்க்கும் ஆய்வுகளைப் படைத்த நுண்ணிய அறிவினர். எண்ணரிய துறையெல்லாம் அடிகள் இயற்றிய நூல்கள் கண்டு வியத்தற்குரியன. ஓர்ஆசிரியருக்கு இத்துணைத் துறைகளிலே எப்படித் திண்மையென்று வியக்கிறோம். மறைமலை எண்ணாத துறையில்லை; எடுத்துரையாக் கருத்தில்லை. அவர் திறனை விரித்தாலோ நீளும்; தொகுத்தாலோ எஞ்சும்.

அடிகளாரின் இலக்கிய ஆய்வுகளை, உரைநடை உலகில் நிகழ்த்திய தமிழ்த் தொண்டை, சமய உலகின் சான்றுகளை, புதின உலகில் கண்ட புதுமைகளை, நாடகத்துறையில்விளைத்த நற்பணியை, சிறுகதை இலக்கியத்திற் காற்றிய செம்மாப்பை, வரலாற்றுப் பண்பாட்டுத் துறைகளில் செய்த வளப்பங்களை மற்றும் உடலியல், உளவியல் காழனவியல், வானவியல் முதலிய, இவற்றிலெல்லாம் எண்ணிய எண்ணப் பாடுகளை நாம் எண்ணும் போது எழுச்சி கொள்ளுகிறோம். பயிலும்போது பண்பிற் சிறக்கிறோம். இத்துணைக்கும் சான்று தருவன அவர் கண்ட எழுச்சி மிக்க தண்டமிழ் நூல்கள். அடிகளின் நூல்கள் வழியே நின்று சில கருத்துக்களை நினைப்போம்.

வேரூன்றிய இயற்கை

யாம் எழுதும் நூல் ஒவ்வொன்றும் பன்னூளும் பலமுறையும் ஆய்ந்தாய்ந்து எழுதப்படுவது. யாம் எழுதுவன எமதுளத்திற்கு இனிமை தரும் வரையில், எமதறிவிற்குப் பொருத்தமாகக் காணப்படும் வரையில் அவற்றைப் பன்முறையும் நினைந்து நினைந்து விரையாமல் மெல்லென எழுதுதலே எமக்கு வேரூன்றிய இயற்கையாய்விட்டது.

—மறைமலையடிகள்

(தொலைவிலுணர்தல் - பக்கம்-131.)

திட்பமும் நுட்பமும் கொண்ட அடிகளாரின் உரை நடையிற் பண்டை உரையாசிரியர்களின் போக்கினைக் காண்கின்றோம். சீரழிந்து, செயலிழந்து கிடந்த தமிழ் உரைநடையை அடிகள் உயிரூட்டிப் புதுப்பித்தார். செறிவாலும் பொருளாலும் அவர் நடை சற்று வன்மையதே என்றாலும் ஓரளவு தமிழ் மரபறிந்தார்க்கு விளங்காது என்பதற்கில்லை. 'சிறுவர்க்கான செந்தமி'ழும் 'இளைஞர்க்கான இன்றமி'ழும் கருத்தால் திண்ணிதாய், நடையால் எளிமையாய் அமைக்கப்பட்டுள்ளன. வடசொற்கலப்பற்றுத் தூய தமிழ் நடை பெற்றிலங்கும் சிறு சிறு கட்டுரைகளாக மன்பதையின் எல்லாப் பிரிவினரும் உணரும் வண்ணம் 'சிந்தனைக் கட்டுரை'களும் 'அறிவுரைக் 'கொத்தும்' நின்றிலங்கக் காண்கின்றோம். இவை, பல முனை நின்று எழுதிய கருத்தீட்டமாகவே திகழ்கின்றன. அடிசன் என்ற ஆங்கிலப் பேரறிஞன் கட்டுரைகளைத் தமிழ் நடைப்படுத்த அடிகளார் தமிழ் மரபினைப் புறக்கணித்துவிடவில்லை. அடிசன் விவிலிய நூல் மேற்கோள் காட்டுமிடமெல்லாம் திருவாசகத்தை எடுத்துக் காட்டி நெஞ்சுருக வைக்கிறார். வினாக்களை அடுக்கிக்கொண்டே சென்று பெறப்படும் விடைகள் வழியே கருத்தை நிலைநாட்டும் கிரேக்கப் பேரறிஞன் சாக்கிரட்டீசின் தன்மையை அடிகளாரிடம் கண்டு பூரிக்கிறோம்.

இலக்கியப் படைப்பு

அடிகளார் தமது தமிழிலக்கிய அறிவால் சங்க இலக்கியப் பாக்களோடொத்த இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பதற்குத் 'திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவை'யும் 'சோமசுந்தரக் காஞ்சியும்' நிலைபெற்ற சான்றுகளாகும். இளமையிற் பற்றிய கடும் நோய்தீர்த்த திருவொற்றியூர் முருகப் பெருமான் மீது நெஞ்சுருகப் பாடிய முப்பது பாக்களின் தொகுப்பே 'மும்மணிக் கோவை'. வெண்பா, அகவல், கட்டளைக் கலித்துறை எனும் மூவகைப் பாமணிகளைக் கோத்த இலக்கியப் படைப்பாகிய இந்நூலின்கண் பாடற்றுறைகள் யாவும் அகப்பொருள் நெறிப்பட யாக்கப் பெற்றிருத்தல் நயமாகத் தோன்றுகிறது. சில அகவற்பாக்கள் இருநூற்றைம்பது அடிகளில் நீண்டு செல்வதைக் காணும்போது ஒவ்வொரு பாடலுமே ஒவ்வொரு தனித்தனி இலக்கியமாகத் தோன்றி நிற்கிறது. இவ்வரிய நூற்கு அடிகளாரின் மாணவரில் ஒருவரான திரு இளவழகனார் அரிய உரை ஒன்றை இயற்ற, அடிகள் தம் கைவண்ணத்தால் செப்பம் செய்யப்பெற்ற அவ்வுரை பன்னலமும் பூத்துப் பண்டை உரையாசிரியர்களது உரையோடொப்பச் சிறந்தோங்கி மிளிரக் காண்கிறோம். தற்காலத்தே இலக்கியங்கட்கு உரை வரையப் புகுவார் அடிகள் நெறியைப் பின்பற்றினால் பண்டை உரையாசிரியரோடொப்ப நன்கு மதிக்கப்படுவரென்பது திண்ணம். தாமியற்றிய நூல்கட்குத் தம் காலத்தேயே உரை வரையப்பெற்றமை அடிகளார்க்குப் பெருமகிழ்வுறுத்தியது என்பது அவரது முன்னுரையால் நன்கு அறியக்கிடக்கிறது.

புறத்துறையின் கண் காஞ்சி என்பதோர் திணை வகுத்து ஆசிரியர் தொல்காப்பியர் அதனை நிலையாமைப் பொருள்பட "நில்லாவுலகம் புல்லிய நெறித்து" எனச் சுட்டுகிறார். தமக்குச் சைவக் கோட்பாட்டுக் கலையறிவை வழங்கிய தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகரவர்கள் இறையடி எய்தியஞான்று ஆற்றொணாத் துயருற்ற அடிகள் கையறுநிலை, தாபத நிலை, மன்னைக்காஞ்சி என்ற மூன்று துறைவழி இயற்றிய இரங்கற் பாடல்கள் தாம் 'சோமசுந்தரக் காஞ்சி'. விதிதழுவி இயற்றப்பெற்ற உள்ளுருக்கும் இந்நூலை அக்காலத்தே குறை கூறிய சிலரை வாயடைக்க வைக்க

அடிகளார் எழுதிய மறுப்புரையே **'சோமசுந்தரக்காஞ்சியாக்க'** மாக மலர்ந்தது. அது வெறும் மறுப்புரையாக மட்டும் அமைந்திராமல் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கே ஒரு தலை சிறந்த ஆய்வு நூலாகத் திகழ்கிறது. ஆனந்தக் குற்றம் பற்றிய விளக்கமாக அடிகட்கும், சோழவந்தான் அரசஞ்சண்முகனார்க்கும் இடையே நிகழ்ந்த முடங்கல்கள் இந்நூலின் இறுதியில் இடம்பெற்று நுண்ணறிவுக்கு விருந்தாகின்றன. இவ்வாறாக, ஆசிரியர் மறைமலையாரைத் தலையாய படைப்பாசிரியராகக் கண்டு மகிழ்கிறோம்.

இலக்கிய ஆய்வு.

சங்க இலக்கியங்களிலும், சமய இலக்கியங்களிலும், சமயக் கோட்பாட்டு நூல்களிலும் அடிகளாரின் ஆராய்ச்சி பதிந்து நிற்கிறது. அவரது ஆய்வுகளும் முடிபுகளும் தெளிந்த தமிழில் ஆணித்திறமாக வலியுறுத்தப்படுகின்றன. 'பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை' 'முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை' **'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்'** **'சிவஞான போத ஆராய்ச்சி', 'திருவாசக விரிவுரை'** ஆகியன அடிகளாரின் இலக்கியப் பார்வையைப் படம் பிடித்துக் காட்டவல்லன. பத்துப்பாட்டின் இரு பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் எழுதிய மாட்டேற்று உரை இலக்கியத்தின் பொருளமைதிக்குப் புறம்பானதென்று தெளிந்த தெளிவே அடிகளாரை உரை வரையச் செய்தது. அவை இரண்டும் வெறும் பொழிப்புரைகளாக மட்டும் அமையாமல் சங்க நெறி நின்று நோக்கப்பெற்ற பண்டை உரையாசிரியரின் உரைகளையும் விஞ்சுவனவாக அமைந்திருத்தல் போற்றற்குரியன. நூலாராய்ச்சியின் தொடக்கத்தே பாட்டினியல்பு என்ற பொருள் பொதி கட்டுரை சேர்க்சப் பெற்றிருத்தல் பெரிதும் வேண்டற்பாலதே. வடமொழி, தமிழ்ச் சொற்களை எண்ணிட்டுக் காட்டிப் பல்வேறு உட்பொருள்களை ஒருங்கே ஒப்பிட்டுப் பேசி நடத்திச் செல்லும் அடிகளாரின் இவ்விரு உரைகளையும் படித்து முடிக்கும்போது பத்துப்பாட்டின் ஏனையப் பாடல்கட்கும் இவ்வாறு உரை வகுத்தாரில்லையே என்ற ஏக்கம் பிறக்கிறது.

மாணிக்கவாசகரைத் தேவார மூவருக்கும் முற்பட்டவராகக் காட்ட முயலும் முயற்சியை **'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்'** விளக்கி நிற்கிறது. இரண்டொரு சொல்லைப் பற்றி நின்று ஓராசிரியரின் காலத்தை நிலைநாட்டக் கூடுமென்ற அடிகளாரின் முயற்சி தமிழகத்திற்குப் புதிதாயிருந்தது. பிற்கால ஆய்வுகள் அவர் கருத்தை ஏற்கவில்லையாயினும் காலவாராய்ச்சி செய்தற்கான பல்வேறு கூறுகளை வழங்கிய பெருமையை மறுத்தற்கில்லை. அடிகளாருக்கு முன்னரே பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் திருஞானசம்பந்தர் காலவாராய்ச்சியை நிகழ்த்தி முடிபெடுத்தாராயினும் அடிகளாரின் ஆய்வு புதுமை பெற்றே துலங்கியது.

'சிவஞான போத ஆராய்ச்சி' அவரது சமயக்கலை நுண்ணறிவையும், திருவாசக முதல் நான்ககவற்பாக்களுக்கெழுதிய பேருரை அவரது சைவசமய ஈடுபாட்டையும் விளக்கவல்லனவாக அமைந்தன. சமய நூல்களுக்கு உரை காணல் கூடாது என்றிருந்த அக்கால மனப்பான்மை திருவாசகத்தின் எஞ்சிய பகுதிகட்கு அவர் உரை வகுத்திடத் தடையாயிருக்கலாம் என அறிய முடிகிறது.

நாடகம்.

நாடக உலகில் அடிகளாரின் தொண்டு நின்று நிலவத்தக்க வீறுடையது. ''ஒரு புல் நுனி மேல் நின்ற பனித்துளி தன்னைச் சூழ்ந்துள்ள இயற்

கைப் பொருள்களைத் தன்னகத்தே அடக்கிக் காட்டுவதைப் போன்றது நாடகம்'' என்ற அவருடைய விளக்கத்திலே நாடகத்தின் திட்பம் புலப்படும். 'முழுதும் செய்யுளாலாயது; உரைநடையும் செய்யுளும் பிணைந்து வருவது; முற்றும் உரையாடலில் வருவது' என நாடகத்தை மூவகைப்படுப்பர் அடிகள். 'சாகுந்தல நாடக மொழிபெயர்ப்பு' 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' 'அமராவதி அம்பிகாபதி' ஆகியன அவர்தம் நாடகப் படைப்புக்கள். தன் வடமொழிப் புலமை உலகில் நிலவ, காளிதாசனின் சாகுந்தலத்தைக் கம்பனைப்போல் தமிழ்ப் பண்பாட்டு நெறி நின்று ஏழு பகுப்புக்களில் பகுத்து மொழிபெயர்த்துச் சங்கராச்சாரியாரின் பாராட்டையே பெற்றவர்கள் அடிகள். சேக்சுபியர் நாடகத்தைப்போல் பாட்டும் உரையும் விரவிய சாகுந்தலத்தில் தமிழின் கனிச்சுவையும், கோவை, குறள் காட்டும் மரபுகளும் அறிமுகப்படுத்தப்படுதல் பேரின்பம் தரவல்லன. அவர் மொழிபெயர்ப்பில் 'வனதோசினி' 'வான்மதியம்' ஆகிறது. வண்ணனை பல பொதுளிய இந்நாடகம் நடிக்க எழுதப் பட்டதன்று என உணரல் தகும்.

சேக்சுபியரை ஆராய்ந்த பிராட்லியைப் போல் காளிதாசன் கவிதை அடிகளாரின் நுண்ணறிவுத் துலாக்கோலால் அளவு இடப்படுவதைச் 'சாகுந்தல ஆராய்ச்சி' காட்டுகிறது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் அருளுள்ளங்கொண்ட சகுந்தலையின் அருளுள்ளம் பாரி, பேகன் போன்ற வள்ளல்களின் அருளோடு ஒப்பிடப்படுகிறது. அவரது பன்மொழிப் பயிற்சியும் ஒப்புமை ஆராய்ச்சியும் 'ஒதெல்லோ'வில் வரும் இயாகோவைப்போல் துருவாசர் இங்கே படைக்கப்படவில்லை என்ற விளக்கத்தால் அறியக்கிடக்கின்றன. பல்வேறு மரபு, பண்பாட்டுக் கூறுகளைப் பேசுகின்ற அடிகளார் உதட்டுக்குச் சாயமிடும் பழக்கம் வடநாட்டிலிருந்து வந்ததென விளக்கிப் போகிறார். நாடக உறுநர் இயல்புகளும், காளிதாசரின் வரலாறும், மற்றும் காலமும், காப்பிய நுண்ணமைப்புக்களும் ஆசிரியரால் ஆய்ந்து சுட்டப்படுவதால் பிற்காலத் திறனாய்வு செய்யப் புகுந்தார்க்கு அவரது 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' ஒரு கலங்கரை விளக்கமாகும் எனலாம்.

'விளையாட்டில் விளைவது நாடகம்' என்ற அவரது விளக்கத்திற்கு 'அமராவதி அம்பிகாபதி' சான்றுகிறது. நாடகத்தின் கரு தமிழ் மண் ஆதலாலும், செவிவழிவந்த செய்திகளை நாடகமாக்கும் முயற்சியில் கற்பனை விரிய வழியுண்டென்பதாலும் இந்நாடகம் சிறந்து மிளிரக் காண்கிறோம். தமிழிலக்கிய அகப் பொருள் நினைவோடு நடைப்படுத்தப்பட்ட இந்நாடகம் முழுக்க முழுக்க அடிகளாரின் தனித் தன்மையைச் சுட்டி நாடகவாசிரியர் வரிசையிலே அவர்க்கொரு சிறப்பிடத்தை வழங்கியது.

அடிகளார் சைவநெறி மேற்கொண்டொழுகித் தில்லைப்பெருமானின் திருவடி

நிறைபுகழ் இல்லறம் நீங்காத் துறவில்
மறைமலை வீற்றருள் மாண்பு.



சமய குரவரர் நால்வர் பெயரில் அமைந்த நான் மக்கள் அமைவு

திரு மறை. திருஞானசம்பந்தம் அவர்கள்
புலவர் மறை. திருநாவுக்கரசு ,,

திரு மறை. மாணிக்கவாசகம் அவர்கள்
டாக்டர் மறை. சுந்தரமூர்த்தி ,,



தி. ஆ. 1954-புரட்டாசி 3-இல்
[20—9—1943]
நாகை, வெளிப்பாளையம்
சைவ சித்தாந்த சபையின்
55-ஆவது ஆண்டு விழாவில்
மறைமலையடிகளார்
ஆண்டுவிழாத் தலைவராய்
விளங்கியமை.

தி. ஆ. 1988 ஐப்பசி 18-இல்
[3—11—1957]
நாகையில் நிகழ்ந்த
மறைமலையடிகளார்
நினைவு விழா

டாக்டர் மா. இராசமாணிக்கனார், தவத்திரு குன்றக்குடி அடிகளார்
திரு. அ. மு. பொ. திருவம்பலஞ் செட்டியார்.

களில் நீங்காத பற்று வைத்திருந்தார். கடவுள், உயிர், உலகம் என்ற இம்முப் பொருள் பற்றிய தெளிவான விளக்கம் காட்டும் சைவக் கோட்பாடும் அது காட் டும் பகுத்தறிவு நிகழ்ச்சியும் பிறிதொரு சமயத்திலும் பேசப்படாமையின் எல்லா வற்றையும் அடக்கிநின்ற தலைமை பற்றிச் சைவ சமயமே சமயம் என நாட்டுவர். அவரது 'சைவ சித்தாந்த ஞான போதம்' உலகியலைப் பகுத்தறிவுக் கண் கொண்டு நோக்குவார்க்கு ஏற்ற விடை தர வல்ல அறிவாராய்ச்சியாய்த் திகழ் கிறது. சைவ மாட்சியும், திருவுருவ வழி பாட்டின் இன்றியமையாமையும், அருட் குறி வழிபாட்டின் உண்மையும், கூத்தப் பெருமானின் திருக்கூத்தின் உட் பொருளும் பெரிதும் ஆராயப்படும் இந் நூலில் சைவக் கோட்பாட்டு வடமொழிக் குறியீடுகளுக்குத் தகுதி வாய்ந்த தமி ழாக்கங்களைப் பட்டியலிட்டுக் காட்டி யிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது.

அடிகளாரின், தமிழர் அவர்தம் மதம் பற்றிய நாற்பது ஆண்டுகட்கு மேற்பட்ட எண்ணங்களைத் '**தமிழர் மதம்**' அழகுற விளக்கிப் போதலை அறிகிறோம். வடவரது வடமொழி மறைகளாலே மாசுபடுத்தப் பட்டிருந்த தமிழரின் உளத்தினைத் தூய தாக்க அடிகள் கொண்ட முயற்சியே '**தமிழர் மதம்**' ஆயிற்று. 1941 இல் அனைத்துலகச் சமய மாநாட்டிற்கு அடி கள் உருவாக்கிய தலைமையுரையே பின் னர் இந்நூலாக மலர்ந்தது.

சிவனின் நெறிப்பட்ட சைவத்தில் சாதிப்பிரிவு ஏதுமில்லை. தமிழனின் பெரு நூலாம் தொல்காப்பியமோ, திருக் குறளோ சாதியைப்பற்றிப் பேசவில்லை. பழமை மறையிலும் சாதிப் பிரிவில்லை. திருமுறை, சமயக் கலை நூல் போன்ற வற்றிலும் பேசப்பெறாத சாதியை வலிந்து பற்றி நிற்பார் உண்மைச் சைவராகார் என வலியுறுத்தும் அடிகளாரின் திண்மை "**சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்**' என்ற நூலின்கண் வெளிப்படுகிறது. சம யத்தின் கண்ணும் அறிவாராய்ச்சிக்குப் பொருந்தாத கதைகள் இடம் பெறு தலை அடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் '**கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா**' என்ற நூல் தெற்றெனப் புலப்படுத்துகின் றது. அறுமுகன், பிள்ளையார், திருமால் முதலியோரின் தோற்றம் பற்றிய அடிகளா ரின் ஆய்வு சுவையூட்ட வல்லது. "மின் னொளி போற்றோன்றிச் சடுதியில் மறைய வல்ல இறைவனைப் பிறப்பு இறப்புக் களுக்குட்படுத்துப் பொருந்தாப் பொய் யுரை கிளக்கும் கதைப் புல்லுரைகள் அனைத்தையும் ஒருங்கே விலக்குக" என அடிகளாரே பேசக் கேட்கிறோம்.

தொல்காப்பிய வழி நின்று வளர்ந்த அகனைந்திணைப்பட்ட காதல் வாழ்வின் மறு மலர்ச்சியிலேதான் சைவ சமயம் தங்கி நிற்கிறதென்பதைப் '**பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்**' என்ற நூலால் விளக்கி 'விரிந்துபட்ட கதைக ளிலேயே நாட்டம் செலுத்தினால் சைவம் வீழ்ந்து படுமாகையால் அவற்றிடைப் பட்ட கருத்தே கொண்டு, சைவத்தின் மாட்சியினை உலகறியச் செய்திடுவீர்' எனச் சைவத்தின் நெருக்கடியான நிலை மாற்றப் புதுமை வழி காட்டுகின்றார். இவ் வாறாகச் சைவ சமயக் கோட்பாடுகளை இறைமை வழி வழுவாது திறனாய்வு செய்து துணிவான புதுமை பல பேசிய தனால் இவரை உள்ளத்தே வெறுத்தவர் களுமுண்டு. எதையும் அறிவோடிணைத் துப் பார்த்த அடிகளாரின் தனிப்போக்கே அவர்க்கு மாறுபட்ட கருத்துடையோ ரிடையும் மதிப்பினை அளித்து நின்றது.

வரலாறும் பண்பாடும்.

வரலாற்றுத் துறையிலும் பண்பாட் டுத் துறையிலும் அடிகளாரின் நூல்களுக் குச் சிறப்பிடமுண்டு. '**முற்கால பிற் காலத் தமிழ்ப் புலவோர்**', '**பண்டைத்**

தமிழரும் ஆரியரும்', 'வேளாளர் நாகரிகம்', 'சோமசுந்தர நாயகர் வரலாறு' எனும் பண்பாடு பற்றி நின்ற வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் அடிகளாரின் மன்பதை நோக்கிற்குச் சான்ருவன. பண்டைய உலகியலைக் கூர்ந்து நோக்கும் நுண்ணறிவுத்திறன், மன்னர்களால் மதிக்கப் பெற்றமை, புலவர் மன்னர் கடமைகள், பிற்காலப் புலவர்களின் இலக்கியவளச் சிதைவு, ஆரியக்கலப்பால் ஏற்பட்ட அவர்தம் பொருந்தலாகாக் கற்பனைகள் முதலிய வரலாற்றுச் செய்திகளை 'முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்'ரில் அடிகளார் ஆய்ந்து செல்கிருர். 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்ற ஒப்புமை ஆராய்ச்சி நூலோ ஆரியரும் தமிழரும் மனம் உடல் உள்ளம் ஒழுக்க உணர்வுகள் ஆகியவற்ருல் முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதைச் சான்ருேடு பேசுகிறது. உயிரினங்களின் முதற்ருேற்றமே குமரி நாட்டிலென்பதும், பண்பாட்டுக் கூறுகளைத் தமிழரிடமிருந்தே ஆரியர் கடன்பெற்றனர் என்பதும் பேரறிஞர் இரைசுஇடேவிசு, வங்க அறிஞர் சாட்டர் ஐயா, ஆகியோர் ஆராய்ச்சி முடிபுகளை ஒட்டி மொழியமைப்புத் துணைக்கொண்டு ஆசிரியரால் விளக்கப் பெறுதலைக் கண்டு தமிழர்களாகிய நாம் நெஞ்சம் பூரிக்கிருேம்.

'வேளாளர் நாகரிகம்' தமிழரின் பகுப்பு ஆரிய சாதிப் பிரிவினின்றும் முற்றிலும் வேறுபட்டதென்பதைத் தெளிவுறுத்துகிறது. வேளாளர் ஆரியர் வகுக்கும் 'சூத்திரர்'ஆகார்என்றும், மக்களின் இன்றியமையாத் தேவைகளை நிறைவிக்கும் மருத நில உரிமையாளர்களே அன்னேர் என்றும் விளக்கிச் செல்கிருர் அடிகள். வேளாளரில் வாணிகம் புரிந்தோர் வாணிகராயினர்;கல்வி கற்று வடமொழிப் பயிற்சி பெற்ருேர் வேளாள அந்தணராயினர்; பண்பாலும் செயலாலும் ஆளும் திறன் பெற்ருேர் அரசராயினர் என விளக்கும் அவரது பண்பாட்டாராய்ச்சி சிந்தனைக்குரியது. மருதமே பண்பாடு, நாகரிகம் இவற்றின் பிறப்பிடமெனச் சுட்டப்படுதல் இந்நூலின் தனிச் சிறப்பு.

தமது சமயநூற் பேராசிரியர் சோமசுந்தர நாயகரின் வாழ்வியலின் வளர்ச்சியை இனிய எளிய தமிழில் விளக்க எழுந்த அடிகளாரின் முயற்சியின் வெற்றியே 'சோமசுந்தர நாயகர் வரலாறு' என்ற நூலாகும். நாயகரின் வாழ்வை வகைப்படுத்துவதோடு அமையாமல் அவரது கருத்துக்களும் ஆராய்ச்சி முடிபுகளும் திட்ப நுட்பஞ் செறிந்த புலமையும் நூலின் பெரும்பகுதியில் நின்று வற்ருத பொருளின்பந் தருவதோடு தம் வரலாருே பிறர் வரலாருே எழுதப் புகுவார் மேற்கொள்ளத்தக்க நெறி முறைகளையும் இந்நூல் வழங்கக் காண்கின்ருேம். 'தென்புலத்தார் யார்' என்ற சிறு நூலையும் ஆசிரியர் இலக்கிய மரபு வழி நின்று ஆய்ந்து தெளிகிருர்.

அறிவியல்.

மொழி இலக்கிய வல்லுநராகவே அடிகளாரை அறிந்திருந்த நமக்கு அவருடைய சில நூல்கள் தெளிந்த அறிவியலறிஞராகவும் சுட்டிக் காட்டுகின்றன. உடலியல், உயிரியல், காழனவியல் (தாவரவியல்) ஆகியவற்றில் அடிகளாரின் ஆய்வு விரிந்துபட்டதாய் வியப்பினைத் தருகிறது. உடலியற் கூறுகளைச் செம்மை வழி நடத்த முயன்ற அடிகளாரின் முயற்சியில் கிளைத்தன 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்,' 'மக்கள் நூருண்டு உயிர் வாழ்க்கை' ஆகியன. இயற்கையுணவாக மரக்கறியைக் கொண்ட அடிகள் உடலியலை உளவியலோடு ஒப்பவைத்து ஆய்கிருர். காதலிருவரின் எண்ண வளர்ச்சிக் கேற்பவே குழந்தையர் அமைவரென்பதை முதலிற் கண்டெழுதிய அடிகள் விரும்பிய குழந்தையரைப் பெறுதற்கு வழிகளையும் சுட்டுவார். மக்களினத்தை நூருண்டு வாழ

வைக்க நூற்கண்ட பெருந்தகை, தாம் நூறாண்டு வாழாது மறைந்தமை தமிழரது தவக்குறைவேயாம். தாம் எழுபத்தைந்து அகவை வாழ்வினை கொண்டவர் என்பதை அடிகளார் அடிக்கடி குறித்ததாகக் கூறுவர். அவ்வாறே புகழுடம்பெய்தியமை நினைக்கத்தக்கது.

புத்தாய்வு.

கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் கொண்டு வருங்காலத்தைக் கணக்கிடலாமெனக் கண்ட அடிகளின் ஆய்வு முடிவு **'மரணத்தின்பின் மனிதர் நிலை'**யில் பேசப்படுகிறது. முற்றிலும் இயற்கையிறந்த ஆற்றலைப் பேசும் இவ்வரிய நூல் தமிழருக்கு முற்றிலும் புதிது. உயிர், உடல், ஆவிவடிவம், நுண்ணிய உடம்பின் தன்மை, எழுச்சி முதலியவற்றின் தன்மைகளை ஆசிரியர் விளக்குவது நமக்கு மருட்கை தருகிறது. அடிகளாரின் கோள்களைப்பற்றிய அறிவும், கனவு பற்றிய எண்ணப்பாடும் இன்றைய அறிவியல் ஆய்வில் ஒத்துக்காணக்கிடப்பதை நம்மால் வியக்காதிருக்க முடியவில்லை. 'அறிதுயில்' எனும் நூல் மனித ஈர்ப்பைப் பேசுகிறது. உள்ளத்தூய்மை, வழிபாடு, உருவேற்றல், நல்லாரிணக்கம், நன்னூல்களிற் பயிற்சி போன்றன மனக்கவர்ச்சிக்கு வழிகோலும் என்கிறார். திருமந்திரம், திருக்குறள் இவற்றிடை மறைபொருளாகவுள்ள ஈர்ப்பு முறைகளை உரைநடைப்படுத்தி முதலில் வழங்கியவர் அடிகளே.

மனவெளியின் கூறுபாடு **'தொலைவிலுணர்தல்'** என்ற சிறுநூலில் பேசப்படுகிறது. காதலிருவரிடை வேண்டப்படும் இணைந்த உள்ளத்தின் இன்றியமையாமை இதன்கண் விரிக்கப்படுதலைக் காணலாம். மா, தென்னை, சந்தனம், பல்வேறு செடிகொடிகள், யானை முதலிய விலங்குகளின் தன்மைகள் முதலியனவும் அவரது ஆய்வில் இடம்பெறத் தவறவில்லை.

மொழியாய்வு.

'இந்தி பொது மொழியா?' என்ற அடிகளாரின் சிறுநூல் அவரது மொழிக் கொள்கையை வரையறுத்துக் காட்டுவது. 'பிச்சை எடுத்து உண்டோன் கான்றது போன்றது இந்திபொதுமொழி எனல்' என்பது அவரது கருத்து. உண்மையில் அது ஒரு மொழியேயன்று. இலக்கண, இலக்கிய வளம் உடையதன்று எனக்கண்டு தென்கடல் தேவ முதுகொண்டு திகழும் தமிழின் பேரெழில் முன் நிற்றலும் மாட்டா இந்தி பொது மொழியாகச் சிறிதும் பொருத்தமற்றது என்ற அவரது திண்மை உள்ளம் தமிழகத்தின் வழிகாட்டிகளாகிய பெரியோர்களாலும் போற்றி வரவேற்கப்பட்டது. தமிழின் திணை பால் சிறப்போடு இந்தியும் அதனைச் சார்ந்த வடஇந்திய மொழிகளும் கொண்ட பொருத்தமற்ற திணை, பால் பாகுபாட்டை முன்னிறுத்தி அவைகளைத் தலை தாழச் செய்தார். இந்தி எதிர்ப்பிற்கு அடிப்படையாக மொழி வளத்தை முன்னிறுத்திய பெருமை அடிகளாரையே சாரும்.

புதினம்.

புதினமெனத் தற்காலத்தே பெயரிட்டழைக்கப்பெறும் உரைநடைப்பட்ட நீள் கதைகள் தமிழில் இணைத்துக்கொள்ளப்பட்ட புது வளமாகும். அடிகளாரும் தமிழ் மக்கள் விருப்பத்தை நிறைவு செய்வான் வேண்டிச் சிறந்த இரு புதினங்களைப் படைத்தார்கள். அவரது **'குமுதவல்லி'**யும் **'கோகிலாம்பாள் கடிதங்க'**ளும் சிந்தனைக்கு விருந்தாய நீள்கதைகளாக அமைந்தன.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் ஆங்கில நூற்பயிற்சியுடைய சான்றோர் பலர் புதினங்களை அழகுறப் படைத்தனர். நீள்கதைகட் கெல்லாம் இரட்டைப் பெயர்வைப்பதுஅக்காலத்தே ஓர் எண்ணமாயிருந்தை இன்னும் அறிய முடிகிறது. எத்துணைப் புதுமை நோக்குடைய எழுத்தாளராயினும் மன்பதையின்

பொதுவான எண்ணப் போக்கினைப் புறக்கணித்திடல் முடியாதென்பதை அடிகளார் தம் முதல் புதினத்திற்குக் 'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி' எனப் பெயர் சூட்டி இருப்பதால் உறுதி செய்து கொள்கின்றோம். குமுதவல்லி 'இரயினால்டு' என்ற ஆங்கிலப் பேரறிஞனின் நீள் கதை ஒன்றின் தமிழாக்கம். நீள் உறக்கம் கொண்ட தமிழ் மன்பதையினை விழிப்பூட்டுதற்கே இப்புது முயற்சியைத் தாம் மேற்கொண்டதாகவும் இதை உண்மையாக மதிப்பிட வேண்டியவர் தமிழ் மக்களே எனவும் 1911ஆம் ஆண்டு இந்நூலை வெளியிடுங்கால் அடிகள் குறித்துள்ளார். ஆங்கிலக் கதையினைக் கதையுற்றூர் படைப்பிலும் பின்னணிகளிலும் முற்றிலும் தமிழ்ப்படுத்திக் கொள்கிறூர். மேற்கு மலைத்தொடர் சார்ந்த பகுதியொன்றில் தி. பி. 656 (கி. பி. 625) ஆம் ஆண்டின் சூழலை ஒட்டிக் கதை நடைபோடுகிறது. நன்மை, தீமை என்ற இருகூறுகளை எதிர் நிறுத்தி மறைபொருள் ஒன்றினை வெளிப்படுத்தும் முயற்சியில் அவர்களை ஈடுபடுத்திக் கதையினை உயிரோட்டத்துடன் நடத்துகிறூர். முதல்பகுதியிலேயே சூழ்ச்சி விதைக்கப்பட நன்மை தீமை மோதலில் போராட்டம் களைகட்டி வளர்கிறது. விரைந்த ஓட்டமுடைய இந்நீள் கதையில் சாகுந்தலத்தைப் போலவே ஒரு கணையாழி நடுவிடம் பெறுகிறது. கண்மூடி வழக்கங்கள், இளமை எழுச்சி, கட்குடியின் சூழ்ச்சி, வளர்ச்சி, முடிநிலை, வீழ்ச்சி என்று புதினத்திற்குத் தற்காலத்தே கூறப்படும் இயல்பனைத்தும் இதன்கண்ணே உண்டு. தமிழ்ப் பண்பு பொதுளிய இக்கதையில் சைவ சமயச் சிறப்புக்கள் பேசப்படுகின்றன. அறிமுகப் படுத்தப்பட்ட கதையுற்றேரை முடித்து வைக்காமையும் சில நிகழ்ச்சிகளைப் பேசாமல் கதை முடிக்கப்படுதலும் இக்கதை ஆசிரியரால் முற்றும் எழுதி முடிக்கப்படவில்லையோ என்ற ஐயத்தை உண்டாக்குகின்றன.

ஒவ்வொரு பதிப்பிலும் வடமொழிச் சொற்களைக் களைந்து செந்தமிழ்ச் சொல் நிரப்பும் அடிகளார், இக்கதையில் கதை உற்றூர் பெயர்களைத் தெளிவு கருதி மாற்றுது அமைத்தனர் எனக் காணலாம். வேதாசலமாக இருந்த காலத்தே (1911) நீலலோசன் படைக்கப்பட்டான். மறைமலையாக இருந்து படைத்திருந்தால் 'கருங்கண்ண'னுக மாற்றம் பெற்றிருப்பான் என எண்ணுதலால் தவறில்லை.

ஆங்கில நாடகப் பேராசிரியர் பெர்னுட்சா, தான் எழுதும் நாடகங்களின் அளவைக் காட்டிலும் பெரிதான முன்னுரையை எழுதுவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். அடிகளாரின் இரண்டாவது புதினமாய 'கோகிலம்பாள் கடிதங்கள்' நீண்ட முன்னுரை பெற்றுத் திகழ்கிறது. வரலாறு, இலக்கியம் இவற்றினிடையே உள்ள வேறுபாட்டைப் புகைப்படத்திற்கும் ஓவியத்திற்கும் இடையே வைத்து விளக்கும் பெற்றியும், கற்பனைக்கும் அறிவுக்கும் எட்டாத கதைப்பொருளை அறிவாராய்ச்சியின்றிக் கவிதையாக்கும் நெறிகண்டு உள்ளம் வெதும்பும் பாங்கும் அடிகளாரின் இனிய இயற்கையுணர்வினைப் புலப்படுத்தி நிற்கக் காண்கின்றோம்.

இளமை மணங்கொண்டு வாழ்விழந்த இளம் பார்ப்பன விதவைப் பெண்ணெருத்தி முதலிமார் குடும்பத்துத் தெய்வநாயகன் என்ற தன்காதலனுக்கு எழுதும் பதினேழு முடங்கல்களில் கதை முழுமை பெறுகிறது. இந்நீள் கதையில் பார்ப்பனர் திருந்தவேண்டி அவர்தம் குறைபாடுகளை அடிகளார் மறைக்காது சுட்டுகிறூர். ''கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே, இங்கு வேரிற் பழுத்த பலா'' என்ற பாவேந்தர் பாரதிதாசனுர் உள்ளக்குமுறலைக் கோகிலத்தின் வாழ்வியல் மூலம் சுட்ட வரும் ஆசிரியர் கட்டுப்பாடுகளை முறியடிக்கும் காதல் மேன்மையையும் திண்மையையும் உணர்

வோடு பேசுகிறார். பாரதியின் காலத்தவராகிய அடிகள் புதுமைப் பெண் இலக்கணமெலாம் அமைய, கோகிலத்தை உயர்த்திக் காட்டி மன்பதைச் சீர்திருத்தத்திற்கே வழி கோலுகிறார்.

உறக்கத்தே நிகழும் கனவினை ஆய்ந்து கண்ட அடிகளார் தமது அறிதுயிலென்னும் யோக நித்திரையிலும் மரணத்தின் பின் மனிதர் நிலையிலும் அதன் தன்மைகளைப் பேசுவார். அந்தப் பார்வையோடு கோகிலத்தின் கனவை முன்னமைத்துப் பின்னர் அதனை நிறைவேற்று வழியே தன் எண்ணத்தை நிலைநிறுத்திக் கொள்ளுகின்றார். இவ்வாறாக, இருபெரும் புதினங்களின் வழியே ஆசிரியர் மறைமலையடிகள் புதுமைப் பார்வையுடைய நீள்கதைகளைத் தமிழகத்திற்குத் தந்து உயர்ந்து நிற்கிறார்.

சிறு கதை.

சிறுகதைகளையும் அடிகளார் விட்டாரல்லர். மிகப் பெரிய புதுமைகளைச் சிறு கதைகளில் அவர் புகுத்திடவில்லையென்றாலும் அவை எழுந்த காலத்தோடு ஒட்டிக் காண்கையில் அவரது சிறுகதைப் படைப்புக்கள் சிறந்தோங்கியே மிளிர்கின்றன. உள்ளத்தால் இணையாத மனைவியுடன் வாழும் பெருங் கொடுமையினைக் 'காலதயன் கிரிசெலாள் கதை' அழகுறப் பேசுகிறது. பணத்திற்கு மணம் பேசும் கொடுமை, செல்வப் பயனறியாச் சிறுமை, உள மொத்த காதலரைப் பிரிக்கும் உரிமை யார்க்கும் இல்லையென்னும் திண்மை போன்றன வெல்லாம் அவரது 'கானத் தோகை தேவமணிக் கதை'யில் ஏற்றமுற்று எடுத்தியம்பப் படுதலைக் காணலாம். 'அறிவுக்கடல்' வழியே அவர் எழுதிய நெறிக் கதைகளும் சிலவுண்டு.

ஆங்கில நூல்கள்.

இருபெரும் ஆங்கில நூல்களும் அடிகளாரால் படைக்கப்பட்டன. 'முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவர்' என்ற நூலே ஆங்கிலத்தில் '*Ancient and Modern Tamil Poets*' என வகுக்கப்பட்டது. அவரது மற்றொரு நூலான '*The Saiva*

பைந்தமிழர் பல்வகையிலும் பயன்பெறப் பயிலவேண்டிய அடிகளாரது நூல்கள்.

வாழ்வில் வளம்பெற :
மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை.
பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்.

தமிழின் தனிச்சிறப்பை அறிய :
தமிழின் தனிச்சிறப்பு.

இந்தியின் இயல்பறிய :
இந்தி பொதுமொழியா?

நல்ல தமிழ்நடை பயில :
சிறுவர்க்கான செந்தமிழ்.
இளைஞர்க்கான இன்றமிழ்.
சிந்தனைக் கட்டுரைகள்.

ஒரு சிலரைக் கலக்கிய நூலறிய :
அறிவுரைக் கொத்து.

தமிழர்தம் கோட்பாடறிய :
தமிழர் மதம்.
வேளாளர் நாகரிகம்.
பண்டைத் தமிழரும் ஆரியரும்.
முற்கால, பிற்காலத் தமிழ்ப் புலவோர்.

திருக்குறளின் தெளிவறிய :
திருக்குறள் ஆராய்ச்சி.

உண்மைச் சைவத்தை உணர :
கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா.
பழந்தமிழ்க்கொள்கையே சைவசமயம்.
சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்.

சைவக் கோட்பாட்டின் விளக்கம் பெற:
சைவ சித்தாந்த ஞானபோதம்.
சிவஞான போத ஆராய்ச்சி.

செய்யுட் சுவையோடு இறையன்பில் திளைக்க :

திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை.

உரைவளத்தால் உயர் கருத்தறிய :

பட்டினப்பாலை ஆராய்ச்சி.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி.

திருவாசக விரிவுரை.

நாடகத் தமிழை நயக்க :

சாகுந்தல நாடகம்.

அம்பிகாபதி அமராவதி.

நாடகத் திறனாய்வைக் காண :

சாகுந்தல நாடக ஆராய்ச்சி.

பொழுது போக்கும் பொன்னூக :

நாகநாட்டரசி குமுதவல்லி.

கோகிலாம்பாள் கடிதங்கள்.

அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சி அறிய:

மறைமலையடிகளார் கடிதங்கள்.

அடிகளாரின் ஆசிரியரை உணர :

சோமசுந்தர நாயகர் வரலாறு.

கால ஆராய்ச்சியின் கணிப்பை அறிய:

மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்.

மறுப்புரைக்கும் மாண்பறிய :

சோமசுந்தரக் காஞ்சியாக்கம்.

எண்ணத்திற்கு ஈடு கொடுக்க :

தொலைவிலுணர்தல்.

அறிதுயில்.

மனித வசியம்.

தென்புலத்தார் யார் ?

மரணத்தின்பின் மனிதர் நிலை.

Sidhantha Philosophy' சைவ இயல் முடிவு, அறிவியல் வழியில் காணப்பட்டதென்பதையும், அதன் நுண்மைக் கூறுபாடுகளையும் விளக்கவல்லதாக நீண்டு செல்கிறது. இவையன்றி அடிகளாரின் பலவாய கட்டுரைகளை அக்கால 'அறிவுக்கடல்' (ஞானசாகரம்) இதழ்த் தொகுதிகளில் காண்கிறோம்.

மறைமலை போற்றதும்.

இறுதியாகச் சில பேசுவோம். தெளிவார்ந்த கருத்துக்கள், செந்தமிழ் நடை, நீண்ட பொருள் பொதி முன்னுரை, கருத்துகட்குத் தரும் வடிவங்கள், அரிய குறிப்புகள், பிழையற்ற நூற்பதிப்பு இத்துணையும் அடிகளாரின் நூல்கள் தரும் இன்பங்கள். பேச்சாளர்களினும் எழுத்தாளர்கள் மக்கள் உள்ளத்தே நெடுநாட்களுக்கு நிலைபெற்றிருக்க முடியுமென்பதை மறைமலையடிகள் உணர்ந்திருந்தார். அந்த மாமலை தமிழ் ஞாயிறு–இன்று நம்மிடை இல்லாது போகலாம். ஆனாலும், அவருடைய உயிர்த்துடிப்பாகிய செந்தமிழ் நூல்கள் தமிழர் உள்ளத்தால், பண்பாட்டால், பிறமொழியால் தாழ்வுற நேருங்காலத்தே எடுத்து நிறுத்த வல்ல தூண்களாகத் திகழ்ந்து இலங்குமென்ற நம்பிக்கையைக்கொண்டு அடிகளாரின் பெருந் தொண்டினைப் போற்றுவோம். வாழ்க அடிகளார் புகழ்.

ஒரு சிறந்தநூல் ஒரு சிறந்த அறிஞரின் அரிய வாழ்க்கைக் குருதியின் பிழிவேயாகும்.

— மில்தன்.

பாவால் உயர்த்திப் படைக்க மறைமலை
ஒவா தமரும் அரங்கு.

மறைமலையடிகளார் பாவரங்கு

பாவரங்கு அமைக்கும்
பாவலர் பெருமக்கள்

மொழியியற் பேரறிஞர்
புலவர் ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.,
வேலூர்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் மு. வரதராசனுர், எம். ஏ., பி. எச்டி.

'கலைமகள்' திங்களிதழ் ஆசிரியர்
புலவர் கி. வா. சகந்நாதனுர், எம். ஏ.
சென்னை.

நாகை, நாட்டு நடுநிலைப்பள்ளித் தமிழாசிரியர்
புலவர் அ. அறிவொளி அவர்கள்,
சிக்கல்,

அடையாற்று 'யோக சமாச'த் தலைவர்
கவியோகி சுத்தானந்த பாரதியார்,
சென்னை.

தெ. இ. தி. உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
புலவர் கோவை. இளஞ்சேரனுர்,
நாகப்பட்டினம்.

திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார்,
'முருகனடி', சென்னை.

காரைக்குடி, உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
புலவர் முடியரசனுர்.

பாண்டிச்சேரி, அரசினர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்
புலவர் வாணிதாசனுர்.

ஓய்வுபெற்ற வரலாற்றுசிரியர்
திரு. ஆ. சா. துரைராசனுர், பி. ஏ., எல். டி.,
நாகப்பட்டினம்.

சென்னைப் பல்கலைக்கழக வடமொழி விரிவுரையாளர்
சிரோமணி தங்கசாமி அவர்கள்.

பாட்டு எனப்படுவது

[பாட்டின் தன்மை பற்றி
நிறைதமிழ்ச் செம்மல்
மறைமலையடிகளார் பாடியது.]

வாட்டமில் சிறப்பிற் பாட்டெனப் படுவது
கரும்புகண் ணுடைத்த விரும்புபிழி இறுக
முழையில் துழைஇத் தாழா தட்டோன்
எரியகைந் தன்ன எழிற்பொற் பாண்டில்
விளிம்புற நிறைத்தாங்கு முதுவாய்ப் புலவோன்
பாவிடைச் சுருங்கிய பயங்கெழு சொல்லிற்
கருதுதொறும் ஆழ்ந்த காழ்த்தபொருள் பொதிப்ப
என்புநெக் குருகும் இசையுடன் தழீஇ
இயற்கையின் வழாமல் அறிவொருங் குறுத்தி
இன்புணர் வெடுப்பி அன்பே உருவாம்
முழுமுதற் பொருளொடு கெழுவிடப் பயக்கும்
ஆறுத் தலைமைப் பான்மைய துடைத்தே.

[நிலைமண்டில ஆசிரியப்பா]

—மறைமலையடிகள்.
(பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை
—உரைப்பாயிரம்)

நாகைத் தமிழ்ச் சங்கம்
நாகப்பட்டினம்

மறைமலை அடிகளார்

பாவரங்கின் படிக்கட்டு



நிறைதமிழ்ச் செம்மால்; மறைமலை யடிகாள்!
துறைதொறுஞ் செந்தமிழ் துலக்கிய தலைவ!
பாவால் அரங்கு படைத்தனம் ஏறுக!
ஓவாப் புகழோய்; உவந்தே அமர்க!

படிப்படி யாய்நும் புகழ்ப்படி யெல்லாம்
படிபடி யாக்கினர் பாவலர், ஏறுக!

மொழிப்படி யொழுகும் முதற்பா வாணர்
மொழிப்படி யாத்தனர் களிப்போ டேறுக!

உருப்படி யுணர்வர தரசனுர் கருத்தாம்
திருப்படி படைத்தனர் விருப்போ டேறுக!

உறும்படி உரைசகந் நாதனுர் சைவப்
பெரும்படி சமைத்தனர் பெருமையோ டேறுக!

பல்லறங் கண்டநும் பயனறி அறிவொளி
இல்லறச் செழும்படி இயற்றினர் ஏறுக!
உறவருந் துறவதை உணர்சுத் தானந்தர்
துறவறத் துணைப்படி துலக்கினர் ஏறுக!

பான்மையால் நும்புகழ் பகர் இளஞ் சேரனுர்
ஆண்மையாம் அரும்படி ஆக்கினர் ஏறுக!
தூய்மையை உணர்சௌந் தராகை லாசமே
தாய்மையாம் நறும்படி தாங்கினர் ஏறுக!
முழுச்சீ ரறிந்த முடியர சனுர்தாம்
எழுத்தாம் எழிற்படி எழுப்பினர் ஏறுக!
விளங்குசீர் வாணிதா சனுர்சொற் பொழிவே
முழங்கிய முழுப்படி முடித்தனர் ஏறுக!

ஆங்கிலம் வடமொழி தேங்கிடும் படிகளைப்
பாங்குடன் துரையர சனுர்தங்க சாமிதாம்
முறையா யமைத்தனர் நிறைவோ டேறுக!

ஏறுக; ஏறுக! ஏந்தலே, அமர்க!
வீறுகொள் தோற்றம் விளங்கவீற் றிடுக!
ஓகை யுளத்தோ டிங்ஙனம்
நாகைத் தமிழ்ச்சங் கத்தவர் யாமே.

மறைமலை

ஞா. தேவநேயப் பாவாணர்

தமிழகத் தீரே! தமிழகத் தீரே!
தமிழரென் றிருந்தும் தமிழியல் பறியாத்
தவநனி பேதைத் தமிழகத் தீரே!
'ஆரியர் தேவர், அவர்மொழி தேவிகம்'
என்றே மாறி இன்றமிழ் கெடுத்தீர்.

பாரின் முகடாம் பனிமலை கடலுள்
மூழ்கி யிருந்த முன்னுள் குமரி
முதுமலை வாரம் முளைத்துத் தவழ்ந்து
நானிலத் தைந்திணை நடந்து வளர்ந்த
தென்னவன் தீந்தமிழ் திரும்பவும் திகழ
அன்னை மொழியதில் ஆழ்ந்து திளைத்துக்
குடகுணக் கோடிக் கொடுந்தமிழ்த் திரிபின்
வழிவரும் ஆங்கிலம் வடமொழி தேர்ந்தே
அறிவரும் பரப்பும், அலகில் பொருளும்,
அசையா நிலையும், அணிநெடுந் தோற்றமுங்
குன்று வளமுங் குறுகா வண்மையுங்
குலவித் தமிழாங் கிலமிரு மொழியினும்
மூவகை நூலும் நால்வகை யாப்பின்
உரைநடை செய்யுள் அரைநூற் றின்மேல்
நிறைமொழி புனைந்த நிகரறு மறைமலை;

ஒருமொழி மலை

எல்லாப் பொருளும், இடுகுநுண் கருத்தும்
இன்றமிழ்ச் சொல்லால் இயலும் உண்மை
எழுத்தினும் உரையினும் இலக்கிக் காட்டி
வடவர், குடவர், வையா புரிகள்
தாண்டிக் கடவாத் தனித்தமிழ்த் தண்மலை;

அயற்சொல் கலவா அடியிரு கழகக்
குலத்தமிழ் ஓங்கிய குமரிக் காலமும்,
வடசொற் கலந்த கலவைக் காலமும்,
தனித்தமிழ் புதுக்கிய மறைமலைக் காலமும்
எனத்தமிழ் வரலா றியக்கிய சொன்மலை;

ஆரிய வரசாம் பேரா யத்தால்
வடபால் நின்றே வரும்புன் புதுமொழி
''இந்தி பொதுமொழி யா''எனும் நூலால்
வேங்கடத் திம்பர் விரவா வண்ணம்
விலங்கித் தடுத்த வியன்றமிழ் மொழிமலை;

புறக்கண் காணாப் புகழுடம் பெய்தினும்
நாகப் பட்டின நற்றமிழ்க் கழகம்
ஆகமுங் காட்டும் அஞ்சிலை வெண்கலம்
மறைமலை யடிகள் மாண்பெயர்
நிறைதமிழ் வாழி நீணிலம் பெரிதே!

[நேரிசை ஆசிரியம்]

மறைமலை

டாக்டர். மு. வரதராசனார்

நாகை நகரம் பெருமை நவில,
வாகை சூட்டி வல்லமை தெரிக்கத்
தமிழகம் புகழ்ந்து தனிச்சிறப் பெய்தத்
தமிழ்மொழி ஓம்பித் தலைநிமிர் வளித்தோன்;
நடையிலும் மொழியிலுந் தூய்மை நாடினோன்;
புராணக் கதைகளைப் பொருளின்றிப் படித்துப்
பொழுதைப் போக்கிய பொருந்தா முறையை
மாற்றி உயர்த்தி மாண்புறச் செய்தே
நற்றமிழ்ப் பாக்களின் நல்லுணர் வினையும்,
பொருந்து கற்பனைப் பொலிவு தன்னையும்,
சொல்நயப் பொருள்நயச் சீர்மை யாவையும்
நுகர்ந்து மகிழ்ந்து நுழைபுலம் எய்த
ஆய்வுநூல் பலவும், அருஞ்சொற் பொழிவும்
நாட்டவர்க் களித்த நாவலன், நூல்வலன்;

ஒரு கருத்து மலை

மேலைநாட் டவர்தாம் மேவிப் போற்றுந்
திறனுய்வு முறையைத் தீந்தமிழ் பெறும்வகை
பட்டினப் பாலைக்கும் முல்லைப் பாட்டிற்கும்
விரிவுரை வகுத்த வீறுசால் புலவன்;
வடமொழி கற்றேன்; வடநூல் தேர்ந்தோன்;
ஆங்கிலப் புலவர் அருங்கலை நுகர்ந்தோன்;
தென்மொழி மாண்பைத் தெளிவுறப் பகர்ந்தோன்

சாதிப் பேயைச் சாடிய வீரன்;
சைவ சமயஞ் சாதியைக் கடந்ததென்
றையந் தீர அறிவுறுத் திட்டோன்;
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுங்
கள்ளம் அறியாக் கருத்தின் மன்னன்;
மரக்கறி உணவின் மாண்பினைத் தெளிந்தோன்;

உள்ளம் வளர்த்தே உடலினை ஓம்பி
ஆண்டுகள் நூறும் அமைவுற வாழும்
நன்னெறி உணர்த்திய தொன்னெறிச் சான்றேன்
பல்லவ புரத்துப் பண்பார் அண்ணல்
மறைமலை யடிகள் மாண்புகழ்
துறைமிகு தமிழ்போல் துலங்குக பெரிதே!

[நேரிசை ஆசிரியம்]

மறைமலை

கி.வா.சகந்நாதனர்

நீரினின்று தண்மையையே ருக்க லாமோ;
நெருப்பினின்று வெம்மைதனித் திடுவ துண்டோ;
பாரினின்று மண்ணைநாம் பிரித்த லாமோ;
பழத்தினின்றும் சுவைபிரிந்தால் பயனென் றுண்டோ;
ஊரினின்று மக்களெலாம் பிரிந்து போனல்
ஊரென்று பேருண்டோ? தமிழில் ஒன்றும்
சீர்நின்ற சமயவுணர் வினைப்பி ரித்தால்
செந்தமிழில் உயிருண்டோ சிறப்பும் உண்டோ?

இவ்வண்ணம் நாம்கேட்டால் சிலர்ந கைப்பார்:
'இவனுர டா'வென்றே முகம்சு ளிப்பார்.
மெய்வண்ணம் இதுவென்றே பண்டை நூலின்
வித்தகமும் அருளாளர் விளம்பும் நூலும்
கைவண்ண நெல்லியெனக் கண்ட சான்ருேன்,
கறைபடியாப் பேரறிவன், ஆய்வில் தேர்ந்தான்,
நைவண்ண மாட்டாத நூல்கள் செய்தான்
நாம்போற்றும் மறைமலையாம் மேலோன் சொன்னுன்.

ஒரு சைவமலை

தண்டமிழர் சமயநெறி பண்டை நாளில்
  சைவமென்று பலபடியா யாய்ந்து சொற்ருன்,
மண்டலத்தில் அம்பலவா ணன்றன் கோல
  மாட்சியினை நனிதேர்ந்தான். ‘கலையும் ஞானத்

திண்டிறலும், தன்னியல்பும் எழிலும் ஒன்ருய்த்
  திரண்டுருண்ட திருவுருவம் கூத்தன் கோலம்
எண்டிசையும் இதுபோலென் றில்லை’ யென்றே
  எழுதினுன்; மனமாரத் தொழுது வாழ்ந்தான்.

அம்பலவா ணன்கோலம் நிறுவி யாங்கே
  அரியகுட முழுக்காட்டிப் புலவர் நண்ணிப்
பம்புசைவ நெறிபேச வைத்தான்; நால்வர்
  பனுவல்களைக் கரைகண்டான்; மணிவாக் கையன்
நம்புதிரு வாசகத்தின் முதல்நாற் பாட்டின்
  நயந்தெரிய உரைவகுத்தான்; ‘சைவக் கொள்கை
இம்பர்மிகத் தொன்மையது, தமிழ்நாட் டின்கண்
  எழுந்துபரந் தது’வென்று நிமிர்ந்து சொன்ஞன்.

மறையாத மலையாகிச் சீராற் பெற்ற
  வடிவினிலே திகழ்கின்ருன்; மக்கள் பேரைக்
குறையாத அன்பினிலே இறைவன் பேரும்,
  கொழியருளா ளர்பேரு மாக வைத்தான்;
நிறைவேறும் சிவவுணர்வில் இன்ப வாழ்வு
  நிலைக்குமெனுந் திறத்தைஎழுத் தினிலும் வாழ்க்கைத்
துறையான வற்றினிலும் காட்டி ஞன்இத்
  தூயமறை மலைசைவ மலையே யன்ருே?

[எண்சீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்]

நாகைத் தமிழ்ச் சங்கம்
நாகப்பட்டினம்

மறைமலை

அ. அறிவொளி

நறவுதமிழ்த் தொண்டுடைய மறைமலையை, அன்பின்
நலங்கனியும் அறமலையை, அறிவுமலை தன்னைத்
துறவுமலை எனச்சொல்லித் தொலையாதென் னுள்ளம்;
துறவென்றால் பெண்டுபிள்ளை சுற்றந்துறந் தாரா?
உறவின்றிப் பசியாலே உலர்ந்தவர்க்கு நாளும்
உதவவொரு தனியரிசிப் பானைவைத் தாராம்.
துறவிக்கும் உதவுகின்ற இல்லறத்து மாண்பைத்
துறவிலிவர் செய்ததனால் உள்ளமுவக் காதோ?

'துறவுமலை எனச்சொல்ல வேண்டுமெனில் வீட்டைத்
துறப்பதுவுங் காவியுடை தருவதற்கு வேறோர்
துறவியுந்தான் வேண்டுமெனும் பழையநெறி மீறித்
துணையாகும் தன்மைந்தர் துணைக்கையால் வாங்கித்
துறவியுடை அணிந்தனராம்' எனுமொழியால் அந்தத்
தூயநெறி இல்லறத்தின் வேறுநெறி யாமோ?
துறவியிவர் மழையில்லாத் துயர்வந்த போதும்
துய்ப்பதற்குப் பொருளீந்த இல்லமலை யன்றோ?

ஓர் இல்லற மலை

தனித்தமிழாங் கற்புடைய மனைவியுடன் கூடித்
தமிழ்ப்பிள்ளை எனப்பலநூல் பெற்றெடுத்த மேலார்;
தனித்தமிழர் சமயமதைக் காதலித்துக் கூடிச்
சமயமறு மலர்ச்சியெனும் புதுப்பிள்ளை பெற்றார்;
தனித்தமிழர் நாகரிக மெனும்பருவப் பெண்ணைத்
தமிழேட்டில் முத்தமிட்டு முதற்பெருமை கொண்டார்;
தனித்தமிழை இந்திமொழி அழிக்கவரு போதில்
தளராத போராட்ட மெனுங்குழந்தை தந்தார்.

வடமொழியு மாங்கிலமும் வனப்புடனே கற்று
வடித்தபல நூற்கருத்தாம் நறுங்குழந்தை பெற்றார்;
புடமிட்ட பொன்னெனவே புலவர்களுக் குள்ளே
புதுநெறியைப் புகுத்தியதும் நல்லமகப் பேறும்;
உடலெடுத்தல் தொண்டுசெயும் ஒருவழிக்கா மென்றே
ஒப்பற்ற புகழெனுமோர் குழந்தையையும் பெற்றார்;
விடலறியா இல்லறத்தும் பொதுத்துறைக ளுள்ளும்
விந்தைமிகு துறவியிவர் ஏழுபிள்ளை பெற்றார்.

வள்ளுவர்சொல் ஐம்புலமாம் இல்லறத்து மாண்பில்
வாழ்வதற்கே துறவெனுமோர் தொண்டுநெறி கொண்டார்;
உள்ளமுடன் நம்மருந்தொல் காப்பியத்திற் கண்ட
உறவார்ந்த துறவுகொண்ட இல்லறத்தார் காணீர்.
எள்ளுறுசொல் லில்லாமல் இல்லறங்கொள் வார்க்கே
எழுச்சிதரு நூல்பலவும் செய்தனர்தாம் என்றால்
கொள்ளுவதோ இவர்பிறர்போல் துறவியெனுங் கொள்கை?
இல்லறத்துப் பெருமலையே மறைமலையார் என்போம்.

[எண்சீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்]

மறைமலை

சுத்தானந்தபாரதியார்

மறைமலை யடிகள் என்னில்
    மாணிக்கப் பொலிவு காணும்;
மறைமலை யென்னில் இன்ப
    மங்கல யாழி சைக்கும்;
மறைமலை யென்னிற் சாதி
    மறைந்தொரு குலமே காணும்;
மறைமலை யருவி யாடின்
    மலிவளத் தமிழ ராவோம்.

கல்வியின் வரம்பு கண்டோன்;
    கற்றதை நிறுத்த சைவன்;
பல்லவ புரத்தை அன்புப்
    பைந்தமிழ்ச் சோலை செய்தோன்;
மெல்லிசைக் குயிலைப் போலே
    மிழற்றிடும் தமிழைக் கேட்டால்
நல்லிசை யுலக மெல்லாம்
    தமிழையே நயந்து கற்கும்.

ஒரு துறவு மலை

முப்பொருள் உணர்ந்த செம்மல்;
　　முழுத்தனித் தமிழ்க்க லைக்கே
ஒப்பறு தொண்டு செய்தான்;
　　உலகெலாம் புகழத் தக்க
துப்புர வுடையான்; உண்மைத்
　　துறவறங் கொண்ட வீட்டு
நுட்பத்தை யறிந்து ணர்ந்து
　　நூல்பல தந்த நூலோன்.

அச்சத்தைத் துறந்தான்; உள்ளே
　　அம்பல வாணன் ஊற்றும்
சொற்சுவை அமுதை நல்ல
　　தூயசெந் தமிழில் வார்த்தான்;
பற்பல சமயத் தோங்கும்
　　படிகளைக் கடந்து மேலே
நச்சுதற் குரிய சைவம்
　　நலம்பெறத் துலக்கி னானே.

அறமெனும் அருவி தந்தான்;
　　அன்பெனுஞ் சுனையே தந்தான்;
புறமெலாம் பசுமைப் பண்பே
　　பொலிந்திடப் பரிந்து தந்தான்;
நறவதும், மணியும், பொன்னும்
　　நலம்பெற நயந்து தந்தான்;
துறவினில் மலையாய் நின்றான்
　　தூய்மறை மலையாய் நின்றான்.

[அறுசீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்]

மறைமலை

கோவை. இளஞ்சேரனார்

தனித்தமிழின் நறுஞ்சுனையே!
தமிழ்ப்பொருளின் கனிச்சுளையே! தமிழ்நூல் வெள்ள
இனித்தமழைக் கருமுகிலே!
'பிறமொழிச்சொற் கலப்பதனை இடித்துக் கேட்க
இனித்தமிழில் ஆளில்லை'
எனநினைந்தே இறுமாந்தோர் இரும்புள் ளத்தைத்
துணித்தெழுந்த மறைமலையே!
துகளற்ற நும்மாண்மைத் துணிவென் னென்பேன்!

மலருக்கு மலர்ச்சியதன்
மதர்ப்பாண்மை; மண்ணுக்கு விளைவே ஆண்மை;
வலருக்குத் தாளாண்மை;
வனப்பினர்க்கு நாணமதே வயங்கும் ஆண்மை;
சிலருக்குச் சினந்திடுதல்
சிற்றாண்மை; சீரியர்க்கோ பணிவே ஆண்மை;
பலருக்கு நடிப்பாண்மை;
பயனார்ந்த மலையுமக்கோ படிப்பே ஆண்மை.

ஓர் ஆண்மை மலை

பாரிதனிற் பைந்தமிழ்ச்சீர்
　　பறிக்கவந்த இந்தியெனும் பகையைத் தள்ளி
மூரிநிமிர்ந் தரிமாவாய்
　　முழங்கியதன் முதுகெலும்பை முறிக்கும் பாங்கில்
வாரிவிட்ட " இந்திபொது
　　மொழியா " வென் ரேருருரையால் வதைத்த செம்மை
வீரியத்தால் மறைமலையே,
　　'ஆண்மையதன் மறையாத மலை'நீர் என்பேன்.

சைவத்தில் உளந்தோய்ந்தீர்;
　　'சைவமொடு புராணஞ்சேர் கதைகள் தம்மில்
பொய்வைத்தார்' எனக்கழறிப்
　　பொசுக்கியநும் பேராண்மைப் பொலிவென் னென்பேன்!
'தெய்வத்தார் நாங்க' ளெனத்
　　தீந்தமிழர் மரபெல்லாந் திரித்தார் தீமை
கைவைத்தே களைந்தெறிந்த
　　கவின்மலையே! நும்மாண்மைக் கருத்தென் னென்பேன்!

இல்லறத்தில் துறவறமோர்
　　நல்லாண்மை; இல்லத்தில் கலப்பு மன்றல்
புல்லியதோர் சீராண்மை;
　　புதுமைநெறிச் சொற்பொழிவோர் புகழின் ஆண்மை;
புல்லொத்தார் புரட்டொடுக்கும்
　　புலமையொரு புத்தாண்மை; துளக்க லாகாப்
பல்லாண்மை மலையுருவே!
　　பணிந்தும்மைப் பேராண்மை மலையென் பேனே.

[அறுசீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்]

மறைமலை

திருமதி சௌந்தரா கைலாசம்

மற்றவர் மொழியென் றாலும்
மனத்திலே வெறுப்பில் லாமல்
கற்றவர்; தமதெ ழுத்தால்
காலத்தை வெல்லும் சீரைப்
பெற்றவர்; தாய்ப்பற் றின்றிப்
பிறரடி வருடி மானம்
விற்றவர் நடுங்கத் தாய்மை
விளக்கிய மலையார் வாழி!

புலப்படு தனிமை கெட்டுப்
போகுமா றயலார் சொல்லைக்
கலப்பது பெருமை யென்று
கருதிடு கின்ற பொய்ம்மை
வலைப்பட லின்றி என்றும்
மகிழ்ந்துள மெழுந்து துள்ளத்
தலைப்பணி யென்று தாய்மைத்
தமிழினை வளர்த்தார் வாழி.

ஒரு தாய்மை மலை

'முடியுமா பேச' வேற்று
மொழிக்கலப் பின்றி; வாழ்வு
'விடியுமா தமிழால்' என்று
வினவிய ஆண வந்தான்
ஒடியுமா றுதைத்து நாவில்
ஒருதனித் தமிழே கற்பில்
அடையுமா றுழைத்த எங்கள்
அடிகளார் புகழே வாழ்க!

தனிச்சுவைத் தமிழால் தூய
தகவமு தாக்கிப் பேச்சாம்
கனிச்சுவைச் சாறு பெய்து
கறிகளாய் நூல்கள் இட்டே
இனிச்சுவை யுண்டோ வென்ன
இன்றமிழ் ஊட்டித் தாய்மை
குணச்சுடர் போலே ஈந்தார்;
குறையிலா நெறிகள் கொள்வாம்.

[அறுசீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்.]

மறைமலை

முடியரசனார்

தொழத்தகுநற் றமிழ்மொழியும், அதனோ டொத்த
தொன்மைமிகும் ஆரியமும் கற்றுத் தேர்ந்து
பழுத்தமலை; பண்புவளர் ஆங்கி லம்போற்
பலமொழிகள் பயின்றமலை; சான்றோர் நெஞ்சம்
வழுத்துமலை; வளர்ந்தபல எழுத்து வல்லார்
வற்றாத அருவியெனத் தோன்றச் செய்த
எழுத்துமலைப் பெருமையெலாம் விண்டு ரைத்தல்
எளியதொரு செயலாமோ? அரிய தன்றோ!

அளக்கவொரு கருவியிலா அளவு கொண்டான்,
அலகில்பல பொருள்கொண்டான், பகைவர் யாரும்
துளக்கரிய நிலைகொண்டான், புகழால் ஓங்கித்
தொலைவிலுளார் அறியவளர் தோற்றங் கொண்டான்,
உளத்துறுநந் தமிழ்நினைவு வறந்த போதும்
உலகினர்க்கு வளந்தருநல் வண்மை கொண்டான்;
வளத்திலுயர் அம்மலையை மறைப்பான் வேண்டி
வஞ்சனையார் முயல்வரெனின் மதிதான் என்னே!

ஓர் எழுத்து மலை

நாடகநூல் பாவகைநூல் ஆய்ந்து ரைத்த
    நலமிகுநூல் அறிவியல்நூல் நுழைபு லத்தார்
நாடறிவு நூல்பலவோ டுரைநூல் நெஞ்சம்
    நயக்கின்ற நெடுங்கதைநூல் இன்னே ரன்ன
பிடணையும் பெருநூல்கள் எழுதித் தந்த
    பெருமலையாம் மறைமலையின் எழுத்து வன்மை
நாடறியும், வீடறியும், நல்லோர் நெஞ்சம்
    நன்கறியும்; அறியாதார் அறியா தாரே.

சமயமெனக் கடவுளெனப் பேர்கள் சொல்லித்
    தழைத்துவரும் போலிகளைக் கடியும் கூர்வாள் ;
தமிழரிடைப் படர்ந்துவரும் சாதித் தீமைச்
    சழக்குகளை வேரொடுசுட் டெரிக்குஞ் செந்தீ;
இமயமலை தந்தபொது மொழியீ தென்றே
    இந்திவரின் தடுத்தொழிக்குங் கேட யங்காண்;
நமதினத்தை விழிப்புறுத்தும் வெற்றிச் சங்கம்
    நாளெல்லாம் அவனெழுதி தந்த நூல்கள்.

கல்லாதார் தமிழ்மொழியைக் கரைகண் டார்போல்
    கருதினராய் அயன்மொழிச்சொல் பலவுங் கூட்டி
இல்லாத வழுமொழியுஞ் சிதைந்த சொல்லும்
    எண்ணிலவாய்க் குழப்பியதை எழுதிக் காட்டிப்
பொல்லாத செயல்புரிந்து தமிழின் தன்மை
    புரியாத படிசெய்த இருட்டர் கூட்டம்
நில்லாது வெருண்டோட எழுந்து வந்த
    நீள்கதிராம் மறைமலையை நினைவோம் வாரீர்!

[எண்சீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்]

மறைமலை

வாணிதாசனார்

வான்பிறந்த செங்கதிரும் மழையுங் காற்றும்
மண்பிறக்கச் செய்தவுடன் உலகில் எங்கும்
ஊன்பிறக்க உடல்பிறக்க உடலின் ஊடே
உயிர்பிறக்கப் பிறந்துவந்த தமிழர் நாவில்
தேன்பிறக்கப் பிறந்ததுவாந் தமிழும்; அந்தச்
செந்தமிழே மறைமலையாம்; நீல வானில்
கூன்பிறக்கும் நிலவினிமை மறைம லைத்தீஞ்
சொற்பொழிவு மலையென்றே கூறு வோமே.

சொற்கேட்டால் காதினிக்கும்; சொல்லில் தோய்ந்த
தூயபொருள் மாசகற்றும்; நாவில் என்றும்
கற்கண்டைக் கண்டதுபோல் இனிக்கும்; நெஞ்சில்
களிப்பேற்றி நெறிமுறையை விளக்கிக் காட்டும்;
நற்றொண்டைச் செய்யநமைத் தூண்டும்; தூய
நலப்பாவின் வளஞ்சேர்க்கும்; அறிவைச் சேர்க்கும்;
மற்றொருவர் இனிப்பிறப்ப துண்டோ பேச?
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

ஒரு சொற்பொழிவு மலை

'இனித்தமிழுந் தழைத்திடுமோ, தனித்து நின்றே
இயங்கிடுமோ' எனப்பல்லோர் இளித்த போது,
தனித்தமிழில் பலநூலும் பேச்சும் தேக்கித்
தந்தவர்யார்? மறைமலைபோல் எவரிங் குண்டாம்?
குனித்திருந்த தமிழ்மொழியும், இடைபு குந்த
குறைமொழியும் வாழ்நாளில் விலக்கித் தள்ளி
மனித்தவினம் தலைநிமிரச் செய்த மாண்பு
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

வடமொழியுந் தென்மொழியும் வந்து சேர்ந்த
ஆங்கிலமும் மாசறவே கற்றுத் தேர்ந்து,
தொடர்மொழியின் நிலைவிளக்கித் தமிழர் வாழ்வின்
தொன்மையினைச் சொல்வளத்தைச் சமயப் பண்பைச்
சுடர்மொழியால் இருள்போக்கிச் செய்யுட் பேச்சால்
துறைதோறுந் துறைதோறும் விளக்கிக் காட்டி
மடமொழியார்க் கறிவூட்டி வந்த எங்கள்
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

உள்ளத்தால் துறப்பதுவே துறவின் மாட்சி;
உடையில்லாத் துறவியெலாம் போலி யாவார்.
பள்ளத்துக் காரெருமை பூவை மாந்திப்
பகலெல்லாம் பால்சொரியும் வயல்கள் சூழ்ந்த
தெள்ளுதமிழ் நாட்டகத்தே இல்லி ருந்து
சீர்பெற்ற துறவியர்கள் பல்லோர் போல
வள்ளுவரைப் பின்பற்றி இல்லி ருந்த
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

[எண்சீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தம்]

மறைமலை

ஆ. சா. துரைராசனர்

Years ninety and two have rolled
Since your birth to write in letters of gold;
And rightly to us you did unfold
The truths embedded to in Scriptures old.

தொன்மறையாம் நூல்களிலே தோய்ந்தவுண்மை விரிவாய்த்
தொகுபொருத்தத் தோடெமக்கே தொடுத்தளித்தீர் பரிவாய்;
பொன்னெழுத்தில் நும்பிறப்பைப் பொறிப்பதற்கே நெறியாய்ப்
போந்ததுகாண் தொண்ணூற்றே டிரண்டாண்டு செறிவாய்.

True to the soil which gave you birth
And to the name you had on earth
Your fame doth rest on a mountain crest
Speaking loud your labours with zeal and zest.

பிறப்பளித்த நாட்டிற்கும் பின்னேற்றுப் பிழையாப்
பெயருக்கும் உண்மையராய்ப் பேருக்க விழைவாய்ச்
சிறப்பளித்த பணிகளெலாம் உலகுக்கோர் முழக்காய்ச்
சிறந்தபுகழ் அடைந்ததுகாண் மலைமுகட்டு விளக்காய்!

ஓர் ஆங்கில மலை

With mastery won over languages, sare,
In Tamil, English and Sanskrit pure
With ease and speed you did write
Putting your ideas all, in black and white.

தெளிவார்ந்த புலமையதை மொழிகளிலே நிறுத்தே
தூயதமிழ் ஆங்கிலமா ரியந்தோய்ந்த கருத்தே
எளிதாக, விரைவாக எழுதுதிறன் விதித்தே
வெளியிட்டீர் வெள்ளேட்டில் கருமணியாய்ப் பதித்தே.

Your mastery of Addison and Johnson,
Your discovery of 'Poets Ancient and modern'
Have inspired the People of the West
As bewitched we are here in the East.

அடிசனொடு சான்சன்நூல் அறிதேர்ச்சிப் பாலால்,
'முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவர்' நூலால்
துடிப்புணர்வில் மேனாட்டார் துலங்குமுளங் கவர்ந்தீர்;
தமிழர்யாம் கீழ்த்திசையில் தலைமையுற்றே உவந்தோம்.

The ideas are clear to the masses ken
That freely flowed from your mighty pen
Your 'Oriental Mystic Myna' and
'The Ocean of Wisdom'
Are lore learned in the Literature Kingdom.

வல்லமைசேர் நும்மெழுது கோலினின்று வழிந்தே
வற்றாத கருத்துமக்கள் உளத்தமைந்த தெளிந்தே;
'தொல்லறிவர் மைனா'வோ 'டறிவுக்கட' லென்னும்
நூல்களிவை ஆங்கிலவிலக் கியவரசில் மன்னும்.

மறைமலை

தங்கசாமி

श्रीवेदाचलस्वामी		
वेदाचल इति ख्यातः	நிறைதமிழிற் புலமைகொள்	
पण्डितः सुमहानभूत् ।	மறைமலையாம் அடிகள்பால்	
यस्य भाषासु पाण्डित्यं	உறைமொழியின் புலமையதன்	
प्रख्यातमिहमण्डले ॥	துறையுலகிற் பேரொளியாம்.	1
तस्य नारायणस्वामी	அன்னார்க்குத் தமிழ்தந்தார்	
सोमसुन्दरनायकौ ।	நன்னாரா யணசாமி;	
द्राविडे शैवसिद्धान्ते	இன்சோம சுந்தரனார்	
गुरूचास्तां यथाक्रमम् ॥	தென்சைவக் கலைதந்தார்	2
आचार्यात्स्वीकृतं स्वल्पं	கேட்டலினுங் கேட்டவற்றை	
मननात्स्वीकृतं महत् ।	நாட்டமாய் நினைத்திடுதல்	
एवं वेदाभिधानस्य	கூட்டியவர் புலமைக்கே	
मुख्यं पाण्डित्यकारणम् ।	ஊட்டமாய்க் கொண்டனர்காண்.	3
प्राचीनदाक्षिणात्यादि	தென்றமிழா ரியமிரண்டும்	
भाषातत्वविचक्षणः ।	ஒன்றிநின்று கற்றதனால்	
तमिल्संस्कृतयोः सम्यक्	தென்னாட்டார் மொழியியலில்	
पाण्डित्यं तत्रकारणम् ॥	முன்னாளிற் சிறந்திருந்தார்.	4

ஒரு வடமொழி மலை

भाषयोरनयोर्मैत्री
प्रथितग्रन्थेषु दृश्यते ।
तत्त्वमेतद्विजानन्तः
संस्कृताध्ययने रताः ॥

விழிகளென இவ்விரண்டு
மொழிகளின்சீர் மொழிநூல்கள்
வழிவழியாய்க் கண்டுமுந்தை
விழுமியவர் பயின்றுவந்தார். 5

तेषां प्रतिनिधिर्दिष्टो
वेदाचलबुधोप्यसौ ।
तमिल्संस्कृतयोर्ज्ञानं
निरूढं तस्य दृश्यते ॥

செம்புலத்தார் அன்னோர்க்கு
நம்புலவர் மறைமலையார்
நம்பியராய் இருமொழியின்
பம்பறிவிற் சிறந்திருந்தார். 6

काव्येषु नाटकं रम्यं
तत्ररम्या शकुन्तला ।
रम्योऽनुवादस्तस्य हि
तमिल्वाण्यां प्रकीर्तितः ॥

நாடகமே காப்பியச்சீர்;
நாடகத்திற் சகுந்தலைநூற்
கீடமையத் தமிழ்மொழியிற்
பீடமைய மொழிபெயர்த்தார். 7

कालिदासस्य भावो हि
प्रायशश्चोपवर्णितः ।
विनावाणीविशेषं तु
नैव भेदोऽत्रदृश्यते ॥

சீர்க்காளி தாசரது
வேர்க்கருத்து முற்றிலுமாய்
வார்க்கின்றார்; மொழியன்றிப்
பார்க்கிலம்யாம் வேற்றுமையே. 8

शिवभक्त इति ख्यातः
कालिदासो हि पूर्वजः ।
शिवभक्तो रतश्चापि
वेदाचलबुधोप्यसौ ॥

'கவிகாளி தாசரவர்
சிவனடிமை' என்றுலகம்
நவிலும்; நம் மறைமலையும்
சிவனடிமைச் சீருடையார். 9

जयतु जयतु नित्यं द्राविडं संस्कृतं च
जयतु जयतु देशो भारतं दक्षिणाख्यम् ।
जयतु जयतु कीर्तिः स्वामिवेदाचलस्य
जयतु जयतु धर्मः शाश्वतस्तत्प्रणीतः ॥

இன்றமிழும் வடமொழியும்
நின்றொளிர்க; தென்னகமும்
ஒன்றுபுகழ் மறைமலையார்
துன்றறமும் வென்றொளிர்க! 10

[வஞ்சித்துறை]

நாகைத் தமிழ்ச் சங்கம்
நாகப்பட்டினம்

மறைமலை அடிகளார்

பாவரங்கின் பயன் பத்து



எப்பணி கொள்ளினும் அப்பணிச் செம்மையில்
ஒப்பிலா நற்பயன் ஓங்குதல் நன்மையாம்;
இப்புதுப் பாவரங் கெப்பயன் நல்கிய
தப்பயன் கொண்டிடச் செப்புவம் இஃதே.

சான்றோர் புகழினைச் சாற்றுதல் அன்னவர்
ஆன்ற திறத்தின் அடிவழிச் செல்லவே;
சான்றோர் மறைமலைச் சாரல் இனியவாய்
ஈன்ற பயன்பத் திசைவுறக் கொள்வமே.

அருமைத் தமிழை அணிசெயல் ஒன்று;
பெருமைக் கருத்தைப் பிறக்கல் இரண்டே;
ஒருமை இறைபணி ஒன்றுதல் மூன்றே;
நறுமை மணையறம் நாட்டுதல் நான்கே;

பொதுமைத் துறவிற் பொலிந்திடல் ஐந்து;
புதுமைத் துணிவதிற் பூத்திடல் ஆறே;
எதனினுந் தாயுளம் ஏற்றிடல் ஏழு;
மதுகை எழுத்தை மலர்த்திடல் எட்டே;

சொற்பொழி வாற்றலாற் சீர்தரல் ஒன்பது;
பொற்புடைத் தாய்மொழி போற்றுங் கருத்தொடு
நற்பிற வொண்மொழி நத்துதல் பத்திவை
அற்புளத் தோடுநன் காற்றல் கடனே.

நிறைதமிழ்ச் செம்மல் மறைமலை தம்மின்
உறைபுகழ் கேட்ட உழுவலன் புள்ளீர்,
துறைதொறும் நற்பணி தூய்மையாய் ஆற்றி
மறையாப் புகழால் மலையென வாழ்கவே!

[கலி விருத்தம்]

வாகைத் தமிழ்கொள் வளத்தினோ டிவ்வணம்
நாகைத் தமிச்சங்கத் தேம்.

[குறள் வெண்பா]

நாகைத் தமிழ்ச் சங்கம்
நாகப்பட்டினம்.

மறைமலையடிகளார் சிலையமைப்புப் புரவலர்கள்



திரு. வே. ப. கா. காயாரோகணம் பிள்ளை அவர்கள்
நாகப்பட்டினம்.

டாக்டர் பா. நடராசனுர், எம். ஏ., டி. லிட்.,
செயலுறு பொருளியல்
ஆய்வுக்குழுத் துணை இயக்குநர்,
புதுதில்லி.

நாவலர் இரா. நெடுஞ்செழியனுர்
எம். ஏ., எம். எல். ஏ.,
சென்னை.

சிலம்புச் செல்வர்
ம. பொ. சிவஞானம் அவர்கள்
எம். எல். ஏ., சென்னை.

முத்தமிழ்க் காவலர்
← கி. ஆ. பெ. விசுவநாதனர்,
திருச்சி.

புகழுடம்பில் நிற்கும்
ப. சீவானந்தம் அவர்கள் →

புகழுடம்பில் நிற்கும் டாக்டர் அ. சிதம்பரநாதனர்



திரு வீ. பார்த்தசாரதி
அவர்கள்
(Dip. A. E. M. V. T., C. & G.
London)
← சக்தி விலாஸ் பேருந்து
நிறுவன உரிமையாளர்,
பொறையாறு.

புலவர்
மறை. திருநாவுக்கரசு
அவர்கள் →
(அடிகளாரது திருமகனர்)
சென்னை.

கண்ணம்மா : கண்ணு! நீ உடுத்தி
யுள்ள நூலாடை என்
உள்ளத்தோடு உறவாடுகிறது.

கண்ணன்: பளிங்கு போன்ற கலிங்கம்
ஒன்று வைத்துள்ளேன். அது
உன் நெஞ்சோடு கொஞ்சும்.

கண்ணம்மா : அப்படியா! எனக்கு........!

கண்ணன்: உனக்கு, நீராவிக்கு
மெருகேற்றிய நீல ஆடை
உண்டு; பால் ஆடைக்கு
வண்ணம் ஊட்டிய
பட்டாடை உண்டு.

கண்ணம்மா : கண்ணு! கண்ணு!
எங்கே உண்டு கண்ணு?
விரைவில் சொல்!

கண்ணன்: அடுத்த பக்கத்திற்கு வா!
அங்கு நானும் தவழ்வேன்.

போன்:- 257
ஸ்ரீ:
மு.ரா.சன்ஸ்
பட்டு, நூல், மில் ஹவுளி வியாபாரம்
நாகப்பட்டினம்
ஜீவி, நாகை

புரியாத புதிர்களும் புரியும் பக்கங்களும்

★ மறைமலையடிகளார் பயின்ற அறையைக் கண்டதுண்டா?	அடுத்த பக்கம் அழைத்துச்செல்லும்
★ திருவள்ளுவர் ஈராயிரத்தோடு குறிப்பிடத்தக்க இருவர் யார்?	,, 83 இல் அவர்கள்
★ சோழ நாட்டில் பாண்டியனைக் காணவேண்டுமா?	,, 84 காட்டும்
★ இயங்காதவற்றை இயக்கும்: இயந்திய களைப்பையும் ஆற்றும்; எது?	,, 85 சாற்றும்
★ முன்னர்க் கட்டிப் பார்க்கலாம் பின்னர்க் கட்டித் தீர்க்கலாம்; எவ்வாறு?	,, 86 இல் உள்ளவாறு
★ மூன்று இடங்களில் முழுமனிதர் ஆகலாம்; எங்கெங்கே?	,, 87 சொல்லும்
★ ஞானசம்பந்தர் சைவர்க்கு இனிப்பானவர்; அவர் பிறந்த ஊரும் இனிப்பானது; எவ்வாறு?	,, 88 இல் உள்ளவாறு
★ இஃது இல்லாமல் சமையல் இல்லை: எது?	,, 89 இல் அது
★ 'நினைப்பில் களிப்பும் கண்டால் மகிழ்வும்' எனத் திருவள்ளுவர் கூறியது மற்றொன்றிற்கும் பொருந்தும்.	,, 90 இல் பொருந்தும்
★ அகப்பொருளும் புறப்பொருளும் தமிழில்தான் உண்டு: மற்றொன்றிலும் உண்டு; எதில்?	,, 91 இல்
★ சேர்ந்தால் வாணிக வளம்; தேர்ந்தால் வாழ்வில் வளம்; எதனால்?	,, 92 காட்டும் அதனால்

மறைமலையடிகள் பிறந்த இல்லம்
நாகை-யாதவத் தெருவில் உள்ளது.
அவ்வில்லத்தில் அடிகள் ஆழ்ந்து
பயின்ற படிப்பறையில்

கமலா பார்மசி என்னும்
ஆங்கில மருந்து வாணிகத்தை
நடத்த நேர்ந்த வாய்ப்பைப்
பெரும் பேருகக் கருதுகிறேன்.

—நா. ஆ. நாராயணசாமி
உரிமையாளர்.

கமலா பார்மசி,
யாதவத் தெரு,
நாகப்பட்டினம்.

தொலை பேசி : 405

திருவள்ளுவர் ஈராயிரத்தை வரையறுக்கத்
திருவள்ளுவர் காலத்தைக் கணித்தவர்
மறைமலையடிகளார்.

திருவள்ளுவர் ஈராயிரத்தில்
வள்ளுவர் வகுத்த இலக்கணங்களை
இலக்கிய மாக்கியவர்
அறிஞர் அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்போடு
மறைமலையடிகளார் சிலை நாட்டப்படும்
இப்பொன்னாளில் தமிழகப்
பெருமக்களுக்கு இனிய வாழ்த்து.

கல்யாணம் பொருட்கூடம்

KALYANAM STORES.

பொது வாணிகம்,

கடைத் தெரு, நாகப்பட்டினம்.

உரிமையாளர்:
இரா. கல்யாண சுந்தரம்

சோழ நாட்டில் பாண்டியன்

உலகம் என்னும் வெள்ளித் திரையில்
பலசுவைத் தமிழெனும் படத்தைக் காட்டிய
புலவர் பெருந்தகை மறைமலை யடிகள்
சிலைகாண் விழாவில் சேர்த்தனம் வாழ்த்தே.

Pandian Talkies

பாண்டியன் படக் கொட்டகை

['ஆர். சி. ஏ' ஒளிப்படிவுப்பொறியுடன்
பாங்கான ஒலிமுறை அமைய
உருவாக்கப்பட்ட படக்கூடம்.]

நாகப்பட்டினம்.

தொலைபேசி : கொட்டகை : 253
அலுவலகம் : 233

தொலைவரி : 'பாண்டியன்'

உரிமையாளர் :

அ. து. செயவீரபாண்டிய நாடாரும்,
உடன் பிறப்பாளரும்.

தொலைபேசி : 426

தொலைவரி : "என்னுரெம்"
"ENNAREM"

இயங்காத பொறிகளை இயக்க

எம்மிடம் அரிசி, மா, சீயக்காய் ஆலைகளுக்கு வேண்டிய கருவிப் பாகங்களும், சுழல் குண்டச் சுருளைகளும், [Ball-bearings] அசுபெடாசு வடங்களும், இரப்பர், பஞ்சு உருட்டு வார்களும் [BELTS], எண்ணெய்ப்பொறி மின்னுற்றல் விசைப்பொறிக்குரிய குழாய்த் தொகுதி களும், பேருந்து, சீருந்துகளுக்குரிய கருவிப் பாகங் களும் நயமாய்க் கிடைக்கும்.

இயங்கிய களைப்பை ஆற்றும்

எஃகு நாற்காலிகள்,
கட்டில்கள், மேசைகள்,
நிலைப் பேழைகள்
புதுமைப் பாங்குடையனவாய்க்
கிடைக்கும்.

கே. எம். பொருட்கூடம்

K. M. STORES

பெருமாள் தெற்குத்தெரு, நாகப்பட்டினம்.

உரிமையாளர் :
என். ஆர். முருகையன்

கூட்டுறவே நாட்டுயர்வு

புதிய வீட்டைக் கட்டிப் பார்க்கலாம். பின்னர் கடனைக் கட்டித் தீர்க்கலாம்.

அதற்கு அணுகவேண்டிய இடம்:

நாகப்பட்டினம் கூட்டுறவு வீட்டு அடமான சங்கம் (வரையறை) Z-557

நீலா கீழத்தெரு : : நாகப்பட்டினம்.

திரு. வே. ப. கா. காயாரோகணம் பிள்ளை அவர்கள், தலைவர்.

திரு. S. G. சண்முக முதலியார் அவர்கள், துணைத் தலைவர்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட செல்வ முதல்	உருபா	2,00,000
செலுத்தப்பட்ட ,,	,,	42,000
உறுப்பினர்கள் பெயரில் நிலுவை நிற்கும் கடன்தொகை	,,	2,65,000

15 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய நீண்ட காலக் கடன்கள் கீழுள்ள விவரப்படி வழங்கப்படும்

புது வீடு கட்டுதல்	உருபா	20,000
பழைய வீட்டைப் புதுக்குதல் பெருக்குதல்	,,	10,000
சில்லறைப் பழுது பார்த்தல்	,,	1,000

பிற விவரங்களுக்கு அலுவலகத்தை அணுகுக!

ஏ. முத்துக்கிருட்டின நாயடு, பொருளாளர்.

ஆர். சீனிவாச நாயடு, செயலாளர்.

ஆடையில்லா மனிதர் அரை மனிதர்
முழு மனிதராக மூன்று கடைகள்.

ST. RM. கந்தசாமி முதலியார்

அறுவை வணிகம்.

1 தலைமை வணிகம் :
திருநாகேசுவரம்

2 கிளை : கடைத்தெரு,
நாகப்பட்டினம்
தொலைபேசி எண்: 304

3 கிளை : **சிக்கல்**
தொலைபேசி எண்: 206

ஆலை வெளியீடுகளின்

புதுப் பாங்கான
பலவகை
மெருகுத் துணிகளும்

கைத்தறியில்,

பட்டு, செயற்கைப் பட்டு ஆடைகளும்
பொன்னிழைக் கரைபோட்ட வேட்டிகளும்
'தபால்பெட்டி' கைலிகளும்
நயமாய்க் கிடைக்கும்.

ஞானசம்பந்தர் பிறந்த சீர்காழியை

என். வி. மிட்டாய்களை உருவாக்கும்

புது சக்தி மிட்டாய்த் தொழிற்சாலை

New Sakthi Confectionary Factory

இனிப்பான ஊராக்குகிறது.

பால் இன்பசை மிட்டாய்கள் [Chocolate]

பலவகை மணமிட்டாய்களைத்

தனிப்பாங்குடன் தூய்மைத் தெளிவோடு

உருவாக்கி வழங்கும் அந்நிறுவனத்தார்

உளம் இனிக்க வழங்கும் வாழ்த்து:

மறைமலையடிகள் சிலைநாட்டுவிழா சிறப்புறுக!

மறைமலையடிகள் நினைவுமலர் மணம்பரப்புக!

நிறைதமிழ் நாகைத் தமிழ்ச்சங்கம் நீடு வாழ்க!

தொலைபேசி : 354

உ
சிவமயம்.

எண்ணெய் இல்லாத சமையல் இல்லை.

அந்நல்லெண்ணெயை வழங்குவோர்

மா. பெரியதம்பிப் பிள்ளை மகார் நிறுவனம் [& Sons]

நல்லெண்ணெய் ஆக்குவோர்;

புகைப்பட -Photo- சுருட்டு [M.P. Sons]

வீரபத்திரசாமி கோயில் தெரு,

நாகப்பட்டினம்.

தமிழண்ணல் மறைமலையடிகளார்
சிலை நாட்டப்படும் இந்நாளில்
தமிழக மக்களுக்கு
எம் உளமார்ந்த வணக்கம்.

'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
காதலுக்கு உண்டு'
—என்றார் திருவள்ளுவர்

அது

நினைத்தாலே களிப்பையும்
கண்டாலே நா ஊறும் மகிழ்வையும் தருகின்ற

நாகை

பாம்பே மிட்டாய்க் கடைக்கும்

பொருந்தும்

பலவகை அல்வாக்கள், பாகுக்கட்டிகள் [Cakes]
நலவகைக் காரங்கள், காரக்கூதம்பங்கள் [Mixture]

புத்தம் புதியனவாய், நத்தும் சுவையினவாய்
நாற்பதாண்டுகளாய் நல்கிவரும்
நாகை மிட்டாய்க் கடை.

Bombay Sweet Stall

கடைத்தெரு : : நாகப்பட்டினம்.

உரிமையாளர்கள் : பு. இராமு,
பு. விச்ணு.

தொலைபேசி { கடை: 293
இல்லம்: 295

அகப்பொருளும் புறப்பொருளும்
அருந்தமிழில் அமைந்தமை போன்றே

அருண் வாணிக நிலையத்திலும்

உண்டு.

அகத்தினை
அழகுசெய்யும்

murphy radio

Delights the home!



வானொலிப் பெட்டி, எஃகு மடக்கு நாற்காலி, மேசை, மின் விசிறி, தையற்பொறி, காப்பித்தூள் பொறி, சாந்துச் சுண்ணம் [Cement] முதலியவற்றை அளிப்பதும்

புறத்தில் பயன்பட

ஈருருளி [Cycle] மின்பொருள்கள் முதலியவற்றையும், யாவற்றிற்கும் உரிய பாகக் கருவிகளையும் அளிப்பதும்

அருண் வாணிக நிலையம்

ARUN TRADES

புகைவண்டி நிலைய எதிர்ப்புறம்
நேதாசி சாலை : : **நாகப்பட்டினம்.**

குறிப்பு: வானொலிப் பெட்டி, மின்விசிறி முதலியவை தவணைமுறையிலும் வழங்கப்படுகின்றன.

வாணிகம் வளம்பெற வாழ்வு வளம்பெற என். டி. சீட்டு வைப்பிற் சேர்ந்திடுக! வைப்பையே தேர்ந்திடுக!

பணம் தொகுக்கவும் முதலீடு சேர்க்கவும் சிறந்த நிறுவனம்

N. T. Chit Funds And Investment [P.] Ltd.

என். டி. சீட்டு வைப்பு-முதலீட்டு (தனியார்) வரையறை.

பதிவெண் 5674

16, குஞ்சாலி மரக்கலவரையர் தெரு, நாகூர்.

சீட்டு விவரம்

திங்கள் கட்டணச் சீட்டு :

குழு	கட்டணம்	திங்கள்கள்	உறுப்பினர்கள்	சீட்டுத்தொகை
A	1000	25	25	25000
B	400	25	25	10000
C	250	40	40	10000
D	200	25	25	5000
E	150	20	20	3000
F	100	20	20	2000
G	50	20	20	1000
H	25	20	20	500
I	12—50	20	20	250

இரு கிழமைச் (இரு வாரச்) சீட்டு :

A—1	40	25	25	1000
A—2	25	20	20	500
A—3	20	15	15	300

கிழமைச் சீட்டு :

B—1	15	30	30	450
B—2	10	25	25	250

நாள் சீட்டு :

C—1	5	50	50	250
C—2	2	50	50	100

கோட்பாட்டு

இதழ்

நாகைத் தமிழ்ச் சங்கம்

நாகப்பட்டினம்

நிறைதமிழ் வழக்கு

நிறைதமிழே (தனித்தமிழே) எழுத்திலும், பேச்சிலும் நிலவ வேண்டும். அவ்வாறு நிலவ வேண்டப்படும் உளப்பாங்கும் செயல் திட்டமும், நடைமுறைப் படுத்தும் நெறியும், இவ்வாறமைதல் நலம் எனக்குறிக்கும் ஒரு கருத்தேற்றம்.

> *''திராவிட மொழிக் குழுவினுள் தமிழ் மொழி ஒன்றே தன் தூய்மை கெடாது தனித்தியங்க வல்லது''*

—என்று குறித்தார் சவியே இரய்மோன். இது மேலைநாட்டறிஞர் ஒருவரது உணர்வு. 'தனித்தமிழில் முடியுமா; நடைமுறைக்கு உதவுமா; வேண்டப்படும் ஒன்று; குறுகிய மனப்போக்கின் வெளிப்பாடாகாதா' எனக் கேட்கும் நம் நாட்டவர் பலர் ஆங்காங்கே தென்படுவதைக் காண்கிறோம். அவர்கட்கும் காணிக்கையாக்குவது கொண்டே மேலைநாட்டறிஞரது கருத்துரையுடன் இக் கருத்தேற்றத்தைத் தொடங்க வேண்டி நேர்ந்தது.

திருமுறை மூவர் காலத்தில் தனித்தமிழ்க் கருத்து அரும்பியது. அடுத்துக் கருகியது. மறைமலையடிகளார் மலர்த்தினர். நம் காலம் தனித்தமிழ் கமழும் காலத்தின் வேர்ப்பகுதி. வருங்காலம் கமழ்வின் நிறைகாலமாகும்; ஆகவேண்டும். இச் சூழலில் 'தனித்தமிழ்' என்னுங் குறியீடு நாம் ஒதுங்கி நின்று பேசுவதாகப்படுகிறது. பிறமொழிக் கலப்புள்ள தமிழ்நடை தமிழுக்குக் குறை. அது குறைதமிழ். எனவே, 'தனித்தமிழ்' என்பதை 'நிறைதமிழ்' எனக் குறியிட்டு வழங்கலாம்.

நிறைதமிழ் என்பது 'பல்லுடைக்குங் கடுந்தமிழ்' என்றொரு அச்சக் குறிப்பு பரவலாக நிலவுகிறது. அக்கருத்திற்கு உரனேற்றும் நிறைதமிழ் ஆர்வலரும் உளர்.

> *''ஏகினுன் என்பதைப் போயினுன் என்றும், வம்மின் என்பதை வாருங்கள் என்றும் எழுதக் கற்றுக்கொண்டேன். கற்றவர் கல்லாதவர் ஆகியவர்களுக்கும் புரியவேண்டும் என்பதற்காகவே அப்படி எழுதினேன்''*

—என்று மறைமலையடிகளார் குறித்தமை ஆழ்ந்து நோக்கற்பாலது.

> *''தமிழ்வழக் கறியா தமைவில கூறும்*
> *கற்றறி வில்லார் மற்றினிப் பலரே''*

—எனும் அடிகளார் கருத்தையும் அத்தொடர்பிலேயே நினைவிற் கொண்டு இழிவழக்கு, அழிவழக்குகளைக் கையாளக் கூடாது.

நிறை தமிழையே நிலவச்செய்ய அக் கொள்கையில் நெகிழாத நெஞ்சும், இக்கொள்கையிற் பிடிப்பில்லாத நம்மவரை அணைத்துச் செல்வதில் நெகிழ்ந்த நெஞ்சும், பாடறிந்தொழுகும் பண்பும், தவறிழைப்போர்பால் கண்ணோடுதலும், அக்கண்ணோட்டத்திலும் கருமஞ் சிதையாமற் காப்பதும் என இத்தொடக்கத்

தன நிறைதமிழ் வழக்கிற்கு வெற்றி தருவனவாம்.

மொழியறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் இப்பணியில் நமக்குக் கிடைத்துள்ள நற்புதையல். அவர்களைச் செம்மையாகப் பயன்படுத்தத் தவறி வருகிறோம். மேம்பட்ட அறிஞர் சில வேளைகளில் ஒருவழிப்பாட்டையிற் செல்வது இயல்பு. அழலாய் நெருங்கவிடார். நிழலாய்த் தொடர்ந்து, பணிவாய்ப் பழகி, பொதுவிற் கொணர்ந்து பயன்கொள்ள வேண்டியது நம் கடன். பாவாணர் அவர்களது பேரறிவின் முழு உருவாக 'செந்தமிழ் அகர முதலி'யை வெளிக் கொணர்வது நீங்காப் பணியாக வேண்டும். அந்நூல் நமக்கு மொழியூற்றாகும்.

தம் அறிவெல்லைக்குள்ளே தமிழ் அடங்கிவிட்டதாகக் கருதுவதும், எடுத்தெறிந்து பேசுவதும், சுடுசொற்களை வீசுவதும் தமக்குள்ள உண்மையான நிறைதமிழ் உணர்வை நடைமுறைக்குக் கொணர இயலாமல் தாமே நிறுத்திக் கொள்ளும் தடைக்கற்களாகும். "சில கற்றார் கண்ணும் அச்சாணி அன்னதோர் சொல் உண்டு" என்னும் தொடர் உண்மை பொதிந்தது. அடிநிலை மக்கள் பால் தூய தமிழ்ச் சொற்கள் வழங்கப்படுகின்றன. அவற்றைச் செம்மையுருப் படுத்த வேண்டும். பிற மொழி என்று கருதிக்கொண்டுள்ள பல சொற்களை மீண்டும் ஆராய வேண்டும். சான்றாகச் சங்கம் எனுஞ்சொல் கூடுதல்-சங்கமம் எனும் பொருட்டொடர்பில் அன்றி, பேரெண் என்னும் பொருட்டொடர்பில் ஆயப்படவேண்டியது. "ஐயம்பல்லென வரூஉ மிறுதி" எனும் தொல்காப்பிய நூற்பாவும், பரிபாடலும், முந்தையோர் பெருவழக்கும் சங்கம் தமிழ்ச் சொல் என்பதற்கு உரன் சேர்க்கும். 'கழகம்' எனுஞ் சொல் 'சூதாடு களம்' எனும் பொருளில் வழங்கிய சங்க காலத்தினைக் குறிக்கக் (சங்க காலம் என்பதைக் கழகக் காலம் எனக்குறிப்பது) கழகம் எனும் சொல்லை வழங்குவது இயைபுடையதாகாது. இதுபோன்ற இயைபுகளைக் கவனத்திற்கொள்ளல் நலம்பயக்கும்.

'தமிழ் மொழி வழக்கென்பது நிறை தமிழ் வழக்கே' என்று ஆகியே, தீர வேண்டும். இப்பணியை ஒய்யென ஒரே மூச்சில் அல்லாமல் பையப் பைய ஆனால், நொய்தாகாமல் ஆற்றவேண்டும். துடிப்பிருப்பதில் தவறில்லை; ஆனால் படிப்படியாக, அதே நேரத்தில் நெடிய கால நிலைப்பை அறிந்து செய்தே தீர வேண்டும். இடைக்காலங்களில் ஐயத்திற்குரியனவும், சில இன்றியமையாதனவுமாகிய பிறமொழிச் சொற்களை இடைக்காலக் கருவியாகப் பயன் படுத்துவதே விட்டுக்கொடுத்து அணைக்கும் பாங்காய் அமையும். எடுத்துக் கொண்டுள்ள நன்னோக்கம் நிறைவேற நெகிழ்ந்தும், நெளிந்தும், புகுந்தும், புனைந்தும் பணியாற்றலே அறிவுடைமையாகும்.

இம்மலரில் நிறைதமிழ்க் கொள்கை பாடறிந்தொழுகும் பண்போடு கையாளப்பட்டுள்ளதைக் கூர்ந்து நோக்குவோர் உணர்வர்.

> "உயர்ந்த பல கருத்துக்களையும், புதுப் புதுப் பண்டங்களையும் வழங்குதற்கேற்ற தமிழ்ச் சொற்கள் ஏராளமாய் இருப்பவும், அவையில்லையெனக் கரைவாருரை கரவுரையாகல் வேண்டும்; அல்லது பேதைமையேயாகல் வேண்டும்."

(வேளாளர் நாகரிகம் பக்கம்—121)

என்னும் மறைமலையடிகளாரது கருத்திற் கேற்ப இக்கோட்பாட்டிதழ்ப் பகுதி பல் வகைக் கருத்துக்களை நிறைதமிழில் வழங்குகிறது. இயன்றவரையெல்லாம் முயன்றும், முனைந்தும் நிறைதமிழ் வழக்கைப் பரப்புவதே தமிழராயினர் பல வகையினர்க்கும் நீங்காக் கடமையாகும்.

—பதிப்பாசிரியர்.

கோட்பாட்டியல் உள்ளுறை

இயலும் எழுதியோரும்

இலக்கியவியல் — நாவலர் **இரா. நெடுஞ்செழியனார்,** எம். ஏ., எம். எல். ஏ.

" டாக்டர் **சி. இலக்குவனார்,** எம். ஓ. எல்., பி எச்டி.

மொழியியல் — புலவர் **ஞா. தேவநேயப் பாவாணர்,** எம். ஏ.

மொழியியல் — கவிஞர் **கோவை. இளஞ்சேரனார்**

இலக்கணவியல் — புலவர் **க. வெள்ளைவாரணனார்**

இசையியல் — பண்ணாராய்ச்சி வித்தகர் **ப. சுந்தரேசனார்**

கூத்தியல் — சிலப்பதிகார உரையாசிரியர் **அடியார்க்குநல்லார்**

பொருளியல் — டாக்டர் **பா. நடராசனார்,** எம். ஏ., டி. லிட்.

தொழிலியல் — திரு **நா. மகாலிங்கம் அவர்கள்,** பி. எஃசி., எம். ஐ. ஈ.

வாணிகவியல் — திரு **கு. ஆளுடைய பிள்ளை அவர்கள்,** பி. காம். (மேனிலை), எம். காம்.

மதவியல் — தவத்திரு **குன்றக்குடி அடிகளார்.**

நூலகவியல்	திரு இரா. முத்துக்குமரசாமி அவர்கள், எம். ஏ., பி. லிப்.
மருந்தியல்	வியத்தகை கோ. து. [G. D.] நாயடு அவர்கள் எம். ஐ. எஃசி. ஈ.
,,	மருத்துவர் நா. ஆ. நாராயணசாமி அவர்கள், ஆர். ஐ. எம். பி.
கலையியல்	முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதனூர்
வரலாற்றியல்	புலவர் க. த. திருநாவுக்கரசு அவர்கள், எம். ஏ. (தமிழ்) எம். ஏ. (வரலாறு), எம். லிட்.
நிலவியல்	பிரிகேடியர் இராம் சிங்கு அவர்கள்
வானவியல்	திரு கோ. அர. [G. R.] தாமோதரனூர், பி. எஃசி., எம். ஐ. ஈ. ஈ., எம். ஐ. ஈ., எம். எல். சி.
பொறியியல்	திரு அ. அண்ணுமலை அவர்கள், பி. ஈ. (மேனிலை)
மின்னியல்	திரு ச. பு. பாலசகந்நாதனூர், பி. ஈ., ஏ. எம். ஐ. ஈ., ஏ. எம். ஐ. சி. ஈ.
புதைபொருளியல்	புலவர் சி. கோவிந்தராசனூர்,
சட்டவியல்	திரு இரா. தம்பையா அவர்கள், பி. ஏ., பி. எல்.
பதிவியல்	திரு ஓ. அழகுப் பிள்ளை அவர்கள், பி. ஏ.
பணியியல்	திரு நா. அமிழ்தலிங்கம் அவர்கள், பி. காம்., டி. பி. பி. ஏ., ஏ. டபிள்யூ. எஃசி. சி.

தமிழக அரசின் கல்வித்துறை அமைச்சர்
மாண்புமிகு இரா. நெடுஞ்செழியனார்
எம். ஏ., எம். எல். ஏ.
எழுதிய

தமிழும் இலக்கியமும்

''மனிதன் தன் உள்ளத்தில் உருவாக்கி வெளியிடும் கருத்துக்களை உலகோர் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். ஒருபிரிவை அறிவியல் என்றும், மற்றொரு பிரிவைக் கலையியல் என்றும் கூறுகிறார்கள். அறிவால் அளக்கப்படுவதை அறிவியல் என்றும், உணர்வால் அளக்கப்படுவதைக் கலையியல் என்றும் பிரிக்கிறார்கள்.

இந்த ஞாயிற்று மண்டிலம் எப்படி இருக்கிறது என்று கேட்டால், 'ஞாயிறு ஒரு நெருப்புப் பிழம்பாய்த் தன்னைத் தானே சுற்றிக் கொள்ளுகிறது; உலகத்திலிருந்து ஒன்பது கோடியே இருபது நூறாயிரம் கல் தொலைவில் உள்ளது; உலகத்தைவிடப் பதின்மூன்று நூறாயிரம் மடங்கு பெரியது; உலகம் ஞாயிற்றை 365 நாள்களில் ஒருமுறை சுற்றி வருகிறது; உலகம் 24 ஆயிரம் கல் சுற்றளவைக் கொண்டது; எண்ணாயிரம் கல் குறுக்களவைக் கொண்டது' என்று அறிவியலறிஞன் கூறுவான். கலையியற் புலவனைக் கேட்டால், 'செங்கதிரோன் தன் செவ்விய கதிர்களால் இருளை விரட்டிக் கொண்டு, காலையில் கீழ்கடலில் தோன்றி, பின்னர் வான வெளியில் உலாவி, மாலையில் மேலைக்கடலில் மூழ்கி, மீண்டும் நிலவாக உருவெடுத்து வான வெளியில் வந்து மிதந்தான்' என்று கூறுவான். அறிவியலறிஞன் அறிவுக்குப் பட்டதைக் கூறுவான். கலையியற் புலவன் உணர்வுக்குப் பட்டதைக் கூறுவான்.

அறிவியல் அறிஞன் அறிந்து கூறும் உண்மை எல்லா நாட்டவராலும் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக

இருக்கும். இரண்டும் இரண்டும் நான்கு என்றால் அந்த முடிவை அமெரிக்காவும் ஏற்றுக்கொள்கிறது; சோவியத்தும் ஏற்றுக் கொள்கிறது; சப்பானும் ஏற்றுக் கொள்கிறது. மேலும் இந்த உண்மை எல்லாக் காலத்திலும் ஏற்றுக்கொள்ளப் படும் ஒன்றாகும். ஆனால், கலையுணர்வு நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், ஊருக்கு ஊர், காலத்திற்குக் காலம், ஆளுக்கு ஆள், ஒரே ஆளிடத்தில் ஆண்டுக்கு ஆண்டு, மணிக்கு மணி, மணித்துளிக்கு மணித்துளி மாறிக் காணப்படத் தக்கதாகும். குளிர்ச்சியைப் பற்றிக் குளிர்நாட்டிலுள்ள புலவன் வெறுத்துப் பாடுவான். வெப்பம் மிகுந்த நாட்டிலுள்ள புலவன் வரவேற்றுப் பாடுவான். குளிர்ச்சியை முதியோர் வெறுப்பர்; இளைஞர் விரும்புவர். எனவே, கலை என்பது அவரவர் உணர்ச்சிக்கும் உள்ளக் கிடக்கைக்கும் கற்பனைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப உருவெடுக்கும் ஒன்றாகும். இதனை எவரும் அறிந்துகொள்ளலாம்.

ஓவியக்கலை, சிற்பக்கலை, நாட்டியக் கலை, உடற்பயிற்சிக்கலை, முதலிய கலைகள் எல்லாவற்றையும்விட மிகச் சிறந்த கலையாக உலகோர் போற்றிப் பாராட்டி வளர்த்துவரும் கலை இலக்கியக் கலையாகும். உலகம் இலக்கியக் கலைக்குக் கொடுத்த பெருமையையும் புகழையும் வேறெந்தக் கலைக்கும் கொடுக்கவில்லை. இலக்கியங்களை வளர்த்த பெரும் புலவர்களான தொல்காப்பியர், திருவள்ளுவர், ஔவையார், இளங்கோ, கம்பர், சேக்சுபியர், மில்தன், வேட்சுவொர்த்து கோல்டுசுமித்து, வால்தேர், விக்தர் கியூகோ, அலெக்சாண்டர் டூமாசு, ஓமர், தாந்தே, தால்சுதாய், வால்மீகி, காளிதாசன் முதலியோரை உலகம் நினைவில் பதியவைத்திருப்பதைப் போல மற்றைக் கலை வளர்த்தவர்களை நினைவில் கொள்ளவில்லை. ஓவியக் கலைஞன், நீளம்–அகலம் தடிப்பு ஆகிய மூன்று அளவுகளை வைத்துக்கொண்டு உருவங்களை மட்டும் தன் சிற்பத்தில் காட்டுகின்றான். ஆனால், இலக்கியப் புலவன் உருவங்களை மட்டுமன்றி, உருவங்களின் உள்ளத்திலே மறைந்து கிடக்கும் எண்ணங்களையும் நம் மனக் கண் முன்னே கொண்டுவந்து காட்டுகிறான். ஓவியன் மல்லிகை மலரை மட்டுமே காட்டுவான். இலக்கியப் புலவன் மலரோடு மலரின் மணத்தையும் உணர்த்துவான். ஓவியன், காதலன் –காதலி ஆகியோரின் உருவத் தோற்றங்களை மட்டுமே காட்டுவான். ஆனால், இலக்கியப் புலவன், அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதையும், பேச மறந்தது என்ன என்பதையும், காதலனுக்குக் கூறாமல் காதலி மறைத்தது என்ன என்பதையும், காதலன் விட்ட பெருமூச்சுக்கு என்ன பொருள் என்பதையும் நமக்கு உணர்த்துவான்.

கலை என்பது மனிதனின் உள்ளக் கிடக்கையை வெளிப் படுத்துவதற்குப் பயன்படும் ஒரு பெரும் கருவியாகும். அந்தக் கலைக் கருவிகளில் மிகச் சிறந்த கருவியாகக் காட்சியளிப்பது இலக்கியக் கருவியாகும்.

தமிழ் இலக்கியச் சிறப்பு

இலக்கியங்களைப் பெற்றிருக்கின்ற மொழிகள் பலவற்றுள்ளும் தலைசிறந்த மொழியாய் விளங்கும் சிலவற்றில் குறிக்கத்தக்க ஒன்றாக விளங்குவது தமிழ் மொழியாகும். இன்றைய உலகில் புகழோடு விளங்கும் மொழிகள் பலவும் இலக்கியங்களைப் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கிய வளத்தோடு கொழித்த மொழியாகும். தமிழ் இலக்கியங்கள் தொன்மை வாய்ந்தவை; தூய்மையானவை; இனிமை பயப்பவை; எழில் மிக்கவை; உள்ளங் கவருபவை; எளிமை வாய்ந்தவை; இலக்கணக் கட்டுக்கோப்புடையவை; சொற்செறிவு மிக்கவை; பொருளாழம் கொண்டவை; பல்வேறு

அணிகள் மிக்கவை; அகம் என்றும் புறம் என்றும் உள்ளுறை உவமம் என்றும் சுட்டிக் காட்டப்படும் பல்வேறு தனித் தன்மைகள் கொண்டவை.

இலக்கியம், காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணுடியாக இருப்பது மட்டுமன்றி மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தப் பெரிதும் பயன்படுகிறது. அது நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்க்க உறுதுணையாக இருக்கிறது. உள்ளத்திற்கு இன்பம் ஊட்டிப் பொழுது போக்குவதற்குப் பெரிதும் பயன்படுகிறது. சென்ற காலத்தைச் சுட்டிக்காட்டி, வருங்காலத்தைத் தீட்டிக் காட்ட இலக்கியம் சிறந்ததொரு கருவியாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட இலக்கியத்தின் பயன்களையெல்லாம் தமிழ் இலக்கியங்கள் வாரி வாரி வழங்குகின்றன.

தூய தமிழ் இலக்கியம்

தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும், எல்லா இடங்களிலும் தாய்மொழியான தமிழின் மணங் கமழவேண்டும் என்று மக்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கும் காலம் இது. இந்தக் காலத்தில் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன. தமிழ்ப் பெருங்குடி மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்து, அவர்களின் ஆவலை நிறைவேற்றுகின்ற வழியில் பல்வேறு வகையான கலையியற் சொற்களையும் தூய தமிழிற் கண்டு பிடித்துத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்தி, அவற்றை வழக்காற்றில் கொண்டு வர வேண்டிய பெரும் பொறுப்பு உள்ளது.

தமிழைத் தமிழாக எழுதுவதா? பிற மொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதா என்று கருத்து வேறுபாடு எழுந்திருப்பது வியப்புக்குரியதாகும். 'தமிழ் தமிழாக இருக்கட்டும்' என்று கூறுபவர்களைப் பார்த்து மற்றவர்கள் 'தமிழ்வெறி பிடித்தவர்கள்' என்று குறை கூறுகிறுர்கள். எதற்குப் பெயர் வெறி? தமிழைத் தமிழாக இருக்கவிடமாட்டேன், பிற சொற்களை வேண்டுமென்றே கலந்தே தீருவேன் என்று வம்பிடுவது வெறியா? தமிழ் தமிழாகவே இருக்கட்டும் என்று விரும்புவது வெறியா? அரிசி அரிசியாக இருக்கட்டும் என்று கூறுவது வெறியா? அரிசியில் கல்லையும் கட்டியையும் உளுந்தையும் பயற்றையும் கலந்துதான் தீருவேன் என்று கூறுவது வெறியா? அரிசியிலிருந்து உளுந்தையும், பயற்றையும், கல்லையும், கட்டியையும் கொழித்து எடுத்து, அரிசியை அரிசியாக ஆக்குவீர் என்பதா தவறு? தமிழ் தமிழாக இருக்க வேண்டும் என்று கூறுவது பற்றின் அறிகுறியே தவிர, எப்படி வெறியாகும்? ஆங்கிலத்திலோ வடமொழியிலோ இந்தியிலோ 'நான் தமிழ்ச் சொற்களைச் சேர்த்துப் பேசியே தீருவேன்' என்று கூறினுல் அது வேண்டுமானுல் வெறியாகும். அது போலத் தமிழிற் பிறமொழிச் சொற்களைச் சேர்த்தே தீர வேண்டும் என்பது வேண்டுமானுல் வெறியாகுமேயன்றித் தமிழ் தமிழாக இருக்க வேண்டும் என்பது வெறியாகாது. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணும்'' என்று தாய்மொழிப் பற்ருேடு பாரதியார் பாடுவதை எவரேனும் வெறி என்று கூற முடியுமா? பாரதியார் வேண்டாத மொழி வெறி பிடித்தவர் என்று எவரேனும் சொல்லுவரோ?

தமிழைத் தமிழாக எழுத முடியாதவர்கள், அப்படி எழுத முயல வேண்டுமேயொழிய, எழுதத் தெரிந்தவர்கள் தங்கள் நிலைக்கும் இறங்கிவந்து, கலப்பு மொழித் தமிழை எழுத வேண்டும் என்று வற்புறுத்துவது அறிவுக் குறையுடைய செயலாகும். குதிரை, யானை உயரத்திற்கு வளர முயற்சி செய்ய வேண்டுமேயல்லாமல், யானையைத் தன் உயரம்

அளவிற்குப் படுக்குமாறு குதிரை வற்புறுத்தக் கூடாது.

'கடைத்தெருவில் நடமாடும் எளிய மக்களும் புரிந்து கொள்ளுகிற அளவில் தமிழ் இலக்கியம் எளிமையாக இருக்க வேண்டுமேயன்றிப் பண்டை இலக்கியங்களைப் போன்று கடுமையானவையாக இருக்கக் கூடாது' என்று ஒரு சிலர் வற்புறுத்தி வருகிறார்கள். எளிய மக்களும் புரிந்து கொள்ளுகிற வகையில் இலக்கியங்கள் தோன்றுவது தவறன்று; தோன்றக் கூடாது என்று கூறுபவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால், சொற்செறிவும் பொருளாழமும் நய மேம்பாடும் கொண்ட சிறந்த இலக்கியங்கள் தோன்றவே கூடாது என்று கூறுவது அறியாமையின்பாற்பட்டதாகும். இரண்டாவது வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற பாட நூல்கள் இருக்கத்தான் வேண்டும். அது போன்று பத்தாவது வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களுக்கேற்ற பாட நூல்கள் இருக்கத்தான் வேண்டும். 'இரண்டாவது வகுப்புப் பாட நூல்களைப் போன்றேதான் எல்லாப் பாட நூல்களும் இருக்க வேண்டும்' என்று கூறினால் அஃது எவ்வளவு அறியாமை உடையதோ அவ்வளவு அறியாமை யுடையது, இலக்கியங்களெல்லாம் எளிய மக்கள் புரிந்துகொள்ளுகிற வகையிலேயே இருக்கவேண்டும் என்று கூறுவதும்.

காலம் முடிவெடுக்கும்

இலக்கியங்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நாம் வரையறுக்க முடியாது; வரையறுக்கவும் கூடாது. இலக்கியத்தைப் படைப்போர் எப்படி வேண்டுமானாலும் படைக்கட்டும். ஆனால், அவற்றில் எவை நல்லவை, எவை நல்லவை அல்லாதவை என்பதை மக்கள் மன்றமும் காலமும் தீர்ப்பளித்துக் கொள்ளும். காலந்தான் சிறந்த இலக்கியங்களையும், அழியாப் புகழ் படைத்த இலக்கியங்களையும் தேர்ந்தெடுத்து, வருங்கால மக்கள் கையிலே வைக்கும். காடுகளில் பல்வேறு வகையான மரஞ்செடி கொடிகள் வளர்ந்தாலும் அவற்றில் வேண்டப் படுவனவற்றையும், நல்லனவாக இருப்பனவற்றையும் எவ்வாறு மக்கள் வெட்டி எடுத்துக்கொண்டு, பிறவற்றைக் கழித்து ஒதுக்கி விடுகிறார்களோ, அது போன்று மக்கள் தேவையான நல்ல இலக்கியங்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு மற்றவற்றைக் கால வெள்ளத்தில் அழிய விட்டுவிடுவார்கள்.

தமிழிற் பயன்படும் நூல்கள் எழுதும் அறிஞர் எல்லாரும் அயன்மொழிச் சொற்களைத் தம்மால் இயன்றமட்டும் விலக்கித் தூய தமிழிலேயே எழுதப் பழகுவராயின், அதனால் நம் செந்தமிழ் மொழி வளம்மிகப் பல்கித் துலங்குவதோடு, அதனைத் துலக்கும் அவர்க்கும் அழியாப் புகழும் அறமும் உண்டாமென்க.

— மறைமலையடிகள்.

(பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை முகவுரை)

உசுமானியா பல்கலைக்கழகத்
தமிழ்த் துறைத் தலைவர்
டாக்டர் சி. இலக்குவனார்
எம். ஓ. எல்., பி. எச்டி.
எழுதிய

பண்டை இலக்கியம்

"பண்டை இலக்கியம்" என்பது பண்டைக் காலத்தில் தோன்றிய இலக்கியம் ஆகும். இதன் கால எல்லை தி. பி. இரண்டாம் நூற்றுண்டுக்கு (கி பி. 200க்கு) முற்பட்டதும் தொல்காப்பியர் காலமாம். தி. மு. ஏழாம் நூற்றுண்டுக்குப் (கி. மு. 700க்கு) பிற்பட்டதுமாகும். இஞ்ஞான்று கிடைத்துள்ள பண்டை இலக்கியத் தொகுப்பினுள் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் அடங்கும். திருக்குறளும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இக்காலத்தில் தோன்றியனவே. எட்டுத்தொகையுள் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களுள் சில தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டனவாகவும் இருக்கக் கூடும். தொல்காப்பியத்தையும், பண்டை இலக்கியப் பாடல்களையும் ஆராயுங்கால் மொழி வகையானும் இலக்கியப் போக்கானும் மக்கள் வாழ்க்கை முறையானும், கூறப்படும் அரசர்கள் பெயர்களானும் பண்டை இலக்கியத்தின் தொன்மை தி. பி. இரண்டாம் நூற்றுண்டுக்கு முற்பட்டது எனத் தெள்ளிதின் அறியலாம். இலக்கியம் என்பது தூய தமிழ்ச் சொல்லே. குறிக்கோளை இயம்புவது என்னும் பொருளை உடையதாகும் அச்சொல். வாழ்வின் குறிக்கோளை விளக்கி மக்களை இன்புற வாழச் செய்வதே இலக்கியத்தின் பணியாகும்.

மொழியும் இலக்கியமும் ஒன்றோ டொன்று தொடர்புடையனவாகும். மொழியின் செம்மையால் இலக்கியம் தோன்றுவதும், இலக்கியத்தின் செழிப்பால் மொழி வளம் பெறுவதும் இயல்பாகும்.

அவரவர் மொழியை நன்கு கற்று, அவரவர் மொழியில் உள்ள இலக்கியங்களைப் பயின்று மொழியையும் வாழ்வையும் செம்மைப்படுத்த வேண்டுமென்று நம் முன்னோர் கருதினர். இதனைத் தொல்காப்பியம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என முப்பகுதிகளை யுடையது. எழுத்தும் சொல்லும் மொழியைப் பற்றியன. பொருள் இலக்கியத்தையும் வாழ்வையும் பற்றியது. மூன்றையும் ஒரு சேர யாத்ததன் நோக்கமே மொழியும் வாழ்வும் செம்மை பெறவேண்டும் என்பதையும், செப்பமுற்ற மொழியில் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் தோன்ற வேண்டுமென்பதையும் நம்மனோர்க்கு அறிவுறுத்தவேயாகும். இம் மரபினை யொட்டித் தோன்றியனவே பண்டை இலக்கியங்கள். பண்டை இலக்கியங்கள் காலத்தால் தொன்மை வாய்ந்தனவாய் இருப்பினும், கருத்தால் இக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் மிகவும் ஏற்றனவாய் உள்ளன.

மக்கள் வாழ்வையும் இயற்கையையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்கள் தோன்றவேண்டும் என்பதும், அங்ஙனம் தோன்றும் இலக்கியங்கள் மதச் சார்பற்ற பொதுத்தன்மை பொருந்தியும் உலகம் முழுவதும் ஒரே குடும்பம் எனும் உயரிய கொள்கையைத் தழுவியும் இருத்தல் வேண்டும் என்பதும் சான்றோர் கருத்து. பண்டை இலக்கியங்கள் இவ் விலக்கணத்திற்கு ஏற்பவே அமைந்துள்ளன. தொல்காப்பியர் காட்டும் நெறியும் இஃதேயாகும்.

"முதல்கரு, உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

—என்பர் தொல்காப்பியர். 'முதல்' என்பது நிலன், பொழுது என்ற இரண்டையும் காட்டும். 'கரு' என்பது தெய்வம், மக்கள், உணு, மா, மரம், புள், பறை, செய்தி முதலியவற்றைக் குறிக்கும். 'உரி' என்பது அக ஒழுக்கமாகும். ஆகவே, இம் மூன்றினும் மக்கள் வாழ்க்கையும் இயற்கையும் அடங்கி விடுகின்றன.

பண்டை இலக்கியப் பாடல்களுள் இவைகளே நுவலப்படுகின்றன. அதனால் தான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் "பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ, எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே" என்று ஓங்கி வினவி முழங்கினார். இயற்கையைத் தழுவி மக்கள் வாழ்க்கையை ஓவியப்படுத்தி உயர்ந்த நெறிகளை உலகுக்கு அறிவிக்கும் இவ் விலக்கியங்கள் உருவாகிய காலத்தில் வேறு எம்மொழியினும் இவையனைய இலக்கியங்கள் தோன்றிற்றில என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் தவிர்த்த ஏனைய இந்திய மொழிகளுள் இலக்கியத் தோற்றக்காலமே தி. பி. எட்டாம் நூற்றுண்டுக்குப் பின்னர்தான். தமிழோடு உறழ்தரும் ஆரியத்திலோ பழைய இலக்கியங்கள் என்பன கதைகள் தழுவிய இலக்கணமில் கற்பனைகளைக் கொண்டவையாகும். பண்டை இலக்கியக்காலமே தமிழிலக்கியத்தின் பொற்காலம் மட்டுமன்று; உலக இலக்கியத்தின் பொற்காலமும் ஆகும்.

நாடு, மொழி, இனம், மதம் முதலியவற்றைக் கடந்த இயல்பில் பண்டை இலக்கியங்கள் மேலோங்கி நிற்கின்றன.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" எனும் கணியன் பூங்குன்றனாரின் மொழியும், ''தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான் உண்டாலம்ம உலகம்'' எனும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் கூற்றும்,

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடில் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல்மருங் கறிஞர்"

எனும் கபிலர் கழற்றுரையும்

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

எனும் நக்கீரர் நய மொழியும் எந்நாட்டுக்கு, எம்மக்களுக்கு, எக்காலத்திற்குப் பொருந்தா? காலந்தோறும் நிலைத்து நிற்கும் கவினுர் பண்டைத் தமிழ் பாடித் தமிழின் புகழ் வளர்ப்போம். உலக உறவு கொண்டு உயர்ந்தோங்கி வாழ்வோம்.

திருவள்ளுவர் பிறப்பதற்கு முன் ஒரு நானூறு ஆண்டும், அவர் பிறந்தபின் ஒரு நூறு ஆண்டும் சேர்ந்து முடிந்த ஓர் ஐந்நூறுண்டும் தமிழ்மொழி மறுவற்ற மதிபோற் கலை நிரம்பி விளங்கிய காலமாகும். இக்காலத்திலே சிறந்த புலவர் பலர் தோன்றிப் பலவகையான அரிய பெரிய செந்தமிழ் நூல்கள் இயற்றினர்.

மறைமலையடிகள்.
(முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை-பக்கம் 17)

மொழியியல்

மொழியியற் பேரறிஞர்

புலவர் ஞா. தேவநேயப் பாவாணர், எம்.ஏ.

எழுதிய

சிலை என்னுஞ் சொல் வரலாறு

உருவம், சிலை, படிமை என்னும் ஒரு பொருள் முச்சொற்களுள் முதலதும் ஈற்றதும் ஐயுறவற்ற தூய தென்சொற்கள்.

உருவம்

உரு என்னும் வடிவும் உருவத்தைக் குறிக்கும்.

உருக்கல் = கோயில் கட்டியவருடைய கற்சிலை. இது கட்டிடக் கலை வழக்கு.

உருவம்=சிலை (பிரதிமை).

உருவாரம் = சிலை (பிரதிமை). இது உலக வழக்கு

உருவம் என்பது ரூப என்னும் வடசொல்லின் திரிபென்பர். இது ஏமாற்று.

உருத்தல்=தோன்றுதல்.

உரு=தோற்றம், வடிவம் வடிவுடைப் பொருள், படிமை.

உரு—உருவு—உருபு=வேற்றுமை வடிவம்; அதைக் குறிக்கும் எழுத்து அல்லது அசை அல்லது சொல்.

உருவம் என்ற தென்சொல்லே வடமொழியில் ரூப ,எனத் திரிந்துள்ளது.

படிமை

படி = ஒப்பு, வகை, உருவம் (சீவக 1156). அப்படி=அதுபோல், அவ் வகை. ஒருபடியாய் (வகையாய்) வருகிறது. ஒரு வடியாய் என்பது நெல்லை வழக்கு.

படியோலை = மூல மொத்த ஓலை.

படி=ப்ரதி (வ). இதையும் ப்ரதி>படி எனத் தலைகீழாய்க் காட்டி ஏமாற்றுவர் வடவர்.

படி — படிமை — ப்ரதிமா (வ) — பதுமை (தற்பவம்).

படிமை — படிமம்=நோன்புக் கோலம், தவ வடிவம்.

(படி—படிவு—படிவம்; படிவு— வடிவு; படிவம்—வடிவம்.)

சிலை

சிலை என்னும் சொல் வடமொழியில் கல் அல்லது பாறை என்றே பொருள் படும். Silex என்னும் இலத்தீன் சொல்லும், அதனின்று திரிந்த Silica என்னும் ஆங்கிலச் சொல்லும் வன்கல்லை [Second Stone] யன்றி உருவச் சிலையைக் குறியா. நாம்தான் அதைக் கருவியாகுபெயராய் உருவம் என்னும் பொருளில் வழங்குகின்றோம்.

சிலா சாசனம் = கல்லில் எழுதப்பட்ட கட்டளை, கற்பட்டயம். விக்கிரகம், மூர்த்தம் என்பனவே உருவத்தைக் குறிக்கும் வட சொற்கள். மூர்த்தம் உடையவன் மூர்த்தி. ப்ரதிமா என்பது தென்சொற்றிரிபு.

நாம் கற்சிலை என்பது போல் வடவர் சிலாசிலா என்ன முடியாது இருப்புச் சிலை, வெள்ளிச்சிலை, செப்புச்சிலை, பொற்சிலை, வெண்கலச்சிலை என்று உருவப் பொருளில்தான் வழங்குகின்றோம். கற்பொருளில் என்றும் வழங்குவதில்லை. தெய்வ உருவம் தெய்வச்சிலை எனப்படும்.

வடமொழியில் கல் என்னும் பொருட்கும் வேர் அல்லது முதனிலை இல்லை. மானியர் வில்லியம்சு தம் அகரமுதலியில், ஒருகால் 'சி' மூலமாயிருக்கலாம் என்பர். 'சி' என்பதற்கு நல்கு, பொந்திகைப் (திருப்திப்)படுத்து, கூராக்கு என்னும் பொருள்கள் தாம் உண்டு. அவை பொருந்தா. தமிழிலும் திட்டமாகவோ, தேற்றமாகவோ மூலங்காட்டுதற்கில்லை சிலை என்னுஞ் சொற்குச் சில் என்பது தான் மூலமாயிருத்தல் வேண்டும்.

சில் = துண்டு, வட்டம், வட்டப்பொருள்.

சில்லெனல் = குளிர்தல், ஒலித்தல்.

சில்-சிலை = வளைந்த வில், ஒலிக்கும் எதிரொலி.

சில் — சிலம்பு = ஒலிக்கும் கழல் (பரல் இடப்பட்ட காலணி), எதிரொலியிடும் மலை, ஒலிக்கும் சிலம்பக் கழி. (சிலம்பு—சிலம்பம்)

சிலைத்தல் = ஒலித்தல், முழங்குதல், ஆரவாரித்தல்—'மலைபடுகடாம்' இக் கருத்தது. பாடும்போது எதிரொலித் தலைச் சிலையோடுதல் என்பர் நெல்லை நாட்டார்.

சில் என்பது வட்டம் என்னும் கருத்தில் சுல் என்பதன் திரிபாகும்.

சுலவுதல் = வளைதல். துண்டு என்னும் கருத்துத்தான் சில் என்பதைச் சிலையோடு இணைக்க ஓரளவு உதவும்.

சில் — சிலுக்கு = வெட்டின துண்டு; சிலுக்கு - சிதுக்கு—செதுக்கு. (ல—த போலி) ஒப்பு நோக்கு: சலங்கை — சதங்கை; கலம்பம் — கதம்பம்; மெல்—மெது.

சில் - சிலை = வெட்டின அல்லது செதுக்கின உருவம். ஆதலால், கல் என்னும் பொருள் தமிழில் இல்லை.

இனி, சிலை என்பது சிலம்பு என்பது போல் மலை என்றும் தமிழில் பொருள் கொண்டிருப்பதால், மலை என்னும் பொருளினின்றே கல் (மலைப் பிஞ்சு) என்னும் முதலாகுபெயர்ப் பொருளும் தென்மொழியிலும், வடமொழியிலும் தோன்றிற்று என்று கொள்ளவும் இடமுண்டு.

சிலை = மலை—" வணங்காச் சிலை அளித்த தோளான்" (பு.வெ. 2:12)

சிலை = கல் (பிங்கலந்தை)

ஆகவே, சிலை என்னும் உருவப் பொருட் சொற்குத் தமிழ் மூலம் சற்று வலிந்து கொள்வதாகவே இருப்பினும்,

பின்வரும் ஏதுக்களால் அதைத் தென் சொல் என்று கொள்ளவும் இடமுண்டு.

1 வடமொழியில் சிலை என்னும் சொற்கு மூலமில்லை.

2 அம்மொழியில் அச்சொற்குக் கற் பொருளேயன்றி உருவப் பொரு ளில்லை. தமிழில் இரண்டுமுண்டு.

3 ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்பே தமிழகத்தில் உருவக் கலை இருந்தது.

4 வடமொழியில் குறைந்த பக்கம் ஐந்திலிரு பகுதி தென்சொல். (என் வடமொழி வரலாறு என்னும் நூலைப் பார்க்க.)

5. உருவம், படிமை என்னும் தென் சொற்களும் வடசொல்லாகக் காட்டப்படுகின்றன. அவை போன்றே சிலை என்பதும்.

6 வேத ஆரியர்க்கு வேள்வி வழி பாடேயன்றி உருவ வணக்கமில்லை. தென்னாடு வந்தபின்னரே தமிழரிட மிருந்து மேற்கொண்டனர்.

7 சிலா என்னும் வடசொல்லில் இரு மொழிப் பொதுவெழுத்தேயன்றி வடமொழிச் சிறப்பெழுத்தில்லை.

8 தமிழ் ஐகாரவீறு வடமொழியில் ஆகார ஈறாய்த் திரிவது இயல்பே. எடுத்துக்காட்டு: மாலை — மாலா; வடை வடா.

9 சிலா என்னுஞ் சொல் இருக்கு வேதத்திற்குப் பிற்பட்ட வடநூல்களி லேயே ஆளப்பட்டுள்ளது.

10 சிலம்பு, சிலை என்னும் இரு (மலைப் பொருட்) சொற்களும், தமிழில் சில் என்னும் ஒரே மூலத்தையும், ஒலித் தல் என்னும் ஒரே வேர்ப்பொருட் கரணியத்தையும் கொண்டுள்ளன.

11 தமிழ் மேலை ஆரியத்திற்கும் அடிப் படைச் சொற்களை உதவிய பெருவள மொழி.

குவிந்து நீண்டிருக்குங் கட்டிடம் கோபுரம் ஆதலானும், இது தமிழ்நாட்டுத் திருக்கோயில் களிலன்றிப் பழைய வடநாட்டுக் கோயில்களிற் காணப்படாமையானும் கோபுரம் என்னுஞ் சொல் வடமொழிக் குரியதாகாது. தமிழ் மொழிக்கே உரித்தாவதாமென்க. பதம் நிலத்தே பதிவதென் னும் பொருளிற் காலடிக்குப் பெயராய் வந்த தமிழ்ச்சொல்.

மறைமலையடிகள்.
(சோமசுந்தர நாயகர் வரலாறு-பக்கம் 18)

குறிப்பு:— ஆக்கப்படும் வடிவத்தைக் குறிக்க உள்ள உருவம், படிமை, பாவை, சிலை என்னுஞ் சொற்களில் 'சிலை' என்னுஞ் சொல்லையே கொண்டு 'மறைமலையடிகளார் சிலை' எனக் குறித்தனம். உருவம் என்னுஞ் சொல் பொது நிலைப் பொருளது; படிமை தவக்கோலத்தையும் தெய்வக் கோலத்தையும் குறிப்பது; பாவை பெண்பாற் குறிப்புக் கொண்டது. ஆகவே, இவற்றை விடுத்தனம். சிலை தமிழ்ச்சொல் எனற்கு ஏதுக்கள் உள்ளமையானும், பொருட்பொருத்தம் உடைமையானும் கொண்டனம்.

பதிப்பாசிரியர்.

கவிஞர் கோவை இளஞ்சேரன் அவர்கள்
எழுதிய

தலையில் முளைத்த தலைகள்

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே"
— என்று உவந்து பாடினார் பாரதியார். இத்தொடரில் உண்மையும் உறுதியும் இணைந்து பேசுகின்றன. தமிழ்ச் சொல் உயர்வுடையது என்ற உண்மையையும், உயர்வுடையதே என்ற உறுதியையும் பல முனைகளில் காணக்கூடும். அதற்கு இலக்கணத் துறை ஈடு கொடுக்கும்; மொழியியல் துறை மொய்ம்பு சேர்க்கும்; மற்றைப் பல துறைகளும் மதுகை கூட்டும்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே'
— என்று சொல்லினது உயிரோட்டத்தைக் குறித்தார் தொல்காப்பியனார். தொடர்ந்து, 'சொல் தன்னை உணர்த்தும் தன்மையது; பொருளைத் தெரிவிக்கும் தன்மையது' — என்று முன்னோர் வழி நின்று விளக்கினார்

சொல் உடல்; பொருள் உயிர்.

உடலில் உயிர் இயங்குவதை இரு வகையாக அறியலாம். மூச்சோட்டத்தாலும் நாடித் துடிப்பாலும் வெளிப்படையாக அறிகின்றோம். உடலின் இயக்கத்தாலும் மன உணர்வாலும் குறிப்பாக உணர்கிறோம். சொல், பொருளைத் தெரிவிக்குங்கால் இருவகையாகத் தெரிவிக்கும். பொருளை வெளிப்படையாகத் தெரிவிக்கும்; பொருள் குறிப்பாய்த் தோன்றுமாறு நிற்கும்' — என விளக்குகிறது தொல்காப்பியம். எனவே, உயிரைப் போன்றது பொருள் என்றதற்கேற்பப் பொருள், சொல்லில் வெளிப்படையாகவும் தோன்றும்; குறிப்பாகவும் தோன்றும்.

சொல்லின் இவ்வியல்புகள் வளம் வாய்ந்த மொழிகள் பலவற்றிற்கும் பொருந்தக்கூடியனவே.

தமிழ்ச்சொல் வெளிப்படையாகப் பொருளுணர்த்துவதைப் பரவலாகக்

காணலாம்; பல துறைகளில் நோக்கலாம்; பல போக்குகளில் அறியலாம்; பல பாங்குகளில் உணரலாம்.

தமிழில் ஒரு சொல்லே பல பொருள்களைத் தரும்; ஒரு பொருளுக்கே பல சொற்கள் உண்டு. இவை திரிசொல் எனப்படும். இத் திரிசொல்லினும் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச்சொல் எனச் சொற்கள் பல்கிப் பெருகும். இத் திரிசொல் மொழி வளப் பத்தைக் காட்டுவது.

மொழிக்கு வளப்பத்தோடு வனப்பையும் ஊட்டும் பணியில், குறிப்பில் பொருள் தரும் சொற்களும் பங்கு கொள்கின்றன. அவற்றுள், ஆகுபெயர் ஒன்று.

'தலைக்கு ஒரு மாங்கனி கொடு' என்றால் மாங்கனியைத் தலையில் வைப்பான் இலன். தலையைப் பெற்ற மனிதனுக்கே கொடுப்பான். இவ்விடத்தில் 'தலை' எனுஞ் சொல் தன் வெளிப்படைப் பொருளை உணர்த்தாமல், தன்னோடு தொடர்புடைய மனிதன் என்னும் பொருளைக் குறிப்பாய் உணர்த்தியது. இஃதே ஆகுபெயர்.

இவ்வாகுபெயரைப் போன்றே, அதனினும் நுணுக்கமாய், ஆனால் விரிந்த பாங்கோடு குறிப்பில் பொருளை உணர்த்தும் 'சொல்நிலை'யும் உண்டு. இஃது ஆகுபெயரோடு ஓரளவாய்த் தொடர்புடையதாயினும் தனித்து நோக்கத்தக்க தகுதி உடையது.

ஆகுபெயர் தனக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் அப் பொருளினின்றும் நீங்கி, ஓர் இயைபோடு வேறொரு பொருளைக் குறிப்பாய் உணர்த்தும் 'சொல்நிலை' என்று குறிக்கப்பட்டதோ ஒருசொல் தனக்குரிய நேர்பொருளை முதலில் வெளிப்படையாக உணர்த்தும்; உணர்த்தி அப்பொருளின் மையத் தன்மையினின்றும் நீங்காமல் நின்று குறிப்பாய் வேறு பொருளை உணர்த்தும். வேறு ஒரு பொருளைக் குறிப்பதோடு நில்லாமல் மேலும் தொடர்ந்து-தன் மையப் பொருளில் நீங்காது-பொருள்கள் முளைத்துக் கிளைத்துப் பெருக இடந்தந்து நிற்கும். இந்நிலையைச் 'சொல்லின் பொருட்கிளை' எனலாம். ஆகு பெயர் இலக்கணத்துறையது; இப் பொருட்கிளை மொழியியல் துறையது.

வளமான மரம் போன்றது மொழியியல் துறை எனலாம். மரம் பல பகுதிகளைக் கொண்டது. மரத்தின் மூலப்பகுதி மண்ணுக்குள்ளிருந்து உணவு கூட்டி உரம் சேர்க்கும் வேர்ப்பகுதி. அடிமரம் உடற்பகுதி. கிளை, கொம்பு, கோடு முதலியன சினைப்பகுதி. தளிர், இலை, மலர், காய், கனி முதலியன பயன் நல்கும் வளப்பகுதி.

மொழிக்கு அடிநிலையாய அசைகள், சொற்கள் மொழியின் மூலப்பகுதியாம். இதனை மரத்தின் மூலப்பகுதியான 'வேர்' என்னுஞ் சொல்லைக் கொண்டே 'வேர்ச் சொல்' என்கின்றோம். இலக்கிய இலக்கணங்கள் மொழியியலின் உடற்பகுதி. ஒரு சொல்லிலிருந்து பொருள்கள் முளைத்துக் கிளைத்துப் பெருகுதல் மரத்தினது சினைப்பகுதி போன்றது இதுகொண்டு இம்மொழியியல் பகுதியைச் "சொல்லின் பொருட்கிளை" எனக் குறிப்பதில் இயை பிருக்கிறது. வேர் என்ற சொல்லை அமைத்துக் குறித்த இயைபிலேயே கிளை என்னுஞ் சொல்லை அமைத்துக் குறிக்கலாம். மொழியால் தோன்றும் சுவை, நயம், பயன் முதலியன மொழியியலின் வளப்பகுதியாம்.

சொல்லின் பொருட்கிளையினைச் சான்றோடு விளக்கும் கருத்திலேயே "தலையில் முளைத்த தலைகள்" எனுந் தொடர் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறளைக் களமாகக் கொண்டு இதனை விளக்குவாம்.

திருவள்ளுவப் பெருந்தகை தலை எனுஞ் சொல்லைத் தனியாகவும் புணர் மொழியில் வைத்தும் ஆண்டுள்ளார். திருக்குறளில் 40 இடங்களில் இச்சொல் வருகிறது. இவ்வெண்ணிக்கையில் கருத்து ஒன்றும் இல்லை. இச்சொல் திருக்குறளில் முறையே வரிசையாகத் தொடர்ந்து அமைந்து ஆங்காங்கு நுணுக்கமாய்ப் பொருட் கிளைவிட்டுப் பல்குதலே நயந்து நோக்கத் தக்கது; வியந்து மகிழ்தற்குரியது.

"கோளில் பொறியிற் குணமிலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (9)

— இக்குறளில்தான் தலை எனுஞ் சொல்லை முதன் முதலில் காண்கிறோம். இறைவனை வணங்க வேண்டும் என்பதை வற்புறுத்துவதே இக்குறளின் நோக்கு. இங்குக் குறளின் கருத்துக்கள் பற்றிய ஆராய்ச்சியின்று. அக் கருத்தினை அறிவிக்கும் பாங்கில் அமைந்துள்ள மொழியியல் கருத்தே இங்கு உய்த்துக் காணப்படுகிறது.

இக் குறளில் தலை எனுஞ்சொல் மனித உறுப்பாகிய தலையைக் குறிப்பது. அஃதாவது, தலை எனுஞ்சொல் தன் நேர் பொருளை வெளிப்படையாகத் தந்து நிற்கிறது.

சொல் தரும் வெளிப்படையான பொருள் என்ற நிலையோடு மட்டும் தலை எனுஞ் சொல் இக் குறளில் அமையவில்லை. தலை என்னும் உறுப்பின் அமைப்பு, அவ்வமைப்பின் இயக்கம், இயல்பு ஆகிய இலக்கணத்தையும் இக்குறள் அறிவிக்கிறது.

வாய், கண், மெய், செவி, மூக்கு ஆகிய ஐந்து பொறிகளையும் கொண்டது தலை. அவற்றுள் ஒன்று குறையினும் தலை குறையுளதாம். ஐந்தும் அமைந்துவிடுவதால் மட்டும் தலை நிறைவுடையதாகி விடாது. ஒவ்வொரு பொறிக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு ஐம்புலன்களே ஐம்பொறிகளின் குறிக்கோள்கள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்து அறிவையும் முறையே குறைவிலாது பெற்றனவாய் ஐம்பொறிகளும் அமைய வேண்டும். அவ்வாறு அமையினும் தலை தன் இலக்கணத்தில் நிரம்பி நிறைவுடைய உறுப்பாகிவிடாது. கண் இருந்து பார்வை இன்றேல் குருடெனும் பழுதாம். பார்வையிருந்து அப்பார்வை கள்ளப் பார்வையாயின் குணமிலாக் குறையாம். இதுபோன்றே பிற பொறிகளும் அவ்வவற்றிற்குரிய குறிக்கோள்களை உடையனவாய்க் குணக்குறையற்று அமையவேண்டும். கோள்-புலன் இல்லாத பொறிகளில் குணம் இராது. ஆகவே, கோள் இல் பொறிபோலக் குணம் இல்லாதது தலை ஆகாது-என்று தலையின் இலக்கணத்தை எதிர்மறைமுகமாக அறிவிக்கிறது இக்குறள்.

முதன் முதலில் தலை எனுஞ் சொல்லை ஆளும்போது அதன் நேர் பொருளினை அப்பொருளுக்குரிய இலக்கண நிறைவோடு காட்டியுள்ள திறன் நயக்கத் தக்கது.

["தலையின் இழிந்த மயிரனையர்" (964) – என மற்றும் ஓர் இடத்தில் உறுப்பைக் குறிக்கும் பொருளில் அமைந்துள்ளது.]

அடுத்து, தலை எனுஞ் சொல்லை,

"விசும்பில் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது" (16)

— எனுங் குறளில் காண்கிறோம். இவ்விடத்தில் தலை எனுஞ் சொல் பசும்புல்லினது தலை என அமைந்துள்ளதால் முனை என்னும் பொருளைத் தருகிறது. இது நேர் பொருளன்று. ஆகுபெயராய்க் குறிப்பாய் வந்த பொருள்.

மனிதனது உறுப்புகளில் முதலில் தோன்றி உலகத்தை முதலில் கண்ட

உறுப்பு தலை. புல்லின் முதல் தோற்றம் முளை. முதலில் தோன்றியது என்னும் இயைபில் புல்லின் முளைக்குத் தலை எனுஞ் சொல் ஆகிவந்துளது.

முதன் முதலில் தலை எனுஞ்சொல் உறுப்பு என்னும் நேர்பொருளில் அமைந்தது. அடுத்துக் குறிப்புப் பொருளாய் முளை என்னும் பொருள் முளைத்தது. முளைத்த பொருள் கிளை விடாமலோ போகும்?

மூன்றுவதாகத் தலை எனுஞ் சொல் அமைந்துள்ள குறள்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் - தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை" (43)

—என்பது. 'ஓம்பல் தலை' என்பதற்குப் 'பாதுகாத்தல் சிறந்த அறம்' என்பது பொருள். இவ்விடத்தில் தலை எனுஞ் சொல்லுக்குச் 'சிறந்த அறம்' என்னும் பொருள் அமைகிறது. இப் பொருள் தலையொடு மிக நெருங்கிய இயைபுடையதாவதைக் காண்பாம்:

உறுப்புகளில் சிறந்தது தலை. ஐந்து பொறிகளும் தலையிலேயே அமைந்துள்ளன. அப்பொறிகளை இயக்குவதற்குரிய தலைக்கயிற்றைச் சுண்டிக் கொண்டிருப்பது மூளை. இம்மூளையும் தலையிலேயே உள்ளது. இவற்றால் தலை சிறந்ததாகிறது. ஐம்பொறிகளையும் சென்ற இடத்தில் செல்லவிடாது, தீது நீக்கி, அறத்தின் பால் இயக்குவது மூளை. கோளுடைய பொறிகளைக் குணம் உள்ளனவாக்கித் தலையைச் சிறந்த அறத்தினைச் செய்வதாக்குகிறது மூளை. சிறந்த உறுப்பாம் தலை செய்யும் அறம் சிறந்த அறமாக வன்றோ அமையும்! இச்செயலைக் கொண்டு தலை எனுஞ் சொல்லுக்குச் **'சிறந்த அறம்'** என்னும் பொருள் இங்குப் பொருந்துகிறது.

இக்குறளை மேலும் ஒருகால் நோக்கின், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் எனப் பட்டியல் இடப்பட்டுள்ள ஐந்தும் ஐந்து பொறிகளுக்கேற்ப அமைந்துள்ளமை காணலாம். ஐந்து புலம் என, புலம் எனுஞ் சொல் புலன்களை நினைவூட்டுகிறது. ஐம்பொறிகளும் வழுவாது காத்தல் என்பதற்கேற்பக் காத்தல் எனும் பொருள்தரும் 'ஓம்பல்' எனுஞ் சொல் அமைந்துள்ளது. இவ்வியைபுகள் நினைந்து சுவைத்தற்குரிய நயங்கொண்டவை.

[''இகழ்வார்ப் பொறுத்தல் தலை'' (151) ''மாணசெய் யாமை தலை'' (317 '' நூலோர் தொகுத்தவற்று ளெல்லாந் தலை'' (322) என மேலும் மூன்றிடங்களில் தலை இப் பொருளோடு அமைந்துளது.]

தலை எனுஞ் சொல் 'சிறந்த அறம்' என்னும் பொருட்டன்மையின் தொடர்போடு, வேறுபொருளில் அடுத்து வரும் குறளில் அமைகிறது.

"இயல்பினன் இல்வாழ்க்கை வாழ்பவன் -என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (47)

— இக்குறளில் தலை, வாழ்பவன் எனுஞ்சொல்லோடு இயைகின்றமையால் 'மேம்பட்டவன்' என்னும் பொருளைத் தருகிறது. மேற்குறித்தாங்கு தலைக்கு அமைந்த சிறப்பிற்கும், உறுப்புகளில் மேம்பட்டு உயர்ந்து மேலே விளங்கும் நிலைக்கும் ஏற்ப, ஆண்பாற் சொல்லோடு தொடர்ந்து 'மேம்பட்டவன்' என்னும் பொருள் கிளைக்கிறது.

[இப் பொருளோடு தலை வரும் இடங்கள்: ''தானம் செய்வாரின் தலை'' (295) ''கொல்லாமை சூழ்வான் தலை'' (325); ''எண்ணி உரைப்பான் தலை'' (687).]

மேம்பட்டவன் என்னும் தன் பொருட் கிளையால் ஆண்மகனை உயர்த்திக்

காட்டிய தலை, பெண்குலத்தை உயர்த்தி மேம்படுத்த அடுத்தொரு குறளில் அமைந் துள்ளது.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்; மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை" (57)

— இக்குறளில் தலை எனுஞ் சொல் சிறந்தது என்னும் பொருள் தந்து நிற்கின்றது. தலை மேம்பட்ட உறுப் பாய் உயர்ந்து, சிறந்து நிற்பதற்கேற்ப இப்பொருளை இங்கு பயந்து நிற்கின்றது.

[இப்பொருளில் தலை அமைந்த இடங்கள்: "அறிவினுள் எல்லாம் தலை" (203); "செல்வத்துள் எல்லாந் தலை" (411); "வன்மையுள் எல்லாந் தலை" (444); "பொறுத்தாற்றும் பண்பே தலை" (579) "கழிநல் குரவே தலை" (657); "நாடென்ப நாட்டின் தலை" (736); "தமரின் தனிமை தலை" (814); "இன்னா செய்யாமை தலை" (852); "போற்றலுள் எல்லாந் தலை" (891); "உழந்தும் உழவே தலை" (1031).]

மேற்கண்ட மூன்று குறட்பாக்களில் அமைந்த பொருள்கள் மூன்றும் ஒத்தன போன்று தோன்றினும், ஓரளவு வேறு பாடுடையனவே. அவ்வேறுபாடு தலை எனுஞ் சொல் சேர்ந்துள்ள தொடர்க ளால் அமைவதே. ஆயினும், 'சிறந்த அறம்' என்பது செயலைக் குறிப்பது. 'மேம்பட்டவன்' என்பது செயலால் உயர்ந்தவனைக் குறிப்பது. 'சிறந்தது' என்பது பொதுவிற் சிறந்த பண்பை-தன்மையை-பொருளைக் குறிப்பதாகிறது. இவை, தம்முள் சிறு வேறுபாடுடையன வாக அமைகின்றன.

இதுவரை தனிமொழியாக நின்று பொருட்கிளை விட்ட தலை, மேல் புணர் மொழியில் அமைந்து பொருட்கிளை விடு கிறது. முன்னே அடைமொழி பெற்றும், பின்னே வினைச்சொல் பெற்றும் பல பொருள்களைப் பெருக்கி வருவதைக் காணலாம்.

'படு' என்னும் முதனிலை கொண்ட வினைச்சொல் இணைந்ததாய்த் தலை எனுஞ்சொல் அடுத்து வருகிறது:

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர், விருந் தோம்பி
வேள்வி தலைப்படா தார்" (88)

— இக்குறளில் தலைப்படாதார் என் பதற்கு 'முற்படாதார்' என்பது பொரு ளாம். தலைப்படல், முற்படல் என்னும் பொருளை உடையது. தலை, முன் தோன் றியது என்னும் இயைபில் 'படல்' கூடி ஒருசொல் நீர்மையாய் நின்று 'முற்படல்' என்னும் பொருளைத் தோற்றுவிக்கிறது.

[இப்பொருளோடு தலை வரும் இடங் கள்: "தலைப்பட்டார் தீரத் துறந்தார்" (348); "மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்" (356).]

அடுத்து, 'பிரி' என்னும் முதனிலை அமைந்த வினையோடு கூடி, தலைப்பிரியா எனுஞ்சொல் கொண்டு,

"நயனீன்று நன்றி பயக்கும், பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்' (97)

— எனுங் குறள் வருகிறது. தலைப் பிரியா என்பதற்கு 'நீங்காத' என்பது பொருள். பிரியா எனுஞ் சொல்லே நீங் காத என்னும் பொருளது. அது வன்மை யமைந்த உறுப்பாகிய தலை எனுஞ் சொல் லோடு கூடி, ஒருசொல் நீர்மைத்தாகி நீங்காத என்னும் கருத்துக்கு வன்மை ஊட்டுகிறது. இவ்வாறாய், இவ்விடத்துத் தலைப்பிரியா எனுஞ் சொல் 'எந்நிலை யினும் நீங்காத' என்னும் பொருளைத் தருகிறது.

[இப்பொருளில், "செயிரின் தலைப் பிரிந்த காட்சியார் உண்ணார், உயிரின் தலைப்பிரிந்த ஊன்" (258); "பண்பின் தலைப்பிரியா தார்" (810); "பண்பின் தலைப்பிரிதல் இன்று" (955) எனுமிடங் களில் தலைப்பிரிதல் அமைந்துளது.]

அடுத்து, ஒருதலை எனுஞ் சொல்லோடு,
"சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்" (119)

— எனுங் குறளைக் காண்கிறோம். ஒருதலையா என்பதற்குத் 'திண்ணிதாக' என்பது பொருள். ஒன்று என்பது எண்ணின் தோற்றம். அது பலவற்றினும் ஒன்றைச் சிறப்பித்துக் காட்ட ஒப்பற்றது எனும் பொருளில் வரும். தலை உறுதியான உறுப்பு. இவ்வுறுதித் தலையோடு ஒப்பற்றதாம் ஒன்று சேர்ந்து 'ஒருதலை' என ஒருசொல்லாய் நின்று ஒப்பற்ற உறுதியாகிய — 'திண்ணிது' என்னும் பொருளினைத் தருகிறது.

[இப்பொருளில் வரும் இடங்கள்: "ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு" (357); "ஒருதலையாச் சொல்லலும்" (634).]

தலை எனுஞ் சொல்லமைந்த குறட்பாக்களாக அடுத்தடுத்து நாம் காண்பவை கற்றோர், கல்லார் பற்றிய கருத்தறிவிப்பவை:

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (394)

"கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்" (405)

இக்குறட்பாக்களில் அமைந்துள்ள தலைக்கூடி, தலைப்பெய்து எனும் இரு சொற்களையும் மேலெழுந்தபடியாக நோக்கின் 'சேர்ந்து' அல்லது 'ஒன்று கூடி' எனும் பொருளையே தருவதாகப்படும். முன்னது, கற்றாரைப் பற்றிய கருத்துரைப்பது; பின்னதில், கல்லாரைப்பற்றிய கருத்து வந்துளது. முன்னதில், கூடி என்னும் எச்சவினை அமைந்துள்ளது; பின்னதில், பெய்து என்னும் எச்சவினை அமைந்துள்ளது. கூடுதல், இயைபோடு கூடுதல். பெய்தல், ஒன்றில் வேறொன்றை வைத்தல்—இடுதல்—ஊற்றல் எனும் பொருளது. இவ் வேறுபாடுகளுடன் நோக்கின் இரு சொற்களின் பொருள்களும் வேறுபடல் தோன்றும்.

தலைக்கூடல் : — ஐம்பொறிகளும் ஒருங்கியைந்து ஒன்றியது தலையாம். அதற்கேற்பக் கற்றுவல்ல புலவர் இயைபுடையவராய் ஒன்று சேர்வதைக் குறிக்க இச் சொல் அமைந்துள்ளது. எனவே, 'தலைக்கூடி' என்பதற்கு 'இயைபோடு சேர்ந்து' என்பது பொருளாகும்

தலைப்பெய்து : — தலையை மற்றொன்றில் வைத்தல் போன்று கற்றவர் கல்லா ஒருவனைக் கிட்டுதல் ஆகும். இஃது இயைபில்லாத சேர்க்கை எனவே, 'இயைபில்வழிச் சேரல்' என்னும் பொருளைத் தருகிறது.

கூடி, பெய்து என்னும் ஓரளவான பொருளொற்றுமை கொண்ட சொற்கள் சேர்ந்து தலை எனுஞ் சொல் அமைந்து தனித்தனிப் பொருள்களைத் தந்தமை போன்று, அடுத்தடுத்து, செல்லா, வந்த என்னும் எச்சவினைகள் சேர்ந்த தலையைக் காண்கிறோம்.

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து" (561)

"தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை அறிந்து" (767)

இவற்றுள், முதற்குறள் 'அரசன் குற்றத்தை ஆராய்ந்து, மீண்டும் அக்குற்றத்தினைத் தொடராதபடி ஒறுக்க வேண்டும்' என்னும் கருத்துடையது. எனவே, 'தலைச்செல்லா' என்பது 'தொடராத' என்னும் பொருளது. தலை ஐம்பொறிகளின் தொடர்பு அறாமல் இயங்குவது என்னும் அடிப்படையோடு இப்பொருள் கிளைக்கிறது.

அடுத்த குறள் படைமாட்சி பற்றிய கருத்தது. இதன்கண் 'தலைவந்த' எனுஞ் சொல் 'எதிர்ந்த' என்னும் பொருளைத் தருவது. தலை, முன் நோக்கி எதிர்முகமாகச் செயற்படுவது. இவ்

வடிப்படையோடு தலைவந்த என்பதற்கு 'எதிர்ந்த' என்னும் பொருள் அமைகிறது.

அடுத்து,

"நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
தலைமக்கள் இல்வழி இல்" (770)

— எனுங் குறள் தலையைத் தாங்கி வருகிறது. தலைமக்கள்=தலைவர் - படைத் தலைவர் எனும் பொருளைத்தந்து நிற்கிறது. தலை, மேலிருந்து பிறவற்றிற்கு ஆணை யிட்டு நெறிப்படுத்துவது. எனவே, தலைமைத் தன்மை வாய்ந்த தலைவர் என்னும் பொருளோடு இயைகிறது.

இறுதியாக, தலை எனுஞ் சொல்அமைந்த குறளாக,

"ஒருதலையான் இன்னாது காமம்; காப்போல
இருதலை யானும் இனிது" (1196)

– என்னும் குறள் அமைகிறது. இதன்கண் ஒருதலை இருதலை என்பனவற்றில் அமைந்த ஒன்று, இரண்டு என்பன எண்ணுப் பொருளிலேயே உள்ளன. தலை ஆகுபெயராய்த் தலையை உடையாரை உணர்த்தும் தொடர்போடு, எண்ணுப்பெயர் கூடி, சார்பு - பக்கம் என்று பொருள்பட்டு நிற்கிறது. எனவே, ஒருதலை=ஒருபக்கம், இருதலை=இரண்டு பக்கம் எனப் பொருள்கள் கிளைக்கின்றன.

இடையே, தலையமைந்த ஒரு குறளைத் தாண்டிவர நேர்ந்தது.

"செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
காணின் கிழக்காந் தலை" (488)

–எனுங்குறளே அது.

இதில் அமைந்த தலை உறுப்பைக் குறிப்பதாய் நின்று 'கிழக்காம்' என்னும் சொல்லோடு தொடர்வதால் இரு சொற்களாகவே நின்று வேறுபொருள் குறிக்கிறது. 'பகைவர்க்கு இறுதி வரும்வரை பணிக. இறுதி எல்லையில் பகைவர் கவிழ்வர்' என்பது இக்குறளின் கருத்தாம். 'கிழக்காம் தலை' என்னும் தொடர் 'தலைகீழாம்', 'தலை கவிழ்ந்து அழிவர்' என்னும் பொருளது. இருசொற்களையும் இணைத்து ஒரே பொருளாகக் கொள்ளின் 'கவிழ்வர்' என்னும் பொருள் கிளைக்கிறது. இங்கு–தலை, உறுப்பையும் சுட்டுவதாய்ப் பின், தொடரால் வேறுபொருளைக் கிளைக்கச் செய்வதால் தனித்துக் காணவேண்டியதாயிற்று.

இதுகாறும் ஒரு தலையிலிருந்து பல தலைகள் முளைக்கக் கண்டோம். அத்தலைகளைப் பொருள்களுடன் பட்டியலிட்டுக் காணலாம்:

தலை	= தலை (உறுப்பு)
தலை	= முனை
தலை	= சிறந்த அறம்
தலை	= மேம்பட்டவன்
தலை	= சிறந்தது
தலைப்படல்	= முற்படல் — எய்தல்
தலைப்பிரியா	= எந்நிலையினும் நீங்காத
ஒருதலை	= திண்ணிது
தலைக்கூடி	= இயைபொடு சேர்ந்து
தலைப்பெய்து	= இயைபின்றிச்சேர்ந்து
தலைச்செல்லா	= தொடராத
தலைவந்த	= எதிர்ந்த
தலைமக்கள்	= தலைவர்
ஒருதலை — இருதலை	= ஒருபக்கம் — இருபக்கம்
கிழக்காந்தலை	= கவிழ்வர் (கவிழும்)

இவ்வாறு திருக்குறளில் தலை எனுஞ் சொல் 15 பொருட்கிளைகளை விடுகிறது. தலையில் முளைக்கும் தலைகளைக் கண்டு வியக்கின்றோம்.

இராவணன் தலையை இராமன் அம்பால் துணித்தான்;

"இறந்த ஒருயிருடன் தருமத்து ஈட்டினால்
பிறந்துள தாமெனப் பெயர்த்தும் ஓர்தலை
மறந்தில தெழுந்தது;"

எழுந்த தலையையும் இராமன் கொய்தான்;

"கொய்தது கொய்தில தென்னுங் கொள் கையில்
எய்த அக்கணத் தெழுந்த தோர்சிரம்"

— என்கிறது கம்பராமாயணம்.

சிங்கமுகாசுரன் தலையை முருகன் அறுத்தான். மற்றுமோர் தலை முளைத்தது. மேலும் அறுத்தான்;

"அறுத்திடு தலைகள் வீழ
ஆயிரஞ் சென்னி வல்லே
மறித்துவந் தெழுத லோடும்"

— என்கிறது கந்தபுராணம்.

இவ்விரண்டு நூல்களிலும் தலையில் தலைகள் முளைக்கின்றன. முளைக்க முளைக்க நிமிர்ந்து நின்ற அவ்விரு வீரர்களும் வியத்தற்குரியோரே. அறுத்த இருவரும் அகல விழித்து வியத்திற்குரியோரே. இவ்வகையில் இலக்கியம் படைத்த கம்பரும் கச்சியப்பரும் நயத்தற்குரியோரே. ஆயினும், அவை கதைகள் எனக் காணும்போது நயப்பு நின்றுலும் வியப்பு நெளிகிறது.

திருவள்ளுவப் பெருந்தகை தலையிலே முளைக்க வைத்திருக்கும் தலைகள் மொழியியலாய் நம்முடன் பேசி நம்மை மகிழ்விக்கின்றன. மேற்காட்டப்பட்டுள்ள பட்டியலில் சொற்களும் அவற்றின் பொருள்களும் முறையே வரிசையாக அமைந்துள்ளதை நோக்கும் போது வியப்பு பிறக்கிறது. படிப்படியாக அப்பொருள்கள் கிளைத்துத் தழைக்கின்றமையைக் கூர்ந்து நோக்கும் போது வியப்பு நிலைக்கின்றது. இது போன்று மேலும் பொருட் கிளைவிட்டவாறு தமிழ் இலக்கண, இலக்கியங்கள் பலவற்றிலும் தலை ஆட்சிசெய்கிறது. ஆயினும், திருக்குறளில் படிப்படியாகப் பொருள் கிளைத்து விளங்குவது பெரு வியப்பாகும். இதுபோன்று பொருட் கிளைவிடும் பல சொற்களின் பட்டியலைத் தொகுப்பது பயனுடையதாகும். கலைச் சொல்லாக்கத்திற்குப் பெருந்துணையாகும்.

சொற்கள் எல்லாவற்றையும் பழந் தமிழ் நூல்களினின்றும் ஆய்ந்து பொறுக்கி எவ்வெச் சொல் எவ்வெக்காலத்து நூலிற் றோன்றிற் றென்று கணிப்பின் தமிழ் மொழியின் காலம் இனிது நாட்டப்படும். ஒரு பொருளைச் சுட்டுதற்குப் பல சொற்கள் காணப்படும் அத்துணையே பற்றித் தமிழ் மிகப் பழைய மொழியாமென்று கூறுதல் குற்றம் ஆமாறில்லை என்க.

— மறைமலையடிகள்.
(சிந்தனைக் கட்டுரைகள் — முன்னுரை)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
தமிழ் விரிவுரையாளர்
புலவர் க. வெள்ளைவாரணனார்
எழுதிய

தொல்காப்பியம்

இக்காலத்தில் நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் மிகவும் தொன்மையுடையதாய் விளங்குவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலேயாகும். இந்நூலாசிரியரது இயற்பெயர் தொல்காப்பியனார் என்பதாகும். தொல்காப்பியனாரால் இயற்றப்பட்டமையால் இது தொல்காப்பியம் என்னும் பெயருடையதாயிற்று. தொல்காப்பியனார் முதற்சங்க காலத்தின் இறுதியிலும் இடைச்சங்க காலத் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்றும், இவரால் இயற்றப்பெற்ற தொல்காப்பியம் இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் இலக்கண நூலாக விளங்கிய தனிச் சிறப்புடைய தென்றும் பழைய உரையாசிரியர்கள் தெளிவாகக் குறித்துள்ளார்கள்

இறையனார் களவியல் உரையாசிரியர் "இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம்" என இந் நூலின் தொன்மையினையும் புலவர் போற்றும் இலக்கண வரம்பினையும் இனிது புலப்படுத்தியுள்ளார். இறையனார் களவியலுரை எழுத்துருவமைந்த காலம் தி. பி. எட்டாம் நூற்றாண்டு (இற்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்பு) என்பது அறிஞர் ஆய்ந்து கண்ட முடிபாகும். தி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே தொல்காப்பியத்தின் தொன்மை இவ்வாறு வற்புறுத்தப் பெற்றுள்ளமை அறியத்தக்கதாகும். தொல்காப்பியத்தில் அறுவகைப் பெரும்பொழுதுகளைப் பற்றிக் கூறுமிடத்து ஆண்டின் தொடக்கம் ஆவணித் திங்கள் முதலாகவுள்ள கார்ப்பருவந் தொடங்கி எண்ணப்பட்டிருத்தல் காணலாம். இக்காலத்தில் தமிழ்நாட்டின் ஆண்டுத் தொடக்கம் சித்திரைத் திங்கள் முதலாக வைத்தெண்ணப்பட்டு வருவதனை நாம் அறிவோம். இவ்வாறு ஒரு நாட்டில் இத்தகைய காலமாற்றம் நேர்தற்குப் பன்னூறாண்டுகள் சென்றிருத்தல் வேண்டும் என்பதை யாவரும் அறிவர்.

தொல்காப்பியனார் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டின் வடவெல்லை வேங்கட மலைத்தொடராகவும், தென்னெல்லை குமரி யாறாகவும் அமைந்திருந்தன. இச்செய்தி, "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து" எனவரும் இந் நூலின் சிறப்புப் பாயிரத் தொடரால் நன்கு விளங்கும். ஆசிரியர் காலத்தில் தமிழ்நாட்டின் தென்னெல்லையாக விளங்கிய குமரியாறு அவர் காலத்திற்குப் பின் இடைச் சங்கத்திறுதியில் ஏற்பட்ட கடல் கோளால் அழிந்துபோயிற்று. இக்கடல் கோளுக்குப்பின் இக் காலத்திலுள்ள கன்னியாகுமரிக் கடற்றுறையே தமிழ் நாட்டின் தென்னெல்லையாக இருந்து வருகிறது.

ஆசிரியர் தொல்காப்பியனார், தம் காலத்தில் நேர்ந்த கடல் கோளினால் தமிழ் நாட்டின் தென் பகுதியாயிருந்த பெரு நிலப் பரப்பும், தமிழர் கலைச்செல்வங்கள் பலவும் சிதைந்து மறைந்த பேரிழப்பினை நினைந்து வருந்தினார். முந்து நூல்களின் இயல்பினை உளத்துட்கொண்டு தம் காலத்தில் தமிழ் மொழியை வளம் பெறச் செய்தற்கு இன்றியமையாததோர் இயற்றமிழ் இலக்கணமாக இத் தொல்காப்பியத்தை இயற்ற எண்ணினார். தம் கால இலக்கியங்களிற் காணப்படும் இயல்புகளுக்கும், தமக்கு முற்பட்டுத் தோன்றிய செந்தமிழ்த் தொன்னூல்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்குணர்ந்து அவ்விலக்கணங்களை எழுத்து, சொல், பொருள் என மூவகைப்படத் தம் நூலுள் தொகுத்துக் கூறியுள்ளார்.

ஆசிரியர் தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்தை நிலந்தருதிருவிற் பாண்டியன் பேரவையிலே நான்கு மறைகளையும் முற்ற உணர்ந்த அதங்கோட்டாசிரியர் முன்னிலையில் அரங்கேற்றினார் எனப் பனம்பாரனார் சிறப்புப் பாயிரத்திற் குறித்துள்ளார். எனவே, தொல்காப்பியனாரை ஆதரித்து இந்நூலைச் செய்வித்தவன் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்பது நன்கு புலனாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் இந் நூலில் "மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டினார்" என்பர் பனம்பாரனார். எனவே, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுள் இயற்றமிழுக்குரிய இலக்கணத்தை மட்டும் தனியே பகுத்தெடுத்துக்கொண்ட இவ்வாசிரியர் ஏனை இசைத் தமிழ் நாடகத் தமிழின் இலக்கணங்கள் கலந்து மயங்காதபடி தெளிவான முறையில் இயற்றமிழ் இலக்கணங்களை மட்டும் இந்நூலுள் முறைப்படுத்தினார் எனவும், இயற்றமிழ் இலக்கணத்துள்ளும் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றனுள் ஒன்றற்குரிய இலக்கணத்தை மற்றவற்றிற் சேர்த்துக் கூறாது, முன்னர் எழுத்திலக்கணம் உணர்த்தி, அதன்பின் சொல்லிலக்கணங் கூறி, இறுதியிற் பொருளிலக்கணம் உணர்த்தினார் எனவும் சிவஞான முனிவர் இந்நூற் பாகுபாட்டினைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

"ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனப் பனம்பாரனார் இவரது வட மொழிப் பயிற்சியினைக் குறிப்பிடுகின்றார். "வட மொழியினும் வல்லனாயினான் என்பார் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனப் பனம்பாரனார் கூறினார்" என்பர் சிவஞான முனிவர். வடமொழி மறைக்காலத்தை யடுத்துத் தோன்றிய வடமொழித் தொன்மை இலக்கணம் 'ஐந்திரம்' என்பதாகும். வடமொழிப் புலவர்களாற் பாராட்டிப் பயிலப்பெறும் 'பாணினி வியாகரணம்' ஐந்திரத்திற்குப் பின் தோன்றிய நூலாகும் 'பாணினி வியாகரண'த்தைக் கற்றுவல்ல தொல்காப்பியன் என்று கூறாமல் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பனம்பாரனார் குறிப்பிடுதலால் வடமொழிப் பாணினீயத்திற்குக் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்பது நன்கு துணியப்படும்.

தொல்காப்பிய இலக்கணத்தினை வரம்பாகக்கொண்டே திருக்குறள் அமைந்துள்ளது. திருக்குறளில் தொல் காப்பியத் தொடர்களும் கருத்துக்களும் அவ்வாறே எடுத்தாளப் பட்டுள்ளன. தொல்காப்பியத்திற் கூறப்பட்ட விதிக்கு மாருன சில விதிகளும் புது வழக்குகளும் சங்க நூல்களிலும் திருக்குறளிலும் காணப் படுகின்றன. தொல்காப்பியத்திற் கூறப் பட்டுப் பிற்காலத்தில் வழக்கிழந்தனவும் சில உள்ளன. இக் குறிப்புகளை நோக்குங் கால் தொல்காப்பியம் கடைச்சங்க காலத் திற்கு முன்னரே, அஃதாவது, தி. மு. மூன்று, நான்காம் நூற்ருண்டுகளுக்கு (இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு) முன் னரே இயற்றப்பட்ட தொன்மையுடைய தென்பது நன்கு புலனும்.

இந்நூல் எழுத்ததிகாரம், சொல்ல திகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களையுடையது. ஒவ் வோரதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களாக இந்நூலில் இருபத்தேழு இயல்கள் உள்ளன. இந்நூலில் உள்ள நூற்பாக்கள் 1595 என இளம்பூரண ரும், 1611 என நச்சினுர்க்கினியரும் பகுத்து உரை எழுதியுள்ளார்கள். இந் நூலின் மூன்றதிகாரத்திற்குமுரிய நூற் பாக்களின் தொகை கூறும் பழம்பாடல் களை நோக்குமிடத்து இந்நூலின் நூற் பாக்கள் 1612 எனப் பகுக்கப்பட்டு வழங் கிய செய்தி புலனுகும்.

எழுத்ததிகாரம்

அகர முதல் னகர இறுவாய் அமைந்த தமிழ் எழுத்துக்களின் இலக் கணங்களை முறைப்பட விரித்துரைக்கும் படலம் எழுத்ததிகாரமாகும். ஆசிரியர் இவ்வதிகாரத்தில் தாம் கூற எடுத்துக் கொண்ட எழுத்திலக்கணத்தினை நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங் கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஒன்பதியல்களாகப் பகுத் துணர்த்துகின்ருர்.

சொல்லதிகாரம்

பொருளை நிலைக்களமாகக் கொண்டு நிகழ்வது சொல்லாகும். சொல்லாற் குறிக்கப்படும் பொருள்கள் எல்லாவற்றை யும் உயர்திணை, அஃறிணை என இரண் டாக வகுத்து அப்பொருள்வகைபற்றி நிகழும் சொற்களையும் உயர்திணைச் சொல், அஃறிணைச்சொல் என இரு திறனுகப் பகுத்துரைப்பது பழந்தமிழ் இலக்கண மரபாகும். மக்களது நல்லறி வின் பயனுக அமைவது ஒழுக்கம். விலங்கு முதலிய சிற்றுயிர்களினின்றும் மக்கட்குலத்தாரை உயர்திணையெனச் சிறப்பித்து உயர்த்துவது மக்களது மன வுணர்வின்பாற்பட்ட நல்லொழுக்கமே யாகும். வாழ்க்கையில் மேன்மேல் உயர் தற்குக் காரணமாகிய இவ்வொழுக்க உணர்வு மக்கட்குலத்தாரிடமே சிறப் பாக அமைந்து வளர்தல் பற்றி மக்களை உயர்திணை எனத் தனிச்சிறப்புடைய இனமாகவும், நன்றுந் தீதும் பகுத்து உணர்ந்தொழுகும் நல்லறிவு வாய்க்கப் பெருத ஏனைய உயிரினங்களையும் உயி ரற்ற பொருள்களையும் அஃறிணை எனச் சிறப்பில்லாத் தொகுதியாகவும் தொல் காப்பியனுர் காலத்துக்கு முற்பட்டு வாழ்ந்த பண்டைத் தமிழறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் உயர்திணை, அஃறிணை என இரண்டாக அடக்கி அவற்றை ஆண், பெண், பலர், ஒன்று, பல என ஐந்து பால்களாகப் பகுத்து இப்பொருள் வேறுபாட்டினை விளங்க அறிந்து கொள்வதற்குரிய சொல் லமைப்பினை யுடையதாகத் தமிழ் மொழி பண்டுதொட்டு உருவாகி வளர்ந் துள்ளது. இங்ஙனம் சொற்களின் வாயி லாகத் திணை பால்களைப் பிறழாது விளங்க அறிவிக்கும் முறை தமிழ் மொழியி லன்றிப் பிறிது எம்மொழியிலும் காணுதற் கியலாத சிறப்பியல்பு என்பர் அறிஞர். முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிய தொல்காப்பியர், எழுத்தாலாகிய சொல் இலக்கணத்தினைக் கிளவியாக்கம், வேற்

றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என ஒன்பது இயல்களால் உணர்த்து கின்றார்.

பொருளதிகாரம்

எழுத்தும் சொல்லும் ஆகிய இரு வகை இலக்கணங்களையும் கருவியாகக் கொண்டு மக்கள் உணர்ந்து கொள்ளு தற்குரிய பொருள்நெறி மரபினை விரித் துரைப்பது பொருளதிகாரம் ஆகும். இவ் வுலகிலுள்ள காட்சிப் பொருள், கருத் துப்பொருள் ஆகியவற்றை எல்லாம் நன் கறிந்து அவற்றை முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள் என மூவகை யாகப் பகுத்து உணர்த்து முகத்தால் இவ் வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழ்க்கை முறையினை வகுத்துரைப்பது பொருளிலக்கணம் எனப்படும். இது தமிழுக்கே யுரிய சிறப்பியல்பாகும்.

நிலமும், காலமும் உயிர் வாழ்க் கைக்குரிய அடிப்படைப் பொருள்கள். எனவே, நிலமுதலாகிய ஐம்பெரும்பூதங் களாலாகிய இவ்வுலகமும், அறுவகைப் பொழுதுகளாகிய காலமும் முதற்பொருள் எனப்பட்டன. இம் முதற்பொருள்களின் சார்பினுல் தோன்றும் புல் முதல் மக்கள் ஈறாகவுள்ள உயிரினங்களும் உயிரல் பொருள்களும் கருப்பொருள்களாம். இவை முதற்பொருள்களை இடமாகக் கொண்டு கருக்கொண்டு தோற்றுவன வாதலின் கருப்பொருளெனப்பட்டன. முதலும் கருவுமாகிய இவ்விருதிறப் பொருள்களையும் பற்றுக்கோடாகக் கொண்டு, அன்பு கொள்ளுதலும் அறஞ் செய்தலும் பொருளீட்டலுமாகிய ஒழுக லாறுகள் உரிப்பொருள்களாகும். இவை மக்கட்குலத்தார்க்கே உரிய பொருள் களாதலின் உரிப்பொருளெனப்பட்டன. இஃது அகத்திணையியல், புறத்திணை யியல், களவியல், கற்பியல், பொருளி யல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களான் உணர்த்தப்படுகின்றது.

இவ்வாறு, தமிழில் எழுத்து, சொல், பொருள் ஆகிய இலக்கணங்களை விளக் கும் நிலையில் அமைந்த இத்தொல்காப்பி யம், தமிழுக்கு எக்காலத்தும் அமைய வேண்டிய இயல்பான வளர்ச்சி முறை களைக் கூர்ந்து நோக்கி இயற்றப்பட்டுள் ளது. எழுத்தின் திறன், சொல்வளம், பொருள்களைத் தெளிவாக விளக்கும் உலகவழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கில் ஆகிய இத்துறை களில் நம் தமிழ் மொழியானது முற்காலத் தில் எவ்வாறு இலக்கண வரம்பு கோலி வளர்க்கப் பெற்றது என்ற வளர்ச்சி முறையை எக்காலத்தாரும் தெளிவாக உணர்ந்து கொள்ளும் இனிய எளிய இலக்கண நூலாகத் திகழ்வது இயற் றமிழ் நூலாகிய தொல்காப்பியமேயாகும்.

தொல்காப்பியர் எல்லாவற்றையும் அறிந் தவர். ஆனால், அவரை அறியாதவர்கள் தமிழ் நாட்டிலே அதிகம். இது தமிழர்களுக்கு ஒரு மானக்கேடு. தம்மிடம் களஞ்சியம் இருக்க, கருவூலம் இருக்கப் பிறரிடம் பிச்சை கேட்கும் இரவலர்களாகத் தமிழர் இருப்பது பெரிதும் வருந்துதற்குரியது.

— மறைமலையடிகள்.

(தமிழின் தனிச்சிறப்பு — பக்கம் 13)

பண்ணாராய்ச்சி வித்தகர்
ப. சுந்தரேசனார்
எழுதிய

தமிழகத்து இசைச் சொற்கள்

நம் தமிழகத்தில் மிகத் தொன்மையான காலந்தொட்டு விளங்கிவரும் தனித்தமிழ்க் கலைகளில் இசைக்கலையும் ஒன்று. அக்கலை இன்றளவும் வழக்கில் இருந்துவரும் நுண்கலைகளில் தலையாயது என்பதை யாவரும் உணர்கின்றனர். அக்கலைக்கே உரிய பழந்தமிழ்ச் சொற்களும் உள. மிகப் பழங்காலத்தியத் தமிழ் மக்களின் இசைத்தமிழ்க் கலைச்சொற்கள் யாவும் உயர்தனிச் செம்மொழியாய் அமைந்தன. அகத்தியம் என்ற பெரு நூலில் முத்தமிழும் (இயல், இசை, கூத்து) ஒருங்கே கூறப்பெற்றிருந்தன வாம். ஒரு பாண்டிய மன்னன் ஏழிசைகளைப்பற்றி எழுதப்பெற்ற பற்பல நூல்கள் யாவற்றையும் தொகுத்துச் சங்கம் நிறுவினான். அச்சங்கத்திலேயே தன் வாழ்நாளைக் கழித்தது போன்ற குறிப்பில் அப்பெரு மன்னனை ஒரு புலவர்,

> "வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
> ஏழிசைநாற் சங்கம் இருந்தானும்"

எனக் கூறினார்.

பிற்காலச் சோழ மன்னர்களில் ஒரு குலோத்துங்க மன்னனின் மனைவியருள் ஓர் அம்மையார் ஏழிசைவல்லி எனப் பெயர்பூண்டு வாழ்ந்ததையும் நமக்கு வரலாறு நன்கு எடுத்துக்காட்டுகிறது. தனித்தமிழ் நன்கு விளங்கிய பண்டை இலக்கியங்களில் அக்காலப் புலவர்கள் பலரானும் அவர்தம் காலத்திய இசைவாணர், இசைக்கலை, கருவி வகைகள், கலை முறைமை பற்றிய நுண்ணிய கருத்துக்கள் நன்கு கூறப்பட்டிருக்கின்றன. இசைத்தமிழிற்கே வரலாறு கண்டு உணரும் பெற்றிமையில் அவை விளங்குகின்றன.

மிகப் பிற்கால இசைநூல்களைக் கற்றவரே சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந் நூற்றாண்டிலும் தமிழில் இசைக்கலைக்குரிய நூல்களை எழுதுங்கால் வடமொழிச் சொற்களையே தமிழ் எழுத்தில் எழுதிவருவாராயினர். இம்முறைகள் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் ஒரு நூற்றாண்டாகத் தமிழக மக்களி

டத்தே பெரிதும் தோன்றிச் சில இடர்ப்பாடுகளை விளைவித்துவிட்டன. தி. பி. 1933 (கி பி. 1902) இல் வெளியான சேலம் மாணிக்க முதலியாரது "சங்கீத சந்திரிகை" என்ற நூல் இக்கருத்திற்கு எடுத்துக்காட்டாகிறது. பின்னர் தி. பி. 1835 (கி. பி. 1914) தஞ்சை, ஆபிரகாம் பண்டிதரால் பண்டை இசைத் தமிழ் அலகுமுறைகளை உறுதி செய்வதற்கெனக் "கருணாமிர்த சாகரம்" என்ற இசைநூல் எழுதி வெளியிடப்பட்டது. மேற்சொல்லப்பட்ட குறை இதனால் ஓரளவு குறைந்தது. அதன் பின்னர் அருட்டிரு விபுலானந்த அடிகள் ஏறத்தாழப் பதினான்காண்டுகள் இசைத் தமிழை ஆர்வத்துடன் ஆராய்ந்தார்கள். பெருமளவில் பழைய இசைத்தமிழ்ச் சொற்களையே முதன்மையாகக்கொண்டு தமது யாழ்நூலை தி. பி. 1978 (கி. பி. 1947)இல் வெளியிட்டார்கள். இவ்வெளியீடு தமிழ் மக்களின் தவப்பயன் எனலாம். இவற்றையெல்லாம் ஒப்புநோக்கியறிய இசைக்கலைக்கு உரிய தென்னகத்துத் தனித்தமிழ்ச் சொற்களையும் வடமொழிச்சொற்களையும் முதலில் அறிந்து அதன் பொருள் வகைகளையும் இசைக் கலையின் வழியே உணரவேண்டுவது மிக மிக இன்றியமையாததாகிறது. ஒருநாட்டில், அதனினும் மிகப்பழமையான நாட்டில் வழக்கில் இருந்துவரும் எத்தகைய கல்விப் பகுதியாயினும், கலைப்பகுதியாயினும், வரலாற்றுப் பகுதியாயினும் அந்தந்த நாட்டின் மக்கள் மொழியில் தான் எழுதப்படவேண்டும், எடுத்துக் கூறப்படவேண்டும் என்பது கல்வி அறிவுடையார் கருத்து.

இக்காலப் பெரும்புலவர்களில் ஒருவராய திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் "பண்டைக்காலச் சேர மன்னர் வரலாறு" எனும் நூலில் ஒரு கருத்தினை எழுதியுள்ளார்கள். "பிறநாட்டு ஊர்ப் பெயர்களையும் மக்கட் பெயர்களையும் பிறவற்றையும் தங்கள் மொழியில் மொழிபெயர்த்துக்கொண்டு வழங்கும் வழக்கம் வடமொழியாளரிடத்தன்றிப் பிற எந்நாட்டு-எம்மக்களிடத்தும் காணப்படுவது இல்லை. பிறரெல்லாம் பிறநாட்டு ஊர், மக்கட்பெயர்களைத் தங்கள் மொழிநடைக்கேற்பத் திரித்து வழங்குவர். இவ்வாறு திரித்துக்கொள்ளவேண்டும் என்று தமிழ் இலக்கணமே விதிக்கிறது" - என்பதே அது. இவ்வாறன்றி மொழிபெயர்த்துத் தங்களதாகக் காட்டும் வடமொழியாளர் போக்கு இசைத் தமிழ்க் கலையையும் தீண்டியது. பழங்காலத்திய இசைத் தமிழ்ச் சொற்களில் ஏழிசைக்குரிய பெயர்கள் பிற்காலத்தவரால் எத்தகைய கருத்தோடு வடசொற்களால் குறிக்கப்படுகின்றன என்பதை இன்றைய ஆராய்ச்சி அறிவிற்கு எட்டிய வகையில் தக்க ஏதுக் களைக்கொண்டு சுருக்கமாகக் காண்பாம்.

இசை

இசை என்ற சொல்லுக்கு ஒலி அணுத்திரளின் நீட்சி-குழல்வழி இயல்பாக அறியப்படுவதும், ஊதியறியப்படுவதும், யாழ் நரம்புகளைத் தெறித்து அறியப்படுவதும், அவற்றிற்கேற்பக் குரலால் பாடிப்பாடி அறியப்படுவதுமாகிய ஒலிவகைகளின் நீட்சி என்பது பொருளாகும்.. அஃதாவது செவிப்புலனால் ஓர்ந்தறியப்படும் இசைவான ஒலியின் நீட்சி இசையாகும். அதனையுணர்ந்தே "இசைப்பு இசையாகும்" என்றார் தொல்காப்பியர். அத்தகைய ஒலியின் நீட்சி இயல்பாகவே கேட்போருளத்தை இசைய வைக்கும். இசை என்ற இச்சொல்லின் பொருளை ஒருவாறு மொழிபெயர்த்து, தானே இன்பத்தைத் தருவது என்ற பொருளில் அஃதாவது ஸ்வயமாகவே ரஞ்சகத்தைக்கொடுப்பது எனக்கொண்டு 'ஸ்வரம்' எனப் பிற்காலத்தார் மாற்றம் செய்து கூறியும் எழுதியும் வந்தனர். இந்தச் சொல்லையும் தமிழறிந்தாரிற் சிலர் பழந்தமிழ் வழி உணராது தமிழ் எழுத்தில் எழுதுங்

கால் சுரம் எனக்கூறி எழுதத் தொடங்கினர். எவ்வாறு எழுதியிருப்பினும் இசை என்ற வழக்கும், எழுதிவரும் பழக்க முறைமையும் தமிழ் மக்களை விட்டு அறவே நீங்கி விடவில்லை என்பது அறியத்தக்கது.

இசைக் கலைக்கு முதலிடந்தந்து அதனைப் பற்றிநிற்குமளவில் தமிழ்மொழி பயன்படுமாயின் "இசைத்தமிழ்" எனவும், தமிழ்மொழிக்கு (சொற்களுக்கு) முதலிடந்தந்து அதனைப்பற்றி நிற்குமளவில் இசைக்கலை பயன்படுமாயின் "தமிழிசை" எனவும் கூறப்படும்.

ஏழிசை

ஏழிசை என்ற சொல்லே பழந்தமிழிலும், இடைக்காலத் தமிழிலும் தற்காலத் தமிழிலும், வழங்கி வருவதையறியலாம். "ஏழுகொலாம் இசையாக்கினதாமே" என்று திருநாவுக்கரசரும் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று சுந்தரரும் அருளியிருப்பது நன்கு தெரிந்தனவே. இச்சொல் வடமொழியில் 'ஸப்தஸ்வரம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. ஏழில் (ஏழ்+இல்) என்ற சொல்லும் பின்னர் ஏழிசையிடம் (இல்=இடம்) என்ற பொருளில் ஸப்தகம், ஸப்தஸ்வரக்ரஹம் என்றெல்லாம் குறிக்கப்பட்டன. குறிலிசை, நெடிலிசை எனக் கூறப்படவேண்டிய இடங்கள் ஹ்ரஸ்வஸ்வரம், தீர்க்கஸ்வரம் என முற்றும் மொழி பெயர்க்கப்பட்டன.

பண்டைய ஏழிசையின் முதலமைதிப் பெயர்முறை முதன் முதலில் குழல் வழியும், பேரியாழ்வழியும் உணர்ந்து சிறந்த கருத்தோடு தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி என அமைக்கப்பட்டது. இவற்றையே பிற்காலத்தார் வடமொழியில் முறையே காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ருஷபம் என மொழி பெயர்த்தனர். ஈண்டு அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து ஏதுக்களோடு அறிதல் நலம்.

தாரம்

தாரம் என்ற சொல் தார் எனும் வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த சொல்லாகும். தார் என்ற சொல் முதல் என்ற பொருளினைத் தரும். குழற்கருவியின் முதலொலி, யாழ்க்கருவியின் முதல் நரம்பொலி, அவ்வப்போது ஆணோ பெண்ணோ தத்தம் குரலால் எழுப்பும் முதலொலி இவற்றையெல்லாம் தாரம் எனக்கூறுவது பண்டை வழக்கு. பழந்தமிழில் முதல் இசைக்குத் தாரம் எனப் பெயர் வைக்கப்பட்டது. அதன் உயிர்க் குறியீட்டெழுத்து எழுத்துக்களில் முதலாய அகரம் ஆகும். அதன் நெடில் ஆ ஆதலான், ஆ+தாரம் = ஆதாரம் எனப்பட்டது. இவ்வடிநிலைக் கருத்தினை மாற்றம் செய்யவேண்டாமையினால் தமிழ் வழி ஆதாரத்தை வட எழுத்துக்களில் ஆதாரம் என எழுதித் தமிழ்ச் சொல்லையே வட சொல்லாக்கி வைத்தனர். அன்றியும், தாரத்திற்கு மெய்க் குறியீட்டெழுத்தாகத் தமிழ்மொழியின் மெய்யெழுத்தில் முதலெழுத்தில் அமைந்த கா என்ற எழுத்தைக் கொண்டு பழந்தமிழ் மக்கள் கா+தாரம்; கா ஆகிய தாரம் காவாந்தாரம்—கா என்னும் குறியீட்டு எழுத்தினையுடைய தாரம் காந்தாரம் எனக் கூறினர். இதனை மாற்றமில்லாது இதன் ஆதிப் பொருளமைப்பை ஒருவாறு உளத்திற் கொண்டு கா என்ற எழுத்தைத் தரித்துக்கொள்ளும் இசை என்ற பொருளைக் காட்டி கா + தாரம் = காந்தாரம் என்று அப்படியே வடவெழுத்தில் எழுதினர்.

குரல்

குரல் என்ற சொல் இக்காலத்தும் மக்களுக்கே உரியதாகக் கூறப்படுவது யாவராலும் உணரப்படுகிறது. வேறு எதற்கும் குரல் என்ற சொல்லைப் பயன்

படுத்துவதில்லை. ஆடவர், பெண்டிர் என்ற இருபாலார்க்கும் குரல் பொதுவா யினும் மகளிர் குரலே இனிமையிற் சிறந் தது; கேட்போர்க்கும் இன்பம் பயப்பதா கும். பழங்காலத்தில் குழலின் இரண் டாம் ஒலி, பேரியாழின் இரண்டாம் நரம்பின் ஒலி, இவை மகளிர் குரலினை ஒத்து இருந்தமையறிந்து குரல் எனவே குறிக்கப்பட்டன. பழைய இசைத் தமிழ் வழியே கூறப்பெறும் குரல், மக ளிர் குரலைத்தான் குறிக்கும் என்பது ஒருதலை.

குழல் வழியறிந்த மூன்றிசைகளில் இவ்விசை நடுவிசை. மூன்று கூற்றில் ஒரு கூறு நடுக்கூருகவும் நிற்கும். தலைக்கூறு, இடைக்கூறு, கடைக்கூறு என்பவற்றில் இடைக்கூறு நடுக்கூரு கும். நடுநின்ற இசை என்ற கருத்தில் நடுநிலை என மத்தியத்தானம் என ஒரு வாறு உளங்கொண்டு பிற்காலத்தவ ரால் இவ்விசைப்பெயர் மத்தியில் இருப் பது—மத்தியில் இருந்து பிறப்பது என்ற பொருளில் மத்யமம் என மொழிபெயர்த் துக் கொள்ளப்பட்டது. குரலிசைக் குரிய பண்டைய உயிர்க் குறியீட் டெழுத்து ஈ எனப்படும். மெய்க்குறியீட் டெழுத்து மா ஆதலால் அதனையும் உளங்கொண்டு மத்யமம் எனக்கூறினர் என்றலும் பொருந்தும்.

துத்தம்

துத்தத்திற்குரிய உயிர்க்குறியீட் டெழுத்து ஊ எனப்படும். பேரியாழின் மூன்றும் நரம்பின் பெயர் துத்தம். பழந் தமிழில் மூன்றுமிசை துத்தம். தாரத்திற் குத் துத்தம் ஒரு வழியில் பகையாகும். அது குறித்துத் துத்த நரம்பொலிக்குரிய மெய்க் குறியீட்டெழுத்து பா ஆதலால் பகையிசை என்ற குறிப்பும் வெளிப் படும். பகை என்ற சொல்லின் பொருளை வடமொழியில் விரோதம் எனக்கூறுவது வழக்கு. பா என்ற குறியீட்டெழுத்தை யுணர்ந்து அவ்வெழுத்து தமிழிலும் வட மொழியிலும் வல்லினமாய் ஐந்தாம் எழுத்தாக வருவதால் இந்த இசையே ஐந்தாவது எனும் பொருள்பட, பஞ்ச மம் எனப் பிற்காலத்தார் கூறிவிட்டனர். பழைய தாரமுறை, குரல்முறை, இளி முறை என்பவற்றில் இளிமுறையில் துத் தம் ஐந்தாவதாகவும் அமைவ தியல்பு. முதலைந்திசை மட்டும் வழங்கிய காலத் தில் முன்னைய தாரம் குரல், பின்னைய உழை இளி இவற்றிற்கிடையே துத்தம் நிற்பதால் நடுப்பகுதி நடுவிசை என்ற பொருள் இசைத்தமிழ்ப் பொருளாதல் தெளிவு. துத்தம், துந்தம், துருத்தி என்பன ஒருபொருட்கிளவி என்பார் பாவாணர். ''துத்தம் நின்று பண் செய்யும் சூழ் பொழில் துருத்தி'' என் பது திருஞானசம்பந்தரது திருமொழி.

கைக்கிளை

பழந்தமிழ் யாழ்க்கருவியாம் பேரி யாழில் முதல் நரம்பு, அஃதாவது தார நரம்பிற்கு முதலேழிசை முறைப்படி ஐந் தாம் நரம்பு உழை. அது கிளையெனப் படும். தாரத்திற்கு நான்காம் நரம்பு சிறிய கிளை. உரிய கிளை உழை. சிறிய கிளை என்பதற்காகக் கை எனும் சிறுமை பற்றி வருவதொரு இடைச்சொல்லைச் சேர்த்து, கைக்கிளை என இவ்விசையின் பெயர் அமைக்கப்பட்டது. இதன் ஒரு மைபற்றி ஒருதலையாகத் தனித்து நின்று விளங்குமிசை என்றனர். தனித்து நிற் கும் தன்மையினுல் இவ்விசையின் உயிர்க்குறியீட்டெழுத்து ஏ எனவும், மெய்க் குறியீட்டெழுத்து தா எனவும் நிறுவப்பட்டன.

இவ்விசையின் பெயர் பிற்காலத்தவ ரால் அதன் குறியீட்டெழுத்து அமைதி ஒன்றினை மட்டுமே கொண்டு தா எனும் எழுத்தினைத் தழுவிக்கொண்டு வருவது எனும் பொருளில் தைவதம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்விசை யின் நீர்மை தனித்து இருப்பதால் அதனை இசைவல்லார் நன்கறிந்து பாட

வேண்டும் என்ற குறிப்பில், நயத்திற மாகப் பாடப்படுவது, கொப்பூழ் முதலிய இடங்களைத் தழுவிக்கொண்டு வருவது என்பவற்றுலும் தைவதம் என்ற பெயர் இதற்காயிற்று எனக் காரணமும் காட்டப்பட்டது. தாரம், குரல், துத்தம் என்ற மூன்றிசைகளையும் மாறி மாறி இசைக்குமிடத்து அவை செவிப்புலன் வழி உள்ளத்தை உருக்கும் இசையின்பம் தருவது. அதுபோன்றே குரல், துத்தம், கைக்கிளை என மூன்றை மட்டும் இசைத்தால் இனிமையுண்டு. ஆனுல், தாரம், குரல், துத்தம் என்பவற்ருேடு கைக்கிளையையும் சேர்த்திசைத்தால் ஒலியின்பம் அத்துணைச் சிறப்பாயிராது. அதனையறிந்தே இவ்விசை தாரமுறையில் தனித்திருப்பதால் கைக்கிளை எனப்பட்டது.

உழை

இசைத்தமிழ் மறையில் இந்த இசை, முதல் நரம்பாய தார நரம்பின் அளவில் மூன்றில் இருகூற்றில் ஒலிப்பது. இது ஐந்தாம் நரம்பாகப் பேரியாழில் இருப்பது. பிறப்பு முறையில் கிளை எனப்படுவது. முதலிலிருந்து தோன்றினமையால் கிளையாயிற்று. முதலிசையோடு ஒத்திசைக்கும் நீர்மையது இவ்விசை. அஃதாவது சேர்ந்து-சேர்த்து இசைக்கப்படுவது. முதலிசை போன்றே தானும் தன்னிடத்தில் முதன்மையாக நின்று தன்னிலிருந்து பல கிளைகளைப் பிறப்பிக்கவல்லது. இவையெல்லாம் இவ்விசைக்குப் பொதுத்தன்மைய. ஆயினும், சிறப்பாகப் பேரியாழில் இவ்விசைக்குரிய நரம்பு இடக்கையால் இசைக்கப்படுவது; இடது கைவிரலால் தெறித்து அறியப்படுவது. இத்தகைய பொருளையெலாம் அடக்கிப் பண்டைய இசைத் தமிழ் வல்லார் இவ்விசையை உழை என்றனர்.

இவ்வாருன பொருளமைதியில் சேர்ந்திசைப்பது என்ற பொருளை மட்டும் உணர்ந்த பிற்காலத்தார் சேரப்பெற்றது-இளிமுறையில் மற்றைய ஆறிசைகள் தன்னிடம் சேருந்தகைமையது என்ற முறையில் நிஷாதம் எனப் பெயர் மாற்றம் செய்தனர். உழை என்ற சொல் தூய தமிழ்ச்சொல். அன்றியும், சிறப்பு முகர ஐகாரமாம் 'ழை' என்ற எழுத்தைக் கொண்ட சொல். ஆதலான், பொருள் வகையில் வேறு சொல்லாகவே மாற்றப்பட்டமை தெற்றென விளங்குகிறது. இதன் உயிர்க் குறியீட்டெழுத்து ஐ; மெய்க்குறியீட்டெழுத்து ந எனப்படும். நி எனக் குறிப்பது வழக்கம்.

இளி

இந்த இசைக்குரிய நரம்பு பேரியாழில் ஆரும் நரமபாகும். மூன்ரும் நரம்பு போன்று இசைமுறையில் இதுவும் பகையிசையாகும். ''நின்ற நரம்பிற் காறும் மூன்றும் சென்று பெற நிற்பது கூடமாகும்'' எனப் பண்டையோர் கூறினர். இசைத் தமிழில் பகை நரம்பின் இசையைத் தனித்து முதலாகக் கொள்ளுமிடத்து அஃதே முதலிசையாகிவிடுதல் இயல்பாகும். பகையாக இருத்தலை நீக்கவே இதனைத் தனித்த கருவியில் முதல் இசையாகக் கொண்டு ஏனைய ஆறிசைகளை இதனினின்று பிறக்குமாறு செய்தமையால் இளி நரம்பிற்குப் பட்டடை என்ற பெயரும் இசைத்தமிழில் கூறப்படுவதாயிற்று. இதனை அடிமனை எனக் கூறுவதும் பண்டைய வழக்கேயாம். இவ்விசைக்குரிய பொருளான தன்னிலிருந்து ஆறு பிறப்பிப்பது எனும் பொருளை மட்டும் உளங்கொண்ட பிற்காலத்தார் ஆறு பிறக்கிறது - ஆறிலிருந்து பிறக்கிறது-மூக்கு, கழுத்து, மார்பு, தாடை, நாக்கு, பல் ஆகிய இவ்வாறிடங்களிலிருந்தும் பிறக்கிறது; இந்த இசைக்குப் பின் வருகிற ஆறு இசைகளும் இதிலிருந்து பிறக்கிறது என்ற வகைகளைக் கருத்திற் கொண்டு ஷட்ஜம், அதாவது ஷட்-ஜம் (ஷட்=ஆறு;

ஜம்=பிறப்பது) எனப் பெயர் மாற்றம் செய்தனர். இசைத்தமிழ்த் தாரமுறை இதனை ஆருவது இசையெனக் கொண்டது. ஆருவது என்பது மறக்கப்பட்டமையால் வெவ்வேறு பொருள்களைக் கொள்ள நேரிட்டது. ஆயினும், ஆறு என்ற எண்முறை என்னவோ சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருப்பது நன்கு புலனாகிறது. இதன் உயிர்க் குறியீட்டெழுத்து ஓ என்பது; மெய்க்குறியீட்டெழுத்து சா எனப்படும். இதனடியாகவே 'சரிகமபதநி' என்ற ஏழெழுத்துக்கள் வரையறை செய்யப்பட்டன.

விளரி

மிகப்பழைய முறையாம் தாரமுறையில் இவ்விசையே ஏழாமிசை. ஒரு நிரல் அதாவது ஒரு வரிசையில் முடிவாக நிற்குமொன்றை விளர் எனக் கூறுவது தமிழ் மரபு. விளர் என்ற சொல் நிரல் முடிபு எனும் பொருளில் இகர இறுதிநிலைபெற்று விளரி எனப்படுவதாயிற்று. இவ்விசையின் உயிர்க்குறியீட்டெழுத்து 'ஔ' எனப்படும். மெய்க்குறியீட்டெழுத்து 'ர' எனப்படும். தாரத்திற்கு முதலெழுத்து 'கா' எனக் கொண்டு இறுதியிசையாகிய இவ்விசைக்கு இதன் பெயரமைப்பில் அமைந்த இறுதி எழுத்தாய 'ரி' என்பதையே பண்டையோர் குறித்தனர். ஒரு நிரவின் ஒலித்தொகுதி தொடங்கி முடியும் வரை சென்று முடிவு பெறுவதற்குப் போக்கு அல்லது செலவு என்பது பழந்தமிழ் வழக்கு. அஃதே குறுகிய அளவில் இருப்பின் குறும்போக்கு எனப்படும்; நெடிய அளவில் இருப்பின் நெடும்போக்கு எனப்படும். இவ்விசைக்கு அந்நீர்மை உண்டு. போக்கு என்பதைப் பிற்காலத்தார் பிரவேசம் என மொழி பெயர்த்து நெஞ்சத்தில் பிரவேசிப்பது, பிரவேசிக்கப்பட்டது என்ற பொருளில் பண்டை விளரி என்ற இசைப் பெயரை ருஷபம் எனப் பெயர் மாற்றம் செய்தனர். இங்ஙனம் பண்டைய ஏழிசைக்குரிய தனித்தமிழ்ச் சொற்கள் பிற்காலத்தே வடமொழி பயின்றவர்களால் மாற்றப்பட்டு வடசொற்களால் கூறப்பட்டன என்பது நன்குணரக்கிடக்கிறது.

> இசை தமிழ்ச் சொல். இராகம் வடசொல். இராகம் என்றால்தான் பெரும்பாலான மக்கட்குத் தெரிகிறது. ஆதலால், இராகம் என்று சொல்லித்தான் இசையைப் பற்றி விளக்கவேண்டிய வெட்கக் கேடான நிலை தமிழர்களுக்கு உண்டாகியிருக்கிறது.
>
> —மறைமலையடிகள்.
>
> (தமிழின் தனிச்சிறப்பு — பக்கம் 9)

சிலப்பதிகார உரையாசிரியர்
அடியார்க்கு நல்லார்
எழுதிய உரையில் அமைந்த

அரங்கின் அமைப்பு

மாதவி அழகின் முழு உருவினள். அவள் ஆடலும் பாடலும் பயின்று அவற்றில் நிறைந்தாள். அரசன் திருமுன் அரங்கேறினாள். பட்டமும் பரிசும் பெற்றாள். இதனைச் சிலப்பதிகார அரங்கேற்றுகாதை விவரிக்கிறது. அதன்கண் கூத்து-நாடகம் ஆடுதற்குரிய அரங்கின் அமைப்பு 19 அடிகளில் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் தந்துள்ள விளக்கமே எளிமையாக்கப்பட்டு இங்கு விரிவாகத் தரப்படுகிறது.

அரங்குக்கு இடம் தேர்ந்தெடுத்தல், அரங்கின் நீள அகல உயர அளவுகள், அரங்கின் கட்டுமானம், விளக்கொளி அமைத்தல், திரைச் சீலைகள் கட்டல், அரங்குக்கு அழகு கூட்ட ஒப்பனைகள் செய்தல் ஆகியனவாய் ஆறு பகுதிகள் விளக்கப்பட்டுள்ளன.

இடத் தேர்வு

அரங்கு அமைத்தற்கெனச் சிற்ப நூல் ஆசிரியர் இலக்கணம் வகுத்துள்ளனர். அவ்வியல்பான இலக்கணத்தில் தவறாத அரங்கு செய்தற்குக் குற்றங்கள் நீங்கின நிலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கோயில், துறவிகள் உறையும் இடம், செந்தண்மை பூண்ட அந்தணர் இருக்கை, கிணறு, குளம், சோலை முதலிய இடங்களின் பக்கலில் உள்ள இடத்தை அரங்கு அமைக்கும் இடமாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது. ஊரின் நடு இடமாக அமைய வேண்டும். தேர் ஓடும் தெருக்கள் இரண்டு கூடும் இடமே பொருந்தியதாம். அவ்விரு தெருக்களின் எதிர்முகமாக அரங்குக்கு இரண்டு காட்சிப் பக்கங்கள் அமையும்.

எந்த நிலையிலும் சரிந்து விழாத, கலையாத, இடையூறுக்கு இடந்தராத இடமாதல் வேண்டும்.

அவ்விடத்து நிலத்து மண்ணை ஆய்ந்து தேர்ந்தெடுக்கவேண்டும். மண்ணினது நிறை, மண்ணினது மணம், மண்ணினது சுவை, உறுதி அறிந்து நிலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மண்ணின் நிறை:

நிலம் – வன்மை நிலம், மென்மை நிலம், இடைப்பால் நிலம் என மூன்று வகைப்படும். மண்ணின் நிறை என்பது, நிலத்தில் குழிதோண்டி எடுத்த மண்ணை அதே குழியில் கொட்டி நிரப்பினுல் மண் எஞ்சின் அது வன்பால் நிலம்; குழி மண் குறையுமானுல் அது மென்பால் நிலம்; இவையிரண்டும் ஆகாதன. குழிமண் சமம் ஆயின் அஃது இடைப்பால் நிலம். இஃதே ஏற்ற நிலம்.

மண்ணின் மணம் :

கொத்திக் கல்லி எடுக்கப்பட்ட மண்ணின் மணத்தை மோந்து காணவேண்டும். மண்ணில் கொள்ளின் இலைமணம், செந்நெல்லினது மணம், சண்பக மலர் மணம், சுரபுன்னை மலர் மணம் கமழின் நன்மையான நிலமாம். இவையல்லாத மணம் தோன்றின் தீய நிலம்.

மண்ணின் சுவை :

[1]மண்ணில் துவர்ப்புச் சுவை படின் அந்நிலம் ஆடுவோர்க்கு அச்ச உணர்வை ஊட்டும். புளிப்பு நோயையும், கார்ப்பு பெரும்பசியையும், கைப்பு கேட்டையும், உவர்ப்பு கலக்கத்தையும் உண்டாக்கும். இச்சுவைகள் படும் நிலங்களை நீக்கி இனிப்புச் சுவை தரும் மண்ணுள்ள இடத்தைத் தேர்தெடுக்கவேண்டும்.

நிலத்தின் உறுதி :

என்பு, உமி, கூழாங்கற்கள் கலந்த நிலம் உறுதியாகாது. களி மண், உப்பு மண், சேற்று மண், சாம்பல், புழுதி முதலியன உள்ள நிலமும் உறுதியுடையதாகாது. இவையற்ற நிலமே உறுதி கொண்ட நிலம்.

இவ்வாறு பல்வகைக் குற்றங்களும் நீங்கிய நிலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அரங்கின் அளவு

அரங்கின் அளவுபற்றி நூல்கள் வரையறை செய்துள்ளன. அளவுகோலாக மூங்கிலைக் கொள்ளவேண்டும். அம்மூங்கிலும் பொதியம், வேங்கடம் முதலிய தூய மலைப் பக்கத்தில் நீண்டு உயர வளர்ந்ததாதல் வேண்டும். அஃதும் ஒரு கணுவுக்கும் மற்றொரு கணுவுக்கும் இடை ஒரு சாண் அளவு கொண்டதாதல் வேண்டும்.

[2]ஒரு கோல் என்பது தலையாய மகனுர் பெருவிரல் அகலம் 24 கொண்டதாகும். தலையாய மகனுர் மிக உயரமும், மிகக் குட்டையும் இல்லாதவராவார். பெருவிரல் அளவு என்பது அணு முதலா

1 உவர்ப்பில் கலக்கமாம், கைப்பில் வரும்கேடு,
துவர்ப்பில் பயமாம் சுவைகள் — அவற்றில்
புளிநோய், பசிகார்ப்பு பூங்கொடியே, தித்திப்
பளிபெருகும் ஆவ தரங்கு"

2 "ஒத்த அணுமுதல் உயர்ந்துவரு கணக்கில்
உத்தமன் பெருவிரல் இருபத்து நாலுள
கோலே கோடல் குறியறிந் தோரே" — பழம் பாடல்

கப் பெருகிவரும் வாய்பாடு கொண்டது. பின் வருவது அவ்வாய்பாடாகும். எட்டு அணுக் கொண்டது ஒரு தேர்த் துகள் (தேர் ஓடுங்கால் எழும் ஒரு தூளி தேர்த் துகளாம்); தேர்த் துகள் எட்டுக் கொண்டது ஓர் இம்மி; இம்மி எட்டுக் கொண்டது ஓர் எள்; எள் எட்டுக்கொண்டது ஒரு நெல்; நெல் எட்டுக்கொண்டது ஒரு பெருவிரல் அளவாம்.

[1]இவ்வாறு கொண்ட கோலால் ஏழு கோல் அகலமும், எட்டு கோல் நீளமும், ஒரு கோல் உயரமும் உடையதாய் மேடை அமைக்கப்படவேண்டும்.

அரங்கின் கட்டுமானம்

இம்மேடையின் மேற்பரப்பில் பலகை பாவப்பட வேண்டும். அப்பலகையின் மேல், பார்வைக்கு மறைவில்லாதபடி தூண்கள் நிறுத்தப்பட வேண்டும். மேடைப் பரப்புக்குமேல், நான்குகோல் உயரம் விட்டுத் தூண்களின் மேல் உத்தரப் பலகை போடப்பட வேண்டும். மேடையின் பின் பகுதியில் வலப்புறமும் இடப்புறமுமாக இரண்டு வாயில்கள் அமைக்கப்படவேண்டும். இவ்வாயில்கள், ஆடுவோரும் பிற கலைஞரும் மேடையில் புக ஒன்றும், மேடையினின்றும் வெளியேறி மறைய ஒன்றுமாக அமைவன.

வாயில்கள் ஏற்புடையனவாய் அமைந்ததற்கேற்ப மேடையினின்றும் வெளியேறி மறைந்துபோய் அமர, ஆடுவோர்க்குத் தனி இடமும், ஒப்பனை செய்யும் ஒப்பனை ஓவியர் இருத்தற்கு ஏற்பக் குடிஞை என்னும் தாழ்ந்த சிற்றறையும் பின்புறத்தே அமைக்கப்படவேண்டும்.

அரங்கின் ஒரு முகப்பின் முன்னே மன்னரும், அவர்தம் குடும்பத்து மாந்தரும், அமைச்சர் முதலான அரசியற் சுற்றத்தாரும் அமரும் அவையரங்கமும், மறுமுகப்பின் முன்னே பல்வகைக் குழுவினராம் பொதுமக்கள் அமரும் இடமும் வகுத்தமைக்கப்படவேண்டும்.

[2]உத்தரப் பலகையின் மேலிடம் அரங்கின் நெற்றியாகும். அதன்கண் நான்கு வகையான வண்ணப் பூதர் உருவங்களை எழுதி யாவரும் வணங்குமாறு வைத்தல்வேண்டும்.

ஒளி அமைப்பு

அரங்கின் ஒளிக்கெனப் பக்கங்களில் விளக்குகளை அமைக்கவேண்டும். அவ் விளக்குகள் தொங்கவிடப்படின் அசைந்தாடி ஒளிச் செவ்வையிலாது போகும். ஆகவே, அசைவில்லாத வகையில் நிலை விளக்குகளாக அமையவேண்டும். அவ் விளக்கொளியால் தூண்களின் நிழல் அரங்கிலும் அவையிலும் விழாதபடி விளக்குகளை வைத்தற்குரிய இடத்தைத் தேர்ந்து அமைக்க வேண்டும். ஒளி விளக்குகளால் அரங்கினுக்கு வனப்பு உண்டாகுமாறு செய்யவேண்டும்.

திரைச்சீலை அமைப்பு

திரைச்சீலைகளைப் பின்வரும் வரையறையோடு கட்டவேண்டும்.

---

1 "அக்கோல் ஏழுகன் றெட்டு நீண்டும்
ஒப்பால் உயர்வும் ஒருகோல் ஆகும்;
தற்கோல் வேந்தன் நயக்குறு வாயில்
முக்கோல் தானும் உயரவும் உரித்தே" — செயிற்றியனர்.

2 "கூறிய உறுப்பில் குறியொடு புணர்த்தாங்
காடுநர்க் கியற்றும் அரங்கின் நெற்றிமிசை
வழுவில் பூதம் நான்கும் முறைப்பட
எழுதினர் இயற்றல் இயல்புணர்ந் தோரே" — பழம்பாடல்

[தேர் ஓடும் தெருக்கள் இரண்டு கூடும் இடத்தில் அரங்கு அமைக்கப்படும் எனக் கண்டோம். அதுகொண்டு அரங்கு இருபக்கப் பார்வையாளர்க்கும் காட்சி வழங்குவது என்பதை அறியலாம். காட்சி வழங்காத மற்றைய இரு பக்கங்களில் பின்பக்கத்தில் இரு வாயில்கள் அமைவதால் அப்பக்கம் அடைக்கப்பட்டு பின்னல் சிற்றறை கொண்டமைந்துவிடுகிறது. மற்றொரு பக்கம் முழுதும் அடைக்கப்பட்டது என்பதை உணரலாம். இவ்வடைப்புகள், இடப்புறத் தூண்கள் இரண்டில் பின்புறத் தூணை இடையே வைத்து இருபுறத்தும் அடைக்கப்பட்டவை. எனவே, காட்சி நல்கும் இரு பக்கங்களிலும் திரைச்சீலை அமைக்கப்படவேண்டும். இவற்றை உளத்துக் கொண்டு திரைச்சீலை விளக்கத்தை அறியவேண்டும்.]

திரைச்சீலை, 'எழினி' எனப்படும். அஃது ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்னும் மூன்று வகையினது. இரண்டு முகப்புகளைக் கொண்டு காட்சி வழங்கும் மேடையில் ஒரு முகப்பின் இடப்புறத் தூணிடத்துச் சுருங்கி ஒடுங்கியிருந்து, விரியுங்கால் விரிந்து ஓடி, அரங்கை மூடி, பின் மீண்டு சுருங்கி ஒடுங்குவது 'ஒருமுக எழினி' எனப்படும். மற்றொரு முகப்பில் வலப்புறத்தமைந்த இரண்டு தூண்களினின்று இரண்டு திரைச்சீலைகள் விரிந்து, அரங்கின் நடுவிடத்தே பொருது ஒன்றுகூடி அரங்கை மூடும்; பின், விலகி அவ்வத் தூண்களிடத்தே சுருங்கி ஒடுங்கும். இவையிரண்டும் கூடிய திரைச்சீலை 'பொருமுக எழினி' எனப்படும். இரண்டு திரைச்சீலைகள் விரிந்து பொருது நிற்பதால் இது 'பொருமுக எழினி' எனப்பட்டது.

உத்தரப்பலகையின் மேல் திறந்திருக்கும் நடுவெளியில் மேற்கட்டியாகக் கட்டப்படுவது 'கரந்துவரல் எழினி' எனப்படும். இஃது வானத்தே உலவும் சாரணர்க்கென அமைக்கப்படுவது. இவ்வாறு திரைச்சீலைகள் மூவகையினவாய்க் கட்டப்படும்.

ஒப்பனை செய்தல்

அரங்கின் மேற்கூரைப் பகுதியில் மேற்கூறப்பட்ட கரந்துவரல் எழினிக்குக் கீழே மேற் கட்டியாக ஓவியம் தீட்டப்பெற்ற விதானம் கட்டப்படவேண்டும். உத்தரப் பலகைகளிலிருந்து வெண்மை, பொன்மை, செம்மை நிற முத்து மாலைகள் அழகாகத் தொடுக்கப்படும். அம்முத்து மாலைகள், தூக்கியும் வளைத்தும் சரித்தும் எழில் விளங்கக் கட்டப்படும். இவ்வாருய் அரங்கு ஒப்பனை பெறவேண்டும்.

மேற்குறித்தாங்கு இலக்கணங்களோடு எழுப்பப்படும் அரங்குக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவும் புதியனவாய்க் கொள்ளப்படும். எனவே, புதுமையும் செம்மையும் விளங்கும் அரங்காக அமைந்து நிகழ்ச்சிகள் சிறக்கத் துணை நிற்கும்.

> நாடகமுங் கூத்துமெல்லாம் முதன் முதலில் கண்டறிந்து நூல்கள் எழுதினேர் பண்டைத் தமிழாசிரியர்களேயாதல் நன்கு பெறப்படா நிற்கும்.
>
> — மறைமலையடிகள்.
>
> (சாகுந்தல நாடக ஆராய்ச்சி பக்கம்-19)

பொருளியல்

மைய அரசு, செயலுறு பொருளியல் ஆய்வுக்குழுத் துணை இயக்குநர்

டாக்டர் பா. நடராசனுர்

எம்.ஏ., டி.லிட்.,

எழுதிய

பொருளியல் வள்ளுவர்

ஒரு பொருளியல் ஆய்வாளர் என்ற அளவில் வள்ளுவரை எவ்வாறு மதிப்பிடுவது? வள்ளுவர் கருத்துக்கள் பல வற்றைப் புத்தருடனும் கிறித்துவுடனும் சிலர் ஒப்பிட்டுப் பேசுகின்றனர். அருள் வாழ்வையும் அற வாழ்வையும் அறிவுறுத்தும் அளவில் அவரை அத்தகையோருடன் ஒப்பிடல் பொருந்தும். புத்தரும் கிறித்துவும் வானுலகம் பற்றியே பெரிதும் பேசுகின்றனர். துறக்கம், மேலுலகம் இவற்றை அடைவதற்கு ஒருவன் செய்ய வேண்டும் கடமைகளையே அவர்கள் பெரிதும் கூறினர். ஆன்மாவின் தூய்மையையும் உயர்வையும் அறிவுறுத்தவே அவர்கள் வாழ்ந்தனர். ஆன்மாவை உய்வித்தலே அவர்கள் நோக்கமாக இருந்தது. மன்பதை அமைப்புக்கும், பொருளியல் வாழ்வுக்கும் அவர்கள் பொன்மொழிகளில் கருத்துக்கள் பொதிந்திருந்தால் அவை வாய்ப்பால் எதிர்ப்பட்டவையே. பொருளியல் துறையில் கிறித்து எப்பக்கமும் சாராமல் நடு நிலையை வகித்தார். ''சீசருக்கு உரியதைச் சீசரிடமும், கடவுளுக்கு உரியதைக் கடவுளிடமும் தருக'' என்று கூறினர். வள்ளுவரோ 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' நெறி வகுக்க

வந்தவர். எனவே, வள்ளுவரின் பொரு ளியல் மதிநுட்பத்தை மதிப்பிட வேண்டு மாயின் உலகியல் வாழ்வு பற்றிய ஆய்வா ளர்களுடன் ஒப்பிடுவது பொருத்தமாகும்.

அவ்வாறு ஒப்பிடுங்கால், கிரேக்கம், வடமொழி, இன்றையப் பொருளியல் ஆகிய மூன்று துறைகளையும் துருவி, ஆங்காங்கு தேர்ந்த ஆசிரியர்களைச் சான்றுக்கு அழைக்க வேண்டும். கிரேக்க அறிஞர்களாக பிளேட்டோவையும், அரிஸ்ட்டாட்டிலையும் தேர்ந்து கொள்ள லாம். இவ்விருவரது நூல்களும் ஆய்வு களும் ஏறக்குறைய இருபது நூற்றுண்டு களாக மேலைநாட்டுப் பொருளியல் அறிவுக்கு அடிப்படையாக இருந் துள்ளன. தொழிற்புரட்சி தோன்றிப் பொருளியல் கருத்துக்கள் மாறுபாடு அடைந்த பத்தொன்பதாம் நூற்றுண்டு வரை இவர்களது கருத்தே மேலை நாட்டுப் பொருளியலுக்கு அடிப்படை யாக இருந்தது. அரிஸ்ட்டாட்டில், பிளேட் டோவின் மாணுக்கராக இருந்தாலும் பிளேட்டோவின் "குடியரசு" [*Republic*] என்ற நூலுக்கும் அரிஸ்ட்டாட்டிலின் "அரசியல்" [*Politics*] "ஒழுக்கவியல்" [*Ethics*] என்ற நூல்களுக்கும் மிக்க மாறுபாடுகள் உள்ளன. ஆகவே, அவர் களைத் தனித்தனி ஒப்பிட்டு நோக்க வேண்டும். வடமொழியில் கௌடில்யர் எனும் சாணக்கியரின் "பொருளியற் கலை நூல்" (அருத்த சாத்திரம்) முன் வந்து நிற்கிறது. தற்காலப் பொருளியல் ஆசிரியர்களுள் "நாட்டின் செல்வ வளம்" [*Wealth of Nations*] என்னும் நூலை இயற்றிய ஆதம் சிமித்தே கண் முன் தோன்றுகிருர்.

ஒப்பு நோக்கி மதிப்பிடுவதில் ஒரு கருத்தைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். பிற கலைத்துறைகளிற் போன்றே பொருளியலிலும் ஓர் அடிப் படைக் கருத்தை அதன்மேல் எழுதப் பட்ட சான்றுகளைக் கொண்டே ஏற்க முடியும். மேற்சான்றுகள் தவருயின் அடிப்படை உண்மைகளும் பயனற் றவையே. இங்குத் தேர்ந்தெடுத்துள்ள அறிஞர்களின் கருத்துரைகள் யாவும் அடித்தளத்தின்பாற் பட்டவைகளே. ஆயினும், மேலெழுந்துள்ள மண்டபங் களும் கோமாடங்களும் வேறு வேருயின் அடித்தள ஒற்றுமையை நிறுவுவ தெவ்வாறு? எனவே, வள்ளுவரின் கருத் துக்களிலிருந்து இன்றையப் பொருளியற் கோட்பாடுகள் அனைத்தும் மலர்ந்துள் ளன என்ற முறையில் எதனையும் விளக்க முற்படுவதற்கு வழக்கில்லை. ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு சூழ்நிலையில் எழுதப்பட்டது. அந்தக் காலத்தையும் சூழ்நிலையையும் மறந்து அந்நூல்களை ஒப்பு நோக்குவதிலும் பொருத்தமில்லை. ஆகவே, வள்ளுவர் பற்றிய இந்த மதிப்பீடு இவ்வரம்புக்குள் அமைந்தே செய்யப்படவேண்டும்.

முதலில் பிளேட்டோவை நோக்கு வோம். அவர் தனது "குடியரசு" [*Republic*] என்னும் நூலில் குறிகொள் அரசு ஒன்றைப் படைக்கிருர். அரிய ஒரு சில கருத்துக்களைக் கொண்ட கற்பனைக் கனவு என்றுதான் பலர் அதனைக் கருது கின்றனர். செர்மானியர்கள் அந்நூலை "அரசியல் புதினம்" என்று கருதினர். அரசு பற்றிய கற்பனை நூல்களில் அஃது முதல் நூலாகும். ஒப்பற்ற ஒரு நாடு அல்லது அரசு பற்றிய கற்பனைக் காப்பி யம் என்றல்லாது பட்டறிவின் அடிப் படையிலோ, ஆராய்ச்சியின் பய ளுகவோ அந்நூல் உருப்பெறவில்லை. அவர் கற்பனையில் கண்ட நாடு அளவி லும் மிகச் சிறியது. நிலையான மக்கள் தொகையையும் குறிப்பான செல்வ அள வையும் கொண்டது. உறுதியாக வகுக் கப்பட்ட இனப்பாகுபாடு முறையும் பழக்க வழக்கங்களும் அந்நாட்டில் மாருது நெறிப்படுத்தப்பட்டிருந்தன. அதன் செல்வம் வரையறைக்குட்படுத்தப் பட்டது. பேச்சு உரிமையும் கட்டுப்படுத்

தப்பட்டது. சற்றும் நெகழ்ச்சியில்லாத அரசுமுறை. இட்லர், முசோலினி போன்ரோர் கண்ட முற்றதிகார அரசு போன்றது என்று சிலர் அதனை ஒப்புக் கூறுகின்றனர். வள்ளுவர் கண்ட அரசும் பிளேட்டோ வகுத்த அரசும் மிகமிக வேறுபாடுடையவை; வெண்ணெயும் சுண்ணும்பும் போன்றவை எனலாம்.

அரிஸ்ட்டாட்டில் தனது ஆசிரியரின் கொள்கைகளை வெட்டியும், ஒட்டியும் எழுதிச் சென்றவரே. ஆகவே, அரிஸ்ட்டாட்டிலோடும் வள்ளுவரை முற்ற இணைத்துப் பார்ப்பதற்கில்லை. அரிஸ்ட்டாட்டிலின் அரசியலில் அடிமைகள் இருக்கவேண்டும். மக்களிடையே பொருளாற்றல் ஏற்றத்தாழ்விருப்பது இயற்கை விதி; பிறப்பிலேயே வேறுபாடு பிறக்கின்றது. குடியாட்சி கிரேக்கர்களுக்கு மட்டுமே; ஏனையோர் உரிமையற்றவரே. ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்று முழங்கிய தமிழ் அறிஞனோடு இந்தக்கிரேக்க ஆசிரியரை எவ்வாறு பொருத்துவது? வள்ளுவர் அனைத்து மக்களுக்காகவும் திருக்குறளை ஆக்கி வைத்தார், அரிஸ்ட்டாட்டில் உயர் குலத்தார்க்கு மட்டுமே தமது நூலைப் படைத்தார். அரிஸ்ட்டாட்டில் உழைப்பையும் தொழிலையும் இழிவாகக் கருதினர். வள்ளுவர் அவையே ஒருவருக்கு நிலையான செல்வம் என்று கொண்டார். அரிஸ்ட்டாட்டில் அறத்தையும் பொருளையும் பிரித்துத் தனித்தனி நூல் எழுதினர். திருவள்ளுவர் அறத்தையும் பொருளையும் இணைத்து ஒரு வியத்தகு நூல் செய்தார்.

சிலர் வள்ளுவரின் பொருளியல் கருத்துக்களைச் சாணக்கியரின் வடமொழிப் ''பொருளியல் கலைநூல்'' (அருத்த சாத்திரம்) என்ற நூலுடன் ஒப்பிட்டுக் காண்கின்றனர். வேறு சிலர் அவரது கருத்துக்களே திருக்குறளில் கூறப்பட்டுள்ளன என நிறுவ முயலுகின்றனர். மற்றும் சிலர் (பேராசிரியர் இராமச்சந்திர தீட்சதர் போன்ரோர்) சாணக்கியர் மௌரிய அரசவையை அணிசெய்த தென்னிந்திய அமைச்சரென்றும், வள்ளுவரின் பொருளியல் கருத்தைத் தாம் கற்று, தமது பொருளியல் கலை நூலில் புகுத்தினர் என்றும் கூறுகின்றனர். தி. பி. 1922இல், தென்காசித் திருவள்ளுவர் கழகத்தின் வெள்ளிவிழா மலரில் நான் இதுபற்றி ஆய்ந்து எழுதியுள்ளேன். திருக்குறளும் அந்நூலும், ஒன்றையொன்று தழுவி எழுதப்பட்டதென்பதற்கு அகச் சான்ருே, புறச் சான்ருே இல்லையென்பது என் துணிபு. நான் கூறிய ஏதுக்களில் சிலவற்றை இங்குக் கூறுதல் பொருந்தும்.

முதலில் தி. மு. நான்காம் நூற்ருண்டில் சந்திரகுப்த மௌரியனின் அவையில் அமைச்சராகச் சாணக்கியர் இருந்தார் என்பதே ஐயத்துக்கு இடமானது. ''பாரதிய வித்யா பவன்'' வெளியிட்ட 'பேரரசின் ஒற்றுமைக்காலம்' [*Age of Imperial Unity*] என்ற வரலாற்று நூலில் இக்கருத்துக்கு எதிராக ஐந்து ஏதுக்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து சாணக்கியர் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவரென்றே கருதக் கிடைக்கின்றது. பேராசிரியர் பாரிடேல் கீத்து, 'தி. மு. நான்காம் நூற்ருண்டு அன்று; தி. பி. நான்காம் நூற்ருண்டாகும் சாணக்கியர் காலம்' என வாதாடுகின்ருர். சாணக்கியர் காலம் பற்றிய கருத்துக்களை அந்நூலில் விரிவாகக் காணலாம்.

அகச் சான்றுகள் புறச் சான்றுகளிலும் வலியனவாயிருக்கின்றன. வள்ளுவரின் பொருளியல் கோட்பாடுகளுக்கும் சாணக்கியரின் பொருளியல் கோட்பாடுகளுக்கும் அடிப்படை ஒற்றுமை யாதுமில்லை. திருக்குறளில் உழவுக்கு முதன்மை தரப்படுகின்றது. சாணக்கியரின் நூலில் அம் முதன்மை தரப்படவில்லை. நிலத்திலிருந்து இயன்றவரை பெரும் வருவாயைப்பெற வேண்டுமென்றும், மக்களை அச்சுறுத்தியோ, ஒறுத்தோ அதனைப் பெறவேண்டு

மென்றும் சாணக்கியர் அறிவுறுத்தியுள்ளார். மக்களிடையே நிலவும் இன வேற்றுமையை நிலையாகக் கொண்டே அவரது நூல் எழுதப்பட்டுள்ளது. திருக்குறளோ, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற கோட்பாட்டை நிலைநாட்டுகின்றது. திருக்குறளில் அறத்தினின்றும் வழுவாத பொருளியல் கூறப்படுகின்றது. சாணக்கியர் நூலில் அவ்வாறில்லை. இரு நூல்களிலும் சுட்டப்படும் வரிவிதிப்புக் கொள்கை முற்றிலும் வெவ்வேறானவை. மக்கள் மனமுவந்து வரி செலுத்துதல் வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. மக்களை வருத்தி, அச்சுறுத்தி வரிவாங்க வேண்டுமென்பது சாணக்கியர் கருத்து. மக்களின் மூட நம்பிக்கையையும் மதப் பற்றையும் அறியாமையையும் பயன்படுத்தி அரசன் தனது களஞ்சியத்தை நிரப்புதற்கு முயல வேண்டுமென்று சாணக்கிய நூல் கூறுகின்றது. அரசனது வருவாயைப் பெருக்கக் கள்ளையும் வரைவில் மகளிரையும் பயன்படுத்தலாம் என்றும் அதன்கண் கூறப்பட்டுள்ளது. கள்ளையும் வரைவில் மாதரையும் மன்பதைக்கு ஒவ்வாதனவாகக் கருதுகின்றது திருக்குறள்.

வள்ளுவரின் பொருளியல் கொள்கைகளோடு ஓரளவு ஒட்டி நிற்பவர் ஆதம் சிமித்து ஆவார். அடிப்படைக் கருத்துக்களில் இருவருக்கும் பற்பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. முன்னாளில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் பொருளியில் அடிப்படையில் வகுப்பு வேற்றுமை ஓங்கியிருந்தது; பூசல்களும் நிறைந்திருந்தன. ஆதம் சிமித்து பொருளியல் அடிமைத் தளையில் இருந்தும் மக்களை விடுவிக்கப் பாடுபட்டார்; பெருவாரியான மக்களின் உழைப்பையும் தொழிலார்வத்தையும் தூண்டித் தழைக்கச் செய்தார். அதன் மூலம் தொழிற்புரட்சிக்கு அடிகோலினார். வள்ளுவரும் மக்களிடையே வேற்றுமை எழுதலை நீக்க முனைந்தார். பொருளியல் விடுதலையை அறிவுறுத்தியுள்ளார். தொழிலுலகில் வகுப்பும் இன வேறுபாடும் ஒருவனைக் கட்டுப்படுத்தா என்றார். விரும்பியதொழிலை மேற்கொள்ள வழிவகுத்தார். பிறப்பால் மக்களனைவரும் ஒரு நிகரே என்ற கொள்கையை வள்ளுவரைப் போன்றே ஆதம் சிமித்தும் வற்புறுத்தினார். 'கல்வியாலும் சூழ்நிலையாலுமே மக்களிடையே வேற்றுமை விளையும்' என இருவரும் கூறியுள்ளனர். "அரசியலும் பொருளியலும் இயைந்து செல்லவேண்டும்; அது மக்களுக்கும் அரசுக்கும் நல்லுறவை நிலைநாட்டும்; அறம் பேணி, நலம் வளர்க்கும்"—என்பன இருவரின் கருத்தும் ஆகும். இருவருமே அறம் வழுவாப் பொருளியலை விரும்பினர். ஆதம் சிமித்தின் ஆசிரியர் பிரான்சிசு அட்சிசன் என்பவர் கிளாசுகோ பல்கலைக் கழகத்தில் அறக்கோட்பாட்டுப் பேராசிரியராக இருந்தவர். அவ்வாறே ஆதம் சிமித்தும் "அற நோக்கக் கோட்பாடுகள்" என்ற நூலை இயற்றினார். அப்போது பொருளியல் அறிஞராகப் புகழ் பெறவில்லை. "நாட்டின் செல்வ வளம்" என்ற நூலை அறத்தின் அடிப்படையில் வடித்துத் தந்ததும் அவர் ஒருபொருளியல் அறிஞராகப் போற்றப்பட்டார். "அற நோக்கக் கோட்பாடுகள்" என்ற நூலில் அறத்தை அடித்தளமாக அமைத்தார். அதன்மீதே "நாட்டின் செல்வ வளம்" என்ற பொருளியல் மாளிகையை எழுப்பினார். வள்ளுவரும் முதலில் அறத்துப் பாலை விளக்கினார். அடுத்தே பொருட் பாலை விரிக்கலானார். என்னே ஒற்றுமை! ஆதம் சிமித்தும் வள்ளுவரும் காலத்தால் வேறுபட்டவர்கள், சூழ்நிலையாலும் வேறுபட்டவர்கள். ஆனால், கருத்தால் ஒன்றுபட்டுள்ளனர். தனி மனிதனின் மாண்பு, பொருளியல் தன்னுரிமை, உழைப்பின் பெருமை, மன்பதை உறவுக்கு வேண்டும் அறப்பண்புகள் இவை அனைத்தும் இரு ஆசிரியர்களாலும் ஒருமுகமாகவே கருதப்படுகின்றன. இதில் வள்ளுவருக்குரிய பெருமை என்னவென்றாலோ ஆதம் சிமித்துக்கு அவர்

காலத்தால் இரண்டாயிரம் ஆண்டுகள் முந்தியவர்.

வள்ளுவரால் எவ்வாறு இங்ஙனம் கருத்து ஊற்றைக் காணமுடிந்தது? வள்ளுவர் அறத்தையும் பொருளையும் ஒன்றுக் கிக் குழைத்து அளித்துள்ளார் என்று முதலிலேயே குறிப்பிடப்பட்டது. அதுதான் உண்மையின் ஊற்றை அவர் தொட உதவியது. அவ்வாறு ஊற்றைத் தொட அவருக்கு உதவியன இரண்டு. ஒன்று சங்க காலத்தில் தமிழர் வாழ்ந்த பொருளியல் வாழ்க்கை முறை. மற்றொன்று பௌத்தமும் சமணமும் அறிவுறுத்திய அறநெறி. இவற்றுள் முதலில் கூறியது தனது நாட்டில் எழுந்த உள்ளுணர்வு. மற்றையது புறநாட்டிலிருந்து புகுந்த புற உணர்வு. சங்க காலத்தில் மக்களின் பொருளியல் ஆக்கம் பேணப்பட்டது. அறிஞர் கீன்சு கூறுவதுபோல் ஒரு வெள்ள உணர்ச்சியால் உந்தப்பட்டு மக்கள் இன்பவாழ்வு வாழ முயன்றனர். அதனால் காதலும் போரும் மக்களின் அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்தன. பொருள்வயிற் பிரிதல் வாழ்க்கை இலக்கணமாயிருந்தது. இவை சங்ககாலத்துத் தமிழகம் தந்தன. மக்கள் யாவரும் சமம். மனிதரிடையே ஏற்றத் தாழ்வு யாதுமில்லை. யாரும் எப்பணியையும் மேற்கொண்டு வாழ்வு நடத்தலாம்; ஆனால், எல்லா வினைகளும் அறத்தை முன் வைத்தனவாக இருத்தல்வேண்டும். துறவு உள்ளம் தூய்மையானது. தனி மனிதனும் அறத்தினைப் பேணி மன்பதைக்குத் தொண்டாற்ற வேண்டும். இவை போன்ற கருத்துக்கள் சமண சாக்கிய மதக்கோட்பாடுகளாக வடக்கிலிருந்து தெற்கே புகுந்தவை. வள்ளுவரின் குறட்பாக்களில் இவ்விரண்டும்-அறமும் பொருளும், மணியும் ஒலியும் போல் சுடர்விட்டு வழிகாட்டுகின்றன. இவ்விரு கருத்துக்களும் கலந்து, குழைந்து ஒரு தனிக் கருத்தாயிற்று. அத் தனிக் கருத்து முதலில் வந்த இரு கருத்துக்களின்றும்வேறுபட்டதாய், மூலக் கருத்தெனவே தோன்றி மிளிர்கின்றது. இவ்விரு கருத்துக்களும் இணைந்தமையாலே ஈரடிப் பாவாகத் திருக்குறள் தோன்றியதோ!

இவ்விரு வகைக் கருத்துக்களையும் இணைத்துப் பார்க்கும் போதுதான், வள்ளுவரின் கொள்கையை நன்கு அறிய முடிகின்றது; அவரது அறிவுத் திறனை வியக்க முடிகின்றது. வள்ளுவர் இரு வேறு காலக் கருத்துக்களுக்கு ஓர் இணைப்பு அமைத்துள்ளார். சங்கப் பொற்காலத்தையும், பின்னால் வந்த பல்லவ, சோழப் பேரரசின் ஆட்சிக் காலத்தையும் இணைக்கும் கருத்துச் சரட்டை அமைத்துள்ளார். உலகில் இன்ப வாழ்வையே பெரிதெனப் பேணி வந்த சங்கநாள் தமிழர்களுக்கு, அருளியல், ஆன்மவியல் வாழ்க்கைக் கவர்ச்சியாக இருந்தது. பொருளியல் துய்ப்பிலே ஊறிய மக்களுக்கு அருளியல் மாற்று மருந்தாக அமைந்தது. ஓரிரு நூற்றுண்டுகளில் மக்கள், வையவாழ்வை முற்றிலும் மறந்து, இன்பந் துறந்து, வானக வாழ்வைப் பெரிதென மதிக்க முற்பட்டனர். மண்ணியல் வாழ்வை வெறுத்து, விண்ணியல் வாழ்வையே விழைந்த மக்களைத் தடுத்து நிறுத்த எண்ணினர் வள்ளுவர். எனவே, உலக இயலுக்கும், ஆன்ம இயலுக்கும் நடுவாக அமைந்த வழியில் மக்களைத் திருப்பக் கருதினர். அவ்வாறு அவர் அருளிய செம்மை நெறியில் மக்கள் ஆயிரம் ஆண்டுகளைக் கழித்தனர். அதன் பின்னர் சோழர் ஆட்சி ஓங்கியது. மீண்டும் மக்கள் அவ்வுலக வாழ்வை நாடினர். பொருளியல் வேட்கையைப் புறக்கணித்தனர். மக்கள் முன்னேற்றம் தடைப்பட்டது. மீண்டும் ஆன்மவியல் வாழ்வு தலையெடுத்தது. இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. வள்ளுவரின் பொய்யாமொழி அப்போதும் போற்றப்பட்டது. அவ்வுலக நோக்கிற்குச் சான்

ருகப் பயன்படுத்தப்பட்டது. இவ்வுலக வாழ்க்கை நெறிபற்றி வள்ளுவர் உரைத்த மொழிகள் ஏற்பாரற்றுக் கிடந்தன. இருவேறு நெறிகளையும் இணைத்த திருக்குறள் ஒரு நெறிக்கு மட்டுமே துணையாகக் கருதப்பட்டு வந்தது. இது போது மீண்டும் நாம் வள்ளுவரின் பொது மறையை நாடுகின்றோம். அவ்வுலக எண்ணத்தில் அமிழ்ந்து உறங்கிக் கிடந்த நமக்கு மீண்டும் இவ்வுலக வாழ்வுக்குப் புத்தொளி தரத் திருக்குறளைத் தேடுகிறோம்.

இப் பெருநாட்டின் பழங்கால மன்னர்களது ஆட்சியில் நடுவுநிலை முறைமை மனு நூலில் விதிக்கப்பட்டுள்ள சாதி அடிப்படையில் நடத்தப் படவில்லை. மனிதன் எந்த மன்பதை வழி வந்தானே அம் மன்பதையின் ஆக்கத்தைத் தீண்டும் அவனது செயல்களைக் கொண்டு, பரந்த மனப்பாங்கோடு நடுவுநிலை முறைமை செலுத்தப் பட்டது. பழங்கால மன்னர்களது பரந்த மனப் பாங்குடைய இம்முறைமை, தெய்வத் திருவள்ளுவரது தூய்மைத் திருக்குறள் கூறும் பொருளுரைகளோடு பொருந்தி வருகிறதேயன்றி அதற்கு மாறுனதும், கொடுமையோடு இயற்கைக்கு மாறு பட்டதுமான பொருளுரைகளோடு பொருந்துவதாயில்லை.

— மறைமலையடிகள்

(தமிழர் மதம் — ஆங்கில முன்னுரை.)

பொள்ளாச்சி, நாச்சிமுத்துத் தொழிற்கழக
இயக்குநர்

திரு நா. மகாலிங்கம் அவர்கள்
பி. எஸ்சி; எம். ஐ. ஈ.
எழுதிய

தஞ்சையில் தொழில் வளர்ச்சி

தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் சிறந்த வேளாண்மைப் பகுதியாக விளங்குகிறது. நமது மாநிலத்தில் உள்ள 30 நூறுயிரம் ஏக்கர் நன்செய் நிலத்தில் 14 நூறுயிரம் ஏக்கர் நிலப் பகுதி தஞ்சை மாவட்டத்தில்தான் உள்ளது. அதில் பெருமளவு நெல் மட்டுமே விளைவிக்கப்படுகிறது. எந்த வேளாண்மைப் பகுதியும் வளர்ச்சியடைய வேண்டுமானல் தொழிலும் உடன் சேர்ந்தே வளர்ச்சியடைவது இன்றியமையாததாகும்.

ஆகவே, தஞ்சையில் எவ்வகைத் தொழில்களைத் துவக்க முடியும் என்பது பற்றி ஆராய்வது இன்றியமையாத தாகும். இங்கு விளையும் நெல், இன்று மாநிலத்தின் பல பகுதிகளுக்குச் செல்கின்றது. ஆயினும், நெல் ஏற்றுமதி அளவுக்குத் தொழில் துறைகள் தஞ்சையில் வளர்ச்சி பெறவில்லை. இப்போது புதிதாகத் திருவாரூரில் பெரிய அரிசி ஆலை அமைந்துள்ளது. இது பெருமளவிற்கு நெல்லிலிருந்து அரிசி கிடைப்பதற்கு வாய்ப்பாக உள்ளது. இதே

போன்று 15,000 ஏக்கர் பரப்பளவுள்ள தஞ்சையின் மையங்களில் புதிய நெல் அரைக்கும் ஆலைகளை ஏற்படுத்தினல் ஏறத்தாழ 100 ஆலைகளை இம்மாவட்டத்தில் ஏற்படுத்த முடியும். மேலும், உழவர்களுடன் தொடர்பு கொள்ளவும் புதிய அரிசி ஆலைகளால் முடியும். சருக்கரை ஆலைகள் விதைக் கரும்பையும் உரத்தையும் கொடுத்துக் கரும்பு விளைச்சலைப் பெருக்கி வருவது போல, அரிசி ஆலைகளும் செயற்பட முடியும். இஃதன்றித் தஞ்சை மாவட்டத்தில் தோட்ட வேளாண்மை மிகவும் குறைவு. கிணறுகள் வெட்டி மின்னுற்றல் விசைப் பொறி [Electric Motor] வைப்பதன் மூலம் இந்த நன்செய் நிலங்களை ஆண்டு முழுவதும் விளையும் நிலங்களாக மாற்ற முடியும். ஆறு திங்கள் நெல் விளையும் நிலங்களில் பருத்தியும், ஈரறுவடை நன்செய் நிலங்களில் நிலக்கடலையும், மேலும் பருப்பு வகைகளும் பயிராக்கவும் வாய்ப்புகள் உள்ளன. இதன் மூலம் தஞ்சைப் பகுதியில் வேளாண்மை வேலை வாய்ப்புகளும் பெருகும்.

இன்று உள்ள நிலையில் தஞ்சையில் நில உரிமைக்காரர்களும் குத்தகைக் காரர்களும் முழு உழைப்புடன் வேலை செய்பவர்களாக இலர். இவர்களுக்கு ஒத்துழைப்பை நல்க வறண்ட பகுதியாகக் கருதப்படும் இராமனதபுரத்திலிருந்து வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆண்டு தோறும் வரவேண்டியுள்ளனர்.

புதிய சருக்கரை ஆலைகளையும் தஞ்சாவூரில் நாம் தோற்றுவிக்க முடியும். மழையை மட்டும் நம்பியிருக்கிற வானவாரி மேட்டு நிலங்கள் நிறைந்த பகுதிகளில் கிணறுகள் வெட்டி மின்னுற்றல் நீர்க்குழாய்கள் மூலம் நீர் இறைத்துக் கரும்பு விளைச்சல் செய்ய வேண்டும். அதிகமாகத் தண்ணீர்க் கழிவு இல்லாதது தஞ்சையின் குறிக்கத்தக்க இடையூருகும். ஆக, இவ்வாறு மேட்டு நிலங்களை வேளாண்மைக்குக் கொண்டு வருவதன் மூலம் இந்நிலைக்கு ஒரு முடிவு ஏற்படும்.

சருக்கரை ஆலைகள் ஏற்படும் இடங்களில் கரும்பு விளைச்சல் பெருகி அதன் காரணமாக விவசாய நிலங்களின் மதிப்பு உயரும். மேலும், உழவர்களுக்கும் ஒரு பணப்பயிர் மேலூதியமாக அமைகிறது. கடல் மட்டத்திற்கு அடுத்து உள்ள திருவாரூரில் கரும்பு விளைச்சல் துறையில் சிறிது இடையூறு உள்ளது. இன்னும் சிறிது உள்நாட்டில் மேடான நிலங்களைப் பயன்படுத்தினல் உறுதியாகக் கரும்புப் பயிர் பாங்காக விளையும் என்பதில் ஐயமில்லை.

வேளாண்மை போன்ற தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களைத் தோற்றுவிக்க வேண்டும். எண்ணெய்த் தொழில், பஞ்சாலைத்துறை, சருக்கரை ஆலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய அடிப்படையை இங்கு அமைக்க முடியும். மேலும் இப்பகுதியில் சணல் பயிரிட முடியுமென்று எண்ணுகின்றேன். இதற்கு வேண்டிய ஆய்வுகளைச் செய்து பார்க்க வேண்டும். இந்தியாவில் சணல் முழுவதும் வங்கத்திலேயே விளைகிறது. தென் மாநிலங்களில் இந்தத் துறையில் வளர்ச்சியே இல்லை. சென்னை மாநிலத்தில் தஞ்சைதான் சணல் விளையச் செய்யும் வாய்ப்புடைய பகுதியாகும்.

இவ்வாறு முயற்சிகளை எடுத்துக் கொண்டால் உறுதியாகத் தஞ்சை தொழில் துறையில் வளரமுடியும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவின் சிறந்த பொறுப்புத் திறனளர்களில் சிறந்த பொறியியல் திறனளர்கள் தஞ்சையிலிருந்து வந்துள்ளனர். அவர்களில் பலர் தங்கள் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன் வரவேண்டும். மேலும், கடற்கரை பெரும் அளவில் உள்ளதால் மீன்பிடிப்புத் தொழிலையும்

தஞ்சையில் வளர்க்க முடியும். சின்னஞ் சிறு நாடுகளில் பல, கடலை நம்பிப் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. ஆனால் நம் நாட்டில் நாம் கடலைப் பயன் படுத் துவதையே மறந்து விட்டோமெனக் கூறலாம்.

மேலும், திருச்சியிலிருந்து தஞ்சாவூர் வழியாக நாகப்பட்டினத்திற்குப் படகுப் போக்குவரத்துக்குப் புதிய வாய்க்காலை வெட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதன்மூலம் பெரும் அளவுக்கு வாணிக வளர்ச்சியோடு வேளாண்மைப் பொருள் களை எளிதாகக்கொண்டு போகவும் வாய்ப்பு ஏற்படும். சுமார் 20 கோடி உருபாக்கள் செலவில் இந்த வாய்க் காலைத் திருச்சிக் கல்லணையிலிருந்து அமைத்து, அதன் இரு புறங்களிலும் செம்மையான நெடுஞ்சாலையை அமைப் பதன் மூலம் போக்குவரத்து வாய்ப்பு மிகச் சிறப்பாகப் பெருகும்.

வளம் பொருந்திய தஞ்சையில் மக்கள் வளம் குன்றியவர்களாக உள்ள னர். சோறுடைய சோழநாடு சோர்வு டையதாக இருக்கக் கூடாதன்றோ! மக்கள் சிறப்பாக வளர வேளாண்மை யோடு பிற பல துறைகளிலும் வளர்ச்சி ஏற்படவேண்டும். நாகைத் தமிழ்ச் சங் கம் தமிழ்த்துறைப் பேரறிஞராகவும், அறிவு மலையாகவும் விளங்கிய மறைமலை அடிகளார்க்குச் சிலை அமைக்கும் இந் நேரத்தில் தொழில் வளம் பற்றிச் சிந் திக்க ஆரம்பித்துள்ளது தஞ்சை மக் களின் விழிப்புணர்ச்சியைக் காட்டுகிறது.

தவத்திரு மறைமலை அடிகள் தம் வாழ்க்கையில் தாம் கொண்ட கருத்துக் களுக்கும் கொள்கைக்கும் எப்படி உழன் றும், ஓயாதும் உழைத்து வந்தார்களோ அவ்வாறே தொழில் வளர்ச்சித் துறையி லும் தஞ்சை மக்கள் உழைக்க வேண்டு மென்று விரும்புகின்றேன்.

தொழிலை அதற்கேற்ற சில இடங்களில் வைத்து இரண்டாந் தரமாகவும், உழவு தொழிலை அதற்கேற்ற எல்லா இடங்களிலும் வைத்து முதற்றரமாகவும் நடத்தி வருவார்களாயின் நம் நாட்டவர்கள் அளவுபடாத செல்வவளம் மலியப் பெற்று இனிது வாழ்வார்கள்.

— மறைமலையடிகள்

(மக்கள் நூறுண்டு உயிர்வாழ்க்கை—பக்கம் 148)

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி முதல்வர்
திரு. கு. ஆளுடையபிள்ளை அவர்கள்
பி. காம். (மேனிலை) எம். காம்.
எழுதிய

வாணிகத்தின் அடிநிலை

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பர். இத்தேவைகள் கற்கால மனிதனுக்கும் தற்கால மனிதனுக்கும் வருங்கால மனிதனுக்கும் பொதுவானவாம். இத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுக் கடந்த பல ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனிதன் மேற்கொண்ட முயற்சிகளைக் காண்போமாகில் நாகரிகம் வளர வளர வாழ்க்கை முறையும் பொருளாற்றல் நிலையும் வாணிகத்திறனும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன என்பது புலனாகும். இம்முயற்சிகளை ஆராய்கையில் நமக்கு வாணிகம் அறிமுகமாகிறது.

கற்கால மனிதனின் தேவைகள் மிகச் சில. வேட்டையாடி உணவு தேடிக்கொண்டான். எளிய பொருள்களைக் கொண்டு உடுக்க உடையும், இருக்க இடமும் அமைத்துக்கொண்டான். நாகரிக வளர்ச்சியின் காரணமாகத் தற்கால மனிதனின் தேவைகள் பலப்பலவாகப் பெருகியுள்ளன. தன் தேவைகளைத் தன் முயற்சியாலேயே நேரடியாக நிறைவு செய்து கொள்வது அரிதாயிற்று. வேளாண்மையில் ஈடுபட்ட மனிதன் தான் விளைவித்த பயிரை நெசவாளிக்கு மாற்றாகத் தந்து ஆடை பெற்றான். இந் நிலையில் பண்டமாற்று பிறந்தது. நாளடைவில் விளைவிப்புத் துறையிலும், பண்டமாற்றுத் துறையிலும் சிக்கல்கள் பல ஏற்பட்டன. இச் சிக்கல்களை நீக்கும் வகையான் சீரிய முயற்சிகளும் நுண்ணிய சிறப்புத் துறைகளும் மேற்கொள்ளப்பட்டு வாணிகம்

சிறப்புத் தேர்ச்சியுடைய இயலாக மலர்ந்தது. நல்ல வாணிக முறையின் இலக்கணத்தைக் கூறப் போந்த வள்ளுவப் பெருந்தகை,

> "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவுந் தமபோற் செயின்" —என்றார்

வாணிகத்தின் இலக்கணத்தைக் கூறுமுகத்தான் அதன் இயல்பினையும் இயம்ப வேண்டி வருகிறது. விளைவிக்கப்பட்ட பொருளினை நுகர்வோரிடம் கொண்டு சேர்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளனைத்தையும் குறிக்கும் சொல்லே வாணிகம் ஆகும். விளங்கக் கூறின் பொருள் விளைவானவுடன் தானே நுகர்வோரை நாடிச் செல்வதில்லை. விளைவிப்போரிடமிருந்து பெருவாணிகர் அதனை வாங்கி விற்பனைத் துறையிலுள்ள பல்வகை வாணிகர்கள் வழி நுகர்வோருக்கு விற்கின்றனர். இத்துறை திறம்பட இயங்கினால் பொது மக்களாகிய நாம் எப்பொருள், எவ்விடம், எப்பொழுது, எவ்வளவு கிடைக்குமென ஏங்கித் தவிக்க வேண்டுவதில்லை. நம் தேவையையுணர்ந்து, நம் வாங்குந் திறனறிந்து, நமக்கு வேண்டிய பொருளை வேண்டிய இடத்தில் அளிப்பதே வாணிகத்தின் சிறப்புக் கூறு ஆகும்.

மற்றும் வாங்கல் விற்றலுக்குப் பெருமளவு கைம்முதல், சில நேரங்களில் அயல்நாட்டுச் செலாவணி, பல்வேறு வகைக் கடன் போன்ற பொருட் செல்வங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு உறுதுணையாக விளங்கும் துறையை வங்கி முறை என்று பேசுகிறோம். இன்றைய உலகில் வங்கியின்றி வாணிகமில்லை. "முதலிலார்க்கு ஊதியம் இல்லை" என்பது வள்ளுவர் வாக்கன்றோ!

விளைவது ஓரிடமாகவும் தேவைப்படுவது பற்பல இடங்களாகவும் இருப்பது இயல்பு. அதனை வேண்டுவார்க்கு வேண்டுமிடங்களில் கொண்டு சேர்க்கப் போக்குவரத்து ஊர்திகள் பயன்படுகின்றன. மாட்டுவண்டி முதல் ஒலிவிரையினும் மிக்க விரைவுள்ள வான ஊர்தி ஈறாக உள்ள அத்துணை ஊர்திகள் பற்றிய செய்திகளும் வாணிகவியலில் இடம் பெறுகின்றன.

முன்னோக்கக் கூடிய இடையூறுகளாலும், எதிர்பாரா இன்னல்களாலும் பொருள் அழிந்தோ சிதைந்தோ இழப்பு ஏற்படக் கூடும். இந்த இழப்பைத் தவிர்க்கும் வகையான் ஈட்டுறுதி ஏற்பாடு அமைந்துள்ளது. இவ்வேற்பாட்டை வாணிகத்தின் இன்றியமையாததோர் பிரிவாகக் கருதுகிறோம்.

மேற்கூறியவை மட்டுமன்றிக் காலந் தாழ்க்காமல் பொருள்களை வேண்டுமளவிற்கு வேண்டுபவருக்குச் சேர்ப்பிக்கப் பண்டசாலைகளை ஆங்காங்கு நிறுவிப் பொருள்களைச் சேமித்து வைத்து வாணிகம் தட்டுப்படாமல் நடைபெற ஏற்பாடு செய்கின்றனர். பொன்னுனை காலம் வீணாகாமல் பொருள் விளைவு தொடர்ந்து நடைபெற இவ்வேற்பாடு பேருதவிபுரிகிறதென்பதைக் கூறவும் வேண்டுமோ?

இதுகாறுங் கண்டு வந்த வாணிகம், வங்கி முறை, போக்குவரத்து, ஈட்டுறுதி, பண்டமுறை ஆகிய ஐம்பெருந் துறைகள் மட்டுமே வாணிகத்தைக் குறிக்கின்றனவாவெனின் அன்று என்பாம். ஏனெனின், வாணிகத்தோடு நெருங்கிய பல தொடர்புற்ற இயல்களும் உண்டு. வாணிகர் கணக்கு வைத்திருக்கும் முறையை விளக்கும் கணக்குப் பதிவியல் வழியேதான் தொழிலில் ஏற்படும் ஊதியம், இழப்பு, உடைமை, பொறுப்பு, இருப்பு முதலியன தெள்ளிதின் புலப்படும்.

எண்ணிலடங்கா ஒழுங்கு விதிகட்குட்பட்டுத்தானே மனிதன் வாணிகம் செய்யவேண்டியிருக்கிறது. வாணிகச் சட்டவியல் இத்துறையைச் சார்ந்ததாகும். மேலும், சரக்கு விளையும் இடம் எது; அதைக் குறித்த இடத்தில் கொண்டு சேர்க்க எவ்வழிச் செல்லல் வேண்டும்; எவ்வளவு காலம் பிடிக்கும்; எந்தவகையான ஊர்தி தக்கதாயிருக்கும் என்ற வினுக்களுக்கு விடையறிய 'வாணிகக் களத்தியல்' பற்றிய அறிவு வேண்டும். பொருளைப் பற்றிய நுண்ணறிவின்றி வாணிகஞ் செய்வது இயலாது என்றே சொல்லி விடலாம். வாணிகவியல் பொருளியலின் ஒரு பகுதியென்பதை மனத்தில்கொண்டு, பொருளியலின் அடிப்படையில் இவ்வியலை ஆராய்தல் இன்றியமையாததாகும். சுருங்கக் கூறின் வாணிகத்தில் சிறப்பாக ஈடுபடுபவர் ''வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வோராகச்'' செயற்படவேண்டும்.

ஞாலமெங்கும் பரவிப் பல்வேறு நாட்டினரையும் மொழியினரையும் இனத்தினரையும் ஒன்று சேர்க்கும் வாணிகவியலின் சிறப்பைச் சுருங்கக் கூறுதல், ஒரு குவளை நீரைக் காட்டி கடலும் அது போன்ற நீரையே பேரளவில் கொண்டுள்ளது என்று கூறுவதற்கு ஒப்பாகும். எனினும், மேலும் அறிய ஆவலைத் தூண்டுவான் வேண்டிச் சில இன்றியமையாச் செய்திகளை மேலே குறிப்பிட்டு வாணிகவியலின் சிறப்பை உணர்த்த முயன்றேம்.

பொருள் தேடுவதற்கு உரிய முயசிற்கள் பலவற்றுள்ளும் வாணிகம் என்பது ஒன்று. பொருள்தேடும் முயற்சிகளில் இதுவும் ஒன்ருய் இருந்தாலும், உலக வாழ்க்கை செவ்வனே நடைபெறுவதற்கு மிகவும் பயன்படுவதால் இது மற்ற முயற்சிகளைவிடச் சிறந்ததாய் இருக்கின்றது.

— மறைமலையடிகள்.

திருவண்ணாமலை, சைவத்திருமடத் தலைவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
எழுதிய

மதமும் மன்பதையும்

மதம் என்ற சொல் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் கொள்கை என்ற பொருளிலேயே வழங்கப்படுகிறது. ''எழுவகை மதமே உடன்படன் மறுத்தல்'' என்பது நன்னூல் நூற்பா. மனித உலகம் தன்னுடைய வாழ்க்கையின் தொடக்க காலத்தில் அஃதாவது காட்டு வாழ்க்கைக்கு அடுத்த கட்டத்தில் கொள்கைகளை உருவாக்கும் உணர்வினைப் பெற்றது. மனம் போன போக்கில் வாழ்ந்த மனிதர்களிடையே மோதல்கள் ஏற்பட்டன. இரண்டு தற்போக்குக் கொண்ட மனிதர்களிடையே மோதல் ஏற்படத் தானே செய்யும்! மனிதர்களிடையே ஏற்பட்ட இந்த மோதல்களைத் தவிர்க்கவே கொள்கைகள் உருவாயின; ஒழுங்கு முறைகள் உருவெடுத்தன; ஒழுக்க நெறிகள் எழுந்தன. ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கோ மற்றை மன்பதைக்கோ உரிமை பேசமாட்டான்; பேசவும் முடியாது என்று கருதியது அன்றைய மன்பதை. ஆதலால் முதற் கொள்கை, மனிதனை மையமாகக் கொண்டு எழாமல் மனிதனையும் விஞ்சிய கடவுளை மையமாகக் கொண்டு பிறந்தது. முதற்கொள்கை கடவுளை மையமாகக் கொண்டே பிறந்ததால் இன்று பல்வேறு கொள்கைகள் தோன்றி வளர்ந்திருப்பினும் ''மதம்'' என்ற சொல் கடவுட் சார்புடைய கொள்கையை மட்டுமே குறிக்கிறது.

ஒரு மனிதன் பிறிதொரு மனிதனின் நலத்தைக் கைப்பற்றாததே ஒழுக்கம். ஒரு மனிதனின் நலம் பிறிதொரு மனிதனின் நலத்தோடு மோதாமல் ஒதுங்கி வளர்வதே நேர்மை. ஒரு மனிதன் பிறிதொரு மனிதனின் உரிமைகளை – உணர்வுகளை மதித்து நடப்பதே சிறந்த மத ஒழுக்கம். இஃதே மத நெறியின்

தொடக்க காலச் சிரிய இயல்பு. காலப் போக்கில் மதம் மனிதர்களின் உரிமைகளுக்கு அரண் செய்வதற்கு மாருக வன்கணாளர்களுக்கே கை கொடுத்தது. இதன் விளைவாகச் சாதிகள் தோன்றின; பொருளியல் ஏற்றத்தாழ்வுகள் மலிந்தன; எல்லார்க்கும் பொதுவாம் மன்றுள் நடமாடும் இறைவன் திருமுன்னும் சாதியே ஆட்சி செய்தது; ஆட்சி செய்கிறது. சுரண்டும் மனப்பான்மையுடைய பொருள் வன்கணாளர்களின் ஆட்சியே நடந்தது; நடந்து கொண்டிருக்கிறது. "காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" என்ற கோட்பாட்டு அறிவுரை இன்றைய மத உலகத்தில் செரிக்கவில்லை. "எல்லா உலகுக்கும் அம்மையப்பரே அம்மையப்பன்" என்ற நெறிக்கும் மதயியலாருக்கும் நெடுந்தொலைவு இருக்கிறது. கோயில்களுக்கும் குடிசைகளுக்கும் இடையே நெடுந்தொலைவு உளது. சாதி வன்கண் மனப்பான்மையுடையோர்களும், பலருடைய வயிற்றிலடித்துப் பழியுடை வழியே பொருள் திரட்டியவர்களும், ஈரம் என்ற ஒன்று நெஞ்சில் இல்லா மதக் கரணத்தரும் ஒப்புடன்படிக்கை செய்து கொண்டு ஏழைகளின் வாழ்வைக் கூற்றெனக் குடித்து வருகின்றனர். இளைய மன்பதையினர் இதனை நினைந்து நினைந்து நெஞ்சுருகிப் புரட்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; மன்பதை நலனுக்குற்ற மத நெறியைக் காண வேண்டும்.

மதம் கடவுளுக்காகத் தோன்றியதன்று. மதத்தின் மையம் கடவுள் உணர்வேயாம். ஆனலும், மதம் மனிதனை அறிவால், உணர்வால் வளர்த்துக் கடவுள் தன்மையுடையவனுய் ஆக்குவதையே நோக்கமாகக் கொண்டது. மனிதன் தன்மையினுல் விலங்குமல்லன்; ஆனல் மனிதனுமல்லன். மனிதன் தன்னிடம் இயல்பாய் அமைந்துள்ள விலங்குத் தன்மைகளினின்று விலகி மனிதத் தன்மைகளைப் பெற்று வளர்ந்து பின் தெய்வத் தன்மைகளையும் பெற்று விளங்குதல் வேண்டும். விலங்குத் தன்மை யாவது இன்ப துன்பங்களுக்கு அடங்கி ஆட்பட்டு அழிதல். மனிதத் தன்மை யாவது இன்ப துன்ப உணர்வுகளுக்கு உட்பட்டு-ஆயினும், எதிர்த்துப் போராடித் துன்பங்களில் மட்டும் வெற்றி பெற்று இன்பமாக்கிக் கொள்ளுதல். தெய்வத் தன்மையாவது இன்ப துன்ப உணர்வுகளை வெற்றி பெற்று உணர்வுகளைக் கடந்த - என்றும், எப்பொழுதும் துன்பம் தலைகாட்டாத இன்ப அன்பில் திளைத்து இன்புற்று மகிழ்ந்து வாழ்தலில் வெளிப்படுவது. இஃதே மதத்தின் குறிக்கோள். இந்தக் குறிக்கோளுக்கும் இன்றைய மதத்திற்கும் நெடுந்தொலைவு ஏற்பட்டிருப்பதை நாமனைவரும் உணர வேண்டும்.

பலநூறு ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தின் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்ருேர் ஒருலகம் பற்றிப் பேசினர். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்கிறது புறநானூறு; "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்கிறது வள்ளுவம். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்கிறது திருமந்திரம். இங்ஙனம் மனித உலகத்தை ஒருலகமாக எடுத்துக்கூறிய தமிழக மதச்சூழலின் குரலும், தமிழக மதநெறியின் ஒழுக்கமும் உடனடியாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இறைவழிபாட்டிற்குச் சாதி முறைகள் குறுக்கே நிற்கக்கூடா. தந்தை தாயரைத் தீண்டி மெய்தொட்டுப் பயின்று மகிழ்வதைத் தடைசெய்ய எவருக்கு உரிமை உண்டு?

நந்தம் திருக் கோயில்களில் உள்ள திருமேனிகளை எல்லா நாட்டினரும் எல்லா மொழியினரும் பலரும் நீரும் பூவுமிட்டுத் தொட்டு மகிழ்ந்து வழிபாடு செய்யும் உரிமை வேண்டும்; அன்றைக்கே-இந்த உரிமை மலரும் நாளிலேயே மதம் மன்பதை மதமாகும். அதுவரையில் கோயில் மதமாகவே இருக்கும்.

உலகுக்கு முதல்வன் - தலைவன் கடவுள். மனித உலகம் இன்புற்று மகிழ்ந்து வாழ இந்த உலகில் எத்துணையோ கோடி இன்பங்களை வைத்திருக்கிருன் இறைவன். ''எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா'' என்று பாரதியும் பாடினுனன்ரோ! இந்த இன்பங்களைத் துய்த்து மகிழ்வதில் மேடு ஏன்? பள்ளம் ஏன்? ஏழை ஏன்? பணக்காரன் ஏன்? இறைவன் இந்த வேறுபாடுகளைத் தோற்றுவிக்கவில்லை. எல்லா உலகமும், எல்லா உயிர்களும் ''இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறென்றறியேன்'' என்ற தாயுமானுரின் கோட்பாடு எங்கே? எல்லாருடைய இன்பத்தையும் தாமே சூறையாடிக்கொண்டு தாமின்புறுதலிலேயே தலை நாட்டமுடையோர் கையில் சிக்கியிருக்கும் மதம் எங்கே? 'பிறிதின்நோய் தன் நோய்போல் போற்றுதல்' மதத்தின் ஒழுக்கம்; மதத்தின் கொள்கை. உண்மையான மதம் உலகில் கால் கொள்ளுமாயின் போர் ஏது? பற்றிக்கோடல் ஏது? இன்றைய மன்பதை உலகத்தில் மதம், கரணங்களாகக் கால் கொண்டிருக்கிறதே தவிர ஒழுக்கங்களாகக் கால் கொள்ளவில்லை. இன்றைய மனித உலகத்திற்குத் தேவை மிகவுயர்ந்த புதுமையும் பொதுமையும் உடைய மதத்தின் கொள்கையே. உயிரினத்திற்குக் கொல்லாமை அன்பு காட்டி, வாழவைக்கும் மன்பதையின் இன்ப மகிழ்ச்சியே மதத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும். மன்பதையை நேர்மை, அறம் ஆகிய அரண்களால் காக்கின்ற மதமே தேவை. அதனுலன்ரோ அப்பரடிகளும் கடவுளை ''நீதியே'' என்று கூறி வாழ்த்தினுர்.

முற்காலத்தில் தமிழர்கள் திருக்கோயிலில் உள்ள திருவுருவங்களைத் தாமே தொட்டு நீராட்டிப் பூவிட்டு அகில் புகைத்துச் சூடங் கொளுத்தி வழிபட்டு வந்தார்கள். இஞ்ஞான்றும் வடநாட்டிலுள்ளவர்கள் அங்குள்ள திருக்கோயில்களில் தாமே திருவுருவங்களைத் தொட்டு வழிபாடு ஆற்றுதலை நேரே பார்க்கலாம்.

— மறைமலையடிகள்.

(வேளாளர் நாகரிகம் — பக்கம் 123.)

நூலகவியல்

சென்னை, மறைமலையடிகள் நூலக நூலகர்
திரு. இரா. முத்துக்குமரசாமி அவர்கள்
எம். ஏ., பி. லிப்.
எழுதிய

நூலக அடிப்படை

நூலக இயல் நம் நாட்டில் இந்த நூற்றாண்டில் அரும்பி மலர்ந்து மணம் விசுகின்ற ஒரு துறையாகும். புத்தம் புதிய கலைகள் மேலைநாட்டில் பரவியுள்ளதாகப் பாரதி பாடிய காலத்தில் நூலக இயல் நம் நாட்டில் அரும்பாமலே இருந்தது. நம் நாட்டில் பண்டைக் காலந் தொட்டே நூலகங்கள் இருந்துவருகின்றன என்பதற்கு வரலாற்றுச்சான்றுகள் உள்ளன. எனினும், அஃது ஓர் இயக்கமாக மலர்ந்தது மிக அண்மைக் காலத்தில்தான்.

நூலக இயல் இதுபோது நம்நாட்டில் சிறந்து வளர்ந்திருப்பதற்குக் காரணம் இத்துறையில் ஈடுபட்டுள்ள நூலகத் தந்தை டாக்டர் எஃச். ஆர். அரங்கநாதன் போன்ற அறிஞர்களின் உழைப்பேயாகும். அவர்தம் பேரறிவுத் திறனையும், அவர் எழுதியுள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட நூலக இயல்பற்றிய நூல்களையும் கண்டு மேலை நாடுகளே வியக்கின்றன. நூலகப் பகுப்பு முறையில் ஒரு புதுமுறையான "கோலன்" முறையை இவர் தோற்றுவித்தார். எனவே, இந்த நூலக இயல் நம் நாட்டில் மேலை நாட்டாரும் கண்டு வியந்து பாராட்டும் வகையில் வளர்ந்துள்ளது எனல் மிகைபடக் கூறுவது ஆகாது.

நூலகப் பணி அண்மைக் காலத்தில் இந்தியாவில் பெருகியுள்ளது. என்றாலும், நூலக இயல் என்றால் என்ன என்றும், நூலக இயல் என்று ஓர் இயலா என்றும் வினவுபவர் பலர் படித்த மக்களிடையே உள்ளனர்.

'நூலகம் என்றால் நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்; அங்குப் பணியாற்றுபவர் படிப்போர் கேட்டவுடன் எடுத்துக் கொடுக்கவேண்டும்; இவ்வளவுதானே! இதற்கு நூலக இயலென்று ஒன்றைப் பயிலவேண்டுமா' என்று வினவுவோரும் உண்டு.

ஊர்கள்தோறும் உள்ள சிறு சிறு நூலகங்களைப் பார்த்தால் மேற்கண்ட வினா பொருந்தியதே என்றும் தோன்றும்.

பத்து அடுக்குக் கட்டிடம் ஒன்றில் நூல்களை அடுக்கியிருக்கும்போது படிப்பவர் விரும்பும் நூலை உடனே எடுத்துக் கொடுத்துவிட முடியுமா? அது ஒழுங்கான முறையில் ஒரு விதிப்படி அடுக்கி வைக்கப்பட்டிருந்தால்தானே உடனே எடுக்க முடியும். அடுக்கி வைப்பதற் கென்று ஒரு விதி இருக்கிறது அன்றோ? அதுதான் நூலக இயலின் ஒரு கூறு. இவ்வாறு பல விதிகளைக் கொண்டதே நூலக இயல்.

நூலக இயலின் பலவகைக் கூறுகளையும் உட்படுத்திய ஐந்து விதிகளை டாக்டர் எஃச். ஆர். அரங்கநாதன் அவர்கள் வகுத்து 'நூலக இயலின் ஐந்து விதிகள்' என்று பெயரிட்டுள்ளார். அவ்விதிகள் வருமாறு:

1. நூல்கள் பலவும் பயில்வதற்கே.
2. படிப்போர்க்கேற்ற நூல்கள்.
3. நூல்கட்கேற்ற படிப்போர்.
4. படிப்பவர் நேரம் பேணுதல்.
5. நூலகம் என்றும் ஓங்கி வளர் வதே.

முதல் விதி:

நூலகத்தில் நூல்களைச் சேமித்து வைத்திருக்கலாம். ஆனால், அவை யாவும் படிப்பதற்குரியன அல்லவா? முன்காலத்தில் நூல்களை இரும்புச்சரடு போட்டுக் கட்டி வைத்திருந்தார்கள். இன்று பெரும்பாலான நூலகங்களில் பேழைகளில் வைத்துப் பூட்டி இருக்கின்றார்கள். இவ்வாறு செய்வது இந்த விதிக்கு முரணானதாகும். நூல்களைப் படிக்க விரும்புவோருக்கு எடுத்துக் கொடுக்கவேண்டும். அவர்களே தேவையான நூல்களை எடுத்துக்கொள்ள வாய்ப்பினை அமைக்கவேண்டும். அத்துடன் அவர்கள் இருந்து படிப்பதற்கு வேண்டிய இருக்கைகள், போதிய ஒளி, காற்று முதலியவற்றிற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். படிப்பவர்களின் நேர வாய்ப்புக்கு ஏற்றவாறு நூலகத்தைத் திறந்து வைப்பதோடன்றி அவர்களுக்கு உதவிசெய்யப் போதிய நூலகப் பணியாளர்களையும் அமர்த்தவேண்டும்.

இரண்டாம் விதி:

எல்லா நூலகங்களும் ஒரே வகையான நூல்களை வைத்திருக்கும் என்று கூற இயலாது. பொதுவாக எல்லாரும் பயன்படுத்தக்கூடிய பொது நூலகத்தில் எல்லா வகையான நூல்களும் இருக்கும். ஆனால், பல்கலைக் கழகம், ஆராய்ச்சிக்கூடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நிலையங்கள் முதலியவற்றில் அந்தந்த நூலகங்களைப் பயன்படுத்துவோருக்கு ஏற்ற நூல்களையே வாங்கி அமைப்பர். பல்கலைக்கழக நிலையிலுள்ள நூல்களைப் பள்ளி நூலகங்களில் வாங்கி அமைப்பது இவ்விதிக்கு முரணானதாகும். கண்ணில்லாதவர்கள் படிக்க விரும்புகின்றார்கள். அவர்களுக்குத் தனி அமைப்போடு வெளியிடப்பட்டிருக்கும் நூல்களைத்தான் கொடுக்கவேண்டும். இவ்வாறு பல்வேறு நிலையில் உள்ளவர்களுக்கு அவரவர்களுக்கேற்ற நூல்களைத் தொகுத்து வைப்பதையே இவ்விதி விளக்குகிறது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் போன்ற நிலையங்கள் தமக்குத்தாமே நூலகங்களை அமைத்துக் கொள்ளும் வாய்ப்புடையன. பொதுமக்களுக்கு யார் அமைப்பது? அதற்காகத்தான் "பொது நூலகச் சட்டம்" வேண்டுமென்பது.

மூன்றாம் விதி:

படிப்பவர் விரும்பும் நூல்களைக் கொடுப்பது எளிது. நூலகத்தில் இல்லையென்றால் இல்லையென்று கூறிவிடலாம். ஆனால், நூல்கட்கேற்ற படிப்போரை எவ்வாறு தேடுவது? இதற்குப் பலவழிகள் உள்ளன. "கடை விரித்தோம்" என்று இராமலிங்க வள்ளலார் பாடியதுபோல் நூலகத்தை விரியத் திறந்து வைக்க வேண்டும். உள்ளே வந்தவர்களை நூல்கள் இருக்கும் இடத்திற்கு

அழைத்துச் செல்லுதல் வேண்டும். நூலகத்தில் உள்ள நூல்களை வகைப் படுத்தி வைத்து அவற்றைப் பட்டியல் மூலம் வெளிக் கொணர வேண்டும். படிப்பவருடன் உரையாடி அவர் தேவையை உணர்ந்து அதற்கேற்ற நூல்களை எல்லாம் எடுத்துக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் கைபடாத நூல்கள் கைக்கு அணியாக மாறும்.

நான்காம் விதி:

ஏதோ பொழுது போக்குவதற்குத் தானே நூலகத்திற்கு வருகிறார்கள்; அவர்கள் மெதுவாகத் தேடித் தாம் நாடி வந்த நூல்களை எடுத்துப் படித்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுதல் கூடாது. அவர்களுக்கு வேண்டும் நூல் கள் உடன் கிடைத்தால் ஒரு மணி நேரத்தில் இரண்டு நூல்களைப் படிப்பார் களன்றோ? இஃது அவர்களுடைய நேரத்தினைப் பேணும் முறைதானே! நாட்டில் எவருடைய நேரமும் வீணாகக் கூடாதன்றோ! அவர்களுக்கு உதவும் வகையில், இருக்க வேண்டிய இடத்தில் நூல்களை வைத்து, அவை இருக்கும் இடத்தை அவர்களுக்குக் காட்டவும் வேண்டுமன்றோ? எட்டாம் மாடியில் இலக்கிய நூல்களை வைத்துவிட்டு ஒரு வரை நான்காம் மாடியில் தேடச் சொன்னால் என்ன பயன்?

ஐந்தாம் விதி:

நூலகம் என்பது "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற விதிக்குச் சற்று மாறுபட்டது. இங்குப் பழையனவின் பக்கத்திலேயே புதியன வும் இருக்கும். வள்ளுவரும் சாக்கிரடீசும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்கள்தானே என்று அவர்கள் நூல்களை ஒதுக்கிவிட முடியாது. அவர்கள் கொள்கைக்கு மாறுபட்ட புது நூல்கள் வரும்பொழுது அவற்றை ஒதுக்கிவிட முடியாது. நூலகத்தில் எல்லாக் காலத்து நூல்களும் இருக்கும். நாளுக்கு நாள் நூல்கள் சேரச் சேர நூலகம் அளவிலும் அதன் பணியிலும் பெருகிக்கொண்டே போகும்.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு நூலக இயல் பெருகி வளர்ந்து நூலக அமைப்பு, நூலக ஆட்சி, நடைமுறை, பொதுத் தொடர்பு, நூல்களைப் பகுக்கும் முறை, நூற்பட்டி உருவாக்கல் முதலிய பல துறைகளைக்கொண்டு விளங்குகிறது.

தமது வாழ்க்கைச் செலவிற்கும் மணச்சடங்கு, பிணச்சடங்குகட்கும் கடன் வாங்கியாகிலும் மிகுதி யாகச் செலவழிக்கின்றார்கள். அவையெல்லாம் பெருஞ்செலவாக அவர்களுக்குத் தோன்றவில்லை. எப்போதோ அருமையாக வாங்கும் இரண்டொரு நூலுக்காகுஞ் செலவையே பெரிதாக நினைக்கிறார் கள். இப்படியிருந்தால் நம் தமிழ்நாடு எக்காலத்தில் முன்னேற்றமடையுமோ தெரிய வில்லை. இறைவன் அருள் செய்க!

— மறைமலையடிகள்.

(அடிகளார் முடங்கலிலிருந்து)

வியத்தகு மூதறிஞர்
திரு. [G. D.] கோ. து. நாயடு அவர்கள்
எம். ஐ. எஃச். ஈ.
எழுதிய

தமிழ் மருத்துவம்

இக்காலத்தில் நடைமுறையில் ஆங்கில மருத்துவம் [*Allopathy*], ஓமியோபதி, ஆயுள் வேதம், யுனானி, தமிழ் மருத்துவம் எனும் மருத்துவ முறைகள் இருந்து வருகின்றன. நோயாளிகள் தமது விருப்பப்படி ஏதாவது ஒரு மருத்துவ முறையில் பண்டுவம் [சிகிச்சை] செய்துகொள்கிறார்கள். நோய் குணம் அடைந்தால் போதும் என்று எண்ணாது பண்டுவத்தின்போது கொண்ட மருந்துகளினால் பின் ஏற்படும் விளைவுகளையும் உணர வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வகையில் நோக்கினால் தமிழ் மருத்துவம் ஒன்றுதான் உண்ட மருந்துகள் நோயைக் குணப்படுத்திப் பின் விளைவுகள் எவற்றையும் தோற்றுவிப்பதில்லை.

ஆயிரக்கணக்கான மருந்துகளும், புதுமைக் கருவிகளும், மின்னாற்றல் பொறிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாலேயே மேனாட்டு மருத்துவ முறைகள் சிறந்தன என்று கொள்ள வேண்டியதில்லை. அவைகளால் தீர்க்க முடியாத பல நோய்களையும் தமிழ் மருத்துவம் குணப்படுத்தியுள்ளது. மருந்தின்றி, ஊசியின்றி, வகை வகையான கருவிகளின்றி எளிய முறையில், மிகுந்த செலவில்லாமல் எல்லா நோய்களையும் தமிழ் மருத்துவ முறையில் தீர்க்க முடியும். ஆங்கில மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் பல மருந்துகள் நச்சுத் தன்மை கொண்டவை. அவைகள் நோயைக் குணப்படுத்திய பின்னரும் உடலில் தங்கிப் பின்னர் சில கெடுதல்களைத் தோற்றுவிக்கின்றன. ஊசி, கத்தி முதலிய கருவிகளின் துணையால் செய்யப்படும் அறுவை முறை [*Operation*] நோயாளிகளுக்குக் கெடுதல்களையே விளைவிக்கிறது. தமிழ் மருத்துவத்தினாலேயே அதுபோன்ற நோய்களைக் குணப்படுத்த முடியும்.

இயற்கை வாழ்க்கையில் இருந்து தவறி நடந்ததன் பயனாகத் தோன்றிய நோயை இயற்கை முறைகளை யொட்டியே, மூலிகைகளைக் கொண்டே குணப்படுத்துவதுதான் தமிழ் மருத்துவம் ஆகும். இன்று தோன்றி வளர்ந்துள்ள பல மருத்துவ முறைகளுக்கும் அடிப்படை தமிழ் மருத்துவந்தான். தமிழ் மருத்துவம் நம்முடைய நாட்டு மக்களால் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கையாளப்பட்டுவரும் ஒரு சிறந்த மருத்துவமாகும். தமிழ் மருத்துவ மூலிகைகள் நோய்களை நீக்குவதில் நற்றுணையாகவும், எவ்வகைக் கெடுதியும் செய்யாதனவாகவும், எங்கும் கிடைக்கக்கூடியனவாகவும் இருக்கின்றன. நாம் நாள்தோறும் செய்யும் சமையலில் இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றால் நன்மையே விளையும்.

இஞ்சி, சுக்கு, மிளகு, நெல்லிக்காய், எலுமிச்சம் பழம், வேப்பெண்ணெய் முதலியவைகளை அளவுடன் பயன்படுத்தினால் உடல் நலம் பெருகும்; நோய் தடமில்லாது நீங்கும்.

கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து மேல் நாடுகளிலிருந்து மருந்துகளையும், மருத்துவக் கருவிகளையும் வரவழைப்பதனால் நாட்டின் பொருளியல் நிலை கெடுகிறது. தொடர்ந்து மக்களிடையே நோயும் வளர்ந்து கொண்டே வருகிறது. நோயே இல்லாமல் எல்லாரும் உடல் நலத்துடன் வாழ ஏன் முயற்சிக்கக் கூடாது? நல அடிப்படை நிலைமையைச் சீர் செய்தால் பெரும்பாலான நோய்கள் வராமல் தடுத்துவிடலாம். மீறி வரும் நோய்களை தமிழ் மருத்துவத்தின் மூலம் குணப்படுத்திவிடலாம்.

தமிழ் மருத்துவம் செய்வது எளிமையானது. செலவு மிகவும் குறைவு. பெரிய பெரிய மருத்துவ மனைகளோ, படித்துப் பட்டம் பெற்ற - வெளிநாடு சென்று திரும்பிய மருத்துவர்களோ வேண்டியதில்லை. ஆகவே, தமிழ் மருத்துவத்தை ஏற்றுப் பயன்கொள்ள ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். நமக்கு ஏதாவது நோய் வந்தால் நாம் தமிழ் மருத்துவரைத் தேடிப் போய் பண்டுவம் பெற்று நலந்தேட வேண்டும்.

பசி எடுத்தபோது அப்பசி நோயை நீக்குதற்குப் பயிர் பச்சைகளையும், அவற்றின் பயன்களையும் அருந்துதல் போல, நோய் அடுத்த போதும் அதனை நீக்குதற்குப் பச்சிலை மருந்துகளை உண்ணுதலே பொருத்தம் உடைத்தாம் என்க.

— மறைமலையடிகள்.

(மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை-பக்கம் 194)

நாகைத் தமிழ்ச் சங்கச் செயலாளர்
மருத்துவர் நா. ஆ. நாராயணசாமி அவர்கள்
ஆர். ஐ. எம். பி.
எழுதிய

தாயைக் கொன்றான்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்"

என்னுங் குறளில் 'உண்ட உணவு செரித்ததை உணர்ந்து உண்டால் உடம்பிற்கு மருந்து எனக் கூறவும் வேண்டா' என்ற கருத்து மட்டும் உள்ளதாகக் கொள்ளவேண்டாம். இக்காலத்திற்கேற்ப, 'உண்ட உணவில் இல்லாத உய்வனவு [*Vitamin*] எது என்பதை உணர்ந்து, அதனைப் போற்றி உண்டால் உடம்பிற்கு மருந்து எனக் கூறவும் வேண்டா' என்னும் பொருளையும் கொள்ளலாம் போலும். உணவுப் பொருள்களில் இயற்கையாய் அமைந்துள்ள உய்வனவுகள் உடலை நோய் அணுகாமல் காப்பதோடு நோயின் மூலம் தலைகாட்டினும் கெடுத்துவிடும். இதுகொண்டு நம் உணவுகளே மருந்துகளுமாகும் எனக் கொள்ளலாம். "பால் உணவுமாயிற்று, மருந்துமாயிற்று" என இலக்கண உரையாசிரியர்கள் குறிக்கும் தொடரில் இக் கருத்து நிற்கிறது.

வேர், பட்டை, தண்டு, இலை, பூ, பிஞ்சு, காய், கனி, வித்து முதலியன நமக்கு உணவாகின்றன. இவைகளே மருந்துகளாகவும் திகழ்கின்றன என்பதைத் தமிழ் மருத்துவ நூல்களில் பரக்கக் காணலாம். இவைகள் நோய்நீக்கிகள் என்பதற்குப் பலவற்றிற்கு இடப்பட்டுள்ள பெயர்களே சான்று கூறுகின்றன. வாதமடக்கி, வெதுப்படக்கி, முடக்கறுத்தான், பொன்னாங்கணி, குன்மக் கோடரி முதலிய பெயர்களைக் காண்க! இவ்வகையில் 'சீரகம்' நற்பயன் தரும் உணவும் மருந்தும் ஆகும்.

சீரகம்

உயிர் வாழும் அகமாம் உடலைச் சீராக்குவது என்னும் பொருளில் இதன்

பெயர் அமைந்துள்ளது. சீரை உடையது என்னுங் கருத்தில் சீரி என்ற பெயரும் இதற்குண்டு. இது கூல வகையைச் சார்ந்தது. சீரகத்தில் பெருஞ்சீரகம் (சோம்பு), நற்சீரகம், கருஞ்சீரகம், காட்டுச் சீரகம் என நான்கு வகைகள் உண்டு. பெருஞ்சீரகத்திற்கு அடுத்துள்ள சீரகம், சிறுசீரகம் எனப்படாமல் நற்சீரகம் என நன்மையோடு குறிக்கப்படுவதுகொண்டே அஃது எவ்வளவு சிறந்தது என்பது விளங்கும். இந் நற்சீரகம், மருந்துக் கூட்டுப்பொருள் வகைகளில் 'எண்காயம்', 'எட்டினம்' எனுமிரண்டிலும் இடம்பெற்றது. அகட்டு வளியை அகற்றுதல், பசித்தீயைத் தூண்டுதல், வேண்டுங்கால் வெப்பம் உண்டாக்குதல் முதலியன இதன் செயல்களாகும்.

இத்துணைச் சிறப்புடைய சீரகத்தை நாடோறும் பயன்படுத்தலாம்; பயன்படுத்த வேண்டும் என்கிறது 'அகத்தியர் குணபாடம்' எனும் நூல் வெண்பா :

"வாயுவொடு நாசிரோய் வன்பித்தஞ்
சேராது;
காயம் கெகிழாது; கண்குளிரும் – தூய
மலர்க்
காரளகப் பெண்மயிலே; கைகண்ட
நித்தணையுஞ்
சீரகத்தை நீ தினமுந் தின்."

மலைஞாலத்து மக்கள் மறவாமல் நாடோறும் தின்கின்றனர். சீரக வெள்ளம் கூட்டாத வீடே அங்கில்லை. வயிற்றுநோயால் வாடுவோரும் அங்கில்லை.

சீரகத்தைப் பொன்வறுவலாக்கித் தட்டி நசுக்கிக் கொதி நீரில் இட்டுப் பாலோ, நெய்யோ இட்டுச் செய்வதே சீரக வெள்ளம். இஃது உணவைச் செரிப்பித்துப் பசியைத் தூண்டி உணவுப் பையைத் துப்புரவாக்குவது.

சீரகத்தைப் பொடிசெய்து எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்துக் காயவைத்துப் பலமுறை இவ்வாறு செய்து நாடோறும் சுண்டைக்காய் அளவு உண்டு வரலாம். இதுபோன்றே இஞ்சிச் சாற்றிலும், கையாந்தகரைச் சாற்றிலும், முசுமுசுக்கைச் சாற்றிலும் ஊற வைத்துக் காயவைத்துப் பயன்கொள்ளலாம். சீரகப் பொடியை வெண்ணெயில் கலந்துண்ண எரிகுன்மம் தீரும். இவ்வகையில் பயன்படுத்துவதால் இருமல் நோய் அணுகாது.

சீரகத்தை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சித் தலைமுழுகின் கண் நோய் நீங்கும்; மயக்கம் தெளியும்; வாந்தி நிற்கும்; தலைவலி போகும்; மந்தம் மடியும்.

சீரகத்தை நெல்லியுடன் கலந்து மருந்தாக்கிப் பயன்படுத்தின் விளையும் பயன்களைப் பின்வரும் 'மருத்துவக் குறள்' என்னும் நூலின் குறட்பாக்கள் வெளிப்படுத்துகின்றன:

காமாலை தீர:

" தக்கவே நெல்லித் தனிச்சீ ரகமிரண்டும்
ஒக்கவே தூளிடித் துண்"

பித்தம் தீர:

" சர்க்கரையுஞ் சீரகமுந் தண்நெல்லி
முள்ளியதும்
சுக்கேலந் தேனிழைத் துண்"

வாந்தி அடங்க:

" நெல்லியொடு திப்பிலியுஞ் நெற்பொரியுஞ்
சீரகமும்
வல்லியமாய்க் கியாழமவைத் துண்"

இந்நூல் மேலும் சீரகத்தின் பயனைக் கூறுகிறது. பயன்மிக்க இச்சீரகத்தைக் கொண்டே நம்முன்னோர் சாறுவைத்து நாடோறும் அருந்தினர். இன்றும் சீரகச் சாறு (சீரகரசம்) என்ற பெயர் வழங்குகிறது. மேலும் சிலவற்றைக் குறித்தல் இன்றியமையாததாகும்.

சீரகத்தையும் உப்பையும் வாயி லிட்டு மென்று அருந்தின் வயிற்று வலி, நெஞ்சு வலி தீரும். சீரகம் அரைப் பலத்தை மை போல் அரைத்து எலுமிச் சம் பழ அளவு எருமை வெண்ணெயில் கலந்து கொட்டைப்பாக்களவாய் மூன்று முறை கொடுக்க எளிமையாய்க் குழந் தைப் பேறுகும். சீரகத்தையும் வெங்கா யத்தையும் சம அளவில் சேர்த்தரைத்து ஆவின் பாலில் கலந்தருந்த வெட்டைச் சூடு தணியும்.

இதன் பெருமையை மற்றொரு பழங் காலப் பழக்கமும் அறிவிக்கிறது. பொன்னை நிறுப்பதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தினர். பழங்கால நிறுத்தல் அளவையில் 'சீரகம்' என்றொரு நிறைப் பெயர் உண்டு. நெல்லில் சிறந்த சம்பா வைச் சீரக அளவைக்கூட்டிச் சீரகச் சம்பா என வழங்குவதும் ஒரு பெரு மையே.

சீரகத்தின் சீர் இவ்வளவில் நிற்க, ஓர் இலைபற்றிக் காண்போம். கீரை வகைகளில் எளிமையாகக் கிடைப்பது முருங்கைக் கீரை என்பதை அறிவோம்.

முருங்கை இலை

" செறிமந்தம் வெப்பந் தெறிக்குந் தலைநோய்
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகும் — மறமே
நெருங்கயிலை யொத்தவிழி நேரிழையே; நல்ல
முருங்கை யிலையை மொழி."

என 'அகத்தியர் குணபாட' வெண்பா முருங்கையிலைபற்றி மொழிகிறது. முருங் குதல் என்ற சொல்லுக்கு முறிதல் என்று பொருள். அதற்கேற்பவே முருங்கை யிலை பல நோய்களை முறிப்பதாக அமைந் துள்ளது. நாடோறும் பயன்படுத்தத்தக்க எளிமையும் தகுதியும் கொண்டது இது. பெருங்காம்புகளை நீக்கி உப்பிட்டுச் சுவைக்குத் தேங்காய்த்துருவல், வெங் காயம் சேர்த்துச் சமைத்துண்ணும் பழக்கம் மிக நன்மை தருவது.

மேல்பூச்சினாலும் பயன் தருவது முருங்கையிலை. இலையோடு மிளகு சேர்த்து நசுக்கிச் சாற்றை நெற்றியில் தடவத் தலைவலி போகும். நாய்க்கடிக்கு இலையோடு இரண்டு திரி பூண்டு, ஒரு துண்டு மஞ்சள், உப்பு, மிளகு ஆகிய வற்றைச் சேர்த்தரைத்து உள்ளுக்குக் கொடுத்துக் கடியிடத்திலும் தடவவேண் டும். புண்ணும் ஆறும்; புரையும் போகும். வாந்தியாக வேண்டுமெனில் 4 தோலா எடை இலைச்சாற்றைக் கொடுக்கலாம். இலைச்சாற்றைக் கண் ணில் துளிதுளியாய் விடக் கண்வலி தீரும். சாற்றுடன் தேன் சேர்த்துக் கண் இமைகளில் தேய்க்கலாம்; கடுமை யான கண்வலி போகும்.

முருங்கையின் இலைமட்டுமன்று பூ, பிஞ்சு, காய், விதை, பட்டை, ஈர்க்கு, பிசின், வேர், கிழங்கு ஆகிய யாவும் நோய்நீக்கிகளே.

" முருங்கைக் காய்கறி முகிழிலை வேர்கொள
ஒருங்குள நோயெலாம் ஓடவுந் துரத்தும்"

என்கிறார் தேரையர். இவற்றுள்ளும் பூ மிகச் சிறந்தது.

"முருங்கைப் பூ உண்ண நுறுங்கு மாம் மேகம் (மேகநோய்)" என்ப தொரு முதுமொழி. இதை உண்பதால் தீக்குற்றம் நீங்கும்; கண் குளிர்ச்சி உண் டாகும்; ஆண் வீரியம் பெருகும். பாலிட்டுச் சமைத்தும், கொதிசாறுக்கி யும், காடியில் ஊறவைத்து ஊறுகாய் ஆக்கியும்; பிஞ்சு தோன்றிய நிலையில் சமைத்தும் உணவாக்கி மருந்துமாக்கிக் கொள்ளலாம்.

கூலத்தில் சீரகத்தையும், இலையில் முருங்கையையும் கண்டோம். பயனற்ற தாய்த் தள்ளுதற்குத் தன்பால் எதையும்

கொண்டிராத ஒன்றுபற்றிக் காண்போம். இவ்விடத்து வாழையை எடுத்துக்கொள்வோம்.

வாழை

அடியிலுள்ள கிழங்கு முதல் முடியாயுள்ள இலைக் கொழுந்துவரை பயன்தந்து அற்றுப் போகாமல் வளர்ந்து வருவது வாழை.

வாழை இலையில் உணவுண்டால் தோல் மெருகேறும்; மந்தம் மருவாது; இளைப்பு இரிந்தோடும்; அழற் குற்றத்தை அறுக்கும்.

கிழங்கு— சூட்டைத் தணிக்கும்.

தண்டு— குடல் மயிரை வெளிப்படுத்தும்; நச்சு நீரை நீக்கும்.

பூ — வெள்ளையைப் போக்கும்; சீதப் போக்கைக் கட்டுப்படுத்தும்; எருவாய்க் கடுப்பை நீக்கும்.

பிஞ்சு — மூலக்கடுப்பைத் தீர்க்கும்.

காய் — வயிற்றுளைச்சல், உடல் வெப்பம் நீக்கும்.

கனி — உடல் வெளுப்பு, அழல் நோய், மத நோய், மூர்ச்சை போகும். (வளி யுடையார்க்கு ஆகாது.)

பட்டை— இதன் சாறு தீக்கொப்புளத்திற்கு நன்மருந்து. நச்சுப் பாம்பு கடிக்கப்பட்டோரை வாழைப்பட்டையில் படுக்க வைக்க நஞ்சு ஏருது. அதேபோது பட்டைச் சாற்றைப் பிழிந்து எவ்வாறேனும் உள்ளே கொடுக்க நஞ்சு இறங்கும்.

பட்டை, மருந்து ஆவதோடு மருந்தைப் பாதுகாக்கும் அரணும் ஆகும். மூலிகைகள் பசையற்றுக் காய்ந்து போகாமலும், தம் காரம், மணம், சத்து குறையாமலும் இருக்கப் பச்சை மட்டையில் வைத்துக் கட்டுவர்.

இவ்வாறெல்லாம் பயன்படும் வாழை பயன்தந்து தன்னை மடித்துக் கொள்வதாகும். இது தனக்கென வாழாப் பிறர்க்குரியது மட்டுமன்று, தன்னை மாய்த்தும் பயன் தருவது. தாய் மாயச் சேய் கீழே தோன்றி வாழ்வைத் தொடருவதால் வாழை எனப்பட்டது போலும். இது கருதியே, இறைவன் அடியார்கள் கூட்டம் அருமல் தோன்றி வருவதற்கு இதனை உவமையாக்கி,

"வாழையடி வாழையென வந்ததிருக்
கூட்ட மரபினில்
யானொருவ னன்றோ" என்று பாடினர்.

வள்ளலார் வாயால் சிறப்புற்ற இவ்வாழைக்கு ஒரு பழிப் பெயரும் உண்டு. வாழை, குலையைத் தள்ளி அது முற்றியதும் மரத்தை வெட்டுகிறோம். மரம் இறக்கிறது. அஃது இறக்கக் காரணமானது வாழைத்தார். ஆகவே, அது தாயைக் கொன்றதாகிறது.

வாழைப் பட்டையை உலர்த்திப் பொடி செய்து சோற்றுடன் கலந்து உண்ணின் ஈளை நோய் நீங்கும். அதேபோல் புரசம் பட்டையைச் சிதைத்துக் கறுக்கு நீர் (கசாயம்) வைத்துப் பருகினுலும் ஈளை நோய் தீரும். இதனைச் "சரபேந்திரர் வைத்திய முறைகள்" என்னும் பதிப்பு கூறுகிறது. அப்பாடலில் வாழைக்கு மருத்துவ முறைக்கேற்ற குழூஉக்குறிப் பெயர் இடப்பட்டுள்ளது. அப்பெயர் "தாயைக் கொன்றுன்" என்பதாம்.

அப்பாடல் பின்வருவது:-

தாயைக் கொன்ருனை உலர்த்தியே
பொடிகள்
தான்செய்து சோறதி விட்டாலும்
தாயகப் புரசம் பட்டையைக் கடாயம்
தான்வைத்துப் பருகிடில் தானும்
போயிடுமீனை சிவன்கிரு பையினுல்
பொற்புள தஞ்சையை யாளும்
தாயினு மெத்த தயவுத் தீரன்
சரப பூபதி யருள்முறையே.

இவ்வாறு வாழை "தாயைக் கொன்ருன்" என்று பெயர் பெற்ருலும் அது நோயைக் கொன்ருனுமாகும். நாமும் நோயைக் கொன்ருன்களைத் தின்று நோயற்ற வாழ்வில் அமைவோம்; குறைவற்ற செல்வராவோம். தமிழ் மருந்துகளே குறைவற்ற செல்வம் நல்குபவை. அச்செல்வத்தை நிறைவாய்ப் பெற

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கேற்ப நாடி நலம் பெறுவோம்.

ஈரான் வாதுமைக் கொட்டையின் பருப்பை அரைத்துப் பாலில் கலக்கிக் காய்ச்சி வெறும் வயிற்றில் காலை மாலை உட்கொண்டு வருவீர்களாயின் வாய்ப்புண், கண்ணோய் நீங்கிவிடும். காரமான உணவை நீக்கி, ஆவின் பால் கலந்த சோறு உட்கொள்ளல் நன்று. அல்லது எலுமிச்சம் பழச்சாறு சிறிது கலந்து மோர் விட்டுச் சோறு தின்னல் நல்லது.

— மறைமலையடிகள்.
(அடிகளார் முடங்கலிலிருந்து)

முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதனுர்
எழுதிய

தமிழர் கலைச் சிறப்பு

கலை பலவகை. அதில் தமிழின், தமிழரின், தமிழகத்தின் கலை ஒரு தனி வகை. அதில் எழுத்துக் கலை, சொற் கலை, செய்யுட் கலை, மருத்துவக் கலை, இசைக் கலை, கூத்துக் கலை, நடிப்புக் கலை, காப்பியக் கலை, ஓவியக் கலை, கட்டிடக் கலை, சிற்பக் கலை, வான நூற் கலை, கணக்கு நூற்கலை, உளநூற் கலை, உடற்பயிற்சிக் கலை, கைத்தொழிற் கலை, உழவுக்கலை, நுண்கலை, சாகாக்கலை, ஆய்வுக்கலை, ஆட்சிக்கலை ஆகிய இருபத்தொன்றும் தமிழுக்கே உரிய கலைகள் எனலாம். அவற்றுட் சிலவற்றைக் கீழே காணலாம்.

ஆய்வுக்கலை

தமிழ்மக்கள் எதனையும் துருவி, ஆராய்ந்து கண்டெடுத்து அவற்றைத் தொகைப்படுத்தி, முறைப்படுத்தி, வகைப்படுத்திப் பெயர்ப்படுத்திச் செயற்படுத்துவதில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தலைசிறந்து விளங்கி வந்தனர். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனவும், மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை எனவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் நிலத்தை ஐந்தாக ஆய்ந்து கண்டனர். கண்டு மூவாயிரம் ஆண்டுகட்கு மேலாயின. இன்னும் ஆருவது நிலப்பரப்பை எவராலும் காணமுடியவில்லை.

கிழக்கிலிருந்து வீசும் காற்று ''கொண்டல்'' எனவும், அது கருங்கார் மூலம் கடல்நீரை அள்ளி மழையாகப் பொழிந்து முல்லை நிலத்தை வாழ்விக்கு

மெனவும், மேற்கிலிருந்து வீசும் காற்று ''கோடை'' எனவும், அஃது ஆற்றின் மூலம் நீரைக் கொண்டுவந்து மருத நிலத்தை வாழ்விக்குமெனவும், வடக்கிலிருந்து வீசும் காற்று ''வாடை'' எனவும், அது பயிர்களை வளர்க்கும் எனவும், தெற்கிலிருந்து வீசும் காற்று ''தென்றல்'' எனவும், அது மக்களை வளர்க்கும் எனவும் ஆய்ந்து தமிழகத்துக்கு நான்கு புறமிருந்தும் காற்று வருமெனக் கண்டு அதை வகைப் படுத்தித் தொகைப்படுத்திப் பெயர்ப் படுத்தினர்.

உலகில் பேசப்படும் மொழிகள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவைகள் எனவும், அவற்றில் எழுத்துள்ள மொழிகள் எழுநூற்றுக்கு மேற்பட்டவைகள் எனவும், அவற்றிலும் இலக்கண இலக்கியம் அமைந்த மொழிகள் இருநூற்றுக்கு மேற்பட்டவை எனவும் மொழி அறிஞர் கூறுவர். இவற்றுள் எந்த மொழியும் மூன்றாகவோ இரண்டாகவோ இருக்கவில்லை. யாவும் ஒன்றாக இருக்கின்றன. தமிழ் மொழி ஒன்றை மட்டுமே இயல், இசை, கூத்து என ஆய்ந்து வகைப்படுத்திப் பின் தொகைப்படுத்தி மூன்றாக அமைத்துக் கூறியுள்ளனர்.

எல்லா மொழிகளுக்கும் இலக்கணம் பொதுவகையான் ஒன்றாகவே அமைந்துள்ளது. தமிழ்மொழியின் இலக்கணம் மூன்றிலிருந்து ஐந்தாய்ப் பெருகிற்று. அவற்றுள் எழுத்தும் சொல்லும் கடந்து மூன்றாவதாக அமைந்த இலக்கணம் வாழ்வியல் இலக்கணம். அது பொருள் இலக்கணம். இதனை அகம், புறம் என இரண்டாகக் கண்டனர் தமிழர். அகம் மனத்தால் நினைக்கப்படுவது. புறம் கண்ணாற் காணப்படுவது.

நிலத்தை ஐந்தாக, காற்றை நான்காக, மொழியை மூன்றாக, வாழ்வியல் இலக்கணத்தை இரண்டாகக் கண்ட தமிழ் மக்கள் ஒழுக்கத்தை ஒன்றாகவே கொண்டு மனிதனோடு வைத்து இணைத்துவிட்டனர். திணை என்றால் ஒழுக்கம். உயர்திணை என்றால் ஒழுக்கம் உள்ளது என்றும், அஃறிணை என்றால் ஒழுக்கமற்றது என்றும் பொருள் படும்.

இவை அனைத்தையும் கண்டு மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாயின இவற்றில் மாற்றம் எதையும் எவராலும் காண முடியவில்லை. தமிழ் மக்களின் ஆய்வுக்கலையை அறிந்து மகிழ இஃது ஒன்றே போதுமானது.

கட்டிடக்கலை

திருச்சிக்குக் கிழக்கே பன்னிரண்டு கல் தொலைவில் கல்லணை ஒன்று கட்டப் பட்டுள்ளது. உலகிலேயே தரையில் கட்டப்பட்டுள்ள அணை இஃது ஒன்றே. அதிலும் இருபுறங்களிலும் ஐந்தடிக்கு மேற்படாத கரையை வைத்துக் கொண்டே தண்ணீரைத் தேக்கி அத் தண்ணீரை ஆறு பகுதிகளுக்குப் பிரித்து அனுப்புகின்ற கலை, ஒரு தனிக்கலையே யாம். மற்றைய அணைகள் இருபுறங்களிலும் மலைகளையே கரைகளாகக் கொண்டனவாகவும், பெரும் பள்ளத் தாக்குகளில் நீரைத்தேக்குவனவாகவும் அமைந்திருக்கும்.

இதைக் கட்டியவர் கரிகாற்சோழன் என்றும், இவரது காலம் 1800 ஆண்டு கட்கு முற்பட்டது என்றும் கூறுவர். இரும்பும் கலவைச்சாந்தும் இல்லாமல் இக்காலப் பொறியியல் வல்லுநர் எவராலும் அணைகட்ட இயலாது. இவ்விரண்டுமே இல்லாது செங்கல்லும் சுண்ணாம்புச் சாந்தும் கொண்டே இவ்வணை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எப்போதும் நீர் ஓடிக்கொண்டிருக்கும் காவிரியில் எப்படி அடித்தளம் போட்டார்கள்? எப்படிக் கட்டினார்கள்? எத்துணை ஆயிரம் பேர் கட்டினார்கள்?

சிறிது சிறிதாகக் கட்டி உயர்ந்து கொண்டிருக்கும் அந்த ஈரக்கட்டிடம் அடிக்கடி பெருக்கெடுத்து ஓடிவரும் வெள்ளத்தால் எப்படி அழிக்கப்பட முடியாமல் இருந்தது; தளர்நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் சில ஆண்டுகளுக்குள்ளாகவே வெடிப்பிட்டுப் போவதைக் காணும் நமக்குத் தண்ணீரிலே அடித் தளம் போடப்பட்ட கட்டிடம் ஈராயிரம் ஆண்டுகளாகியும் வெடிப்பு ஏற்படாமல் எப்படி இருக்கிறது என்பன போன்றவைகளை எண்ணும்போது நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. இதுபற்றிப் பெரிய பெரிய பொறியியல் வல்லுநரும் ஒன்றும் புரியாது விழிக்கின்றனர்.

திருச்சிக்கு வடக்கே நான்கு கல் தொலைவில் திருவரங்கம் என்ற ஓர் ஊர் உள்ளது. அது நான்கு புறமும் நீர் சூழ்ந்த ஓர் ஆற்றிடைக்குறை (தீவு). அஃது ஆற்றிடையிட்ட மேடாதலின் அரங்கம் எனப்பெயர் பெற்றது. பின் திரு அடைமொழி சேர்ந்து திருவரங்கம் எனப்பெயர் பெற்றது. அதனாலேயே அதிலுள்ள திருமாலும் திருவரங்கர் என்றானர்.

ஊருக்கும் கோயிலுக்கும் ஒரே பெயர். அது திருவரங்கம் என்பது. இக்கோயிலுக்கு ஏழு மதில்கள் உண்டு. இம் மதில்களுக்குள்ளாகவே வீடுகளும் தெருக்களும் அங்காடிகளும் அடங்கியுள்ளன. தெற்குக் கோபுரத்திற்கு மொட்டைக் கோபுரம் என்று பெயர். காரணம் கோபுரம் கட்டப்படாமல் கோபுரத்திற்குரிய அடித்தளம் மட்டும் கட்டப்பட்டிருப்பதே. நான்கு புறமும் நான்கு கற்றூண்கள் நிற்கின்றன. கோயிலைச்சுற்றி நான்கு வெளிக்கோபுர வாயில்களிலும் பதினாறு கற்றூண்கள் நிறுத்தப்பெற்றுள்ளன. தூணின் அகலம் 3 அடி; நீளம் 3 அடி; உயரம் 62 அடி. மேலே 42 அடி தெரிவதால் மூன்றில் ஒரு பங்கான இருபதடியாவது மண்ணில் புதைந்திருக்க வேண்டும். இன்றேல், அஃது உறுதியாக நிலைத்து நில்லாது. இவ்வாறு 16 தூண்கள் ஒரே அளவில் எங்குக் கிடைத்தன?

இருபுறமும் காவிரியும் கொள்ளிடமும் உள்ள மணற்பரப்பில் 20 அடி ஆழம் எப்படி வெட்ட முடிந்தது? மூன்று அடியிலேயே தண்ணீர் இருக்கும் பொழுது அதற்கும் கீழ் எப்படித் தோண்ட முடிந்தது? அக்காலத்தில் எவ்வகைப் பொறி நீரை இறைத்தது? எந்தப் பொறி மணலைக் கொண்டு வந்தது? அன்றி மக்கள்தாம் மணலையும் நீரையும் 20 அடி ஆழத்திலிருந்து எப்படிக் கொண்டுவந்தார்கள்? இவ்வளவு நீளமுள்ள கற்றூண்களை எந்தப் பொறி தூக்கி நிறுத்தியது? அன்றி மக்கள்தாம் எப்படித் தூக்கி நிறுத்தினார்கள்?

ஒரு தூணைப் படுக்கவைத்து 20 அடி நீளத்தைச் சிறிது சிறிதாகப் பறித்துப் பெரிய வடக்கயிற்றைத் தூணில் கட்டிப் பலர் தூக்கி நிறுத்தி இருக்கலாம் என்று ஒரு பொறியியல் வல்லுநர் சொன்னார். அதன்படி ஒன்றைப் பறித்து நிறுத்தலாம். அதன் பக்கத்திலும் அவ்வாறே மற்றொன்றையும் பறித்து நிறுத்தலாம். ஆனால், இவற்றின் எதிர்ப்பக்கத்தில் இரண்டு தூண்களை எப்படி நிறுத்த முடியும் என்று வினவியதற்கு அஃது ஆராய வேண்டியதுதான் என்று கூறிப் போய்விட்டார்.

திருவரங்கம் ஓர் ஆற்றிடைக்குறை என்பதை மேலே கண்டோம். இதற்குள் மலைகள் இல்லை. இருந்த அறிகுறியும் இல்லை. இங்கே இவ்வளவு பெரிய தூண்கள் எப்படி உண்டாயின? வெளியில் இருந்தே வந்திருக்க வேண்டும். அக்காலத்தில் ஆறுகளுக்கு வலுவான பாலம் கிடையாது. இவ்வாற்றிடைக் குறையுள் இவைகள் எப்படி வந்தன?

பரிசல், தோணி, படகு வழி இவைகளை ஏற்ற முடியாது; மணலிலும் இவைகளை உருட்டிக்கொண்டு வரமுடியாது; இது முடிந்த முடிபு. பின் எப்படி வந்தன?

திருச்சியிலுள்ள தாயுமானவர் மலையை உடைத்தாலும் இவ்வளவு நீளத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தூண்கள் தான் கிடைக்கும்; முப்பதடி, நாற்பதடியிலும், வலுவற்றுப் பொரிந்துபோயும், குட்டை நெட்டையாயும் கிடைக்கும். உயரத்தில் மட்டுமன்றி அகலத்திலும் நீளத்திலும் கூட அளவு வேறுபட்டிருக்கும். யாவும் ஒரே அளவில் அமையா. ஆனால், திருவரங்கத்தில் தூக்கி நிறுத்தப் பட்டுள்ள பதினறு தூண்களும் அகலத்திலோ நீளத்திலோ உயரத்திலோ அளவு வேறுபாடின்றி ஒரே அளவாக அமைந்துள்ளமை நமக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது. இன்றைய நாளில் ஒரு கட்டிட ஒப்புடன்படிக்கையாளரிடம் இவைபோல் பதினறு தூண்களைத் திருவரங்கத்திற்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று ஓர் ஒப்புடன்படிக்கை செய்ய முடியுமா? எத்துணை நூருயிரம் கொடுத்தாலும் அவை வந்து சேருமா என்பது ஐயப்பாடே. தமிழ் மக்களின் கட்டிடக்கலை உயர்வை உலகத்திற்குக் காட்டிக்கொண்டிருக்க இஃது ஒன்றே போதுமானது.

சாகாக்கலை

தமிழ்க்கலையில் சாகாக்கலை என்பதும் ஒன்று. இக்கலை தமிழ் மொழியில் மட்டுமே இருந்தது. அஃது இன்று அழிந்து ஒழிந்தது. எனினும், அக்கலையின் நிழலைப் பதினெண் உரன்வலர் (சித்தர்) பாடல்களில் காணலாம். சாகாக்கலையின் ஆசிரியர்களே உரன்வலர்கள். அக்கலையின் முடிவெல்லாம், ‘அருமையாகப் பெற்ற இவ்வுடலைப் பலநூற்றுண்டுகள் அழிய விடாமல் பாதுகாக்க முடியும்’ என்பதே. அவ்வாறு செய்யாமல் பலர் தமது உடல்களை அழியவிடுவதைக் கண்டு அவர்கள் வருந்தினர். ‘‘இசைவான கப்பலினை ஏக வெள்ளத்தில் எந்நாளும் ஓடாய் என்று ஆடாய் பாம்பே’’ என்பது பாம்பாட்டியார் கூற்று. இந்த உடம்பில் இந்த உயிர் என்றென்றும் தங்கி இருக்க வேண்டும் என்பது கருத்து.

“நந்தவ னத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
தாண்டி”

என்பது மற்றொரு உரன்வலரின் பாடல். ‘இவ்வுலகத்தில் ஒருவன் பத்து மாதமாய்த் தவமிருந்து நான்முகனை வேண்டி ஓர் உடம்பைக் கொண்டுவந்து, அதைப் பாதுகாக்கத் தெரியாமல் இவ்வுலக இன்பதுன்பங்களில் உழன்று, ஆடியோடிப் போட்டு உடைத்தான்’ என்பது இதன் பொருள். இதிலிருந்து மனிதன் இவ்வுடம்பைப் பெற்றது அதை அழிய விடுவதற்கன்று என்பது பெறப்படுகிறது. இன்னும் சில உரன்வலர் எண்மாஉரன் வலங்களை இக்கலையின் தொடர்பாகக் கூறியுள்ளனர். இஃதும் சாகாக்கலையின் மற்றொரு பகுதி. இதன் கருத்தை இராமலிங்க அடிகளின் அருட்பாக்களில் பல இடங்களிற் காணலாம்.

ஆட்சிக் கலை

கடந்த இரண்டாவது உலகப் போரில் அபிசீனியா நாடு வீழ்ச்சியுற்ற போது மேலை நாட்டுச் செய்தி இதழ் ஒன்று தனது கருத்தேற்றத்தில் ‘1000 ஆண்டுகள் தொடர்ந்து ஒரே ஆட்சியாக அரசு செலுத்தியிருந்த ஒரே நாடு வீழ்ச்சி அடைந்தது’ என எழுதியிருந்தது. அஃது ஓர் உண்மையை அறியவில்லை என்றே தோற்றுகின்றது.

உலகில் 2000 ஆண்டுகளுக்கு மேலாகவே தொடர்ந்து ஆட்சி செய்து வந்த ஒரே நாடு தமிழகம். இராமாயண, பாரத காலங்களிலும் தமிழகத்தின் மீது

எவரும் படையெடுத்து வந்ததாகச் செய்தியில்லை. நாவலம் பெருநாட்டின் வடபகுதி முழுவதும் அசோகருடைய கொடி பறந்துகொண்டிருந்த போதும் தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. அலெக்சாந்தரின் படை காவிரிக்கரையையும் கடக்க முடியவில்லை. அதுமட்டுமன்று, இலங்கை, காழகம், மலைநாடு, சிங்கப்பூர், யாவா முதலிய நாடுகளையும் தமிழகம் ஆண்டது. ஆகவே, தமிழ் மொழியில் நாடாளும் கலையுண்டா என்ற வினவிற்கே வழியில்லை. ஏனெனில், அது நாடாண்ட மொழி. உள் நாட்டை மட்டுமன்று; வெளிநாடுகளையும் ஆண்ட ஒரு வல்லரசின் மொழியுமாகும்.

இதுவரை கூறியவாற்ருன் தமிழ் மக்களின், தமிழகத்தின், ஒரு சில கலைகளை ஓரளவாய் அறியமுடியும். தமிழ்க் கலை பல்கிப் பெருகிய பரப்பளவினைக் கொண்டது.

பழந்தமிழ் நூல்களில் செல்வர்கள் தங்கள் செல்வத்தை 32 வகையான அறக்கட்டளைகளுக்கு வரையாது வாரி வழங்கினர் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வறக்கட்டளைகளால் தென்னகத்தின் பல பகுதிகளில் பல நூருயிரக்கணக்கான பொன் பெறுமானமுள்ளனவாய், வீருர்ந்த கலைத் திறனேடு கட்டப்பட்ட பல கோயில்களை அடைந்துள்ள நாம் அச்செல்வர்களது எல்லையில்லாப் பெருந்தன்மைக்கு நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கிருேம்.

— மறைமலையடிகள்.
(தமிழர் மதம்—ஆங்கில முன்னுரை.)

மணலித் தமிழ்க் கல்லூரி முதல்வர்
திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள்
எம். ஏ. (தமிழ்) ; எம். ஏ. (வரலாறு) ;
எம். லிட்; லிங். (டிப்ளமா).
எழுதிய

வரலாற்று வஞ்சி

வரலாறு, கடந்த காலத்தின் கன்னி; நிகழ் காலத்தின் மனைவி; வருங் காலத்தின் தாய். அவளது கன்னிப் பருவத்தின் இன்பக் கனவுகளையும் எழில் மிகு கற்பனைகளையும் எடுத்தியம்புவதே இலக்கியம்.

போர் வெறி கொண்ட சிலர், வீரத்தின் பெயரால் போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பிணமாக்கிய துன்பக் கதையினைக் கூறுவதுதான் வரலாறு என்று கருதிய காலம் மாறி விட்டது. உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த பெருந்திரளான மக்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று குடியேறிய கதையும் செந்நீரை வேர்வையாக்கி மக்கள் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைத்துப் பெற்ற செல்வத்தைக் குறுநில மன்னர்கள் கொள்ளையிட்டதுந்தான் வரலாறு என்று நம்பி வந்த காலம் மறைந்து விட்டது. அரசர்களின் அரசிமாடங்களில் இருந்த ஆயிரக்கணக்கான ஆரணங்குகள் கற்பழிக்கப்பட்ட தொடர்கதையே வரலாறு என்று போற்றிய காலம் போய்விட்டது.

கடந்த காலமெனும் எல்லையில்லாப் பெருவெளியில் காலத்தச்சன் கட்டியுள்ள பட்டறிவென்னும் மாபெரும் கோபுரமே வரலாறு. 'இப்பழம் பெரும் கோபுரத்தின் கொடுமுடியில் ஏறி அங்கிருந்து அப்பெருவெளியின் முழுத் தோற்றத்தைக் காண முயல்வது எளிய செயலன்று' என்பது இன்றைய அறிஞர்கள் வரலாற்றைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தாகும்.

எனவே, மக்களினம் நினைவுக்கு எட்டாத தொல்பழங்காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில் இன்று வரை அடைந்துள்ள வெற்றி தோல்விகளையும், பெருமை சிறுமைகளையும், வாழ்வு தாழ்வுகளையும், இன்ப துன்பங்களையும், எழுச்சிகளையும் ஏமாற்றங்களையும் சுவையோடு முறையாகக் கூறும் மக்களினத்தின் கதையே 'வரலாறு' என நாம் கொள்ளலாம்.

உலகிலுள்ள பல நாடுகளுக்கும், பல்வேறு மொழி பேசும் மக்களுக்கும் தனித்தனியான வரலாறுகள் இருக்கின்றன. ஆனால், நம் நாட்டில் வரலாற்றைப் போற்றிக் குறித்து வைக்கும் பழக்கம் இசுலாமியர் வருகைக்கு முன்னர் இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

இந்திய நாடெனும் இந் நாவலம் பெருநாடு பல்வேறு கலைகளையும் பன்னெடுங்காலமாகப் போற்றி வளர்த்து வருகிறது. ஆனால், அது வரலாற்றுக் கலையினைப் போற்றி வளர்க்கத் தவறி விட்டது. கிரேக்க நாட்டின் மாண்பு மிக்க எரசோடசையும், தூசிடைடசையும் போன்றோ, உரோமாபுரியின் இலிவியையும், டாசிடசையும் போன்றோ, சீனாவின் சூ-மா-சின்னைப் போன்றோ நம் நாட்டில் வரலாற்றாசிரியர்கள் ஒருவரும் தோன்றவில்லை என்பதை நாம் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

வரலாறு என்பது தற்காலப் பொருள் நலம் உடையதாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் வளர்ச்சியுற்றது என்பது உண்மை. எனினும், பண்டை உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த நாடுகள், வரலாற்றுக் குறிப்பேடுகளையும், காலவழிச் செய்திக் கோவைகளையும், ஓரளவிற்கு வரலாற்றுச் சார்புடைய இலக்கியங்களையும் படைத்து மகிழ்ந்த பொழுது நமது நாடு வெளிப்படையாகவே வரலாற்றுக் கலையைப் புறக்கணித்து வந்திருப்பதை நாம் காணுகின்றோம். ''தனித்தனி மாந்தரின் பிறப்பு, நாள், நாழிகை முதலியவற்றைக் குறித்து வைக்கும் பழக்கம் உள்ள நாட்டில், நாட்டின் பொதுவான வரலாற்றைக் குறிக்கும் பழக்கம் இல்லாமை வருந்தற்குரியது'' என்று மதிப்பிற்குரிய பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

இந்தியருக்கு வரலாற்று உணர்ச்சி இல்லாமல் போனமைக்குப் பல காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. எனினும், அவை முற்றிலும் பொருத்தமானவையாகா.

பண்டைத் தமிழ்மக்கள் இடைக்காலத்தில் போற்றி வளர்த்த இலக்கிய மரபுகள் பல. அவற்றைப் பொதுவாக நாம் ''சிற்றிலக்கியங்கள்'' என்று கூறி வருகிறோம். அவை 96 வகைப்படும் என்பர். அவற்றுள் ''வரலாற்று வஞ்சி'' என்று ஒரு சிற்றிலக்கிய வகை பேசப்படுகிறது. அதன் பெயரே அவ்விலக்கியம் வரலாற்றுத் தொடர்பானது என்பதையும், வஞ்சிப்பாவினால் இயற்றப்படுவது என்பதையும் தெரிவிக்கிறது.

> "குலமுறை சீர்த்தி பிறப்பொடும் வஞ்சிச்
> சொலல் வரலாற்று வஞ்சி"
>
> —நவநீதப் பாட்டியல்

இவ்வடிகளின் கருத்தைக்கொண்டு மன்னரது மரபின் தோற்றத்தையும், பெருமையையும் அம் மரபில் தோன்றிய மன்னர்களின் மிக்க புகழையும் அவர்கள் பிறந்த யாண்டு, அரசு கட்டிலேறி ஆட்சி புரிந்தமையையும், இன்னபிற செய்திகளையும் வஞ்சிப்பாவினால் எடுத்தியம்புவது ''வரலாற்று வஞ்சி'' என்பது பெறப்படுகிறது. 'சிதம்பரப்பாட்டியல்' என்னும் இலக்கணநூல் ''வரலாற்று வஞ்சி பல வரலா றோதல்'' என்று கூறுகிறது. 'அரசருடைய குடிச்சிறப்பு, கல்வி, வீரம், கொடை, கலைத்திறன், வென்றிச்

சிறப்பு முதலிய பல வரலாறுகளை எடுத்துச் சொல்லுவது வரலாற்று வஞ்சி' என்பது இதன் பொருளாகும்.

இதனை மிகத் தெளிவாகச் சென்ற நூற்றாண்டில் தோன்றிய 'முத்து வீரியம்' எனும் இலக்கண நூல்.

''விழுமிய குலமுறை பிறப்புமேம் பாட்டின்
பலசிறப் பிசையும் வஞ்சிப் பாவால்
வழுத்தல் வரலாற்று வஞ்சியா மென்ப''

– என்று அறிவிக்கிறது.

இத்தகைய இயல்புகள் வாய்ந்த இலக்கியம் இக்காலத்தில் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், இந்நூற்பாக்களால், அவ்விலக்கண நூல்கள் இயற்றப்பட்ட காலத்தில், வரலாற்றினை வஞ்சிப் பாவினுல் பாடும் வழக்கம் இருந்திருக்க வேண்டும் என்பது புலனுகின்றது. தமிழன் பொருள்களைப் போற்றி வாழாமையால் இழந்துவிட்ட பெருமைகள் பல. அவற்றுள் வரலாற்று வஞ்சியும் ஒன்று என வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

''வரலாற்று வஞ்சி'' என்ற இலக்கியம் பற்றி நமக்குக் கிடைத்துள்ள குறிப்புக்களினுல் இடைக்காலத் தமிழறிஞர் அரச மரபுகளின் வாழ்வையும் வரலாற்றையும் போற்றி நூலாக எழுதிப் பேணிக் காக்க முயன்றிருக்கிருர்கள் என்பது தெரிய வருகிறது. எனவே, தமிழனும் அவனுல் இயன்ற அளவிற்கு வரலாற்று உணர்ச்சியினைப் போற்றி வாழ முயன்றிருக்கிருன் என்று நாம் கூறலாம்.

கால ஆராய்ச்சி செய்து அவ்வக்கால நிலைகளையும், அவ்வக்காலத்திலிருந்த ஆசிரியர் நிலைகளையும் உணராமையினுற்றுன், நம் நாட்டவர்கள் பொய்க் கதைகளிலும், பொய்த் தெய்வ வணக்கங்களிலும், போலியாசிரியர் மருளுரைகளிலும் வீழ்ந்து மயங்கி உண்மையறிவு வாயாதவர்களாய், அதனுல் தம் பிறவியைத் தூய்மைப்படுத்தும் வழிவகைகள் தெரியாதவர்களாய் அறிவும் ஆற்றலும் இன்றித் தம்முட் பகைமையும் பொருமையுங் கொண்டு, நோயிலும் வறுமையிலும் உழன்று தீவினைக்காளாகி மக்கி மடிந்து போகின்றனர்.

— மறைமலையடிகள்.

(மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்
- முதற்பகுதி - பக்கம் - 55, 56.)

நிலவியல்

காவிரித் திட்ட எண்ணெய், இயற்கை எரிவளிப்
பொறுப்பாண்மைக் குழுப் பொறுப்பாளர்
பிரிகேடியர் இராம் சிங் அவர்கள்
வழங்கிய

எண்ணெய், எரிவளி வளம்.

தமிழாக்கம் :
திரு. ம. இரா. சீனிவாசன், பி. ஏ., பி.எடி., அவர்கள்.
,, கோவை இளஞ்சேரன் ,,

நீர்மப்பொன் [*Liquid Gold*] என வழங்கப்படும் பாறை எண்ணெயும் [*Petroleum*] இயற்கை எரிவளியும் [*Natural Gas*] உலகில் பெரிதும் விரும்பப்படும் எரி பொருள்களாகும். அனல் மின்பிழிவு நிலையங்களிலிருந்து வீட்டுக் கருவிகள் வரை - இருப்புப் பாதைகள், வேளாண்மைப் பணிகளெல்லாம் பாறை நெய்ப்புப் பொருள்களை [*Petroleum Products*] ஏதேனும் ஓர் உருவில் பயன்படுத்துகின்றன. இன்றைய வாழ்வில் பாறை நெய்ப்புப் பொருள்களில்லாமல் ஒரு நாளேனும் வாழ முடியுமா என்பதற்கு விடை சொல்லல் எளிதன்று. இந்தப் பொருள் எப்படி உண்டாகிறது; எப்படி எடுக்கப்பட்டுப் பல வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது என்பவற்றை நோக்குவோம்.

திரு. ம. சுப்பிரமணியன், எம். ஏ. [நிலவியல் வல்லுனர்]
,, சீ. கணபதி, எம். எஃசி. [,, ,,]
— ஆகிய இருவரும் இக்கட்டுரைக்கென அன்பார்வமுடன் எல்லாவகை உதவிகளையும் நல்கினர். இரு திருவினர்க்கும் உளமார்ந்த நன்றி கூறி மகிழ்கின்றேன்.

—பதிப்பாசிரியர்.

தோற்றுவாய்க் கருத்து

பாறை எண்ணெய் தோன்றுவதைப் பற்றி அறிவியல் வல்லுநர்கள் பல்வேறு கொள்கைகளைக் கூறுகின்றனர். அவற்றில், 'மருவகப் [Organic] பொருள்களினின்றும் தோன்றுகிறது' எனும் கருத்திற்கே பெருமளவு சான்றுக்கூறுகள் உள்ளன. இதற்குக் குறிக்கத்தக்க சான்றுகள் பின்வருபவையாகும்.

1. எண்ணெய்கள் ஒளிச்செயல் புரிபவை.

2. வெடிமம் [Nitrogen] அடங்கிய கூட்டுப்பொருள்கள் பாறை நெய்ப்புப் பொருளின் பகுதிப் பொருள்களாகும். இயற்கையில் இவை தாவரம், விலங்கினத்தினின்றுந்தான் காணப்படும்.

3. பெரும்பாலான எண்ணெய்கள் மருவகப் பாசியம் [Organic Chlorophyl] அல்லது வெண்ணீலப் பாறையியத்தில் [Porphyrin] அடங்கியவை.

4. எண்ணெய்கள் மருவக நிறச் சேர்க்கை [Organic Pigments] அடங்கியவை.

இவற்றைக்கொண்டு நோக்கின் பாறைநெய்ப்புப் பொருளும் இயற்கை எரி வளியும் உயிரினங்கள் வாழ்ந்த படிவு வடிநிலங்களில் [Sendimentary basins] உள்ள படிவுப் பாறைகளில் [Sendimentary Rocks] உண்டாகி, ஒன்று சேர்ந்து தேக்கங்களாகின்றன என்பது தெள்ளத் தெளிவாகிறது. அவை தீப்பாங்குப் பாறைகளிலும் [Igneous Rocks] உருவ மாற்றுப் பாறைகளிலும் [Metamorphic Rocks] காணப்படுவன அல்ல. கடல் வடிநிலங்களிலும் [Marine basins], கடந்த பலகோடி ஆண்டுகளில் கடல்களாக இருந்த பரப்புகளிலும் உயிரினங்கள் கணக்கற்றனவாக இருந்தன. ஊதிய முறையில் பயன்படும் பாறை எண்ணெய் 50 கோடியிலிருந்து 2 கோடி ஆண்டுகளுக்கு முந்தையப் பாறைகளில் உலகமெங்கும் காணப்படுகின்றது. ஆகையால், இவ்வகைப் பாறைகளில் மட்டும் எண்ணெய், எரிவளி ஆகிய வற்றைக் கண்டுபிடிக்க ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

தேக்கங்கள்

கரி, நீர்வளி [Hydrogen] அடங்கிய பாறை எண்ணெயும் எரிவளியும் தாவர விலங்கினங்கள் உயிர்வளித் [Oxygen] தொடர்பில்லாமல் நுண்ணுயிர்களால் சிதைவுறுவதால் தோன்றுகின்றன. இதற்குப்பின் வெப்பநிலை, மேலேற்படும் படிவுகளின் அழுத்தம் முதலியவற்றினால் வேதியியல், நிலவமைவு [Geologic] மாறுதல்கள் ஏற்பட்டு எண்ணெய் தோன்றுகிறது. இம்மாறுதலினால் மட்டும் எண்ணெய்த் தேக்கங்கள் ஏற்படுவனவல்ல. தோன்றும் பாறையில் பரந்து கிடக்கும் எண்ணெயும் எரிவளியும் நீர்த்துளிகளும் இடம் பெயர்ந்து, ஒன்று சேர்ந்து தேக்கப் பாறையில் சிறு தேக்கங்களாகும். இவை ஊதியந்தரும் வாணிக முறையில் பயன்படுத்தத் தக்கவையாகும்.

தேக்கப்பாறையானது எண்ணெய், எரிவளி ஆகியவற்றை நிறுத்தி வைத்துக்கொள்ள வாய்ப்பான நுண்துளையும், நீர்மப் பொருள்கள் ஊடுருவக் கூடிய தன்மையும் வாய்ந்ததாக இருக்கவேண்டும். தேவையான இத்தன்மைகளைப் பெற்றிருப்பவை மணற்பாறையும் மணலுமாகும். பிளவுகளோ துளைகளோ நிரம்பிய சுண்ணம்புப் பாறைகளும் தேக்கப் பாறைகளாகப் பயன்படும். தேக்கப் பாறைகளுக்கு மேல் ஊடுருவ முடியாத மூடிப்பாறை [Cap rock] எண்ணெயையும் எரிவளியையும் நிறுத்தி வைத்துக் கொள்ள இன்றியமையாததாகும். இஃது இல்லையேல் எண்ணெயோ எரி

வெளியோ மேற்பரப்புக்கு வந்து பயன் படாமல் வெளியேறும். பெரும்பாலான மூடிப்பாறைகள் தகடு போன்ற களி மண் பாறையும் களிமண்ணுமாகும். மேலும், அடர்ந்த சுண்ணும்புக்கல் பாறைகள், சுண்ண வெண்மைக் கரியகி களின்-கலப்புப் பாறைகள் [Dolomite] முதலியனவும் மூடிப்பாறைகளாகப் பயன் படும். ஏனென்ருல், இவற்றுள் ஊடுருவிச் செல்லமுடியாது.

முன்னரே குறித்தபடி எண்ணெய், எரி வளியை நிறுத்தி வைக்கத்தக்க தேக்கப் பாறைகள் இல்லையேல் அவை மேல்நோக் கிப் படிவுகளின் இடைப்பரப்பின் வழியே தப்பிச் சென்றுவிடும். இவற்றைத் தொகுத்துச் சேமித்து வைக்கத் தகுதி யான இடங்கள் வேண்டும். இவ்விடங் களுக்குப் பொறிகள் [Traps] என்று பெயர். (படங்களைக் காண்க.) இப்பொறி கள் வடிவமைப்புப் பொறிகள் [*Structural Traps*], அடுக்கமைப்புப் பொறிகள் [*Stratigraphic Traps*] என இருவகைப் படும்.

வடிவமைப்புப் பொறிகள் எனப் படுபவை [*Structural Traps*] மேல் நோக்கிவளைந்த பாறைகள் [*Anticlines*] (படம் 1) மாடப்பாறைகள், [*Domes*] ஒருபுறம் ஒத்துச் சாய்ந்த பாறைகளில் [*Monoclines*] காணப்படும். இவற்றில் தேக்கப் பாறைகளும், மேலுள்ள படிவப் பாறைகளும் வளைந்தோ ஒருபுறம் சாய்ந்தோ இருக்கும். மேற்பக்கத் திலோ சாய்வுக்கு எதிர்ப் பக்கத்திலோ அடைப்புடன் இருப்பதனுல் இவற்றிற்கு வரையறையான வடிவும் அளவும் ஏற் படும். பல்லாயிரக் கணக்கான ஆண்டு களில் ஏற்படும் நில இயக்கங்களால் படி வுகளில் ஏற்படும் வடிவமாறுதலே இதற் குக் காரணம்.

அடுக்கமைப்புப் பொறிகள் எனப் படுபவை [*Stratigraphic Traps*] மணல், களிமண், கரியகக்கல் [*Carbonates*] ஆகியன ஒரே சீராக இல்லாமல் ஏராள மான பரப்பில் படிவதால் ஏற்படும். இவைகளுக்குக் குறிப்பிட்ட எல்லைகளோ உருவமோ, அளவோ இரா. குறிப்பிட்ட வடிவமைப்புகளும் இரா. இருந்த போதி லும், இவற்றிலும் சிறிது மேல் நோக்கிய சாய்வு பொதுவாகக் காணப்படும். இத் தகைய பொறிகள், படிவுகள் ஏற்படுத் திய இணக்கமற்ற இடங்களில் (படம் 6) உள்ளன. பழங்காலக் கடற்கரை ஓரங் கள், ஊடுருவ முடியாத களிமண்ணுக் குள் அமைந்த மண் திட்டுகள், (படம் 8) அல்லது களிப்பாறைத் திட்டுகள், காலணிச் சரடு போன்ற மணற்படிவுகள், மேல் நோக்கிக் கூரிய மணற்பாறைகள், [*Updip Sand Wedge*] (படம்7), புதைந்த பழங்காலக் குன்றுகள் அல்லது பவழ நீரடிப் பாறைகள் முதலியவற்றில் இவ்வகைப் பொறிகள் காணப்படுகின் றன, அல்லது அமைகின்றன.

வரைபடங்களும் ஆய்வும்

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் எண் ணெய், எரிவளி வள ஆய்வு நடத்து வதற்கு முன்னர் அப்பகுதி முழுதும் நில வியல் [*Geological*] வரைபடம் வரையும் வேலை நிகழும். இதன் நோக்கம் பாறை நெய்ப்புப் பொருள்கள் தோன்றி, ஒன்று சேர்ந்து தேக்கங்கள் அமை வதற்கு அப்பகுதி வாய்ப்புடையதா என்பதைக் காண்பதாம். படிவுப் பாறை களின் மேற்பரப்பு அமைப்பிலிருந்து பரப்பிற்குக் கீழ் எப்படியுள்ளது என்று தெரிந்து கொண்டு, பின்னர் பொறிகள் [*Traps*] காணப்படுமா என்பது முடிவு செய்யப்படும். வண்டல் படிந்து பாறை களின் மேற்பரப்பு மூடப்பட்டுள்ள இடங் களில் பரப்புக்கு அடியில் முன்குறிக்கப் பட்ட பொறிகள் உள்ளனவா என்பதைக் காண நிலவியற்பியல் [*Geophysical*] ஆய்வுகள் நடத்தப்படும். நில ஈர்ப்பாற் றல், கவர்ப்பாற்றல், நிலநடுக்கம், மின் ஞற்றல், கதிரியக்கம் எனும் பல்வகை

நிலத்தின் அடியில் பாறை எண்ணெய், எரிவளி தேங்குதற்குரிய இடங்களாகிய எண்ணெய், எரிவளிப் பொறிகளின் (Traps) குறுக்குவெட்டுத் தோற்றம்.



1. மேனோக்கி வளைவுப் பொறி
[Anticline]



2. உருக்கோட்ட மேனோக்கி வளைவுப் பொறி
[Asymmetrical Anticline]



3. வடிவமைப்பு இடப்பெயர்வில் பொறியமைவு
[Trap due to Structural Dislocation]



4. சிக்கலான வடிவமைப்புப் பொறிகள்
[Complex Structural Traps]



5. மணல் திட்டு
[Sand Bar]



6. இணக்கமற்ற பொறிகள்
[Unconformity Traps]



7. மேனோக்கிக் கூரிய மணல் திட்டு
[Up Dip Sand Wedge]



8. நீர்க்கரை மணல் வில்லைத்திட்டு
[Shore Line Sand Lens]



9. மேல்வளைவுப் பொறியில் எரிவளி, எண்ணெய், நீர் கிடைநிலைப் பரப்பு
[Horizontal Distribution of Gas, Oil, Water in Anticlinal Traps]

நீர் மண்டலம்.
எண்ணெய் ,,
எரிவளி ,,
} மணற் பாறைகள்.

சுண்ணாம்புப் பாறை.
களிப்பாறை.
வடிவமைப்பு இடப்பெயர்வு.
இணக்கமற்றது.

ஆய்வு முறைகளைக் கொண்டதே இந்த நிலவியற்பியல் ஆய்வு ஆகும். இந்த ஆய்வு கொண்டு வடிநிலங்களில் எண்ணெய், எரிவளி வளங்களுக்குரிய வடிவமைப்பும் பொறிகளும் இருத்தல்பற்றி முடிவு செய்யப்படும்.

வரைபடங்களைக்கொண்டு வடிநிலங்களை ஆராய்ந்து நிலவியல் [*Geological*] தன்மைகளோடு மேற்குறித்த ஆய்வுகளை ஒப்பிட்டுப் பார்த்துத் தக்க சில இடங்களில் முனைப்பான ஆய்வுகள் நடத்த விரிவான திட்டம் வகுக்கப்படும்.

எண்ணெய்க் கிணறுகள்

எண்ணெயோ எரிவளியோ இருத்தலை மெய்ப்பிக்க வரையறுக்கப்பட்ட இடங்களில் கிணறுகள் தோண்டப்படும். சில இடங்களில் எண்ணெயோ எரிவளியோ பரப்பில் கசிவது முனைப்பான ஆய்வுகளுக்கு உதவியாகத் துப்புத் தரும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் எண்ணெய்வள ஆய்வுக்குத் தோண்டப்படும் கிணற்றுக்கு 'மோப்பப் பூனை' [*Wild cat*] என்று பெயர். ஆயப்படும் நிலமாகிய வயலில், முதல் கிணற்றில் எண்ணெயோ எரிவளியோ கிடைத்து, அஃது ஊதியம் பயப்பதாய் அமையுமானால் அதே வயலில் மதிப்பீட்டுக் கிணறுகள் பல தோண்டப்படும். இதன் நோக்கம் வயலின் பரப்பையும், எண்ணெய், எரிவளி கிடைக்கக்கூடிய அளவையும் அறிந்து ஊதியமுறையில் மதிப்பிடுவதாகும்.

வெளிக்கொணர்தல்

வேண்டப்படும் ஆழத்திற்கு ஒரு கிணறு தோண்டப்பட்ட பின்னர் துளைக்கப்பட்ட பாறைகளின் தன்மைகள்— அஃதாவது மின்னாற்றல் இயல்பு, கதிரியக்கத் தன்மை, ஒலியியல் முதலியவை மின்னணுக் கருவிகளால் அளக்கப்படும். இந்தக் கருவிகளுடன் கிணற்றுள் ஆழ்த்தப்படும் தடித்த கம்பியின் வாயிலாக மேற்பரப்பில் மேற்குறிக்கப்பட்ட தன்மைகள் பதிவு செய்யப்படுகின்றன. இப்பதிவுகளிலிருந்து எண்ணெய், எரிவளி கிடைக்கக்கூடிய படிவங்களின் மட்டங்கள் உறுதி செய்யப்படும். இவற்றில் எஃகுக் குழாய்கள் வேண்டப்படும் ஆழத்திற்கு இறக்கப்பட்டுச் சாந்தினால் கிணற்றின் சுவரோடு பதிய வைக்கப்படும். முன்னரே உறுதிசெய்யப்பட்ட மட்டங்களில் வெடிமருந்துகளால் எஃகுக் குழாயில் துளைகள் இடப்படும். கிணற்றின் முகப்பில் திறப்படைப்பான் [*Valve*] பொருத்தப்படும்.

இவ்வாறு கொணரப்பட்ட எண்ணெயும் எரிவளியும் குழாய்களின் வாயிலாக வயலின் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள சேமிப்பு நிலையத்திற்கு வந்து சேரும்.

எண்ணெய், எரிவளி, நீர் வட்டம்

முன்னர்க் குறித்தவாறு எண்ணெய், எரிவளி, நீர் ஆகியவை தேக்கங்களில் இயற்கையாக ஒன்று சேர்ந்து காணப்படும். மக்கின தாவர, விலங்கினச் சத்து, அவற்றினை நீரியக் கரியகச்சேர்மமாக [*Hydrocarbons*] மாற்றிய அழுத்தம், வெப்பநிலை, வேதி வரையறைகள் முதலியவற்றைப் பொறுத்தே அவற்றின் விழுக்காடு அமைந்திருக்கும்.

எண்ணெய், எரிவளி, நீர் ஆகிய மூன்றும் கிடைக்கும் இடங்களில் எரிவளி பொறியின் மேற்பகுதியிலும், எண்ணெய் இடைப்பகுதியிலும், நீர் அடிப்பகுதியிலும் காணப்படும். அவை கிடைவரி வடிவில் [*Horizontal Plan*] பொது மையங்கொண்ட வளையங்களாக அமைந்திருக்கும் (படம் 9). எரிவளி இடையிலும், மற்றவை அதைச் சுற்றி வில்வளைவிலுமாகத் [*Arcuate*] தோன்றும். பரப்பின் வெளி உறையில் காணப்படும்

நீர்மண்டலம், அடிநீர் அல்லது கடைநீர் எனப்படும். எரிவளி அமைந்த பகுதி வளிமுடி [Gas Cap] எனப்படும்.

எரிவளி நிலை

சில வயல்களில் நெய்ப்புக் கசிவுகள் ஏற்படினும் தொகுக்கப்படும் நிலைகளுக் கேற்ப இந்நீர்ம, வளிப் பொருள்கள் தனித்தனியே காணப்படா. அடியில் தனி நீர் நிலையமில்லா இடங்களிலும் பெரும்பான்மையான தேக்கங்களில் எண்ணெய், எரிவளி மண்டலங்களின் நுண் துளைகளில் நீர் மிகச் சிறு துளிகளாகவே காணப்படும். இத்தகைய நீர், எண்ணெய், எரிவளி ஆகியவற்றுடன் அதிக அளவில் வெளிப்படாது. அன்றி, விளைவமைவிடங்களில் [Production Installations] சிறு அளவில் மட்டும் பிரிக்கப் படும். தேக்கத்தில் அழுத்தம் வெளிவளி மண்டில அழுத்தத்தைப் போல் பலநூறு மடங்காகும். ஆகையால், ஓரளவு எரிவளி எண்ணெயில் கரையும். வெளியில் வரும்போது அழுத்தம் குறைவதால் கரைசலிலிருந்து எரிவளி வெளிப்படும். தேக்கத்தில் அதிக அழுத்தம் இருப்பதற்குக் காரணங்கள் தேக்கத்தின் ஆழமும், அதன் மேலுள்ள பாரமுமேயாகும். வளி, எண்ணெயின் அளவு விழுக்காட்டில் குறைவானால் வளி எல்லாம் தேக்க அழுத்தத்தால் கரைந்துவிடும். தனியாக வளிமுடி காணப்படாது. எரிவளி தேக்கத்தில் எண்ணெயுடன் சேர்ந்து காணப்படுவதால் மூடிவளியையும் கரைந்த வளியையும் 'இணைந்த எரிவளி' [Associated Gas] என்கிறோம். சில இடங்களில் எரிவளி எண்ணெய்க் கலப்பில்லாமல் காணப்பட்டால் அஃது 'இணையா எரிவளி' எனப்படும். எரிவளி கரையும் அளவிற்குத் தேக்கத்தின் அழுத்தம் மட்டுமன்றி எண்ணெயின் தகுதிப்பாடும் காரணமாகும்.

எண்ணெய், எரிவளிக் களங்களில் எண்ணெய், எரிவளி, நீர் தனித்தனியே பிரிப்பான்கள் [Separators] மூலம் பிரிக்கப்பட்டு எண்ணெயும் எரிவளியும் தனித்தனியே குழாய்களின் மூலமோ தொட்டி வண்டிகளின் [Tank Wagons] மூலமோ பயனுறுத்தும் இடங்களுக்கு அனுப்பப் படும். எரிவளி மட்டும் கிடைக்குமானால் எண்ணெயில் எடைக்குறைவான பகுதிகள் பிரிப்பானில் நீர்மமாகி நிலைமாறும் [Condensation] முறையில் பிரிக்கப்படும். இவ்விளைபொருள் எரிவளிச்செறிமம் [Gas Condensate] எனப்படும். இத்தகைய எரிவளி 'ஈர எரிவளி' [Wet Gas] எனப்படும். நீர்மப் பகுதிகள் இன்றேல் 'உலர்ந்த எரிவளி' [Dry Gas] எனக் குறிக்கப்படும். நீர்வளிக் கந்தகை [Hydrogen Sulphide] கலந்தது. 'புளிக்கும் எரிவளி' [Sour Gas] என்றும், கலக்காதது 'இனிய எரிவளி' [Sweet Gas] என்றும் குறிக்கப்படும்.

மதிப்பீடு

வயலின் பரப்பு, மின்னணு ஆய்வால் அறியப்படும் மண்டலத்தில் தடிப்பு முதலியவற்றிலிருந்து எண்ணெய், எரிவளி ஆகியவற்றின் மதிப்பீடு கணிக்கப்படும். தேக்கப் பாறையில் எண்ணெய், எரிவளி காணப்படுவனவாய் முன்னர்க் குறிக்கப்பட்ட நுண்துளைகளின் வெற்றிட மொத்தம் [Amount of void space] செய்முறைக்கூட ஆய்வுகளிலிருந்தும் கணக்கிடப்படும். இவ்வடிப்படைச் செய்திகளிலிருந்து களத்தில் எண்ணெய், எரிவளியின் அளவு கணக்கிடப் படும். வெவ்வேறு மண்டலங்களில் எண்ணெய், எரிவளிக்குத் தனித்தனி மதிப்பீடுகள் கணிக்கப்படும். சில முதன்மையான கிணறுகளில் விளைச்சல் தன்மைகளைக் கொண்டு விளைகிற எண்ணெய், எரிவளி ஆகியவற்றின் தகவும் அளவும் கணக்கிடப்படும். விளைவாகக்கூடிய மொத்த அளவுகளைக் கொண்டே விற்பனைக்கு ஒப்புடன்படிக்கை செய்யப் படும்.

விளைவு குறிக்கத்தக்க அளவில் குறைந்தால் பழைமையான எண்ணெய் வயல்களில் எஞ்சியுள்ள ஒரு பகுதிக் கிணறுகள் மூலம் நீர் உள்ள கிணறுகளில் நீரை உட்செலுத்தியும், வளியுள்ளவை களில் வளியை உட்செலுத்தியும் எண் ணெய் விளைச்சலை நீடிப்பது மறுவிளைச் சல் எனப்படும். இது உட்செலுத்தும் அல்லது வெள்ளப்படுத்தும் முறை [*Injection or Flooding Scheme*] எனப் படும். எண்ணெய் விளைச்சல், அதிகம் குறையாத இடங்களிலும் தேக்கங் களின் அழுத்தத்தை நிலையாக்கி முதன் முறையாகத் தோற்றுவிக்கின்ற எண் ணெயின் அளவை மிகுதிப்படுத்தவும் இம்முறை பயன்படும்.

வேண்டப்படும் அளவில் கிணறுகள் தோண்டும் வேலை முடிந்து, முற்றிலும் ஆராயப்பட்டு, மதிப்பீடுகள் உருவாக்கப் பட்ட பின்னர் ஒரு வளர்ச்சித் திட்டம் வகுக்கப்படும். கிணறுகளில் பயன்படும் கருவிகள் 15 அல்லது 20 ஆண்டுகளில் பழுதடையுமாகையால் திட்டம் 20 ஆண்டுகளுக்கு வகுக்கப்படுவது மர பாகும். குறிப்பிட்ட வயல்களில் சில தனிச் சிக்கல்கள் இருந்தால் ஒழிய முழு விளைச்சலையும் 20 ஆண்டுகளுக்குள் அடைய திட்டம் வகுக்கப்படும். அவ் வாறு குறிப்பிட்ட வயல்களில் மேலும் கிணறுகள் தோண்டுவது இன்றி யமையாததாகும். வளர்ச்சித் திட்டத்தில் தேக்கங்களின் தன்மைகள் (அஃதாவது, நுண்துளைத் தன்மை, நீர்மமும் வளியும் பரவிக் கிடத்தல், அவற்றின் இயங்கு தன்மை, துவக்க அழுத்தம், அழுத்தத் தின் இழப்பும் இழப்பீடும், விளைச்சல் அளவு, எண்ணெய் எரிவளி நீர் ஆகிய வற்றின் தன்மை, விளைச்சலில் அப்பகு திக்கேற்ற பொருளியல், கிணறு தோண் டுவதற்கும் கட்டுமானத்திற்கும் ஆகும் செலவு, இவற்றைப் பேணும் செலவு, கிணறுகளின் விளைச்சல் விழுக்காடு முதலியவை) கருத்தில் கொள்ளப்படும். இவற்றைச் சார்ந்து எண்ணெய் எடுப்ப தற்கு வேண்டிய கிணறுகளின் எண் ணிக்கை, கிணறுகளைத் தோண்ட வேண்டிய அடுக்குப் பாங்கம் [*Grid pattern*], ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் கிடைக்கக்கூடிய எண்ணெயின் நிரல ளவு, வேண்டினால் இரண்டாந்தகுதி முறைகள் முதலிய இவையெல்லாம் அறி வியல் அடிப்படையில் முடிவு செய்யப் படும். எண்ணெய் வயல் முற்றிலும் பயன்படுத்தப்படும் வரை இத்திட்டம் பின்பற்றப்படும்.

தூய்மைப் படுத்தல்

வயலினின்று எண்ணெய், தூய்மி நிலையத்திற்கு [*Refinery*] முறையாக அனுப்பப்படும். இங்கு எண்ணெய் தூய் தாய்ச் செப்பமாக்கப்பட்டு வடித்துப் பகுத்தல் முறையில் பல பகுதிகளாகப் பிரிக்கப்படும். இவ்விளைபொருள்கள் பயன்படுத்துவோருக்கு, அவர்களுக்கு வேண்டப்படும் உருவத்தில் கிடைக்கும் படி செய்யப்படுகிறது. மிக நொய்தான பகுதியாம் கல்லெண்ணெய் [*Gasolene*] முதல், மிக அடர்த்தியான மெழுகு [*Wax*], பாறை நெய்ப்புக் கீல் [*Petroleum Tar*] வரை பலவகைப் பாறை நெய்ப்புப் பொருள்கள் பல தொழில் களுக்குக் கிடைக்கும். பாறை நெய்ப்பு வேதியியல் தொழில் மிகப் புதுமைத் தொழில். இது நாடோறும் பயன்படும் பல்வேறு வேதிப்பொருள்களை உண் டாக்குகிறது.

நம் நாட்டில் இவ்வளம்

நம் நாட்டில் விடுதலைக்குப் பின்னர் எண்ணெய் வள ஆய்வு வியக்கத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. இதற்கு முன்னர் ‘அசாம் எண்ணெய் நிறுவனம்’ ‘ஃச்டாண்டேர்டு எண்ணெய் நிறுவனம்’ ஆகிய தனியார் நிறுவனங்களே எண் ணெய் வள ஆய்வை முறையே அசாமி லும் மேற்கு வங்கத்திலும் நடத்தின. நம் மைய அரசினால் எண்ணெய்,

இயற்கை எரிவளிப் பொறுப்பாண்மைக் குழு [O.N.G.C] ஏற்படுத்தப்பட்ட பின்னர் புதுப்பகுதிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. குசராத்திலும், அசாமிலும் புதிய எண்ணெய் வயல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில விளைச்சலையும் துவக்கியுள்ளன.

அங்கலேசுவரம், கலோல், நவகாம், கடி, சானந்து முதலிய இடங்கள் குசராத்திலுள்ள சில எண்ணெய் வள வயல்கள் உள்ளனவாகும். காம்பேயில் எரிவளி கிடைக்கும் வயல் உளது. அசாமில் உருத்திரசாகரம், இலக்குவாவில் எண்ணெய் வயல்கள் உள்ளன. இவை யாவும் பொறுப்பாண்மைக் குழுவால் கண்டுபிடிக்கப்பட்டவை. மற்றொரு குறிப்பிடத்தக்க எண்ணெய் வயல் அசாமிலுள்ள நகோர்கடியாவில் 'எண்ணெய் இந்தியா நிறுவனம்' என்னும் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் நம் அரசுக்குப் பாதிப் பங்கு உண்டு. பொறுப்பாண்மைக் குழுவினல் நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

சோவியத் நாட்டின் உதவி

நம் நாட்டின் இத் திட்டத்திற்குக் கடந்த 12 ஆண்டுகளாகச் சோவியத் நாடு உளமுவந்து உதவி வருகிறது. இதற்கான அறிவியல் தொழில் நுட்ப அறிவு அளித்தல், தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு வெவ்வேறு பிரிவுகளில் பயிற்சி அளித்தல், கருத்துரை நல்கவும் நுட்ப வேலைகளை மேற்பார்வையிடவும் வல்லுநர்களை அனுப்பல், கருவிகள் வாங்கக் கடன் உதவி அளித்தல், துரப்பண ஆய்வுக் கருவிகளையும் விளைவிப்புக் கருவிகளையும் பிறதுணைக் கருவிகளையும் விலைக்குத் தரல் முதலிய பல துறைகளில் உதவி வருகிறது. இக் குறுகிய காலத்தில் நாம் இத்துணை முன்னேற்றமடைந்து நாட்டில் எண்ணெயையும் எரிவளியையும் விளைவிக்கக்கூடிய பல வயல்களைக் கண்டுபிடித்துள்ளமைக்குச் சோவியத்தின் உதவியே அடிநிலை எனலாம்.

எண்ணெய்த் தூய்மி நிலையங்கள்

நம் மைய அரசு பிற வெளிநாட்டரசுகளின் உதவிகொண்டு, மூன்று தூய்மி நிலையங்களை [*Refineries*] ஏற்படுத்தியுள்ளது. இவை அசாமிலுள்ள கெளகாத்தி, பீகாரிலுள்ள பரோனி, குசராத்தியிலுள்ள பரோடா ஆகிய நகர்களில் உள்ளன. இவையன்றி, பம்பாயிலும் விசாகப்பட்டினத்திலும் தனியார் தூய்மி நிலையங்கள் உள்ளன. நம் அரசின் கட்டுப்பாட்டில் கொச்சியிலும் தமிழ்நாட்டிலும் சில ஏற்படுத்தப்படுகின்றன.

காவிரிக் கழிமுகப் பகுதியில் எண்ணெய் வளம்

காவிரிக் கழிமுகப் பகுதியில் (காவிரி வடிநிலம் என்று குறிக்கப்படுவது) பத்து ஆண்டுகளுக்குமுன் எண்ணெய்வள ஆய்வு, நிலவியல் மேற்பரப்புப் படம் வரைதலுடன் துவங்கியது. இதைத் தொடர்ந்து பாறைகளின் மேல் வண்டல் படிந்த இடங்களில் நிலநடுக்கவியல் [*Seismic*] ஆய்வுடன் நிலைஈர்ப்பியல், கவர்ப்பியல் ஆய்வுகள் ஒரே காலத்தில் நடந்தன. கிடைத்த சான்று கொண்டு துரப்பணப் பணி தி. ஆ. 1994 புரட்டாசியில் (கி. பி. 1963 செப்டம்பரில்) தொடங்கியது. நிலப்பரப்புக்குக் கீழ் பாறை வெட்டுமுகத் தோற்றத்தைக் காண, பட்டுக்கோட்டையில் முதல்வடிவமைப்புக் கிணறு தோண்டப்பட்டது. இதுபோது இரண்டு ஆழ் துரப்பணக் கருவிகளும் [*Deep Rigs*], ஒரு வடிவமைப்புத் துரப்பணக்கருவியும் (*Structural Rig*) இங்கு வேலை செய்கின்றன. தி. ஆ. 1995-1996 (கி. பி. 1964-1965) இல், நன்னிலம் வட்டம் திட்டைச்சேரியில் முதல் எண்ணெய்க்கிணறு தோண்

டப்பட்டது. அஃது எண்ணெய் இருப்பதைக் காட்டியது. ஆனால், வாணிக முறையில் ஊதியம் பயப்பதாயில்லை. இதே பகுதியில் தோண்டும் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. எண்ணெய் உண்டாகும் இடங்களைக் காண 5 அடுக்கமைப்பு ஆழ் ஆய்வுக் கிணறுகள் [*Stratigraphic test wells*] - திட்டைச் சேரிக் கிணற்றைத்தவிர-தோண்டப்படுகின்றன. 7 வடிவமைப்புக் கிணறுகள் பரப்பின் கீழ் அமைப்புகளை அறிவதற்காகத் தோண்டப்பட்டுள்ளன.

எண்ணெய், எரிவளி கண்டுபிடிப்பு என்பது ஒரு சூதாட்டத்திற்கு ஒப்பாகும். இதில் நாட்டின் பொருளாற்றலும், அறிவியல் வல்லுநரின் செய்திறனும் பணயம் வைக்கப்படுகின்றன. குசராத்திலும் அசாமில் சில இடங்களிலும் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் தக்க பரிசு நாட்டிற்குக் கிடைத்துள்ளது என்று மகிழலாம். விரைவில் காவிரிக் கழிமுகப் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிக்கும் முயற்சியில் வெற்றி காண்போம் என்று நம்புகின்றோம்.

நாகரிகம் மிக்க இக்காலத்தில் நெருப்பின் உதவியால் பல்வகைப் பயன்பெற்று வருவதையெல்லாம் உன்னிப்பாய்ப் பார்க்கும்போது, நிலத்தின் கருப்பொருள்களான கல், பஞ்சு, கந்தகம் எண்ணெய் முதலியவற்றின் சேர்க்கையாலன்றித் தீயைப் பயன்படுத்திக்கொள்ளல் ஏலாதென்பது நன்கு புலனாகின்றது.

—மறைமலையடிகள்.
(மக்கள் நூருண்டு உயிர்வாழ்க்கை-
முதற்பாகம்-பக்கம்-129)

கோவை, P. S. G. தொழில் நுணுக்கக் கல்லூரி இயக்குநர்
திரு. [G. R.] கோ. அர. தாமோதரன் அவர்கள்
பி.எஸ்சி., எம். ஐ. ஈ. ஈ., எம். ஐ. ஈ., எம். எல். சி.
எழுதிய

வளி மண்டிலம்

நிலத்தின் பரப்பிலே இயற்கையின் பல்வகையான வியத்தகு படைப்புகளைக் காண்கிறோம். ஓங்கி உயர்ந்து நிற்கும் மலைகளும், பரந்து விரிந்து கிடக்கும் கடல்களும் இன்னோரன்ன ஏனைய வியத்தகு படைப்புகளும் நிலத்திற்குப் பொலிவைத் தருகின்றன. இந்த மண்ணிலே நின்று விண்ணை அண்ணாந்து பார்த்த முதல் மனிதனுக்கு அதன் அரும்பெரும் நிலை ஒரு பெரிய மலைப்பையும் அச்சத்தையும் உண்டாக்கியிருக்கவேண்டும். காலப்போக்கில் மனிதனுடைய பகுத்தறிவு வளர வளர, அவனது துளைத்தறியும் திறனும் அறிவார்வமும் பெருகப் பெருக அவன் விண்ணையும் ஆய்ந்தறியும் ஆற்றல் பெற்றான். இயற்கையை அடக்கி ஆண்டு அதைத் தன் வாழ்க்கை நலனுக்குப் பயன்படுத்திக்கொண்டான்.

நம்மைச் சூழ்ந்துள்ள காற்று மண்டிலம், அஃதாவது வளி மண்டிலம் ஒரு கடல். அந்தக் கடலின் அடித்தளத்தில் வாழுகின்ற ஓர் உயிரினந்தான் மனித இனம். நமது மூச்சாக உள்ள இந்த மதிப்பரிய காற்று நம்மைச் சூழ்ந்தும், நமது தலைக்கு மேலாகவும் பரவியுள்ளது. இஃது ஒய்வே அறியாத பல வளிகளின் கலவையாகும். இது நூற்றுக்கணக்கான கல் தொலைவிற்கு உலகத்தைச் சூழ்ந்து சுழன்ற வண்ணம் உள்ளது.

வளி மண்டிலம் நாம் மூச்சு விடுவதற்குத் துணைசெய்வதோடு மட்டுமன்றி நமது நிலத்திற்கு உற்ற ஓர் அரணாகவும் அமைந்துள்ளது. புற வெளியிலிருந்து நிலத்தை நோக்கி வரும் எரிமீன்கள், புற ஊதாக் கதிர்கள், அண்டவெளி நுண்மின்னலைகள் [*Cosmic Rays*] முதலியவற்றைத் தடுத்து வடிகட்டி நிலத்திலுள்ள உயிரினங்களை அழிவினின்றும் பாதுகாப்பது நமது வளி மண்டிலமே. இத்தகைய மிக இன்றியமையாத வளி

மண்டிலத்தைப் பற்றி ஒவ்வொருவரும் ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும். அதனால் வளி மண்டிலத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவியல் நுணுக்கங்களை விடுத்து, அதன் பல்வேறு பகுதிகளையும், அப் பகுதிகளின் சிறப்பியல்புகளையும் இங்குச் சுருக்கமாகக் குறிக்கிறேன்.

வளிமண்டிலம் தோற்றத்தில் ஒரே தன்மைத்தாகக் காணப்பட்டாலும் உண்மையில் அது 'அடிவளி மண்டிலம்' [*Troposphere*], 'படுகைவளி மண்டிலம்' [*Stratosphere*], 'இடைவளி மண்டிலம்' [*Mesosphere*], 'மின்றுகள் வளி மண்டிலம்' [*Ionosphere*], 'மின்றுகள் மீவளி மண்டிலம்' [*Extosphere*], 'கவர்ப்பு மண்டிலம்' [*Magnetosphere*] எனப் பல திறப்பட்ட மண்டிலங்களால் ஆனது. ஒவ்வொரு மண்டிலத்திற்கும் அஃது தற்கே உரித்தான தனித்தனிச் சிறப்புகள் உள்ளன.

அடிவளி மண்டிலம் [*TROPOSPHERE*]

இதுதான் காற்று மண்டிலத்தின் முதல் அடுக்கு ஆகும். இது நிலத்திலிருந்து ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் உயரம் வரை பரவியுள்ளது. இந்த அடுக்கினூடே நாம் உயரச் செல்லும் பொழுது இதன் வெப்பநிலை குறைந்து வருவதை உணர்வோம். 10 கி. மீ. உயரத்தில் இதன் வெப்பநிலை ஏறத்தாழ 60° நூற்றுப்பாகை வெப்பம்-(நூ.வெ.) [*Centigrade*] இருக்கும். முகிற்கூட்டங்கள் கவிந்துள்ள இந்த முதல் அடுக்குத்தான் 'வானிலையியல்' [*Meteorology*] துறைக்கு மிகவும் இன்றியமையாததாகும். வானிலையால் தோன்றி நாம் கண்டும் கேட்டும் பழகிய காட்சிகளும் ஒலிகளும் காற்றுக் கடலின் இந்தக் கீழ் அடுக்கில்தான் உள்ளன. நொடிக்கு நொடி மாறி மாறித் தோன்றும் முகில்களும், வீசும் காற்றுகளும், மழையும் மின்னலும், வெண்பனியும் காணப்படுவது இங்கேதான்.

முற்காலத்தில் 'அடிவளி மண்டில'த்திற்கு மேல் தொடர்ந்து செல்லும் பொழுது வளிமண்டில அடர்வும் வெப்பநிலையும் குறைந்துகொண்டே செல்லும் என நினைக்கப்பட்டது. மேலும், வளி மண்டிலம் ஏறத்தாழ 30 கி. மீ. உயரமே பரவியுள்ளது எனவும், முதல் அடுக்குக்கு அப்பால் உட்பகுதிகள் அறிவியல்துறை முதன்மை அற்றவை எனவும் கருதப்பட்டன. ஆனால், 1900 ஆண்டில் டி போர்ட் [*De Bort*] என்னும் அறிஞர் வளிமண்டிலம் கணக்கிலடங்கா உயரம் பரவியுள்ளது என்பதையும், 'அடிவளி மண்டில'த்தைக் கடந்து மேலே செல்லும்போது வெப்பநிலை குறைவதற்கு மாற்றாக உயர்கிறது என்பதையும் கண்டுபிடித்தார். பின்னர், ஆவிக்கூண்டுகளை [*Balloons*] விண்ணில் பறக்க விட்டு நடத்திய ஆய்வுகளின் மூலம் 'அடிவளி மண்டில'த்தின் உயரம் ஏறத்தாழ 27 கி. மீ. வரை பரவியுள்ளது என்பதும் கண்டறியப்பட்டது.

படுகைவளி மண்டிலம் [*STRATOSPHERE*]

நிலத்திலிருந்து 10 கி. மீ. உயரத்தைக் கடந்ததும் முகில்களற்ற நீல வானத்தைக் காண்கிறோம். இப்பகுதி 'படுகைவளி மண்டிலம்' எனப்படும். இது 10 கி. மீட்டரிலிருந்து ஏறத்தாழ 27 கி. மீ. உயரம் வரை பரவியுள்ளது. இங்குள்ள காற்று வறட்சியாகவும், மிகவும் எடை குறைவாகவும் காணப்படுகிறது. இதனூடே மேல்நோக்கிச் செல்லும்பொழுது வெப்பநிலை உயர்ந்து கொண்டே செல்கிறது. 'அடிவளி மண்டில'த்தையும் 'படுகைவளி மண்டில'த்தையும் பிரிக்கும் பகுதிக்கு 'அடிவளி மேல்விளிம்பு' [*Trapo Pause*] என்று பெயர்.

கமழிப் படலம் [*OZONE LAYER*]

நிலத்திலிருந்து 27 கி. மீ. உயரத்தை அடையும் பொழுது காற்று மண்டிலத்-

தின் அடுத்த அடுக்கு தொடர்கிறது. இதற்குக் 'கமழி அடுக்கு' [Ozon] என்று பெயர். இதனூடே மேல்நோக்கிச் செல்லும்போது படுகைவளி மண்டிலத்தைக் காட்டிலும் அதிக விரைவில் வெப்பநிலை உயர்கிறது. ஏறத்தாழ 55 கி. மீ. உயரத்தில் அதாவது 'கமழி அடுக்கு' முடியும் எல்லையில் வெப்பநிலை ஏறத்தாழ 30^0-நூ. வெ. ஆகிவிடுகிறது. இந்த வெப்பநிலை உயர்வுக்குக் காரணம் ஞாயிற்றிலிருந்து வரும் புறஊதாக் கதிர்களே [Ultra Violet Rays] ஆகும். இக்கதிர்கள் காற்றிலுள்ள உயிர்வளி [Oxygen] மூலக்கூறுகளைத் [Molecules] தாக்கி அவற்றை உயிரக அணுக்களாக [Atoms] மாற்றுகின்றன. இவ்வணுக்கள் மும்மூன்றாக இணைந்து கமழியாக மாறுகின்றன. இந்த வேதியியல் நிகழ்ச்சியின் காரணமாகவே இம்மண்டிலத்தின் வெப்பநிலை உயர்கிறது. இவ்வடுக்கில் கமழி உருப்பெறுவதாலேயே இதற்குக் 'கமழி அடுக்கு' என்று பெயர். புறஊதாக்கதிர்கள் இங்குத் தடுக்கப்படாமல் நிலத்தை அடையுமாயின் அதன் கொடும் விளைவுகளைத் தாங்கவொண்ணாது உயிரினங்கள் யாவும் மடிந்துபோக நேரிடும். அதேபோதில் உயிரினங்களின் வளமான வாழ்விற்குச் சிறிதளவு புறஊதாக் கதிர்களும் தேவையாகும். இக்கதிர்கள் சிறிதும் நிலத்தைச் சேரவில்லையாயின் குழந்தைக் கணை [Rickets] முதலிய நோய்களுக்கு ஆளாகி நாம் மடிய நேரிடும். காற்று மண்டிலத்தினூடே தப்பிவரும் சிறிதளவு புறஊதாக் கதிர்கள் இத்தகைய அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றுகின்றன.

இடைவளி மண்டிலம் [MESOSPHERE]

கமழி அடுக்கிற்கு மேல் ஏறத்தாழ 85 கி. மீ. உயரம் வரை பரவியுள்ள பகுதிக்கு 'இடைவளி மண்டிலம்' என்று பெயர். இம்மண்டிலத்தினூடே மேல்நோக்கிச் செல்லும்பொழுது வெப்பநிலை 70^0–நூ.வெ. ஆக உள்ளது. இங்கு வானம் ஒரே கருமையாகத் தோற்றமளிக்கிறது. காற்றின் அடர்வு மிகவும் குறைந்து காற்று மூலக்கூறுகள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆகையால், இப்பகுதியில் ஒலிச்செலுத்துகை [Sound Transmission] இயலாததாகிறது. நிலத்திலிருந்து மேல் நோக்கிச்செல்லும்பொழுது இங்குத்தான் அழகிய வளைவை [Curvature] முதன்முதலாகக் காண்கிறோம்.

மின்றுகள்வளி மண்டிலம் [IONOSPHERE]

இது 85 கி. மீட்டரிலிருந்து 400கி.மீ. உயரம் வரை பரவியுள்ளது. ஞாயிற்றிலிருந்து வரும் ஆற்றல்மிக்க புறஊதாக் கதிர்களால் இப்பகுதியிலுள்ள காற்று அணுக்கள் தாக்கப்பட்டு மின்செறிதுகள்களாக [IONS] மாற்றப்படுகின்றன. அதனால், (நேர், எதிர்) மின்னாற்றல்கள் அடங்கிய இப்பகுதி 'மின்றுகள்வளி மண்டிலம்' என அழைக்கப்படுகிறது. இம் மண்டிலம் வானொலிச் செய்திப் போக்குவரத்திற்கு மிகவும் இன்றியமையாதது. இது வானொலி அலைபரப்பு நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் வானொலி அலைகளைப் படியொலிப்படுத்தி நிலத்தின் பல பாகங்களுக்கும் அனுப்புகின்றது.

இம்மண்டிலம் டி, ஈ, எஃப் என மேலும் மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 85 கி.மீ. உயரத்தில் தொடங்கும் அடுக்கிலிருந்து ஆயிரக்கணக்கான மீட்டர் அலைநீளமுடைய நீள வானொலி அலைகள் [Long Radio Waves] படியொலிப்படுத்தப்படுகின்றன. ஏறத்தாழ 110 கி.மீ. உயரத்தில் தொடங்கும் அடுக்கிலிருந்து 300 முதல் 400 மீட்டர் வரை அலைநீளமுள்ள வானொலி அலைகள் படியொலிப்படுத்தப்படுகின்றன. அலைநீளம் குறைவாகவுள்ள இவ்வலைகளின் ஆற்றல் மிகுதியாக இருக்குமாதலால் தனி சேய்மைச் செய்திப் போக்குவரத்திற்கு இவை பயன்படுகின்றன. ஏறத்தாழ 230 கி. மீ. உயரத்திற்குமேல் தொடங்கும்

அடுக்கிலிருந்து இன்னும் குறைந்த அலை நீளமுள்ள வானொலி அலைகள் படியொலிப்படுத்தப்படுகின்றன.

இந்த 'மின்றுகள்வளி மண்டில'த்தின் ஏறத்தாழ 95 கி. மீ. உயரப் பகுதியில்தான் நாம் எரிமீன்களைக் காண்கிறோம். புறவெளியிலிருந்து வரும் விண்கற்கள் [*Meteorites*] இப்பகுதியினூடே செல்லும்பொழுது தீப்பற்றி எரிந்து அழிகின்றன. இவ்வாறு நாடோறும் நிலத்தை நோக்கிவரும் நூறுயிரக் கணக்கான விண்கற்களை வளிமண்டிலம் தடுத்து அழித்து நம்மையும் பிற உயிரினங்களையும் காப்பாற்றுகிறது.

மின்றுகள் மீவளி மண்டிலம் (*Exosphere*)

இது 400 கி. மீ. உயரத்திற்கு மேல் தொடங்குகிறது. இப்பகுதி, நிலத்திலிருந்து மிகத்தொலைவிலிருப்பதால் இங்குப் புவி ஈர்ப்பு விசை மிகவும் குறைவாக உள்ளது. இங்குத்தான் நாம் காணும் துருவ ஒளி [*Aurora*] நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. ஞாயிற்றிலிருந்து வரும் துகள் கதிர் வீச்சுகளே [*Solar Corpuscular Radiations*] இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாகும் எனக் கருதப்படுகிறது.

'வான்–ஆலன்' கதிர்வீச்சுக் கச்சைகள் (*'Van-Alen' Radiation Belts*)

மின்றுகள் மீவளி மண்டிலத்தை அடுத்து 'வான் ஆலன்' கதிர்வீச்சுக் கச்சைகள் நிலத்தைச் சூழ்ந்துள்ளன. அமெரிக்காவின் 'எக்சுபுளோரர்' விண்வெளிக் கலங்களும், சோவியத்தின் 'சுபுட்னிக்குகளும்' இவற்றை உறுதி செய்கின்றன. சிலர் இதை உட்கச்சை, வெளிக்கச்சை என இரண்டாகப் பிரித்தும் கூறுகின்றனர். உட்கச்சையில் நேர்மின்மங்களும் [*Protons*], வெளிக்கச்சையில் எதிர்மின்மங்களும் [*Electrons*] பெரும்பான்மையாக உள்ளன. இந்த மண்டிலம் பல ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் உயரம்வரை பரவியுள்ளது. இதை அடுத்து வளி மண்டிலத்தில் நாம் காண்பதென்ன? இதுபற்றித் தீர்க்கப்பட வேண்டிய புதிர்கள் எத்துணையோ உள்ளன. நாம் இன்னும் வளிமண்டிலத்தின் விளிம்பை அடையவில்லை. வளிமண்டிலத்தின் உயரம் என்னவெனில், நிலத்தின் வளி ஈர்ப்புமண்டிலம் எவ்வளவு உயரம்வரை பரவியுள்ளதோ அவ்வளவு உயரம் வளிமண்டிலம் பரவியுள்ளது என்றுதான் கூற வேண்டும்.

தொலைவிலுள்ள வான் உலகங்களுக்கும் இந்நிலவுலகத்திற்கும் இடையிலே நிறைந்து நின்று இவற்றையெல்லாம் இணைப்பதற்கு இடைவெளி ஒன்று இல்லாவிட்டால் அவ்வான் மண்டிலங்களில் உள்ள ஒளியானது இங்கே எவ்வாறு வரக்கூடும்? ஓசை நஞ்செவிக்கு எவ்வாறு எட்டும்? ஆகவே, ஒளியும் ஓசையும் உலவுதற்கு இடமாய் எங்கும் நிறைந்துள்ள வான்வெளி ஒன்றுண்டென்பது நன்கு பெறப்படும்.

மறைமலையடிகள்.
(தொலைவிலுணர்தல்—பக்கம்-7)

கோட்டப் பெருவழித்துறைப் பொறியியலர்
திரு. அ. அண்ணாமலை அவர்கள்
பி. ஈ. ஆனர்சு
எழுதிய

மனித வளர்ச்சியில் பொறியியல்

பொறியியலுக்கும் மனிதனுக்கும் ஒருமித்து இணைந்த வளர்ச்சி உண்டென்ற கருத்து உலகில் நிலவி வருகிறது. வரலாற்றுக் காலத்திற்கு முன்பு, மலைக்குகையில் வாழ்ந்த மனிதர்களும், அவர்கட்குப் பின்னர் வாழ்ந்த கற்கால மனிதர்களும் கற்களைத் தேய்த்துத் தீயை உண்டாக்கியும், தமது தேவைகளுக்கும் பாதுகாப்பிற்கும் கல்லாலான பொருட்களை அமைத்தும் பயன்கொண்டனர். அந்தக் காலத்திலேயே பொறியியலும் பிறந்துவிட்டதென்னலாம்.

தமிழர்களின் வரலாற்றைப் புரட்டினால் பேரரசர்கள் ஆறுகளைத் தேக்கி அணைகள் அமைத்த செய்தியை அறியலாம்.

> "நிலன் நெளி மருங்கின் நீர்நிலை பெருக
> தட்டோர் அம்ம இவண்தட் டோரே;
> தள்ளா தோரிவண் தள்ளா தோரே".
>
> —புறநானூறு - 18

'நீர் தேங்க நிலம் குழிகொள்ளும் இடத்தே நீர்நிலை பெருக நீரைத் தேக்கித் தடுத்தோர் இவ்வுலகில் செல்வங்களைத் தேக்கியவர் ஆவார்; நீரைத்தடுத்துத் தேக்காதவர் தம் புகழையும் தேக்காதவர்' என்று குடபுலவியனார் எனும் பண்டைக்காலப் புலவர் பாடியது இங்கு நோக்கத்தக்கது. கரிகாற் பெருவளத்தான் காவிரியின் குறுக்கே கட்டிய கல்லணை இன்றும் அவன் பெருமையை எடுத்துக்காட்டி நிற்கிறது. இதன் மூலம் பழந்தமிழ் மக்கள் பொறியியல் நுணுக்கங்களை எந்த அளவுக்கு அறிந்திருந்தனர் என்பதைத் தெளிவாக உணரலாம்.

நமது நாட்டு மதுரைக் கயற்கணியம்மை கோயிலும், நெஞ்சையள்ளும் அழகமைந்த தாசுமால் கட்டிடமும் பொறியியல் வளர்ச்சியைப் புலப்படுத்தி நிற்கின்றன.

உருளையின் உதவியால் கிணற்று நீரை மேலே கொண்டுவரும் போதும் பொறியியல், மக்கள் வாழ்வோடு தழுவியதென்று உணரமுடிகின்றது. ஆகவே,

மனிதன் தன் நிலையில் மேம்பட மேம்படப் பொறியியல் அறிவை மிகுதியாகப் பெறுகிறன். இவ்வாறு பொறியியல் மேன்மேலும் வளர்ச்சியுற்று வருகிறது.

காலப்போக்கில் மனிதன் தனக்கு வேண்டிய உணவு, உறைவிடம் காப்பு ஆகியவற்றை மிகுந்த அளவில் பெற முயன்றுன். இம்மூன்றுமே மனிதனைப் பொறியியல் பற்றிய மிகுந்த அறிவைப் பெறத் தூண்டின.

கரம்பை நிலத்தைப் பாங்கான விளை நிலமாக்குவதும், கண்ணைக் கவரும் கவின் மிகு வளமனைகளைக் கட்டுவதும் சீரான பொறியியல் முன்னேற்றங்களேயாகும்.

கடுமையான ஞாயிற்றின் வெப்பத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள முற்காலத்தில் மண் சுவர்களை அமைத்து மக்கள் வீடு கட்டிக்கொண்டார்கள். பின்னர் மனிதன் தன் ஆராய்ச்சியால் செங்கற்களைக் கொண்டு வீடுகட்டத் தொடங்கினுன். இதனுல் அவன் பொருட்களின் வலிமையைக் கணித்திட அறிந்து கொண்டான். இருளைக் கண்டு அவனுக்கு ஏற்பட்ட இயற்கையான அச்சத்தால் வீடுகளில் பொருத்தமான இடங்களில் பலகணிகளை அமைத்தான். மனிதனது நலத்துறை வழிகள் நாடோறும் பெருகவே, தான் வாழுமிடத்தை அதற்கேற்றபடி திட்டமிட்டு அமைக்கத் தொடங்கினுன். இவ்வாறு, மண்ணியலும், நலத்துறைப் பொறியியலும், அதைத் தொடர்ந்து நகர அமைப்பின் சீரான வளர்ச்சியும் முன்னேறியிருப்பதை நாம் காண முடிகிறது. மொகஞ்சதாரோ, ஆரப்பா ஆகிய இடங்களில் காணப்படும் கட்டிடங்களின் சிறப்பும், சந்திகாரிலுள்ள புதுமையான கட்டிடங்களும் மனிதன் தனது வாழ்நாளில் எவ்வாறு வளத்தோடு வாழ்ந்துள்ளான் என்பதையும், நிலவியல்பற்றி அவனுக்கு ஏற்பட்டிருந்த அறிவு வளர்ச்சியையும் நமக்குக் காட்டுகின்றன.

பிற்காலத்தில் புதுப் புது வழிகளில் செட்டாகவும், நெடுநாள் நிற்கும் வகையிலும் அரைக்கப்பட்ட களிமண், சுண்ணும்புச் சாந்து, அவற்றுல் அமைக்கப்பட்ட கலவைகள் ஆகியவற்றைப் பயன் படுத்தி வீடுகள் கட்டத் துவங்கினர். இது, மனிதன் தனது விருப்பங்களை எப்படிப் பக்குவமான முறையில் ஈடுசெய்துகொண்டான் என்பதைக் காட்டுகிறது. பழங்காலத்தில் காடுகள் பெருகியிருந்தன. மக்கள் தொகை பெருகப் பெருக அவை அருகத் தொடங்கின. ஆகவே, மரங்களைப் பயன்படுத்திய இடங்களில் அதே அளவு திறன்கொண்ட வேறென்றை நாடினுர்கள். அதன் பயனுகக் கம்பிகள் அமைந்த கலவைப் பரற்றூண்கள் உருவாக்கப்பட்டன.

குறைந்த செலவில், குறைந்த திறனில் அமையக்கூடிய விசைகள், மனிதனுக்கு வேண்டியனவாயின. அதனுல், உருளைக் கப்பி, வண்டி ஆகியவற்றைக் கண்டான். அதன் பின்னர், நீராவிப் பொறியை அமைத்தான். வில், அம்பு, வேல், வாள் ஆகிய படைக்கலங்களுக்கு மாற்றுகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய போர்க் கருவிகளும் பொறியியல்துறையின் மற்ருெரு பிரிவே.

வெடிமருந்தைக் கண்டுபிடித்த பொறியியலரே பிற்காலத்தில் விரைந்தோடும் ஊர்திகளை உருவாக்கினர். நீராவிப் பொறி பேருந்துப் பொறியைக் காண உதவியது. நீரும் நிலக்கரியும் ஒருங்கே கிட்டாத நேரத்தில்தான் எண்ணெய் பற்றிய ஆய்வு எழுந்தது. அதன் பயனுகவே பொறிகளை இயக்கும் எண்ணெய்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன.

எண்ணெய், அதன் கூட்டுப் பொருள்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே மாபெரும் தொழிற் புரட்சி தோன்றியது. எண்ணெயின் கூட்டுப்பொருளைக் காணவும் அவைகளின் பல திறப்பட்ட பயனை அறிய

வும் பொறியியலர் முயன்றனர். இப்படியாக எண்ணெயால் இயங்கும் பல பொறிகளும் உருளைகளும், மின் விளக்கும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டதை நாம் காண்கிறோம். மனிதன் தொடக்கத்தில் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒளியையும், அச்சமூட்டும் இடி ஒலியையும் மட்டுமே அறிந்திருந்தான். பின்னர் அவற்றைப் பற்றி ஆராயத் தொடங்கினான். அவ் வாராய்ச்சியால் மின்னாற்றலையும் அதன் பயன்களையும் செவ்வையாக அறிந்தான்.

ஆய்வினால் நீரின் ஆற்றலை மின்னாற்றலாக மாற்றி மின்பிழிவைக் கண்டனர். நீரில்லாத இடங்களில் அனல் மின் முறையை அமைத்தனர். மின் பொறியியல் எங்கும் பரவிற்று. அண்மைக் காலத்தில் அணு பிரிக்கப்பட்டு அதன் ஆற்றல் உலகுக்கு உணர்த்தப்பட்டது. பொறியியலர் அணுவின் ஆற்றலை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்த முனைந்தனர். அதன் பயனாக அணுமின் னாற்றல் நிலையங்கள் பல அமைக்கப் பட்டன.

மேலும், பொறியியலர் விரைவான செய்திப் போக்குவரத்துபற்றிப் பல ஆராய்ச்சிகள் நடத்தினர். அதனால், தொலைபேசி, கம்பியில்லாத் தொலைவரி முதலியவை தோன்றிப் பயன் நகில் வருகின்றன.

வானொலி, மின்மத்திறனி [*Transistor*] வானொலிப் பெட்டி, தொலைபேசி முதலியவை வீட்டுப் பொருள்களாகிவிட்டன. இவற்றால் நாடு முன்னேற்றமடைந்தது. மனிதன் இப்போது வான வெளியில் புகத் தொடங்கியுள்ளான். அவன் வானவெளிப் பயண நுணுக்கங்களை அறிந்து அதில் வல்லுநனாக முயன்று கொண்டிருக்கிறான். எதிர்காலத்தில் மனிதன் பொறியியலின் துணையால் பிற கோள்களைக் கைப்பற்றும் நிலைக்கு முன்னேறிவிடுவான் என்பதில் ஐயமில்லை.

வீட்டில் பெண்டிரால் சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் புதிய பொறிகளும், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களால் பயன்படுத்தப்படும் பல்வகையான மின்னாற்றல் பொறிகளும் வயல்களில் பயன்படுத்தப்படும் புதிய உழவுக் கருவிகளும் மனித வளர்ச்சியும் பொறியியலும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன. இவற்றால், வளர்ந்துவரும் பொறியியல் துறைக்கும் மனித நாகரிகத்திற்கும் ஒருமித்து இணைந்த வளர்ச்சி உண்டென்ற கருத்து உண்மையேயாகும்.

இவ்வுலகியற் பொருள்களைப் பகுத்தாராய்ந்து உணர்தலால் நமக்கு எவ்வளவு அறிவு வளர்கின்றது! நமதறிவு வளர வளர, அதனைப் பல துறைகளிற் புகுத்திப் பயன்படுத்த, அவற்றைப் பயன்படுத்தத் தெரியாத காலங்களிற் பட்ட சொலற்கருந் துன்பங்களெல்லாம் நீங்கி இப்போது நாம் எவ்வளவு நலன்களைப் பெற்று இன்புற்று வருகின்றோம்.

— மறைமலையடிகள்.

(தமிழர் மதம்—பக்கம் 31.)

வலிவலம் தேசிகர் பலமுனைத் தொழிற்கல்லூரி முதல்வர்
திரு. ச. பு. பாலசகந்நாதன் அவர்கள்
பி. ஈ., ஏ. எம். ஐ. ஈ., ஏ. எம். ஐ. சி. ஈ.
எழுதிய

மின்மத்திறனி—டிரான்சிஸ்டர்

விரைந்து முன்னேறி வரும் இன்றைய அறிவியல் துறையில் நாடோறும் அறிவியல் வல்லுநர்கள் புதிய பல அரும் பெரும் படைப்புக்களை மனித இனத்திற்கு வற்ருது வழங்கிக்கொண்டே இருக்கின்றனர். கட்டை வண்டியில் ஏறிச் சென்ற காலம் மறைந்து, மனிதன் வெண்ணிலவுக்குச் செல்ல விரைந்துகொண்டிருக்கின்ருன். நாள் முழுதும் கணக்குக் கூட்டலிலும் கழித்தலிலும் காலத்தைச் செலவிட்ட நாள்கள் சென்று நொடிப் பொழுதில் நேரான விடை நல்கும் கணக்குப் பொறிகள் [*Computers*] வந்துள்ளன. இவற்றையெல்லாம் செயலாக்கப் பல ஏதுக்கள் இருப்பினும் அவற்றுள் மின்னியலிலும், மின் அணுவியலிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களே இன்றியமையாதனவாகும்.

எந்த ஒரு மின்னணுக் கருவியிலும் மின்னணு ஒருவழிக் குழல்கள் [*Electron tubes*] மிகுதியான அளவில் இடம் பெற்றுள்ளன. இந்தக் குழல்கள் தம் மிடமுள்ள மின்னணுக்களை வெளித் தள்ள *3000°* '*F*' (வெப்பாற்றல்) அதிக வெப்பம் வேண்டும். இவ்வெப்பம் குழல்களில் உள்ள கம்பிச் சுருள்களின் வழியாக மின்னேட்டம் பாய்வதால்

பெறப்படுகிறது. பல குழல்கள் கொண்ட கருவியில் இவ்வெப்பத்தால் ஏற்படும் மின்னாற்றல் இழப்பு மிக அதிகம். மேலும், இக்குழல்கள் செயலாற்ற அதிக அளவுள்ள மின்னழுத்தம் வேண்டப்படும். எனவே, இக்கருவிகள் அதிக அழுத்த மின்னாற்றல் கிடைக்கும் இடங்களில் மட்டுமே செயற்படக்கூடும்.

இக்குறைகளை நீக்கும் ஓர் அரிய பொருளாக அறிவியல் வல்லுநரால் அளிக்கப்பட்டதே மின்மத்திறனி [*Transistor*] எனப்படும்.

> "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்"

– எனும் பெருமை நந்தமிழ்க் குறளுக்குண்டு. 'கடலையொத்த ஆழமும், பொருட்செறிவுங் கொண்ட அரிய பல கருத்துக்களைக் கொண்டதாய்க் குறைந்த சொற்களால் அமையப்பெற்ற குறள்' என்பது அதன் பொருளாகும். ஏழ் கடலைக் கடுகில் புகுத்தல் என்பது உயர்வு நவிற்சி. ஆயின், கடுகு அளவேயுள்ள மின்மத்திறனிகள்தாம் ஏழ் கடலையும் தாண்டிச் செய்திகளையும் படங்களையும் ஏற்கவைக்கின்றன என்றால் அது உயர்வு நவிற்சி அன்று; முழு உண்மை.

''கடுகு சிறுத்தாலும் காரம் போகாது'' என்பதுபோல் இத்தகைய சிறிய உருக்கொண்ட மின்மத்திறனி செய்யும் வேலை பெரும் வியப்பிற்குரியது.

மின்மத்திறனி இயங்க அதிகமின்னழுத்தம் வேண்டியதில்லை. மின் கலங்களிலிருந்து கிடைக்கும் 6 அல்லது 9 மின்னலகுக்கூறு [*Volt*] அளவுள்ள மிகக் குறைந்த மின்னழுத்தமே போதுமானது. இவை செயற்பட வெப்பம் வேண்டியதில்லை. இவ்வேதுக்களால் மின்மத்திறனிகளால் அமைக்கப்பட்ட கருவிகளை எங்கும் எளிதில் எடுத்துச் செல்ல முடிகிறது. மிகச் சிறிய உருக்கொண்டிருப்பதால் கருவிகள் யாவும் சிறியனவாகவே அமைக்கப்படல் கூடும். போர்க்களத்தில் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளவும், ஆணைகளைப் பிறப்பிக்கவும், பகைவர் களது இலக்குக்களின் தொலைவுகளை அறியவும் மின்மத்திறனிக் கருவிகள் மிகப் பயன்படுகின்றன. செவியுணர்வு குறைந்தவர்கள் வாழ்க்கையில் சலிப்புறுமல் செவிகள் செவ்வனே எவற்றையும் கேட்டு இன்புற மின்மத்திறனிச் செவிக் கருவிகள் பெரிதும் உதவுகின்றன. 6 முதல் 8 மின்மத்திறனிகள் வரை அமைந்த வானெலிப் பெட்டிகள் உலகில் பல பிரிவுகளிலிருந்தும் செய்திகளையும் இன்னிசையினையும் ஏற்றளித்து மக்களுக்கு மகிழ்வூட்டுகின்றன.

இம் மேன்மைகள் கொண்ட மின்மத்திறனியின் உள்ளமைப்பையும் செய்முறையையும் செயல் முறையையும் சுருக்கமாக ஆராய்வோம். ஒரு கம்பி வழியே மின்னாற்றல் அதிகத் தடையில்லாமல் தாராளமாகச் செல்லக்கூடுமானால் அக்கம்பி மின் கடத்தி [*Conductor*] எனப்படும். ஒரு பீங்கான் தண்டு வழியாக மின்னாற்றல் செல்ல இயலாது. பீங்கானை ஒரு மின்கடத்தாப் பொருள் [*Insulator*] எனக்கூறுவோம். இரண்டிற்கும் இடையில் ஒரு பொருள் (நடு நிலையில்) இருக்குமானால் அதனைப் பகுதிக் கடத்தி [*Semi-conductor*] எனக் கூறுவர். 'செர்மானியம்' [*Germanium*] எனப்படும் 'முறிவுறு வெள்ளுலோகத் தனிமம்' (இதனை இனி 'முறிவெள் தனிமம்' என்று வழங்கலாம்), சிலிகான், [*Silicon*] எனப்படும் 'கன்மத் தனிமம்' எனும் பொருட்கள் இவ்வகைப்படும். ஒரு மின்மத்திறனியின் கரு 'முறிவெள் தனிமம்' அல்லது 'கன்மத்தனிமம்' எனும் பகுதிக் கடத்தியால் ஆனது. 'முறிவெள்தனிமம்' அல்லது 'கன்மத் தனிமம்' எனும் பொருட்கள் மிகத் தூய்மை

யாய் இருக்கும் நிலையில் மின்மத்திறனிகளை அமைக்க அவை பயன்படா. இவற்றுடன் இந்தியம் [*Indium*], அரிதார நஞ்சு [*Arsenic*], அஞ்சனக்கல் [*Antimony*] எனும் பிற பொருட்களை மிகச் சிறிய அளவில் — பல கோடிகளுக்கு ஒன்று என்ற அளவில் — சேர்த்ததும் இவை செயலாற்றும் திறனைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக 'முறிவெள் தனிம'த்துடன் மிகச்சிறிய அளவு 'இந்திய'த்தைச் சேர்த்தவுடன் இப் புதிய பொருளில் 'புழை' [*Hole*] எனப் படும் 'நேர்மின் வாய்த்துகள்கள்' [*Positive charges*] அதிகரிக்கின்றன. ஆகவே, இப்பொருள் நேர்மின் [*Positive*] தன்மையைப் பெறுகின்றது. 'இந்திய'த்திற்கு மாற்றாக 'அரிதார நஞ்சு' சேர்க்கப்பட்டால் புதிய கலவையில் எதிர்மின் தன்மைபெற்ற மின்னணுக்கள் மிகுந்திருக்கும். எனவே, இப்பொருள் எதிர்மின் [*Negative*] தன்மையைப் பெறுகிறது.

மேற்குறிக்கப்பட்ட நேர்மின் தன்மைபெற்ற ஒரு 'முறிவெள்தனிம'த் (*Positive Germanium*) துண்டையும், எதிர்மின் தன்மைபெற்ற ஒரு முறிவெள் தனிமத் (*Negative Germanium*) துண்டையும் ஒன்று சேர்த்து வைத்தால் இக்கூட்டுச் சேர்க்கை, 'இணைப்பொருதிசை மின்கடத்தி' (*Junction Diode*) எனப்படும்.



படம் 1.

முன்னுள்ள படத்தில் ஒரு 'நேர்மின் முறிவெள்தனிம'மும் ஓர் 'எதிர்மின் முறிவெள் தனிம'மும் காட்டப்பட்டிருக்கின்றன. புழைகளும் மின்னணுக்களும் முறையே + குறியாலும், — குறியாலும் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த 'ஒருதிசை மின்கடத்தி'யின் [*Diode*] இரு முனைகளோடு ஒரு மின் கலத்தின் இரு முனைகளையும் சேர்த்து அமைத்தால் மின்கலத்தின் நேர்மின் வாய், எதிர்மின்வாய்த் தன்மையைப் பொறுத்து மின்னோட்டம் அமைகிறது. எடுத்துக்காட்டாகப் படத்தில் காட்டிய படி 'நேர்மின் முறிவெள்தனிமம்' மின் கலத்தின் நேர்மின்வாய் இணைப்புக்கும், 'எதிர்மின் முறிவெள்தனிமம்' எதிர் மின்வாய் இணைப்புக்கும் கொடுக்கப் பட்டால் புழைகளும் மின்னணுக்களும் எதிர் எதிராகத் தாராளமாகச் சென்று மின்னோட்டம் மிகையான அளவில் இருக்கும்படியாக அமைகின்றது. மின் கலத்தின் முனைகளைத் திருப்பி அமைத்தால் புழைகளும், மின்னணுக்களும் வெளிப்புறமாக ஒதுக்கப்பட்டு மின்னோட்டம் தடைப்படுகிறது. இந்தத் தன்மை, மின்னணுக்கருவிகளில் மாறுமின்னோட்டத்தை [*A. C.*] நேர்மின்னோட்டமாக்கும் [*D. C*] திருத்து கருவி [*Rectifier*] என்ற துணைக்கருவியிலும், வானொலி அலைகளின் நேர்மின் அல்லது எதிர்மின் அலைகளை மட்டும் பிரிக்கும் 'உணர் கருவி'களிலும் [*Detector*] பயன்படுகிறது.

இனி, மின்மத்திறனியின் செயல் முறையைப் பார்ப்போம். ஒரு மின்மத் திறனி செய்ய இரண்டு 'நேர்மின் முறி வெள்தனிம'மும், ஓர் 'எதிர்மின் முறி வெள்தனிம'மும் வேண்டும். அல்லது இரண்டு 'எதிர்மின் முறிவெள்தனிம'மும், ஒரு 'நேர்மின் முறிவெள்தனிம'மும் வேண்டும். இவற்றை ஒன்றுடன் ஒன்று சேர்த்து முதற் படத்தில் காட்டியபடி

அமைத்தால் இந்த அமைப்பு 'இணைப்பு மின்மத்திறனி' [*Junction Transistor*] எனப்படும்.



படம் 2.

மின்மத்திறனியின் மூன்று பாகங்களுக்கும் [படம் 2] 'வெ' என்ற வெளிப்படுத்தி [*Emitter*], 'அ' என்ற 'அடிவாரம்' [*Base*] 'தி' என்ற 'திரட்டி' [*Collector*] ஆகிய இணைப்புக்கால்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இணைப்புக் கால்களுடன் இரண்டு மின்கலங்களைத் தக்க முறையில் இணைத்தால் மின்மத்திறனி செயல்பட முனைகின்றது.



படம் 3.

படம் மூன்றில் 'வெளிப்படுத்தி'க்கும் 'அடிவார'த்துக்கும் ஒரு மின்கலமும், 'அடிவார'த்துக்கும் 'வெளிபடுத்'திக்கும் ஒரு மின்கலமுமாக இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மின்கலத்தின் நேர்மின் முனைக்கும், 'அடிவார' மின்கலத்தின் எதிர்மின் முனைக்குமாக 'வெளிப்படுத்தி' [*Emitter*] இணைக்கப்பட்டவுடன், 'வெளிப்படுத்தி' 'அடிவாரம்' மூலம் ஒரு மிலி. அலகு மின்னோட்டம் [*Ampere*] செல்வதாகக்கொள்வோம். அடுத்துத் 'திரட்டிமின்கலம்' 'அடிவார'த்தையும், 'திரட்டி'யையும் இணைத்த உடனே 'வெளிப்படுத்தி'ப் பகுதியிலிருந்து 'அடிவார'த்துக்குச் சென்று கொண்டிருந்த புழைகளில் பெருவாரியானவை மிகவும் குறுகிய பாகமான 'எதிர்மின் முறிவெள்தனிம'த்தைக் கடந்து 'திரட்டி' மூலமாகத் 'திரட்டி மின்கல'த்தை அடைய, 'திரட்டி'யில் ஏறத்தாழ 0·98 மிலி. அலகு மின்னோட்டம் பாய்வதாகக் கொள்வோம். ஆக, இப்போது 'அடிவார'த்தில் 1·0—0·98=0·02 மிலி. அலகு மின்னோட்டம் பாய்கிறது. 'திரட்டி' மின்னோட்டத்திற்கும், 'அடிவார' மின்னோட்டத்திற்கும் உள்ள பங்களவு $\frac{0·98}{0·02} = 49$. இதைத்தான் 'மின்னோட்டப் பெருக்கம்' [*Current Amplification*] எனக் கூறுகிறோம். இந்த அடிப்படைக் கோட்பாடே மின்மத்திறனி, மின்னணுக்கருவிகளில் பெருக்கம் [*Amplification*], அதிர்வு [*Oscillation*] எனும் செயல்களைச் செய்ய உதவுகின்றது.

செயற்கரிய செயல்களைப் புரியவல்ல மின்மத்திறனி எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை எளிய முறையில் பார்ப்போம். எடுத்துக்காட்டாக 0·1 மிலி மீட்டர் பக்கமும், 0·02 மிலி மீட்டர் தடிப்புங் கொண்ட ஓர் எதிர்மின் (தன்மை பெற்ற) 'முறிவெள்தனிம'த் தகட்டின் இருபுறமும், 'இந்தியம்' போன்ற நேர்மின் தன்மை கொடுக்கக்கூடிய பொருள்களைக் கலாய் செய்வது போன்று அமைத்து, படம் நான்கில் காட்டியபடி மூன்று இணைப்புக் கால்களைக் கொடுத்துக் காற்றும் ஈரமும் புகா வண்ணம் சிறு தகரக் குடுவைகளில் அடைத்து மின்மத்திறனிகள் செய்யப்படுகின்றன.

எதிர் மின் முறிவெள் தனிமம்



படம் 4.

கணக்குப்பொறி, [*Computer*], தொலைக்காட்சிக் கருவி [*Television*] முதலியவற்றில் பல நூற்றுக்கணக்கான மின்மத்திறனிகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். வெற்றிட வெங்குழல் [*Valve*] களைவிட மின்மத்திறனிகள் எவ்வளவோ சிறியனவாக இருந்தாலும், இக்கருவிகள் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லத்தக்க வகையில் மேலும் சிறிய அளவில் செய்யமுடியும். அண்மையில் 30 முதல் 40 மின்மத்திறனிகள், அவற்றுடன் கூடிய தடைகள் [*Resistors*], மின்தேக்கிகள் [*Condensers*] ஆகிய யாவும் ஒரு மின்மத்திறனி அளவிற்குச் சிறியதாக்கும் நுண்மின் சுற்றுகள் [*Integrated Circuit*] முறைகளை அயல் நாட்டினர் அமைத்திருக்கின்றனர். இதன் ஏதுவாக மின்னணுக் கருவிகளை மிகச் சிறிய அளவில் செய்ய முடிகின்றது. சில திங்கள்களுக்கு முன்னர் சப்பான் நாடு ஓர் அங்குலச் செவ்வகத் திரை மட்டுமே கொண்ட - எளிதில் எங்கும் எடுத்துச் செல்லக் கூடிய தொலைக்காட்சிக் கருவிகளைத் தோற்றுவிக்கத் தொடங்கியிருக்கின்றது.

சுருங்கக் கூறின், மின்மத்திறனி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் விண்வெளி ஆராய்ச்சியிலும், செய்திப் போக்குவரத்திலும், தனி மனிதன் வாழ்க்கையிலும் சிறந்த பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எங்கெங்கு அசைவு காணப்படுகின்றதோ அங்கங்கெல்லாம் அவ்வசைவினைத் தோற்றுவிக்கும் மின்னின் இயக்கமும் உண்டென்று துணிந்து கொள்க! மின்னின் இயக்கம் முனைந்து நடவாத இடங்களில் எவ்வகையான அசைவும் காணப்படுவதில்லை.

—மறைமலையடிகள்.

(மக்கள் நூறுண்டு உயிர் வாழ்க்கை—பக்கம் 122)

கரந்தைப் புலவர் கல்லூரி விரிவுரையாளர்
புலவர் சி. கோவிந்தராசனுர்
எழுதிய

புதைபொருட் புதுமைகள்

காப்பியம் கண்ட கண்ணகியின் படிமம்

தமிழக மக்கள் போற்றிப் பாராட்டிச் சிலையெடுத்து வணங்கிய கற்புடைத் தெய்வமாம் கண்ணகியின் வாழ்வியலைக் கணிக்க வரலாற்றுச் சான்றுகள் உண்டா? சிலப்பதிகாரமெனும் செந்தமிழ்க் காப்பியம் ஒருபுறம் நிற்பினும் பழம் பொருட் சின்னங்களும் கல்வெட்டுகளுமே சான்றுகளாக அமையும். சிலப்பதிகாரத்தில் ஆசிரியர் குறிக்கும் கண்ணகி நிலவிய இடங்களையும் சூழல்களையும் பழம் பொருள் கல்வெட்டு நோக்கத்தோடு ஆராய்ச்சி செய்யலானேன்.

முதற்கண் ஆராய்ச்சிக்கு இலக்கானது கண்ணகியும் கோவலனும் வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினம். பட்டினமொன்று இருந்து அழிந்திருப்பதற்குப் புதைபொருள்களாகக் கடலிலும் தரையிலும் சான்றுகள் பல கிடைத்திருக்கின்றன. அவற்றைக்கொண்டு கண்ணகியின் வரலாற்றினைக் காண்பதற்குரிய சான்றுகளொன்றும் இல்லை. அடுத்து, கண்ணகியும் கோவலனும் ஓரிரவு தங்கிய உறையூரும் மறைந்தொழிந்தது. கண்ணகி மன்னனிடம் வழக்குரைத்துத் தமிழுலகிற்கு அறிமுகமான மதுரைமாநகர் முற்றிலும் மாற்றமடைந்து நிற்கின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் கால் நடையாகவே யான் தொடர்ந்து ஆராய்ச்சி செய்துவந்ததில் மதுரை நகரின் வடபுறத்தில் கண்ணகிக்கு அமைக்கப்பட்டிருக்கும் பழமையான சிலையொன்றினை மட்டும் காணமுடிந்தது.

மேல், கணவனை இழந்த கண்ணகி, வையை யாற்றின் ஒரு கரையினைப் பற்றிச் சென்ற வழியே நடக்கலானேன். வையையின் தொடக்கம் இன்றுள்ள கம்பம் பள்ளத்தாக்கின் தென்கோடி

யாகும். இவ்வியற்கைச் சூழலை நில நூலாசிரியர்கள் 'மழைநாடு' என்பர். மதுரை மாவட்டத்தின் மேற்கு எல்லையாக உயர்ந்து நிற்கும் மலைத்தொடர்களும், படர்ந்து செறிந்த காடுகளோடு கூடிய பள்ளத்தாக்குகளுமாக மக்கட் புழக்கமின்றிக் கிடக்கும் இப்பகுதியை ஆராய்ச்சி செய்யலானேன்.

மதுரையிலிருந்து வையையின் தென்கரையினைப் பற்றிச் செல்லுவோமாயின் சிலப்பதிகாரம் குறிப்பிடும் நெடுவேள் குன்றமே எதிர் இலக்காக வேண்டுமென்பது என் குறிக்கோள். முயற்சி வீணாகவில்லை. நெடுவேள்குன்றம், சுருளி மலை வேலவன் இருப்பிடமாகும். அம்மலையின் தென்பகுதியாம் மேற்குத் தொடர்ச்சி மலை வானளாவி உயர்ந்தோங்கிச் செங்குத்தாக நிற்கும் செங்கோடுகள் பலவற்றோடு அமைந்ததாகும். அப்பகுதியில் காட்டியானை நிரைகள் நிலைத்து வாழ்கின்றன. ஒரு காலத்தில் அவ்வடிவாரச் சூழலில் ஊர் ஒன்றிருந்து அழிந்திருப்பதைப் பழம்பொருள் தடயங்களால் அறிய முடிந்தது. மேலும் ஆராய்ச்சி செய்யும்போது, சகாத்தம்—1561இல் தோன்றிய தமிழ்க் கல்வெட்டு ஒன்று கிடைத்தது. அதில் பாண்டிய மன்னன் குலசேகரப் பெருமாள் மங்கலதேவியம்மன் கோயிலுக்கு நிலக்கொடை ஆற்றியிருந்த செய்தி புலனாயிற்று.

'மங்கலதேவிக் கோயில்' எங்குளது என்று ஆராய்ச்சி செய்யலானேன். மூன்றுண்டுகள் அளவில் அப்பகுதி முழுவதையும் தொடர்ந்து துருவி ஆராய்ந்தேன். வேட்டைக்காரர் ஒருவரின் உதவியால் நில மட்டத்திற்குமேல் 8200 அடி உயர்ந்துள்ளதும், சேர நாட்டெல்லைக்கு உட்பட்டதுமாகிய மேற்கு மலைத்தொடரிலுள்ள மலைமுகடு ஒன்றின் மேல் தளத்தில் அமைந்த 'வேங்கைக்கானல்' என்னும் காட்டுச் சூழலிடையே 'கற்படை அறைக'ளாக அமைந்த மங்கலதேவிக் கோட்டம் இருப்பதை அறிந்தேன்.

அந்நாள் தி. ஆ. 1994-கார்த்திகை முதல் (17—11—1963) நாளாகும். மலை மீதிருக்கும் கோட்டத்தினைக் காணத் தொடங்கினேன். யானைகள் எப்பொழுதும் நிலவும் காடுகள்; புலி, கரடிகளின் புழக்கம் மிகுதியாக உண்டு. கண்ணகிக்கு வரலாறு காண வேண்டுமே! துணிந்து 'நெடுவேள் குன்றத்தில் அடி வைத்து ஏறி'னேன். பாதை இல்லை. செங்குத்தான மலை முகடுகள்; பற்றுக்கோடில்லாத பாறைப் பகுதிகள்; மூன்று கல் அளவிற்கு மேற்பட்ட தொலைவு. எல்லாம் கடந்து கோட்டத்தினை அடைந்தேன். அங்குக் காட்டியானைகளாலும் காலத்தாலும் சிதைந்து கிடக்கும் கற்படை அறைகளாக அமைந்த கோட்டத்தின் சூழலைக் கண்டேன். பால் பெற வகுக்கப்பட்டிருந்த அக்கோட்டத்தின் தலைமையான இடமொன்றில் இடிபாடுகளுடன் புதரடைந்து இருந்த மிகப்பழைய அறை இருந்தது. அறையினை ஆராய்ந்தேன். மேலிடப்பட்ட பாறைகள் சரிந்து கற்குவியலாக நிற்க, இடையே சிதைந்து கிடந்த சிலை யொன்றினைக் கண்டேன். அச்சிலையினைப் புகைப்படமாக்கி மகிழ்ந்தேன். வரலாறு இதுவரையில் காணாத கண்ணகித் தெய்வத்தின் காட்சியைக் காண்க!

சுருக்கமாகக் கூறுமிடத்து, சேரன் செங்குட்டுவன் இமயக்கல்லில் அமைத்து நாட்டிய கண்ணகியின் சிலை இதுதான். கோட்டத்திலிருந்த பழைய வட்டெழுத்துக் கல்வெட்டு, பாண்டிய மன்னர்களின் தமிழ்க் கல்வெட்டுகள் ஆகிய சான்று களைக்கொண்டும், சிலப்பதிகார ஆசிரியர் கண்ணகி சென்றடைந்த இடத்தினை விளக்கும் சூழல் அமைப்புக்களைக் கொண்டும், சிலை அமைக்கப்பட்டிருக்கும் பளிங்கு போன்ற கல்லினைக்கொண்டும் இதுதான் கண்ணகிக் கோட்டம் என நிறுவ முடிந்தது. கண்ணகிப் படிமம் அமைந்த மங்கல தேவிக் கோட்டம் தமிழ் மக்கட்குரிய காட்சிக்கோட்ட மாகத் திகழ வேண்டும்.

பழமையான முதுமக்கள் தாழி

தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகளாக அமைந்த சின்னங்களுள் முதுமக்கள் தாழிகளும் ஒன்றாகும். இது வரையில் தமிழகத்தில் பல இடங்களில் பலவகையான தாழிகள் கிடைத்திருக்கின்றன. யான் கண்டுபிடித்துள்ள தாழிகளுள் சிறந்த வடிவுடையதாக அமைந்ததே இங்குக் காட்டப்படும் முதுமக்களின் பெருந்தாழியாகும்.



இத்தாழி மண்ணால் செய்யப்பட்டுச் சுடப்பட்டதாகும். தாழிகள் முதுமை பெற்ற ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவே அமைக்கப்படுவது பண்டைக் கால மரபு. இத்தாழி அம்மரபில் அமைந்ததன்று. இப்பெருந்தாழியினுள் மஞ்சள், பழுப்பு, சிவப்பு ஆகிய வண்ணங்களினால் வரியோவியம் புனையப்பெற்ற அழகிய சிறு தாழிகள் பல அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் நீருக மடிந்த எலும்புகள் நிறைக்கப்பட்டிருந்தன. இந்நிலையினைக் கண்டு ஆராய்ந்து கூறுவோமானால் இத்தகைய தாழிகள் ஒரு குடும்பத்தாருக்குரியவையாக அமைக்கப்பட்டிருந்திருக்கின்றன என்பது புலனாகும். ஈமத்தீயில் இடப்பட்டு நீறான உறவினரின் எஞ்சிய எலும்புகளை அக்கால மரபிற்கேற்பச் சிறு தாழிகளில் இட்டு, ஓரிடத்தே நிலையாக அமைக்கப்பட்டிருக்கும் பெருந்தாழியினுள் வைத்து இறந்தார் நினைவாக வழிபடுவார் போலும்.

படத்தில் காட்சி தரும் தாழி, திருச்சி மாவட்டத்தில் காவிரியின் வடகரையில், பழமையான பரம்பு ஒன்றில் எழுந்து நிற்கும் ஆலமரத்தைச் சூழ்ந்து புதைக்கப்பட்டிருந்த தாழிகளுள் ஒன்றாகும். ஒரு குடும்பத்தார் நிலையாக அமைத்திருந்ததனால் இதனை 'நிலைத் தாழி' யென்றும், வடிவினைக்கொண்டு 'பெருந்தாழி' யென்றும் கூறலாம்.

வீரத்திற்குச் சின்னம்

பண்டைத் தமிழரின் வாழ்வியலில் சான்றோர்க்கும், வீரர்க்கும், கற்புடைப் பெண்டிர்க்கும் நினைவுச் சின்னங்களாக நடுகற்கள், வீரக்கற்கள் அமைக்கப்பட்டிருந்ததனைப் பழம்பொருள் ஆராய்ச்சியால் காணமுடிகின்றது. இவ்வாறான நடுகற்களைப்பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்களிலும், முதல் இலக்கண நூலாம் தொல்காப்பியத்திலும் விரிவாகக் காணலாம்.

இவ்வாறான வரலாற்றுச் சின்னங்கள் பாண்டிய நாட்டிலும் கொங்கு நாட்

டிலும் மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன. அவற்றுள், கொங்கு நாட்டுச் செங்குன்றூரில் யான் கண்ட வீரக் கல்லொன்றே காட்சிக்கு விருந்தாக ஈண்டு அமைந்துள்ளது.

இவ் வீரக்கல்லில் போரில் இறந்த வீரனின் பீடும் பெயரும் எழுதப்பட்டுள்ளன. குதிரை மீது பெருமிதத்தோடு விளங்கும் வீரனின் உருவமும் புடைப்புச்சிற்பமாகச் செய்யப்பட்டுள்ளது. கல்வெட்டுச் செய்தியினால் தி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்ட சுந்தரபாண்டியன் என்னும் மன்னனின் ஆறாவது ஆட்சியாண்டில் திருச்செங்கோட்டில் நிகழ்ந்த போரில் பாண்டியனின் குதிரைப்படைத் தலைவனும், வடகரை நாட்டதிகாரம் உடையவனுமான கன்னியதேவன் என்பான் குதிரை மீது இறந்துபட்ட செய்தி விளக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடுகற்கள் சங்ககாலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் மக்களால் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் நாட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. நடுகற்களுள் பல, காலஞ் செல்லச் செல்லக் கருவறைக் குட்பட்டதாகிக் கோட்டமாகவும், கோயிலாகவும் ஆக்கப்பட்டுத் தெய்வ வழிபாட்டிடங்களாகத் திகழுகின்றன என்பதை ஆராய்ச்சி வழியே கூறலாம்.

மேற்குறிக்கப்பட்ட பழம்பொருட் சின்னங்கள் போன்று யான் கண்டுள்ளவை பல. இது போன்று பலரும் முயன்று காண வேண்டுவன பல. முனைந்தெழுந்து, ஆய்ந்து கண்டு தமிழக வரலாற்றின் பழங்காலத்தைப் புதுக்குவோமாக!

இத் தென்றமிழ் நாட்டின்கண் பழைய நகரங்கள் இருந்து அழிந்து போன இடங்களை அகழ்ந்து, அவற்றின் கீழ்ப் புதைந்து கிடக்கும் பொருள்களை மேற்கொணர்ந்து ஆராய்வார் இன்மையின், பண்டைக்காலத்து நடுகற்களின் இயல்பினை அவ்வாராய்ச்சியின்றி முடிவுகட்டுதல் இயலாது.

— மறைமலையடிகள்.

(மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் - இரண்டாம் பாகம்-பக்கம் 760-)

சட்டவியல்

நாகைத் தமிழ்ச் சங்கத் தலைவர்
திரு. இரா. தம்பையா அவர்கள்
பி. ஏ., பி. எல்.,
எழுதிய

சட்டம் பற்றிய சில எண்ணங்கள்

சட்டம் என்பது அரசின் ஆணையாகும். இச் சட்டங்களையே அறமன்றங்கள் நடைமுறைப்படுத்துகின்றன. இத்தகு சட்டங்களில் குற்றவழக்குகளைப் பற்றிய சட்டம் ஒரு பகுதியாகும். இந்தச் சட்டத்தின் இயல் என்பது அதன் அடிப்படை விளக்கமாகும்.

முதலில் மக்களின் முறைக்கு முரணான நடத்தைகள் யாவும் குற்றங்களாகக் கருதப்பட்டு, அவைகளுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டு வந்தன. இவையே காலப்போக்கில் பலவகைக் குற்றங்களாக விளக்கப்பட்டு, அவைகளுக்குரிய தண்டனைகளும் வகுக்கப்பட்டன. இவையே 'குற்றத் தண்டனைச் சட்டங்கள்' எனப்படும். நம் நாட்டில் இப்போது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்கம் வைத்திருப்பதும் ஒரு குற்றமாகும். இது நாட்டின் பொருளியல் நிலைக்கு ஒரு சான்றாக உள்ளது. இக் கட்டுரையின்கண் ஆராயப்படுவன இது போன்ற சட்டங்கள் அல்ல; பெருங் குற்றங்களைப் பற்றிய சட்டம் - 'தண்டனை விதியமைவு' [*Penal Code*] - ஆகும்.

கொலை, களவு முதலிய குற்றங்கள் தொன்றுதொட்டுக் கடுந் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மிகப் பழங் காலத்தே குற்றஞ் செய்தோரை அச்சுறுத்தல் அதிகமாகவும், தண்டனை எளிதாகவும் இருந்தன. இதனை,

"கடிதோச்சி மெல்ல எறிக, நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்னும் வள்ளுவர் சொல்லாலும் அறியலாம். அத்தொடு தாமே உணர்ந்து தம் குற்றங்களைக் கடிவதும் நெறியாக இருந்தது. இடைக்காலத்துத் தண்டனை வகைகளை உற்று நோக்கும்போது

பழி வாங்கும் அடிப்படையில் அமைந்துள்ளமை அறியலாம். பல்லுக்குப் பல், கண்ணுக்கு கண் வாங்குதல் என்ற வகையில் அவை அமைக்கப்பட்டிருந்தன. இத் தண்டனை முறையால் குற்றம் இழைக்கப்பட்டவருக்கோ மன்பதைக்கோ எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. எனவே, இந்தத் தண்டனை முறை நாளடைவில் மாற்றப்பட்டது.

அடுத்து, அச்சுறுத்தும் முறை கையாளப்பட்டது. இதனால் தண்டனை மூலம் குற்றங்களைத் தடுக்கின்ற கொள்கை உருவாயிற்று. மனிதன், இயற்கையில் கூடி வாழும் இயல்புடைய உயிரினத்தன் [*Gregarious Animal*]. அத்துடன் உரிமையோடு உலவும் இயல்பும் உள்ளவன். இவ்விரு இயல்புகளையும் பயன்படுத்தித் தண்டனைகள் வகுக்கப்பட்டன. அவற்றின்படி, குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டுப் பலநாள் காவலில் வைக்கப்படுகிறார்கள். இத்தகைய தண்டனை, குற்றம் செய்பவருக்கு ஏற்படுத்தும் இடுக்கண் காரணமாக அவரை மீண்டும் குற்றம் செய்வதினின்றும் தடுக்கிறது; குற்றம் புரியும் நாட்டமுடையோருக்கும் முன் அச்சுறுத்தலாக உள்ளது. இதே முறையில், ஒரு முறை கொலை செய்தவன் மறு முறையும் வேறு எந்தக் குற்றத்தையும் செய்யாமல் தடுப்பதற்கே அவனைத் தூக்கிவிட்டுக் கொன்றுவிடுகின்றனர். இச்செயல் நல்லவரின் உயிரைக் காப்பதற்குப் பயன்படுகிறது. இஃது, உழவன் பயிரைக்காக்கக் களையைப் போக்குவதற்கு ஒப்பாகும். இதனையே வள்ளுவனாரும்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்று அழகாகக் கொலைத் தண்டனை நெறியானதே எனக் காட்டியுள்ளார்.

இக் காலத்தில் குற்றவாளிகளைத் தண்டிப்பதை ஓரளவு குறைத்து, அவர்கட்குத் தக்க அறிவுரை நல்கி, அவர்களைத் திருத்துவதே முறையெனக் கொள்ளப்படுகிறது. சில நாடுகளில் கொலைத்தண்டனையை அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்ற பேச்சும் இருந்து வருகிறது. இந்நிலையில் குற்றம் இழைப்போர்க்கு ஓரளவு அச்சம் குறைந்துகொண்டே வருகிறது.

இஃதொருபுறமிருக்க மற்றொருபுறத்தில் பொருளுரிமை, பொருளுடைமை ஆகிய இவைகளின் அடிப்படைக் கருத்துகள் உலகில் மாறிக்கொண்டே வருகின்றன. இந்த மாற்றம் பரவவும், ஓங்கவும் பெரிய அளவில் சொற்பொழிவுகளும் விளம்பரங்களும் நடந்துவருகின்றன. ஆகவே, பொருளை உடைய ஒருவனுக்கு அதன்மீதுள்ள உரிமை படிப்படியாகப் பறிக்கப்படுவதைப் பார்க்கின்றோம். இதற்கும் சட்டம் ஓரளவு சார்பாக நிற்கின்றது. அந்த அளவான சார்பு போதுமானதன்று என்ற எண்ணத்தில் பெரும்பாலோர் தாமே பொருளுடைமை, உரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வழியில் செல்கிறார்கள். இப்படிப் பறிப்பதற்கு வன்முறைதான் கைக்கொள்ளப்படுகிறது. இஃதுமன்றி அரசியல் கட்சிகளிடையே ஏற்படும் கருத்து வேற்றுமைகள், மன வேறுபாடுகள் ஆகியவற்றையும் வன்முறையிலேயே வற்புறுத்தும் நிலை வந்து கொண்டுள்ளது.

அமைதியை நிலைநாட்டுவது, குற்றங்களைத் தடுப்பது, குற்றம் புரிந்தோரைத் தண்டிப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பது ஆகியவை காவல் துறையினரிடம் [*Police Department*] ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால் 'அவர்கள் நிலைமைக் கேற்பத் தம் பொறுப்பில் அவர்களது கடமையைப் பொருந்தும் வகையில் செய்வதற்குச் சில காலங்களில் முடிவதில்லை' என்ற ஒரு கருத்து நாட்டில் வலிமைபெற்று வருகின்றது.

இதன் தொடர்பாக அண்மையில் திரு. எச். வி. ஆர். ஐயங்கார் அவர்கள் 'இந்தியன் எக்ஸ்ப்ரெஸ்' நாளிதழில் வெளியிட்டிருந்த கட்டுரை அவரது எண்ணத்தையும் தூண்டுவதாக உள்ளது.

மேற்சொன்ன ஏதுக்களால் நாமே நம்மையும், நம் பொருளையும், நம்மவர்களையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. இது பற்றி நமது நாட்டுக் குற்றச் சட்டத்தை நிறுவிய வல்லுநர்கள் ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே உணர்ந்து, அந்தச் சட்டத்தில் தற்காப்பிற்காக ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளனர். இதன் அடிப்படை என்னவென்றால் நம் நாட்டில் நேர்மையாய் நடப்பவர்கள் வன்முறைகளைக் கையாள வலிமையற்றவர்களாயும், வலிமையிருந்தும் மனமில்லாதவர்களாகவும் வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களுக்குத் தற்காப்பு உரிமையைச் சற்றுப் பெருமனத்துடனே வகுத்துக் கொடுத்துத் தற்காப்புக்காக இவர்கள் செய்யும் குற்றங்களுக்குச் சட்டம் உடன்பாடு வழங்குகிறது. இந்த உடன்பாட்டைத் 'தண்டனை விதியமைவு' [*Indian Penal Code*] 96 முதல் 106 முடிய 11 பிரிவுகளில் காணலாம். தற்காப்புக்காக ஒரு மனிதன் செய்யும் எந்தச் செயலும் அந்தச் சட்டப்படி குற்றமாகாது. ஒவ்வொரு மனிதனுக்கும் தன் உடலையும் பிறர் உடலையும் துன்புறுத்தும் குற்றங்களைத் தடுக்கத் தேவையான அளவிற்கு வன்முறையைப் பயன்படுத்த உரிமை உண்டு. இதே போல நிலைத்த பொருளாயினும், அசையும் பொருளாயினும் தன் அல்லது பிறர் பொருளைத் திருடல், கொள்ளையிடல், அழித்தல், கைப்பற்றுதல் ஆகிய குற்றங்கள் புரிவதைத் தடுக்க - வலிமையைப் பயன்படுத்தித் தடுத்துக்கொள்ள உரிமை உண்டு. இத்தகைய உரிமை, மேற்கண்ட செயல்கள் உருவாகித் தன்னையோ, பிறரையோ, தன் பொருளையோ பிறர் பொருளையோ அழிக்கும் என்ற அச்சம் தன் மனத்தில் உறுதியாய் ஏற்படும் நிலையிலிருந்து அந்த அச்சம் முற்றிலும் நீங்கும் வரையில் கையாளத் தக்கதாகும்.

சட்டம் எவரையும் கோழையாக இருக்கவேண்டும் என்று விதிக்கவில்லை. கடுந்துன்பத்தில் சிக்கிய ஒருவனே அவனிடத்தில் பொறுப்புள்ளவனே காவல் துறையைத் தேடி ஓடவேண்டும் என்பதும் சட்டத்தின் குறிக்கோளன்று. தற்காப்பு உரிமையைச் செயல்படுத்தும் போது மனிதன் கையாளும் வன்முறை அவன் இருக்கும் மன நிலையில் மிகக் கூர்மையாகச் சீர்தூக்கப்படுகிறது. தங்கம் நிறுக்கும் துலாக்கோல் போல் முள் சற்றும் சாயாதவாறு நடக்க வேண்டுமென எதிர் பார்க்கப்படவில்லை. ஆனால், இதில் அமைந்த இன்றியமையாக் கருத்து என்னவெனில் தற்காப்பு என்ற போர்வையில் வஞ்சத்திற்கென்று வலிமையைப் பயன்படுத்தக்கூடாது. மேலும், தற்காப்பிற்காக ஓரளவுக்கு விஞ்சிய வலிமையை வேண்டுமென்றே பயன்படுத்துவதும் சட்டத்திற்குட்பட்டதன்று.

தனக்குப் பிறர் செயலால் சாவு நேரும் என்றோ, கொடுந்துன்பம் விளையும் என்றோ, ஒரு பெண்ணின் கற்பு அழியும் என்றோ, பண்பற்ற விருப்பத்தை நிறைவேற்றும் செயலாய் அமைந்துள்ளது என்றோ அற நடுவர் எண்ணக்கூடிய செயல்களைத் தடுத்துக் கொள்வதற்கு அப்படிச் செயல் செய்ய முனைவோரைக் கொலை செய்யும் உரிமையும் சட்டத்தில் அமைந்துள்ளது. இதேபோல் ஒருவன் தன்னுடைய அல்லது பிறருடைய உடைமைகளைக் கொள்ளையிடுதல், தீயிடுதல், இரவில் வன்முறையாய் வீட்டில் நுழைதல் போன்ற செயல்களைத்

தடுத்துக்கொள்ளத் தேவை ஏற்படு மானல் இச்செயல் புரிவோரைக் கொல் லுவதற்குச் சட்டம் இடமளிக்கிறது.

பொது மக்கட்குப் பணிபுரியும் ஓர் ஊழியர் தன் கடமையைச் செய்யுங்கால் மாற்ருனுக்குச் சாவு அல்லது கொடுந் துன்பம் விளையும் என்ற அச்சம் உண்மை யாக ஏற்படும்போது அல்லாமல் பிற வேளையில் பாதுகாப்பு உரிமையைப் பயன்படுத்தக்கூடாது. இதேபோல் ஒரு பொது ஊழியர் தானே செயல் செய்வ தற்கு மாற்ருகப் பிறருக்கு ஆணையிட்டுச் செய்யச் சொல்லும் போதும் அவரது உரிமை குறைக்கப்படுகின்றது.

எனவே, நம் நாட்டினரிடையே, இன்றியமையாத நிலை ஏற்படும் போது சட்டத்திற்குட்பட்ட வகையில் தம்மை யும், தம்மைச் சார்ந்தோரையும், தம் பொருள்களையும் தற்காப்பு உரிமையைப் பயன்படுத்திக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை உருவாக வேண்டியது வேண் டற்பாலதாகும்.

படைப்பில் மேனிலை பெற்றுள்ள மனிதன், பிற மனித, விலங்கினங்களின் இன்பங்களில் குறுக்கிடாமலே தனது இன்பத்தை நுகர அதிக வாய்ப்பளிக்கப் பெற்றுள்ளான். அத்தகைய மனிதன் தற்பாதுகாப்பு என்னும் இறுதி வாய்ப்பு ஒன்றன்றி வேறு எவ்வகையிலும் பிற மனித னையோ உயிரினத்தையோ கொல்லும் உரிமை கொண்டாடத் தக்கவன் ஆகான்.

— மறைமலையடிகள்.

(தமிழர் மதம் — முன்னுரை)

மாவட்டப் பதிவாளர்
திரு. ஓ. அழகுப்பிள்ளை அவர்கள்,
பி. ஏ.
எழுதிய

ஆவணமும் பதிவும்

குடிமக்களின் பண்புகள் குறையக் குறைய அரசினரின் சட்டங்கள் மிகுதிப் படுகின்றன. நல்லரசு எனப்படுவது நற்குடிப் பிறந்தார் பலரைத் தன்னகத்தே கொண்டு இலங்குவதாகும். ஒழுக்கம், வாய்மை, நாண், செப்பம் ஆகிய அரும்பண்புகள் ஒருங்கே அமையப் பெற்றோரே நற்குடிப் பிறந்தார் என்று நவிலத் தக்கோராவர். இதனை,

"ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந் தார்"

"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு"

என்னும் வள்ளுவனாரின் மொழிகளால் தெள்ளிதின் அறியலாம்.

ஓர் அரசு செழுமை பெற்றிருக்க வேண்டுமானால் அவ்வரசின் கீழ் வாழும் குடிமக்களின் இயல்புகள் செழுமை பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை ஆகிய அரும் பண்புகள் அமையப்பெற்றிருக்க வேண்டும். வள்ளுவப் பெருந்தகையும் இதனாலன்றோ தம் நூலில் அரசு, அமைச்சு, நட்பு முதலியவற்றை விளக்கிப் பின்னர் குடிமகன் இயல்புகளான குடிமை முதல் குடி செயல்வகை ஈறாகவுள்ள அதிகாரங்களை அமைத்துள்ளார்!

மேற்சொல்லப்பட்ட பண்புகள்யாவும் அமையப் பெற்று மனம், மொழி, மெய்களால் நேர்மையுடன் வாழ்ந்த பெருமக்கள் நிறைந்த பண்டை நாளில் பதிவுச் சட்டம் இயற்ற வேண்டிய நிலை இல்லை. ஒருவர் மற்றவர்பால் அத்துணை நம்பிக்கை கொள்ளும் நிலையிருந்தது.

அந்நாளில் நிலத்த உடைமைகளின் மாற்றங்கள் வாய் ஒப்புடன்படிக்கையாகவே நடந்து வந்தன. மக்கள் சொன்ன சொல் தவறுர். உடைமைகளின் பரப்பைக் குறிப்பிட்டுக் காட்டி ஒருவருக்கு விற்பதாக உறுதி கூறின் பின்னர் எக்காரணம் பற்றியும் வழுவார். ஒன்றைக் கொடுப்பதாகக் கூறினல் எந்நிலையிலும் கொடுத்தே தீருவர்.

மிகப் பண்டைக் காலத்தில் எழுத்து மூலமாக உடைமைகளின் மாற்றம் நடைபெறவில்லை. ஆவணங்களோ, [*Records*] பதிவு [*Registration*] முறையோ ஏற்படவில்லை. அக்கால அரசினரால் இதுபற்றிய சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை. காலப்போக்கில் மக்கள் தம் உயரிய பண்புகளிலிருந்து சிறுகச் சிறுக வழுவலாயினர். நினைப்பது ஒன்று, சொல்வது வேறு, செய்வது பிறிதாய் வாழும் மக்கள் தொகை பெருகிற்று. இந்நிலையில்தான் ஆவணங்களை ஓலைச் சுவடிகளில் எழுதுவதும், கல்லில் வெட்டுவதுமான முறைகள் தோன்றின. பதிவு செய்யும் முறை தோன்றவில்லையாயினும் ஆவணத்திற்கு இரண்டு படிகள் [*Copies*] எடுக்கப்பட்டன. அவற்றில் விற்போரும் வாங்குவோரும் கைச்சான்றிடுவர். பின்னர் ஆளுக்கொரு ஆவணத்தைப் பெற்று அவற்றைப் பேணிக் காப்பர்.

இம்முறையிலும் குறைகள் நேர்ந்தன. தம்மிடமுள்ள ஆவணத்தில் திருத்தம் செய்தும், இடைச்செருகல் செய்தும் சிலர் வழக்கிட்டனர். இதனல் பல தீமைகள் ஏற்பட்டன. இத்தீமைகளைப் போக்கும் நோக்குடன் முதன் முதலில் கிழக்கிந்திய ஆங்கில நிறுவனத்தார் ஆட்சிக் காலத்தில் ஆவணப்பதிவு முறை பற்றிச் சட்டம் இயற்றப்பட்டது. இது தி. ஆ. 1769 (1800) ஆம் ஆண்டிற்குப் பிறகு இயற்றப்பட்டதாகும். இச்சட்டம் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டது. பிறகு, அனைத்து இந்தியாவிற்கும் ஏற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டது. இறுதியாக இப்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் தி. ஆ. 1877 (1908)ஆம் ஆண்டில் இயற்றப்பட்டனவாம். இச்சட்டங்களும் பல திருத்தங்கள் செய்யப்பட்டுத் தற்பொது செயலாக்கப் படுகின்றன.

இனி, இப்பதிவுச்சட்டத்தின் சிறந்த செய்திகளைக் காணலாம். தொடக்கத்தில் ஆவணப்பதிவு வற்புறுத்தப் படவில்லை. காலப்போக்கில் சில வகை ஆவணங்கள் உறுதியாகப்பதிவு செய்யப் பட வேண்டுமெனவும், சிலவகை அவ்வாறு பதிவு செய்யப்பட வேண்டியதில்லை எனவும் வகுக்கப்பட்டன. தி. ஆ. 1877 (1908) ஆம் ஆண்டிற்கு முன்னர் எல்லா ஆவணங்களும் பதிவு செய்யப் பட்டே ஆக வேண்டியதில்லை. விருப்பமுடையவர் பதிவு செய்துகொள்ளலாம் என்ற அளவிலேயே இருந்தது. நாளடைவில் மக்களின் பண்பாடு குறையக் குறையச் சிலவகை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டே ஆக வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளன. அவை, எவையெவை என்று இப்போதுள்ள சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்டே ஆகவேண்டியவை

1. நிலையான உடைமைகள் பற்றியனவும், மதிப்பு வரையறை அற்றவையுமான கொடை, விலைக்கு விற்றல், ஈடு வைத்தல், பயன் நுகர்தல், மாற்றம் செய்தல், எல்லாவகைப் பொறுப்புக்கள், பயன் நுகர்தலும் ஈடுவைத்தலும் ஆகியவற்றின் மாற்றங்கள்.

2. நிலையான உடைமைகள் பற்றியனவும் மதிப்பு உருபா நூற்றுக்கு மேற்பட்டவையுமான உடன்பாடு, விடுதலை, பங்குப்பிரிவினை, வழி, சுவர், கிணறு,

வாய்க்கால் தொடர்பான உடன் படிக்கைகள், குத்தகை, குடிக்கூலி ஆவணங்களின் மாற்றங்கள், குழந்தைகளை எடுத்து வளர்த்தல்.

3. அனைத்துக் குடிவாரச் சீட்டுக்கள், பயிர்த் தொழில் பற்றிய 5 ஆண்டுக்கு மேற்பட்ட குத்தகை ஆவணங்கள், ஆண்டுக்குத்தகை உரூபா ஐம்பதுக்கு மேற்பட்ட குத்தகைகள்.

பதிவு செய்தாக வேண்டாதவை.

1. நிலையான உடைமைகள் பற்றியனவும் மதிப்பு உரூபா நூற்றுக்குக் குறைவானவையுமான உடன்பாடு, விடுதலை, பங்குப் பிரிவினை, வழி, சுவர், கிணறு, வாய்க்கால் தொடர்பான உடன்படிக்கைகள், குத்தகை, குடிக்கூலி ஆவணங்கள் பயிர்த் தொழில் பற்றிய 5 ஆண்டுகட்குக் குறைவான குத்தகை ஆவணங்கள், ஆண்டுக் குத்தகை உரூபா ஐம்பதுக்குக் குறைந்த குத்தகைகள்.

2. நிலையான உடைமைகள் அல்லாத அசையும் பொருட்கள் போன்ற பிற உடைமைகள் பற்றியவை, ஒருவர் வாணுளுக்குப் பின் நடைமுறைக்கு வரக்கூடிய விருப்பாவணம் [*Will*].

3. உடைமைகள் பற்றியல்லாத பிற எல்லா உடன்படிக்கைகளும்.

பதிவு செய்யக் காலவரம்பு.

ஆவணம் எழுதிக் கைச்சான்றிடப்பட்ட நாளிலிருந்து நான்கு திங்கள் வரை துணைப் பதிவாளர்கள் எந்த மேல் ஆணையுமின்றிப் பதிவுக்கு இசைவளிக்கலாம். அக்காலத்திற்கு மேல் 12 திங்கள் வரை மாவட்டப் பதிவாளர் இசைவின் அடிப்படையிலும் தண்டத்தொகை கட்டியதன் அடிப்படையிலும் பதிவுக்கு இசைவளிக்கப்படும். ஓராண்டிற்குப் பின்னர் அறமன்றத்தின் ஆணையின் அடிப்படையில் காலவரம்பின்றிப் பதிவுக்கு இசைவளிக்கப்படும்.

பதிவு செய்யுமிடம்.

நிலையான உடைமைகள் பற்றிய ஆவணங்களை அவ்வுடைமைகள் இருக்கும் ஊர், நகரம், எந்தத் துணைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் பகுதிக்குட்பட்டுள்ளனவோ அந்தத் துணைப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்தல் வேண்டும். மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்ய வேண்டுமானல் தனிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

பதிவேடுகளின் பாதுகாப்பு.

பதிவு செய்யப்பட்டவைகளில் பிற்காலத்தில் எந்த வகைத் திருத்தமோ இடைச் செருகலோ ஏற்படாவாறு மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஓரெழுத்திற்கும், சொல்லுக்கும், எண்ணுக்கும் இடையே இடைவெளியின்றி, நெருக்கமாக இலக்கண விதிகளைப் பின்பற்ருமல் எழுதும் முறை பின்பற்றப்படுகின்றது. ஆவணத்திலும் பதிவிலும் ஏற்படும் அடித்தல், திருத்தல் போன்றவைகளைக் குறிப்பிட்டு எழுதி அலுவலரின் சுருக்கக் கைச்சான்றுடன் வைக்கப்படுகின்றன. இவ் விதிமுறைகள் கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றன. முடிந்த பதிவேடுகள் அடிக்கடி கண்காணிக்கப்படுகின்றன. அடித்தல், திருத்தல்கள் ஆராயப்படுகின்றன. பூச்சிகளால் கேடுறு வண்ணம் பூச்சி மருந்துகள் அடிக்கடி அடிக்கப்படுகின்றன. பொறுப்புள்ள பதிவலுவலரின் முன்னிலையில் மட்டுமே கையாளப்படுகின்றன.

எனவே, ஆவணப் பதிவுத்துறை பொது மக்களுக்கு அரிய சேவை செய்து வருகிறது என்பதை அறியலாம். இத்துறை உடைமையுரிமைகளைப் பாதுகாக்

கிறது. பதிவேடுகளையும் நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வருகிறது. நூறுண்டிற்கு மேற்பட்ட குறிப்புக்களின் படிகளையும் விரைவில் கிடைக்கச் செய்கிறது. தீ, வெள்ளம், புயல், நிலநடுக்கம் முதலிய இயற்கை அழிவுகளால் பொது மக்களிடமுள்ள ஆவணங்கள் அழிவுற்றாலும் அல்லது அவை காணுமற்போனாலும் அவர்கள் கவலையுற வேண்டுவதில்லை. பதிவுத் துறையிலிருந்து அவைகளின் படிகளைப் பெற்றுக் கொள்ளலாம். இக்காலத்தில் திருமணம், கழகங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவுகளையும் மேற்கொண்டு, பதிவேடுகள் பாதுகாக்கப்படுகின்றன. அரசினருக்குப் பெருமளவில் வருவாய் தேடித் தருகின்றது இத்துறை. ஆகவே, ஆவணப் பதிவுத்துறை பொதுமக்கள் வாழ்விலும் அரசினர் ஆட்சியிலும் சிறந்த இடம் பெற்றுள்ளது என்பதை அறியலாம்.

காலங்கடோறுந் தொடர்ந்து நிகழும் மாறுதல்களை நன்காராய்ந்து பார்த்து, அவற்றிற்கேற்ப நமது வாழ்க்கையின் பழைய நிலைகளை அறவே யொழித்தோ அல்லதவற்றுட் சீர்திருத்தற்பாலனவற்றைச் சீர்திருத்தியோ ஒழுகினலன்றி மக்கள் வாழ்க்கை இனிது நடவாது.

—மறைமலையடிகள்.
(தமிழர் மதம் – பக்கம் 289.)

திரு. நா. அமிழ்தலிங்கம் அவர்கள்,
பி.காம்., டி.பி.பி.ஏ., ஏ. டபிள்யூ. எஃச். சி.
எழுதிய

பணிப் பகுப்பு இயல்

பொருளியல், வரலாற்று இயல், மன்பதை இயல், தொழிலியல் முதலிய பல துறை உயர் கல்விப் பகுப்பு முறை போன்று அண்மைக் காலத்தே பணிப் பகுப்பு இயல் [*Work Study*] என்ற புதியதோர் உயர்மட்ட நுணுக்கக் கல்வியை உருவாக்கியுள்ளனர்.

நாடு முன்னேற நாட்டு வருவாய் பெருகவேண்டும் என்பது பொருளியலின் அடிப்படைக் கோட்பாடாகும். நாட்டு வருவாய் பெருக உழவும் தொழிலும் பெருக வேண்டும். இவை பெருகி வளர்ந்தால் மட்டும் போதா. இத்துறையில் விளைவுப் பெருக்கம் ஏற்படும் அளவைப் பொறுத்துச் செல்வம் பெருகும் என்பது ஒரு கொள்கை.

ஒரு குறிப்பிட்ட துறையில் விளையும் பொருள்களின் அளவைப் பெருக்க அதிகச் செல்வ முதல் [*Capital*], அதிக எண்ணிக்கையில் தொழிலாளர், கூடுதலான பொறிகள் ஆகிய இவை பொதுவாக வேண்டப்படுபவை.

விளைவு பெருகிவிட்டால் வருவாய் அதிகமாகிவிடும் என்று நாம் அறுதியிட்டுக் கூற இயலாது. ஏனெனில் கூடுதலான செல்வ முதல், கூடுதலான செலவு என்று ஆகும்போது வேண்டு

வதற்கு மேல் விளைந்த பொருள்களின் விலை மதிப்பு குறைய வாய்ப்பு ஏற்படுவதில்லை. மாறாகத் தனிப் பொருளின் விலை கூடுதலாகவும் ஆகிவிடக்கூடும். விளைவுப் பொருளின் விலை குறையாவிட்டால் வாங்கிப் பயனடையும் பொது மக்களுக்கு அதனால் பயனேதும் ஏற்படாது. விலைக் குறைவு இல்லையென்றால் மக்களுக்கு வாங்கும் ஆற்றலோ, ஆர்வமோ வளர வாய்ப்பு இல்லை.

இக்காலப் பொருளியல் வல்லுநர்கள் கண்டு சொல்லும் உண்மை, வெறும் விளைவுப் பெருக்கத்தால் மட்டும் ஒரு நாடு உயர்வு காண இயலாது என்பதாகும். வாங்கும் ஆற்றலை விலைக் குறைவு என்ற பெயரில் மக்களுக்கு அளிக்காத போது சோர்வு நிலை தான் வரும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள்.

அப்படியானால் விலையைக் குறைக்க வழிதான் என்ன? உலகப் பொருளியல் வல்லுநர்கள், அரசியல் சார்பு கொண்டவர்கள் தரும் வழிகளோ பன்னூறு. அண்மைக் காலத்தில் உலகப் பொருள் கல்வி மன்பதை கலையியல் அமைப்பு [*Unesco*] நடத்திய ஆய்வின் மூலம் ஒரு புது உண்மை எடுத்துச் சொல்லப்பட்டது. ஒரு குறிப்பிட்ட துறையில் செல்வ முதலை அதிகரிக்காமல், தொழிலாளர் எண்ணிக்கையைக் கூட்டாமல் –அஃதாவது விளைச்சல் செலவைக் கூட்டாமல்–, இருக்கும் துணைக் கருவிகளைக் கொண்டே இப்போது விளையும் அளவைக் குறிக்கத்தக்க அளவுக்கு எப்படிப் பெருக்குவது என்பதற்குப் புதுவழிகள் கண்டு சொல்ல முனைந்துள்ளார்கள். அதன் ஒரு வடிவந்தான் இந்தப் பணிப் பகுப்பியல் முறை என்பதாகும்.

விளைச்சல் என்பதற்கு மாற்றாக விளைவிப்புத் திறனை [**Productivity**] எப்படி அதிகப்படுத்துவது என்பதுதான் இப் புதுத் துறையின் நோக்கம்.

$$\text{விளைச்சல் திறன்} = \frac{\text{விளையும் பொருளின் மதிப்பு}}{\text{விளைச்சலுக்காகும் செலவு}}$$

இந்தப் புதுமுறைக்குப் பணிப் பகுப்பு இயல், அஃதாவது *Work Study* என்று ஆங்கிலத்தில் பெயர் சூட்டியிருக்கிறார்கள். இது பொறி இயலும், பொருளியலும் இணைந்த ஓர் அறிவியல் போக்கான - அளவை நெறியான உண்மையாகும்.

ஒரு மனிதன் காலைமுதல் இரவு வரை நெற்றி வியர்வை நிலத்தில் வடிய உடலெல்லாம் நோவப் பணி புரிந்து விடுவதால் மட்டும் அவன் பணியாற்றும் நிறுவனத்திற்குப் பயன் குவிந்து விடுவதில்லை. அவனால் எவ்வளவு விளைவு அல்லது பொருள்கள் செய்து குவிக்கப்பட்டன என்பதைப் பொறுத்துத்தான் அவனால் விளையும் பயனைக் கணிக்க வேண்டியுள்ளது.

எந்தப் பணியும் பகுத்துத் துருவித் துருவிப் பார்க்கப்படுகிறது இந்தப் புது முறையில். முதலில், வீணான உடல் சோர்வை உடனடியாகக் குறைக்கிறது அல்லது அகற்றுகிறது. உடலும் உள்ளமும் எளிதில் களைப்படையாமல் அவன் குறைத்த நேரத்தில் முன்னைய நிலையை விடக் கூடுதலான பொருள்களைச் செய்து குவிக்க வழி வகுக்கப்படுகிறது.

பணிப் பகுப்பியல் இரண்டு பெரும் பகுதிகளைக் கொண்டது. ஒன்று நிகழ் முறை ஆய்வு [*Method Study*]. மற்றது கால ஆய்வு [*Time study*] இந்த இரண்டு பிரிவுகளிலும் பல உட்பிரிவுகள் உள்ளன.

பொதுவாக நிகழ்முறை ஆய்வில் [*Method Study*] எந்த ஒரு தொழிலும் அது அமைந்துள்ள முறை, அங்குப் பின்பற்றப்படும் பழக்கம், தற்போதைய

நடவடிக்கைகள் ஆகிய யாவும் ஒரு சிறு பகுதிகூட விடப்படாமல் பதிவு செய்யப் படுகின்றன. எந்த ஒரு தொழிலிலும் எப்படி ஒரு பணியைச் செய்யவேண்டும் என்பதை அணு அணுவாக ஆராய் கிருர்கள். எப்படி விளைவிப்புத் திறனை கூடுதலாக்குவது என்பது இந்த முறை யின் உள்நோக்கம்.

இதற்கு முதற்கண் விளைவிக்கும் முறையை ஆய்வு செய்கிருர்கள். தொழிற் கூடத்தில் உள்ள கருவிகள், தொழிலாளர் திறமை, தொழிற்கூட அமைப்பு, வினை வின் வெளிப்பாடு [*Lay Out*] ஆகியவை இங்கு நுணுக்கமாக ஆராயப்படுகின்றன. பொருளின் சிதைமானம் [*Wastage*] உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. நடத்தும் ஆராய்ச்சியைப் பல வரை படங்களாக உருவாக்குகிருர்கள்.

கால ஆய்வு [*Time Study*] என்பது முன்னைய நாளில், கால இயங்குமுறை ஆய்வு [*Time and Motion Study*] என்ற பெயரால் சில மேலை நாட்டுப் பொரு ளியல் வல்லுநர்களால் குறிக்கப்பட்ட ஒன்றுதான். இந்தத் துறையை இப் போது தெளிவான ஒரு கோட்பாடாக ஆக்கியுள்ளார்கள். எந்த ஒரு நுணுக்க வேலைக்கும் ஆகும் காலம் மணித்துகள் [*Second*] அளவில் கணிக்கப்படுகிறது. இதற்கு நின்றியங்கும் மணிப்பொறி [*Stop Watch*] பயன்படுத்தப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட வேலையைச் சிலர் விரைவாகவும், சிலர் மெதுவாகவும், சிலர் அதற்கியல்பான விரைவோடும் செய்வதை நாம் பார்க்கிறோம். பொறிகள் [*Machine*] போல மனிதன் ஒரே சீரில் எப்போதும் பணியாற்றுவது என்பதோ ஒருவரைப் போலவே மற்றவரும் அதே சீரில் பணிபுரிய முடியும் என்பதோ முடியாதவை.

தொழிலாளியின் அகவை (வயது) அவனது உடல் வலிமை, மனநிலை, வேலை யாற்றும் பணிமனையின் சுற்றுப்புறம், தட்ப வெப்பநிலை, அவனுடைய தொழிற் பட்டறிவு, நுணுக்க அறிவு [*Technical Knowledge*], அவன் பெறும் ஊதியம், அதிகம் விளைவித்தால் அவனுக்குக் கூடுதலாக வருவாய் கிடைக்கும் வாய்ப்பு என இவ்வாறு எத்துணையோ சூழ்நிலைகள் அவனது வேலைத்திறனைக் கூட்டவோ குறைக்கவோ செய்கின்றன.

ஒரு குறிப்பிட்ட பணியை ‘அ’ என் பவர் 10 மணித்துளியிலும் அதே பணியை ‘ஆ’ என்பவர் 12 மணித்துளியி லும் ‘இ’ என்பவர் 8 மணித்துளியிலும் செய்து முடிப்பதாக வைத்துக்கொள் வோம். அப்படியானல் அந்தப் பணி யைச் செய்து முடிக்க ஆகும் உண்மை யான—நேர்மையான நேரம்தான் என்ன என்ற வினு எழுமன்ருே? அதை வரை யறுக்க அளவறுதிப்பாடு [*Rating*] என்ற முறை பயன் படுத்தப்படுகிறது. ஓர் இயல்பான மனிதன் ஒருமணி நேரத்தில் நாலு கல் தொலைவைக் கடந்து செல்லக் கொள்ளும் நடையின் விரைவை நாம் 100 என்று வைத்துக் கொள்வோம். மற் ருேர் ஆள் விரைவாகப் போகும்போது அஃதாவது அதே தொலைவைக் குறைந்த நேரத்தில் நடந்து முடித்தால் அவன் விரைவை 100 க்குமேல் அஃதாவது 120 என்று விரைவு மதிப்புப் போடுகிறோம். அதே போல இன்னெரு ஆள் இயல் பான விரைவைவிட மெதுவாகப் போகும் போது அஃதாவது அதே தொலைவைக் கடக்க அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும்போது அவன் விரைவைக் குறைந்த விரைவு என்று 100 க்குக் குறை வாக 80 என்று மதிப்பீடு செய்கிறோம்.

இதை மற்ருெரு எடுத்துக்காட்டா லும் விளக்கலாம். ஒரு குறிப்பிட்ட வேலையை நான்கு ஆட்கள் வெவ்வேறு கால அளவில் செய்கிருர்கள். உண்மை யாக அந்த வேலைக்கு ஆகும் கால அள வைப் பின்வருமாறு கணக்கிடுகிறோம்:

வேலைக்காகும் கால அளவின் கணக்கீடு.

எண்	தொழிலாளியின் பெயர்	பணியின் விரைவு மதிப்பு	கண்ட நேரம் -மணித்துளி-	கணக்கு	அளவான நேரம் -மணித்துளி-
1.	பாரதி	120	10	$10\times\frac{120}{100}$	12
2.	இளங்கோ	80	15	$15\times\frac{80}{100}$	12
3.	சாத்தன்	60	20	$20\times\frac{60}{100}$	12
4.	முருகன்	100	12	$12\times\frac{100}{100}$	12

விரைவின் மதிப்பு அதிகமாக அதிகமாக வேலை நேரம் குறைகிறது. விரைவு மதிப்பு குறையும்போது வேலை நேரம் கூடுதலாகிறது. ஆனால், வேலையில் அளவான நேரம் மட்டும் எப்போதும் மாறாமல் இருக்கும். வேலையின் அளவான நேரத்தைக் கண்டுகொண்ட பிறகு தொழிலாளிக்குத் தரவேண்டிய உடல் ஓய்வு, அவனது பிற தேவைகள் எல்லாவற்றையும் மனதில் கொண்டு சலுகை நேரம் 12 நூற்று விழுக்காட்டிலிருந்து 20 நூற்று விழுக்காடு வரை இந்த அளவான நேரத்தில் சேர்க்கப்படுகிறது. அதுதான் வரையறுக்கப்பட்ட நேரம் [*Standard Time*] என்று சொல்லப்படுகிறது. இந்த வரையறுக்கப்பட்ட நேரத்தை வைத்துத்தான் பணியின் கொள்ளளவு [*Work Content*] கணிக்கப்படுகிறது.

கால ஆய்வு பல பிரிவுகளைக்கொண்டது. பணியின் முழுமைக் கணிப்பு [*Production Study*], பணியை ஆங்காங்கே துருவிப் பார்த்து ஆராயும் முன்படி நடவடிக்கை [*Activity Sampling*] என்ற பல பிரிவுகள் உண்டு. இந்த ஆய்வுகள் யாவும் முடிந்த பிறகு வினு உத்தி [*Questioning Technique*] கையாளப்படுகிறது.

ஏன்? எப்படி? எதற்காக? எங்கே? யாரால்? எந்த நேரத்தில்? என்ன பயன்? மாற்று வழி என்ன? — என்பன போன்ற பல நூறு வினுக்களை ஒவ்வொரு கட்டத்திலும் போட்டு அதற்கான விடைகள் எழுதிக் கொள்ளப்படுகின்றன. இப்படிக் கிடைக்கும் விடைகளை ஒருங்கு கூட்டி மறுமுறை பார்ப்போமானல் நமக்கே பல புது வழிகளும், புது உண்மைகளும் தோன்றும்.

பணி ஆய்வுக்குப் பின் எந்த ஒரு தொழிலிலும் அதனுடைய விளைவிப்புத் திறனைத் திண்ணமாய்க் கூடுதலாக்க முடியும் என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

பணி ஆய்வால் தொழிலாளர் வேலை வாய்ப்பு இழக்கக்கூடும் என்ற தவருன எண்ணம் உலகெங்கும் இருக்கிறது. உண்மையைச் சொன்னல் பணி ஆய்வால் தொழிலாளர் நலம் பாதுகாக்கப்படுகிறது. அவர்கள் வேலைச் சுமை குறைக்கப்படுகிறது. அவர்களுடைய எல்லா நலன்களும் காக்கப்படுகின்றன. முதலாளி தன்னுடைய நலன் கருதியாவது தொழிலாளியின் நலனைக் கவனிக்க வேண்டிய நெருக்கத்தில் பணி ஆய்வு வைத்துவிடுகிறது. அவர்களுடைய வருவாய் கூடுதலாக்கப்படுகிறது. தொழில் நுணுக்கம் கூர்மையாக்கப்படுகிறது.

உலகப் போருக்குப் பிறகு செர்மனியும், சப்பானும் இன்று தொழிலில் உயர்ந்து நிற்பதற்கு இந்தப் பணி ஆய்வு

முறைதான் காரணம். நமது நாட்டில் இந்த முறை இப்போதுதான் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. இத்துறை வளர்ந்து அது வேளாண்மையிலும் தொழிலிலும் பயன்படுத்தப்படுமானல் நாட்டின் விளைவிப்புத்திறன் கூடுதலாக் கப்படும். விளைவிப்புத்திறன் அதிக மாகும் போது விளைவுப் பெருக்கம் தானகவே அமைகிறது. விலைகள் குறைகின்றன. மக்களின் வாங்கும் ஆற்றல் அதிகமாகிறது. தொழிலாளி யின் தனி வருவாய் கூடுகிறது. தொழில் செய்யும் முதலாளியின் ஊதியம் கூடும் போது புதுத்தொழிலில் ஈடுபட ஊக்கு விக்கப் படுகிறர்கள். பரவலான தொழில் வளர்ச்சியும் தொழில் அமைதி யும் உருவாகின்றன. இதன் முடிவு நாட்டின் மொத்தமான வருவாய் பெருகி மக்களின் வளமான வாழ்வுக்கு வழி யமைக்கிறது.

"அகத்தும் புறத்தும் அமைந்த அமைப்பை
மிகத்தெரிந்து செய்க வினை."

"மாறு நிலையும் மலையும் செயல்தானும்
வேறுதல் கண்டு விளம்பு."

— மறைமலையடிகள்.
(வாழ்க்கைக் குறள்—9, 10.)

மனப் பேழைக்கு மகிழ்வும், மரப் பேழைக்குத் திகழ்வும் தருவன

மறைமலையடிகளார் நூல்கள்

அறிவியல்:

மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை (2 பகுதிகள்)	10-75
மரணத்தின் பின் மனிதர் நிலை	4-00
அறிதுயில்	4-50
தொலைவிலுணர்தல்	5-00
மனித வசியம்	5-00

இலக்கியம், கட்டுரை:

திருவொற்றியூர் முருகன் மும்மணிக் கோவை	6-50
சிந்தனைக் கட்டுரைகள்	3-50
இளைஞர்க்கான இன்றமிழ்	3-25
முற்கால, பிற்காலத் தமிழ்ப் புலவோர்	3-00
சிறுவர்க்கான செந்தமிழ்	3-00
சோமசுந்தரக் காஞ்சியாக்கம்	2-00

புதினம்:

நாகநாட்டரசி-குமுதவல்லி	[illegible]-25
கோகிலாம்பாள் கடிதங்கள்	6-00

வரலாறு:

மாணிக்கவாசகர் (வரலாறு மட்டும்)	2-50
சோமசுந்தர நாயக்கர் வரலாறு	2-25
வேளாளர் நாகரிகம்	3-00
பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்	1-75

ஆராய்ச்சி:

சாகுந்தல நாடகம் ஆராய்ச்சியுடன்	7-50
பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை	2-75
முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை	2-75
மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் (2 பகுதிகள்)	20-00
சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்	2-75

சமயம்:

தமிழர் மதம்	7-00
சைவசித்தாந்த ஞான போதம்	6-00
சிவஞான போத ஆராய்ச்சி	5-00
திருவாசக விரிவுரை (4 அகவல்)	7-50
பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்	3-50
கடவுள் நிலைக்கு மாறான கொள்கை சைவமாகா	2-50
Saiva Siddhanta as a Philosophy & Practical Knowledge	4-00

நாடகம்:

சாகுந்தல நாடகம்	4-25

மறைமலையடிகள் வரலாறு (கழக வெளியீடு)	3—00
மறைமலையடிகள் வரலாறு–மறை திருநாவுக்கரசு	15—00
இந்தி பொது மொழியா?	0—50

மறைமலையடிகள் உருவப்படங்கள்

வண்ணப் படம் (பள பளப்புத் தாள்)	—	ரூ. 0—50
புகைப்படம் (6" × 4" அளவு) அட்டையில்லாதது		ரூ. 1—75
,, (8" × 6") ,,	,,	ரூ. 3—00

மற்ற அளவுப் படங்கட்கு எழுதவும்.

திருநெல்வேலித் தென்னிந்திய–
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

1/140 பிராட்வே, சென்னை - 1

கிளை நிலையங்கள்: **திருநெல்வேலி—6, மதுரை—1.**

சில புதிர் வினாக்கள்

★ மனப் பேழைக்கு மகிழ்வும்,
மரப் பேழைக்குத் திகழ்வும் தருபவை எவை? எதிர்ப்பக்கத்தில் திகழும்

★ மென்மையான அகம் வேண்டும்
வன்மையான அகமும் வேண்டும்
வன்மையான அகத்தையும் தரும்
விரும்பிய வண்ணமும் தரும். எது? பக்கம் 202 தரும்

★ பாரதியார் வீதியில்
குவிக்கச் சொன்னவை எவை? ,, 203 குவிக்கும்

★ கழுத்திற்கு அழகு முத்துக் கோவை;
கோவைக்கு அழகு எது? ,, 204இல் மிளிரும்

★ மன்னையில் பொழியும்;
சென்னையில் வழியும்—எது? ,, 205இல் பொலியும்

★ இறப்பு இன்னாதது;
இன்னாததற்கு ஈடு கொடுப்பது எது? ,, 206இல் அது

★ பொறிகளுக்குக் கீழே
பொன் அணிகள் வழங்கும் பக்கம் எப்பக்கம்? ,, 207 அப்பக்கம்

★ விழி திறந்தும் பயனில்லை;
வழி இருந்தும் பயணமில்லை — ஏன்? ,, 208 கூறும்

★ உலக அமைதிக்கும் பறக்கும்
வீட்டு அடுப்பிற்கும் சிறக்கும் — எது? ,, 209 திறக்கும்

★ கப்பல் கவிழ்ந்தாலும்
தப்பாமல் ஈடு செய்வது எது? ,, 210இல் உள்ளது

★ வியர்வை சிந்தாமல்
விளைச்சல் நந்துவது எதனால்? ,, 211 அதனால்

★ கையில் நான்கிருந்தால்
மெய்யில் பாங்கிருக்கும். — அந்நான்கு ,, 212இல் இருக்கும்

நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகள் நினைவு மலர்.

உள்ளமாம் அகம் மென்மை பெற வேண்டும்;
இல்லமாம் அகம் வன்மை பெற வேண்டும்.

வன்மைக்கேற்ற இரும்புப் பொருள்களையும்
விருப்பத்திற்கேற்ற வண்ணப் பொருள்களையும்

வழங்குவோர்:

என். எஸ். அண்ணாமலைச் செட்டியார் மகார் வாணிகம்

N. S. Annamalai Chettiar Sons

இரும்புப் பொருட்கள் சாந்துச்
சுண்ணும்பு (Cement) பல்வகை
வண்ணங்கள், நீரேறு குழாய்கள்
இரும்புக் குழாய்கள், பல்வகைப்
பொறிகளின் பாகக் கருவிகள்
விற்பனை நிறுவனம்.

விசயபுரம் — திருவாரூர்.

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்"
— என்றார் பாரதியார்.

கண்ணைக் கவரும் ஆடையும்
கருத்தைக் கவரும் கைத்தறியும்
வண்ண ஆலைத் துணிகளும்
வனப்பை வழங்கும் நோக்குடன்

கும்பகோணம் பெரிய வீதியில்
குவிக்கும் பெரிய வாணிக நிறுவனம்

முதலியார் கடை

NEW BENARES HALL

தொலைபேசி: 2177 தொலைவரி: "சீபி" [SEEPEE]

கிளை நிறுவனம்:

கற்பகம் அன் கோ.,
பட்டு அறுவை வாணிகம்,
177, காந்திசாலை, காஞ்சிபுரம்.

உரிமையாளர்: சி. பழநியப்ப முதலியாரும் உடன்பிறப்பாளரும்.

கோவைக்கு அழகு !
(அலங்காரம்)

"ஓட்டல் அலங்கார்"

Hotel Alangar

இன்பப் பயணிகள்
புதுமைப் பாங்கோடும்
பொதுளிய வளத்தோடும்
தங்குவதற்குச் செப்பமான
உயர்நிலை உறையுள்

ஓட்டல் அலங்கார்

சிவசாமி சாலை — இராம நகர்,
கோவன்புத்தூர் — 9.

தொலைபேசி: **29263**
[6 வழிகள்]

தொலைவரி: "அலங்கார்"

மன்னார்குடியில்
ஆவினம் பொழியும் பாலைத் தொகுத்து
மன்னை மக்களுக்கும் சென்னை மக்களுக்கும்
வழங்கும் சிறந்த நிறுவனம்

மன்னார்குடி கூட்டுறவுப் பால் வழங்கு நிறுவனம்

டி. 848

மன்னார்குடி

தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு.

நிறுமிதம்: 1938

தி. ஆ. 1999-பைங்குனி-16 / 30—4—'68 } இல் பங்குத்தொகை: உருபா 76405

உறுப்பினர்: 3841

நாடோறும் பால் தொகுப்பு: 4000 இலிட்டர்

சீ. சாமிநாதக் கொத்தனார்
தலைவர்

கோ. வேங்கடேசன், C.S.R.
செயலாளர்.

துணைத் தலைவர்:

நெ. மா. சா. இராசகோபாலப் பிள்ளை

இயக்குநர்கள்:

தி. சுப்பிரமணிய ஐயர்,
சு. கோபாலகிருட்டிணப் பத்தர்,
கோ. விசுவநாதன்,
மா. முருகையப் பிள்ளை,
வை. கண்ணப்பன்.

இன்றைததற்கும் ஈடு கொடுப்பது
இந்தியாவில் மிகப் பெரிய கூட்டுறவு
வாணுள் காப்பீட்டு நிறுவனம்

ஒன்றியக் கூட்டுறவு வாணுள் காப்பீட்டுக் கூட்டு மன்றையம்

UNION CO-OPERATIVE INSURANCE SOCIETY LTD.

தலைமை அலுவலகம்: **பம்பாய்**

1967-ஆம் ஆண்டின் காப்பீட்டுக் கட்டண வருமானம் ஏறத்தாழ 2 கோடி உருபாக்கள்

தென்மண்டலப் பொறுப்புத் திறனுளர் :

திரு. எஃச். இராமலிங்கம் அவர்கள்

தென்மண்டல அலுவலகம் :

302, இலிங்கிச் செட்டித் தெரு

சென்னை—1

தொலைபேசி எண்கள் : **21011, 25515.**

பொறிகள் இங்கே:

கே. ஆர். தி. பொறித்துறை வாணிக மையம்

K. R. T. Engineering Mart

விசயபுரம் அஞ்சல் :: திருவாரூர்.

அ. பெ. 23 :: தொலைபேசி: 252

எங்களிடம் 'டீசல்' பொறிகளும், 'எல்டெச்சு', மின்விசைப் பொறிக் குழாய் இனங்களும், எண்ணெயில் இயங்குபொறிகளின் உறுப்புக்களும் கிடைக்கும்.

[இல்லத்துத் தொலைபேசி எண்: 445]

பொன் அணிகள் இங்கே:

தங்கம், வெள்ளி, பொன் அணிகளுக்குச் சிறந்த இடம்

கே. ஆர். தியாகராச பிள்ளை

காசுக் கடை

அ. பெ: 23 :: தொலைபேசி: 220

விசயபுரம் அஞ்சல் :: திருவாரூர்

விழி திறந்தென்ன? வழி இருந்தென்ன?
ஒளி இன்றேல் இருள் இருக்கும்;

அவ்வொளி வழங்குவது

தென் சென்னை மின்வழங்கு கூட்டு நிறுவனம்,

திருச்சிராப்பள்ளி—17.

மின்னாற்றல் வழங்குந் துறையில் ஈடு பட்டுள்ள எங்கள் நிறுவனம் பொதுமக்களது நம்பிக்கை, வாடிக்கைக்காரர்களது ஒத்துழைப்பு எனும் இரண்டு அடிப்படைகளில் கட்டப்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளாகத் தொழில் துறையும், சிற்றூர்களில் விளக்கும் வேளாண்மை நீரேற்றுகளும் வளர நாங்கள் பணிபுரிந்து வருகின்றோம்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்:

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், தலைவர்.
திரு. வி. இராமையா, துணைத் தலைவர்.

ஆளுகை உறுப்பினர்கள்:

டாக்டர். தி. கே. அரங்கநாதன், பி. ஏ., எல். எம். எஃச்.,
திரு. ஆர். வேணுகோபால் ரெட்டியார், "பர்மா செல்" முகவர்.
திரு. பி. சேக் முகையதீன், கட்டிட அறிஞர்.
திரு. கே. எ.:ச். வெங்கு, மாயூரம்
திரு. சி. இராமனுதன், எம். ஏ., பி. எல்.
டாக்டர் எ.:ச். சுப்பிரமணியம், பி. ஏ., எம். பி., பி. எஃச்., பீ. டி. டி.
திரு. சி. மு. அரு. நா. அருணசலஞ் செட்டியார், காரைக்குடி.
திரு. எ.:ச். கே. இராமசாமி, பி. ஏ., எம். ஐ. ஈ.
திரு. எ.:ச். விசுவநாதன், பி. ஏ., பி. எல்.

பொறுப்பு முகவர்:

சேசசாயி பிரதர்சு பிரைவேட் லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி—17.

உலக அமைதியின் சின்னம் புரு
வீட்டு அடுப்புக்கு நற் சின்னம்

'புரு' தீப்பெட்டிகள்

மழைக் காலத்திலும்
பனிக் காலத்திலும்
பற்றவைத்ததும்
பளிச்சிட்டு எரியும்

சிறந்த தீப்பெட்டிகள் புருச் சின்னமுள்ளவை

ஆச்சுவிப்போர் :

'லோட்டசு' தீப்பெட்டித் தொழிற்சாலை

THE LOTUS MATCH WORKS,

அஞ்சற் பெட்டி எண் : 52

சிவகாசி.

தொலைபேசி : 187 — தொலைவரி : "LOTUS"

கப்பல், சீருந்து முதலிய யாவற்றிற்கும்
நெருப்பால், தற்செயலால் நேரும் கேட்டிற்குத்
தப்பாமல் ஈடு கொடுக்கும் நிறுவனம்:

பொதுவள ஈட்டுறுதிக் கூட்டு நிறுவனம்

THE COMMONWEALTH ASSURANCE Co. Ltd.,

பதிவு அலுவலகம்: **பம்பாய்.**

தமிழ்நாடெங்கும்
கிளை அலுவலகங்களையும்
முகவர்களையும் கொண்டு
நற்பணி ஆற்றுவது.

கிளை அலுவலகம்:

67, அங்காடித் தெரு,
காரைக்கால்.

வேளாண்மையில் ஒரு புதிய திருப்பம்!

உழைப்பை எளிதாக்கி

விளைச்சலைப் பெருக்குவது

KRISHI 'DIESEL' TILLER



வழங்குநர்:

புதுவை மாநிலம்:

எம். ஓ. அசன் குத்தூசு மரைக்காயர்,

19, நேரு தெரு, காரைக்கால்.

யூபியா அக்ரோ நிறுவனம்,

10, முதற்கடற்கரைச் சாலை,

நாகப்பட்டினம்.

மெய்யில் பாங்கிருக்கக்
கையில் கொள்ளும் 4 மருந்துகள்

உண்மையான

தொலை பேசி எண் : 373

1. தென்னை மரக்குடி எண்ணெய்

சுளுக்கு, எலும்பு முறிவு, மூட்டு நழுவுதல், மூச்சுப் பிடிப்பு, அடிபட்ட வீக்கம், பித்த வெடிப்பு, சேற்றுப் புண் முதலிய தோல் பிணிகளுக்குக் கைகண்ட மருந்து.

தேவகல்ப

தொலை வரி : "சற்குரு"

2. தென்னை மரக்குடிச் சூரணம்

வயிற்றுவலி, புரட்டல், பல்வலி, தொண்டைப்புண் முதலியவற்றிற்குக் கைக்கொள்ளும் சுண்ணம்.

அமிழ்த சஞ்சீவி

3. நீராடு தைலம்

தோல் மெருகுக்கும் உடல்நலத் திற்தும் கையேந்தத்தக்க தைலம்.

பஞ்ச தீபாக்கினி

4. இஞ்சி இலேகியம்

பித்த மயக்கம், பித்த ஏப்பம், பசியின்மை முதலியவைகளுக்குக் கையாளும் ஊட்டம்.

ஆக்குவிப்போர் :

R. S. KRISHNA & Co.,

ஆர். எஸ். கிருட்டிண தொடர்பு நிறுவனம்

மாயூரம்.

இப்பெயர் உள்ளதா எனக் கவனித்து வாங்குக!
போலிகளை வாங்கி ஏமாற வேண்டாம்.

சங்க

இதழ்

நாகைத் தமிழ்ச் சங்கம்

நாகப்பட்டினம்



புகழுடம்பில் மிளிரும்

அறிஞர் அண்ணா

அவர்களது

பாராட்டுரை.

நாகையில் தமிழ்ப் பற்று வளர்ச்சியுற்றுப்
பொலிவு பெற நற்காரியம் நோக்குடன்
நடத்தப்பட்டுவரும் தமிழ்ச் சங்கத்தைக்
கண்டு களிக்கவும், அவையோரைச் சேர்ந்து
மகிழ்ந்திடவும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது.
நல்லோர் பலரின் மனம் மகிழும் வண்ணம்
நடத்தப்படும் இந்த அமைப்பு மேலும்
நல்ல வளர்ச்சி பெற்றுத் திகழ்ந்திடத் தக்க
பொலிவும் உற்சாகமும் அளித்திட
தமிழ்ச் சான்றோர் முன்வர வேண்டுகிறேன்.
சங்கத்தின் தமிழ்த் தொண்டுக்கு என்
உளம் கனிந்த பாராட்டுகள்.

அன்பன்
அண்ணாதுரை
18/4/65.

நாகைத் தமிழ்ச் சங்க
மறைமலையடிகளார் நினைவுமலர்

சங்க இதழ்

உள்ளுறை

நாகைத் தமிழ்ச் சங்க வரலாறு

நாகைப் புலவர் வரலாறு

— திரு. **இரா. ஆதிகேசவன்** அவர்கள்

நலம்சிறந்த நாகர்ப்பட்டினம்

— **"சேரமான்"**

பாவேந்தர் தமிழ் அரங்கு

— **நாகைப் புலவர்கள்.**

— உள்ளாட்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு **மா. முத்துசாமி** அவர்கள்
தலைமைக் கருத்துரை.

ஒரு குறள் பட்டி அரங்கு

— **தமிழ்ச் சங்கப் புலவர்கள்**

— சட்ட மன்றத் தலைவர் மாண்புமிகு
புலவர் கா. கோவிந்தனுர் தீர்ப்புரை.

குறளீற்று வெண்பா அரங்கு

— **புலவர் வகுப்பு மாணவர்கள்.**

சொற்பட்டி

நன்றி

நாகைத் தமிழ்ச் சங்க வரலாறு

திருவள்ளுவர் ஆண்டு 1988 ஆவணித் திங்களில் ஒரு ஞாயிற்றுக் கிழமை; இளஞாயிறு அடிவானத்தில் வழி திறந்து, மக்களின் விழி திறந்து கொண் டிருந்தான். இரண்டு 'சாமியார்கள்' வந்தனர். வந்தவர்கள் நலம் உசாவிய பின் ஒரு தமிழ் இள ஞாயிற்றைப் பற்றிக் கூறினர்.

'தனித்தமிழை வளர்த்த மறைமலை அடிகளார் இந்த நாகை நகரிற் பிறந் தவர்' என்பது உங்களுக்குத் தெரியுமோ என்றனர். செவியுற்றவனை வியப்பு இறுகப் பிடித்தது. ஓராண்டுக் காலமாக மறைமலையடிகளார் பற்றிய தடம் ஏதும் இந் நாகையில் தென்படுகிறதா என்று தேடி வருபவன் செவியுற்றவன். இவ னுக்குக் கிடைத்தது நாகை மேலச் சாலையில் ஒரு கொல்லையின் வேலி மேல் ''மறைமலையடிகள் சிரங்கு எண்ணெய்'' என்று எழுதப்பட்டிருந்த ஒரு விளம்பரப் பலகைதான். அதனையும் படிப்பதற்குத் தலையை நான்கைந்து கோணங்களில் திருப்பியாக வேண்டும். அவ்வாறு சொற்கள் பிய்க்கப்பட்டும் பிளக்கப் பட்டும் எழுதப்பட்டிருந்தன.

இந் நிலையெண்ணிக் கவன்றிருந்தவ னுக்கு மறைமலையடிகள் நாகையிற் பிறந்தவர் என்று நினைவிற் கொண்டுள்ள இருவரைக் கண்டதால் வியப்பு இறுகப் பிடித்தது என்பதைவிடக் கவ்விக் கொண்டது என்றே கூறலாம்.

புலவர் பயிற்சி.

தமிழக அமைச்சர்
மேதகு ஏ. கோவிந்தசாமி அவர்கள்
மகிழ்ச்சி

இங்குத் தமிழ்ப் பற்றுள்ள அன்பர் கள் புலவர் தேர்வில் வெற்றி பெறப் பயிற்சி அளிக்கப்படுவதை அறிந்தும், ஏழை எளிய வெளியூர் மாணவர்க்கு உணவு விடுதி நடத்துவது அறிந்தும் மகிழ்ச்சி அடைந்தேன். வெல்க இவர்கள் முயற்சி!

— ஏ. கோவிந்தசாமி.

வந்த 'சாமியார்க'ளில் ஒருவர் திரு. ஆ. நாராயணசாமியார்; மற்றையவர் திரு. பெ. கோவிந்தசாமியார். பேச்சின் முடிவு மறைமலையடிகளுக்கு நாகையில் ஒரு பெருவிழா எடுப்பதாகியது. நகரத்து வணிகப் பெருமகனர் திரு. நா. வீ. காயாரோகணனர் அணுகப்பட்டார்கள். ஆர்வச் சொற்கள் ஊக்கின. அடுத்தொரு ஞாயிற்றில் திரு. நா. வீ. கா. அவர்கள் இல்லில் நகரத் தமிழார்வலர்கள் கூட்டப்பட்டனர். விழாக்குழு அமைக்கப்பட்டது. குழுவினர் விரைந்து பணியாற்றினர்.

சங்கத்து வித்து.

தி. ஆ. 1988-ஐப்பசி-18 ஆம் நாளுக்கு நேரான 3—11—1957 இல் மறைமலையடிகளார் நினைவு விழா, நாகை நாட்டுயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்தது. ஐயாயிரத்திற்கு மேல் தமிழ்ப் பேரன்பர்கள் குழுமினர். நாகை நகராட்சியின் அந்நாள் தலைவர் திரு. அ. மு. பொ. திருவம்பலம் அவர்கள் விழாவைத் துவக்கிவைக்க, அருட்டிரு குன்றக்குடி அடிகளார் தலைமையேற்க,

நல்ல பணி.

திருமிகு சா. கணேசனர் வாழ்த்து

நல்ல பணிபுரியும்
நாகைத் தமிழ்ச்சங்கம்
தில்லைப் பெருமான்
திருவருளால் — பல்லூழி
கன்னித் தமிழேயோ,
கம்பன் கவியேயோ
என்னப் பொலிக
இனிது !

— சா. கணேசன்.

டாக்டர் மா. இராசமாணிக்கனர் 'சங்க காலத் தமிழர் வாழ்'வை விளக்கினர்கள். இவ் விழாவில் நாகை அருட் பாவலர் அழகுமுத்துப் புலவரால் பாடப்பட்ட 'திறப்புகழ்' என்னும் நூல் வெளியிடப்பட்டது. (அழகுமுத்துப் புலவர் திரு. நா. வீ. கா. அவர்கள் குடும்ப மூதாதையர். திரு. 'கா' அவர்களது அறக்கட்டளையால் இந்நூல் இலவய வெளியீடாக வெளியிடப்பட்டது) நாகைத் தமிழன்பர்களது பேரார்வம் பொங்கிக் கொண்டிருந்தமை இவ் விழாவால் பளிச்சிட்டது என்னலாம். இந் நிகழ்ச்சியே நாகைத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றத்திற்கு வித்தாயிற்று. இவ் விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் திறந்து வைக்கப்பட்ட மறைமலையடிகளார் திருவுருவப் படம் வித்துக்கு உரமிட்டது என்னலாம். மலையடிகளைக் குன்றத்து அடிகள் திறந்த நிகழ்ச்சி ஒரு வரலாற்று நிகழ்ச்சி மட்டுமன்றித் தொடர் நிகழ்ச்சியாகவும் ஆயிற்று.

நாகைப் பெருமக்கள் பலரும் இவ்விழாவைப் பாராட்டினர். இது போன்று தமிழ் விழாக்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட வேண்டுமென்னும் தம் பேரார்வத்தை வெளிப்படுத்தினர்; பலர் தூண்டினர்; சிலர் வலியுறுத்தினர். குறிப்பாகத் திரு நா. வீ. கா. அவர்கள் பேருக்கங் கொடுத்தனர். இதை எழுதும் எளிய தமிழாசிரியனும் அரிய அப் பெருவணிகருமான இருவரும் அமைப்பாளர்களாய்க் கைச்சான்றிட்ட சங்க அமைப்பு வேண்டுகோள், அச்சிதழ் உருவில் விடுக்கப்பட்டது. தமிழன்பர்கள் முன்னின்று முனைந்தனர். பத்து நாள்களில் நூற்றுவர்க்கு மேல் உறுப்பினராக இசைவளித்தனர்.

சங்கம் சூல் நிறைந்தது.

திரு நா. வீ. கா. அவர்கள் குடும்ப அறமனையாகிய வீரப்பச் செட்டியார் அறமனையில் உறுப்பினர் கூடினர். 'நாகைத் தமிழ்ச் சங்கம்' என்னும்

நாகைத் தமிழ்ச் சங்கச் செயற்குழு

தலைவர் :
திரு இரா. தம்பையா நாயடவர்கள்
பி. ஏ., பி. எல்.

பொருளாளர்:
திரு நா. வி. காயாரோகணஞ் செட்டியார்
பெருவணிகர்

நாகைத் தமிழ்ச் சங்கச் செயற்குழு

துணைத்தலைவர்கள்

திரு க. காளிமுத்து அவர்கள்
எம். ஏ., பி. எல்.

புலவர் வை. மு. சண்முக தேசிகர்
அவர்கள்

செயலினர்:

திரு நா. ஆ. நாராயணசாமி அவர்கள்
பெருவணிகர்



திரு இரா. கல்யாணசுந்தரம் அவர்கள்
பொது வாணிகம்

நாகைத் தமிழ்ச் சங்கத்துப்

பத்தாண்டுகளில் இருபது பணிகள்.

முதற் பத்து

வகுப்புகள் :

1.	இலக்கிய வகுப்பு	தமிழ்ச் சங்கத்தின்		சுவைச் சின்னம்
2.	புலவர் வகுப்பு	,,	,,	கட்டளைப் பட்டயம்.
3.	மேடைத் தமிழ் வகுப்பு	,,	,,	நிலவொளி.
4.	சிறுர் இலக்கிய வகுப்பு	,,	,,	பொன் புதையல்.

கூட்டங்கள் :

5.	இலக்கியப் பொதுக்கூட்டம்	தமிழ்ச் சங்கத்தின்		புகழ் முத்திரை.
6.	இலக்கிய உட் கூட்டம்	,,	,,	அடக்கப் பெட்டகம்.

தமிழ்த் தெளிவுகள் :

7.	ஐயப் பேழை	தமிழ்ச் சங்கத்தின்		தெளி சுனை.
8.	சொற்பட்டி வெளியீடு	,,	,,	ஒளி விளக்கம்.
9.	பிழை திருத்த அறிவிப்பு	,,	,,	மலர்க் கைகாட்டி.
10.	திருவள்ளுவர் 2000 குறளட்டை வெளியீடு	,,	,,	பெருமைப் பூண்.

பெயரில் தமிழ்ப் பணியாற்றும் பொது நிறுவனம் ஒன்றை நிறுவி நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. திரு. அ. மு.பொ. திருவம்பலம் தலைவராகவும், இதனை எழுதுவோன் அமைச்சனுகவும், திரு நா. வீ. கா. அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட 25 செயற்குழுவினரினின்றும் துணைத் தலைவர்களாக மருத்துவர் ப. மு. சொக்கலிங்கனும் வழக்கறிஞர் க. காளிமுத்து அவர்களும், செயலினராக, திரு. நா. வே. புருடோத்தமன் எம். ஏ. அவர்களும் திரு இரா. ஆதிகேசவன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்க விதிகள் உருவாயின. சங்கத்தின் பணிமனையாக வீரப்பச் செட்டியார் அறமனையினைப் பயன்படுத்திக்கொள்ள திரு நா. வீ. கா. அவர்கள் பெருமனதுடன் முன் வந்து இசைவளித்தார்கள்.

சங்கம் பிறந்தது.

தி. ஆ. 1988–மார்கழி-8 (23-12-1957) இல் சங்கப் பணிமனையில் துவக்க விழா அடக்கமாக நிகழ்ந்தது. சங்கத் தலைவர் தலைமையேற்க, நாகைப் புலவர் பெருமக்கள் வாழ்த்தினர். உறுப்பினர்கள் வழங்கிய பலவகை நூல்களைக்கொண்ட மறைமலையடிகளார் நூல் நிலையம் விழாவில் திறக்கப்பட்டது. இவ்விழாவில் ‘திறப் புகழ்’ நூல் உறுப்பினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டமை நல்ல அறிகுறியாக அமைந்தது. பொதுப் படிப்பகம் ஒன்றமைக்கப்பட்டது. மறைமலையடிகளார் விழாவில் திறக்கப்பட்ட அடிகளார் திருவுருவப்படம் சங்கப் பணிக் கூடத்திற்கு அணியாயிற்று. அடிகளார் நினைவென்னும் தென்றல், தமிழ் மணம் கமழ, நாகையர் மனமென்னும் மலர்களில் தவழ்ந்தது. தொடர்ந்து பல பணிகள் தளிர்த்தன. பத்தாண்டுகளில் இருபது துறைப் பணிகளாகத் தழைத்தமை, குறித்துக் களிக்கத் தக்கது; அறிந்து மகிழவும் உரியது.

முத்திரை, முழக்கம், பதிவு.

நாகைத் தமிழ்ச் சங்கத்திற்கெனக் குறிக்கோள் விதிகளும், பொது விதி

களும் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. சங்க முத்திரையொன்று, கருத்தமைந்ததாய்ப் பின் வருமாறு உருவாக்கப்பட்டது. முக்கால் வட்டத்தில் நடுவில் நிலைப்பு அமைப்பில் கலங்கரை விளக்கம் குறிக்கப்பட்டது. நாகை நகரைக் குறிப்பது அது. அவ்விளக்க உருவின் இடப் பக்கத்தில் இயற்றமிழைக் குறிக்க ஏடும் நூலும், இசைத் தமிழைக் குறிக்க யாழும், வலப்பக்கத்தில் கூத்துத் தமிழைக் குறிக்கச் சிலம்பும், அறிவொளியைக் குறிக்க விளக்கும் குறிக்கப்பட்டன. வட்ட விளிம்பு இடைவெளியில் சங்க முழக்கத்தொடர் குறிக்கப்பட்டது. வட்ட அடித்தளத்தில் நாகைத் தமிழ்ச்சங்கம் எனக் குறிக்கப்பட்டது. இவ்வமைப்பு சங்க முத்திரையாக நிறைவேற்றப் பட்டது.

சங்க முழக்கத் தொடராக,

" மனத்துக்கண்
மாசிலன் ஆதல்
அனைத்தறன் "

என்னும் திருவள்ளுவப் பெருந்தகையின் பொருள் செறிந்த தொடர் கொள்ளப்பட்டது.

கேட்கும் கலையில் பயிற்சி.

தலைமை அறநடுவர் எ.்.ச். மகராசனார் பாராட்டு.

ஆர்த்த அவை நூற்றொருவர் என்றபடி இலக்கியக் கூட்டத்துக்கு வந்தவர்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப் புலமையும் பற்றும் நுண்ணறிவும் பெற்றவர்கள் என்று தெரிந்து கொண்டேன். இப்படியெல்லாம் கேட்கும் கலையில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்த தமிழ்ச் சங்கத்தைப் பாராட்டுகிறேன். பல்வேறு ஆக்கத் துறைகளில் இச்சங்கம் உருப்படியான பணியைத் திருத்தமாகச் செய்து வருகிறது.

— எஸ். மகராசன்.

இவ்வமைப்புக்களோடு சங்கம் தி. ஆ. 1996 - வைகாசி-20 (5—6—1965) இல் சங்கங்களின் பதிவு விதி 21/1960 இன் படி 1965 இன் தொடர் எண் 5 ஆகப் பதிவு செய்யப்பட்டது.

மறைமலையடிகளார் நூல் நிலையம்.

மறைமலையடிகளார் பெயரில் அமைந்த இந்நூலகத்தில் சிறந்த நெறித்துணை (Reference) நூல்களும், பலவகைத் தொகுதிகளும், திருக்குறளின் பல பதிப்புகளும், பிற நூல்களுமாக 1090 தமிழ் நூல்களும், 102 ஆங்கில நூல்களும் உள்ளன. இந்நூலகம் உறுப்பினர் நூலினைப் பெற்றுச் சென்று பயன் பெறவும், ஏனைய அன்பர்கள் சங்கத்தில் வந்தமைந்து பயன்பெறவுமாக அமைந்தது. அன்பளிப்பாகவும் விலைக்குப் பெற்றும் நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மூன்று நிலைப் பேழைகள் நிறைய நூல்கள் உள. இவற்றில் ஒரு நிலைப்பேழை, நிறைந்த நூல்களுடன் இன்றையச் சங்கச் செயலாளர் திரு ஆ. நாராயணசாமி அவர்களால் அன்பளிப்பாகத் தன் இல்லக் கிழத்தியார் பெயரில் வழங்கப்பட்டது. சங்கத்தின் மூன்றுவது ஆண்டில் நூல்நிலைய வாரம் ஒன்று கொண்டாடப்பட்டது. அவ்வாரத்தில் அன்பர்கள் பலரிடமிருந்தும் நூல்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டன. நூல்கள் துறைகளாக வகை செய்யப்பட்டுப் பகுப்புக்களாகத் தக்க குறியீடுகளுடன் பதியப் பட்டுள்ளன. ஓலைச் சுவடிகளும் சில உள.

பொதுப் படிப்பகம்.

பொதுமக்கள் பயன்கொள்ளும் வகையில் இப் பொதுப்படிப்பகம் நாளிதழ், கிழமையிதழ், திங்களிதழ், ஆண்டு மலர் ஆகியவற்றைக் கொண்டு இயங்குகின்றது. அலுவல் நேரமாகிய காலை மணி 8 முதல் 12 : மாலை 4 முதல் 8 வரை பயன்படுகிறது. இதனை நன் முறையில் பெருக்கத் திட்டமுள்ளது.

இலக்கிய வகுப்பு.

இலக்கியத்தை உணர்ந்து சுவைக்கவும், தெளிந்த வாழ்வியல் நெறிகொள்ளவும் இலக்கிய வகுப்பு இன்றியமையாதது. இதனை உணர்ந்த உறுப்பின அன்பர்கள் பலர் வகுப்பொன்றினை நிகழ்த்த வேண்டுமென விரும்பினர்; வேண்டினர். அரும்பியது திருக்குறள் வகுப்பு. தி. ஆ. 1989 - தை - 5 (19—1—1958) இல் வகுப்பு துவங்கப்பட்டு ஞாயிறுதோறும் தொடர்ந்து மூன்றாண்டுகளில் நிறைவேறியது. தொடர்ந்து 15 அன்பர்கள் பயின்று பயன் கொண்டனர். அடுத்துச் சிலப்பதிகார வகுப்பு புதுமையான திட்டத்துடன் துவக்கப்பட்டது. தி. ஆ. 1996 புரட்டாசி - 4 (19—9—1965) இல் நிகழ்ந்த மறைமலையடிகளார் நினைவு விழாவில் அருட்டிரு குன்றக்குடி அடிகளார் தலைமைப் பேற்றுடன் சங்க அமைச்சரது 'மணியான பேச்சு' என்னும் தலைப்புச் சொற்பொழிவுடன் சிலப்பதிகார வகுப்பு தொடங்கியது. தொடர்ந்து ஞாயிறுதோறும் சங்கப் பணிக் கூடத்தில் ஒன்பது சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அப்பொழிவுகளால் சிலம்பின் வளமான கருத்துக்கள் ஆய்வுரையுடன் புகட்டப்பட்டன. அதைத் தொடர்ந்து பாடப் பயிற்சி அளவில் ஞாயிறுதோறும் வகுப்பு நிகழ்ந்தது. இடையே இசை, கூத்துப் பகுதிகளைக் கும்பகோணம் பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனார் விளக்கிப் பத்து வகுப்புக்கள் நடத்தியுதவினார்கள். வகுப்பில் புலவர்களும் தமிழன்பர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். புகார்க் காண்டம் வரை நிகழ்ந்துள்ளது. பலபணிகளால் இடையீடு பட்டுள்ள இவ் வகுப்பு தொடர்ந்து நிகழும். பாடப்பயிற்சி முறையில் நூல் முடிந்ததும் பத்து வகுப்புக்கள் ஆராய்ச்சி வகுப்புக்களாக அமையும். இவ்வகையில் இவ் வகுப்பு நிறைவுறும்.

ஐயப் பேழை.

வகுப்பின் வாயிலாக இலக்கியத்தைச் சுவைக்க அடித்தளம் பெற்றுத் தனியே சுவைக்குங்கால் எழும் ஐயங்களைப் போக்கிக் கொள்ள வேண்டுமன்றோ? அதற்கொரு ஏற்பாடு செய்யப்பட்டது. இலக்கிய, இலக்கணம் வல்ல புலவர்கள் தாம் இன்புறுவதை உலக மக்களும் இன்புறக் காணுமாறு அவர்கட்கும் இலக்கியத்தை ஐயமிட்டு உண்ண வேண்டும். இலக்கியத்தைப் பொறுத்தவரை ஏற்பது இகழ்ச்சியாகாது. உடையார்முன் இல்லார்போல் ஏக்கறுதல் வேண்டுமன்றோ! ஏக்கறுவோரது ஐயம் போக்கவும், உடையார் ஐயமிட்டு இலக்கியத்தை உண்பிக்கவுமாக ஒரு மரப்பேழை, உண்டி வாய் உள்ளதாய்ச் சங்கத்தில் அமைக்கப்பட்டது. அன்பர்கள் எழும் ஐயங்களை வினாமுறையில் மூன்றிற்கு மேற்படாமல் குறித்து அப்பேழையில் இடுவர். விடை வாயிலாக விளக்கம் பணிக்கூடத்தில் எழுதி அறிவிக்கப்படும். விரும்பியோருக்குத் தனியே அஞ்சலிலும் அனுப்பப்பட்டது. விடைகள் பல கட்டுரைகளாகவே அமைந்தன.

தகைமை நிரம்பியது.

திருமிகு கி. வா. சகந்நாதனார்
சீர் வாழ்த்து.

தமிழைப் பரப்பும் வகைபலஅத்
தகைமை யெல்லாம் நிரம்பப்பெற்
றிமிழ்ஞா லத்தில் நூலறிவை
எளிதிற் பெறுமா றாக்கினரால்
அமிழ்தை உண்டோர் அறியாத
அழகுத் தமிழின் வளம்ஈந்தார்
குமிழ்சீர் நாகைத் தமிழ்ச்சங்கம்
குன்றே போல ஓங்குகவே.

— கி. வா. ஜகந்நாதன்.

வெளியூரினின்றும் அன்பர்களும் புலவர்களும் தொடர்புகொண்டு பயன்கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட வினக்களுக்கு விடையளிக்கப்பட்டுள்ளன. இது போது அப்பேழைக்கு ஓய்வு தந்துளர். 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்' ஆகியுளர் என்றும் கொள்ளலாம் போலும்.

இலக்கியப் பொதுக் கூட்டங்கள்.

வகுப்பு நடத்துவதும் ஐயங்களைப் போக்குவதும் ஒரு சிலருக்கே பயன் விளைப்பனவாகும். நகரத்துப் பெருமக்களெல்லாம் தமிழ்ச் சுவை பெறுதல் வேண்டுமென்பதே இந்நிறுவனம் தோன்றுதற்கு அடிநிலையாதலின் இலக்கியப் பொதுக் கூட்டங்களை நிகழ்த்துவதில் முனைதல் இன்றியமையாத பணியாகியது. இப்பணி நிறைபயன் தந்தது. ஒரு புதுமையைத் தோற்றுவித்தது. முறையாக முனைந்து, செவ்வையாகத் திட்டமிட்டு, செம்மையாகச் செயலாற்றி, ஒழுங்கோடு இயக்கி, மரபோடு நிகழ்த்தி, யாவர்க்கும் மன நிறைவோடு இவ்விலக்கியக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதனல் தமிழகமெங்கும் நாகைத் தமிழ்ச் சங்கம் நல்லறிமுகம் பெற்றுத் திகழ்கிறது என்னலாம். அமைப்பான அச்சிதழ் அழைப்பு அறுநூற்றுக்கு மேல் வழங்கப்படும். பிற பொது விளம்பரங்கள் செய்யப்படும். நாளிதழ் உள்ளே வைக்கப்பட்டுத் துண்டு விளம்பர இதழ்கள் அனுப்பப்படும். தெளிந்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவழைக்கப்படுகின்றனர். குறித்த நேரத்தில் கூட்டம் துவங்கும். தெரு வெளியரங்கில் பருகுவதன்ன ஆர்வத்தராய் மக்கள் கூடுவர். உள்ளம் நிறையத் தமிழ்ச்சுவை விருந்தாகும். முனைந்தோர், கேட்டோர், வழங்கினோர் யாவரும் மனம் நிறைவுறுவர். இத் தகுதியோடு ஆண்டிற்கு நான்கிற்குக் குறையாமல் கூட்டங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்று மறைமலையடிகளார் நினைவு விழாவாகும். ஆண்டுதோறும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆரா அருளுடன் வருகை தந்து தெளிந்த சுனைத் தேன் போன்ற கருத்துக்களை வழங்குவார்கள். அவர்கள் சங்கத்தின் பால் கொண்ட நீங்கா அருளால் எச்சிறு செலவும் சங்கத்திற்கு நேராமல் தம் பொறுப்பிலேயே வருகைதந்து அருளும் பாங்கு எண்ணி இறும்பூதெய்துதற் குரித்து. மற்றும் தமிழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்களும், முதுபெரும்புலவர்களும் பேரறிஞர்களும் வருகை தந்து சிறப்பித்துளர். இக்கூட்டங்கள் நேரத்தில் மணித்துளி தவருமல் துவங்குவது ஒரு பதிந்த நெறி; கூட்டம் நடக்கும் மாலை ஒரு இலக்கிய வேளை; அணிவிக்கப்படும் மல்லிகை மாலையும் ஒரு தனிப் பாங்குடையது. வரவேற்புரை ஒரு நடைமுறை இலக்கியம் என்பர். தலைமையுரை ஒரு தகுதிப்பாடு. சொற்பொழிவு கருத்து மணத்தின் கமழ்வு. நன்றியுரை ஒரு கருத்துச் சுருக்கம். இவ்வாறு பட்டியலிடுவது உண்மையை உள்ளபடி அறிவிப்பதாகும்.

சொற்பட்டி.

இலக்கியப் பொதுக்கூட்ட அச்சு அழைப்பிதழின் முன் பின் பக்கங்களில்

அரிய நூல்கள்.

முதுபெரும்புலவர் ஆறுமுக நாவலர் பாராட்டு.

இச்சங்கத்தில் அரிய நூல்கள் பல நூல் நிலையத்தில் உள்ளன. மறைமலையடிகளின் பெயரால் இது அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் புலவர் பலரைப் பாராட்டும் முறையில் அவர்களது உருவப் படங்கள் மிளிர்கின்றன. இச்சங்கம் பல முறையில் இணையிலாப் பணிகள் புரிவதைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

— ஆறுமுக நாவலர்.

நாகைத் தமிழ்ச் சங்கத்துப்

பத்தாண்டுகளில் இருபது பணிகள்.

இரண்டாம் பத்து

	நெறித்துணைப் பணி :		
1.	நூல் நிலையம்	தமிழ்ச் சங்கத்தின்	கருத்துக் கருவூலம்.
2.	பொதுப் படிப்பகம்	,, ,,	அறிவுத் தூண்டுகோல்
	வாழ்வியல் பணி :		
3.	திருமணத்திற்கு இல்லம் நல்கல்	தமிழ்ச் சங்கத்தின்	மணக்கும் படி.
4.	அட்டிற் கலங்கள் வழங்கல்	,, ,,	நட்புத் தேன்.
5.	வாழ்த்தும் பாராட்டும்	,, ,,	ஆர்வ மலர்.
6.	சுற்றுலா ஏற்பாடு	,, ,,	உவகை ஏணி.
	கல்விப் பணி :		
7.	மாணவர் கேடயம்	தமிழ்ச் சங்கத்தின்	ஊக்கத் திறவுகோல்
8.	இலவய மாணவர் இல்லம்	,, ,,	அருள் அருவி.
	நன்றிக் கடன் :		
9.	புலவர் திருவுருவப் பட அமைப்பு	தமிழ்ச் சங்கத்தின்	கடப்பாட்டுக் கல்.
10.	மறைமலையடிகளார் சிலை நாட்டல்	,, ,,	வெற்றித் தூண்.

கூட்ட விவரம் இடம்பெற்றது. உள்ளிரு பக்கங்கள் சொற்பட்டிக்காகப் பயன் படுத்தப்பட்டன. தமிழ் ஆட்சிமொழி யாகியுள்ளமை அறிந்து யாவரும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதற்கு உதவி யாக ஆங்கிலச் சொற்களுக்கும், வட மொழிச் சொற்களுக்கும் ஏற்ற தமிழ்ச் சொற்கள் பட்டியலிடப்பட்டு அறிவிக்கப் பட்டன. இவ்வகையில் வாணிகத் தமிழ், கல்விக்கூடத் தமிழ், ஆட்சித் தமிழ், அலுவலகப் பெயர்த் தமிழ் எனப் பல பட்டிகள் அறிவிக்கப்பட்டன. இப் பட்டிகள் அமைந்த அழைப்புக்களை அன்பர்கள் பேணிக் காப்பதும், அழைப்பு கிடைக்காதோர் வேண்டிப் பெறுவதும் இப்பணியின் பயனை நன்கு தெளிவுறுத்தின. பல அலுவலகத் தாரும் சங்கத்தை அணுகித் தம்பால் ஐயமெழும் சொற்களுக்குத் தமிழ் பெற்று உவந்தனர்.

உட்கூட்டங்கள்.

புலவர் திருநாள்களும் தமிழ்த் திரு நாள்களும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் கருதிய கூட்டமும் உட்கூட்டங்களாகச் சங்கப் பணிக்கூடத்தில் அவ்வப்போது நிகழ்த்தப்பட்டன. உள்ளூர்ப் புலவர் களும், அறிஞர் பெருமக்களும், எதிர் பாராது வருகை தருவோரும் நல்லுரை நல்கிச் சிறப்பித்தனர். உறுப்பினர் களுக்கு அச்சு அழைப்பிதழ் அனுப்பப் படும். பொது விளம்பரம் ஒன்றும் அமைக்கப்படும். இவ்வகையில் திருவள்ளுவர், சேக்கிழார், கம்பர் திரு நாட்களும், புத்தாண்டு, கலைமகள் நாட்களும் கொண்டாடப்பட்டன.

புலவர் வகுப்பு.

சென்னைப் பல்கலைக் கழகத் தனித் தமிழ்ப் புலவர் தேர்வுக்குத்

தனியே பயின்று தேர்வெழுத முனை வோருக்குப் புலவர் வகுப்பொன்றைத் துவங்க வேண்டுமென அன்பர்கள் வேண்டினர். அதற்கேற்ப, தி. ஆ. 1991 – சித்திரை - 1 (14-4-1960) தமிழ்ப் புத்தாண்டு நாளில் தமிழ்ப்புலவர் இடை நிலைத் தேர்வுக்குரிய வகுப்பு துவங்கப் பட்டது. சங்கத் துணைத்தலைவர் மருத் துவர் ப. மு. சொக்கலிங்கனார் பொறுப் பாட்சியில் சங்க அமைச்சனை ஆசிரிய ராகக் கொண்டு வகுப்பு நிகழ்ந்தது. தனியாரும் ஆசிரியப் பணிபுரிவோருமா கப் பலர் பயின்றனர். நகரத்துத் தமிழா சிரியர்கள் பலரும் பாடங்களைச் செவ் வனே ஆர்வத்துடன் நடத்தியுதவினர். தொடர்ந்து இறுதிநிலை வகுப்பு துவங்கப் பட்டது. தமிழ்ச் சங்க முதற் புலவராக மருத்துவச் சொக்கலிங்கனார் தம் அறு பத்து மூன்றாம் அகவையில் தேர்வெய் திப் பட்டம் பெற்றார்கள். கடந்த தேர்வு வரை பதினொருவர் தேர்வெய்தியுளர். தொடர்ந்து வகுப்புகள் நிகழ்கின்றன. நாடோறும் இரவு மணி 7 முதல் 9 வரை வகுப்பு நேரமாகும். வகுப்பிற்குக் கட்டணமில்லை. இப் புலவர் வகுப்பு விளைத்த பெரும் பயன் நாகையில் தமிழ்க் கல்லூரி தோன்றியதாகும். ஒரு வகுப்பின் துவக்கத்தைக் காணவந்த பெருநிலக் கிழார் திரு குரு. கனகசபைப் பிள்ளை யவர்கள் உள்ளத்தில் தமிழுக்கு நிலைப் பாக ஒன்று செய்யவேண்டும் என்னும் எண்ணம் கிளைத்தது. அவாவை அறி வித்தார்கள். இயன்ற அளவிலெல்லாம் உதவப்பட்டது. 'கனகசபைப் பிள்ளை தமிழ்க் கல்லூரி' தோன்றியது.

நிலையான தமிழ்த் தொண்டு.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனார் கருத்து.

ஆரவாரமற்ற முறையில் நிலையான தமிழ்ப் பணி செய்யும் இச்சங்கத்தார் முயற்சி வெல்வதாக! உள்ளத்தை வளர்ப்பதுடன் உடலையும் வளர்க்கும் முறையில் சிலருக்கு உண்டியும் உறையுளும் தந்து கல்வி கற்க உதவு வது சிறந்த பணியாகும்.

— அ. ச. ஞானசம்பந்தன்.

புலவர் திருவுருவப் படங்கள்.

புலவர்களை உருவாக்கும் பணிக்கு அடித்தளம் பழம் புலவர்களன்றோ! அப் பழம்பெரும் புலவர்களை நினைவு கூர்ந்து போற்றுதல் தகுதிக் கடப் பாடாகும். அதற்கேற்ப நாகைப் பகுதி யில் வாழ்ந்த புலவர்களது திருவுருவப் படங்கள் சங்கப் பணிக்கூடத்தில் அமைக் கப்பட்டன. திருவுருவம் அமர்ந்த தோற்றத்தில் – முழு உருவில் – ஒரே அளவில் புகைப்படமாக அமைப்பது மரபாகக் கொள்ளப்பட்டது. முன்னர்க் குறித்தாங்கு மறைமலையடிகளார் படம் அமைந்தது போன்றே, புலவர் பெரு மான் சதாசிவம் பிள்ளையவர்கள் படமும், நாகூர்ப் பெரும்புலவர் வா. குலாம் காதிர் நாவலர் படமும் அமைக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவப் பெருந்தகையாரின் இரு வகைத் தோற்றப் படங்களும் அமைக் கப்பட்டுள்ளன. தொடர்ந்து திருக்குறள் விருத்தி தண்டபாணிப் பிள்ளை, புலவர் அ. கோபாலய்யர், முத்துக்காயாரோக ணஞ் செட்டியார் முதலியோரது படங் கள் அமைக்கப்படும். இயற்றமிழாசிரியர் (மறைமலையடிகளார் ஆசிரியர்) திரு வுருவப்படம் எந்நிலையில் கிடைப்பினும் அன்பர்கள் தந்துதவுமாறு இந்நேரத்தில் வேண்டுகின்றோம். இது தமிழ்ப்புல மைக்கு நன்றிக் கடனாற்றும் பணியாகும்.

வாழ்த்தும் பாராட்டும்.

வாழ்ந்தோரைப் போற்றும் பணியோடு வாழ்வோரை வாழ்த்தும் பூரிப்பான

பணியும் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்ச் சங்க உறுப்பினர்க்கோ, செயற்குழு உறுப்பினரின் இல்லத்தார்க்கோ மங்கலம் நிகழின் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மங்கல வாழ்த்து அச்சிட்டு வழங்கப்படுகிறது. உறுப்பினரின் அறுபதாண்டு நிறைவு மணிவிழாவின் போதும். உறுப்பினர்களது நூல் வெளியீட்டு விழாக்களிலும் வாழ்த்து, பாராட்டுரைகள் வழங்கப்படுகின்றன. சங்கப் பொருளாளர் திரு நா. வீ. கா. அவர்களது அறுபதாண்டு மணிவிழாவின் போதும், சங்க அமைச்சர் மலைநாடு சென்று மீண்டபோதும் பாராட்டுக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. இருவரும் சங்கம் நிறுவ அமைப்பாளர்களாய் இருந்தமையால் இப் பாராட்டுக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டன போலும்.

இலவய மாணவர் இல்லம்.

தமிழ்ப் பணியோடு கல்விப்பணியும் இணைத்தாற்றப்படுகிறது. நாகை நகரிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பயிலச் சுற்றுப்புறச் சிற்றூர்களிலிருந்து மாணவர்கள் நாடோறும் வருகை தந்து மீள்கின்றனர். அவர்களில் எளிய மாணவர்கள் நடந்தே வந்து நடந்தே மீள்கின்றனர். அவர்களது இன்னலைத் துடைக்க விரும்பி இலவய மாணவர் இல்லம் துவக்கப்பட்டது. தி. ஆ. 1994 – ஆடி - 10 (1—8—1963) இல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் துவக்கியருளினார்கள். உயர்நிலைப்பள்ளிகளில் மேல் வகுப்புக்களில் பயிலும் சிற்றூர் மாணவரில் நாடோறும் நான்கு கற்களுக்குக் குறையாமல் நடந்து வந்து பயில்வோர் பதின்மருக்கு இடமளிப்பது இவ்வில்லம். நான்கு உயர்நிலைப்பள்ளிகளினின்றும் மாணவர்கள் தலைமையாசிரியர்களது பரிந்துரைக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மூன்று வேளை நல்லுணவும், தங்க-பயில நல்வாய்ப்பும் நல்கப்படுகின்றன. நெறியான ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப் படுகிறது. உடல் நலத்திற்கேற்ற உணவு நாளிட்டுப் பட்டியலிட்டுப் படைக்கப் படுகின்றது. சிறு தவறுயினும் மும்முறை செய்தோர் உடன் இல்லத்தைவிட்டு விலக்கப்படுவர். இவ்வில்லம் சங்கப் பணிமனையின் உள்ளிடத்தில் இயங்குகிறது. நகர்ப்பெருமக்கள் சிற்றூர்ப் பெருமக்கள்பால் நெல்லும் தொகையுமாக ஆண்டுதோறும் நன்கொடை பெறப்பட்டு இவ்வில்லம் இயக்கப்படுகிறது. அரசினர்பால் உதவிபெற்று மேலும் மாணவர் எண்ணிக்கையைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சங்கத்தைப் பார்வையிடும் பெருமக்கள் யாவரும் இப்பணியை வாழ்த்துவதுடன் இயங்கும் நெறிகண்டு உவந்தும் வியந்தும் உளந்திறந்து பாராட்டியுளர்.

மாணவர்க்குப் பரிசுகள்.

உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவரை ஊக்கும் வகையில் தமிழ்ப் போட்டிகள் கட்டுரையிலும், சொற்பொழிவிலும் நிகழ்த்தப்பட்டன. நாகை, நாகூர், மஞ்சட்கொல்லை உயர்நிலைப் பள்ளி மாணவர் கலந்துகொண்டனர். தக்கார்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆரவாரமில்லாமல் அடக்கப் பணி.

வியத்தகு மூதறிஞர் கோ. நு. நாயடு அவர்களது மகிழ்ச்சி.

நாகைத் தமிழ்ச் சங்கம் ஆரவாரமில்லாமல் அடக்கமாக நற்பணி புரிந்து வருவது கண்டு மிக்க மகிழ்ச்சி. கல்விக்காகத் தொலைவிலிருந்து வர வேண்டியிருந்த இளஞ்சிறுர்க்கு இருக்கையும் உணவும் உதவுவதுடன் நல்லொழுக்கப் பயிற்சியும் அளிப்பது சிறப்பு.

— ஜி. டி. நாயடு

இப்பள்ளிகளில் பயின்று அரசினர் பள்ளி யிறுதித் தேர்வில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்க்கு வெள்ளிக்கேடயம் வழங்கப்பட்டது. 'சுப்பையா நினைவுக் கேடயம்' என 'விட்டுணு பிஃச்கட் பாக்டரியார்' மூன்றுண்டுகள் வழங்கினர். இதுபோது 'மாரியப்பா ஏசன்சி'யார் 'மாப்பிள்ளைச் செட்டியார் நினைவுக் கேடயம்' என வழங்குகின்றனர். இக்கேடயம் மறைமலை யடிகளார் நினைவு விழாவின் போது வழங்கப்படுகிறது.

சிறுவர் இலக்கிய வகுப்பு.

குழந்தைகளின் பிஞ்சுள்ளங்களில் இலக்கிய உணர்வை ஊன்றின் அவர்கள் செல்நெறி செந்நெறியாக அமையும். அவ்வமைப்பு தமிழ் மன்பதைக்கே நற் பாதுகாப்பாகும். இது கருதியன்றோ பாரதியார் "சிறியரை மேம்படச் செய் தால், பின்பு தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்" என்று பாடினர்!

சிறியரை மேம்படச் செய்யச் சிறுர்க் கான இலக்கிய வகுப்புப் பணி மேற் கொள்ளப்பட்டது. தமிழ்த் திருநாட் களில் அவ்வகுப்புக்கள் நடத்தப்பட்டன. பயிற்றற்கேற்ற நூல் கையேடாக அச் சேற்றப்பட்டு இரண்டு நாட்கள் முன் கூட்டியே உறுப்பினர்தம் இல்லங்கட்கு அழைப்புடன் அனுப்பப்பட்டது. இல்லத் துச் சிறுர்கள் படித்துப் பார்த்துக் கையேட்டுடன் வகுப்புக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். பொதுவிலும் அறிவிப்பு செய்யப்பட்டது. பெற்ரோரும் உடன்வந்து அமைந்து மழலையர்தம் பயிற்சி கண்டு மகிழ்ந்தனர்.

இம்முறையில் தி. ஆ. 1995 – ஐப்பசி யில் கலைமகள் திருநாளன்று 'ஆத்திசூடி' வகுப்பும், 1996 - சித்திரைத்தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளன்று 'கொன்றை வேந்தன்' வகுப்பும், 1998 - தைப் பொங்கல் திருநாளன்று 'உலகநீதி' வகுப்பும், 1998 – தமிழ்ப்புத்தாண்டன்று 'நறுந்தொகை' (வெற்றி வேற்கை) வகுப்பும் தகுதி சான்ற தமிழ்ப்புலவர் களால் நிகழ்த்தப்பட்டன. வகுப்பின் இறுதியில் சிறுர்தம் பயிற்சியை அறிய வினுக்கள் விடுக்கப்பட்டுக் குறிப்பிடத் தக்க சிறுர்க்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

ஊர்தோறும் தமிழ்ச் சங்கம்.

பேராசிரியர் க. அன்பழகனரின் அவா.

தமிழகத்தில் தெருக்கள் தோறும் தமிழ் முழக்கம் எழுப்ப, ஊர்தோறும் இத்தகைய நற்றமிழ்ச் சங்கங்கள் பணி யாற்ற வேண்டும் என்பது என் அவா.

— க. அன்பழகன்.

மேடைத் தமிழ் வகுப்பு.

இன்றையப் பொதுச்சூழலில் மேடைப் பேச்சு வன்மை வாய்ந்த படை போன்றது. அது தலைக்கயிறில்லாது திசை நோக்காது பாய்தல் காட்டாற்று வெள்ளமாகும். மேடைப் பேச்சிற்கொரு முறையும் செம்மையும் சேர்க்கும் வகை யில் மேடைத் தமிழ் வகுப்பொன்று தி. ஆ. 1993 - ஆனி - 15 (1-7-1962) இல் துவக்கப்பட்டது. தொடக்கத்தில் 52 அன்பர்கள் சேர்ந்தனர். திங்களுக் கிருமுறை ஞாயிற்றுக்கிழமை மாலையில் வகுப்பு நிகழ்ந்தது. கூட்டத்தை நடத்தப் பயிற்சி, பல்வகை நிலையிலும் அமைந்துக் பேசற்குப் பயிற்சி, பேச்சினைச் செவி மடுத்து, ஆய்ந்து, சுவைத்தற்குப்

பயிற்சி என முப்பகுப்புகளாக வகுப்புகள் நிகழ்த்தப்பட்டன. அறிவுறுத்து முறையிலும், செய்முறையிலுமாக அன்பர்கள் பயின்றனர். மூன்றுண்டுகளில் வகுப்பு நிறைவுற்றது. 15 அன்பர்கள் நிறைவேற்றம் பெற்றனர். நாகைக்கு வருகை தந்த அறிஞர் பெருமக்கள் இம்முறை கண்டும் கேட்டும் பெரிதும் வியந்து பாராட்டினர். மற்றுமொருகால் இதுபோன்ற வகுப்பை நிகழ்த்த வேண்டுமென அன்பர்கள் அவ்வப்போது வேண்டிவருகின்றனர். தக்க காலத்தில் தொடங்கப்படும்.

திருத்த அறிவிப்புக்கள்.

தமிழ்ச் சொற்கள் தவருகப் பயன்படுத்தப்படுவதைத் திருத்த, பிழை திருத்த அறிவிப்புக்கள் தட்டி விளம்பரம் வாயிலாகச் செய்யப்பட்டன. இப்பணி எதிர்பார்த்த பயனை இளைஞர், பெரியோர்மாட்டு விளைவித்தது.

வாழ்வியல் உதவி.

மொழி, மக்கள் வாழ்வினில் செம்மையைச் செய்வது. மொழித்தொண்டு மக்கள் வாழ்வின் நற்குறிக்கோளை நோக்கியதாக அமைதலே பயனுடைத்தாம். தமிழ்ச் சங்கம் மொழிப் பணியோடு மக்கள் வாழ்வியல் உதவியையும் செய்ய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது. சங்கத்து உறுப்பினர்கள் தமது, தம்மில்லத்துத் திருமண நிகழ்ச்சிகளின் போது எஃகு மடக்கு நாற்காலி, அட்டிற்கலங்கள், மின் குழாய் விளக்கு, சிறந்த நூல்கள் முதலியவற்றைத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். செயளாளர் திரு. ஆ. நாராயணசாமி அவர்கள் தம் மகளார் திருமண நினைவாக உரூபா 1000/ பெறுமானமுள்ள அட்டிற்கலங்களை வழங்கினுர்கள். அவை ஒரு திருமணச் சமையலுக்குப் போதுமானவையாக அமைந்தன. அவற்றுடன் 30 நாற்காலிகளும் திருமணம் முதலிய நிகழ்ச்சிகளுக்கு எடுத்துச் செல்ல, ஓரளவு பேணற்செலவு பெற்றுக்கொண்டு வழங்கப்பட்டு வருகின்றது. அத்தொடு சங்கம் இயங்கும் இல்லமும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளத் தரப்படுகிறது.

சுற்றுலா.

தமிழ், வாழ்வியல், இறையியல் தொடர்பான இடங்களைக் கண்டு மகிழும் சுற்றுலா ஒன்று தி. ஆ. 1995 - கார்த்திகை - 28 (13—12—1964) இல் ஏற்பாடு செய்யப்பட்டது. உறுப்பினர்களும் அன்பர்களுமாக 50 பேர் கலந்து கொண்டனர். தனிப்பேருந்தில் ஆடுதுறைப் பயிர் ஆராய்ச்சிப் பண்ணை, தருமபுரம் மடம், காவிரிப்பூம்பட்டினம், சீர்காழிக் கோவில், வைத்திசுவரன் கோவில் ஆகியவற்றைக் கண்டு உவந்து மீண்டனர். ஆங்காங்கு அன்பர்கள் வரவேற்று உதவினர். வைத்திசுவரன் கோவிலில் இரவு உணவைத் தருமபுர மடத்தினர் அளித்து மகிழ்வித்தனர்.

திருக்குறள் அட்டை வெளியீடு.

திருவள்ளுவர் 2000 ஆண்டின் நினைவாகத் திருக்குறள் அமைந்த அச்சட்டை

புலவர்கள் படங்கள்

துணைவேந்தர் தெ. பொ. மீ. உணர்வு.

நாகையில் தமிழ்க் கல்லூரி ஒன்று உருவாகுவதைக் காண வந்தேன். அந்த எண்ணத்தை உருவாக்குவதற்குக் கருவாக இருந்த நாகைத் தமிழ்ச் சங்கத்தையும் கண்டேன். நாகைப் புலவர்கள் படங்கள் பழைய நினைவுகளை என் உள்ளத்தில் தூண்டின. அவர்கள் எண்ணங்கள் இந்தச் சங்கத்தின் வழியே நீடு வாழும்.

— தெ. பொ. மீனுட்சிசுந்தரன்.

கள் வெளியிடப்பட்டுள்ளன. 15 திருக்குறள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல வெள்ளை அட்டையில் தெளிவாக அச்சிட்டுத் தனி அட்டையாகவும் சட்டம் - ஆடியிட்டும் அடக்க விலைக்கே வழங்கப்படுகின்றன. தமிழார்வலர்களும், சுற்றுப்புறச் சிற்றூர்ப் பள்ளிகளும் பெற்று அணிபெறுகின்றனர். சங்க உறுப்பினர்களுக்கென ஒரு குறளை அச்சேற்றி ஆடியிட்டுத் தமிழ்ச்சங்க அன்பளிப்பாக வழங்க உள்ளோம். அஃது அவர்களுக்கு சங்கத்தின் உறுப்பின அறிமுகமாக இல்லங்களில் திகழும்.

மறைமலையடிகளார் சிலை நாட்டும் பணி

நாகை பெற்ற பேரொளிகளில் நிறை தமிழ்ச் செம்மல் மறைமலையடிகளைப் பெற்ற பெருமையும் ஒன்று. அப்புலவர் பெருந்தகையின் நினைவை உள்ளத் திருத்தி அவர்க்கு நன்றிக்கடனுற்ற வேண்டுவது நாகை மக்களின் நீங்காக் கடன். அக்கடனுற்றும் பணியில் நிலைத்த தாக அவர்தம் முழு உருவ வெண்கலச் சிலை நாட்டும் எண்ணம் தி.ஆ. 1994 இல் உருக்கொண்டது. முறையாகத் திட்டமிடப்பட்டு முதல் முயற்சி தொடங்கப்பட்டது. பத்தாயிரம் உரூபா திட்டமிடப்பட்டது. பரவலாகவும், பெரு மக்கள்பாலும் முறையே சிறு தொகையாகவும், பெருந் தொகையாகவும் காணிக்கை பெறுவதென முடிவெடுக்கப் பட்டுச் சிறு தொகைக்குரிய காணிக்கை இதழ்கள் உருவாயின. ஆர்வம் ஒளி வீசியது. சென்னையில் சிலை உருவாக ஒப்புடன்படிக்கை செய்யப்பட்டது. முகத்தோற்றத்தில் செம்மை அமையும் தொடர்பில் 3 ஆண்டுகள் கடந்தன. சிலை நாட்டும் இடம் பெறுதற்கு 4 ஆண்டுகள் ஆயின. இதுபோது இப்பணி நிறைவுறுகிறது. எழிலும் ஏற்றமும் மிக்க மலரோடு பெருவிழாவும் நிகழ்கின்றது. சிலை, கற்பீடம், மலர், விழா ஆகியவற்றிற்கு ஏறத்தாழ 24,000 (இருபத்து நான்காயிரம்) உரூபாக்கள் ஆகியுள்ளன. இப்பணி பெரும் பணியாகக் காலம் நீடித்தாலும் நற்பணியொன்று நிறைவுற்றது என்று மனம் பூரிக்க முடிகிறது.

அறிஞர்கள் பயனடைகின்றனர்.

டாக்டர் அ. சிதம்பரநாதனூர் பாராட்டு

நாகைத் தமிழ்ச் சங்கத்தார் பெரு முயற்சியோடு நடத்தி வரும் புலவர் ஆண்டிறுதி, முன்னணி, புகுமுக வகுப்புக்களில் வந்து சேர்ந்து அறிஞர்கள் பலர் பயனடைந்து வருவது கண்டு மகிழ்கின்றேன். சங்கத்தார் உண்டியும் உறையுளும் அளித்து மாணவர் பலர் பள்ளிக்கூடங்களிற் படித்து வருவோரைப் போற்றி வருவது பாராட்டத் தக்கது.

—அ. சிதம்பரநாதன்.

ஆண்டு விழாக்கள்

தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவும் ஒரு பணியெனத் தக்கதே. ஆண்டு விழா காலையிலும் மாலையிலுமாக இரு நிகழ்ச்சிகளாக நிகழ்த்தப்படும். காலையில் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் கூடும் பேரவைக் கூட்டம் நிகழும். அதுபோது சங்கத்தின் நடைமுறைகள் உறுப்பினர்களால் நோட்டமிடப்படும். புதுப் பணிகள் ஆயப்படும். எதிர்காலப் பணிகள் திட்டமிடப்பட்டு உறுதி செய்யப்படும். பேரவையினரால் சங்கத் தலைவர், அமைச்சர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவர். பேரவையால் தொடர்ந்து 25 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். (அடுத்த கிழமையில் இச் செயற்குழு கூடித் துணைத்தலைவர் இருவரையும் செயலினர் இருவரையும் தேர்ந்தெடுக்கும். மாணவர் இல்லச் செயலினராக இருவர் பொறுப்பேற்பர்.) முறையான நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் நண்பகல் விருந்து நிகழும். இவ்விருந்து

நாகைத் தமிழ்ச் சங்கத்து

எதிர்காலப் பணிகள்.

மூன்றும் பத்து

1. அலுவலகத்தார் கட்டுரை, பேச்சுப் போட்டிகள்.
2. தமிழிசை அரங்கு.
3. கூத்து, நாடக அரங்கு.
4. நூற் பதிப்பு.
5. புலவர்க்கு ஆராய்ச்சிப் பட்டம்.
6. செய்யுள் வகுப்பு.
7. பிழை திருத்தம்.
8. திங்கள் இதழ் வெளியீடு.
9. இல்லத்திற்கொரு குறள் நூல் இயக்கம்
10. நகரப் பொதுக் கூடம் காணல்.

பத்தும் ஒளிமுத்தாய் நத்துதற்கு நல்லன்பர்
ஒத்துழைக்க வேண்டும் ஒருங்கு.

சமபந்திப் பணியைச் செய்ததாகும். மாலை நிகழ்ச்சி இலக்கியப் பொதுக் கூட்டமாகும்.

நன்கொடையும் அன்பளிப்பும்

மேல் காட்டப்பட்ட பணிகளில் மாணவர் இல்லப்பணி தவிர மற்றையத் தொடர்பணிகள் யாவும் உறுப்பினர்களது திங்களிட்டு, ஆண்டீட்டுக் கட்டணங்களைக் கொண்டே நடத்தப் படுகின்றன. முன் குறித்தவாறு உறுப்பினர்களது நன்னிகழ்ச்சி குறித்த அன்பளிப்புப் பொருள்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டன. மாணவர் இல்லம் ஒன்றிற்காக நன்கொடை நெல்லாகவும் தொகையாகவும் பெறப்பட்டது. இச் சங்கப் பணிகள் யாவற்றிற்கும் முன் நின்று உதவும் திரு நா. வி. காயாரோகணனார் இலவய மாணவர் இல்லம் நடத்தப் பணிமனையின் உள்ளிடத்தைத் தந்தருளியதோடு திங்கடோறும் உருபா 50/ வழங்கி வருகின்றார்கள். அவர்களது இளவலார் திரு ஆ. நாராயணசாமி அவர்கள் முன் குறித்தாங்கு உதவியதோடு புலவர் வகுப்பிற்குறிய சாய்காலிகள் 25 செய்துதவினார்கள்; வகுப்பில் மின்விசிறி ஒன்றமைத்துதவினார்கள். வேண்டுங்கால் வேண்டுவன செய்து வருகிறார்கள். நகரப் பெருந் திருவினர்கள் வே. ப. கா. காயாரோகணனார், அ. து. செயவீர பாண்டியனார், அ.மு.பொ.சு.முத்துசாமி, சு. அசனன் ஆரிபு, நீர்முளை வே. செல்வராசு, ஆதமங்கலம் அ. தியாகராசனார், சண்முகசுந்தரனார், வலிவலம் சண்முக சுந்தரனார், கொற்றவன்குடி விசயரங்கம், சாட்டியக்குடி ஏ. வி. நாராயணசாமி, ஒட்டத்தட்டை ஓ. கே. வேணுகோபால், மூங்கிக்குடி அரங்க ராமானுசம், ஆழியூர் சாவித்திரி அம்மையார், தண்ணிலப்பாடி சி. இராமனுதன் மற்றும்பெருமக்கள் மாணவர் இல்லத்திற்கு நெல்லும் தொகையுமாக நன்கொடை வழங்கி இவ்வரும்பணி தொடர்ந்து நிகழச் செய்து வருகின்றமை எண்ணி யாவரையும் வாழ்த்திப் பாராட்டி நன்றி கூறுகிறேம். எப்பயனுங் கருதாது தொடர்ந்து உறுப்பினராயமைந்து உதவி, சங்கத்தின் நற்றளமாய் இலங்கும் உறுப்பினப்

பெருமக்களுக்கு உளமார்ந்த நன்றியும் வாழ்த்தும் பாராட்டும் உரியனவாகும். சங்கத்தின் தலைவராயமைந்து அவ்வப் பொது வேண்டியன வேண்டியாங்கு உதவும் திரு இரா. தம்பையா அவர்கட்கும், எந்நேரத்தில் வேண்டினும் உடன் உதவி நிற்கும் துணைத் தலைவர் திரு. க. காளிமுத்து அவர்களும், ஊக்கத்தோடு முன்னின்று கைகொடுக்கும் மருத்துவச் சொக்கலிங்கனுர்க்கும் இன்றைய துணைத் தலைவர் வை. மு. சண்முகனுர்க்கும் செயலாளர்களாய் அமைந்து நற்பணிகள் புரிந்துவரும் செயலினர்க்கும், செயற்குழுவினர்க்கும், சங்கத்திற்குத் தம் பங்காக ஏதேனும் செய்துகொண்டே இருக்க வேண்டுமென்னும் கொள்கையில் நிற்கும் கீழ்வேளுர் ஆசிரியர் வே. சுந்தரேசன் அவர்களுக்கும், அவர் போன்ற அன்பர்கட்கும், புலமைக்கு உதவும் தமிழாசிரியப் பெருமக்களுக்கும், தொண்டென்ருல் முன்னிற்கும் புலவர் வகுப்பில் பயின்று புலவரானேர்க்கும், பயில்வோர்க்கும் மற்றும் தோன்றியும் தோன்றுமலும் சங்கத்தைப்புரக்கும் பெருமக்கள் யாவர்க்கும் இதை நல்வாய்ப்பாகக் கொண்டு உளமார்ந்த நன்றி கூறிக் களிக்கின்ருேம். சங்கத்திற்கு வித்துருவான நாள்முதல் நீங்காத்துணையாய் அமைந்து ‘நம் சங்கம் – நம் தோழர் செம்மையாக நடத்துவது’ என்று பெருந்தகவுடன் கூறிப் பொருளாலும், உரையாலும் யாவற்றிற்கும் மேலாகத் தூய உளத்தாலும் அருளி இலங்கும் அருட்டிரு குன்றக்குடி அடிகளாருக்கு உளந்தோய்ந்த நன்றியைப் படைக்கின்ருேம்.

எதிர்காலப் பகனிள்

பத்தாண்டுகளில் இருபது துறைகளில் பணிகளை நிறைவேற்றியுள்ள தமிழ்ச் சங்கம் வரும் ஆண்டுகளில் பல பணிகளை மேற்கொள்ள அவாவுகிறது. சங்கப் புலவர் வகுப்பில் பயின்று புலவராய்த் திகழ்வோருக்கு ஆராய்ச்சிப் பட்டம் வழங்கும் வகையில் ஆராய்ச்சி வகுப்பொன்றைத் துவங்க வேண்டும். வீட்டிற்கொரு திருக்குறள் என்னும் இயக்கமொன்றைத் தொடங்கி எளிய விலையில் திருக்குறளைப் பதிப்பித்து இல்லந்தோறும் திகழச் செய்ய வேண்டும். விளம்பரங்களிலும் அச்சிதழ்களிலும் கணக்கேடுகளிலும் அமைந்துள்ள பிழைகளைத் திருத்தும் திட்டமுள்ள பணியொன்றைத் தொடங்கி நாகையிற் பிழையற்ற தமிழைத் திகழச் செய்ய வேண்டும். மாணவர்பாலும் மற்றையோர்பாலும் ஊறும் தமிழ் இலக்கிய ஆர்வத்தை வளர்க்கப் பாவியற்றும் பயிற்சிக்குச் செய்யுள் வகுப்பொன்றைத் தொடங்கி நிறைவேற்ற வேண்டும். நாகைப் பகுதிப் புலவர்களால் யாக்கப்பட்ட நூல்களையும் பிற சிறந்த நூல்களையும் பதிப்பிக்க வேண்டும். மாணவர்க்கமையும் போட்டிகள் போல் அலுவலகத்தில் பணியாற்றுவோர்க்கும் போட்டிகள் அமைத்துத் தமிழமுதைச் சுவைக்கச் செய்யவேண்டும். தமிழிசையரங்குகள், தமிழிலக்கிய, வரலாற்று, தமிழ் மரபமைந்த மன்பதை நாடகங்கள், பழந்தமிழ்க் கலைகள் முதலியவற்றை நிகழ்த்தவேண்டும். இயலின், இலக்கிய இதழ் ஒன்றைத் தொடக்கத்தில் ஆண்டுக்கொரு மலராகவும், படிப்படியாக மூன்று திங்கட்கொன்ருகவும் திங்கள் இதழாகவும் சங்கஇதழாக வெளியிடவேண்டும். திருமணம், இலக்கியக் கூட்டம் முதலிய வற்றை நிகழ்த்துதற்கொரு பொதுக்கூடமில்லாமை பெருங்குறையாக உள்ளமை யாவராலும் உணரப்படுகிறது. அக்குறை தீர முயற்சி எடுக்கவேண்டும். இப்பணிகள் மிகப் பெரியனவே. பெருமக்களும் பொது மக்களும் மனங்கொண்டால் மிகச் சிறியனவாக நிறைவேறும். பெரியவர்களது மனம்பதியின் வழி பிறக்கும் என்பர். முயற்சியும் திருவினையை ஆக்க வேண்டும்.

—கோவை இளஞ்சேரன்.

நாகைத் தமிழ்ச் சங்கப்

பத்தாவது ஆண்டுச் செயற் குழு.

தலைவர் :

திரு. இரா. தம்பையா நாயடு அவர்கள், பி. ஏ., பி. எல்.

அமைச்சர் :

திரு. கோவை. இளஞ்சேரன் அவர்கள்.

பொருளாளர் :

திரு. நா. வீ. காயாரோகணஞ் செட்டியார் அவர்கள்

துணைத் தலைவர்கள் :

திரு. க. காளிமுத்து அவர்கள், எம். ஏ., பி. எல்.
புலவர். வை. மு. சண்முக தேசிகர் அவர்கள்.

செயலினர் :

திரு. ஆ. நாராயணசாமி அவர்கள்.
திரு. இரா. கல்யாணசுந்தரம் அவர்கள்.

செயற்குழு உறுப்பினர் :

திரு. டாக்டர். ப. மு. சொக்கலிங்கம் அவர்கள்
,, சே. எம். அபுபக்கர் ,,
,, வே. கோவிந்தராசன் ,,
புலவர், இரா. இராசு ,,
,, சீனி. சண்முகம் ,,
,, பல்கதிர்ச் செல்வன் ,,
,, இரா. பா. பால்ராசு ,,
திரு. கா. சோமசுந்தரம் ,,
,, ஆ. சா. முத்துக்குமாரசாமி ,,
,, ச. தியாகராசன் ,,
,, ஆர். பாசியம் ,,
,, சு. தனபால் ,,
,, இப்புனு சமாலுத்தீன் ,,
,, செல்ல. இராமதாசு ,,
,, இராசகோபால் ,,
,, என். ஆர். முருகையன் ,,
,, க. சந்திரசேகரன் ,,
,, சு. மா. அரங்கசாமி ,,
,, இரா. கோவிந்தசாமி ,,
,, வே. சுந்தரேசன் ,,

நாகைப் புலவர் வரலாறு

திரு. இரா. ஆதிகேசவன் அவர்கள்,
நாகைத் தமிழ்ச் சங்க முன்னுள் செயலாளர்,
நாகப்பட்டினம்.

"கற்றவர் பயிலும் நாகை" என்ருர் நற்றமிழ் பாடிய ஞானசம்பந்தர். பையரவணிந்த ஐயனைப் பாடும் இறையன்பு பூண்ட பிள்ளையாரின் நல்லுரையாக உள்ள சொற்ருெடரால் தொன்று தொட்டே கற்றவர்கள் நாகையில் மிகுதியாக வாழ்ந்தனர் எனத் தெரிகின்றது.

மறம்பூண் வாழ்க்கையை உதறி அற நெறி நின்ற அசோக மன்னனது கால முதலே நாகையில் பௌத்த சமயக் கோயில்கள் நிரம்பத் தோன்றின. நாகானன விகாரை, பதரிதிட்ட விகாரை முதலிய பௌத்தக் கோயில்கள் சமய நிலையங்களாக விளங்கின. பௌத்தத் துறவிகள் தங்கள் சமய மொழியான பாலி மொழியுடன் நாட்டு மொழியாம் தமிழுக்கும் தொண்டுகள் செய்ய முன்வந்தனர். கழகம் நிறுவி அதன் வாயிலாகத் தமிழில் அறநூல்கள் பல எழுதி வெளியிட்டனர். இந்நூல்களெல்லாம் இஞ்ஞான்று நாம் காணக் கிடைக்காமல் கால வெள்ளத்தால் அந்தோ அழிந்தன. செய்யுட்கள் சில, வீரசோழியம், தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களின் மேற்கோள் பாடல்களாகக் கிடைக்கின்றன.

நாகையில் இதுபோன்ற சமய மொழிக் கழகங்கள் பிற்காலச் சோழர் ஆட்சிவரை நீடித்தன என்னலாம்.

பதிருரும் நூற்ருண்டின் இடைப்பகுதியில் நாகையைச் சார்ந்த உரத்தூர் என்ற சிற்றூரில் அந்தணர் குலத்தில் பிறந்த தமிழ்ப் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது புலமைநலங் கண்ட தொண்டை நாட்டவனுன அனதாரி என்பான் அவரிடம் கல்வி கற்று வந்தான். அனதாரி சிறந்த புலவனுகி மதுரை சென்று மதுரை வரலாற்றைச் 'சுந்தர பாண்டியம்' என்ற பெருநூலாகப் பாடினுன். இச்செய்தி படிக்காசுப் புலவர் பாடிய தொண்டை மண்டலச் சதகச் செய்யுளால் அறியப் படுகிறது.

நாகையில் தி. ஆ. 1766 (கி. பி. 1735) இல் வாழ்வாங்கு வாழ்ந்த காத்தான் என்னும் வருணகுலாதித்தன் என்ற செல்வன்மீது பெண்பாற் புலவர் ஒருவர் பாடிய வருணகுலாதித்தன் மடல் என்ற நூல் பதிப்பிக்கப்பட்டு இன்றும் கிடைத்து வருகிறது. இப்பெண்பாற் புலவர் நாகையில் வாழ்ந்த நாடகமேத்தும் ஆடன் மகளிர் குலத்துதித்தவர்.

அக்கால நாகைப் புலவர்கள் நாகையில் நடத்திய திண்ணைப் பள்ளியில் பயின்று முருகன் அருளால் பாடும் ஆற்றல் பெற்று, அருட்கவி எனச் சிறப்புற்றவர் அருட்கவி அழகுமுத்துப் புலவர் என்ற பெரியார். அவர் நாகையில்

கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள மெய்கண்டவேலர் என்ற முருகப் பெருமான்மீது 'திறப்புகழ்', 'மெய்கண்டவேலாயுத சதகம்', 'குறவஞ்சி' எனும் நூல்களை இயற்றிப் புகழ்பெற்றார்.

தி. ஆ. பதினெட்டாம் நூற்றாண்டில் நாகூரில் வாழ்ந்த முத்துப்புலவர் என்பவர் சிறந்த பாவலராய் விளங்கினார். அதுகாலை எட்டயபுர மன்னராக விளங்கிய வெங்கடேசுவர எட்டப்பர்மீது அரிய அகத்துறைச் செய்யுட்களைப் பாடியுள்ளார்.

இந்நூற்றாண்டின் இறுதியில் திருசிரபுரம் புலவரேறு மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 'திருநாகைக் காரோண புராணம்' என்ற பெயரில் பெருநூலினைப் பாடி அரங்கேற்ற நாகைக்கு வருகை தந்தார். அவ்வரங்கேற்று விழாவில் கலந்துகொண்டு செம்பாகமான செய்யுட்கள் பாடிச் சிறப்பித்த நாகைப் புலவர்கள் இருவராவர். ஒருவர் அ. கிருட்டினசாமி ஆசிரியர் என்பார். மற்றவர் சோ. வீரப்பச் செட்டியார் ஆவார். இவ்விரு பெருமக்களும் அக்காலத்தில் நாகையில் செல்வாக்கோடு திகழ்ந்த நற்றமிழ்ப் பாவலர்களாவர்.

60 ஆண்டுகளுக்குமுன் பதிப்பிக்கப்பட்டு இதுகாலை கிடைத்தற்கு அருமையாகப் போன இந்நூல் தற்பொழுது திருவாவடுதுறைச் சைவத் திருமடத்துத் தலைவர் அவர்கள் அருளால் உரையுடன் பதிப்பிக்கப்படுகிறது.

சைவத் தமிழ்ப் புலவர்களேயன்றி வைணவத் தமிழ்ப் புலவர்களும் நாகையில் விளங்கினர். தி. ஆ. 1932 (1901) இல் ஐயன்பெருமாள் பிள்ளை என்பவரின் மகனார் முத்துக்கிருட்டினப்பிள்ளை என்பார் நாகையைச் சார்ந்த வெளிப்பாளையப் பகுதியில் வாழ்ந்த வைணவப் புலவராவார். இவர் ஆழ்வார் இராமாநுச தாசர் என்ற அணுக்கப்பெயர் பூண்டு திருமால்மீது 'பக்தாம்ருத மஞ்சரி' எனும் செய்யுள் திரட்டொன்றை இயற்றியுள்ளார். சிறந்த பாடல்களைக் கொண்ட இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரங்கள் வழங்கிய வெளிவை வாசுதேவ நாயடு என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். இவர் போன்ற வைணவப் புலவர்களான ஆழ்வார்தாசர், வேங்கடவிட்டலதாசர் ஆகியோர் நாகைவாழ் புலவர்களாவர்.

இக்காலத்தில் நாகை நாராயண பிள்ளை மகனார் சுப்பராய பிள்ளை என்ற புலவர் நாகையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சௌந்தரராசப் பெருமாள் மீது 'தசாவதாரப் பதிகம்' என்று பத்துப் பாடல்களால் ஆகிய நூல் ஒன்றை இயற்றியுள்ளார். அந்நூலுக்குச் சிறப்புப் பாயிரங்கள் வழங்கிய நாகைப் புலவர்கள் இருவராவர். நாகைப் பள்ளியொன்றில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்த புருடோத்தம நாயடு என்பவரும், கிருட்டினசாமி ஆசானின் மகனார் குமரகுரு ஆசானுமாவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும் நாகை நகரப் புலமைப் பொற்காலம் என்னலாம். இக்காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேரறிஞர் முத்துத் தம்பியா பிள்ளை என்பவரும், கும்பகோணத்தைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை என்பவரும், நாகையில் தங்கித் தமிழ்த் தொண்டாற்றினர். 'அபிதான கோசம்' 'நன்னூல் இலகுபோதம்', 'தென்மொழி வரலாறு' ஆகிய நூல்கள் முத்துத் தம்பியாபிள்ளையால் இயற்றப்பட்டவை. நாகைப் பள்ளியொன்றில் பணியாற்றிய சபாபதிப்பிள்ளை 'திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம் பெரியநாயகி அம்மை பதிகம்' ஒன்று பாடியுள்ளார்.

அக்கால எல்லையில் மொழிபெயர்ப்பு நூல்களும் நாகையில் தோன்றின. 'மிருச்சகடிகம்' என்ற வடமொழி நூலைத்

தமிழில் மொழிபெயர்த்தெழுதிய வழக்கறிஞர் பாலகிருட்டினஐயரும், உபநிடதத்தைத் தமிழில் மொழிபெயர்த்த இராசாராம் ஐயரின் தந்தையும் நாகையில் வாழ்ந்தவர்களே யாவார்கள். இச்செய்தியைக் கவிமாமன்னன் பாரதி "இராசாராம் ஐயன் என்ற நாகைப் பார்ப்பான் முன் தனது பிதா தமிழில் உபநிடதத்தை மொழிபெயர்த்து வைத்ததனைத் (தன்னைத்) திருத்தச் சொன்னான்" எனப் பாடியுள்ளதால் அறியலாம்.

நாகையில் அந்நாளில் விளங்கிய தூய அந்தோணியார் பள்ளியிலும், பின்னர் நாட்டுயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியப் பணியாற்றிய புலவர் கோ. சதாசிவம் பிள்ளை இங்கு குறிக்கத் தக்கவராவார். இப்புலவர் தஞ்சையைச் சார்ந்த பூண்டி என்ற சிற்றூரில் விஞ்சையரையர் குடியில் பிறந்தவர். நாகை நகரை வாழ்விடமாகக் கொண்டு புலமை நடத்தியவர். சேது மன்னர்களாலும் சைவ மடத்துத் தலைவர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். எண்ணிறந்த தனிச் செய்யுட்களும், 'புலிக்கண்ணி', 'மறலிவிடு தூது' முதலிய நூல்களும் இயற்றிப் புகழ் பெற்றார். 'நீலலோசனி' என்ற அச்சகம் ஒன்றை நிறுவி அப்பெயரில் ஓர் இதழையும் வெளியிட்டு வந்தார். அவர் தம் வாழ்நாள் இறுதியில் பாடிய கையறுநிலைச் செய்யுட்கள் மிகச் சுவை பயப்பனவாம்.

நாகையில் விளங்கும் தென்னிந்தியத் திருச்சபை உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்றுத் தமிழறிவிற் சிறந்து விளங்கிய புலவர்பெருமான் மறைமலையடிகள் இக்காலத்தவரேயாவார்கள். இவர் சென்னை சென்று அவ்விடத்தையே தமது வாழ்விடமாகக்கொண்டு தனித்தமிழ்க் கொள்கையை உருவாக்கினார். தமிழினுக்குச் சிறந்த தொண்டுகள் செய்து சைவத்தை வளர்த்து இறவாத புகழுடைய நூல்கள் பல இயற்றியுள்ளார். இவருக்கு நாகையில் தமிழ்க்கல்வி பயிற்றிய ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளை என்பவர் அதுகாலை நாகையில் வாழ்ந்த புலவர் பெருமான் ஆவார்.

"இந்நாள் எனக்கு நன்னெறி காட்ட
செவ்வந்திப் போந்த பெரய்யா
நாவிற்
செந்தமிழ் வரம்பு முந்துகண்
டுணர்ந்து
மெய்ப்பொரு ளறிவுஞ்
சொற்பொருள் வன்மையும்
பொறையுஞ் செறிவும் நிறையக்
கொண்டு
தமிழ்மா ணக்கர் அமிழ்தென நுகர
விரித்துரை கிளக்குந் தெரிப்பரும்
பெருமை
நாரா யணனெனும் தோலாப்
புலவோன்"

என மறைமலையடிகளார் அவரைப் போற்றுகின்றார். இவர் இயற்றமிழாசிரியர் எனச் சிறப்பிக்கப்பட்டவர். இது கொண்டு இவரது இலக்கண இலக்கியப் புலமையை அறியலாம்.

மறைமலையடிகளாரிடம் தமிழ் பயின்ற மாணவர், திருக்குறள் அறத்துப்பாலுக்கு விருத்தியுரை வரைந்த தண்டபாணிப் பிள்ளையாவார். இவர் நாகைச் சொக்கலிங்கம் பிள்ளை என்பவரின் திருமகனாவார். இவர் 'திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி'க்கு உரையெழுதியதோடமையாது 'ஏகம் பஞ்சநதம்', 'கலா சுந்தரி' முதலிய புதினங்களையும் இயற்றிப் புகழ்பெற்றவர்.

தண்டபாணிப் பிள்ளையவர்களின் இளவல் கோபாலகிருட்டினன் என்பவரும் மறைமலையடிகளாரின் மாணவராவார். இவர் தமிழ் அறிஞராய்ப் புதுமை நூல்கள் பல செய்துள்ளார். இவர்கள் அனைவரும் நாகைத் தென்னிந்தியத் திருச்சபை உயர்நிலைப்பள்ளியில் கற்று ஆங்கில அறிவும் வாய்க்கப்பெற்றவர்கள்.

அக்காலத்தில் அப்பள்ளியில் வடமொழிப் புலமை நடத்திய சக்கரபாணி ஐயர் என்பார் 'கணிகாஞானி சம்வாதம்' என்ற மறைக் கோட்பாட்டுக் கதை நூல் ஒன்றைச் செய்யுள் வடிவில் இயற்றினர். இந்நூலுக்குச் சாற்றுப் பாக்கள் வழங்கிய பெருமக்கள் அப்பள்ளித் தமிழாசிரியர் முத்துச்சாமி ஐயர் அவர்களும், நாட்டுயர் நிலைப் பள்ளித் தமிழாசிரியர் முத்துராம பாரதியும் ஆவர். இந்நூலுக்குச் சதாசிவம் பிள்ளையவர்களும் சாற்றுக்கவிகள் தந்துள்ளமை குறிக்கத் தக்கதாகும்.

இக்காலத்து நாகைப் புலவர்களால் இயற்றப்பட்ட 'திருநாகை சுந்தரேசர் கைங்கர்ய வைபவம்', 'நீலாயதாட்சியம்மன் நவரத்தினமாலை', 'நெல்லுக்கடை மாரியம்மன் நவரத்தின மணிமாலை' ஆகியவை வெளிவந்தன.

நாகையில் வாழ்ந்த இராம. சிங்காரவேலுப் பத்தர் என்பவர் அக்கரைக் குளம் வடகரையில் எழுந்தருளியுள்ள சொக்கநாதர் என்ற சிவபெருமான் கோவிலுக்கு வரலாற்று நூல் ஒன்று பாடியுள்ளார். இந்நூலால் அதுகாலை நாகையில் விளங்கிய பாவலர்களை அறிய முடிகிறது.

அந்நாளிற் சென்னையினின்றும் காழகம் சென்று வாணிகம் நடத்தி, பெரும் பொருள் திரட்டிப் புகழும் ஈட்டியவர் மதுரைப்பிள்ளை என்பவர். அவ்வள்ளலின் தன்மையைக் கண்ட நாகைப் புலவர்களின் உள்ளங்கள் உவகை பூத்தன. மதுரைப் பிள்ளையைத் தலைவராகக் கொண்டு பாட்டிசைத்தனர். அவ்வகையில் எழுந்த நூல் மதுரைக் கோவையாகும். இதனைப் பாடியவர் நாகூரில் வாழ்ந்த வா. குலாம்காதிரு நாவலராவார்கள். இந்நாவலர், பெருந்தகையாளர்களைப் பாடியதோடு அமையாது எல்லாம் வல்ல இறைவன் பேரிலும், அவன் அடியார் நாகூர் ஆண்டவர் பேரிலும் சிற்றிலக்கியங்கள் பல புனைந்து வெளியிட்டுள்ளார். 'நாகூர்ப் புராணம்', 'சில்லடிமாலை', முதலிய செய்யுள் நூல்களும், 'பொருத்த இலக்கணம்' என்னும் இலக்கண நூலும், 'கம்சுல் கருமத்' முதலிய உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார். தாய்மொழி மீது கொண்ட பெருவிருப்பால் 'மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராற்றுப்படை'யும் பாடியுள்ளார். இவற்றால் புலவர்கள் இவரை 'புலவர் குலமணி' என்று போற்றினர். நாகூர் பக்கீர் முகையதீன் என்ற புலவர் இவரது மாணவ மணிகளுள் ஒருவராவார்.

அக்காலத்தில் நாகூரிலும், நாகையிலும் முகமதியப் புலவர்கள் பலர் வாழ்ந்தனர். நயமான செய்யுட்கள் பாடி மகிழ்வித்த நாகை முகமதியப் புலவர்களில் கிருது முகம்மது மரக்கலவரையர், ஆகியோர் முக்கியர் ஆவர். கிருது முகம்மது மரக்கலவரையர் மதுரைப் பிள்ளை மீது 'அட்ட நாகபந்தம்' என்றொரு நூல் பாடியுள்ளார்.

அக்காலத்தில் சென்னையிலிருந்து 'மகா விகட தூதன்' என்ற இதழ் வெளிவந்தது. அதன் விற்பனையாளராக நாகையில் விளங்கிய அ. பி. சீமான் பிள்ளை சிறந்த புலவராவார். மாணிக்கக் கவியரையர், நாகையை அடுத்த தண்ணிலப்பாடியில் வாழ்ந்த திருவிளையாடற் புராண விரிவுரையாளர் நடராச பிள்ளை ஆகியோர் அக்காலப் புலவர்களாவர். இவர்கள் அனைவரும் அக்காலத்தெழுந்த நூல்கட்குச் சிறப்புக் கவிகள் தந்த பெருமக்களாவர்.

தி. பி. 1954 (கி. பி. 1923) இல் நாகை நாட்டுயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய புலவர் வி. சாமிநாத பிள்ளை நாகைக் காரோணப் பெருமான்மீது 'திருநாகை நான்மணி மாலை' என்ற நூலைப் பாடியுள்ளார். அதற்குச் சிறப்புக் கவிகள் தந்த அக்கால

நாகைப் புலவர்களில் சோ. ம. தெ. முத்துக்காயாரோகணச் செட்டியார் மிக முக்கியமானவராவர். இவரைச் 'செந்தமிழ் ஆசான்' என அக்கால ஆசிரியர்கள் புகழ்வர்.

'கம்பன் வீட்டுப் பணிமகளும் கவி பாடுவாள்' என்ற வரலாற்று மொழிக்கேற்ப நாகையில் சிறிதளவே புலமையுற்றோரும் அரிய செய்யுட்களால் ஆண்டவனைப் பாடிப் பரவினர். எடுத்துக்காட்டாக வி. பிச்சுக் குருக்கள் பாடிய 'கருந்தடங் கண்ணியம்மை ஆடிப்பூர ஓடப்பாட்'டும், நாகலட்சுமி அம்மாளால் பாடப்பட்ட 'நீலாயதாட்சியம்மை நவரத்ன மாலை'யும் அமைகின்றன. இக்கால எல்லையில் நாகை, தென்னிந்திய லுத்தரன் திருச்சபைத் தலைவராயமைந்த ஏல்வைன் ஐயர் என்ற ஐரோப்பியர் ஒரு தமிழறிஞராவார். இவரால் எழுதப்பட்ட திருவரலாற்று நூல்கள் அச்சமயத்தவரால் போற்றப்படுவனவாகும்.

இவ்விருபதாம் நூற்றாண்டில் நாம் காண வாழ்ந்து மறைந்த பண்டித அ. கோபாலையர் நாகையில் தம் இறுதிக் காலத்தைக் கழித்தவர். இவ்வகையில் இவரும் நாகைப் புலவர்கள் வரிசையில் வைத்துக் காணத்தக்காராவார். இவர் 'பெருந்தேவனார் பாரதம்', 'கலிங்கத்துப் பரணி', 'மூவருலா' முதலிய நூல்களுக்கு உரையெழுதிப் பதிப்பித்தார். அத்துடன் தனிச் செய்யுட்கள் பல எழுதியும் 'கடோத்கசன் தூது' என்ற மொழிபெயர்ப்பு நூலொன்றைச் செய்தும் தமிழுக்குத் தொண்டு புரிந்தார்.

இதுகாறும் கூறப்பட்ட புலவர் வரலாற்றுக் குறிப்புக்கள் நீண்டகால நாகை வரலாற்றில் ஒரு நானூறு ஆண்டுக் கால அளவினதேயாகும். இக்கால அளவிலேயே இன்னும் அறியப்படாத புலவர்கள் பலர் உளர் எனின் பரந்துபட்ட கால அளவில் அடங்கியோரை அறிய முயல்வது பரவை நீர் முழுதும் பருக முயல்வதற்கு ஒப்பாகும். எனவே, பல்வகைப் புலவர் குடிகளை ஈட்டிவைத்துள்ள நாகையம்பதி நன்மணங் கமழும் பன்னிற மலர்கள் செறிந்த பைங்கா போன்று காட்சிக்கும் கருத்துக்கும் என்றும் இடனாய் அமைக!

> "பாக்குத் தெறித்து விளையாடும் பாலர்க்கு
> நாக்கு தமிழ்மணக்கும் நன்னகை.
>
> —காளமேகம்
>
> —நாகைச்சிறுர்.

நலம் சிறந்த நாகர்ப்பட்டினம்

'சேரமான்'

கனியால் தோன்றிய வித்து.

கனி, கனிந்து கனிந்து அழிந்தால் முற்றிய வித்து தோன்றும். வித்து ஊறி அழிந்தால் முளை தோன்றும். ஒன்றன் அழிவு மற்றொன்றனது தோற்றம். இஃது ஒரு பொது உண்மை. இவ்வுண்மை நாகர்ப்பட்டினத்தின் தோற்றத்திற்கும் பொருந்தும்.

சோழநாட்டின் பழம்பெருந் தலைநகராகவும், துறைமுகப் பட்டினமாகவும் திகழ்ந்தது பூம்புகார் என்னும் காவிரிப் பூம்பட்டினம். அதன் அழிவு நாகர்ப் பட்டினத்தின் தோற்றமாயிற்று என்னலாம்.

பதரி திட்டா

புகாரின் தெற்கே 30 கல் தொலைவில் அமைந்துள்ளது நாகர்ப்பட்டினம். தி.பி. இரண்டாம் நூற்றாண்டின் கால எல்லை வரை இப்பகுதி 'பதரி திட்டா' என்றே குறிக்கப்பட்டது. கானும் சோலையுமாக விளங்கிய இப்பகுதியில் இலந்தை மரங்கள் சூழ்ந்த மேட்டு நிலப் பகுதி ஒன்றிருந்தது. பாலி மொழியில் 'பதரி' என்னுஞ் சொல் இலந்தையைக் குறிப்பது. இலந்தை சூழ்ந்த மேட்டு நிலப்பகுதி 'பதரி திட்டா' எனப்பட்டது. இவ்வமைதிச் சூழலில் புத்தமதத் துறவிகள் வாழ்விடங்கொண்டு இறைப் பணி புரிந்தும், நூல்களை ஆய்ந்தும் வாழ்ந்தனர். காலப்பெருக்கில் புத்தமதச் சான்றோர் பெருகி வாழ்ந்தனர். அசோகன் இங்கு விகாரை ஒன்றைக் கட்டினான் என்றும், அவ்விகாரையில் அமைந்த தன்மபாலர் என்பார் 'நெட்டி பகரண அட்டகதா' என்னும் உரை நடை நூலைப் பாலி மொழியில் எழுதினார் என்றும் காழக நாட்டு விவரச்சுவடி குறிக்கிறது. 'சாசன வம்ச'மும் இதனைக் குறிக்கிறது.

உலகின் ஆடி மண்டலம்.

நீடு தொல்புகழ்
நிலம்பதி னெட்டினும் நிறைந்த
பீடு தங்கிய
பலபொருள் மாந்தர்கள் பெருகி
கோடி நீள்தனக்
குடியுடன் குவலயங் காணும்
ஆடி மண்டலம்
போல்வதவ் வணிகிளர் மூதூர்.

— சேக்கிழார்.

— (அதிபத்த நாயனார் புராணம்)

இவ்வாறு குறிக்கப்படும் செய்திகளால் 'பதரிதிட்டா' என்னும் பெயரே இப் பகுதிக்கு அக்காலத்தில் குறிக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். (இக்காலத்தில் அவ்விடம் அவுரித்திடல் எனமருவிச் சொல்லளவில் வழங்கப்படுகிறது.)

விழா உறவு

கி. பி. மூன்றும் நூற்ருண்டில் புகார் நகரம் கடற் கொந்தளிப்பாலும், பெரும் புயலாலும் அழிவுற்றது. புகார் நகரில் ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் தொடங்கி 28 நாட்கள் இந்திர விழா நிகழும். அதனைக் காணவும், புத்த விகாரைகளைக் கண்டு தொழவும் நாக நாட்டவர் வருவர். இந்நூற்ருண்டில் ஓர் இந்திர விழாவைக் காண நாகநாட்டு இளவரசி பீலிவளை என்பாள் வந்தாள். விழா முடிந்து மீள்பவள் நகர எல்லையில் அமைந்த சோலையில் சோழ மன்னன் நெடுமுடிக்கிள்ளியைக் கண்டு காமுற்று அவனோடு ஒரு திங்கள் உறைந்து சூலுற்றுத் தன் நாடடைந்தாள்.

பத்துத் திங்களில் ஆண்மகவை ஈன்ற அவள் நாக நாட்டின் அண்மையிலமைந்த மணிபல்லவத் தீவை மகவுடன் அடைந்து, அங்குவந்து புகாருக்கு மீள இருந்த கம்பளச் செட்டி என்னும் வணிகன்பால் மகவை அளித்து மன்னன் பால் சேர்க்கச் சொன்னுள். அம்மகவோடு நேர்ந்த பயணத்தின்போதே முன் குறிக்கப்பட்ட கடற் கொந்தளிப்பு நேர்ந்தது. கலம் சோழநாட்டின் கரையருகே கவிழ்ந்தது. பிழைத்த கம்பளச் செட்டி மன்னன்பால் அறிவித்தான். தேடியும் குழந்தை கிடைத்திலது. அக் குழந்தையுடன் வந்த நாகநாட்டவர் 'பதரிதிட்டை'யில் தங்கி வாழலாயினர். (இன்றும் நாகர்தோப்பு எனப் பட்டயங்களில் குறிக்கப்படுகிறது.)

பன்னு வள நாகை.

பாடலும் நாடக சாலையும்,
பைங்தொடியார்
ஆடலும் சூழ்கின்ற ஆலயமும்
— நீடு
பணிக்கோ புரநிரையும்,
பைம்பொன் மதிலும்,
மணிக்கோ புரமேடை வைப்பும்
— கணக்காயர்
கூட்டமும் முத்தமிழின்
கோதாட்டு நல்விருந்தின்
தேட்டமும் பாராட்டும் சீராட்டும்
— கோட்டு
வனசத் திரமுகப்பு
மாமறையோர்க் கெல்லாந்
தினசத் திரமுதவும் சீரும்
— அனத்தின்
குலந்தா மரைமேல் குலாவும்
குளமும்
நலந்தான் மிகுந்த நதியும்
— அலர்ந்த
அளகா புரியும் அமரேசன் ஊரும்
பளகாகச் செல்வம் பரித்து
— வளமேவும்
செந்நெலும் பூகமும் தின்கரும்பும்
சந்ததமும்
பன்னுவள நாகைப் பதி.

— வருணகுலாதித்தன் மடல்.

ஒருதனிப் போயினன்

இக்கடற் கொந்தளிப்பும் புயலும் புகார் நகரை அழித்தன. கடல் வயிற்றுள் புகுந்தவர் போக எஞ்சிய மக்கள் வாழ இடந்தேடினர். மன்னனும் தனியே போனுன்.

*"விரிதிரை வந்து வியனகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன்"*

என்று மணிமேகலை குறிக்கிறது.

துறையும் பேரும்

அந்நாளில், புகார் நகரில் பலசமயங்களும் திகழ்ந்தன. எனினும் புத்த சமயமே மேலோங்கித் திகழ்ந்தது எனலாம். மக்களும் போற்றித் தழுவி வாழ்ந்தனர். நகரின் அழிவால் இடம்பெயர்ந்த துறவிகள் பதரிதிட்டையை அடைந்து வாழலாயினர். புகாரினின்றும் சிதறிய மக்களும் இங்கு வாழ்விடம் பெற்றனர். சிற்றூராயிற்று; பல்கிப் பெருகிப் பேரூராயிற்று. புகார்த் துறையிலிறங்கிச் சோழ நாட்டில் வாணிகம் புரிந்தவர் இதனை துறையாகக் கொண்டனர். கடற்கரையில் வாழ்ந்த நாகர்களைக் கொண்டு இப்பகுதியை நாகர்ப்பட்டினம் எனக் குறித்தனர். அதன் பின்னரே இந்நகர் இப்பெயரால் குறிக்கப்படலாயிற்று.

சோழ குலத்தவர் உறையூரையும், ஆரூரையும் தலைநகர்களாகக் கொண்டு ஆண்டமை போன்று நாகர்ப்பட்டினத்தையும் கொண்டனர். இங்கிருந்து ஆண்டவன் நாகர்ப்பட்டினத்துச் சோழன் எனக் குறிக்கப்பட்டான். அக்காலத்தில் இந்த நகரம் புகார் நகரைப்போன்ற அமைப்புடையதாயிற்று. அரசரது இருக்கையும், அமைச்சர், படைத்தலைவர் முதலிய அரசாங்க அலுவலர்களது இருக்கையும், பெரும் வணிகரது பண்டசாலைகளும் பல்வகைக் கலைஞர்களது இருக்கையும், ஏற்றுமதி, இறக்குமதித் துறைகள் அமைந்த பகுதியும் அமைந்த பட்டினப்பாக்கம் நாகர்ப்பட்டினம் எனத் திகழ்ந்தது. சிறு வாணிகமும், தொழிலாளர்களும், பொதுமக்களும் அமைந்த பகுதி மருவூர்ப் பாக்கம் என அமைந்து நாகரூர்-நாகூர் எனத் திகழ்ந்தது. (புகார் நகரும் பட்டினப்பாக்கம் மருவூர்ப் பாக்கம் என இரு பகுதிகளாக இருந்தமை நினைவுகூரத்தக்கது.)

சீனக் கல்தச்சு

தமிழக வரலாற்றின் இருண்ட காலம் எனப்படும் நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் இந்நகர் நன்கு வளர்ச்சியுற்றது. வெளிநாட்டு வாணிகம் பெருகியது. சீனரது வருகையும் வாணிகமும் குறிப்பிடத் தக்கனவாய் அமைந்தன.

கோலன் தெபார் என்னும் மேலைநாட்டறிஞர் பின்வருமாறு குறித்துள்ளார்: "தஞ்சை வளநாட்டில் நாகப்பட்டினத்திற்கு அண்மையில் அமைந்த நாகூர், சீனர்களின் வாணிக இடமாக விளங்கியது. அவ்வாணிக மக்கள் தங்கள்நாட்டுக் கல்தச்சு இலக்கணத்திற்கேற்றவாறு ஆங்கே கோயிலொன்றையும் எடுப்பித்தார்கள்."

இக்கருத்தையே தெமர்லே என்பாரும் குறித்துள்ளார்.

வரலாற்று நகரம்

இந்நகர் குறிப்பிடத்தக்க துறைமுகமாக விளங்கியதென்பதை மேலைநாட்டாசிரியர்-பயணிகள் குறிப்பினின்றும் குறிப்பாக அறிய முடிகிறது.

"குமரி முனையருகே குறிக்கப்படும் மூன்று துறைமுகங்கள் கோரமண்டலக் (சோழமண்டலம்) கடற்கரைப் பகுதியில் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. அவை

நல்லார் அறஞ்சொல்லும் நாகை.

நல்லார் அறஞ்சொல்லப்
 பொல்லார் புறங்கூற
அல்லார் அலர்தூற்ற
 அடியார்க் கருள்செய்வான்;
பல்லார் தலைமாலை
 யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடலுகைக்
 காரோ ணத்தானே.

— திருஞானசம்பந்தர்.

வாணிக இடங்களாகவோ, பண்டசாலை களாகவோ விளங்கியிருத்தல் வேண்டும் என்று 'செங்கடற் செல'வின் ஆசிரியர் கருதுகின்றார்.''

என இராபர்ட் என்னும் ஆசிரியர் குறித்துள்ளமை நோக்கற்பாலது. இவர் குறிப்பிடும் மூன்று துறைமுகங்களுள் நம் நாகையும் ஒன்று என்பதை உய்த் துணரலாகும்.

முதல் நரசிம்மன் காலத்தில் பயணம் வந்த சீனப்பயணி 'இயூன்சங்' தென்னு டெங்கும் சுற்றியவன். இந்நகரை 'இது நன்னுடு' எனத் தன் குறிப்பேட்டில் குறித்துள்ளான். 'நூறு புத்த மடங்களும், பதினுயிரம் புத்தத் துறவிகளும் உள்ளனர்' என அவன் குறிப்பேடு கூறுகிறது.

ஊர்ப் பெயர் உண்மை

கடற்றுறை வழியாகப் பல வெளி நாட்டவர் வருகையும், வாணிகமும் அமைந்தது போன்றே நிலப்பகுதியிலும் தமிழகத்து மக்கள் திரள் திரளாக, இனம் இனமாக வந்து அமையலாயினர். இச்செய்தியை இதுபோது நாகையைச் சுற்றி அமைந்துள்ள ஊர்ப் பெயர்கள் அறிவித்துக்கொண்டுள்ளன.

செட்டிச்சேரி, வடுகச்சேரி, புறவர் சேரி, திட்டைச்சேரி, பார்ப்பனச்சேரி ஆகிய ஊர்கள் முறையே நாகைநகரின், தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் அரைவட்டத் தில் அமைந்துள்ளன. ஓரினத்து மக்கள் கூடிச் சேர்ந்து வாழுமிடம் சேரி எனப் படும். இவ்வகையில் அமைந்த இவ்வூர் கள் நாகர்ப்பட்டினத்தின் அக்கால வளங் கருதி மக்கள் வந்து சூழ்ந்து வாழ்ந்ததைச் சொல்லி நிற்கின்றன.

காடவர் கோன்பாடி

இந்நூற்றுண்டுகளில் சைவ, வைணவ ஆலயங்கள் அமைந்தன. கி. பி. ஆறும் நூற்றுண்டில் சோழரது ஆட்சி போய்ப் பல்லவரது ஆட்சி வந்தது. சீன நாட் டாரது வருகை மேலும் பெருகியது. ஏழாம் நூற்றுண்டில் சீன நாட்டு 'யுவான் சுவாங்' இந்நகரைக் கண்டுசென்று இங் கமைந்த புத்தக் கோயில்களைப் பற்றிச் சிறப்பாகக் குறித்துள்ளான். இரண்டா வது நரசிம்மவர்மன் சீனர்களுக்கெனத் தனியாகப் புத்த விகாரை ஒன்றை அமைத்துத் தந்தான். இவனே சைவ ஆலயத்தையும் நன்கு செவ்வைப்படுத் தினுன். இதுபோது நாகைக்கு வந்த திருநாவுக்கரசர் தாம் பாடிய பதிகத்தில் நாகையின் வளத்தையும், பெருமையை யும் குறித்தார். 'கற்றவர் பயிலு நாகை' எனுந் தொடரால் இந் நகரத்தாரது அக்காலக் கல்விப் பயிற்சியையும் சிறப்

திருமகள் சீர்த்திப் பொருவகல்
நாகை.

தேமலி கமலப் பூமலி தடவயற்
செந்தேன் நிறைதலிற் செந்நெல்
விளையும்
திருவமர் சீர்த்திப் பொருவகல்
நாகையிற்
தெண்டிரைக் கடற்கரை
சேர்ந்தவண் மீனின
முட்டை கவரும் பெட்டையங்
குருகே!
வாடையின் மெலிந்து வைகறைப்
போதில்
இருகணீர் ஒழுக வொருநீ
போந்து
மேனி நுடங்க வெளுத்த காரணம்
யாதோ கூறுய் மாதோ; ஈண்டுத்
தணந்த நுமரும் இன்னம்
அணைந்திலர் தாமோ அணியிளங்
குருகே!

— நாகை நான்மணிமாலை.
— (கரந்தை வி. சாமிநாத பிள்ளை.)

பித்தார். எட்டாம் நூற்றுண்டில் காடவர் கோன் கழற்சிங்கன் இந்நகர்க்கு வருகை தந்து நாகைக்கும், நாகூர்க்கும் இடைப் பட்ட பகுதியில் பாடிவீடு அமைத்துக் கொண்டு தங்கிச் சென்ருன். இதனை இன்று காடம்பாடி என்ற பெயர் அறி வித்து நிற்கிறது. காடவர்கோன்பாடியே காடம்பாடியாயிற்று. (நாகைக் குமரன் கோயில் பதிவேட்டில் இப்பகுதி காடவர் கோன்பாடியென்றே குறிக்கப்பட்டுள் ளது நினைவுகூரத்தக்கது.) இக் காலத் தில் இங்கு வந்த சுந்தரமூர்த்தி நாயனுர் தம் பதிகம் வாயிலாகப் பல்வகையான வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதி யானமையைக் குறித்துள்ளார்.

“ வங்கம் மலிகடல் நாகை”
“ கலங்கள் சேர் கடல் நாகை”
— திருநாவுக்கரையர்.

“ வரையார்வனபோல வளரும்
வங்கங்கள்”
— திருஞானசம்பந்தர்.

“ கரிபரித்தொகை மணிதுகில்
சொரிவதாங் கலத்தால்”
— சேக்கிழார்.

இத்தொடர்களால் இந்நகர் வெளி நாட்டுப் பொருள்களின் இறக்குமதிப் பெருமையை உணரலாகும்.

“ கடையுடைய நெடுமாடம்”
— திருநாவுக்கரையர்.

“ மண்ணுர் முழவோவா மாடநெடு
வீதி”
“ ஞானத்துறை வல்லார் நாளும்
பணிந்தேத்த”
— திருஞானசம்பந்தர்.

“ காண்பினிய நெடுமாடம்
நிறைந்த நெடுவீதி”
“ கலவமயில் இயலவர்கள் நடமாடும்
செல்வக் கடல் நாகை”
— சுந்தரமூர்த்தி நாயனுர்.

என்னும் அடிகளால் இந்நகரின் செல் வச் செழிப்பை உணரும் நாம்,

“ பொன்னி நாடெனும் கற்பகப்
பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட்டினத்
திருநகரம்”

என்னும் சேக்கிழார் வண்ணனையை உண்மை என்றே ஒப்பலாம்.

புத்தரும் திருவரங்கமும்

இந்நூற்றுண்டில் வைணவப் பெரியார் திருமங்கை மன்னன் இங்கு வந்து புத்தரது பொன் சிலையைக் கவர்ந்து சென்று திருவரங்க ஆலயத் திருச்சுற்றுச் சுவரமைக்கப் பயன்படுத்திக் கொண் டார் என்பர்.

யாவாவில் நாகர்ப்பட்டினம்

ஒன்பதாம் நூற்றுண்டிலும் பல்லவரது உதவியால் புத்த விகாரங்கள் செம்மை யுற்றதோடு சீனர் தொடர்பும் பெருகியது கீழ்த்திசை நாடுகளில் நாகர்ப்பட்டினம் மிகச் சிறப்பாக மதிக்கப்பட்டது.

திருமகள் பிரியாள்.

செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை
வெண்ணகைத் தூமொழியார்
வந்துவ லஞ்செய்து மாநடம் ஆட
மலிந்த செல்வக்
கந்த மலிபொழில் சூழ்கடல் நாகைக்
காரோண மென்றும்
சிந்தை செய்வாரைப் பிரியா
திருக்கும்
திருமங் கையே.

— திருநாவுக்கரசு நாயனுர்.

யாவாத்தீவு எனப்படும் சாவகநாட்டில் நாகர்ப்பட்டினம் என்றொரு ஊர்ப்பெயர் அமைந்து இன்றளவும் நாகையின் கடல் கடந்த புகழை அறிவித்து நிற்கிறது.

உலகத் திலகத்தில் பொன்குன்று

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் கடாரநாட்டுச் சூளாமணிவருமன் என்பான் இந்நகரில் மேம்பட்ட புத்தவிகாரையான சூளாமணி விகாரையை அமைத்தான். இதன் விமானம் பொன் தகட்டால் மூடப்பட்டது. இஃது "உலகத்துக்குத் திலகம் போன்ற நாகப் பட்டினத்தில் தன் உயரத்தால் பொன் குன்றையும் சிறியதாகச் செய்து தன் அழகினால் வியப்படையச் செய்கின்ற சூளாமணி விகாரை" என்று ஆனை மங்கலம் செப்பேட்டில் புகழப்படுகிறது. இதற்கும், இதனைச் சார்ந்த புத்த நிலையங்களுக்கும் இராசராச சோழன் பல்வகை அறக்கட்டளைகள் அளித்ததோடு ஆனைமங்கலம் என்னும் சிற்றூரையும் பள்ளிச் சந்தமாக வழங்கினான்.

இந்நாள்வரை சிற்றறையைக் கொண்டதாய்ச் செங்கல்லால் ஆகியிருந்த காரோணக் கோயிலைக் கற்றளியாக்கினான் இராசராசன். பல திருக்கொடைகள் ஆற்றினான்.

இசை நாகை.

அசனம் இளைப்பகற்று
தன்னையே நம்பார்
வசனம் இதுதவறு
வாய்மை — இசைநாகைச்
சின்னப்பால் வெண்மதியஞ்
சேரிமயத் தேபிறந்த
அன்னப்பால் இங்குவந்தால்
ஆம்.

— *தனிப்பாடல்.*

சோழகுலவல்லிப்பட்டினம்

பதினொன்றாம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் காரோணக் கோயிலை விரிவு படுத்தினான். அம்மன் கருவறையைக் கற்றளியாக்கினான். இன்றும் அதன் சுற்றுச் சுவர்களில் சோழர்கால ஓவியத்தினை மேலே உள்ள நாயக்கர்கால ஓவியப் படையை நீக்கின் காணலாம். அதன் பின்வந்த குலோத்துங்க சோழன் மேலும் கோயிலை விரிவாக்கிச் சுற்றுமதில்கள் எடுத்துக் கலையழகூட்டினான். இருவரும் சூளாமணி விகாரையைக் காத்தனர். முதற் குலோத்துங்கன் காலத்தில் இந்நகர் அவனது மனைவியின் பெயரால் சோழ குலவல்லிப்பட்டினம் என வழங்கப் பட்டது.

உலகக் கண்ணாடி

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இந்நகர் செழிப்புற்றுத் திகழ்ந்தது. பல நாட்டு மக்களும் வந்து வாணிகம் செய்து உறைந்தனர். பெரும் மாளிகைகள் திகழ்ந்தன. சைவக் கோயில்கள் பெருகின. கடல் வழியாகக் கலங்களில் யானை, குதிரை, மணி, ஆடைகள் இறக்குமதியாயின. உலகப் பொருள்கள் யாவும் இங்கு நிறைந்திருந்தமையால் "குவலயங் காணும் ஆடிமண்டலம் போல்வதவ் வணிகிளர் மூதூர்" என்று சேக்கிழார் பாடினார்.

நாகையில் மார்க்கோபோலோ

பதின்மூன்றாம் நூற்றாண்டில் புத்த மதத்தைச் சார்ந்த சீன நாடு, சாவக நாடு, வடநாட்டுத் துறவிகள் இங்கு வந்து புத்த நூல்களை ஆராய்ந்தனர். சீன மொழியில் புத்தமத நூல் ஒன்று இங்கு உருவாகியது. அக்காலத்தில் தமிழகத்துக்கு வருகை தந்த மார்க்கோபோலோ இந்நகரைக் கண்டு தன் குறிப்பில் சிறப்பித்து எழுதியுள்ளார்.

சைவத் தலைநகர்

பதினுன்காம் நூற்ருண்டில் இறுதிக் காலத்திலிருந்து இந்நகரின் புத்தப் பெருமை குறையத் தொடங்கியது. வெளி நாட்டு வாணிகமும் குறுகியது. மூன்று நூற்ருண்டுகளில் இவ்வூர் பெயரற்றுப் போயிற்று எனலாம். எனினும் சிறுகச் சிறுகச் சைவ மதம் தழைத்தோங்கியது. தெருவிற்கு ஒரு கோயிலாய் உருவாயிற்று. 'சைவத்தலைநகர்' எனும் சிறப்பைப் பெற்றது.

காத்தான் சத்திரம்

15 ஆம் நூற்ருண்டில் பரதவர் குலத்தைச் சார்ந்த வருணகுலாதித்தன் சிற்றரசன் போல் இடம் பெற்ருன். அவன்மேல் அக்குலத்தைச் சார்ந்த அம்மையார் 'வருணகுலாதித்தன் மடல்' இயற்றினுர். இவன் ஒரு பஞ்சத்தில் அன்னமளித்துக் காத்தவன். ஆகையால் காத்தான் எனப்பட்டான். இன்றும் இவன் அமைத்த காத்தான் சத்திரம் உண்டு. இதனையே கவி காளமேகம் பாடினுர்.

கல்லறைக்குள் ஊசல்

17 ஆம் நூற்ருண்டில் ஆலந்துக்காரர், டச்சுக்காரர் வந்திறங்கினர்; ஆளுகையுங் கொண்டனர். வாணிகம் புரிந்தனர். அவர்களால் கட்டப்பட்ட கொடிமர மேடை அக்காலக் கட்டிடக் கலைக்கொரு சான்ருய் நிற்கிறது. 1709 இல் இங்கிருந்தாண்ட ஆலந்து நாட்டவரான ஆளுநரது திருமகளார் இங்கு இறந்தனர். அவரது அணிகலங்கள் யாவும் அணியப்பட்ட அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. கற்பாறைகளால் சுவரெடுக்கப்பட்ட (14'×14') நில வறையில் ஒரு ஊஞ்சலிடப்பட்டு அவ் ஊஞ்சலில் அவரது சவப்பெட்டி அமைக்கப்பட்டது. மேல் விமானம் எழுப்பப் பட்டது. சமாதிமேல் அமைக்கப்பட்ட கல்வெட்டமைந்த பாறை 8' 3" நீளமும் 6' 1" அகலமும் 8" தடிப்பும் கொண்டதாகும். இஃது மேலை நாட்டிலிருந்து வந்ததாகும்.

இவ்வம்மையார் கடல் வழியே வருங்கால் படகு கவிழ்ந்து உடல் தேடி எடுக்கப்பட்டதாகக் கூறுவர். இதைக் குறிப்பதுபோல் சமாதிக் கல்லில் ஒரு பெண்ணுருவம் அடிவயிற்றுப் பகுதியிலிருந்து ஆடை எழுந்து தலையைச் சுற்றி வளையமாகப் பிடிக்கப்பட்டிருப்பது போல் பொறிக்கப்பட்டுள்ளது. இஃதேபோன்று கல்லறைக்குமேல் கட்டப்பட்ட விமானத்தில் நான்கு பக்கங்களிலும் சுண்ணும்பால் செய்யப்பட்டு உள்ளது.

18 ஆம் நூற்ருண்டில் கிறித்துவச் சமயத்தார் கால் கொண்டனர். பள்ளிகளை அமைத்தனர். 19 ஆம் நூற்ருண்டில் புத்தப் பள்ளிகள் இருந்த இடத்தில் அவ்வடிப்படைக் கட்டிடத்தின் மேல் கட்டிடம் அமைத்துக்கொண்டு சோசப் கல்லூரி கண்டனர்; பின்னர் அக்கல்லூரியும் எடுபட்டது.

நிறைவும்—சிறப்பும்

இந்நகர் கீழத்தஞ்சை மாவட்டத் தலைநகராய் மிளிர்வதோடு பல புத்தமைப்புக்களைக்கொண்டது. வடக்கே இசுலாமியப் பேராலயம், தெற்கே கிறித்துவப்

கடல் நாகை!

காணற்கு இனிய நெடு மாடம்;
கலை விளையாடும் பெருங்கூடம்;
காண்பினிய நெடுமாடம் நிறைந்த
நெடுவீதிக்
கடல்நாகைக் காரோணம்.
கலவமயில் இயலவர்கள்
நடமாடும் செல்வக்
கடல் நாகை.

— சுந்தரமூர்த்தி நாயனுர்.

பேராலயம். இடையே நாகையில் சைவ வைணவ ஆலயங்கள் அமைக்கப்பட்டு சமய நிறைவு கொண்டது.

பேருந்து முதலிய ஊர்திகள், புகை வண்டி, படகு, கப்பல் ஆகிய மூவகைப் போக்குவரத்தையும் ஒரே காட்சியில் நாகையில் காணலாம். திங்களுக்கிரு முறை கப்பல்கள் வந்து செல்லுகின்றன; ஏற்றுமதி, இறக்குமதியிற் சிறந்து விளங்குகின்றது.

நூற்றுண்டு நகராட்சி :

இத்துணை நீண்ட பெரும் பழமை வரலாற்றைக் கொண்ட இந்நகர் இக் காலத்திலும் சிலவகை முதன்மைப் பெருமைகளைக் கொண்டது. நகராட்சி நாகை நாகூர் இணைந்த பரப்பைக் கொண்டது. 5·44 சதுரக்கல் பரப்பளவைக் கொண்டது. நகராட்சியின் வயது 100 ஆண்டுகள். இஃது முதன் முதலில் தோன்றிய நகராட்சிகளில் ஒன்று.

முதன் முதலில் ஆங்கிலக் கல்வி :

முதன் முதலில் தென்னிந்தியாவில் ஆங்கிலம் கற்பிக்கப்பட்ட பள்ளி இன்று விளங்கும் தென்னிந்தியத் திருச்சபை உயர்நிலைப்பள்ளி. அதன் வயது 150 ஆண்டுகள்.

இந்நாளில் ஒரு பலமுனைத் தொழிற் கல்லூரி, ஓர் இளைய பல முனைத் தொழிற் பயிற்சிப் பள்ளி, ஒரு தமிழ்க் கல்லூரி, ஐந்து ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகள், ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி, பல துவக்க, உயர் தொடக்கப் பள்ளிகள் மிளிர்கின்றன.

இரண்டு பாலங்கள் :

படகுப் போக்குவரத்துள்ள ஆற்றின் கடல் முகம் அடிக்கடி தூர்ந்துபோய் இடையூறு நேரும். அஃதை நீக்கப் புதிய மண்வாரிப் பொறி ஆலந்து நாட்டி லிருந்து பெற்று அமைக்கப்பட்டுள்ளது. அஃது இயங்குவதற்குக் கடலுக்குள் 795 அடி நீளமும் 16 அடி அகலமும் கொண்ட பாலம் 16 நூறாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. பாலத்தைக் கட்டி யமைத்தவர்கள் ''சிம்பிளெக்சு'' நிறுவனத்தார்.

மற்றொரு தூக்குப் பாலம் கடுவையாற்றில் பொதுப்பணித் துறையாரால் கட்டப்பட்டுள்ளது. பாலத்தில் இடையே படகு போகும் போது தூக்கி இறக்கும் முறையில் பொறி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு பாலங்களும் இந்தியாவில் குறிப்பிடத்தக்க அமைப்புக் கொண்டவை.

இந்தியன் எஃகுருட்டாலை ஒன்று அமைந்து கம்பி, தகடு, பட்டை முதலிய வற்றை நீட்டி உருவாக்கி ஏற்றுமதி செய்வதோடு பல நூறு தொழிலாளர்களை வாழ வைக்கிறது.

முதன் முதலில் தனித்தமிழ்க் கொள்கையை உருவாக்கிய மறைமலையடிகளார், முதன் முதலில் இசைத்தட்டில் பாடின 'பிளேட்' வேங்கடராமய்யர் முதன் முதலில் வடமொழி நான்மறையைத் தமிழில் மொழி பெயர்த்த இராசாராம் ஐயர் இந்நகர்ப் பெருமக்கள்.

அவுரித்திடல், காடம்பாடி, யானை கட்டி முடுக்கு, மருந்துக் கொத்தளத் தெரு, கோட்டைவாயில், நாணயக் காரத் தெரு, கொடிமரத்து மேடை முதலிய சின்னங்கள் நீண்டகால வரலாற்றை அறிவித்து நிற்கின்றன.

வாழ்க நன்மை சான்ற நாகர்ப்பட்டினத் திருநகரம்.

பாவேந்தர் தமிழ் அரங்கு

நாகைவாழ் புலவர் பெருமக்கள்
பதின்மூவரது கட்டுரைக் கோவை

தமிழ்நாட்டரசு
உள்ளாட்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு **மா. முத்துசாமி,** பி. ஏ., பி. டி. அவர்களது
தலைமைக் கருத்துரை

"இனிமைத் தமிழ் மொழி எமது" என்று தொடங்கும் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் வரிகளில் உள்ள சொற்றொடர்களைத் தலைப்புகளாகக் கொண்டு பதின்மூன்று புலவர்கள் தமிழுக்கு அவ்வத் தலைப்பு பொருந்துவதை மிகத் தெளிவாக இப்பகுதியில் விளக்கியுள்ளார்கள்.

'தமிழ் இனிமையானது — நமக்கு வாய்த்த நல்லமுது – கனி பிழிந்த சாறு - இதை மொழியாகப் பெற்றது நம் பேறு'.

சொற்சுவை செறிந்தது தமிழ் – இதையொத்த சுவையே வேறெங்கும் நாம் கண்டதில்லை–இம்மொழி மீது யாவர்க்கும் நனியுண்டு காதல்.

தமிழ் எங்கள் உயிர் - இதன் வளர்ச்சி குறையுமேல் நாடெல்லாம் இருள் - இம்மொழி மேலும் மேலும் உயர நாம் நாளும் செய்வோம் நல்ல தொண்டு.

தமிழனே! தமிழ் என்று தோள் தட்டி ஆடு-தமிழ் வெல்க என்றே தினம் பாடு' இவையே இவ்வறிஞர்கள் எடுத்தியம்பியுள்ளவற்றின் சாறு.

தமிழ் மொழியின் இனிமைக்கு அதன் சொல்வளத்தை எடுத்துக் காட்டுகிறார், புலவர் அறிவொளி அவர்கள். 'கொண்ம்' என்ற சிலப்பதிகாரச் சொல்லின் ஒலியளவு, கண்ணகியின் மனத்தடுமாற்றத்தைக் காட்டும் தன்மையை அழகுற விளக்குகிறார். ஒலியளவு (மாத்திரை) கொண்டு நயம் காட்டத்தக்க சொற்கள் தமிழில் நிறைய உண்டு. திருக்குறளில் புல்லறிவாண்மை என்ற அதிகாரத்தில்

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஓம் அளவுமோர் நோய்

—என்ற குறள் உண்டு.

'தானும் தெளியானாய்ப் பிறர் ஏவினாலும் கேளானாய் உள்ளவனுடைய உயிர் போகுமளவும் ஒரு நோய்' என்பது இதன் பொருள். புல்லறிவாளர்களுடைய உயிர் மன்பதையைப் பிடித்துள்ள கொடிய நோய். அத்தகையோருடைய உயிர் விரைவில் நீங்கிவிடுவது நல்லது. ஆனால், நல்ல உயிர் விரைவில் நீங்குவதும், கெட்ட உயிர் நீண்டு செல்வதும் உலக இயற்கையாக இருக்கக் காண்கிறோம். புல்லறிவாளர்களுடைய உயிர் விரைவில் நீங்காது என்பதைத்தான் – அந்த உயிர் நீட்டிக் கொண்டே போகும் என்பதைத்தான் - போஓம் என்ற அளபெடையின் மூலம் நீட்டி வள்ளுவர் சொல்கிறார் என அறிஞர் பெருமக்கள் கூறுவர். போம் என்பதைப் போஓம் என அளபெடுத்துச் சொல்லியதன் நயம் அறிந்து இன்புறத் தக்கது.

புலவர் பல்கதிர்ச்செல்வன் அவர்கள் கவின்மிகு கற்பனை கொண்ட இலக்கியங்களைக் காண்போர் 'இதுவன்றோ எமக்கு இன்பம்' எனப் பூரிப்பர் என்கிறார். உண்மைதான்! மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் மண்ணோடு மண்ணாகி மறைபவை. ஆனால், கவிதை மாளிகைகளோ காலத்தைக் கடந்து நிற்பவை. ஆங்கில நாடகப் பேராசிரியர் செகப்பியர் உலகில் கற்பனையாளர்களாக மூவரைக் காண்கிறார். பைத்தியக்காரன், காதலன், கவிஞன் ஆகிய மூவரும் கற்பனையின் செறிவாகத் திகழ்பவர்களாம். இவருள் பைத்தியக்காரன் கற்பனை, தான் காணும் அனைத்தையும் பேய்க்கூட்டமாகக் காணும். தான் விரும்பும் பெண்ணின் அழகிலே அனைத்தையும் காணும் வியத்தகு கற்பனையாகக் காதலனின் கற்பனை திகழும். கவிஞனின் கற்பனையோ, விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் தாவி ஒன்றுமற்ற ஒன்றுக்கு ஒரு பெயரையும் அழகையும் தரும். காலையில் காக்கை 'கா, கா' எனக் கரைகிறது. கவிஞர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இதைக் கேட்கிறார். அவரது கற்பனை, சிறகடித்துப் பறக்கிறது. காக்கை, ஏன் 'கா – கா' எனக் கத்துகிறது என்ற ஒரு வினாவை எழுப்பி விடையும் பகர்கிறார். காலையில் பகலவன் தோன்றியதும் அவனுடைய முதல் வேலை இருட்டை உண்பதாகும். 'நாம் இருக்கிறோம் கருப்பாக. நம்மையும் இருட்டு என்று எண்ணிப் பகலவன் விழுங்கி விட்டால் என்ன செய்வது' என்ற அச்சம் காக்கைக்குத் தோன்றி விட்டதாம். அதனால், நடுங்கிய காக்கை, பகலவனைப் பார்த்து முறையிடுகிறதாம். 'பகலவனே! நான் கருப்பாக இருப்பதால் இருட்டு என்று எண்ணி என்னை விழுங்கிவிடாதே! நான் ஒரு பறவை; என்னைக் காப்பாற்று (கா, காப்பாற்று (கா)' என முறையிடுகிறதாம்! கா என்பதற்கு உள்ள காப்பாற்று என்ற பொருளைக் கொண்டு அருமையான கற்பனையைத் தோற்றுவிக்கிறார் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை.

''இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த் திருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாம் தம்பெயர் விளம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்''

என்ற இத்தகு கற்பனைகளைக் காணும்போது 'எமக்கு நல்லின்பம்; இன்பம்!' என்று சொல்லி மகிழாமல் இருக்க முடியுமா?

தமிழின் பொருளமைப்பு புலவர்க்கும், அறிஞர்க்கும், ஆய்வாளர்க்கும் வாய்த்த நல்லமுது என்கிறார், புலவர், மாணிக்க கணபதி அவர்கள். பொருமை யுடையவனைக் கண்டு பொருமைப்பட்டுத் திருமகள் தன் தமக்கைக்கு அவனைக் காட்டி, நீங்கி விடுவாள் என்ற கருத்துடைய குறளின் பொருள் அமைப்புச் சிறப்பை இவர் விளக்குகிறார். செய்யவள், கரியவள் (சீதேவி, மூதேவி) ஆகிய இரு வரைப் பற்றியும், மற்றோர் இடத்திலும் வள்ளுவர் நயந்தோன்றப் பேசுகிறார்:

''மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்''

மாமுகடி—மூதேவி ஒருவனுடைய மடியிலேயும், திருமகள் தாளிலேயும் இருப்ப தாக வள்ளுவர் கூறுகிறார். மாமுகடிக்கு மடியையும், திருமகளுக்குத் தாளையும் ஒதுக்கிக் கரியவளுக்கு உயர்ந்த இடம் தருவதுபோல இருக்கிறது, சொல்லமைப்பு. ஆனால், பொருளமைப்போ? மடி என்பதற்குப் பொருள் சோம்பல்; தாள் என்ப தற்குப் பொருள் முயற்சி. மடியிலே (சோம்பலில்) வாழ்பவள் கரியவள்; தாளிலே (முயற்சியிலே) உறைபவள் திருமகள். இத்தகு சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்த திருக்குறளையும் மற்றும் பல்வேறு இலக்கியங்களையும் கொண்டுள்ள தமிழை நமக்கு 'வாய்த்த நல்லமுது' என்று சொல்லத்தானே வேண்டும்!

'கனியைப் பிழிந்திட்ட சாறு' என்ற கவிஞரின் சொற்றொடரைத் தலைப் பாகக் கொண்டு, தமிழ் கனிச்சாறுப் பேசப்படும் இடங்கள் பலவற்றைப் புலவர் சாமிநாத முதலியார் அச்சாறொத்த இனிப்புடன் இயம்புகிறார். குமரகுருபரர் "துறைத் தீந்தமிழில் ஒழுகும் நறுஞ் சுவையே'' என்று இறைவியைத் தமிழ்ச் சுவையாகக் காணுகிறார்.

தமிழ் நமக்குக் கிடைத்த பெறற்கரிய பேறு. இதைத்தான் பாரதிதாசன், ''யாம் பெற்ற பேறு'' என்று இறுமாந்து பேசுகிறார். இத் தலைப்பில் கட்டுரை யாத்துள்ள புலவர் வை. மு. சண்முக தேசிகரோ நாகைத் தமிழ்ச் சங்கம் செய்து வரும் தொண்டுகளால் விளைந்த – இனி விளைய இருக்கும் நன்மைகள் யாவற்றையும் நாகை மக்கள் தாம் பெற்ற பேறாக எண்ணி மகிழ வேண்டு மென நிமிர்ந்து பேசுகிறார். நாகைத் தமிழ்ச் சங்கம் புரிவது நற்றமிழ்த் தொண்டே! அச்சங்கத்தைப் பாராட்டுவது தமிழைப் பாராட்டுவதேயாகும்! சங்கத்தை—அதன் மூலம் தமிழைப் பெறும் நாகை மக்கள் பேறு பெற் றவர்களே!

அடுத்து, தனிமைச்சுவையுள்ளதாகச் சிலப்பதிகாரத்தில் உள்ள 'வீழ்' என்ற சொல்லின் நயத்தை விளக்குகிறார் புலவர் இராசு அவர்கள். 'திரு வீழ்' என்ற சொல்லுக்கு நம் உள்ளம் வீழ் (விரும்பும்) நயத்தை இங்கே கட்டுரை ஆசிரியர் காட்டியுள்ளார். இது போன்ற மற்றோர் இடத்தையும் சிலம்பிலே காட்டுவார்கள்

புலவர் பெருமக்கள். கோவலனும் கண்ணகியும் மதுரையில் மாதரி வீட்டில் தங்கினர். கோவலனுக்குக் கண்ணகி உணவு படைத்தாள். உண்டு ஓய்வெடுத்த பின்னர், கோவலன் கண்ணகியின் குண நலன்களைப் பாராட்டியவனுய்க்

"கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னென்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென"க் கூறிச்

சிலம்பு விற்கச் செல்கிருன். மாறி வருவேன் எனக் கோவலன் கூறும் போது அவன் நினைந்தது இச் சிலம்பை விற்று வருவேன் என்பது தான். நாமோ அங்கு வேருெரு பொருளையும் நினைந்து பார்க்க முடிகிறது. 'சிலம்பைக் கையிலே கொண்டு இப்போது செல்கிறேன்; இந்த உருவிலிருந்து மாறித்தான் இனி வருவேன்; முழு வடிவோடு செல்கின்ற என்னை இனி, உயிரும் உடலும் பிரிக்கப் பட்ட—மாறிய நிலையில்தான் காண முடியும்' என்று சொல்வது போன்ற கருத்தையும் இங்கே நாம் அறிய முடிகிறது.

'வாய்மையே உறுதியளிக்கும் என்ற கருத்தை வேதநாயகப் பெரியார் ஒரு பாடலில் சொல்லும் முறையைக் காணும்போது அவர் சொற் சுவையொப்ப வேறெங்கும் தான் கண்டதில்லை எனக் கூறத் தோன்றுகிறது' என்கிருர் புலவர் செ. சூசை அவர்கள்

"சொல்லுக சொல்லைப் பிரிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து"

என்பதை உணர்ந்த புலவர்கள் தாம் சொல்வதைச் சிறப்புறச் சொல்வது இயல்பேயாகும். கருத்தை அழகுபடக் கூறும் முறை புலவர்களின் உடன் தோன்றி வளரும் ஒரு சிறப்பாகும்.

சயங்கொண்டாரின் பாணியிலே காதல் கொண்டு, காதற்சுவையமைந்த ஒரு பாடலைப் பிடித்து 'இங்கே நனியுண்டு காதல்; இதைக் காணீர்' என அழைக்கிருர் புலவர் சண்முகம் அவர்கள். மங்கையர் மீது கொள்ளும் காதலைவிட, தமிழ் மீது பெருங்காதல் கொண்டவர் நம் நாட்டார். "மங்கை யொருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழ்க்கு ஈடில்லை என்றுரைப்போம்" என்று சிந்து பாடும் தமிழ்க் காதலர் நிரம்பியது இந்நாடு. எனவே தமிழின் பால் 'நனியுண்டு காதல்' என்ற கூற்று முற்றிலும் பொருந்துவதாகும்.

தமிழ் எங்கள் உயிர் என்ற தலைப்பில் புலவர் சுந்தரராசனுர் உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்பதை உணர்ச்சி ததும்ப உரைத்துச் செல்கிருர். நாடு இன்று பல துறைகளிலும் முன்னேறி வருகிறது. எத்துறையாவது தமிழை நீக்கி மற்றமொழியைக் கொள்ளுமேயானுல், அது உயிரற்ற உடலுக்கு ஒப்பு என நாம் எண்ண வேண்டும்.

தமிழ் குன்றினுல் நாடே இருண்டுவிடும். இந்த நூற்றுண்டில 'தமிழே அண்ணு – அண்ணுவே தமிழ்' என்ற அளவுக்குத் தமிழும் அண்ணுவும் ஒன்றெனப் பிணைந்து நின்றதை நாமறிவோம். அண்ணு மறைந்தார்; தமிழே மறைந்தது போன்ற உணர்வை நாம் பெறுகிருேம். புலவர் கோ. இராமசாமி அவர்கள் கூறுவது போன்று நாடே இருண்ட நிலையில் இருப்பதாகக் குமைந்து நிற்கிருேம். இருப்பினும் அவர் தந்த தமிழால் அறிவொளி சிறக்கச் செய்வோம்! "மணக்க வரும் தென்றலிலே குளிரா இல்லை; தோப்பில் நிழலா இல்லை" இவை

என்றும் போல இன்றும் உண்டு. இவை போன்றே தவருது இருக்கவேண்டிய ஒன்று 'இல்லை'. என்ன அது? "தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை". கடந்த சில ஆண்டுகளாகத் தமிழறிஞர்களின் - தொண்டர்களின் அரிய முயற்சியால் இருள் நிலை நீங்கி ஒளி நிலை பெற்று வருகிருேம். இவ்வொளி பேரொளியாகத் திகழ முயல்வோமாக!

'தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பண்புடைய ஆன்ருேர்கள் வாழ்தலினுலேயே இவ்வுலகம் நின்று நிலவுகிறது' என்ற புறநானூற்றுப் புலவரின் கருத்தோடு தொடங்கி அத்தகைய பெரும் பண்பைப் பெற்றிருந்த மறைமலையடி களாரைப் பின்பற்றித் தனித்தமிழ் வளர நாம் நாளும் செய்வோம் நல்ல தொண்டு என்கிருர் புலவர் இரா. பா. பால்ராசு அவர்கள். தனித் தமிழ் இயக்கம் மேலும் வளர்ந்து வலிவும் பொலிவும் பெற வேண்டுமென்ற இவ்வாசிரியரின் ஆர்வம் பாராட்டுக்குரியது. 'எல்லாம் தமிழ் -எங்கும் தமிழ்' என்ற நிலை மலர நாம் பாடுபடுவோமாக!

தமிழ் - மூன்றெழுத்துச் சொல். அதன் பொருளான இனிமை என்பதும் மூன்றெழுத்துச் சொல்லே. இவ்வாருக மூன்றின் பெருமையைச் சுட்டிக்காட்டி முத்தமிழின் பெருமையை எண்ணித் 'தோள் தட்டி ஆடு' என்கிருர் புலவர் எம். மணிமேகலை அம்மையார்.

இத்துணைப் பெருமையும் கொண்ட தமிழே 'நீ வெல்க!' என வாழ்த்து கிருர் பேராசிரியர் செயச்சந்திரன். செயச்சந்திரன் - வெற்றி ஒளி அன்ருே! எனவேதான் தமிழும் வெற்றி ஒளி வீசும் நிலவாக விளங்க வேண்டுமென உளம் குளிர்ந்து வாழ்த்துகிருர்.

'வெல்க தமிழ்' என்ற முழக்கம் இன்று எங்கும் கேட்கிறது. இந்நிலை ஏற்படத் தமிழறிஞர்கள் ஏற்ற தொல்லைகள் கொஞ்சமோ? 'எந்தமிழ் வாழ்க!' என்றெழும்பிய வாழ்த்தை இழித்துரைத்தோர் - கண்டித்தோர் பலர். 'தமிழ் வாழ்க என்று முழங்குகிருர்களே! தமிழ் வாழ வேண்டுமென்பது இவர்கள் நோக்கமன்று; மற்ருெரு மொழி ஒழிக - அதாவது இந்தி ஒழிக என்பதையே மறைமுகமாக இவ்வாறு கூறுகிருர்கள்' என்றனர். அத்தகை யோர்க்கும் கண்ணியமான விளக்கம் தரப்பட்டது. திருமண வீட்டுக்குச் செல் கிருேம். 'மலரோடு மணமக்கள் இனிதாக வாழ்க! மாடப்புருவென்ன மன மொத்து வாழ்க' என்று வாழ்த்துகிருேம் என்ருல் மணமக்கள் மட்டும் வாழ வேண்டும்; மணத்திற்கு வந்திருக்கும் மற்றையோர் மாள வேண்டும் என்பதோ பொருள்? மணமக்களை வாழ்த்த வேண்டிய வேளை; 'வாழ்க' என வாழ்த்துகிருேம். தமிழ் நம் தாய்மொழி. 'எம் தாயே நீ வாழ்க!' என வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிருேம். இது மற்றெந்த மொழியையும் பழிப்பதோ இழிப்பதோ ஆகாது என எடுத்துக் கூறப்பட்டது. அறிஞர்கள் இவ்வாறெல்லாம் எடுத்துக் கூறித் தமிழ் முழக்கம் செய்துவந்தமையால் இன்று தமிழாய்ந்த தமிழ்ச் சான்ருேர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை மீதூர 'வெல்க தமிழ்' என வெற்றிக்களிப்போடு கூறி மகிழ்வோமாக!

பாவேந்தரின் பாடலில் வரிக்கு வரி வளம் காணும் நாகைத் தமிழ்ச் சங்கத்தாரின் முயற்சி வளர்க! வெல்க!!

இனிமைத் தமிழ் மொழி

புலவர் **அ. அறிவொளி**
தமிழாசிரியர், சிக்கல்.

மாதவியை வெறுத்த கோவலன் கண்ணகியை எதிர்ப்படுகிறன். 'குன்று போன்ற குடும்பச் செல்வத்தைத் தொலைத்துவிட்டு வெறுங்கையோடு நிற்பது எனக்கு நாணமாக இருக்கிறது' எனச்சொல்லி அவன் மெள்ள வருந்துகிறன், ''சிலம்புள கொண்ம்'' எனக் கண்ணகி பேசுவதாகக் கூறுகிறர் இளங்கோவடிகள்.

கொள்ளும் என்றமைய வேண்டிய சொல் (கொள்ளும்—கொளும் - கொள்ம்—கொண்ம்) குறைந்து, குறைந்து, திரிந்து வருகிறது. ஏன் இவ்வாறு திரிகிறது? இரண்டு உதடுகளும் ஒட்டினல்தான் 'ம்' என்ற எழுத்து பிறக்கும். அதற்கு ஒலியளவு (மாத்திரை) அரை நொடி. 'கொண்ம்' என்னும்போது 'ம்' என்பதற்குக் கால் நொடிதான் ஒலியளவாகும். ஆகவே, இரண்டு உதடுகளும் ஒட்டுவது போலும், ஒட்டாமலும் அரை குறையாக ஒலித்துத்தான் இச்சொல்லிறுதியைச் சொல்ல வேண்டும். இச்சொல்லைப் பெய்தமையால் அவளது அரை குறையான தடுமாற்றத்தையும், மீண்டும் பொருள் கிடைப்பதற்கு வாய்ப்பாகச் சிலம்பைக் கொடுத்தால் மறுபடியும் பிரிந்துவிடுவாரோ என்ற இயல்பான அச்சத்தையும் இச்சொல் திரிந்து நின்று காட்டுகின்றது.

'குன்றளவு செல்வத்தைத் தொலைத்தேன்' என்று கூறுகிறன் அவன். 'சிலம்புள' என்கிறள் அவள். சிலம்புக்கு மற்ருெரு பொருள் மலை என்பது. குன்று தானே தொலைந்தது; இதோ மலை இருக்கிறது என்பதாகவும் ஒருநயம் கிடந்தது. 'சிலம்புள' என்ற பன்மையால் பல மலையளவும் நிகர்த்த செல்வம் எனவும் ஒரு பொருள் கிடந்தது. அவனது வரவை மலை மலையாய் அவள் மகிழ்வதனையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

இத்தகைய சொல்வளம் மிக்கதனலன்ருே ''இனிமைந் தமிழ் மொழி'' என்று வழங்கப்படுகிறது நந்தமிழ்மொழி.

எமக்கு நல்லின்பம்

புலவர் **பல்கதிர்ச்செல்வன்**
நடராசன் தமயந்தி உயர்நிலைப்பள்ளி, நாகை.

இவ்வுலகில் சிற்சில பெயர்கள் பொதுவாகப் பலவற்றைக் குறித்தாலும் சிறப்பாகவும் குறிப்பாகவும் ஒன்றையே நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தும்.

'அண்ணு' என்ருல் அண்ணன் என்ற பொருளில் பல்லோர்க்கும் பொருந்தும். ஆயினும், முத்தமிழின் மூதறிஞர் 'அண்ணு' அவர்களையே நம் மனக்கண் முன் நிறுத்தும். அதேபோல், கற்பனைக் களஞ்சியம் என்ருல் வீர சைவ வானில் 17-ஆம் நூற்ருண்டின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த சிவப்பிரகாசரையே உணர்த்தக் காண்கிரேம்.

அச்சிவ ஒளி முப்பது ஆண்டுகளே இப்பூவுலகில் மிளிர்ந்தது. எனினும், முப்பதுக்கு மேற்பட்ட சுவைநலங் கனிந்த இலக்கியங்களை யாத்தளித்த அவர்தம் வீயா விழுப்புகழை என்னென்பது!

ஒரு முத்தான கற்பனையைக் காண்போம்:

அழகான பற்களைக் குறிப்பிட முனைபவர்களெல்லாம் முத்தொத்த பற்கள் என்பர். இவ்வாறு குறிப்பிடுவதை முத்து கேட்டுப் பூரிப்படையுமாம். 'பிரபுலிங்க லீலை' என்னும் இலக்கியத்தில் மாயை பிறந்தாள்; மங்கையானாள். முத்தின் புகழுக்கு வந்தது கேடு; ஆம், மாயை பிறந்ததற்குப் பின் மாயையின் பற்கள் போன்ற முத்து என்றார்கள். மாயையின் பற்களால் மானமழிந்ததைப் பொறுத முத்து, மானம் போக்கிய மாயையின் பற்கள் வாழும் வாயின் முன் தூக்கிட்டுக் கொண்டு தொங்கியதாம். இவ்வகையில் முத்து தொங்கினால் எவ்வாறிருக்குமோ, அதுபோல மாயைக்கு மூக்கணி (பிலாக்கு என்பர்) அணிவித்தாளாம் ஒரு தோழி. என்னே கற்பனைக் களஞ்சியத்தின் கவித்திறன். பாடல் இதோ:

தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழி சார
மன்னி யங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்னி றந்திடு வேனென ஞான்றுகொண் முறைமை
யென்ன வெண்மணி மூக்கணி ஒருத்திநின் றிட்டாள்.

இலக்கிய நயந் தேர்வோர் இவ்வியத்தகு கற்பனைகளை 'எமக்கு நல்லின்பம்' என்றன்றோ கூறிப் பூரிப்பர்.

வாய்த்த நல்லமுது

புலவர் **மாணிக்க கணபதி** பி. ஓ. எல், பி.ஈடி.
குமரன் உயர்நிலைப்பள்ளி, மஞ்சட்கொல்லை.

'அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்' —

என்ற குறளின் பொருள், பிறர் செல்வங்கண்டு பொறாமையுடையானைப் பார்த்த திருமகள் தான் பொறுக்காது தன் தவ்வைக்குக் காட்டி நீங்குவாள் என்பதாம். தவ்வையை என்பதற்குப் பொருள் தவ்வைக்கு என்பதாம். தவ்வைக்கு என்ற சொல்லையே பெய்திருப்பின் இலக்கணப்பிழை இல்லை. தவ்வையை என்பதற்குத் தவ்வைக்கு எனப்பொருள் கொள்வது உருபு மயக்கம். மென்மையான ஓசையின்பம் கருதி உருபு மயக்கத்தை அமைப்பர்.

அழுக்காறுடையானைத் தவ்வைக்குக்காட்டி எனின், தவ்வைக்கு என்பதில் நான்காம் வேற்றுமை உருபு 'கு' உள்ளது. அழுக்காறுடையானை என்புழி இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' உள்ளது. 'முருகனுக்கு வள்ளியைக் கொடுத்தனர்' என்புழி எந்தப் பொருளுணர்ச்சி முருகனுக்குக் கிடைக்குமோ அந்தப் பொருளுணர்ச்சி தவ்வைக்கும், எந்தப் பொருளுணர்ச்சி வள்ளிக்குக் கிடைக்குமோ அது அழுக்காறுடையானுக்கும் அமைகின்றன. அன்றி, குறள் மணியின் அமைப்புப்படி அழுக்காறுடையானைத் தவ்வையைக் காட்டி எனின் 'வள்ளிக்கு முருகனைக் கொடுத்தனர்' என்புழிப்போல அதிகாரத்தன்மை வள்ளிக்கும், அடுத்த தன்மை முருகனுக்கும் வந்தமைந்து பொருள் முற்றிலும் மாறுபட்டுவிடுகின்றது.

எனவே, பல்லாற்ருனும் நோக்கினல் தவ்வைக்குக் காட்டி என்றிருப்பின் ஓசையின்பம் அமைந்து, இலக்கணப் பிழையுமின்றிப் பொருளும் சிறக்கின்றது. இவ்வாறிருக்கத் திருவள்ளுவப் பெருமான் இரண்டாம் வேற்றுமை உருபைப் பெய்வானேன்? நோக்குவாம்:

நான்காம் உருபு 'கு' வரின் அச்சொல் எப்பொருளாயினும் அதனை ஏற்று நிற்கும் சொல்லாகும். அத்துடன் 'முருகனுக்கு வள்ளியைக் கொடுத்தனர்' என்ருற்போலச் சிற்சில இடங்களில் அதிகாரப் பொருண்மையும் உண்டு. இரண்டாதவன் உருபு 'ஐ' வரின் அச்சொல் ஏற்கும் பொருள்களில் உடைமையும் ஒன்று. அத்துடன் போய்ச்சேரும் தலைமையும் அச்சொல்லுக்குக் கிடைக்கிறது. இம்முறையில் நோக்கினல் தவ்வை அழுக்காறுடையானை ஆட்டிப் படைக்க இருக்கிருள். அவளுக்கு அதிகாரம் தருதல் வேண்டும். அழுக்காறுடையானை அழைத்து வந்து தவ்வையிடம் விடுவதில் உள்ள வலிமையைவிட, தவ்வையை அழுக்காறுடையவனிடம் அழைத்துச் சென்று விடுவதில் வலிமை அதிகம் உண்டு. எனவேதான், தவ்வைக்கு என்ற பொருள் உணர்ச்சியில் அதிகாரத்தைத் தந்து, தவ்வை என்ற சொல்லில் உடைமைப் பொருளையும் அழுக்காறுடையானிடம் சேரும் தன்மையையும் அதனுள் அமைத்துப் பொருள் மயக்கமாக்காது, தவ்வையைக் காட்டிவிடும் என உருபு மயக்கமாகக் கூறினர். திருவள்ளுவப் பெருமானது நுண்ணிய இத்திறம் நினைந்து சுவைக்கத்தக்கது.

இத்தகைய பொருளமைப்பு, புலவர்க்கும் அறிஞர்க்கும் ஆய்வாளர்க்கும் 'வாய்த்த நல்லமு'தாகும்.

கனியைப் பிழிந்திட்ட சாறு

புலவர். **ஆ. சாமிநாத முதலியார்,**
குமரன் உயர்நிலைப்பள்ளி, மஞ்சட்கொல்லை.

நம் செந்தமிழ் மொழி பொருள் விளக்கத்துடன் இனிமையும் கொண்டு விளங்குகின்றது

"தமிழ் சிவம் இனிமையெனும் தனிப் பொருளாம்" என்பது கழாரம்பரது பேரிசை நூற்பா. "தமிழ் தழீஇய சாயலவர்" எனுந் தொடரில் தமிழ் இனிமை எனும் பொருளில் அமைந்துள்ளது பரவையார்பால் அன்பு மேம்பட்டு அவர் நினைவால் வாடிய நம்பியாரூரர் வெம்மையாக வீசும் தென்றலை நோக்கி "மறம் பயின்ற தென்கோ தமிழ்மாருதம்" என்று வினவும் வாயிலாகத் தமிழ் என்ற சொல்லால் தென்றலின் இனிமையைப் புலப்படுத்துகின்ருர்.

இவ்வினிமைத் தமிழ் கனிச்சாருய்ப் பேசப்படும் இடங்கள் பல. "தித்திக்கும் செங்கனியே; செங்கனியின் மேலான முத்திக்கனியே என் முத்தமிழே" என்று தமிழ்விடு தூது பேசுகிறது. அப்பேச்சில் 'முத்திக்கனி' என்ற தொடர் என்னைக் கவர்கிறது.

கனிச்சாற்றுத் தமிழால் இறைவனை இனிமையாகச் சுவைத்த பெரியோர் தம் உணர்ச்சி மிகச் சுவையானது. சிவனெனுஞ் செம்மேனியன்பால் அன்பு

கொண்ட ஆளுடைய பிள்ளையார் தன்னைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்று பல இடங்களில் குறித்துத் தமிழுக்கு இனிமை என்ற பொருளைச் சுட்டுவதோடு இறையன்பின் இனிமையையும் சுட்டியுள்ளார்.

இத் தமிழினிமையைக் கனிச்சுவையோடும் இறையன்போடும் கூட்டி ஆளுடைநம்பியார் "பண்ணிடைத் தமிழொப்பாய், பழத்தினிற் சுவையொப்பாய்" எனப்பாடுவது இறைவனைக் கனிச்சாறுய்ச் சுவைப்பதாகும். தமிழோடிசைபாடல் மறந்தறியா ஆளுடையரசர் கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியனுகவன்றே இறைவனைக் காண்கின்றுர்.

இராமலிங்க வள்ளலாரோ "தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றுய்க் கூட்டி" இறைவனது அருளைச் சுவைக்கும் திறம் நம்மையும் வாயூற வைக்கிறது.

தமிழ், கனியைப் பிழிந்திட்ட சாறு; அவ்வழி இறைவனும் கனியைப்பிழிந்திட்ட சாறு.

யாம் பெற்ற பேறு

புலவர். **வை. மு. சண்முக தேசிகர்,**
நாட்டுயர்நிலைப்பள்ளி, நாகை.

மறைமலை யடிகளார் மாணடி வணங்கி
இறைதமிழ்க் கட்டுரை எழுதுவன் இனிதே.

யாம்பெற்ற பேறு என்னும் தலைப்பினை முக்கூறுபடுத்தி, யாம் என்பதனைத் தன்மை பன்மைப் பெயராகவும், பெற்ற என்பதனைப் பெயரெச்சமாகவும், பேறு என்பதனைத் தல் விகுதி குன்றிய முதனிலை திரிந்த தொழிற் பெயராகவும் கூறுவர்.

மக்கள் அடையத்தக்க பேறுகள் பலவகைப்படும். ஆயினும், பதினுறு என்று வரையறை செய்துள்ளனர் நந்தமிழ் மூதாதையர். அவற்றினை,

உருவளர் வயதுபூமி உயர்தவம் கருணை யூக்கம்
பெருநிதி யொழுக்கம் சீலம் பேரபி மானங் கல்வி
பொருவலி விசயம் வீரம் புண்ணியம் மானம் கல்வி
திருமலி புகழ் ஈரெட்டும் பெற்றுநீர் வாழி! வாழி!

என்னும் பாடலால் உணரலாகும். பேறுகளுள் சிறப்பாக நான்கு பேறுகளைக் கூறலாம். கல்விப்பேறு, செல்வப்பேறு, மக்கட்பேறு, திருவடிப்பேறு என்பன அவை. பொதுமறை அருளிய திருவள்ளுவப் பெருந்தகையாரும்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

என்று பசுமரத்தாணி யறைந்தாற்போற் பகர்ந்துள்ளார். இதிலிருந்து கல்விப் பேற்றின் சிறப்பினை உணரலாகும்.

செல்வப் பேற்றினைப்பற்றி நாலடியார் "வடுவிலா வையத்து மன்னிய மூன்றின் நடுவண தெய்த இருதலையும் எய்தும்" என்ற செய்யுளில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் நடுவிடத்தில் உள்ள பொருள் ஒருவனிடம் இருந்தால்தான் அவன் அறத்தையும் இன்பத்தையும் அடைதல் கூடும் என்

கிறார். மணிவாசகப் பெருமானும் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்று திருக்கோவையாரிற் கூறியுள்ளார். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையன்றோ?

மக்கட்பேற்றைப்பற்றித் திருவள்ளுவர்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்று கூறியுள்ளமையால் அறியலாகும். ஒருவன் பெறுகின்ற பேறுகளுள் மிகச் சிறந்த பேருக மக்கட் பேற்றைக் கூறியுள்ளார். வேறு எந்தப் பேற்றையும் பொருளாகக் கருதினாரல்லர்.

நான்காவது பேருகிய சிவப்பேறு அல்லது திருவடிப்பேற்றைப் பற்றிக் காண்போம். அறுபான்மும்மை நாயன்மார்களும், ஆழ்வார்களும், மற்றும் பட்டினத்தார், தாயுமானார் வள்ளலார் முதலியவரும் திருவடிப்பேற்றினையே விரும்பிப் பெற்றுளர் என்பதற்குச் சான்றுகள் பலப்பல உள. "பேறினி இதன் மேலுண்டோ ?" — என்று கண்ணப்பநாயனர் புராணத்தில் கண்ணப்பர் மற்றொரு கண்ணையும் பெயர்க்கத் தொடங்கியபோது இறைவன் அவர் கையைப் பற்றிக் கொண்டு மூன்று முறை "நில்லுகண்ணப்ப" என்று கூறிய போது சேக்கிழார் கூறியுள்ளார். திருவடிப்பேற்றை யாரும் எளிதில் அடைந்துவிட இயலாது. அதற்குரிய பக்குவமுடையார்க்குத்தான் அப்பேறு கிட்டும்.

நாகை வாழ் மக்களாகிய யாம் பெற்ற பேறு என்ன? நாகையிற் பல்லாண்டுகள் வாழ்ந்த — வாழ்கின்றவர்களாகிய நாம் கனவிலுங் கண்டறியாத — நாகை வரலாற்றிலும் காணமுடியாத பேறுகளைப் பெற்றுள்ளோம். கோவை இளஞ்சேரன் என்னும் அருள்முகில் வழங்கும் நாகைத் தமிழ்ச் சங்கத்தின் மறைமலையடிகள் நூலகம், இலவய மாணவர் இல்லம், ஐயப்பேழை, இலக்கிய புலவர் வகுப்புக்கள், பல இளம் புலவர், முதுபெரும்புலவர், அறிஞர்களின் சொற்பொழிவுகள், தமிழ்க் கல்லூரி, மறைமலையடிகளாரின் சிலை மற்றும் பல. இவைகளே நாகைவாழ் மக்களாகிய யாம் பெற்ற பேறுகள் ஆகும். இதனை யாராலும் மறுக்க இயலாது. உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. புகழுரையே யன்று; பொருளுரையேயாகும். நாகை வரலாற்றில் இவற்றையும் சேர்த்துப் புதியதொரு வரலாற்று நூலை வெளியிடுதல் வேண்டும்.

இன்னும் நாகைத் தமிழ்ச் சங்கம் பல பேறுகளை நாகை வாழ் மக்களாகிய நமக்கு அளிக்க இருக்கிறது. அவற்றையும் பெற்றுத் தமிழனென்ற பெயரினோடு 'யாம் பெற்ற பேறு' இவை என்று தலைநிமிர்ந்து நிற்போம்.

தனிமைச் சுவையுள்ள சொல்

புலவர். இரா. இராசு,
தெ. இ. தி. உயர்நிலைப்பள்ளி, நாகை.

செந்தமிழ்த் தாயின் செஞ்சிலம்பெனத் திகழும் சிலப்பதிகாரத்தைச் செஞ்சொற் சிலம்பு எனப் பாராட்டின் அது புனைந்துரையன்று.

கற்பின் கொழுந்தாம் கண்ணகியின் காற்சிலம்பை விற்க வந்த கோவலனைப் பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்டுப் பாண்டியன் கொல்வித்தான். அன்றிரவு கோப்பெருந்தேவி கொடுங்கனு ஒன்று கண்டாள். மறுநாள், அரசிருக்கையில் அமர்ந்திருந்த மன்னவன்பால் கோப்பெருந்தேவி போந்து, தான் கண்ட தீக்கனுவின் திறமுரைத்து நின்றுள். அப்போது பாண்டியன் இருந்த தோற்றத்தைக் கூற வந்த இளங்கோவடிகள்,

''அரிமா னேந்திய அமளிமிசை யிருந்தனன்
திருவீழ் மார்பின் தென்னவர் கோவே'' - என நயம்பட நவின்றுள்ளார்.

பாண்டியன் முறையோடு இருந்தவரை – நேர்மையோடு வாழ்ந்தவரை திருமகள் விரும்பும் மார்பினை உடையவனுய்த் திகழ்ந்தான். கோவலனைக் கொல்வித்த பின்னர் அவனிடம் முறை கோடிற்று; நேர்மை வீடிற்று. ஆகவே, திருமகளே அவனை விட்டுப்போயினள்.

'வீழ்' என்னும் சொல் 'விரும்பும்' என்ற பொருளையும் தருவது.

இக்கருத்துக்களைத் 'திருவீழ் மார்பு' என்ற தொடரால் விளக்கியுள்ளார். 'வீழ்' எனுஞ்சொல் விழுமிய சொல்லாகத் தனிச் சுவை தந்து நிற்கிறது.

இதுபோல், தனிமைச் சுவையுள்ள சொற்கள் பலவற்றைத் தட்டியெடுத்துக் கொட்டி வைத்துள்ளார் இளங்கோவடிகள்.

எனவே,

சிலப்பதிகாரத்தைச் சிறப்புறக் கற்பீர்!
கற்றபின் அதற்குத் தக நிற்பீர்!

யாம் கண்டதில்லை

புலவர். **செ. சூசை,**
தூய அந்தோனியார் உயர்நிலைப்பள்ளி, நாகை.

அறநூல்களின் வரிசையில் மாயூரம் வேதநாயகரின் அறநூல் — நீதி நூல் ஒரு தனிச் சிறப்புடையது. அறமன்ற நடுவராக அமைந்தவர் அறநூல் வழங்குவது பெருஞ்சிறப்பன்றோ? பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும், பொலியும் இந்நூல் நாற்பத்தைந்து அதிகாரங்களுள் அறுநூறு செய்யுட்களைக் கொண்டது. இது நற்றமிழ் பாடிய ஞானசம்பந்தர் பிறந்த சீர்காழியில், திருச்சிராப்பள்ளிப் புலவரேறு மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களது சீரிய தலைமையில் அரங்கேற்றப்பட்ட தனிச்சிறப்புங் கொண்டது.

ஐம்பத்தாறு புலவர் பெருமக்களால் சாற்றுக்கவி அளிக்கப்பட்ட தனிச் சிறப்பையுங் கொண்டது. இப்பெருமை கொண்ட வேருெரு அறநூலை யான் கண்டதில்லை; கேட்டதில்லை. புலவரேறு பிள்ளையவர்களது செய்யுட்டிரட்டில் இடம் பெற்றுள்ள அவர்கள் வழங்கிய சிறப்புப்பாயிரச் செய்யுட்களுள் வேதநாயகர் அவர்களது அறநூலுக்கு வழங்கப்பட்ட செய்யுளே மிகப் பெரியதும் அரியதுமாகும். பிள்ளையவர்களுடன் தொடர்பு கொண்ட அறிஞர்களும் ''ஐயா அவர்

களின் சாற்றுக்கவிகளுள் இது போன்று நீளமானதும், நயம் நிரம்பியதுமான சாற்றுக் கவியை 'யாம் கண்டதில்லை' என்று கூறியுள்ளனர்.

பிள்ளையவர்கள் இவ்வற நூலைப்பற்றி "இந்நூல் முன் எந்நூலும் சொல் லிற் கால் நூல், பாதி நூல், முக்கால் நூல், உவட்டு நூல், சிலம்பின் நூல், பருத்தி நூலே என்று போற்றியுள்ளார்.

வான்கலந்த மாணிக்கவாசகனைப் பாடிய அதே வாயால் "இந்நூல் முன்னர் மற்றை நூலெல்லாம் கிழிபடத்தின் வெண்ணூலென்றே" என்று பாடினார் வடலூர் இராமலிங்க வள்ளலார்.

இத்துணைச் சிறப்பமைந்த இந்நூல் பொய்பேசுதல் கூடாது என்பதை விளக்கும் பாங்கைக் காண்போம்:

விலங்குபற வையினுநரர் வாக்கொன்றுற்
சிறப்புடையர் விளங்குந் திண்மை
இலக்குவா யாலுரையா தவத்தமுரைப்
போருலகம் இகழ்வி லங்கின்
குலங்களினுங் கடையராஞ் சாணமதை
யமுதுவைக்குங் கோலச் செம்பொற்
கலங்களின்வைத் தலையொக்கும் மெய்க்குரிய
வாயாற்பொய் கழற லன்றே.

'விலக்கு பறவைகளைவிட மக்கள் மனக்கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் விளக்குவதனாலேயே சிறந்தவராகின்றனர். வாயால் உறுதிபயக்கும் உண்மை யையே உரைக்க வேண்டும். பொய் சொல்லின் தாழ்வான விலங்குகளிலும் தாழ்வர்; இஃது அமிழ்தை வைக்கும் பொற்கலத்தில் சாணம் வைப்பதை யொக்கும்' என்று வேதநாயகப் பெரியார் இச்செய்யுள் மூலம் பகர்ந்துள்ளார். இச்சுவைபோல 'யாம் கண்டதில்லை'.

நனியுண்டு காதல்

புலவர் **அ. சண்முகம்,**
நடராசன் தமயந்தி உயர்நிலைப்பள்ளி, நாகை.

அறிவைப் பற்றிக்கொண்டு சென்று, மக்கள் உணர்ச்சியைத் தொட வல் லனவே பாக்கள் என்பார் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார். பாவலனின் ஒரு சொல் பல விளக்கங்களைத் தரும்; ஒரு தொடர் ஒரு காப்பியமே பாடும்.

கலைவல்ல சிற்பி கல்லில் தான் கருதியவற்றை வடித்துக் கொள்ளுமாறு போலக் கவிஞனும் சொல்லால் அஃது உணர்த்தும் பொருளுக்கப்பாலும் பல பொருள்களைச் செருகி வேடிக்கை காட்டி வியப்பில் ஆழ்த்துவான். தோற்றாரை வென்றார் என்பான் காதற் களத்தில். பரணிக்கொரு சயங்கொண்டார் 'விடு' என்ற சொல்லுக்குப் 'பிடி' என்ற அதன் மாறுபட்ட பொருள் தருகின்றார்.

பள்ளியறையில் மகளிர் ஊடல் கொண்டு கூடலில் உள்ளத்தை ஊன்றி இருக்கின்றனர். காதலர் வேட்கை மீதூர அம்மடவார் துகிலினைப் பற்றி ஈர்க்கின்றனர். அஃது அவர்களுக்கு ஒருபுறம் இன்பமும், மறுபுறம் நாணமும் விளைக்கின்றது. நாணணி பூண்ட பெண்மை 'விடுமின், விடுமின்' என்று முனிந்து கூறுகிறது. ஆனால், அவர்களது காதல் நெஞ்சம், 'பிடிமின், பிடிமின்' என்று கனிந்து அழைக்கின்றது. 'பிடிமின்' என்ற பொருள் தோன்ற 'விடுமின்' என்கின்றனராம். பாவலன் பார்வை ஊடுருவிச் சென்று உள்ளத்தைப் பார்க்கின்றது.

விடுமின் எங்கள் துகில் விடுமின் என்றமுனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமின் என்றபொருள் விளைய நின்றருள்செய்
பெடைநலீர். —என்பது பாட்டு.

முனிவுரையில் காதல் கனியுண்டு என்று காட்டும் கனிவுரைபட, பாட்டுத் திறம் சுவை கூட்டுகிறதன்றோ.

தமிழ் எங்கள் உயிர்

புலவர். **சுந்தரராசனார்.**
நாட்டுயர்நிலைப்பள்ளி, நாகூர்.

பாற்கடல் விளைத்தது செந்திருவொடு செஞ்சுவை அமுதை, எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, சிலம்பு, மேகலை முதலிய நூற்கடல் விளைத்தது செஞ்சொல் தமிழமுதை.

பிறை வளரவும், கலை தேயவும் செய்வது வான் நிலா. சீரிளமைத் திறம் என்றும் மாறாமல் கலை பல வளரும் கன்னித் தமிழ் நிலா.

கட்டு கலங்காண கதிருமக்கு நெல் காண விளையும் விளைவுக்கு வேண்டப் படுவது ஆற்று நீர். கங்கை கொண்டு, கடாரங் கொண்டு, வட விமயத்தொடு தென் குமரியை ஒரு குடைக்கீழ் கட்டியாண்ட தமிழினத்தில் உறுதிக்கும் வீரத் திற்கும் தமிழ் ஊற்று நீராகும்.

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலர்ந்து பின் வாடும் வண்ண மலருக்கு வண்டுகளை 'வா' என்று அழைக்கும் மணம். வாடா மலராய் ஏடாயிரம் பூத்த தீந்தமிழ்த் தேங்கனிச் சோலையிலே கவி வண்டு பண்பாடத் திசையெல்லாம் வீசும் இசைத் தென்றல் மணம்.

காடும் மலையும் திரிந்த கல்லா மனிதன் கூடி வாழ்ந்து கோடி நன்மை பெறும் வாழ்வுக்கு இடம் ஊர். நாட்டு அவாவின் போர் வெறியால் உலகெல் லாம் நைந்தபோது 'உலகெலாம் ஒரு நாடு, மாந்தரெலாம் ஒரு குலம்' என்று அருளுடைமையை நாட்டிய தமிழர் வாழ்வுக்கு இன்பத் தமிழ், நிறுமித்த ஊர் ஆகும்.

கொம்பர்த் தும்பியும், பொங்கர் வண்டரும் குடித்துக் களிக்க மலரில் உளது தேன். சீரிழந்து, பேரிழந்து சிறுமையுற்ற தமிழ் இனத்தின் அசதிக்குச்

சுடர் தந்த தேனுக உள் வலியும் ஒளியும் ஒருங்கு பெற்றுயரச் செய்வது ஊக்கமாம் தமிழெனுந் தேன்.

நீல நெடு வான்முகட்டைத் தாக்கி நிற்கும் கோல நெடு மரங்கட்கு மூலம் வேர். முற்றிய ஒழுக்கத்தாலும், முறைதெரி வாழ்க்கையாலும் கற்ற நற்கலை யாலும், கைவினைத் திறன்களாலும் உலகினில் இன்பமெல்லாம் உயர் வழியில் துய்க்கும் தமிழர் தம் உரிமைச் செம்பயிருக்கு வேராவது தமிழ்.

உயிரிற் சிறந்த தொரு பொருள் உலகிலில்லை. உடலுக்கு-உலக வாழ்வுக்கு உயிர் இன்றியமையாதது. தாய்த் தமிழிற் சிறந்த மொழி நிலமிசைப் பிறிதில்லை. உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழ்.

இவ்வாற்ருன்,

இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாம் திருநெறியத் 'தமிழ் எங்கள் உயிர்.'

நாடெல்லாம் இருளாம்

புலவர் **கோ. இராமசாமி**
தெ. இ. தி. உயர்நிலைப்பள்ளி, நாகை.

சான்ரேர்க்குச் செல்வம் என்பது யாது? நெடிய மொழிதலா? கடிய ஊர்தலா? அன்று; அன்று.

''சான்ரேர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம்''

— என நற்றிணைப் பேரறிஞர் நல்வேட்டனர் நவின்றுள்ளார். தம்மை அடைந்தோரின் துன்பத்தைத் துடைத்து உதவலே தூய செல்வம். அத்தகைய பெருஞ்செல்வமாய் — தமிழகம் பெற்ற தனிப் பெருஞ் செல்வமாய்த் தழைத்தோங்கிய செம்மல் அறிஞர் அண்ணு அவர்கள்.

சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம். அப்பொற்காலத்தை இவ்விருபதாம் நூற்ருண்டின் இறுதிப் பகுதியாகக் காணத் தலைப்பட்டார் அறிஞர் ஏறு.

பூத்துக் குனித்தாடும் பூங்கொம்பை மெல்லத் தீண்டாது தீண்டிவரும் தென்றல் நடையால், 'கலை யுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகச் செய்திடும் கீழ்கதிர்ப் பேரொளி யாய்க் கோடையின் வெப்பம் கொழுந்து விட்டெரிந்த கொடும் அரசியல் வானில் முகில் கிழித்து வந்த முழுநிலவாய்ப் பயிர் விளைக்கும் மா மழையாய் வற்ருத தேன் மழையாய், அகழ்வாரைத் தாங்கும் அன்னை நிலம்போலத் தன்னை இகழ்ந்தாரைப் பொறுத்து ஆளும் பூமானுய், முத்தான கருத்துக்கள் மொய்த்துக் கிடக்கும் ஆழ் கடலாய், முன்னைத் தமிழர் பண்பெல்லாம் முழுதும் நிறைந்து, பின்னைத் தமிழரிடை வந்த பெருமகனுர் நம் அறிஞர் அண்ணு அவர் கள். தமிழர் தம் துயில் நீக்க வந்த தலைமகன் சங்கத் தமிழ்ச் சாறெடுத்துச் சாந்துணையும் தங்கத் தமிழர்க்களித்த சான்ரேன்.

நாகைத் தமிழ்ச் சங்கம் பணிமனை,
நீலா கீழத்தெரு, நாகப்பட்டினம்.
[நா. வீரப்பச் செட்டியார் அறமனை]

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்"

நாகைத் தமிழ்ச் சங்கம்

நாகப்பட்டினம்

சங்க முத்திரை

முன்னாள் தலைவர்
திரு அ. மு. பொ. திருவம்பலஞ் செட்டியார்

முன்னாள் துணைத்தலைவர்
டாக்டர் புலவர் ப. மு. சொக்கலிங்கனார்

L. M. & S.

வானத்தில் எழுகின்ற ஞாயிறும், திங்களும் வாழ்கின்ற மக்களின் புறவிருளை மட்டுமே போக்கும். மறைந்தும் குறைந்தும் நிறைந்தும் வெம்மை பயப்பதாயும், தண்மை பயப்பதாயும் தோன்றும். ஆயின், பொய்யா விளக்கோ அகவிருளையும் அகற்றும்; மறையாது குறையா குன்று அகவொளியாய், அறிவொளியாய் குன்று விளக்காய்க் குன்றின் மேலிட்ட குண விளக்காய் வையத்தில் நிற்கும். வாழ்வாங்கு வாழ்ந்த ஒளி விளக்காய் அறிஞர் அண்ணு அவர்கள் புகழுடம் பமைந்த பின்றை ''நாடெல்லாம் இருளாம்'' என்பதைத் தெளிவாகக் கண்டோம்.

நாளும் செய்வோம் நல்ல தொண்டு

புலவர், **இரா. பா. பால்ராசு,**
தெ. இ. தி. உயர்நிலைப்பள்ளி, நாகை.

தன்னலங் கருதாது பிறர் நலம் பேணி அரும்பெருந் தொண்டாற்றும் ஆன்ருேர் என்றும் வாழ்தலினுற்ருன் இவ்வுலகம் நின்று நிலவுகிறதென்பதை நாமறிவோம். ஆன்ருேர் தம்மை வருத்திக்கொண்டேனும் நற்ருெண்டாற்றி அதன் பயன் கொண்டு மகிழும் மக்கள் இன்முகங் கண்டு மகிழ்வர்.

கடைச் சங்க காலத்தின் பின் ஏற்பட்ட மாறுதல்களால் தனித்தமிழ் வழக்கு குன்றி வடமொழிக் கலப்பு தமிழ் மொழியில் ஏற்பட்டது. இக் கலப்பு பண்டு தொட்டு உயர்தனிச் செம்மொழியாய் இலங்கிய தமிழ் மொழியின் தனிச் சிறப்பைக் கெடுக்கும் என்றுணர்ந்த மறைமலையடிகளார் தனித் தமிழில் பேசியும் எழுதியும் வந்தார்கள். அதுகண்டு ஆற்ருமை கொண்ட பலரும் அடிகளாரைத் தூற்றியும் தாக்கியும் வந்தனர். எனினும் அடிகளார் அவற்றைப் பொருட்படுத்தாது தம் கருமமே கண்ணுகத் தமிழை வளர்த்தார்கள். அடிகளாரின் அயரா உழைப்பைப் போற்றி அவரைப் பின்பற்றிச் செந்தமிழ்ச் செல்வர் பலரும் தனித்தமிழ் வழக்கைக் கொண்டனர்.

இன்று அரசியல் தலைவர்கள் முதல் தொடக்கப் பள்ளி மாணவர்கள் வரை தனித் தமிழை விரும்பிப் பேசவும் எழுதவும் தலைப்படுகின்றனர். உலக அரங்கில் தமிழ்த்தாய் இன்னடம் புரிகின்ருள். இந்நிலையினைக் காணும் பேறு அடிகளாருக்குக் கிட்டியிருப்பின் பூரிப்பர்.

மேலும் வழக்காற்றில் பயிலும் சொற்பிழை, எழுத்துப் பிழை, லகர ளகர ழகர வேறுபாடு உணராமை, எழுத்தைச் சுருக்கியும் இணைத்தும் எழுதுதல் முதலிய குறைகளை நீக்கற்கான முயற்சிகளைத் தமிழாசிரியராணுர் கண்ணும் கருத்துமாய்க் கொண்டு மாணவர்களையும், மற்றையோரையும் செந்நெறிப் படுத்தல் தனித்தமிழ் வழக்கு நலம்பயக்கப் பெருந்துணையாகும்.

இப் பெருந்துணைக்கேற்ப நாம் 'நாளும் செய்வோம் நல்ல தொண்டு'.

தமிழென்று தோள் தட்டி ஆடு

புலவர், **எம். மணிமேகலை,**
நகராட்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி, நாகை.

தமிழ் என்ற மூன்றெழுத்துச் சொல்லிற்கு இனிமை என்ற மூன்றெழுத்து மொழி பொருளாகும். தமிழ் எழுத்துக்கள் உயிர், மெய், ஆய்தம் என்று முப்பிரிவு

களை உடையது. இவற்றில் மெய்யெழுத்துக்கள் வலி, மெலி, இடை என மூன்றின மாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்றினங்களும் கூடிப் பிறந்ததே தமிழ் என்னுஞ் சொல்.

தமிழனுடைய நாடு சேர, சோழ, பாண்டிய நாடென முப் பிரிவுகளை உடையது. மன்னர்களும் மூவராய் மூன்று கொடிகளையும், மூன்று அடையாள மாலைகளையும் கொண்டவர்கள். இயல், இசை, கூத்து என்று தமிழ் முப்பிரிவு களைக் கொண்டது.

பழந்தமிழ் நூல்களில் விழுமிய முழு நூல்களாக நமக்குக் கிடைத்திருப்பன தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் எனுந் தலைசிறந்த நூல்கள். அவற்றில் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்றதிகாரங்களைக் கொண்டது. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்றதிகாரங்களைக் கொண்டது. சிலம்பும் புகார், மதுரை, வஞ்சி எனும் மூன்று காண்டங்களைக் கொண்டது. இது போன்று பல நூல்களும் மூன்று பிரிவுகளைக் கொண்டு திகழ் கின்றன. சிலம்பின் உள்ளுறை பொருள்

> "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றுவதூஉம்
> உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
> ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்" ஆகும்.

இறைவரது தொழில் ஆக்கல், அழித்தல், காத்தல் என முத்திறத்தன. சைவக் கோட்பாட்டுக்கலை இறை, ஆன்மா, பற்று (பதி, பசு, பாசம்) எனும் மூன்று அடிப்படை கொண்டது. உயிர் மூன்றெழுத்து, உடல் மூன்றெழுத்து, மூச்சு மூன்றெழுத்து. காணக் காண, ஆய ஆய, சுவைக்கச் சுவைக்க இம்மூன்று வளர்ந்தும், பெருகியும், ஊறியும் பல்குவதைக் காணலாம். இம் மூன்றின் அமைப் பொன்றை எண்ணியே தமிழர்கள் தோள் தட்டி ஆடலாம். தமிழினத்து இளம் மன்பதையே! இம்மூன்று போன்ற தமிழ் அமைப்பினை எண்ணித் 'தோள் தட்டி ஆடு!'

தமிழ் வெல்க!

செ. ஆர். செயச்சந்திரன்,
எம். ஏ. (வரலாறு) எம். ஏ. (தமிழ்) டி. பி. ஈடி.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடியினர் பேசிய முதுமொழி; நளியிரு முந்நீரில் நாவாயோட்டி நாடு பலவென்று நானிலம் போற்ற வாழ்ந்த தமிழர் பேசிய தண்டமிழ் மொழி; நாகரிகத்திலே நனி சிறந்து விளங்கிய நன்மக்கள் பேசிய நற்றமிழ் மொழி; ஈடிணையற்ற இலக்கணச் செறிவும் எண்ணற்ற இலக்கியங்களுங் கொண்ட ஏற்றமிகு தமிழ் மொழி; பாவலரும் நாவலரும் பாடிப் பரவிய மொழி; புலி, வில், கயல் கொடி மூன்றினால் புதுவான மெங்கும் எழில் மேவப் புகழ்பரப்பி வாழ்ந்த பூவேந்தர் போற்றிய பொன் மொழி; உலகப் பொதுமறை எனத்தகும் திருக்குறள் கொண்ட தீந்தமிழ்மொழி, இடைக் காலத்திலே இடர்களுக்குள்ளாயிற்று. தனியாட்சி செய்த தமிழ்மொழி பிறமொழி நுழைவால் பீடும் பெருமையும் இழந்தது. வேற்றயல் மொழிகளை வெறுத்தொதுக்காத தமிழ்ப்பெருமக்கள் பிறமொழியாளர் விரித்த சூழ்ச்சி வலையில் சிக்கிச் சீரழிந்தனர். மெய்யுணர்வுத் துறையின் மூலம் தமிழ் மக்களிடையே வட

மொழியாளர் தம் மொழியைப் புகுத்த முயன்று வெற்றியும் பெற்றனர். அரசியல் துறையின் மூலம் இலக்கண வரம்பற்ற இந்தி மொழியும் தமிழ் நாட்டில் ஆட்சி செலுத்தத் திட்டமிடப்பட்டது.

இந் நிலையில் விழிப்புற்ற தமிழ் மக்கள் வீறுகொண்டெழுந்தனர். 'அன்னைத் தமிழை அழிக்க முற்படும் எதனையும் ஏற்கமாட்டோம், எதிர்ப்போம், அழித்தொழிப்போம்' எனச் சூளுரைத்தனர். தமிழ் காக்க-வளர்க்க-குகை விட்டுக் கிளம்பிய புலிபோலப் பகைவெட்டிச் சாய்த்திடப் படை புறப்பட்டது. தமிழகத்தின் தனிப்பெரும் தலைவர்கள் கூடி, 'தமிழா விழித்தெழு; வீறுகொண்டு போரிடவா!' என முழங்கினர். ஈரோட்டுப் பெரியாரும், இளைஞர் தம் உள்ளங்களை ஈர்த்த இணையற்ற தலைவர் பேரறிஞர் அண்ணாவும் வழிகாட்ட, போரெனக் கேட்டதும் புயலெனக் கிளம்பி வரும் தமிழ்த் தம்பிகள் புற்றீசல் போலப் புறப்பட்டு வந்தனர். "பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டது. சிறுத்தையே! வெளியில் வா" என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடலைக் கேட்டுப் பலர் படையில் சேர்ந்தனர். போர்ப்படை முழக்கப் புதுப்புதுப்பாடல்களைப் புரட்சிக் கவிஞர் இயற்றி வழங்கினர். "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" எனக்கூறி மகிழ்ச்சியோடு மக்கள் சிறை சென்றனர். கவிஞர், "தமிழ் வெல்க! வெல்க! என்றே தினம் பாடு" எனப் பணித்த தற்கேற்ப எண்ணற்ற மக்கள் தமிழ் வெல்க என முழக்கமிட்டனர். "ஊனுடல் கேட்கினும் செந்தமிழ் நாட்டுக்கு உவப்புடன் நான் சேர்ப்பேன்" என முழங்கிய கவிஞரின் பாடலை மெய்ப்பிக்கும் வகையில் பல இளைஞர்கள் தம் உயிரையே தமிழுக்காக ஈந்தனர்.

பொன்னொளி வீசிடும் புது ஞாயிறு எழுந்து விட்டது. அந்த எழு ஞாயிற்றின் ஒளியிலே மக்கள் மனத்திலே மண்டிக்கிடந்த மயக்கம் மறைந்துவிட்டது. மறைந்த மாணிக்கம் மறைமலை அடிகளார் வகுத்த தனித்தமிழ்ப் பாதையிலும் நடந்து காட்ட வேண்டுமென அறிஞர்கள் முடிவு கட்டினர்.

இன்று தமிழ்த்தாய் அரியணை ஏறி விட்டாள். தமிழ் இழந்த பண்டைப் பெருமையைப் படிப்படியாகப் பெற்றுக்கொண்டு வருகிறது. உலகின் பல மூலைகளிலும் இன்று தமிழ் முழங்குகின்றது. அறிஞர் அண்ணா காட்டிய வழியில் இன்று கலைஞரும், கவிஞரும், நாவலரும், பாவலரும் தமிழ்த் தொண்டு புரிகின்றனர். எழுச்சி முரசொலித்து ஏறுநடைபோடும் இன்பத் தமிழ் நாட்டின் இளைஞர்கள் தமிழுக்கு மேலும் மேலும் பல வெற்றிகளைத் தேடித் தருவார்கள். தந்து, 'தமிழ் வெல்க? தமிழ் வெல்க!' என்றே நாளும் பாடுவர்.

அமைச்சர்
மாண்புமிகு **மா. முத்துசாமி** அவர்களது
தலைமை முடிவுரை.

பாவேந்தன் பாரதிதாசன் அவர்கள் பைந்தமிழ்
நாவெடுத்துப் பாட உதிர்ந்த நற்றமிழ் மலர்களைப் புலவர்
பதின்மூவர்
கையெடுத்துக் கட்டுரையாய்த் தொடுத்துள்ள கவின்மிகு
மாலையின் மணத்தை நுகர்ந்து அதன் மாண்பினை உரைக்கும்
மதிப்பினை அளித்த நாகைத் தமிழ்ச் சங்கத்தார்க்கு என்நன்றி.

நாகைத் தமிழ்ச் சங்கப் புலவர் வகுப்பில் பயின்று வித்துவான் பட்டம் பெற்ற புலவர்கள் பங்கு பெற்றுக் கருத்தேற்றும்
பட்டி அரங்கு

ஒரு குறள் பட்டி அரங்கு

அரங்கக் குறள் :

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை

—முப்பால் : அறன் வலியுறுத்தல்-7

நடுவர் :

தமிழ்நாட்டுச் சட்டப் பேரவைத் தலைவர்

மாண்புமிகு, புலவர் கா. கோவிந்தனார், எம். ஏ.

அரங்கப் பொருளும் கருத்தேற்றுவோரும் :

சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை அறத்தாறு

இது என வேண்டா | காட்சியளவையான் உணரப்படும்

புலவர் சினி. சண்முகம் அவர்கள்	புலவர் டாக்டர் ப. மு. சொக்கலிங்கனார்
,, அ. மு. அ. காதிர் ,,	,, நா. இராசசேகரன் அவர்கள்
,, இரா. அரங்கராமானுசம் ,,	,, நா. நவநீதகிருட்டினன் ,,
,, சினி. கோவிந்தன் ,,	,, ச. சொ. மாணிக்கம் ,,
,, க. இரெ. நாகராயன் ,,	,, ம. இராசமாணிக்கம் ,,
,, இர. சண்முகவடிவேலு ,,	

இது என வேண்டா

பல்லக்கைச் சுமப்பதும், பல்லக்கில் அமர்ந்து செல்வதும் அவனவன் செய்த அறவினைப் பயன் என்று பொருள் கொள்வோமாயின், பல்லக்கைச் சுமப்பவன் பல்லக்கில் அமர்ந்து செல்லும் அளவு தனது நிலையை உயர்த்திக்கொள்ள ஊக்கமுடன் முயற்சி செய்வதால் பயனின்று என்ற கருத்தும் எழ இடமுண்டு.

''உடையர் எனப்படுவது ஊக்கம்'', ''மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு'', ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'', ''முயற்சி திருவினையாக்கும்'', ''முயற்சி தன்மெய் வருத்தக் கூலி தரும்'' என்றெல்லாம் கூறிப்போந்த திருவள்ளுவர் உள்ளக் கிடக்கைக்கு இயைபுடையதாகாது.

எனவே, 'பல்லக்கைச் சுமப்பானுக்கும், அதன்மீது அமர்ந்து செல்வானுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறத்தின் பயன் என்று சொல்லற்க' என்பதே திருவள்ளுவரது கருத்தாக இருத்தல் வேண்டும்.

புலவர் சீனி. சண்முகம்
தமிழாசிரியர், நாட்டுயர்நிலைப்பள்ளி,
நாகூர்.

காட்சியளவையான் உணரப்படும்

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை'' — என்பது குறள்.

இக்குறள் அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் வந்துள்ளது. இதற்குப் பரிமேலழகர் கூறும் உரையாவது: 'அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்' என்பது.

மணக்குடவர் போன்ற பிற உரையாசிரியர்களும் இக்கருத்தினையே எழுதியுள்ளனர். இக்கருத்தே இக் குறளுக்குரிய கருத்தாகக் கொள்ள வேண்டுமென்பது எமது கருத்து.

'இக்குறளுக்கு எதிர்மறைப் பொருள்படப் பிற ஆசிரியர் கூறுப' என்று சொல்வார்கள். இவ்வதிகாரம் அறனை வலியுறுத்தவந்த காரணத்தால் பிறவுரை அறனை இத்துணை வலியுறுத்துவதாயில்லை. வலியுறுத்துவதாக நிறுவப்படின் ஏற்றுக்கொள்வதற்குத் தடையில்லை.

புலவர், டாக்டர் ப. மு. சொக்கலிங்கனார்: எல். எம். எஸ்சு.
நாகை க. பி. தமிழ்க் கல்லூரி, விரிவுரையாளர்.

இது எனவேண்டா

''அறத்தாறு'' என்னும் குறள் அறன்வலியுறுத்தல் அதிகாரத்தில் வந்த போதிலும் ஊழ்வினைப் பயனுன் ஒருவன் பல்லக்கில் அமர்ந்து செல்வதும், மற்றவன் பல்லக்கினைச் சுமப்பதும் அமையும் என்னும் கருத்து ஏற்புடைத்தன்று.

அவ்வாறு பொருள் கோடின் ஊக்கமுடைமை முதலிய அதிகாரமும், ''ஆக்கம் அதர்வினய்ச் செல்லும்'', ''சிதைவிடத் தொல்கார் உரவோர்'' முதலிய பல குறட்பாக்களும் பயனற்றுப்போம்.

பிறிதோர் இடத்தில்,

''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்

கேடும் நினைக்கப்படும்'' — என்னும் குறளில் 'அவ்வியான் செல்வமும் செவ்வியான் கேடும் ஊழ்வினைப் பயன்' எனக்கூருது 'ஆராயப்படும்' எனக்கூறி விளக்கம் காண வகை செய்துள்ள வள்ளுவப் பெருந்தகை, "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'' என்பதற்கேற்ப எல்லாவகையிலும் உயர் எண்ணத்தை, உயர்குறிக்கோளைக் காண வைத்துள்ளார்.

எனவே, இக்குறளுக்குப் 'பல்லக்கில் அமர்ந்து செல்வானுக்கும், பல்லக்கைச் சுமப்பானுக்கும் இடையேயுள்ள வேறுபாடு அறத்தின் பயனுல் விளைந்தது எனல் வேண்டா' என்னும் கருத்தே சாலச் சிறப்புடைத்து.

புலவர் அ. மு. அ. காதிர், நாகை.

காட்சியளவையான் உணரப்படும்

''அறத்தாறு'' எனத் தொடங்கும் குறட்பாவிற்குப் பரிமேலழகர் உரைத்த பொருளே சாலச் சிறப்புடையது. அதன் சிறப்பைப் பல்வகையிலும் அறியலாம்.

பலர் நல்லோராயிருந்தும் நலிவதையும், சிலர் வல்லோராயிருந்து வாழ்வதையும் காண்கின்ருேம். ஒருவர் எங்ஙனம், எவ்வாறு முயன்றும் பின்னே நிற்பதும், ஒரு சிலர் முயற்சியின்றியும் முன்னிற்பதையும் காண்கிருேம். இஃது ஊழ்வினையின் பயன். அடுத்து முயன்ருலும் கூலிதான் பெறுவதாய் அமைந்து, ஊழ் வலிமைபெற்று முன்னிற்கிறது.

பல்லக்கில் அமர்கின்றவன் நல்லூழால் அப்பல்லக்கில் அமரும் நிலையையும் அதனைச் சுமப்பவன் தீயூழால் அதனைச் சுமக்கும் நிலையையும் அடைகின்றனர். எனவே, 'அறவழி நின்று முயலுக; அதன் பயனைப் பின்னர் அடையலாம்' என்ற உண்மையை உணர்த்துதற்கு அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் அக் குறட்பாவை அமைத்தார். இஃது ''அறத்தான் வருவதே இன்பம்'' என்ற வள்ளுவர் கருத்துக்கு உடன்பாடாக அமைகின்றது. ஆகவே, 'காட்சியளவை தன்னுனே உணரப்படும்' என்ற பரிமேலழகர் உரையே ஏற்புடைத்தாக அமைகின்றது.

புலவர் நா. இராசசேகரன், சிக்கல்.

இது என வேண்டா

''அறத்தாறு'' எனுங்குறள் அமைந்த அதிகாரம் அறன் வலியுறுத்தலா? ஊழ்வலியுறுத்தலா? பாயிரத்திலேயே முதலில் அறத்தினை வலியுறுத்தியுள்ளார். அறத்துப்பாலின் இறுதியில் ஊழைச் சொன்னார், தனி அதிகாரமாக. ஆயின், அரசியலில் 'பால் வகையான் ஆகாதெனினும் முயற்சி வெல்லும்; ஊழையும் உப்பக்கம் காணலாம்' என ஊழ் வெல்லுமாறு வேண்டியவர் ஊழைத் தூக்கிக் கொண்டு அறத்தினை வலியுறுத்துவாரா? மருத்துவர் உதவி என்பதற்காக மகனை நோயாளி ஆக்குவதுண்டா? வள்ளுவருக்கு ஊழில் நம்பிக்கை உண்டென்பதற்காக அறத்தை வலியுறுத்தவேண்டிய இடத்தில் ஊழைச்சொல்வாரா? சொன்னால் அறத்தின் வலிமை குன்றாதோ?

''அறநெறி பல்லக்கைத் தாங்கலில் சுருங்கியும், அதிற் செல்கையில் பெருகியும் நிற்பதோ? பல்லக்கைச் சுமந்து செல்வோரும், பல்லக்கில் ஊர்ந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோர் ஆகலாம். அறவோராகும் வாய்ப்பு ஒருவருக்கு மட்டுமன்றி இருவருக்கும் உண்டு. அறத்தாறு ஒருசாரார் பக்கம் சாயும் தன்மையுடைய தன்று'' என்ற திரு. வி. க. உரையையும் காண்மின்!

முகத்தில் கண்கொண்டு பாராது, அகத்தின் கண்கொண்டு பார்ப்பதே இன்பம். புறத்தே புலனாகும் உயர்வு தாழ்வுகள் அறத்தினை உணர்த்துமோ? புறத் தோற்றத்தால் பல்லக்கில் செல்கிறவர் அறஞ் செய்ததால் இன்புறுகிறார் என்றும், செய்யாததால் சுமந்து துன்புறுகிறார் என்றும் கூறலாம். நெஞ்சில் எண்ணும் எண்ணத் தூய்மையானும், எய்தும் இன்ப துன்ப உணர்வுகளானுமே அறத்தின் பயனை அறியலாம்; காட்சியளவையானன்று.

எனவே, பல்லக்கைச் சுமப்பவன் ஊர்பவன் இவர்களிடையே வைத்து அறத்தால் சுமக்கிறான் ஊர்கிறான் என்று அறத்தின் பயனை அளந்து கூற வேண்டா என்பதே திருவள்ளுவர் உள்ளமாகும்.

புலவர் இரா. அரங்கராமானுசம், மஞ்சட்கொல்லை.

காட்சியளவையான் உணரப்படும்

இக்குறள் அறனுற்றுவது உயிர்க்குப் பொன்றுத் துணையென வலியுறுத்தற்பொருட்டு வந்தமைந்தது. பரிமேலழகர் உரையோடு நோக்குவோமாயின் அறத்தினை ஆற்றியதன் பயனுற்றான் சிவிகையின்மீது செல்கின்றான் எனப் பொருள்படுகிறது. ஆனால், இக்குறள் அறம் செய்வதன் பயனைக் கூறுமுகத்தான் அமைந்தது. ஆள்வினை, ஊக்கம் முதலியன மடியினைப் போக்க எழுந்தவையாகும்.

முயற்சியால் பொருள் கிடைக்கின்ற வழிகள் அனைத்தும் அறத்தாறாகக் கொள்ள இயலாது. பொருள் கிடைக்கும் வழி செம்மையோடிருந்தாற்றான் அப்பொருள் அறமும் இன்பமும் நல்கும். அறத்தான் வருகின்ற செல்வம் அருளொடும் அன்பொடும் வருகின்றமையால் சிவிகை பொறுத்தான் – சிவிகை ஊர்ந்தான் இவர்களைக் காட்சியளவையாகக் கொள்ளுதல் சாலும்.

நோன்பினுற்ருன் செல்வம் பெறப்படும் என்பது நாயனுரின் கருத்து. "இலர் பலராய காரணம் நோற்பார் சிலர், பலர் நோலாதவர்". எனவே, அறத்தின் வழியே பொருளீட்ட வேண்டும். அவ்வறத்தின் வழி வரும் பொருளின் பயன் நற்பெரும் பயனுக இருக்கவேண்டும். எனவே, சிவிகை பொறுத்தான் முயற்சியுடையவனுகவும், சிவிகை ஊர்ந்தான் நல்லறவழி நாடியவனுகவும் காணப்படுவான் என்பதை வலியுறுத்துவதற்கெனவே இக் காட்சியினை நாயனுர் நமக்குக் காட்டுகின்ருர். இம்மையில் நல்லற வழிநின்ருல் மறுமையிலேனும் நல்ல வாழ்வு வாழலாம் என்பதனை வலியுறுத்துகின்ருர்.

மக்கள் நல்லறவழியில் நிற்கவேண்டுமாயின் சிவிகைக் காட்சியினை நினைந்து உள்ளம் திருந்தி அறத்தாற்றில் நின்று அருளொடு பொருளும் பெற்றுச் சிறப்படைய வேண்டும் என்பதனை வலியுறுத்தும் பரிமேலழகர் உரை சாலச் சிறப்புடைத்து.

புலவர், **நா. நவநீதகிருட்டினன்,**
குமரன் உயர்தொடக்கப்பள்ளி, மஞ்சட்கொல்லை.

இது என வேண்டா

பல்லக்கைச் சுமப்பவன், ஊர்பவன் இவர்களிடையில் காணும் வேற்றுமையை வைத்து இதுதான் அறத்தின் பயன் என்று கூறுதல் வேண்டா என்பதே "அறத்தாறு" என்று தொடங்கும் குறளின் பொருளாகும்.

சிவிகையிலேறிச் செல்வோன் அறஞ் செய்தவனென்றும், சுமப்பவன் அறஞ்செய்யாதவனென்றும் நிலவி வந்த மயக்கக் கோட்பாட்டை மறுப்பதே ஆசிரியர்க்கும் கருத்தாமாதலானும், அறஞ்செய்து அறவோராகும் வாய்ப்பு இருவர்க்குமே பொதுவாகலானும், சிவிகையினைச் சுமத்தல் தொழில் முறையின் பாற்படுமாதலானும், பிற்கால அறிஞர் பெருமக்கள் பலர்க்கும் (சான்ருக, திரு. வி. க; டாக்டர் மு. வ; புலவர் குழந்தை முதலியோரைக் கொள்ளலாம்) இஃதே உடன்பாடாதலானும் மேற்குறிக்கப்பட்டதே உரையாம் என்க.

இவ்வாறன்றிச் சிவிகை ஊர்தலும் சுமத்தலும் அறத்தின் பயன் எனக் கூறின் அஃது ஊழ்வலியுறுத்தலின்பாற்பட்டு மற்ருென்று விரித்தல் என்னும் குற்றமேற்படுமாதலானும், ஆசிரியர் கூறிப்போந்த அறஞ் செய்யுந் திறன், அதன் பயன் ஆகியவற்றிேனுடு முரண்படுமாதலானும், சம்பந்தர்க்குச் சிவிகை தாங்கிய திருநாவுக்கரசர்க்கு இழுக்குண்டாக்குமாதலானும் மற்றைய உரை உரையன்றென்க.

புலவர் **சீனி. கோவிந்தன்**, தமிழாசிரியர்
அரசினர் உயர்நிலைப்பள்ளி, திருத்துறைப்பூண்டி.

காட்சியளவையான் உணரப்படும்

"அறத்தாறு" என்னும் குறளுக்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரையே சாலப் பொருந்துவதாம். அதற்கென இரண்டு கருத்துக்களை நான் முன் வைக்கிறேன்.

ஒன்று: இக்குறளுக்கு முந்திய குறள் 'அறம் பொன்றுங்கால் பொன்றுத் துணை' என்கிறது. இத்தொடர் காட்டும் குறிப்பு மறுபிறவிக்கு அறம் பயன் கூட்டும் என்பதாகவே கொள்ள இடந்தருகிறது.

இரண்டு: இலர் பலராகியதற்குக் காரணம் நோலாதார் பலரும், உளர் சிலராதற்குக் காரணம் நோற்பார் சிலரும் எனத் 'தவம்' அதிகாரத்தில் உள்ளது. இக்கருத்து அவ்வதிகாரத்தின் இறுதிக் குறளது என்பதும் ஊன்றி நோக்கத் தக்கது.

எனவே, உடல் அழியுங்கால் உயிரோடு பொன்றுத் துணையாய் அறம் நின்று மறு பிறவியில் பயன் நல்கும்; நோற்று அறஞ் செய்யின் ஊர்வதும் நேரும் என்கிறது. இவ்வாற்றான் "காட்சியளவையான் உணரப்படும்" என்ற உரையே பொருந்துவதாகும்.

புலவர், ச. சொ. மாணிக்கம்
தலைமையாசிரியர்,
காந்தி உயர் தொடக்கப்பள்ளி, ஆய்மழை.

இது என வேண்டா

*"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"*

இக்குறளினைச் சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை அறத்தாறிது வென வேண்டா—என உரைநடைப்படுத்திக் கொள்ளுதல் சாலும்.

திருவள்ளுவர் தாம் வாழ்ந்த (ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு) காலத் தமிழகத்தை— தமிழக மன்பதையினை அறநெறிப்படுத்த எண்ணியே அருங் குறளை யாத்தருளினர். அக்கால மன்பதையின் அரும்பெருந்தலைவன் அரசனே. அதுபோல் மிகத் தாழ்மையுற்ற நிலையினன், குற்றேவல் புரிந்தும் சிவிகை சுமந்தும் வாழ்ந்தவனேயாவான். மிகத் தாழ்ந்தவனைகச் சிவிகை சுமப்பவனையும், மிக உயர்ந்தவனாக அச்சிவிகையில் ஏறிவரும் உரிமைபெற்று விளங்கிய அரசனையும் தம் கருத்திற்கொண்டு அவ்விருவர்க்கும் இடையில் உள்ள பல நிலைப்பட்ட மக்கள் யாவர்க்கும் அறநெறி இதுதான் என்பதைத் தனியாகச் சுட்டிக்காட்ட வேண்டுவதில்லை. ஏனெனில், மன்னனுயினும் மற்றவனுயினும் அறநெறி ஒன்றேயாம்.

"மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்தறன்" எனவும், *"அழுக்கா றவாவெகுளி இன்னுச்சொல் நான்கும் இழுக்கா வியன்ற தறம்"* எனவும் வள்ளுவர் கூறியுள்ளவற்றையும் உன்னுக!

ஆகலான், யாவராயினும் மாசற்ற மனத்துடன் அவரவர் கடமையை வழுவாமற் புரிந்து, வாழ்வாங்கு வாழ்வதே அறத்தாறு. இஃது அனைவர்க்கும் பொது. இதனைத் தனியாகச் சுட்டிக் காட்ட வேண்டுவதின்று என்பதே முதற்பாவலரின் கருத்தாதல் அறிக!

வையகம் காப்பவ ரேனும் - சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்
பொய்யகலத் தொழில் செய்தே - பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்—எனும் பாட்டுக்கொரு புலவன் பாரதியின் கூற்றும் இக்குறட்கருத்திற்கு அரணுதல் காண்க.

புலவர், க. இரெ. நாகராயன்,
சென்னை. ம. சூ. தொ. து. உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்.

காட்சியளவையான் உணரப்படும்

பல்லக்கைச் சுமப்பதும் செலுத்துவதும் அவனவன் முன்செய்த அறவினைப் பயனேயென்று உரை கோடலே சிறப்புடைத்தாகும்.

அறத்தின் திட்ப நுட்பத்தினை அஃகி அகன்ற நுண்மாண் நுழைபுலத்தால் புலப்படுத்திய வள்ளுவர் இரண்டும் இரண்டும் நான்கு என்பதைப்போல எல்லார்க்கும் இனிதே உணர்த்தும் குறளே இக்குறள்.

நன்மையினின்று நன்மையும், தீமையினின்று தீமையும் பெறப்படும். இதில் இரண்டு கருத்துக்களில்லை. அறஞ்செய்தார் இன்பமடைதலையும், அல்லவை செய்தார் துன்பமடைதலையும் வள்ளுவர் காட்டுக்களினின்றுங் காணலாம். அன்றுயின் அவர் நவின்ற "வகுத்தான் வகுத்த வகையல்லால்", "நல்லவை எல்லாம் தீயவாம்", "தீயவை செய்தார் கெடுதல்" முதலிய குறள்கள் பொருளற்றவையாகிவிடும்.

வள்ளுவரின் உள்ளக்கிடக்கை "தவமும் தவமுடையார்க்காகும் அவமதனை அஃதிலார் மேற்கொள்வது" என்பது போலச் சிவிகைக் காட்சியை மனத் திருத்தி இம்மையிலே அறஞ்செய்யுங்கள்; மறுமையிலே பயன் எய்துவீர்கள் என்றிருத்தல் வேண்டும்.

திருநாவுக்கரசர் பல்லக்கைச் சுமந்தது குறிக்கப்பட்டுள்ளது. சைவப் பெரியார் சிவப்பிரகாசர் கூறிய "அறத்தாறிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடையை மறுத்தார் சம்பந்தர்" எனும் பாடல் நினைக்கற்பாற்று. அவர் பரிமேலழகரது உரையை ஏற்று உள்ளத்து ஊன்றிக்கொண்டு அக்கருத்துப் படவே நயமாகக் கூறியிருக்குந் திறன் காட்சியளவையான் உணரப்படும் என்னும் உரைக்கு அரணுகின்றது.

புலவர், ம. இராசமாணிக்கம், நாகூர்.

இது என வேண்டா

திருக்குறளுக்குப் பொருள் கூறுங்கால் திருவள்ளுவரை — திருவள்ளுவர் மனநிலையை—மறந்தும் மறந்துவிடக் கூடாது. திருவள்ளுவர் எம்மனப் போக்கினர்?

"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்"—என்று

குறளுரைத்து மறைந்தொழுகு மாந்தர் வாழ்ந்துவருவதையும், அவர்களை நம்பி விட வேண்டா; மனத்தில் மாசுடையார் என்பதையும் வெளிப்படையாகக் கூறிக் கண்டிக்கும் இயல்பினர். அந்தத் திருவள்ளுவரே சிவிகையை எடுத்துச் செல்பவனும் சிவிகையில் செல்பவனும் அறப்பயனைத் துய்க்கிறார்கள் என்று கூறித் 'தலையெழுத்துப்படி நடக்கும் போ" என்ற வகையில் அறிவுரை கூறுவாரா? கூறமாட்டார்.

பொருள் கூறும் பரிமேலழகரோ, 'என வேண்டா' என்பதற்கு 'என ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா' என்றும், 'ஊர்ந்தானிடை' என்பதற்குக் 'காட்சியளவையான்' என்றும் குறிப்பெச்சங்களாகக் கொண்டு பொருள் கூறுகின்றார்.

ஒரு முக்கியமான குறட்பாவுக்கு மாறுபட்ட பொருளும் வரும்படி எச்சமாகப் பொருளை வைத்துவிட்டுப் போகும் பாங்கினர் அல்லர் திருவள்ளுவர். குறளின் உயிர்க்கருத்தையே எச்சமாக வைத்து விட்டா போய்விடுவார்? ஆகம அளவை, காட்சியளவை ஆகிய இரண்டுமே பரிமேலழகரின் கருத்தே தவிர திருவள்ளுவர் கருத்தாகா. எனவே, பரிமேலழகர் உரை இயைபான உரையன்றென்க.

சிவிகை பொறுத்தானை அந்நாள் உலகம் 'உன் அறப் பயன் இது' என்று கூறி, அவன் கதையை முடித்து வைத்தது. பழைமைக் கேட்டின் பகையாளர் திருவள்ளுவரோ 'தம்பி, உன் கதை முடிந்த கதையன்று; தொடருங்கதை' என்று விளக்க அந்நாளில் கூறப்பட்டுவந்த தன்னலக் கருத்தை ஒழித்துக்கட்டி நேரடியாகச் சாட எண்ணுகிறார். விளைவு "அறத் தாறிதுவென வேண்டா ......" எனுங் குறள்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் என்று சூளுரைத்த மறுமலர்ச்சித் தலைவர் திருவள்ளுவர்— "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்" என்று முரசு கொட்டிய திருவள்ளுவர்— "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்று முழங்கிய சீர்திருத்தச் செம்மல் திருவள்ளுவர்— அறப்பயனில்லாக் கீழோன் தூக்குகின்றான்; அறப்பயன் மிக்கோன் ஊர்ந்து செல்கிறான்; அப்படித்தான் செய்வான்' என்ற ஆணவ மொழியைப் புகன் றிருப்பார் என்று எண்ணிப் பார்ப்பது கூட, கேடாகும். எனவே 'சிவிகை யைச் சுமந்து செல்கிறவனுக்கும், அதில் அமர்ந்து செல்கிறவனுக்கும் இடையே யுள்ள வேறுபாட்டைக் காட்டி இதுதான் அறப்பயன் என்று கூறவேண்டா' என்பதே இக்குறளின் கருத்தாகும்.

புலவர் இர. சண்முகவடிவேலு,
சோமசுந்தர முதலியார் உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்

பட்டியரங்கு நடுவர்

தமிழ்நாட்டுச் சட்டப்பேரவைத் தலைவர்
மாண்புமிகு புலவர் **கோவிந்தனுர்,** எம். ஏ.

தீர்ப்புரை

நாகைச் சொக்கலிங்கனுர், சிக்கல் இராசசேகரன், மஞ்சட்கொல்லை நவநீதகிருட்டினன், ஆய்மழை ச. சொ. மாணிக்கம், நாகூர் இராசமாணிக்கம் ஆகிய புலவர்கள் ஐவரும் முறையே,

''மணக்குடவரும் அதுவே கூறுவர்''

'உலகில் சிலர் முயன்றும் பின்னிற்கின்றனர்; சிலர் முயற்சியின்றியும் முன் நிற்கின்றனர். அது ஊழ்வினைப்பயன். முன்னை நல்லூழ் உண்மையால் அமர்கிருன். அது இன்மையால் சுமக்கிருன். ஆகவே, அறவழி நின்று முயன்ருல் இப்போது இல்லாதுபோயினும் பின்னர் அடையலாம்.'

'அறத்தினை ஆற்றியதன் பயனுல் சிவிகை மீது செல்கிருன். சுமக்குமளவு முயற்சியுடையானுயினும் அறம் ஆற்றியவன் அல்லனுகவே சுமக்கிருன். ஆகவே இனியாவது அவன் அறம் ஆற்றுவானுக என அறன் வலியுறுத்துகிறது.'

'இலர் பலராகிய காரணம் நோலார் பலரானமை'

'பல்லக்கைச் சுமப்பதும், செலுத்துவதும் முன் செய்த வினைப்பயன். ஆகவே இம்மையில் அறம் செய்யுங்கள்; மறுமையில் பயன் எய்துவீர்கள்' எனக் கூறுவதே வள்ளுவர் குறிக்கோள்'—ஆகிய காரணங்கள் காட்டிப் பரிமேலழகர் உரையே பொருந்தும் என்று கருத்தேற்றியுள்ளனர்.

நாகூர் சண்முகம், நாகை அ. மு. அ. காதிர், மஞ்சட்கொல்லை அரங்க ராமானுசம், திருத்துறைப்பூண்டி சீனி. கோவிந்தன், க. இரெ. நாகராயன் திருவாரூர் சண்முகவடிவேலு ஆகிய புலவர்கள் அறுவரும் முறையே,

'அமர்ந்து செல்வதும் சுமப்பதும் வினைப்பயன் என்று கொள்வோமாயின் அமர்ந்து செல்லுமளவு நிலையை உயர்த்திக் கொள்ள முயல்வது பயனின்று என்ருகி ''முயற்சி திருவினை ஆக்கும்'' என்பதைப் பொருளற்றது ஆக்கும்.'

'அமர்வதும் சுமப்பதும் ஊழ்வினைப் பயன் எனல் பொருந்தாது. ''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும்'' ஊழ்வினைப்பயன் என்று கூருமல் ''ஆராயப்படும்'' என்றே கூறினுர்.'

'அறத்தை வலியுறுத்த வேண்டிய இடத்தில் ஊழின் சிறப்பைக் கூறினுர் எனல் பொருந்தாது. அறநெறி, பல்லக்கில் அமர்வதால் பெருகும், தாங்குவதில்

சுருங்கும் எனல் பொருந்தாது. இருவருமே அறநெறி நின்ருல் அறவோர் ஆகலாம் என்றே திரு வி. க. வும் கூறுவர். புறத்தோற்றம் கண்டு மதிப்பிடல் கூடாது. அகநிலை கண்டே மதிப்பிடல் வேண்டும்.'

'ஏறிச் செல்வோன் அறம் செய்தவன், சுமப்பவன் அது செய்யாதவன் என்ற மயக்க உணர்வை மறுப்பதே வள்ளுவர் கருத்து. அறம் செய்து அறவோ ராகும் வாய்ப்பு இருவருக்குமே பொது. சுமத்தல் தொழில்முறையின் பாற்படும் எனக்கொள்ளாது அறவினைப்பயன் என்று கொண்டால் அது ஊழ்வினைப்பயனுகி மற்றென்று விரித்தலாகியும் சுமந்த நாவுக்கரசர்க்கு இழுக்கு தேடலாகியும் பிழைபடும்.'

'மன்பதையின் தலைவனும் மன்னன்முதல், கடைநிலை நிற்பவனும் சிவிகை சுமப்பவன் ஈருக உள்ள பல்வேறு நிலைகளில் உள்ள மக்கள் ஒவ்வொருவர்க்கும் அறநெறியினைத் தனித் தனியாக வகுத்துக் கூற வேண்டியதில்லை. எந்நிலையில் உள்ளாரும் அவரவர் கடமையை மாசற்ற மனத்தோடு ஆற்றின் அதுவே அறமாம் என்பதே குறளின் பொருள்.'

'புறத்தோற்றம் கண்டு மயங்காதே என்று கூறும் புலவர், ஊர்வதும், சுமப்பதும் ஆகிய காட்சி கண்டு அதுதான் உண்மைநிலை என்று கூறமாட்டார். "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்று கூறும் வள்ளுவர் 'உன் தலைவிதி' என்று கூறிவிட மாட்டார்' — ஆகிய காரணங்கள் காட்டி, பரிமேலழகர் உரையை மறுத்து, சுமப்பவன் ஊர்பவனிடையே வைத்து அறப்பயனை அளத்தல் கூடாது; அளப்பது வள்ளுவர் கருத்தன்று; இருநிலையில் உள்ளவருமே அறம் ஆற்ற உரியவர் என்பதே பொருளாம் என்று கருத்தேற்றி உள்ளனர்.

இரு திறத்தவரும் தாம் கொண்ட பொருளுக்கு வலுவேற்றுவதற்கான வழிகளிலேயே கருத்தைச் செலுத்தியுள்ளனரே அல்லாது மாற்ருர் கூறும் பொருளை மறுப்பதற்காம் நிலையில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர் அல்லர்.

அறம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமையினை வலியுறுத்த வேண்டிய இடத்தில் அது செய்யாது போனதால் நேர்ந்துவிட்ட கேட்டினைச் சுட்டிக் காட்டி வலியுறுத்துவது கூற வேண்டிய ஒரு கருத்தை மேலும் வலியுறுத்திக் கூறியதாகவே அமையும்.

பல்லக்கில் அமர்ந்து செல்ல ஒருவன், அதைச் சுமந்து செல்ல மற்றெரு வன் என்ற வேறுபட்ட நிலை உலகில் இல்லாமல் இல்லை. அது இருக்க வேண்டும் என்று ஒருவரும் விரும்பார். மாருக, அவ்வேறுபாட்டை ஒழிக்க வேண்டும் என்றே அனைவரும் விரும்புவர். வள்ளுவர்க்கும் அதுவே ஏற்புடைத்து. அந்நிலையை உண்டாக்கும் முயற்சிகளுள் ஒன்ருக, அமர்ந்து செல்வோனையும், சுமந்து செல்வோனையும் காட்டி 'இவ்வேறுபாடு முற்பிறவியில் அவர்கள் முறையே அறப்பயன் ஆற்றியதும், அஃது ஆற்ருமையுமே காரணம். ஆகவே, இனி அவ்வேறுபாடு இல்லாது ஒழிய இருவருமே அறம் ஆற்றுவார்களாக' எனக் கூறுவது அவர்களுக்கு முறையே ஏற்றமும் இழிவும் கற்பிப்பதும் ஆகாது. அவர்களின் இன்றைய முயற்சிக்கு மேலும் ஊக்கம் அளிப்பதாகுமே ஒழிய, தடை விதிப்பதாகவும் ஆகாது.

ஆகவே, பரிமேலழகர் உரையில் குறையிருப்பதாகக் கொள்வதற்கு இல்லை என்பதே என் கருத்து. இருநிலையில் உள்ளவருமே அறம் ஆற்றத் தக்கவர்; தனித் தனியே அறம் கூறத் தேவையில்லை. எல்லார்க்கும் ஒரே அறம்தான் என்ற பொருளில் குறையில்லை என்றாலும், அது பரிமேலழகர் உரையளவு வலிவுடைத்தன்று என்றே முடிக்கின்றேன்.

இவ்வரங்கில் கருத்தேற்றிய சங்கப்புலவர்கள் தமிழ் இலக்கியக் கருத்து மணிகளான செய்யுள் அடிகளைத் தேர்ந்து தேக்கம் பலகையில் முத்து வெண்மையில் தீட்டச் செய்து தம் தாய்ச் சங்கத்தின் பணிக்கூடத்திற்கு அணியாகவும் விருந்தாகவும், பயனாகவும் அமைத்துளர்.

இவர்களது நன்றிக்கடப்பாடாம் இந்த அன்பளிப்பு நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியது. புலமைப் புகழோடு நீடு சிறந்து வாழ்க!

—சங்க அமைச்சன்.

உலகு என முடியும் குறள் ஈற்றடியை ஈற்றில் வைத்துப் பாடப்பட்ட வெண் பாக்கள் திகழும் அரங்கு.

நாகைத் தமிழ்ச் சங்கப் புலவர் வகுப்பில் பயிலும் மாணவர்கள் பாடி அரங்கேற்றுகின்றனர்.

குறளீற்று வெண்பா அரங்கு

உலகீற்று வெண்பா உவகையிற் பாடி
அலகீற்றில் வாழ்க அமைந்து!

—சங்கத்தார்

தமிழ்ச்சீர் முதற்றே தமிழர்தம் வாழ்வு
இமிழ்நீர் முதற்றெவ் வுயிரும்—கமழ்சீர்த்
தகவின் முதற்றே தவழ்ந்திடும் வாழ்வு
பகவன் முதற்றே உலகு.

மடிதழீஇப் பாலூட்டு மாண்டாயைக் காப்போன்
கொடிதழீஇ நன்மை கொடுநாடு காப்போன்
படிதழீஇ நிற்கும் பழந்தமிழ் காப்போன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

நற்றமிழின் கோட்பாட்டை நாமறிந்து கொள்ளாமல்
மற்றமொழி தேடி மருள்கின்றோம்—கற்ற
தொகைபெரிதே யானாலும் தோற்றத்தின் உண்மை
வகைதெரிவான் கட்டே உலகு.

கலப்படமே காட்டாக் கடைவணிகர், கத்திப்
பலப்படவே பொய்வழக்குப் பேசார்,—விலைப்படவே
தண்ணீரை நன்மருந்தாய்த் தாராதார் இம்மூவர்
உண்மையான் உண்டிவ் வுலகு.

நள்ளாது பொய்யை நலிப்பானை என்றுமே
எள்ளாது தாயுள்ளம் ஏற்பானைக்—கொள்ளாது
உள்ளாது உள்ள தளிப்பானை என்றுமே
தள்ளாது புத்தேள் உலகு.

அருணோக்கு ஆறாய் அமைத்தே மொழிக்குப்
பொருள்நோக்காள் கூழையே நோக்கி அருள்வாள்
திருவுள்ள ஔவைத் திருப்பாடல் ஓதும்
பெருமை உடைத்து உலகு.

இந்தியெனும் கொந்தும் இழிமுகட்டுப் பூச்சிதனை
எந்தவகை ஏற்பார் இனிதென்றே?—செந்தமிழாம்
தூண்டா மணிவிளக்கை சூழ்கதிரை வெண்ணிலவை
வேண்டாரை வேண்டா துலகு.

இன்பம் அளித்திடும் இன்தமிழைப் பாரெல்லாம்
நன்கு வளர்த்திடும் நற்றமிழ்ச் சான்றோர்க்குத்
தன்பொருள் யீந்தமையால் தான்வறுமை உற்றாரை
இன்மையா வையா துலகு.

தித்திக்கும் முத்தமிழை சங்கத்தில் வைத்ததை
எத்திக்கும் வித்திடு ஏந்தலார் நத்துவார்க்
குண்ண வுடுத்திட ஊன்றுகோ லாயினார்
பண்புபா ராட்டு முலகு.

தாம்அரைக் கண்ணால் தமதெண்ணந் தான்வேண்டத்
தா மரைக் கண்ணாள் தலையசைத்தாள்—தாமரைத்தேன்
தாம் அரை அல்லில் தரக்குழத்தார் தாம்வேண்டார்
தாமரைக் கண்ணான் உலகு.

வலி வலி யென்றே வலித்துக் கிடந்தாலும்
புலி!புலி! யென்றில் புகுவார்—'இலி இலி'
என்றார்க் 'கிலையிலை' என்னானின் இன்மையை
இன்மையா வையா துலகு.

எச்சிலை நாய்நக்கும்; ஏசி விரட்டிவிட்டுப்
பச்சைக் குறத்தி பயன்பார்ப்பாள்—அச்சோ!
பகைமைகண் தங்கிற்றாம் பாழ்ம்பசிக் கோடினார்
தகைமைக்கண் தங்கிற் றுலகு.

எள்ளாத எள்ளாதே ஏற்றுவப்பர் எண்ணத்தால்
தள்ளாத தள்ளாதே தேடிநிற்பர்—தெள்ளியோர்
நள்ளாத நள்ளாதே நூறிடுவர் நட்பேற்றுக்
கொள்ளாத கொள்ளா துலகு.

சொற்பட்டி

அட்டசித்தி — எண்மா உரவலம்
கசாயம் — கறுக்கு நீர்
காடம்பாடி — காடவர் கோன் பாடி
சிகிச்சை — பண்டுவம்
சித்தர் — உரன்வலர்
தத்துவம் — கோட்பாடு
தாவரம் — காழனம்
தேகம் — யாக்கை
தேசம் — தேயம்
மேகம் — முகில்
வசம் — வயம்
வயது — அகவை

Activity sampling —முன் படி நடவடிக்கை
Age of Imperial Unity —பேரரசின் ஒற்றுமைக் காலம்
Allopathy —ஆங்கில மருத்துவம்
Amount of void space —வெற்றிட மொத்தம்
Ampere —அலகு மின்னோட்டம்
Anticline —மேனோக்கி வளைவுப் பொறி
Antimony —அஞ்சனக்கல்
Arcuate —வில்வளைவு
Arsenic —அரிதார நஞ்சு
Associated Gas —இணைந்த எரிவளி
Asym metrical Anticline —உருக்கோட்ட மேனோக்கி வளைவுப்பொறி
Atoms —அணுக்கள்
Aurora —துருவ ஒளி
Base —அடிவாரம்
Balloons —ஆவிக் கூண்டுகள்
Capital —முதல்
Carbonates —கரியகக்கல்
Cement —கல்வைச்சாந்து
Centigrade —நூற்றுப்பாகை வெப்பம்
Complex Structural Traps —சிக்கலான வடிவமைப்புப் பொறிகள்
Computer —கணக்குப்பொறி
Condensation —நீர்மமாகி நிலைமாறுதல்
Condenser —மின்தேக்கி
Copy —படி
Cosmic Rays —அண்டவெளி நுண்மின்னலைகள்
Current Amplification —மின்னோட்டப் பெருக்கம்
Curvature —அழகிய வளைவு

Deep Rips	—ஆழ்துரப்பணக் கருவிகள்
Detector	—உணர்கருவி
Diode	—ஒருதிசை மின்கடத்தி
Dolomite	—கலப்புப் பாறை
Dry Gas	—உலர்ந்த எரிவளி
Editorial	—கருத்தோற்றம்
Effosol	—பொரியுப்பு
Electric Motor	—மின்னாற்றல் விசைப்பொறி
Electrons	—எதிர்மின்மம்
Electron tubes	—மின்னணு ஒருவழிக் குழல்கள்
Emitter	—வெளிப்படுத்தி
Enema	—குதவாய் நீரேற்றி
Ethics	—ஒழுக்கவியல்
Extrosphere	—மின்துகள் மீவளி மண்டிலம்
Gas Cap	—வளிமூடி
Gas Condensate	—எரிவளிச்செறிமம்
Gasolene	—கல்லெண்ணெய்
Geological	—நிலவியல்
Geophysical	—நிலவியற்பியல்
Gregarious Animal	—இயற்கையில் கூடிவாழும் இயல்புடைய உயிர்
Grid pattern	—அடுக்குப் பாங்கம்
Hole	—புழை
Horizontal plan	—கிடைவரி வடிவு
Hydro Carbons	—கரியகச் சேர்மம்
Hydrogen Sulphide	—நீர்வளிக் கந்தகை
Injection or Flooding Scheme	—உட்செலுத்தும் அல்லது வெள்ளப் படுத்தும் முறை
Insulator	—மின் கடத்தாப் பொருள்
Integrated circuit	—நுண்மின் சுற்று
Ionosphere	—மின் துகள்வளி மண்டிலம்
Ions	—மின்செறி துகள்கள்
Junction Diode	—இணைப்பொருதிசை மின் கடத்தி
Lay out	—வெளிப்பாடு
Liquid Gold	—நீர்மப்பொன்
Long Radio Waves	—நீள வானொலி அலைகள்
Machine	—பொறி
Magnetosphere	—கவர்ப்பு மண்டிலம்
Mesosphere	—இடைவளி மண்டிலம்
Meteorites	—விண்கற்கள்
Meteorology	—வானிலையியல்
Method study	—நிகழ்முறை ஆய்வு
Molecules	—மூலக்கூறுகள்
Monoclines	—சாய்ந்த பாறைகள்

Natural Gas	—இயற்கை எரிவளி
Nitrogen	—வெடிமம்
O. N. G. C.	—எண்ணெய், இயற்கை எரிவளிப் பொறுப் பாண்மைக் குழு
Operation	—அறுவை
Organic	—மருவகம்
Organic Chlorophyl	—மருவகப்பாசியம்
Oscillation	—அதிர்வு
Oxygen	—உயிர்வளி
Ozone layer	—கமழிப் படலம்
Penal Code	—தண்டனை விதியமைவு
Petroleum	—பாறை எண்ணெய்
Petroleum Tar	—நெய்ப்புக் கீல்
Petroleum Products	—நெய்ப்புப் பொருள்கள்
Pigments	—நிறச்சேர்க்கை
Politics	—அரசியல்
Porphyrin	—பாறையியம்
Positive Charges	—நேர்மின் வாய்த்துகள்கள்
Production Installation	—விளைவு அமைவிடம்
Productivity	—விளைவிப்புத் திறன்
Production study	—முழுமைக் கணிப்பு
Protons	—நேர்மின்மம்
Questioning Technique	—வினா உத்தி
Rating	—அளவறுதிப்பாடு
Rectifier	—திருத்து கருவி
Records	—ஆவணங்கள்
Reference Books	—நெறித்துணை நூல்கள்
Refinery	—தூய்மி நிலையம்
Republic	—குடியரசு
Rickets	—குழந்தைக் கணை
Sand Bar	—மணல் திட்டு
Seconds	—மணித்துளிகள்
Seismic	—நில நடுக்க வியல்
Separator	—பிரிப்பான்
Silicon	—கன்மத்தனிமம்
Solar Corpuscular	—ஞாயிற்றிலிருந்து வரும் துகள் கதிர்வீச்சுக்கள்
Sound Transmission	—ஒலிச்செலுத்துகை
Sour Gas	—புளிக்கும் எரிவளி
Stratosphere	—படுகைவளி மண்டிலம்
Sweet Gas	—இனிய எரிவளி
Standard time	—வரையறுக்கப்பட்ட நேரம்
Stratigraphic Traps	—அடுக்கமைப்புப் பொறிகள்
Stratigraphic test well	—அடுக்கமைப்பு ஆழ் ஆய்வுக்கிணறுகள்

Structural Rig	—வடிவமைப்புத் துரப்பணக் கருவி
Structural Traps	—வடிவமைப்புப் பொறிகள்
Surgeon	—அறுவை மருத்துவம்
Tank Wagon	—தொட்டி வண்டி
Technical knowledge	—நுணுக்க அறிவு
Television	—தொலைக்காட்சிக் கருவி
The ocean of wisdom	—அறிவுக்கடல்
The Oriental Mystic=Myna	—கீழைநாட்டுச் சித்த நெறிக் குயில்
Time and Motion study	—கால இயங்குமுறை ஆய்வு
Time study	—கால ஆய்வு
Transistor	—மின்மத் திறனி
Trap due to structural Dislocation	—வடிவமைப்பு இடப்பெயர்வில் பொறியமைவு
Trapo Pause	—அடிவளி மேல் விளிம்பு
Traps	—பொறிகள்
Troposphere	—அடிவளி மண்டிலம்
Ultra violet Rays	—புற ஊதாக் கதிர்கள்
Unconformity Traps	—இணக்கமற்ற பொறிகள்
Unesco	—உலகப்பொருள் கல்வி மன்பதை கலையியல் அமைப்பு
Updip Sand Wedge	—கூரிய மணற்பாறைகள்
Valve	—திறப்படைப்பான்
Volt	—மின்னலகுக் கூறு
Vitamin	—உய்வனவு
Wastage	—சிதைமானம்
Wealth of Nations	—நாட்டின் செல்வ வளம்
Wet Gas	—ஈர எரிவளி
Will	—விருப்பாவணம்
Work content	—பணியின் கொள்ளளவு
Work study	—பணிப்பகுப்பு இயல்

மறைமலையடிகளார் சிலை அமைப்பு

நன்கொடையாளர் பட்டியல்.

[உருபா 25 வரைஉள்ளபட்டியல்இது. பின்னர் வரவு செலவுக் கணக்கோடு வெளியாகும் தனி இதழில் பிற அமையும்.]

திருவாவடுதுறை மடத்தின் தவத்திருத் தலைவர்	2000—00
தவத்திரு குன்றக்குடி அடிகளார்	1750—00
தருமபுர மடத்தின் தவத்திருத் தலைவர்	500—00
உயர்திருவாளர்கள்:—	
வே. ப. கா. காயாரோகணம் பிள்ளை	500—00
கி. ஆ. பெ. விசுவநாதனார்	500—00
V. S. தியாகராச முதலியார்	500—00
மணலி இராமகிருட்டின முதலியார்	500—00
பொள்ளாச்சி நா. மகாலிங்கம்	500—00
A. D. செயவீர பாண்டிய நாடார்	250—00
தி, சாமிநாத முதலியார்	201—00
இராசா சர். அ. முத்தையா செட்டியார்	200—00

உருபா 101 வழங்கியவர்:

இர. தம்பையா நாயடு, வழக்கறிஞர், நாகை
இராம. சம்பந்தமூர்த்தி முதலியார்
சின்னப்பாப் பிள்ளை

உருபா 100 வழங்கியவர்

டாக்டர் மு. வரதராசனார்
நா. வீ. காயாரோகணஞ் செட்டியார்
J. M. அபுபக்கர்
கோ. மாப்பிள்ளை செட்டியார்
AK. V. அப்துல் சப்பார் மரக்கலவரையர்
S. R. நாயடு
S. தியாகராசன் தினகர விலாசு
M S. M. சோமசுந்தரஞ் செட்டியார்
M. S. M. சுல்தான் மரைக்காயர்
என். சுப்பராச நாடார்
V S இராமசாமி ஐயங்கார் வழக்கறிஞர்
டாக்டர் P. M. சொக்கலிங்கம்
க. காளிமுத்து, வழக்கறிஞர்
P. R. இராமகிருட்டினன்
P. K. சாம்பசிவ சேர்வை
சென்னை வணிகர் ஒருவர்

உருபா 51 வழங்கியவர்

S. S. மாணிக்கம் பிள்ளை, மளிகை.
K. R. சிதம்பரநாதன் செட்டியார்
ப. து. பஞ்சநத முதலியார்
அ. மு. பொ. சு. பாலகங்காதரன்
N. S. பாலசுப்பிரமணியம்
அ. கா. சந்திரசேகரன் செட்டியார்

உருபா 50 வழங்கியவர்

டாக்டர் அ சிதம்பரநாதனார்
நா. ஆ. நாராயணசாமி, கமலா பார்மசி
நா. அண்ணாமலை, ஏசியா கார்ப்பரேசன்
ஆ. இராமசாமி, மருந்துக்கடை
மு. இராசகோபாலன் பி. ஏ,
R. நடராசச் செட்டியார்
S. வேலாயுதம் பிள்ளை
நா. வே. புருடோத்தமன் எம். ஏ.
இல. குமாரமுத்து, மளிகை
R. சீனிவாச நாயுடு
டாக்டர் C. B. E. ஆர்தர்
R. சரவண பிள்ளை
K. இராசகோபாலய்யங்கார், வழக்கறிஞர்

A. கல்யாணசுந்தரம், வழக்கறிஞர்
O. K. வேணுகோபால், பாலைக்குறிச்சி.
S. G. செயபால் முதலியார்
N. குப்புசாமி, சுருட்டு வணிகம்
J. S. சையது முகமது சாகிபு
B. இராமதாசு B. Sc., N. T. C. முதல்வர்

உருபா 31 வழங்கியவர்

A. பக்கிரிசாமிப் பிள்ளை
S. K. Z. மரிக்கார் உடன் பிறப்பினர்

உருபா 30 வழங்கியவர்

கோ. தட்சணாமூர்த்தி முதலியார்
இராம. பி. இராசகோபால முதலியார்
அரு. திருநாவுக்கரசு முதலியார்
தீனதயாளு, அசாம்.

உருபா 25 வழங்கியவர்

A. தியாகராச முதலியார்.
வயி. கோ. காயாரோகணம் நாகை
வி. என். கோவிந்தராசன்
தேவர் மளிகை.
K. முனிசாமி செட்டியார்
S. கோவிந்தசாமி
N. R. R. நாதன்
S. சாம்பசிவ ஐயர், வழக்கறிஞர்
V. O. K. கிருட்டிணமூர்த்தி, வழக்கறிஞர்
S. T. S. A. சோமசுந்தரம்
A. S. ஆறுமுகப் பத்தர்
V. இருளப்பன்
S. தியாகராசன் B. Com.
S. M. A. காதிர்
கோ. பக்கிரிசாமி
S. M. அரங்கசாமி
நா. சண்முகசுந்தரம் பிள்ளை

A. R. சுப்பிரமணியம்
இரா. இராசையன், வழக்கறிஞர்
பேயாண்டித் தேவர்
M. பெரியதம்பிப் பிள்ளை மகப்பேராளர்
நாராயணன் இராமகிருட்டிண மரவாடி
டாக்டர் N. சீனிவாசன்
அழகரடிகள்
புலவர் அ. அறிவொளி
கணபதி சுந்தரம்
R. அண்ணாமலை B A.
V. வரதராசன் B Sc.
வை. கல்யாணசுந்தரம்
இரா. பாலுச்சாமி பிள்ளை
அ. இராசமாணிக்கம், வழக்கறிஞர்
ஈ இராமச்சந்திரன், வழக்கறிஞர்
P. சீதாமணாளன்
ந. பன்னீர்ச்செல்வம், மளிகை
தாக்கர் சுப்பிரமணியச் செட்டியார்
சென்னை மாணவர் மன்றம்
ச. தியாகராசன், வழக்கறிஞர்
M. சண்முகசுந்தர முதலியார்
மு. ரா. இலக்குமிபதி
சொ. அ. அப்பாய்ச் செட்டியார்
P. நடேச வேளார்
A. முருகையப் பத்தர்
A. R. இராமசாமி, கும்பகோணம்
டாக்டர் M. குமரசாமி
K. நாராயணசாமி, B. E M Sc.
டாக்டர் இராமச்சந்திரனுர்
அண்ணல் சுப்பிரமணியனுர்
கோவை குருசாமி நாடார்
சேலம் N. சுப்பிரமணியம்
இராமதாசு, மரவணிகம்
G. நாராயணசாமி நாயடு,
வேப்பஞ்சேரி.
மு. சு. இராசன், L. E. E.

நன்றி.

மறைமலை நிறைசிலையில் செம்மாக்கிறார். நினைவு மலர் நினைவார் மலராக மலர்கிறது. நன்றியுணர்வுதான் பொன்று நிறைவாகும்.

சிலையமைப்புப் பணியில் தவத்திரு. **குன்றக்குடி அடிகளார்** நெஞ்சில் நிறைந்திருக்கிறார்கள். அருட் கொடையும், அருண்மொழியும் இவற்றின் அடித்தளமாம் தெளிவார்ந்த தூய அருள் உள்ளமும் இச்சிலைப்பணியை வெற்றியாக்கிய நற்றுணைகள்.

சங்கப் பொருளாளர் திரு. நா. வீ. கா. அவர்களது பெருந்தகவும், பாடறிந்துதவும் பரிவும் சிலைப்பணியைச் சிறப்பித்தன.

நண்பர் ஆ. நாராயணசாமி அவர்கள் என் உள்ள மாகவே திகழ்பவர்கள். எந்நிலையிலும் எவ்வகையிலும் அவர்கள் துணைதான் என்னைச் செயலாற்றவைத்தது. அன்பும், பண்பும், நயமும் நலமுமார்ந்த அவர்கள் சிலைப் பணியின் நாடித்துடிப்பு.

திரு. இரா. தம்பையாஅவர்கள், திரு. க. காளிமுத்து அவர்கள், செயலர் திரு. இரா. கல்யாணம் அவர்கள், செயற்குழுவினர் நன்றிக்கு ஈடாய் மிளிர்பவர்கள்.

மலருக்குக் கட்டுரை, பா வழங்கிய அறிஞர் பெரு மக்களை எத்துணை போற்றினும் அத்துணையும் குறை வாகவே படுகிறது. விளம்பரம் வழங்கிய வாணிகப் பெருமக்கள் கைகொடுத்துதவிய நன்மக்கள். அச் சேற்றிய காவேரி அச்சகத்தார் என்றும் நினைவுகூரத் தக்கார். திருத்தங்கள் செய்துதவிய புலவர் வீர. கோவிந்தராசனர், புலவர் சொ. மாணிக்கனர் காலத்தால் உதவியோர்.

ஒல்லும் வகையெல்லாம் நன்கொடையளித்தும் உரை வழங்கியும். வண்டாய்த் திரிந்துதவியும் இப்பணி யை நிறைவாக்கியோர் எண்ணற்றோர்.

யாவரையும் என் உள்ளத்தில் நிறுத்திப் பாராட்டி, வணங்கி, வாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

அன்பன்,

சிலையமைப்புக் குழுப் பொதுச் செயலாளன்.

கேட்டு யார்—
கே. டி. ஆர். கமழ்பொருள் பெற்றவர்
கமழ்ந்தார்.

தொலைவரி : 'கேட்டியார்' நிறுமிதம் : 1904

தொலைபேசி : 218 அஞ்சற்பெட்டி எண் : 3

கே. டி. ஆர்.

கமழ்பொருட் கூடம்

K. T. R. வாசனைதி திரவிய சாலை

விசயபுரம் அஞ்சல்

திருவாரூர் :: தஞ்சை மாவட்டம்

விரியாப் புதிரும் விரியும் பக்கங்களும்

★ கேட்டு யார் கமழ்ந்தார்? எதிர்ப்பக்கத்தில் கமழும்

★ களைப்புக்குக் களைப்பூட்டும்
களிப்புக்குக் களிப்பூட்டும்; எது? பக்கம் 282இல் அது.

★ மூன்று எழுத்துக்கள்
தோன்றும் துணையாகும்; எவ்வாறு? பக்கம் 283இல் உள்ளவாறு.

★ திருவள்ளுவர் கூறிய அறிவுரையில்
மூன்ருவது என்ன? பக்கம் 284 கூறும்.

★ வழங்கும்; அதிலே துவங்கும்;
விற்கும் ஆனுல் நிற்கும்; எது? பக்கம் 285இல் அது.

★ கதிரவனுக்கு முன் தோன்றும்;
புதிரில்லா இனிப்புக்கும் தோன்றும். பக்கம் 286இல் தோன்றும்.

★ செல்வத்தை வழங்கும் திருமகள்
செல்வத்தைப் பெறுதலும் செய்வாள்; எங்கு? பக்கம் 287இல்

★ உலகுக்கு அச்சு உழவு;
பொறிகளுக்கு அச்சு எது? பக்கம் 288இல் அது

★ யாவர்க்கும் தெரிந்த உண்மை எது?
அதை வெளிப்படுத்துவோரை அறிவீர்களா? பக்கம் 289 அறிவிக்கும்.

★ இறைநெறிக்கு உயிரூட்டிய
ஒருவர் பெயர் யாது? பக்கம் 290இல் அவர்

★ உலகம் சுற்றுவதால் உயிர்கள் உள;
மற்ருெரு சுற்ருல் ஆக்கம் பல; எச்சுற்று? பக்கம் 291இல்.

★ ஊத முடியாது
உடுத்தலாம்; எதை? பக்கம் 292இல் உள்ளதை.

களைப்பை ஓட்டும் களிப்பை ஊட்டும்.

நான் தேர்ந்தெடுப்பது சத்து மிகுந்த உணவைத்தான்!

காரணம், எனது குடும்பத்தினர் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதுதான். போஷாக்களிக்கும், வைட்டமின்கள் நிறைந்த, சம சத்துள்ள உணவுகளையே நான் ஆதரிக்கிறேன். அன்றுட ஆகார நியதியில் ருசி மிகுந்த, புதிய, வைட்டமின் நிறைந்த, கிரானுலர் ஒவோமால்ட் அவசியம் இடம்பெறச் செய்கிறேன். குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் அனைவருக்கும் ஏற்ற சமசத்து நிறைந்த உணவு பானம் இது.

ஓவோமால்ட்

தயாரிப்பவர்கள் :
ஃபுட்ஸ், ஃபாட்ஸ் & ஃபெர்டிலைஸர்ஸ் லிமிடெட்.
தாடேபள்ளிகூடம், ஆந்திரப் பிரதேசம்
விற்பனை நிர்வாகம் : 115-B, N. S. C. போஸ் ரோடு, சென்னை-1

EP.FFP-14 TM

தஞ்சை மாவட்ட வழங்குரிமையாளர் :—
மாரியப்பா ஏசன்சி, நாகப்பட்டினம்.

மூன்று எழுத்துக்கள் வி. டி. சி.

இன்றையச் சேமிப்புக்கு, நாளையப் பாதுகாப்பிற்குத் தோன்றுந் துணை.

வி. டி. சி. பண்ட்ஃச் வரையறை

பதிவு, பொறுப்பு அலுவலகம்,
வி. டி. சி. கட்டிடம்,
166, செம்பிங்சு சாலை
பெங்களூர்-1.
தொலைபேசி: 51708.

தமிழ்நாடு வட்டார அலுவலகம்,
446, பெரியகடைத்தெரு,
திருச்சி-8.
தொலைபேசி: 3945

கிளை அலுவலகம்,
748, பெரியகடைத் தெரு,
நாகப்பட்டினம்.
தொலைபேசி: 217.

15 ஆண்டு ஆண்டுகளாகப் பணியாற்றி மக்களின் நன் மதிப்பையும், ஆதரவையும் பெற்ற ஓர் சிறந்த சிட்டு நிறுவனம்
வி. டி. சி. ஒன்றே.

இந்தியா முழுவதும் 150 கிளைகளுக்குமேல் சீரும், சிறப்புமாக வளர்ந்துவரும் சிறந்த ஏலச் சீட்டு நிறுவனம்

இன்றே எங்கள் அலுவலகத்தில் உறுப்பினராகிப் பயனடைக!

குழுவார் ஆணைப்படி,
வி. தெட்சணாமூர்த்தி,
பொறுப்பு இயக்குனர்.

திருக்குறள் 950இல் மூன்ருவதாகக் குறிக்கப்படுவது **மருந்து**

அதனை நெறியோடு உருவாக்கி வழங்குவோர்

PHARM - PRODUCTS PRIVATE LTD.,

1, VALLAM ONE ROAD,

THANJAVUR.

MANUFACTURERS OF:

Ethical Pharmaceutical Products.

OUR SPECIALITIES:

Pharmplex		Gynemix.
Prolysmin	Pulminol	Ferrolic
Pharmacholin	Pharmacitron	Tushin Expectorant
Citrok	Anticirhos	Delices

பொருள்களை வழங்குவதில் துவங்கி
விற்பதில் நேர்மையை நிற்க வைக்கும்
கூட்டுறவு நிறுவனம்

சென்னை மாநிலக் கூட்டுறவுப் பொருள் வழங்கு விற்பனைக் கழகம்.

★

மறைமலையடிகளார் சிலைநாட்டு விழா
நிறைந்த சிறப்புற எங்கள் உளங்கனிந்த
வாழ்த்து

சென்னை மாநிலக் கூட்டுறவுப் பொருள் வழங்கு விற்பனைக் கழகம், எண் 401.

89, பூவிருந்தவல்லி உயர்சாலை, சென்னை-10.

மன்னை, ப. நாராயணசாமி
தலைவர்.

அருணன் கதிரவனுக்கு முன்தோன்றுபவன்
அருணை அக்கார (Sugars) வரையறை நிறுவனம்
இனிப்புக்குச் சான்று.

ARUNA SUGARS LIMITED,

Registered office :
"Dhun Building", 175/1, Mount Road,
MADRAS-2.

Telephones: 83615 (2 JNS.) Telegrams : 'ANUSHAM'

Factory :

PENNADAM

(Vriddhachalam Tk , S. A Dt.)

Telephone: 23 (Pennadam) Telegrams 'ARUNASUGAR'

The First and the only Factory in the country

to ELIMINATE usage of SULPHUR

in production of WHITE CRYSTALLISED Sugar (Grade-E.30)

Our Molasses are best for cattle feeds and
Pharmaceutical Industries.

Please note that all enquiries for purchase of Sugar are to be Addressed only to our Registered Office at 'Dhun Building', 175/1, Mount Road, Madras-2 and Not To our Factory at PENNADAM.

திருமகள் — கமலாம்பிகை செல்வம் வழங்குவாள்
வங்கி — கமலாம்பிகா செல்வம் வழங்கும்; பெறும்.

கமலாம்பிகா கூட்டுறவு நகர வங்கி

வரையறை எண் 378,

திருவாரூர். தஞ்சை மாவட்டம்.

தலைவர்: திரு எம். இராமதாசு முதலியார் பி. ஏ., பி. எல்.

[தமிழ் நாட்டில் சிறந்த கூட்டுறவு நகர வங்கியெனப் பாராட்டுதல் தெரிவித்து இந்த வங்கிக்குத் தமிழ் நாட்டரசு கேடயம் வழங்கியுள்ளது.]

புள்ளி விவரங்கள்: 30—9—1968இல் உள்ளபடி.

பங்குத்தொகை	உருபா	8,28.305
உறுப்பினர்	,,	10.687
வைப்புகள் [Deposit]	,,	46.64.892
கடன்கள்	,,	38,61,890

கீழ்க்காணப்படும் விழுக்காடுகளில் நிலைத்த வைப்புகள் [Fixed Deposits] ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

3 மாதக் கெடுவிற்கு	4½%	ஆண்டுக்கு
6 ,, ,,	5%	,,
12 ,, ,,	5½%	,,
24 ,, ,,	6%	,,
36 ,, ,,	6½%	,,
60 ,, ,,	7%	,,

உரூபா 10,000க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் வைப்பாளிகள் விரும்பினால் திங்களீட்டு வட்டி வழங்கப்படும். பிற விவரங்களுக்குச் செயலாளருக்கு எழுதுக!

பலவகைப் பொறிகளின்
அச்சு வார்ப்புக்கு அச்சாய் விளங்குவது

சுப்பையா வார்ப்பகம்

SUBBIAH FOUNDRY

பாப்பாநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்-1

தமிழகப் பெருமக்களுக்கு
மறைமலையடிகளார் சிலைநாட்டு விழா வழி
எங்கள் நல்வாழ்த்து.

சுப்பையர் வார்ப்பகம்,
Subbiah Foundry,
கோவை.

நெல்லுக்குள் அரிசி இருப்பது உண்மை
அதை வெளிப்படுத்துவது

தஞ்சை மாவட்ட
அரிசி ஆலையர் சங்கம்

பொதுமக்கள் பணியே பொன்னுன பணி எனக் கொண்டு
எம் சங்கம் நேர்மைப் பணியாற்றுகிறது.

மறைமலையடிகளார் விழா சிறப்புறுக!
மிழும் தமிழரும் வாழ்க! வாழ்க!

V. K. N. P. வெங்கடாசலம், N. கோவிந்தராசலு நாயடு,
தலைவர். செயலாளர்.

முகையதீன்-மைதீன் என்ற சொற்கு
இறைநெறிக்கு உயிருட்டியவர் என்று பொருள்.

மறைமலையடிகளார்
சிலைநாட்டு விழாவில் என் உளங்கனிந்த
வாழ்த்து

E. S. மைதீன் & Co.,

கும்பகோணம்.

தொலைவரி: 'மைதீன்கோ' தொலைபேசி: 41.

கலைமதிச்சுற்றுல் (Serculations) கணக்கில்லாப்
பயன்கள் உண்டு.

கலைமதி புதுமைச் சுற்றுக்கம்,

Kalaimathi Fancy Circulations

கொல்லுமாங்குடி.

மறைமலையடிகளார் சிலைநாட்டு விழா
நிறைதமிழ் விழாவாய் நிலவுக!
எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்து.

ஆர். தி. சண்முகம்,
கலைமதி பேன்சி சர்குலேசன்ஸ,
கொல்லுமாங்குடி அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்,

சங்குக் குறிக் கைலிகளை உடுத்தலாம்
ஊதவா முடியும்?

முகம்மது
அபூபக்கர் & கம்பெனி

உயர்தரமான கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள்,
புடவைகள் மற்றும் சோளிகள்
தயாரிப்பாளர்கள்



சங்கு மார்க்

சதுர வடிவம்-சிகப்பு நிறம்-அதனுள் வெண்சங்கு
'சங்கு' என்ற எழுத்துக்கள் இவைகள்தான்
கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள்,
புடவைகள், சோளிகள் உயர்தரமானவை என்று
உத்திரவாதமளிக்கின்றன

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்

முகம்மது
அபூபக்கர் & கம்பெனி

95, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1

கிளைகள்:

65/11-12,
லோயர் சிட்பூர் ரோடு,
கல்கத்தா-1

186, இப்ராஹிம் ரஹ்மதுல்லா ரோடு,
பெண்டி பஜார், பம்பாய் 3.

84 கீழ வெளி வீதி, மதுரை-1

340, மெயின் ரோடு,
கொல்லம்-1 கேரளா

Criterion- MAB-1150 Ta

தனித்தமிழை ஏற்றுமதி செய்து
இனித்தபுகழை இறக்குமதி செய்த
மறைமலை அடிகளாருக்குச்
சிலைநாட்டும் விழாக் கண்டு மகிழ்ந்து,

'தமிழ் வாழ்க ;
தமிழகம் ஒளிர்க ;
தமிழக மக்கள் வளம்பெறுக'

—என வாழ்த்துகிறோம்.

THE NAGAPATTINAM IMPORT AND EXPORT CORPORATION

நாகப்பட்டினம் இறக்குமதி ஏற்றுமதிக் கூட்டு நிறுவனம்

—கப்பல் முகவர் — பொதியேற்றுளர் — ஏற்றறுதிக் குத்தகையர்—

அஞ்சற் பெட்டி எண் : 29

முதற் கடற்கரைச்சாலை, நாகப்பட்டினம்.

தொலைபேசி : 355 தொலைவரி : "MOVEMENTS"

மக்களை

ஆர்வம் என்ற ஊரினின்றும்

அறிவு எனும் ஊரில்

தமிழ் எனும்

பேருந்து வழியே

சேர்ப்பித்த



மறைமலையடிகள் சிலைநாட்டு விழாவில்

தமிழ்ப்பெரு மக்களுக்கு

எனது உளமார்ந்த வாழ்த்து.

வீ. பார்த்தசாரதி

(Dip. A.E.M.V.T., C. & G. London)

உரிமையாளர் :

சத்தி விலாசு

பேருந்து நிறுவனம்

பொறையாறு : : தஞ்சை மாவட்டம்